


சிறுகதைகள்

# மெய்ப்பொய்கை

## பாலியல் பெண்களின் துயரம்

தொகுப்பு : ருச்சிரா குப்தா

தமிழில் : சத்தியப்பிரியன்


சிறுகதைகள்
மெய்ப்பொய்கை
பாலியல் பெண்களின் துயரம்
தொகுப்பு : ருச்சிரா குப்தா
தமிழில் : சத்தியப்பிரியன்

# மெய்ப்பொய்கை

பாலியல் பெண்களின் துயரம்

தொகுப்பு: ருச்சிரா குப்தா
மொழிபெயர்ப்பு: சத்தியப்பிரியன்

ருச்சிரா குப்தா

ருசிரா குப்தா ஒரு பெண்ணியவாதி, நியூ யார்க் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கிறார். பாலியல் தொழிலுக்காகப் பெண்கள் கடத்திச் செல்லப்படுவதை எதிர்த்துப் போராடும் அமைப்பொன்றை (Apne Aap Women Worldwide) நிறுவியிருக்கிறார். தனது புலனாய்வு எழுத்துகளுக்காகப் பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கிறார். கிட்டத்தட்ட 20,000 பெண்கள் பாலியல் தொழிலிலிருந்து விடுபடுவதற்கு உதவியிருக்கிறார்.

சத்தியப்பிரியன் (மொழிபெயர்ப்பாளர்)

வங்கித்துறையிலிருந்து விருப்ப ஓய்வுபெற்று முழுநேர இலக்கியப் பணியில் ஈடுபட்டுவருகிறார். நீண்ட காலமாக மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுவரும் சத்தியப்பிரியன் ஒரு நாவலாசிரியரும்கூட. கல்கி, ஆனந்த விகடன் ஆகிய இதழ்களில் தொடர் கதைகள் எழுதியிருக்கிறார். திண்ணை, மலைகள், தமிழ் ஹிந்து ஆகிய இணையப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதி வந்திருக்கிறார். ஷேக்ஸ்பியரின் மேக்பெத், ரோமியோ ஜூலியட், ஒதெல்லோ போன்றவற்றை மொழிபெயர்த்திருக்கிறார்.

சோனாகச்சில் கொல்லப்பட்ட சாத்தி தாஸுக்கும்
பாலியல் தொழிலுக்கு எதிரான போரில் தொடர்ந்து
துணிச்சலுடன் ஈடுபட்டுவரும் கேயாவுக்கும்

# முன்னுரை

நான் எனது தோழி ரக்ஷந்தா ஜலீலுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போதுதான் சதை நதி மற்றும் இதர கதைகள் குறித்தும் ஒரு யோசனை தோன்றியது. விபசாரம் செய்வது என்பது பெண்களின் சமத்துவமின்மைக்குக் கொண்டுசெல்லும் நிகழ்வு மட்டுமன்று விபசாரம் செய்வது என்பதே அவர்கள் சமத்துவமின்மையை மேலும் ஆழப்படுத்துகிறது என்பதை மக்களுக்குப் புரியவைக்க நான் மேற்கொண்டுவரும் முயற்சிகளில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

எங்கெல்லாம் நான் பயணித்தேனோ அங்கெல்லாம் முகவாண்மை என்ற வார்த்தையை எதிர்கொண்டேன். திருமணத்தின் காரணமாகச் சில பெண்கள் விபசாரத்தை மேற்கொள்கிறார்கள் என்று சொல்லக் கேட்டேன். விபசாரத்தில் 'குடும்பத் தலைவன்' என்ற கட்டமைப்பிலிருந்து சுதந்திரம் கிடைப்பதாகச் சிலர் கூறினார்கள். நுகர்வோர் கலாசாரம் காரணமாக அதாவது காலணிகள், உதட்டுச் சாயம், தோள்பைகள், ஆடைகள், வாசனைப் பொருட்கள் போன்றவற்றை வாங்க முடிகிறது என்பதற்காகக் கல்லூரிப் பெண்கள் விபசாரம் செய்ய வருகின்றனர் என்று கூறினார்கள். வியர்வை சிந்தும் வேலை, வீட்டு வேலை, அடக்கியாளப்படும் திருமண உறவுகள் போன்றவற்றுடன் போராடுவதற்கு பதில் பல பெண்கள் வயிற்றுப் பிழைப்பிற்கு விபசாரத்தையே தேர்வு செய்வதாகக் கூறினார்கள்.

நான் ஒரு சமூக சேவகி, குறிப்பாக, பாரம்பரியமாக விபசாரத்தில் ஈடுபட்டுவரும் பெண்களையும், ஜாதி அடுக்குகளில் சேரியில் வசிக்கும் பெண்களையும் ஒருங்கிணைத்து வருபவள். நான் கண்ட நிஜம் வேறு

மாதிரியானது. பெண்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, தங்கும் இடம், வன்கொடுமைகளிலிருந்து சுதந்திரம் போன்றவற்றிற்கு மற்ற பெண்களை விட விபசாரம் மேற்கொள்ளும் பெண்கள் அதிகம் போரிட வேண்டியிருக்கிறது. பெண்கள் தாங்கள் வாங்கிய கடனுக்கான பிணையத்திற்காக வாழ்க்கை மொத்தத்தையும் அடகு வைத்து வாழ்ந்து மடிவதைக் கண்கூடாகக் கண்டேன். விபசாரம் செய்யும் பெண்களை விட இடைத்தரகர்களும், விபசார விடுதிகளை நடத்துபவர்களும்தான் அதிகம் சம்பாதிக்கின்றனர். பரத்தைத் தொழிலில் பெண்கள் மென்று துப்பப்படுபவர்களாகவே உள்ளனர். காசுக்குப் பிரயோஜனமில்லை என்று முப்பதுகளின் ஆரம்பத்தில் உள்ள பெண்களைக்கூட தூக்கி வெளியில் கடாசப்படுவதைப் பார்க்கிறேன். வாடிக்கையாளர்கள் இளங்கறியைதான் கேட்கிறார்கள்.

விபசாரத்தில் பெண்களை ஈடுபடுத்துவதற்கு அவர்களின் சராசரி வயது ஒன்பதிலிருந்து பதின்மூன்று வயது. சிறுமிகள் பூப்படையும் முன்னர் ஐஸ் கட்டிகளைப் பயன்படுத்தி அவர்களது கன்னித் தன்மை நீக்கப்பட்டுச் சுரண்டுவதற்கு ஆயத்தப் படுத்தப்படுகிறார்கள். 'பதப்படுத்துதல்' என்றொரு முறையைப் பின்பற்றுகிறார்கள். இந்த வழிமுறையில் இளம் பெண்களைப் பட்டினி போடுவது, போதை மருந்துக்கு அடிமையாக்குவது, இடைத்தரகர்களை அப்பா என்றும், விபசாரத் தலைவியை 'மா' என்றும் 'மாசி' என்றும் அழைக்க நிர்பந்திப்பது போன்றவை கட்டாயப்படுத்தப்படும். இந்தப் பெண்கள் ஓர் இரவில் குறைந்தது எட்டிலிருந்து பத்து ஆண்களால் வல்லுறவிற்கு ஆளாக்கப்படுகின்றனர். வாடிக்கையாளர்களுக்கு இரவு பகல் பேதமின்றி எந்த நேரமும் தயார் நிலையில் வைத்திருக்கச் செய்கிறார்கள். வாடிக்கையாளர்கள் சிக்கும் வரையில் அவர்கள் தெரு ஓரங்களில் மணிக்கணக்காக நிறுத்தி வைக்கப்படுகின்றனர். போதிய ஓய்வின்மை, தூக்கமின்மை, கால்களில் தீராதவலி போன்றவற்றால் அவதிப்படுகிறார்கள்.

சிதைக்கப்பட்ட அங்கங்கள், குப்பிகள் உட்செலுத்தப்பட்ட பெண் உறுப்புகள், சிகரெட் தழும்பு தாங்கிய மார்புகள், தொடர் எலும்பு முறிவுகள், தற்கொலை, கொலை இத்தனையையும் நான் காண நேரிட்டது.

பெண் தரகர்களும், விபசார விடுதித் தலைவிகளும் பெண்களை அவர்கள் பக்கத்துப் பெண்ணுடன் வெறுமனே பேசிய காரணத்திற்கும், தேவையில்லாமல் அழுவதற்கும் கண்மண் தெரியாமல் அடிப்பதைக் கண்ணுற்றேன். Stockholm Syndrome எனப்படும் வியாதிக்கு - கடத்துபவர்கள் மேல் கடத்தப்படுபவர்கள் கொள்ளும் பிடிப்பு - இந்தப் பெண்கள் ஆளாகிறார்கள்.

கிட்டத்தட்ட அனைவரும் இந்தக் கொடுமைக்கு சுதி சேர்த்து வைக்கப்பட்டுள்ளதால் யாரைக் கேட்டாலும் அப்படி ஒன்றும் கொடுமைக்கு ஆளாவதில்லை என்றுதான் கூறுகிறார்கள். வாடிக்கையாளர்கள் அவர்கள் மீது நிகழ்த்தும் வக்கிரங்களுக்குப் பணம் வசூலிக்கப்படுவதால் இவை கொடுமை என்ற பிரிவில் வருவதில்லை. தொடர் பாலியல் தாக்குதல்களுக்கு உள்ளாகும் விபசாரிகளின் முகங்கள் அதீதமாகக் காணப்படுவதற்குக் காரணம் அவர்கள் போர் வீரர்களை விடவும் அதிகமான சமூக உளவியல் தாக்குதல்களுக்கு உள்ளாவதால் என்று தற்போதைய நவீன ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அவர்கள் வாழ்வில் நான் மிகக் குறைந்த 'முகவாண்மை'யைக் கண்டேன்.

இருப்பினும் சாமர்த்தியமான ஆண்கள் - சில சாமர்த்தியமான பெண்கள் கூட - விபசாரம் பெண்களுக்கு அதிகாரத்தை அளிக்கிறது என்றும், அது எப்போதும் மனிதத்திற்கு எதிரானது அல்ல என்றும் வாதாடுவதைக் கேட்டிருக்கிறேன். வேறு எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட வாழ்வாதாரங்களில் இது ஏற்றத் தாழ்வற்ற வாழ்வாதாரம் என்கிறார்கள். மேலும் சிலர் இதனைத் தொழில் என்றும், இதில் ஈடுபடும் பெண்களைப் பாலியல் தொழிலாளி என்றே குறிப்பிடப்பட வேண்டும் என்கிறார்கள்.

இந்த மனிதர்கள் - ஆண், பெண் இருவரும் - தங்கள் நிலையைத் தற்காத்துக் கொள்கிறார்கள் என்றோ, இந்த நிலையை மாற்ற முன் வருபவர்கள் மீது எவ்வித நம்பிக்கையும் கொள்ளாமல் இருக்கிறார்கள் என்றோ நான் கூறவில்லை. விபசாரத்தை மறுக்காமல் ஏற்றுக்கொள்வதன் மூலம் பெண்களின் சமத்துவமின்மையையும் ஏற்றுக் கொள்கிறார்களோ என்றுதான் ஐயப்பட வேண்டியிருக்கிறது. பெண்கள் தங்களுக்குள்ளே

விபசாரம் செய்கிறார்கள் என்று கூறப்படும்போது இந்தப் பெண்கள் தங்களுக்குள்ளே பாலியல் உறவு வைத்துக் கொள்கிறார்களா? ஆண்களின் பங்கினை அவர்கள் ஏன் மறுக்க வேண்டும்? ஒருவேளை பிரச்சனை அவர்கள் ஆண்களுக்கு இருக்கும் அதிகாரத்தையும், உரிமையையும் பேச விருப்பப்படவில்லை என்பதாக இருக்கலாம். ஆண்கள் தங்கள் அதிகாரத்தையும், பட்டத்தையும் தக்க வைத்துக் கொண்டிருக்கும் காலம் வரையில் எனது நண்பர்கள் ஆழமான சுரண்டலால் புரையோடிப்போயிருக்கும் இந்தச் சமூக அமைப்பில் பெண்கள் முகவாண்மைக்குத் தள்ளப்படுவதற்கு மகிழ்ச்சியே அடைகிறார்கள்.

இந்தப் பொருத்தமான சூழலில் என் தோழி ரக்ஷந்தா ஒன்றுபட்ட பாரதத்தின் தீவிர எழுத்தாளர்கள் கதைகளின் நூற்தொகுப்பு ஒன்றைக் கொண்டுவருவதன் மூலம் பெண்களின் சமத்துவமின்மைக்கும், விபசாரத்திற்கும் உள்ள தொடர்பின் மீது வெளிச்சத்தை விழ வைக்கலாம் என்று யோசனை கூறினார். இந்திய மகளிரை முன்னிறுத்தும் நூலாக அந்நூல் அமைய வேண்டும் என்று முடிவானது. வங்காளம், ஹிந்துஸ்தானி கதைகளைச் சேர்க்க ஆரம்பித்தோம். ஹிந்தியில் ஓர் அற்புதக் கதை இருப்பதாகக் கேள்விப்பட்டோம். ஆங்கிலத்தில் ஓர் உணர்வுபூர்வமான கதை; மராத்தி மொழியில் ஒரு கசப்பான கதை; பற்றி எரியும் ஒரு மலையாளக் கதை; இதயத்தைப் பிளக்கும் தமிழ்நாட்டுக் கதை ஒன்று; ஆத்மாவை நனைய வைக்கும் கன்னடக் கதை ஒன்று; கொங்கணியில் ஒன்று; அசைய வைக்கும் அசாமிய மொழிக் கதை ஒன்று, சவால் விடும் ஒடியா மொழிக் கதை ஒன்று... இப்படிச் சேர்த்துச் சேர்த்து இந்த நூல் மொத்தம் இருபது கதைகள் கொண்ட தொகுப்பானது.

எல்லாக் கதைகளுமே நமது துணைக் கண்டத்தில் பெண்களுக்கு மத்தியில் இருக்கும் சமத்துவமின்மையைப் பட்டியலிடும் கதைகள். எல்லாக் கதைகளும் ஒடுக்கப்படும்போது எழும் சுயமரியாதைக் குறைவு, பூரணத்துவமின்மை, உள்ளீடற்ற தன்மை, சுய சந்தேகம், சுய வெறுப்பு ஆகியவற்றைக் குறித்துப் பேசுகின்றன. முகவாண்மையின் வரையறை குறித்தே பேசுகின்றன. இந்தப் பெண்கள் தங்களுக்கு இருக்கும்

முகவாண்மையைப் பயன்படுத்தி ஆற்றலைச் சமன்படுத்துகிறார்கள். ஆனால் இந்த ஆற்றல் தங்கள் சுயத்தை அழித்துக்கொள்ளும் ஆற்றலாகப் போய்விடுகிறது. பிரேம்சந்தின் கதாநாயகி தன் கணவனை அவமானப்படுத்த விபசாரத்தை மேற்கொள்கிறாள். மேன்டோவின் கதாநாயகி தான் பிடிபடுவோம் என்பது தெரிந்தும் பெண் தரகனைக் கொலை செய்கிறாள். இந்திரா கோஸ்வாமியின் கதாநாயகி காதலனின் சவப்பெட்டியிலிருந்து நிர்வாணமாக எழுந்து செல்கிறாள். அம்ரிதா ப்ரீத்தத்தின் ஆசைநாயகி தனது மகனின் திருமணத்தின்போது தன் கணவன் மனைவி முன்னிலையில் பாட்டு பாடுகிறாள்.

ஒவ்வொரு சிறுகதையும் விபசாரத்தில் உழலும் பெண்களுக்கும், விபசாரத்தில் உழலாத ஏனைய பெண்களுக்கும் நிராகரிக்கப்படும் வாய்ப்புகள் குறித்துப் பேசுகிறது. விபசாரத்தில் உள்ள வன்கொடுமைகளும், காட்டுமிராண்டித்தனங்களும் வெளிச்சம் போட்டுக் காட்டப்படும் அதே நேரம் திருமணம் என்ற கலாசார முறையின்படி பெண்கள் கீழ் நிலைக்குத் தள்ளப்படுவதையும் மறக்காமல் கூறுகிறது.

சாதிய விழுமியங்களின் படிநிலைகள் மிக நுட்பமான ரீதியில் இந்தக் கதைகளில் கூறப்பட்டுள்ளன. தலித் எழுத்தாளரான பாபு ராவ் பாகுல் தனது கதையில் ஒரு கடை முதலாளி தனது நோய்வாய்ப்பட்ட மகனைச் சந்திப்பதற்கு விபசாரம் செய்யும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த விபசாரி ஒருத்தியை எப்படிக் கீழ்த்தரமாக நடத்துகிறான் என்பதைக் கூறுகிறது. இந்திரா கோஸ்வாமியின் சிறுகதை ஒரு கீழ்சாதிப் பெண் தனது மேல்சாதிக் காதலன் மணந்துகொள்ள வருவான் என்பதற்காக மோசமான வறுமையில் வாடும் கதையைக் கூறுகிறது. அம்ரிதா ப்ரீத்தத்தின் கதாநாயகி குற்றப் பரம்பரைப் பட்டியலில் இடம் பெற்ற கஞ்சர் இனத்திலிருந்து வருபவள். பிபூதிபூஷன் பண்டோபாத்யா ஒரு கீழ் சாதி பரத்தைக்கும், ஓர் உயர்சாதி சிறுவனுக்கும் இடையில் உள்ள நட்பை மிக அழகாக விவரிக்கிறார். கமலேஸ்வரின் கதையின் முக்கிய பாத்திரம் ஓர் கீழ் சாதிப் பெண் என்பதோடு இறந்து அழுகும் நிலையிலும் அவள் சுரண்டப்படுவதைச் சித்தரிக்கிறது.

பிறகு இந்தக் கதைகளில் வரும் ஆண்கள். இவர்கள் பெரும்பாலும் சூறையாடுபவர்களாகவும், பிடிவாதம் பிடிப்பவர்களாகவும், மதிப்பு மிக்கவர்களாகவும், தீர்ப்பு வழங்குபவர்களாகவும், மான அவமானம், கௌரவம் போன்றவற்றைத் தலையில் சுமப்பவர்களாகவும் வருகிறார்கள். சிலர் விபசாரம் செய்யும் பெண்ணிடமிருந்து பணம் பிடுங்கி ஜீவிப்பவர்களாகவும் வருகின்றார்கள். 'சதை நதி', 'நூறு மெழுகுவர்த்திகளின் ஒளியாற்றலுடன் ஒரு மின்சார விளக்கு', 'தெருவீதிப் பெண்கள்', 'கைவிடப்பட்ட கடவுள்' ஆகிய சிறுகதைகளில் சித்தரிக்கப்படும் ஆடவர்கள் அத்தகையோராவர். ஆனால் 'பொன்னகரம்', 'சந்தை விலை', 'காளிந்தி' ஆகிய கதைகளில் வரும் ஆண்களுக்கோ விபசாரத்தில் பெண் சம்பாதித்துக் கொண்டுவரும் வருமானத்தில்தான் வாழ்க்கையே ஓடுகிறது.

இந்தத் தொகுப்பில் உள்ள இருபது சிறுகதைகளிலும் வாடிக்கையாளர்கள், தரகர்கள், விபசார விடுதி நடத்துபவர்கள், காதலர்கள், கணவன்மார்கள், ஆள் எடுப்பவர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் தகாத செயல்கள் மென்மையாகத் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

பாலியல் தொழிலாளி என்று குறிப்பிடுவதால் மட்டும் உடல் வேட்டையில் அவர்கள் சந்திக்கும் கொடுமைகளைக் குறைக்காது. அல்லது எந்தச் சட்டம் கொண்டுவந்தாலும் உடலில் உட்புகுவதால் ஏற்படும் அதிர்ச்சியை மாற்ற முடியாது. விபசாரம் என்பது காலம் காலமாகத் தொடர்ந்து வரும் ஒரு சுரண்டல் அமைப்பு, அடிமைத்தனத்திற்குச் சற்றே முந்தைய நிலை என்ற உண்மையை எவ்விதத்திலும் பூசி மெழுக முடியாது. ஒரு பெண்ணியவாதி என்ற வகையிலும், சமூக நீதிக்காகப் போராடும் போராளி என்ற வகையிலும் இந்தக் கதைகளும், நான் சந்திக்க நேர்ந்த பெண்களின் வாழ்க்கை முறையும் பெண்கள் விபசாரத்தை மேற்கொள்ளவில்லை, விபசாரத்தில் தள்ளப்படுகிறார்கள் என்ற என் ஆழமான நம்பிக்கைக்கு வலு சேர்ப்பதாக உள்ளன. சதை நதி மற்றும் இதர கதைகள் என்ற இந்தத் தொகுப்பு பெண்களைச் சுரண்டும் எந்த முறைமையையும் சட்டமாக்குவதால் தீர்ந்து போகும் என்று கிளம்பும் அனைத்துப் பிரயத்தனத்தையும் அசாதாரணமாக்கும் நோக்கில்

தொகுக்கப்பட்டிருக்கிறது.

ருச்சிரா குப்தா
நவம்பர் 17, 2015

# உள்ளே

1. குட்டி வேசிக்கு ஒரு பொம்மை கமலா தாஸ்

2. தெருவீதிப் பெண்கள் பாபுராவ் பாகுல்

3. கடைசி வாடிக்கையாளன் நிரஞ்சனா

4. ஹிங் கச்சோரி பிபூதிபூஷன் பண்டியோபாத்யாயா

5. நூறு மெழுகுவர்த்திகளின் ஒளியாற்றலுடன் ஒரு மின்சார விளக்கு சாதத் ஹசன் மண்ட்டோ

6. சதை ஆறு கமலேஷ்வர்

7. கீர்த்தி பங்கம் பிரேம்சந்த்

8. வம்சாவளி குராத்-உல்-ஐன் ஹைதர்

9. காலிப் பெட்டி இந்திரா கோஸ்வாமி

10. பொன்னகரம் புதுமைப்பித்தன்

11. கைவிடப்பட்ட கடவுள் சித்திக் ஆலம்

12. சந்தை விலை நபேந்து கோஷ்

13. வர்றியா? குர்ஷித் அக்ரம்

14. காளிந்தி மனிஷா குல்ஷ்ரேஷ்தா

15. பண்டிட் ஜவஹர்லால் நேரு மற்றும் காயிதே ஆசாம் ஜின்னா அவர்களுக்கு: ஒரு வேசியின் கடிதம் கிருஷண் சந்தர்

16. வைப்பாட்டி சுபாஷ் கோஸ்

17. வீட்டுக்காரி இஸ்மத் சுக்தாய்

18. பகடைக் காயின் பங்கு நயனா அதர்கர்

19. கடிதங்கள் மோதுரிமா சின்ஹா

20. விபசாரி ஜே.பி. தாஸ்

21. ஷாவின் வேசி அம்ரிதா ப்ரீத்தம்

கதாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள்

# 1. குட்டி வேசிக்கு ஒரு பொம்மை

## கமலா தாஸ்

அது அதே பழைய கதைதான். அதாவது அந்தப் பெண்ணின் கணவன் அவளுடைய சின்னப் பெண்ணை அவள் தாய் வெளியில் போயிருக்கும் வேளையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்குகிறான். ஆயி - அப்படிதான் அவளை அங்கிருக்கும் பெண்கள் அழைக்கிறார்கள் - தனது பருத்த சரீரம் குலுங்க தலையை பின்னுக்குத் தள்ளிக்கொண்டு உரத்த குரலில் சிரிக்கத் தொடங்கினாள். சிரிக்கும்போது துருப்பிடித்த ஆணிகள்போல அவள் பற்கள் வெளியில் மினுங்கின. “ஏ அனசூயா! சூத்து கோவிந்தன்கிட்டயிருந்து நீ வேற என்ன எதிர்பார்ப்ப?” தனது பனிரெண்டு வயது மகளை அவளிடம் விற்க வந்த அந்த வறிய பெண்ணிடம் கேட்டாள். “சரி சரி நடந்தது நடந்தபடி இருக்கட்டும். ஒன் அழகான பொண்ணு பத்தின கவலையை விடு. அவ இங்க வந்துட்டா இல்ல? பொழச்சுக்குவா. ரெண்டு மாசம் கழிச்சு வந்து பாரு, அடையாளமே தெரியாத மாதிரி ஆகியிருப்பா. இவ வயசு பொண்ணுங்களுக்கு நல்ல சத்தான ஆகாரம் போட்டால் போதும். இங்க இருக்கற என்னோட பொண்ணுங்களை பாரு. ஒருத்தியாவது சீக்கு வந்தா மாதிரியா இருக்காளுங்க? தெனம் அவங்களுக்கு காலையில் பரோட்டாவோட முட்டைக்கறியும் கொடுக்கச் சொல்லி இருக்கேன். ஆமா...”

அந்தச் சிறுமி தன்னைச் சுற்றியிருந்தவர்கள் மேல் பார்வையை ஓடவிட்டாள். அவள் எதிரில் ஏழு பெண்கள் தரையில் உட்கார்ந்திருந்தார்கள். நிஜமாகவே அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடன்

இருந்தார்கள். கொஞ்சம் தள்ளி ஜன்னல் ஒன்றிலிருந்து ரொம்ப சோனியான ஒரு பெண் - பதினைந்து வயசுதான் இருக்கும் - கைகளில் ஆரஞ்சு வண்ணத்தில் வளையல்கள் அணிந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். இவதான் என்னோட சிநேகிதி. புதிதாக வந்த சிறுமி மனதில் தீர்மானித்துக் கொண்டாள்.

“ருக்மிணி, என் கிட்ட வா கண்ணு” என்று கூறியபடி ஆயி அந்தச் சிறுமியை தனது பருத்த முலைகளோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். “பாவப்பட்ட அம்மாவை போகச் சொல்லும்மா. பாவம் அவ ரொம்ப தூரம் போகணும். இல்லியா? இப்பவே பாரு சமயம் நெறைய ஆயிடுச்சு. பாரு தபால்காரர் கூட வேலையை முடிச்சிட்டு வீட்டுக்கு கிளம்பிப் போயிட்டிருக்காரு.”

“தபால்காரரே... எனக்கு எதுனா கடுதாசி இருக்கா?” என்று தபால் சிப்பந்தியைக் கேட்டாள். தபால்காரர் தனது சைக்கிளின் வேகத்தைக் குறைத்து ஆயியைப் பார்த்து ஓர் இணைக்கப் புன்னகை புரிந்தார். “நானும் என் செல்ல புத்திரனிடமிருந்து கடுதாசி வருமா வருமான்னு காத்துகிட்டு இருக்கேன். படுபாவி இந்த வீட்டை விட்டு என் மகன் ஓடிப்போயி பத்து வருஷம் ஆகுது. ஒரு தகவலும் இல்லை” என்று ஆயி பெருமூச்சு விட்டாள்.

“நிச்சயம் உங்களுக்கு நல்ல செய்தி வராமல் போகாது” என்றாள் அந்த சோனியான பெண். தனது சிந்திய மூக்கை சேலையின் ஓரத்தில் அழுத்தித் துடைத்தபடி, “உங்க மனசு தங்கம் ஆயி. கடவுள் நிச்சயம் உங்களை மேலும் காக்க வைக்க மாட்டான்.”

ருக்மிணி என்ற அந்தச் சிறுமி தனது தாயைத் தனது வறண்ட கண்களால் அளந்தாள். அவளுக்கு வீட்டை விட்டு வந்தது குறித்துக் கவலையில்லை. அவள் தந்தை காணாமல் போன பிறகு அந்த வீட்டிற்குள் வந்தவன் சரியான மிருகம். அவன் அம்மாவை தினமும் போட்டு அடிப்பதோடு வீட்டில் அவள் தனியாக இருக்கும் நேரங்களில் வலிக்க வலிக்க அவளது இரண்டு மெல்லிய முலைகளையும் அழுத்துவான். போனவாரம் அவன் அவள் உடலைத் துளைத்ததில் கீழே தரையெங்கும் குருதி பரவியது.

“உனக்கும் ஒரு நல்ல புருஷனா பார்த்துதான் அனசூயா கட்டி வச்சேன். தடுமாற்றம் இல்லாமல் இருக்கறவன். குடி போன்ற கெட்ட பழக்கம் அவனிடம் இல்லை. நீதான் சின்னவயசுக்காரனா வேணும்னு ஒருத்தனைச் சேர்த்துக்கிட்ட. இப்போ திருப்தியா இருக்கியா?” என்று ஆயி அவளிடம் கேட்டாள்.

“என்னை அவ்வளவு கேவலமா பேசாதீங்க” அனசூயா கெஞ்சும் குரலில் கூறினாள். “நான் ஒரு பாவப்பட்ட ஜென்மம். என் பொண்ணை நல்லா பார்த்துக்குங்க. பாவம் உலகம் அறியாப் பொண்ணு அவ.”

அனசூயா சில கரன்சி நோட்டுகளை ஒரு பேப்பரில் சுற்றினாள். சுருட்டிய காகிதத்தைத் தனது இடுப்பில் செருகிக் கொண்டாள். “எனக்கு உங்ககிட்டயிருந்து பணம் வாங்கணும்னு என்ன தேவையிருக்கு சொல்லுங்க” என்று தொண்டையை அடைத்த அழுகையை நிறுத்தி மேலும் தொடர்ந்தாள். “சரியா சொல்லணும்னா நாங்க பட்டினிதான் இருக்கோம் தினமும். இந்தப் பொண்ணுக்கு வெறும் டீயும் உச்சி வேளையில் ஒரு வாழைப்பழமும் மட்டும்தான் என்னால கொடுக்க முடியுது.”

அவள் இறங்கி நடந்து பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடந்து போவதை ருக்மிணி தாழ்வாரத்தின் இரும்புக் கம்பிகளின் பின்னிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். முடிவில் ஒரு கரும்பச்சைநிறப் புள்ளியாகத் தேய்ந்து சாலையின் பிற வண்ணங்களுடன் கலந்து மறையும் வரை அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு தனக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த புதிய தாயை ஏறிட்டாள். ஆயி தனது உள்ளங்கையில் சுண்ணாம்பையும், புகையிலைத் துணுக்கையும் அழுத்திப் பிசைந்து கொண்டிருந்தாள். தாழ்வார சன்னலிலிருந்து எட்டிப் பார்த்த அந்த ஒல்லிப் பெண் ருக்மிணியைக் கண்களைச் சுருக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் நீல நிறப் பாவாடையும், கிழிந்த வெள்ளை இரவிக்கையும் அணிந்து கொண்டிருந்தாள். அவள் கைகளில் அணிந்திருந்த வளையல்கள் மங்கி சாம்பல் நிறத்தில் பல்லை இளித்துக் கொண்டிருந்தது.

“இது உனக்கு வேணுமா?” என்று அந்த ஒல்லிப் பெண் கேட்டாள். “இதெல்லாம் பிளாஸ்டிக் வளையல் இல்லை. நைலான் வளையல்கள். போன வாட்டி ஆயி எனக்காக சந்தையிலிருந்து வாங்கிக் கொடுத்தாங்க.”

“சீதா...” ஆயி அவளைக் கூப்பிட்டு, “இனிமே நீதான் இந்த இடத்துக்கு வர்ற கஸ்டமர்களிடம் எப்படி நடந்துக்கணும்னு இந்த புதுப் பொண்ணுக்கு சொல்லிக் கொடுக்கணும். அவ உன்னை விட ரெண்டு வயசு சின்னவ. தெரியுதா?”

சீதா அந்தச் சிறுமியின் இடுப்பைப் பற்றிக் கொண்டாள். “இந்தா இந்த வளையல்களை நீயே வெச்சுக்கோ” என்று சொன்னதோடு நில்லாமல் அவள் கரங்களில் வளையல்களை மாட்டியும் விட்டாள். வளையல் அணிந்த அவள் கரங்களையும் அவளையும் பார்த்துவிட்டுச் சிரித்தாள். “அட! பெரிய பொம்பளையாட்டம் தெரியறியே... இல்லை?” என்று கூறினாள். சீதாவின் வெளுத்துப் போன கரங்களைப் பார்க்கும்போது ருக்மிணியின் கரங்கள் சற்றுப் பெரியதுதான். சட்டென்று அவளுக்கு அவமானமானது.

“ஆரஞ்சு கலர் என்னோட கறுப்பு கைக்கு சரியா இருக்காது” என்று ருக்மிணி சொன்னாள்.

“நீ ஒண்ணும் கறுப்பு கிடையாது” என்ற ஆயி, “நீ தெனமும் உன் ஸ்கூலுக்கு நல்ல வெய்யில்ல நடந்து போற இல்ல... அதான். ஒரு மாசம் போதும் உன்னை எப்படி வெள்ளையா மாத்துறதுன்னு என்கிட்டே விட்டுடு.”

கீழே தரையில் வட்டமாகப் படுத்துக் கிடந்த ஒரு பெண்மணி அவளை நோட்டமிட்டாள்.

“கறுப்பா இருப்பதில் என்ன குத்தமிருக்கு?” என்று அந்தப் பெண் ஆயியிடம் கேட்டாள். “நான் கறுப்புதான். இங்க வரும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் என்னைதான் வேணும்னு கேக்கறாங்க” என்றாள்.

சீதா ருக்மிணியை வீட்டின் இடைகழிக்கு இழுத்துச் சென்றாள். இடைகழி இருட்டாக இருந்தது. மக்கிப் போன வாசனை அடித்தது. அங்கிருந்த

அவளை வேறு ஒரு கூடத்திற்கு அழைத்துப் போனாள். அங்கே சில பெண்கள் மட்ட மல்லாக்கப் பாய்களில் படுத்துக் கிடந்தனர். ஒருத்தி பாவடையை நெகிழக் கட்டியிருந்ததால் அது கீழே தழைந்து அவளுடைய பின் பாகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. ருக்மிணிக்கு அது பிடிக்கவே இல்லை. “ஐய்யே அந்த பொம்பளையைப் பாரு, கொஞ்சம் கூட வெக்கமே இல்லாம...” என்றாள். சொன்னதோடு கீழே கிடந்த துவர்த்து ஒன்றை அவள் கால்களின் மேல் விட்டெறிந்தாள். “அவ பேரு ராதா. அவளுக்கு அடிக்கடி கோபம் வரும். அவ கிட்ட பார்த்து ஜாக்கிரதையா நடந்துக்க” என்று சீதா ருக்மிணியை எச்சரித்தாள். மூலையில் கிடந்த பாய் ஒன்றினைச் சுட்டியபடி “நான் இதுலதான் பகல் பூரா தூங்குவேன்” என்றாள். “நீயும் வேணா அதுல என் கூட பகலில் தூங்கிக்கோ. சரியா?” என்று கூறினாள்.

“பகலில் தூங்கும் பழக்கம் எனக்கு இல்லை” என்றாள் ருக்மிணி வெள்ளந்தியாக.

எங்கிருந்துதான் சீதாவிற்கு அப்படி ஒரு சிரிப்பு பீரிட்டு வந்ததோ தெரியாது, அவள் அடி வயிற்றைப் பிடித்துக்கொண்டு வாய்விட்டுச் சிரித்தாள். “நீ நிஜமாவே ஒரு சின்னப் பாப்பாதான்” என்றவள், “இப்படி அப்பாவியா இருக்கியே நீ. இந்த வீட்டில் ராத்திரி தூங்க விடுவாங்கன்னு நம்புறியா? ராத்திரி பூரா நம்ம வேலை, வர்ற வாடிக்கையாளர்களை குஷிப்படுத்துவது மட்டும்தான்.”

“என்னது வாடிக்கையாளர்களா?” என்று புருவம் உயர்த்திய ருக்மிணி, “அது யாரு ராத்திரி நேரத்தில் வரும் வாடிக்கையாளர்கள்?” என்றாள்.

சீதா மேலும் பயங்கரமாகச் சிரிக்கத் தொடங்கினாள். “ஐயோ போதும் போதும். இப்படி லூசு மாதிரி பேசாத. அப்புறம் நான் பாவாடையில் ஒண்ணுக்கு போயிருவேன்.”

தனக்கும் சீதாவுக்கும் ஒதுக்கப்பட்டிருந்த பாயின் மீது தான் கொண்டுவந்திருந்த புத்தகப் பை கட்டை வைத்தாள்.

“ஆம்பளைங்க இங்க வருவதே செய்யறதுக்குதான்” என்றாள் சீதா.

“என்ன செய்வாங்க?” அவளுக்குத் தனது தாயின் கணவன் நினைவு வந்தது. அவன்தான் அவளைத் தரையில் கிடத்தி அவள் மேல் படர்ந்தான். அந்த வலியை அவள் இன்னும் மறக்கவில்லை.

“பாரு, உனக்கே இன்னும் கொஞ்ச நேரம் போனால் தெரிய வரும்” என்ற சீதா, “அவங்க கிட்ட கீழ் படிஞ்சு நடந்துக்க. இல்லை ஆயி உன்னை ஒட்ட ஒட்ட பட்டினி போட்டிருவா. அவங்க என்ன செய்யணும்னு பிரியப்படறாங்களோ செஞ்சுட்டு போகட்டும்னு விடு. மனுசனுங்களா அவனுங்க? நாயிங்க...” என்று முடித்தாள்.

அங்கிருந்து அவர்கள் இடைகழிக்குச் சிட்டாகப் பறந்தனர்.

“யாரு அங்கே?” என்று கிசுகிசுப்பாக ஒரு குரல் கேட்டது.

“நாந்தான் சீதா.”

“சத்தமா பேசாதடா கண்ணு” என்று அந்தக் குரல் மேலும் குழைந்தது.

“அது மீரா தாயீ. இந்த மாளிகையின் செல்லப் பொண்ணு” என்று சீதா மெல்லிய குரலில் கூறினாள்.

“ஆயி இவளுக்குன்னு தனி ரூம் கொடுத்திருக்காங்க. ரொம்ப அழகா இருப்பாங்க. ப்ளஸ் டு வரைக்கும் படிச்சிருக்காங்க. இங்க இருப்பதில் முக்காலும் பள்ளிக்கூடம் போகாதவங்கதான். நீ எது வரைக்கும் படிச்சிருக்க ருக்மிணி?” என்று அவளைப் பார்த்து சீதா கேட்டாள்.

“நான் ஆறாம் வகுப்பு வரை படிச்சிருக்கேன்” என்றாள் ருக்மிணி பெருமையாக.

“அது போதும். ஆமாம் உனக்கு இங்கிலீஷ் எழுதப் படிக்க தெரியுமா?” என்றாள் சீதா.

“எனக்கு இங்கிலீஷ் அவ்வளவு நல்லா தெரியாது. இந்த வருஷம்தான் இங்கிலீஷ் பாடம் சேர்த்திருக்காங்க. ஆனா மராத்தியும், இந்தியும் நல்லா எழுத படிக்க தெரியும்” என்றாள் ருக்மிணி.

“என்கிட்டே ஒரு புஸ்தகம் இருக்கு ஒரு கஸ்டமர் கொடுத்தது. தரேன்

படிச்சு பாரு. அதுல ஆம்பள பொம்பளங்களோட கெட்ட கெட்ட படமெல்லாம் போட்டிருக்கும். நான் அவன் கிட்ட படிச்சவ மாதிரி காமிச்சுகிட்டேன். அதான் அதை என் கிட்ட கொடுத்து படிக்கச் சொல்லி கொடுத்தான்." சொல்லிவிட்டு சீதா மீண்டும் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கறப்ப எல்லாம் வயித்த புடிச்சுகிட்டு சிரிக்கற?" என்று அவளை ருக்மிணி கேட்டாள்.

"நான் சிரிக்கறப்ப அடிவயித்தைப் பிடிச்சு இழுக்கறா மாதிரி இருக்கு. இப்பல்லாம் நான் அத்தனை சந்தோஷமா இல்லை. பசியே எடுக்க மாட்டேங்குது."

வாசல் தாழ்வாரத்திலிருந்து கடூரமாக ஓர் எதிர்ப்புப் குரல் கேட்டது.""இல்லவே இல்லை லட்சுமி. உன் பொண்ணுங்களைப் பத்தி நான் எதுக்கு தப்பா பேசப்போறேன்? நீ எனக்கு தங்கச்சி மாதிரி. இதைத்தவிர உங்களைப் பத்தி எனக்கு சொல்ல என்ன இருக்கு? உங்க குடியில் இருக்கும் பொண்ணுங்களா? எல்லாருக்கும் தெரியும் நீங்க வீட்டை எப்படி ஒழுங்கோட வச்சிருக்கீங்கன்னு. ஒருத்தியாவது வத்தலும் தொத்தலுமா இருக்கீங்களா? இன்ஸ்பெக்டர் ஐயா நம்ம மீராவை சினிமா ஸ்டார் கணக்கா இருக்கறதா பாராட்டியிருக்காரு. ஏதோ பேரு கூட சொன்னாரு. ஞாபகம் இல்லை. ஆனா அந்த ஸ்டாரு ரொம்ப ஃபேமஸ்."

ஆயி சப்பரமாகச் சுவரில் சாய்ந்து இரண்டு பருத்த கால்களையும் நீட்டியபடி அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள். வாயில் அதக்கிய புகையிலையைச் சற்று மெல்லும்போது பேச்சை நிறுத்தியவள் மேலும் தொடர்ந்தாள். "ஆமாம் சிந்துத் தாயீ நீ அந்த இன்ஸ்பெக்டரை எங்கே பார்த்த?" என்று கேட்டாள். அந்த வயதான பெண்மணி ஆயியின் வெற்றிலைப் பெட்டியிலிருந்து ஒரு துண்டு புகையிலையை எடுத்துக்கொண்டு பேச்சைக் கேட்காதவள்போல முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள். ஆயி அதே கேள்வியை மீண்டும் கேட்டாள். சிந்துத்தாயிக்கு அந்தக் கேள்வியின் அழுத்தம் புரியாமல் இல்லை. "நேத்திக்கு கௌசல்யா வீட்டில் பார்த்தேன்" என்றாள்.

"நன்னி கெட்டவ" என்று சப்தம் போட்ட ஆயி, "இங்க என்னடான்னா

அந்த இன்ஸ்பெக்டருக்கு ஓசந்த பொருளையெல்லாம் கொடுக்கறேன். இது போதாதுன்னு வாரம் அம்பது ரூபாய் கப்பம் வேற. எல்லா பொண்ணுங்களும் ஓசில. அப்படி இருந்தும் கூத்தடிக்க அவருக்கு என்னோட வைரி கௌசல்யா வீடுதான் கேக்குதா? என் பிள்ளைங்களுக்கு என்ன குறைச்சல்? கௌசல்யா வூட்ல இருக்கற களுதைங்கள்லாம் நம்ம வீட்டில் இருக்கும் பொண்ணுங்க மாதிரி சுத்தமாவா இருக்குதுங்க? எல்லாம் அஞ்சு ரூவா மட்டச் சரக்குங்க."

"தங்கச்சி விடு, வருத்தப்படாத" என்றாள் சிந்துத் தாயி. "இன்ஸ்பெக்டர் சொல்றாரு அவருக்கு முத்தின பொம்பளைங்க அலுத்துப் போயிட்டாங்களாம். சின்னப் பொண்ணுங்கதான் வேணுமாம். சொல்றாரு."

"நம்மகிட்ட இல்லாத சின்னப் பொண்ணுங்களா? இந்த சீதாவுக்கு என்ன குறை? அவ என்ன கலரு வெள்ள வெளேருன்னு முள்ளங்கியாட்டம் இளசா லட்சணமா இல்லியா?"

"சீதா இனிமேல் சரியா ஒத்துழைப்பான்னு தெரியல தங்கச்சி" என்று சிந்துத் தாயி குரலைத் தாழ்த்திச் சொன்னாள்.

"நான் இன்னிக்கு கூட்டிட்டு வந்திருக்கேனே ஒரு சின்னப் பொண்ணு... அவளைப் பார்த்தியா நீயி?" என்றவள் உள்பக்கம் திரும்பி, "ருக்மிணி இங்க வா. உன்னை சிந்துத் தாயி பார்க்கணுமாம்" என்றாள்.

சீதா ருக்மிணியைத் தாழ்வாரத்தில் தள்ளிவிட்டாள். அந்தக் கிழவி அவள் கால்களையும் பிட்டத்தையும் அழுத்திப் பார்த்தாள்.

"ஆமாம் கிண்ணுன்னு நல்லாதான் இருக்கா..." என்றவள் ஆயியைப் பார்த்து, "எவ்வளவு கொடுத்து வாங்கின? நல்ல விலை கொடுத்திருப்பியே?" என்று கேட்டாள்.

ஆயி அந்தக் கிழவியின் காதில் என்னவோ கிசுகிசுத்தாள்.

"அட இவ கௌசல்யா பொண்ணா? என்னடா காலு இவ்வளவு அழகா வாழைத்தண்டு மாதிரி இருக்கேன்னு பார்த்தேன்."

"போயி அந்த இன்ஸ்பெக்டர் கிட்ட இந்தக் குட்டி அம்மன் நம்ம வீட்டுக்கு

வந்திருக்கும் விஷயத்தை சொல்லிட்டு வா" என்றாள் ஆயி.

"இன்னிக்கு சாயந்திரமே சொல்றேன்" என்ற சிந்துத்தாயி பித்தளை வெத்தலைப் பெட்டியிலிருந்து ஒரு கொத்து வெற்றிலையை அள்ளிக்கொண்டு கிளம்ப எத்தனித்தாள். கிழவியின் காய்த்துப் போன கரங்களும், அழுக்குப் படிந்த நகங்களும் அந்தச் சிறுமியை வெருட்டின. சூனியக்காரிபோல தோற்றமளித்த அந்தக் கிழவி தன்னை உற்றுப் பார்த்தபோது ருக்மிணிக்கு தன் மேல் ஒரு மரங்கொத்தி உட்கார்ந்து கொத்துவதைப்போல இருந்தது.

"ச்ச... என்ன பயங்கர ஜென்மம்." அவள் சீதாவிற்கு மட்டும் கேட்கும் வண்ணம் கிசுகிசுத்தாள்.

"ஆமாம். சரியான வம்புக்கு அலையும் ஜென்மம். எனக்கும் அவளைக் கண்டால் ஆகாது. சூன்யக் கிழவின்னுதான் கூப்பிடுவோம்" என்று சீதா கூறினாள்.

•

தெரு விளக்குகள் எரியத் தொடங்கி விட்டாலும் இன்னும் வானத்தில் முழு இருட்டு வராமல் சாம்பல் பூத்துக் கிடந்தது. அப்போது மீராவின் வாடிக்கையாளன் - அந்தக் கல்லூரி வாலிபன் - திமிருடன் நடந்து வந்து வாசலில் நின்று "மீரா மீரா..." என்று அதிகாரமாகக் குரல் எழுப்பினான். குளிப்பறையில் உடலெல்லாம் கடுகு எண்ணெயைப் பூசிக்கொண்டு எண்ணெய் மசாஜுக்குக் காத்திருந்த ஆயி காதுகளில் அவனுடைய தோரணையான கூப்பாடு விழுந்தது. கொதித்துப் போனாள். "அந்த வாய் மூடாத பட்டிக்காட்டான் வந்துட்டான்" என்று அவள் அருகில் இருந்த பெண்ணிடம் கூறினாள். "இன்னிக்கு மட்டும் அவன் காசு கொடுக்காம போகட்டும் மவனே போலீசுல பிடிச்சுக் கொடுக்கறேன் பாரு. ராதா அவன் என்னிக்காவது உன்னைக் கூப்பிட்டிருக்கானா?" என்று வினவினாள்.

"இல்லைம்மா அவன் எப்ப வந்தாலும் மீராவைதான் கேட்பான். என்னவோ அவளுக்கு தான்தான் புருஷன்னு ஒரு நினைப்பு. பாதி ராத்திரியில் கூட அவளோட பேசிக்கிட்டே இருப்பான். நடு நடுவில் வாய்த் தகராறு வேற

கேட்கும்.”

“பாதி ராத்திரி வரையிலுமா?” என்ற ஆயி, “அவ்வளவு நேரத்துக்கு அவன் சரியான அளவு காசு கொடுப்பானா?”

“என்கிட்டே கேட்காதிங்க. மீரா இந்த வீட்டில் உங்க செல்லப் பொண்ணுதானே? அவகிட்ட யாராவது ஒரு கேள்வியாவது கேக்க முடியுமா? அவ வர வர ரொம்ப சொகுசுக்காரியா ஆகிட்டு வர்றா. நேத்திக்கு நம்ம இன்ஸ்பெக்டரையே வேணாம்னு சொல்றா. கேட்டா தலைவலியாம். அவ நடந்துக்கறதைப் பார்த்தா வேசை நடந்துக்கறா மாதிரி இல்லை. என்னவோ அந்த காலேஜ் பையன் பொண்டாட்டி மாதிரி நடந்துக்கறா.”

“நிறுத்துடி ரொம்ப பழி போடாதே.”

“ஆமாம் வேசைன்னு சொன்னா உங்களுக்கு பிடிக்காது” என்று முணுமுணுத்த ராதா, “உங்களுக்கும் நல்லா தெரியும் நாங்கள்ளாம் வேசைங்கதான். நேர்மையும், உண்மையும் இருந்தாப் போதும்னு நம்புறவ நான்” என்று முடித்தாள்.

“காலை நல்லா அழுத்தித் தேயிடி” என்று ஆயி உத்தரவு போட்டாள்.

மீராவின் அறைக்குள்ளிருந்து ஓர் ஆடவனின் இறைச்சலான பேச்சுச்சத்தம் கேட்டது.

மீராவின் சிரிப்புச் சப்தம் மீண்டும் ஒருமுறை கேட்டது.

ஆயி நிலை தடுமாறினாள். “அப்படி எதைப்பத்திதான் எப்பவும் பேசிக்கறாங்கடி?” என்று கேட்டாள்.

“அவன் இவளுக்கு அரசியல் கத்துத் தரானாம்...” என்றாள் ராதா.

“அவன் பொட்டையாடி?” என்று ஆயி கேட்டாள்

“எனக்கு என்ன தெரியும்?” என்று கேட்ட அவள் மேலும் தொடர்ந்தாள். “அவன் எங்களில் ஒருத்தியைக் கூட திரும்பிப் பார்த்ததில்லை. ஆனா எங்களுக்கு தெரிஞ்சுது அவன் கிளம்பிப் போன உடனே மீராவுக்கு தீராத

தலைவலி வரும் என்பது மட்டும்தான். அவன் போனப்பறம் மகராணி வேற எந்த வாடிக்கையாளன் கூடவும் படுக்க மாட்டா. படுக்கையில் உக்காந்துகிட்டு ஏதேதோ பாட்டை முணுமுணுத்துகிட்டு இருப்பா." ஆயி தனது முக்காலியிலிருந்து ஆவேசமாக எழுந்தாள். மீராவின் அறையின் மூடிய கதவின் முன் போய் நின்றாள். இன்னமும் அந்த இளைஞன் விறுவிறுப்பாகப் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. ஓரிரு வார்த்தைகள் மட்டுமே அவளுக்கு விளங்கியது. இரண்டு மூன்று தடவை அவன் பேச்சில் 'புரட்சி' என்ற வார்த்தை ஒலித்தது. ஆயி அறைக் கதவைத் தட்டினாள். "யாரு?" என்றாள் மீரா பதிலுக்கு. "கதவைத் திறடி" என்றாள் ஆயி. மீரா கதவைத் திறந்தாள். மீரா பச்சை வண்ணச் சீலை கட்டியிருந்தாள். படுக்கையில் விரிப்பு கொஞ்சம்கூட கலையாமல் இருந்தது. அதன் மேல் அந்தக் கல்லூரி வாலிபன் வாயில் சிகரெட் பிடித்தபடி அமர்ந்திருந்தான்.

"நீ இங்கே இவ்வளவு தூரம் வருவது அவளுக்கு புரட்சின்னா என்னன்னு சொல்லிக் கொடுக்கவா?" என்றாள் ஆயி.

அவனுக்கு முகம் சிவந்தது. "நான் சும்மா வரல. காசு குடுத்துட்டுதான் வந்திருக்கேன்" என்றான்.

ஆயி அவனைக் கடுப்புடன் பார்த்தாள். "இது தேவிடியாக் குடி. மாநாட்டுப்பந்தல் இல்லை. எதுக்கு வந்தியோ அதை முடிச்சிட்டு கிளம்பிக்கிட்டே இரு. சரியா?" என்றவள் மேலும் "வேற கஸ்டமருங்க வர்ற நேரம் இது" என்று முடித்தாள்.

கதவு மீண்டும் சார்த்தப்பட்டது. ஆயி தாழ்வாரத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களை அளந்தாள். பெண்கள் ஜரிகை, ஜிகினாக்கள் மின்னும் சீலைகளைக் கட்டியிருந்தனர். முகத்திற்கு மேக்கப். கூந்தலில் பூச்சரம். இரண்டு சின்னஞ்சிறுமிகள் தரையில் பெரிய பெரிய கட்டம் போட்டு பாண்டி ஆடிக் கொண்டிருந்தார்கள். "சீதா, இது என்ன சின்னப் புள்ளைங்களாட்டம் கஸ்டமர் வர்ற நேரத்தில் விளையாடிகிட்டு?" என்று அதட்டினாள்.

அவள் சொல்லி வாய் மூடவில்லை அந்த முரட்டு இன்ஸ்பெக்டர்

தாழ்வாரத்தில் நுழைந்தபடி ருக்மிணியைப் பார்த்துக் கை நீட்டி “இவதான் உன்னோட புது வரவா ஆயி?” என்று கேட்டார். ஆயி ஆமாம் என்று தலையாட்டினாள்.

“உள்ள வா…” என்று அந்தப் புது மனிதன் ருக்மிணியைக் கிட்டத்தட்ட அறைக்கு உள்ளே இழுத்துக் கொண்டு போனான்.

“போம்மா… உனக்கு வேண்டப்பட்டவர்தான்” என்று ஆயி கூறினாள்.

அந்த இன்ஸ்பெக்டர் அவளைப் படுக்கையில் தள்ளினார். பிறகு அவள் பாவாடையை மேலே தூக்கினார். “என்னடி பெரிய வீட்டுப் பொண்ணுங்க மாதிரி ஜட்டியெல்லாம் போட்டிருக்க?” என்று கூறி சிரித்தார். ருக்மிணி அவர் கரங்கள் தனது உடலில் பரவுவதை உணர்ந்தாள். அவரைத் தள்ளி விட முயன்றாள். “விடு விடு. விடலன்னா நான் உன் கண்ணு ரெண்டையும் பிடுங்கிடுவேன்.”

“என்னடி சொன்ன காட்டுப்பூனையே…” என்று சீறினான் அந்தப் புதிய மனிதன். அவன் குரலில் மாற்றம் தெரிந்தது. “கண்ணைப் புடுங்குவையா சின்னத் தேவிடியா…”

“நான் ஒண்ணும் தேவிடியா இல்லை” என்று அந்தச் சிறுமி அழுதாள். அவள் அழுகையை அவன் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. ஏதோ ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டவனைப்போல அவனுக்கு மூச்சிரைத்தது. வாயின் ஓரத்தில் நுரை தள்ளியிருந்தது. சிறிது நேரம் கழித்துத் திரும்பிப் பார்த்தவன் தனது கண்களை மூடிக்கொண்டு கிசுகிசுத்தான் “அடுத்தவாட்டி வர்றப்ப உனக்கு ஒரு சிவந்த கலர் பாவாடையும் லேஸ் வச்சு தெச்ச ஜட்டியும் வாங்கிகிட்டு வர்றேன். சரியா?”

ருக்மிணி படுக்கையிலிருந்து எழுந்து தாழ்வாரத்தை நோக்கி ஓடினாள். அவள் முடி கலைந்து இருந்தது. புருவங்களில் வியர்வை வழிந்தோடியது. மீண்டும் திண்ணையில் போடப்பட்டிருந்த பெரிய பெரிய கட்டங்களில் தனது பாண்டி ஆட்டத்தைத் தொடர்ந்தாள். சீதா அவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

“நான் ஜெயிச்சுட்டேன்” என்று வெற்றிக் களிப்பில் ருக்மிணி கூச்சலிட்டாள்.

அப்போது அந்த இன்ஸ்பெக்டர் அறையிலிருந்து வெளியில் வந்தவர் ஆயியைப் பார்த்து லேசாக முறுவலித்தார்.

“சரியான வம்புக்காரி. ஓகே. தொழில் தந்திரமெல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கா. ரொம்பப் பிடிச்சு போச்சு எனக்கு.”

ருக்மிணி அவன் முகத்தை ஏறிட்டாள். முகம் எங்கும் சிவந்து அவளுடைய நகக்கீறல்கள் காணப்பட்டன. திருப்தியான முகபாவம் தெரிந்தது.

“மீரா ரூமில் கலாட்டா பண்ணினது யாரு?” என்று ஆயியைப் பார்த்துக் கேட்டார்.

ஆயி வெறுப்புடன் தலையில் அடித்துக்கொண்டு, “அந்த காலேஜ் பையன்தான். அவன் இவளுக்கு அரசியல் கத்துக் கொடுக்க வந்திருக்கான்.”

“அவனை இந்த இடத்தை விட்டே என்னால் துரத்த முடியும், ஒரு நாள் டைம் கொடு. அவனை முட்டிக்கு முட்டி தட்டி உள்ள போட்டுடறேன்.”

“உங்களால முடியும்னு எனக்கு தெரியும். இருந்தாலும் கொஞ்ச காலம் போகட்டும். மீராவுக்கே அவனிடம் சலிப்பு வரட்டும். அப்புறம் அவனை விரட்டுங்க. மீரா என் பொண்ணு மாதிரி. அவள் கிட்ட எனக்கு இஷ்டம் அதிகம். அவ மனசு வருத்தப்படுவதை எனக்கு காண சகிக்காது.”

“அவளை முக்காலும் கெடுத்து வச்சிருக்க லட்சுமி பாய். இப்பவே அவ என்னவோ பெரியவீட்டு பொண்ணு மாதிரி நடந்துக்கறா.”

“யாருதான் அவ பெரியவீட்டு பொண்ணு இல்லைன்னு தீர்மானமா சொல்ல முடியும்?” ஆயி கேட்டாள்.

“அவள் இங்கே வந்து நின்னப்ப அவ கட்டியிருந்த பட்டுச் சீலையை பார்க்கணும். அவ்வளவு உசத்தியான சீலையை இங்க உள்ள யாரும் பார்த்துக்கூட இருக்க மாட்டாங்க.”

“அவ அம்மா யாராவது பணக்காரங்க வீட்டு வேலைக்காரியா இருந்திருப்பா... தீபாவளிக்கு அவங்க கொடுத்த சீலையா இருக்கும் அது” என்றான் அந்த இன்ஸ்பெக்டர். அவள் வெற்றிலைப் பெட்டியின் பக்கம்

கையை நீட்டினான்.

“நிச்சயம் அவ ஏழைக் குடியில் பொறந்தவ மாதிரி தெரியவில்லை. அவளை கடை வீதிக்கு கூட்டிட்டுப் போனா ஒவ்வொருத்தனும் பசியோட பார்க்கும் பார்வையைப் பார்க்கணுமே. வீட்டை விட்டு ஓடிப்போன என் மவன் வந்தா நிச்சயம் நான் இவளை அவனுக்குதான் கட்டிக் கொடுப்பேன். நல்ல ஜோடியா இருப்பாங்க. ரெண்டு பேருக்கும் நல்ல கலர். நல்ல அழகான கண்கள்.”

“உன் பையனோட அப்பா சித்பவன் என்னும் பெயருடைய பிராமணன்தானே?” என்று அந்த இன்ஸ்பெக்டர் கேட்டார். இருவரும் நக்கலாகச் சிரித்துக் கொண்டார்கள்.

“நான் கிளம்பறேன்” அந்தப் புதியவன் சொல்லிவிட்டு எழுந்தான்.

“நீங்க கௌசல்யா குடிக்கு போகறீங்களாமே? நெஜமா? எனக்கு நேர்மையான பதிலை சொல்லிட்டு போங்க” என்றாள் ஆயி.

“அந்த சிந்துத்தாயியை உள்ள தள்ளினா எல்லாம் சரியாகும். பஸ் ஸ்டாப்புக்கு போகறப்ப அவ அந்தக் குடியைக் கடந்து போயிருக்கா. கொஞ்சம் கூட நேரத்தை வீணடிக்காம நேரா உன் கிட்ட போட்டுக் கொடுத்திருக்கா. எனக்கு என்ன தேவை லட்சுமி பாய் அவ குடிக்கு போவறதுக்கு?” என்றார் அந்த இன்ஸ்பெக்டர்.

ஆயி பலமாக மூக்கைச் சிந்தி அழும் நிலைக்குப் போய்விட்டாள். “அந்த கௌசல்யா என் பொண்ணுங்களைப் பத்தி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக்கிட்டு திரியிறா. அவ நம்ம பொண்ணுங்களுக்கெல்லாம் வியாதி வந்துடிச்சுன்னு புரளியை கிளப்பிக்கிட்டு இருக்கறதா சிந்துத்தாயிதான் சொன்னா. இப்படி கதை கட்டிவிட்டா என் தொழில் என்னத்துக்கு ஆவுறது? அப்புறம் என் பொண்ணுங்க எல்லாம் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்” என்று ஒருபாட்டம் அழுது ஓய்ந்தாள்.

“அழாத லட்சுமி பாய்” என்று அவளுடைய பருத்த கரங்களைத் தடவிக் கொடுத்தபடி அந்த இன்ஸ்பெக்டர் ஆறுதல் கூறினார். “உன்

கௌரவத்தை நான் காப்பாத்துறேன். நான் உன்னோட சிநேகிதன். நான் உன்னை கைவிடுவேனா?"

ஆயி சற்றுப் பிரகாசமானாள். லேசாக முறுவலிக்க முயன்றாள்.

"கொஞ்சம் வெத்தலை போட்டுக்குங்க இன்ஸ்பெக்டர் சாஹேப்" என்று கிசுகிசுத்த குரலில் கூறினாள்.

இன்ஸ்பெக்டர் சென்றதும் ஆயியிடம் ஒரு சிடுசிடுப்பு ஏற்பட்டது. தாழ்வாரத்தில் இருந்த கம்பிக் கிராதிகளின் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்த பெண்களை ஏசத் தொடங்கினாள், "என்னடி ஆச்சு உங்களுக்கெல்லாம்? ஆம்பளைங்கள எப்படி இழுக்கணுங்கற கலையை மறந்து தொலச்சுட்டீங்களா? முட்டையும் டால்டாவும் மீனும் வாங்கிட்டு வந்து ஆக்கிப் போடறதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. ஒருத்திக்காவது ஒரு ஆம்பளையைக் கைக்குள் போட்டுக்கத் தெரியுதா? மீரா ஒருத்திதான் இதுக்கெல்லாம் சரி. பாரு ஒண்ணுக்கும் உதவாத ஒரு தடியனோட கதவை மூடிக்கிட்டு அரசியல் பாடம் கேக்குறதை. எத்தனை பெரிய மனுசாளுங்க காரைப் போட்டுக்கிட்டு இந்த வழியா போறாங்க. அவங்க காரு இந்த வீட்டை மெதுவா கடந்து போகறப்ப ஒருத்திக்காவது அவங்களை மயக்கி உள்ளாற கூட்டிகிட்டுப் போக துப்பு இருக்காடி? சச்சை... நான் மேய்க்கறது அத்தனையும் பன்னிக் கூட்டம். கௌசல்யா என்னை விட அதிர்ஷ்டக்காரி. அவ தன் பொண்ணுங்களை சாட்டையால விளாசுவாளாம். ஆனா அடிதான் வேலை செய்யும். பாருங்கடி அவ குடிக்கு முன்னால நிக்கிற பெரிய பெரிய காருங்களை. மணி எட்டு கூட ஆகலை, இதுவரைக்கும் ரெண்டு கஸ்டமர்தான். பாருங்க உங்க எல்லாரையும் துரத்திட்டு நான் காசிக்கு போயிடப் போறேன். அங்கேயாவது எனக்கு நிம்மதியான சாவு வரட்டும்."

சரஸ்வதி என்ற பெயருடைய அந்தக் கறுப்புநிறப் பெண் பஸ்ஸிலிருந்து அந்தக் குடியையே நோட்டமிட்டுக் கொண்டிருந்த ஒரு ஆடவனைப் பார்த்துக் கைகளால் ஜாடை காட்டினாள். சில நிமிடங்களில் அடுத்த நிறுத்தத்தில் பேருந்தை விட்டு இறங்கிய அந்த மனிதன் அவள் அருகில் வந்து நின்றான். இடைகழியில் அவனை அழைத்துக்கொண்டு சென்றவள்

அவன் முன் இடுப்பை ஆட்டி ஆட்டி நடை பயின்றாள். ஆயி தனது விழியோரங்களைச் சீலை தலைப்பால் துடைத்து விட்டுக் கொண்டாள்.

“நான் இப்படியெல்லாம் பண்ண மாட்டேன். கேவலமா இருக்கும் எனக்கு” என்றாள் ராதா.

“எனக்கு தெருவுல போற ஒரு சாதாரண பொம்பளையைப்போல போற வர்றவங்களை கூப்பிடப் பிடிக்காது.”

வந்தவர்களில் யாரோ சீதாவை அழைப்பது கேட்டது.

“ஆயி இன்னிக்கு ராத்திரி வேணாம் என்னை விட்டுடுங்க” என்று சீதா மன்றாடினாள்.

“போம்மா கண்ணு கூப்பிடறாரு இல்லை?” என்று ஆயி அவளைக் கதவு வழியாக உள்ளே தள்ளி விட்டாள்.

“ருக்மிணி என் சில்லை கட்டத்திலிருந்து எடுக்காதே. நான் வந்ததும் விளையாட்டை தொடரலாம்.”

“அந்த கஸ்டமர் மதராசியா இருந்தாலும் நல்ல மனுஷன். இங்கதான் ஏதோ பள்ளிக்கூடத்தில வேலை பார்க்கிறாரு. மாதம் முதல் வாரத்தில இங்க வருவாரு. சீதாவை மட்டும் கேப்பாரு. அவருக்கு காலேஜில் படிக்கும் வயசுக்கு வந்த பொண்ணுங்க இருக்காங்க. அவரு பொண்டாட்டிக்கு முடக்கு வாதம் வந்து நோயில அவதிப்படறாங்க. அவரு என்கிட்டே அவரு வாழ்க்கையைப் பூரா சொல்லுவாரு. அவரு மத்தவங்க மாதிரி வேணுமின்னே பேசாம இருக்க மாட்டாரு. ஒண்ணுவிடாம எல்லாத்தையும் சொல்லுவாரு” என்றாள் ஆயி.

உள்ளிருந்து கிளம்பிய அழுகுரல் ஆயியின் செவிகளில் வந்து விழுந்தது. ஒரு கணம் அந்த அழுகுரலைக் கவனமாகக் கேட்டாள்.

“மீராதானே அழுவுறது? போங்க போயி உள்ள என்ன ஆச்சுன்னு பாருங்க. ஆம்பளைங்க வினோத ஜந்துங்க. அவங்க செயல்களை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இப்படிதான் நான் சின்னப் பொண்ணா இருந்தப்ப ஒரு பணக்காரன் வந்தான். அரைமணிநேரம் என்னை

சாட்டையால விளாசினான். அதுக்கப்புறம் முப்பது ரூபாயை என்னிடம் கொடுத்துட்டு போயிக்கிட்டே இருந்தான். அந்தக் காலத்துல முப்பது ரூபா எல்லாம் ரொம்பப் பெரிய காசு. எனக்கு அழக்கூட முடியலை. ஆச்சரியமா போச்சு. அவன் திருப்பியும் வருவான்னு காத்துகிட்டிருந்தேன். வரவே இல்லை."

"உங்க பையனோட அப்பா எப்படி இருப்பாரு ஆயி?" என்று ராதா கேட்டாள்.

ஆயி அவள் கன்னங்களில் செல்லமாகத் தட்டினாள், "என் பையனின் அப்பாவைப் பத்தி பேசும் யோக்கியதை உனக்கு இல்லை" என்றவள், "அவரு அய்யிரு. உங்களையெல்லாம் பார்க்க வர்றாங்களே அவங்க மாதிரி அவரு கெடையாது. பண்டிதர். ஆடை அணியும்போது கூட அவரு வாயில் வேத மந்திரம்தான் ஒலிச்சுகிட்டு இருக்கும்."

"நீங்க சொல்றதை வச்சு பார்த்தா அவரு நம்ம மீராதாயியோட கூட்டாளி மாதிரிதான் தெரியுது. அந்தப் பையனும் ராத்திரி கீதகோவிந்தம் சொல்லுவான். நான் கேட்டிருக்கேன். அவ அதைத் திருப்பி முணுமுணுப்பதை நான் கேட்டிருக்கேன்."

"மீராவுக்கு இனிமையான சாரீரம். அவள் என்னோட பொக்கிஷம். பத்தொன்பது வருஷங்களுக்கு முன்னால யாரு அவளை சீலையில் மூடி என் வீட்டு வாசலில் விட்டுட்டு போனதுன்னு தெரியலை. ஒருவேளை பெரிய வீட்டுப் பொண்ணு யாராவது புருஷன் இல்லாதப்போ தப்புப் பண்ணி பெத்துகிட்ட குழந்தையா இருக்கும்."

"புள்ளையை சுமக்க வேணாம்னு நினைச்ச ஒரு வேசியா கூட இருக்கலாம்" என்றாள் ராதா.

"உங்களுக்கெல்லாம் மீரா மேல பொறாமைடி" என்றாள் ஆயி.

அப்போது மீராவின் வாடிக்கையாளன் அறையிலிருந்து வெளியில் வந்தவன் அங்கிருந்தவர்களை ஒரு முறை கூட திரும்பிப் பார்க்காமல் அகல்வதை ஆயி கவனித்தாள். அவனும் அழுதிருப்பான் போலிருந்தது. இந்த யுவனுக்கு என்ன நேர்ந்தது? ஒரு வேளை சித்தம் தடுமாறியவனா?

அவனைப் பற்றி மீராவிடம் கேட்கவேண்டும் என்று ஆயி தீர்மானித்துக் கொண்டாள். இவனைப் போன்ற கிறுக்கர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. சரியான ஆளாகப் பார்த்துதான் மீரா ஒருவனுக்குத் தூண்டில் போடவேண்டும். அவன் தனது மனைவியிடம் சலித்துப் போன ஒரு தொழிலதிபராகவோ, பொழுதுபோக்க வரும் அரசியல்வாதியாகவோ அவளுக்கு விலை உயர்ந்த வெகுமதிகள் வாங்கி வருபவனாக இருக்க வேண்டும்.

“மீரா…” அறை வாசலில் நின்று ஆயி குரல் கொடுத்தாள். “ஒரு நிமிஷம் வெளியில் வாடி அம்மாடி.”

மீரா வெளியில் வந்து நியான் விளக்கின் வெளிச்சத்தில் நின்றாள். பால் நிலா போன்ற வண்ணம். கொடி போல மெலிந்து காணப்பட்டாள். அழகிய சிப்பி போன்ற பெரிய விழிகள் மட்டும்தான் சிவந்து போயிருந்தன. “என் செல்ல மகளுக்கு அவன் என்னடி பண்ணினான்?” என்று ஆயி கேட்டாள்.

“அவன் ஒண்ணும் பண்ணலை ஆயி. அவன் என் கிட்ட அன்பாதான் இருக்கான்.”

“அப்புறம் எதுக்காக அழுத?” என்று அந்த வயதான மூதாட்டி கேட்டாள். மீரா தலை கவிழ்ந்தபடி பதில் கூறாமல் நின்றாள்.

“பேர் சொல்லி கூப்பிட்டானா?” ஆயி விடாமல் கேட்டாள்.

“இல்லை ஆயிம்மா. அவன் தன்னோட பேனாவை வித்துதான் என்னை பார்க்க வந்தானாம். என்னை பார்க்க வர்றதுன்னா பஸ் காசு சாப்பாடு காசு இதையெல்லாம் மிச்சம் பிடிச்சுதான் என்னை பார்க்க வர்றானாம். அவனுக்குன்னு தனியா வருமானம் இல்லையாம். அவன் என்னை காதலிக்கிறானாம்… சொல்றான்.” மீராவின் கண்களின் கண்ணீர் குளம் கட்டியது.

•

சீதா அறை முழுவதும் வாந்தியெடுத்து அவளுடைய வாடிக்கையாளரைப் பயமுறுத்தி வெளியேற்றி விட்டாள்.

ஆயிக்கு அவள் மீது கடும் கோபம் வந்தது. அந்த வாடிக்கையாளன் தான் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு ஆயியிடம் கேட்டுக் கொண்டிருந்தான். போகிற போக்கில் அந்தக் குடியில் பெண்கள் எல்லோருக்கும் நோய் இருப்பதாகக் குற்றம் சாற்றிவிட்டுப் போனான். ஆயி உள்ளே நுழைந்தபோது சீதா தரையில் உட்கார்ந்திருந்தாள். அவளைச் சுற்றி அவள் எடுத்த வாந்தி தரையில் பரவியிருந்தது. சீதா மேலும் வாந்தி எடுப்பதற்கு முஸ்தீபாக வயிற்றை எக்கி ஓங்காரமிட்டுக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் அச்சம் மண்டிக் கிடந்தது. ஆயி அவளுடைய நீண்ட பின்னலைப் பற்றி அவளை எழுப்பித் தனது கரத்தால் அவள் முகத்தில் ஓங்கி அறைந்தாள்.

“ஏண்டி இந்தக் குடிக்குன்னு இருக்கும் நல்ல பேரை நாசம் பண்ண பார்க்கறியா? ரோட்டில் விக்கிற கண்டதையும் வாங்கித் தின்ன வேண்டியது அப்புறம் வர்ற கஸ்டமர்களை இப்படி பயமுறுத்த வேண்டியது... எத்தினி தபா வாசல்ல விற்கும் பானி பூரி பேல் பூரி வாங்கித் தின்னாதன்னு சொல்லி இருக்கேன்? நன்றி கெட்ட நாயே. இரு உன்னை மூணு நாள் பட்டினி போட்டா சரியாயிடுவ.”

சீதா அழுதபடி “ஆயி இது என் தப்பு கிடையாது. கழிஞ்ச கொஞ்ச நாளாவே எனக்கு உடம்பு சரியில்லை. என்னால எதையும் சாப்பிட முடியலை. நெஞ்சில் எப்பவும் ஒரு எரிச்சல் இருந்துகிட்டே இருக்கு.”

“உடம்பில் எடை குறஞ்சது மாதிரிதான் தெரியுது” என்று கூறிய ஆயி அந்தச் சிறுமியின் வெள்ளை இரவிக்கையைத் தூக்கிவிட்டு மார்பகங்களைப் பார்த்தாள். “அதுக்கு வாய்ப்பில்லையே...” என்றவள், “நீ இன்னும் வயசுக்குக்கூட வரலியே...” என்றாள்.

சீதாவிற்கு மூன்று நாட்கள் விடுப்பு வழங்கப்பட்டது. அவளுடைய ஆனந்தத்திற்கு எல்லையில்லை. “நான் மூணு நாளைக்கு ஆம்பளைங்களோட படுக்க வேண்டாம்.” மகிழ்ச்சி ததும்பும் குரலில் அவள் வீறிட்டாள். “ருக்மிணி நாம எல்லா நேரமும் நல்ல சில்லு வச்சு நொண்டி பாண்டி எல்லாம் விளையாடலாம்.”

தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த கம்பிகளின் மீது சாய்ந்தபடி சீதா தனது

தோழியிடம் கூறினாள்.

“அங்கே வானத்தை பாரேன். வெள்ளையடிச்ச சுவரு மாதிரி இல்லை? ஒரு காலத்தில் நானும் வெள்ளையடிச்ச சுவர்கள் நிறைந்த வீட்டில் வசித்தேன். ஒவ்வொரு தீவாளிக்கும் என்னோட அப்பா வீட்டுச் சுவருக்கு சுண்ணாம்பும் பொடியும் மணலும் கலந்து வெள்ளையடிப்பார்.”

“உங்க அப்பா எங்கே?” என்று ருக்மிணி கேட்டாள். சீதா தனது தோள்களைக் குலுக்கியபடி “அவரு செத்துப் போயிட்டார். எல்லோரும் செத்துப் போயிட்டாங்க. நாலு வருஷத்துக்கு முன்னால எங்க ஊரில் காலரா எல்லோரையும் கொண்டுபோனது. எங்க குடும்பத்தில் மட்டும் அஞ்சு பேர் காலராவுக்கு பலி ஆனாங்க. என் அம்மா, அப்பா, மூணு சகோதரர்கள்.”

“அப்போ அந்த வெள்ளையடிக்கப்பட்ட வீடு என்னவாயிற்று?” என்று ருக்மிணி கேட்டாள்.

“அதுவும் செத்துப் போயிருக்கும்” என்று கூறிவிட்டு சீதா சிரித்தாள். “எல்லாமே செத்துப் போயிடும் ருக்மிணி, அந்த ஆகாசம் கூட ஒருநாள் செத்துப் போயிடும்.”

மதிய வேளையில் ஆயி இரண்டு சிறுமிகளையும் அருகில் இழுத்து வைத்துக் கொண்டாள். “வாங்க உங்க தலைமுடியை சீவி விடறேன்” என்றாள். முதலில் ருக்மிணி அமர்ந்தாள். முதலில் அவளுடைய சுருட்டையான கூந்தலில் இருந்த சிடுக்குகளை அகற்றினாள். நெருக்கிப் பின்னல் போட்டாள். வலியில் ருக்மிணி முகம் சுளித்தாள். “உன்னோட கூந்தலுக்கு நான் அடுத்தவாட்டி நீலி பிருங்காதி தைலம் தேச்சு விடறேன். அப்புறம் ரெண்டு மாசத்தில் உனக்கு நிறைய முடி வளர்ந்திடும். உன்னோட முடி பட்டு போல மென்மையா இருக்கு. சீதாவுக்கு நல்ல அடர்த்தியான முடி. சொல்லப்போனா அவளுக்கு கூந்தல் பாரத்தைச் சுமப்பது கொஞ்சம் கஷ்டமான வேலைதான்.”

அவர்களது கூந்தல் பராமரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது சிந்துத்தாயி தனது பெரிய பெரிய பாதங்களைப் படிகளில் தேய்த்துத் தேய்த்து

தாழ்வாரத்திற்கு வந்துகொண்டிருந்தாள்.

அந்தக் கிழவியைப் பார்த்ததும் ஆயிக்குக் கிலியானது. "ஏதோ அந்த கணபதி பப்பாவால நாங்க எல்லாம் நல்லா இருக்கோம். சீதா ஒருத்திக்குதான் மேலுக்கு முடியல. சோறு எறங்க மாட்டேங்குதுன்னு சொல்றா..." என்று ஆயி தன்னிச்சையா சிந்துத்தாயியிடம் தகவல் கூறினாள்.

"அவ வயசுக்கு வந்துட்டாளா?" என்று சிந்துத்தாயி கேட்டாள்.

"இல்லையே. அப்படி ஆயிருந்தாதான் நான் இந்த அளவுக்கு கலவரப்பட மாட்டேனே... அவளை டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போணுமேன்னு மலைச்சுப் போயி இருக்கேன்."

"நீ உன் குடியில் உள்ள பெண்களை வாரா வாரம் டக்டர்கிட்ட கொண்டுபோயி காமிக்க மாட்டியா?" என்று சிந்துத்தாயி வினவினாள். இது அவளுடைய மற்றும் ஒரு பொடி வைத்த கேள்வி.

ஆயி சங்கடத்தில் முகம் சுளித்தாள். "ஏன் இப்படி ஒரு கேள்வி கேட்ட? அந்தத் தேவிடியா நாயி கௌசல்யா உன்கிட்ட, நான் என் குடியில் இருக்கற பொண்ணுங்கள வாரா வாரம் டாக்டர்கிட்ட கூட்டிகிட்டு போறேனா, இல்லியான்னு கேக்கச் சொன்னாளா?"

"ஆமாம் நேத்து இதைப் பத்திதான் அவ சொல்லிக்கிட்டு இருந்தா. ரேஷனில் சாமான் போடுறாங்கன்னு கேள்விப்பட்டு ரேஷன் கடைக்கு அவ வீட்டைக் கடந்து போயிக்கிட்டிருந்தேன். அவதான் உள்ள கூப்பிட்டு ஒரு வாய் தேநீர் குடிச்சிட்டுப் போகச் சொன்னா. நான் எப்படி அவ கொடுக்கறதை வேணாம்னு சொல்லி கோபத்துக்கு ஆளாவுறது? உனக்குதான் தெரியுமே அவ கோபத்துக்கு ஆளானா என்ன என்ன அட்டூழியம் பண்ணுவான்னு. கௌசல்யாவை எதிர்க்கிறவங்க காலின்னு எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம்தானே? அவளுக்கு நல்ல செல்வாக்கு வேற இருக்கு. அவ வீட்டு வாசலில் பெரிய அரசு அதிகாரியோட கார் நின்னதை நான் என் ரெண்டு கண்ணாலயும் பார்த்திருக்கேன்."

"எப்படி அவளால் இத்தனை கழிசடைங்கள வச்சுகிட்டு சமாளிக்க

முடியுது?”

“அவங்களுக்கு அவ நல்ல பயிற்சி கொடுக்குறா” என்றாள் அந்தக் கிழவி.

“இதோ இப்பவே நான் என் குடிப் பெண்களை டாக்டரிடம் அழைச்சுக்கிட்டு போகப் போறேன். உன்னை உட்கார வச்சு பேசலியேன்னு பெருசா எடுத்துக்காத சிந்துத் தாயி.”

“புரியுது தங்கச்சி” என்ற கிழவி ஒரு கொத்து புகையிலையை எடுத்துக்கொண்டாள்.

“என்னவோ தெரியல இன்னிக்கு பலவீனமா தெரியுது. தலை கிறுகிறுன்னு வர்றா மாதிரி இருக்கு. ஒரு சோடா வாங்க உன்கிட்ட காசு இருக்கா தங்கச்சி? இந்த மாதிரி வர்றப்ப ஒரு சோடா குடிச்சாதான் வயிறு கேக்குது” என்றாள்.

“சிந்துத் தாயி நீ சோடான்னா சொன்ன? ஆமாம் நீ நாட்டுச் சரக்கு அடிக்கிறியாமே... ஒரு பாட்டில் பட்டச் சாராயம் வாங்கினதை பார்த்ததா அந்த இன்ஸ்பெக்டர் ஐயா சொன்னாரே.”

“பழி போடறவங்க ஊரு பூராதான் இருக்காங்க” என்று அந்தக் கிழவி அலறினாள். “இப்பல்லாம் எல்லோரும் என்னை வெறுக்க ஆரம்பிச்சிட்டாங்க. எனக்கும் காலம் நல்லா இருந்தப்போ நான் உங்களுக்கெல்லாம் எவ்வளவு உதவி செஞ்சிருப்பேன். இப்போ என் மேல அன்பு செலுத்த ஒரு ஜீவனும் இல்லை. என்னை வச்சு கேலி பேச்சு பேசறீங்க. வயசாச்சுன்னா எந்தப் பொம்பளையை பார்த்தாலும் வேடிக்கையாகதான் இருக்கும். லட்சுமி உனக்கு இப்போ சொந்தமா ஒரு வீடு இருக்கு. நான் சொல்றேன் கேட்டுக்க இன்னும் பத்து வருஷம் உனக்கும் வயசாகும்போது உன்னை தூக்கிப் போட்டுட்டு ஆயிங்கற பேர்ல இன்னொருத்தி வருவாளா இல்லையான்னு பாரு. அது ஒண்ணு மீராவா இருக்கும் இல்லாட்டி அந்தக் கறுப்பி சரஸ்வதி.”

“சாபம் கொடுப்பதுபோல உன் வாயால அப்படியெல்லாம் சொல்லக் கூடாது சிந்துத்தாயி” என்று அலறிய ஆயி, “என் பெண்களுக்கு என் மேல் இருக்கும் பாசம் ஒருநாளும் மாறாது. அவங்களை நான்

என்னிக்குமே மட்டமா நடத்தினது கிடையாது. கேட்டுப் பாரு, நான் அவங்களுக்கு எப்படி சோறு போட்டு, நோய் நொடி வந்தா என் கையாலயே வைத்தியம் பண்ணி கவனிச்சுக்கறேன்னு. உன்னை உன் பெண்கள் தூக்கிக் கடாசினா மாதிரி என் பெண்கள் என்னை வெளிய தள்ள மாட்டாங்க. சாகற வரைக்கும் நான் அவங்களுக்கு ஆயிதான்."

சிந்துத்தாயி நக்கலாகச் சிரித்தாள். "எனக்கும் முன்ன ஒரு காலத்தில இப்படிதான் ஒரு நெனப்பு இருந்துச்சு லட்சுமி. அதுக்கப்புறம் என்ன ஆச்சுன்னு கேளு. என்னோட செல்ல பொண்ணுங்க நினைச்சுகிட்டு இருந்ததுகள்லாம் என்னை பேர் சொல்லி கூப்பிட ஆரம்பிச்சிடுச்சுங்க. என்னால என்ன பண்ண முடியும்? தலை சாச்சு படுக்கவும் பாதுகாப்பா இருக்கவும் ஒரு வீடு கிடைக்காதான்னு அலைஞ்சேன். தெரு முனையில் ஒரு வருஷம் பிச்சை எடுத்தேன். அப்புறம்தான் நான் இந்தப் பகுதிக்கு வேண்டப்பட்டவளா ஆனேன். இருபது ரூபாய் கொடுத்தா கூட கருச் சிதைவு பண்ண ஆரம்பிச்சேன். அதுக்கப்புறம்தானே நீங்க எல்லாம் என்னை உங்க வீடுகளில் கூப்பிட்டு வச்சுகிட்டீங்க? நல்லவேளை எனக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்ததோ நான் பிழைச்சேனோ? எனக்கு இருந்த அதே அதிர்ஷ்டம் உனக்கும் இருக்கும்னு உன்னால எப்படி நிச்சயமா சொல்ல முடியும்?"

ஆயி தனது புடைவைத் தலைப்பினால் தனது கறுத்த வட்ட முகத்தை மூடிக்கொண்டு வெட்கமேயில்லாமல் அழத் தொடங்கினாள். சீதாவுக்குத் தனது கிராமத்தில் சேற்றில் புரளும் எருமைகள் எழுப்பும் கனைப்பைப் போன்ற ஒலி கேட்டது. ஆயி அழுதாள் எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது? சீதா ருக்மிணியைத் தனது விலாவினால் இடித்தாள். அவளுக்கு உடனே கிக்கிக்கி என்று சிரிக்கத் தோன்றியது. ஆனால் ருக்மிணி அந்த மாது அழுவதை ஆழ்ந்து ஒருவித இரக்க பாவத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மீரா உள்ளேயிருந்து குரல் எழுப்பினாள். "ருக்மிணி ஒரு நிமிஷம் உள்ள வாயேன். என் ரவிக்கையின் பின்னால் இருக்கும் ஊக்கைக் கொஞ்சம் இழுத்து மாட்டி விடு" என்று கூவினாள்.

மீராவிற்கு உதவி செய்ய ருக்மிணி உள்ளே ஓடினாள். மீரா கறுப்பு சாட்டின் பாவடையும் திறந்திருந்த ரவிக்கை ஒன்று மட்டும் அணிந்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் தனது இளமை வனப்பின் களிப்பில் இருந்தாள். புருவங்களுக்கு நடுவில் சிந்தூரப் போட்டு அணிந்துகொண்டும் கண்களில் மை தீட்டிக்கொண்டும் மிகவும் அழகாக இருந்தாள்.

“மீராதாயி எங்கனா வெளிய போறீங்களா?” என்று அந்தச் சிறுமி கேட்டாள்.

“இல்லையில்ல நான் என் சிநேகிதனின் வரவுக்காக இப்படி அலங்காரம் பண்ணிக்கிட்டு இருக்கேன்” என்றாள் மீரா.

“உங்களப் பார்த்தா கல்யாணம் ஆன பொம்பள கணக்கா இருக்கு” என்று அவள் சொன்னதும் மீரா அந்தச் சிறுமியை சட்டென்று சிரித்தபடி அணைத்துக் கொண்டாள்.

“எனக்கு கல்யாணம் ஆயிடுச்சு. ஆனா இதை நீ இங்க யாருகிட்டயும் சொல்லாத.”

“யாரு அந்த காலேஜ் அண்ணன் உங்கள பார்க்க வருவாரே... அவரையா கட்டிகிட்டீங்க? உங்களை பார்க்க வரதுக்குன்னு தன்னோட பேனாவை வித்துட்டு வந்தேன்னு சொன்னாரே அவரா?” என்று ருக்மிணி கேட்டாள்.

“ஆமாம். அவர்தான் என் வீட்டுக்காரர். அவரோட பேரு கிருஷ்ணா. இது ரொம்ப அதிசயமா இல்லை ருக்மிணி?” மீரா அந்தச் சிறுமியிடம் கேட்டாள். “நான் மீரா அவன் கிருஷ்ணா. ஆச்சரியமா இல்லை?”

ருக்மிணி பதில் எதுவும் சொல்லவில்லை. அவளுக்கு மீராதாயி அன்று ஏனோ விநோதமாக நடந்து கொள்வதாகப்பட்டது. அதீத காய்ச்சலில் இருப்பவர்களின் புலம்பல்போல தோன்றியது. அவள் கன்னங்கள் சிவந்து காணப்பட்டன. கண்களில் ஒரு மின்னல் தெரிந்தது. கூந்தலில் ஒரு பெரிய மல்லிகைச் சரத்தைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள். உதடுகளைக் கடித்து மேலும் சிவப்பாக்கிக் கொண்டிருந்தாள்.

“உதட்டுச் சாயம் போட்டுக்க மாட்டேங்களா?” என்றாள் ருக்மிணி.

ருக்மிணி ரவிக்கையின் ஹூக்கை இழுத்து மாட்டிவிட்டதும் மீரா அவளைப் பாசத்துடன் அணைத்து முத்தமிட்டாள். “நல்லா இரும்மா” என்றாள்.

அறையை விட்டு வெளியில் வந்தாள். ஆயி அழுகையை நிறுத்தியிருந்தாள். சிந்துத் தாயியைக் காணவில்லை. போயிருக்க வேண்டும். வாசலில் போக வர இருந்த பேருந்துகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்த சீதாவின் அருகில் சென்று அமர்ந்தாள்.

“ஒரு நாளைக்கு ஆயி எங்களை எல்லாம் ரெட்டை மாடி பஸ்ஸில் கூட்டிக்கிட்டு போனாங்க” என்றாள். “அப்போ நான் வெளிய கையை நீட்டி ஒரு கொய்யாப்பழம் பறிச்சேன்” என்றாள்.

“பொய் சொல்லாதே” என்றாள் ருக்மிணி.

“வேணுமின்னா ஆயியை கேட்டுப் பாரு. நல்ல பழுத்த கொய்யாப்பழம் ஒண்ணை பறிச்சேன். அதை பஸ்ஸிலேயே தின்னுட்டேன். பழம் முழுக்க விதை. எனக்கு கொய்யா விதைன்னா ரொம்பப் பிடிக்கும். கொய்யாப்பழத்தோட விதையை சாப்பிட்டா நீள நீளமா வயித்தில புழு வருமாம். ஆயி சொன்னாங்க” என்று சீதா ருக்மிணி காதில் கிசுகிசுத்தாள்.

“உன் வயித்தில பூச்சி இருக்குபோல சீதா. அதான் நேத்து ராத்திரி உனக்கு அப்படி ஆயிடுச்சு” என்றாள் ருக்மிணி.

“நான் ஏன் அப்படி பண்ணினேன்னா எனக்கு ஆம்பளைங்க என்கிட்டே அப்படி நடந்துக்கறது பிடிக்கவே இல்லை. எனக்கு ஆம்பிள்ளைங்கன்னா கட்டோடு பிடிக்க மாட்டேங்குது.”

“உனக்கு கல்யாணம் பண்ணிக்க வேணாமா? உனக்குன்னு ஒரு வீடு உன் பசங்க இதெல்லாம் வேணாமா?” என்று ருக்மிணி கேட்டாள்.

“வேணும். எனக்குன்னு ஒரு வீடு இருக்கணும்னு ஆசையா இருக்கு. அப்புறம் பிள்ளை பெத்துக்கணும். கொழு கொழுன்னு ஒரு குழந்தை வேணும். நான் அவனை என் காலில் வச்சு ஆட்டுவேன். அவன் என்னை பார்த்து சிரிக்கணும். என்னை அம்மான்னு கூப்பிடணும். ஆனா என் வீட்டில் ஆம்பளைங்களே இருக்கக் கூடாது.”

ஒரு வாடிக்கையாளன் வேகமாக உள்ளே வந்தான். வந்தவன் நிலையில் தலையை இடித்துக் கொண்டான்.

“ரொம்ப சீக்கிரமா வந்துட்டீங்க. இன்னும் சாயந்திரம் கூட ஆகலையே...” என்றாள் ஆயி.

“சாயங்காலம் நான் பிஸி ஆயிடுவேன்” என்றான் அந்த மனிதன். அவன் வெள்ளை நிற புஷ் சட்டையும் ஒரு அழுக்கான டெரிலின் பேன்டும் அணிந்திருந்தான். ஒருவித நடுக்கத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தான். நகங்களைக் கடித்தான்.

“சரி சரி. யாரு வேணுமோ பாரு” என்று ஆயி அங்கிருந்த பெண்களைக் காட்டியபடி சொன்னாள். மீராவைத் தவிர எல்லோரும் கூடத்தில் தரையில் அமர்ந்திருந்தனர். வழக்கம் போல ராதா தனது உடலில் பாதியைக் காட்டிக்கொண்டு உடையில் ஒரு சிரத்தையில்லாமல் இருந்தாள். அவன் ராதாவை நோக்கிக் கை காட்டினான். அவன் முன்னால் செல்ல ராதா அவனைப் பின்தொடர்ந்து ஓர் அறைக்குள் நுழைந்தாள்.

மீராவின் அறையிலிருந்து ஜெயதேவரின் கீதகோவிந்தம் மெல்லிய குரலில் ஒலித்தது.

“என்னமா பாடுறா...” என்றாள் ஆயி ரசித்தபடி.

“ரதிசுக சாரே கதமபி சாரே மதன மனோஹர வேஷம்

நகுரு நிதம்பினி கமனவிளம்பனம் மனுசரதம் ஹிருதேஷ்யம் ராதே.”

•

விடிந்த பிறகுதான் மீரா அந்தக் கல்லூரி மாணவனுடன் ஓடிப்போன சங்கதி ஆயிக்குத் தெரிய வந்தது. மீராவின் அறை உள்பக்கம் சாத்தியிருந்தது. மற்ற பெண்கள் கதவைத் தட்டியபடி கிண்டலடித்துக் கொண்டிருந்தார்கள். “மீராதாயி அந்த வாலிபன் உன் சக்தியைப் பூரா உறிஞ்சி எடுத்துட்டானா என்ன? இப்படி படுக்கையிலிருந்து எந்திரிக்கக் கூட தெம்பில்லாம கிடக்கியே...” என்று கூறி கதவைத் தட்டினார்கள். உள்ளேயிருந்து கோபமாக பதிலோ இல்லை அவர்கள் கூறுவதை

அங்கீகரித்ததற்கு ஒரு சிரிப்போ இல்லை. “அக்கா வெளிய வாங்க, டிபன் சாப்பிடலாம்” என்று ராதா கதவை இடித்தாள். காலைச் சிற்றுண்டி ஆறுமணிக்கே வழங்கப்பட்டுவிடும். டால்டாவில் சமைத்த பரோட்டாவும் தொட்டுக்கொள்ள முட்டைக் கறியும். இதோடு பருகுவதற்கு ஒரு கோப்பை நிறைய பால். இதைச் சாப்பிட்டு முடிந்ததும் பெண்கள் எல்லோரும் பாயில் படுத்து அடுத்த வேளை சாப்பாடு வரையிலும் தூங்குவார்கள். இரண்டு மணிக்கு அடுத்தவேளைக்கான சாப்பாட்டு நேரம். ஐந்து மணிக்குப் பிறகுதான் அவர்கள் குளிக்கவோ மற்ற விஷயங்களுக்கோ குளிப்பறை செல்ல அனுமதிக்கப் படுவார்கள். குளியல் ஆடல் பாடலுடன் இருக்கும். அதன் பிறகு கூந்தல் அலங்காரம் ஆகும். மலர்ச் சரங்கள் நிச்சயம் கூந்தலை அலங்கரிக்கும். கன்னங்களில் ரூஜ் தீட்டப்படும். அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதன் அடையாளங்கள் இவை. சீக்கிரமே வயதுக்கு வந்தவர்களைப்போல காட்டுவதற்கு ரோஸ் பவுடரின் கீழே சாம்பல் பூசி விடுவார்கள். ஆன்மாவைப் பறி கொடுத்த அந்த உடல்களில் தோல் மட்டும்தான் உண்டு. சீதா, ருக்மிணி போன்ற சிறுமிகள் மட்டுமே அங்கு மனம் விட்டுச் சிரிப்பவர்கள். பாலியல் ரீதியான செய்கைகள் என்னவென்று அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. ஏதோ அற்ப காரணங்களுக்காக அவற்றை தண்டனையாக அனுபவிப்பார்கள்.

அவர்கள் செய்த பிழை பெண்களை ஒரு சுமையாக, கடனாகக் கருதும் சமூகத்தில் பெண்களாகப் பிறந்தது ஒன்றுதான். அந்தச் சிறுமிகள் பாண்டி விளையாடிக் கொண்டிருக்கும்போது பாட்டனார் வயதிருக்கும் ஆண்கள் தங்கள் சுகத்திற்காக அவர்களை இழுத்துக்கொண்டு போகும்போது விளையாட்டு பாதியில் நின்று போனதற்கு மட்டும்தான் ஆத்திரப்படுவார்கள். அவர்கள் சீரழிக்கப்படும்போது அவர்கள் சிந்தனையெல்லாம் பாதியில் நின்று போன விளையாட்டில்தான் இருக்கும்.

ராதா வேகமாக மீராவின் அறைக்கதவைத் தள்ளியபடி திறந்தாள். உள்ளே படுக்கையைத் தவிர எதுவும் இல்லை. மீரா ஆசையுடன் அணிந்துகொள்ளும் வண்ணவண்ணச் சீலைகள் நிரம்பிய தகரப் பெட்டியையும் காணவில்லை. ஜன்னல் கட்டையில் மீராவின் உள்ளங்கை அளவில் இருக்கும் சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியும், சுவரில்

குங்குமத் தீற்றல்களும் காணப்பட்டன. “எங்க போயிட்டாங்க மீராதாயி?” என்று ராதா புருவங்களை நெளித்துப் பார்த்தாள். “ஒருவேளை அந்தப் பையித்தியக்கார காலேஜ் பையனோட ஓடிப் போயிட்டாளோ?” என்று கேட்டாள். ஆயி மீராவின் படுக்கையில் அமர்ந்து மிகவும் உணர்ச்சிவயப்பட்டு அழத் தொடங்கினாள், “என்னோட தங்கக் கிளி கூண்டை விட்டுப் பறந்து போயிடுச்சு.” ஜன்னலுக்கு வெளியில் ஒரு காகம் மீரா காணாமல் போனதை முன்னமே தெரிந்து கொண்டு புலம்புவதுபோல கரைந்து கொண்டிருந்தது. ராதா ஆயியின் கூந்தலை ஆறுதலாக வருடிக் கொடுத்து ஆறுதல் கூறினாள். “கவலைப்படாதீங்க ஆயி. மீரா நிச்சயமா திரும்பி வந்துடுவா. அந்தப் பரதேசி கையில் துட்டு கிடையாது. அவ கழுத்துல இருக்கும் தங்கச் சங்கிலியை வித்து வரும் காசு இருக்கும் வரையில் சுத்துவாங்க. திருப்பியும் சோத்துக்கு இங்கதான் பிச்சை எடுக்க வந்தாகணும்.” ஆனால் ஆயியின் அழுகை அதிகரித்தது. அது பெரிதாகி பெரிதாகி அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் அவளிடம் துக்கம் விசாரிக்க வரத் தொடங்கினார்கள். கௌ்சல்யாதான் முதலில் வந்தாள், “என்னக்கா, எதுக்கு அழுவுறீங்க? என்ன நடந்தது?” என்று ஆயியிடம் கேட்டாள்.

“என் மீராவை என்னோட வைரிங்க யாரோ கடத்திகிட்டு போயிட்டாங்க. எல்லாருக்கும் அவளோட அழகு மேல அசூயை. எந்த அரசாங்க அதிகாரி வந்தாலும் அவதான் வேணும்னு கேப்பாங்க. அவங்க மட்டுமா? பணக்கார வியாபாரிங்களும், செல்வாக்கு உள்ளவங்களுக்கும் மீரா மேலதான் கண்ணு. போச்சு எல்லாம் போச்சு. இந்தப் பகுதியிலே ஒரு பொண்ணு கூட மீரா மாதிரி ஆம்பளைங்களை இப்படி வசீகரிக்க முடியாது. என்னா உடம்புடி அவளுக்கு. போச்சே... எனக்கு இனிமே என்ன இருக்கு? நான் இந்த வாரமே காசிக்கு போயி செத்துப் போறேன்.”

“மீரா இஷ்டப்பட்டு போயிருக்கணும். இந்த மாதிரி சமாசாரம் எத்தனையோ பெரிய பெரிய குடிகளில் இதுக்கு முன்னாடி நடந்திருக்கு. இப்படிதானே அந்த நேப்பாளிப் பொண்ணு ஒருத்தி மரைன் டிரைவ் பகுதியில் காவலை மீறி ஓடிப் போனா? அவ எங்கனா போயி புழுத்து நாறட்டும். அந்த நன்றி கெட்ட நாயிக்கு நீ ஏங்கா வருத்தப்படுற?” என்றாள் கௌசல்யா.

“உனக்கு தெரியாது கௌசல்யா நான் அவளை எப்படி பார்த்துகிட்டேன்னு. அவளுக்கு தினமும் நெய்யில பண்ணின பரோட்டாவும் முட்டையும் பாலும், மீன் எண்ணெய் மாத்திரையும் கொடுத்துதான் வளர்த்தேன். எத்தனை ஹோட்டல்களுக்கும் கண்காட்சிகளுக்கும் அவங்களை கூட்டிட்டுப் போனேன் தெரியுமா? நான் அவங்களை அவ்வளவு நேசிக்கிறேன்.”

“அக்கா நீங்க ரொம்ப இரக்க குணம் உள்ளவங்களா இருக்கீங்க. இவ்வளவு தூரம் அதுங்களுக்கு இடம் கொடுக்காதீங்கன்னு நான் ஏற்கெனவே உங்களை எச்சரிக்கை செஞ்சிருக்கேன். கருணையிலிருந்து கருணை பிறக்காது. அதை முதலில் புரிஞ்சுக்குங்க. என் குடியில் உள்ள பெண்கள் சின்ன தப்பு பண்ணினாலும் சாட்டையால விளாசுவேன். அப்பதான் பயந்து கிடப்பாங்க. என் பொண்ணுங்க சொன்ன பேச்சு கேக்கறவங்க. இங்க இருப்பது மாதிரி என்குடியில் சின்னப் பொண்ணுங்க இப்படி பாண்டி நொண்டியெல்லாம் விளையாடிட்டு இருக்க விடமாட்டேன். மைனர் பொண்ணுங்களை வச்சு விபசாரம் செய்வது இப்போ சட்டப்படி குத்தம்னு ஆயிடுச்சு. தெரியுமில்ல? இப்பவே எல்லாரும் உன் வீட்டைப் பத்திதான் பேசிக்கறாங்க. யாருன்னு பார்க்கறீங்களா? எல்லாம் உங்களுக்கு ரொம்ப வேண்டப்பட்டவங்கதான். நான் பேரு சொல்ல மாட்டேன்.”

“யாரு என் பொண்ணுங்களைப் பத்தி அவதூறா சொன்னது? சிந்துத் தாயியா? இல்லை அந்த இன்ஸ்பெக்டரா?”

கௌசல்யா பூடகமாக தலையை ஆட்டிப் புன்னகைத்தாள். “அக்கா நான் இங்கே வம்புக்கு வரவில்லை. உனக்கு ஆறுதல் சொல்லலாமேன்னுதான் வந்தேன்” என்றாள்.

ஆயி அவளைப் பிரியத்துடன் முதன்முறையாக அணைத்துக்கொண்டாள் “உனக்குதான் என்னிடம் எவ்வளவு அக்கறை” என்றாள்.

“நாம ஒண்ணாச் சேரணும் அக்கா. நமக்கு பொதுவான எதிரிங்க இருக்காங்க. நாம் ஒண்ணாயிட்டோம்னா அப்புறம் யாராலேயும் அது போலிஸான்னா கூட ஒண்ணும் செய்ய முடியாது.”

அந்தக் கறுப்பு நிற சரஸ்வதி உடனே தனது அறையில் இருந்த பொருட்களை எடுத்துக்கொண்டு மீராவின் அறைக்கு மாறிவிட்டாள். “எனக்குதான் இந்த வீட்டில் அதிகமா வாடிக்கையாளர்கள் வர்றாங்க. எனக்கு ஆரம்பத்திலிருந்தே இந்த ரூம் மேல ஒரு கண்ணு. இங்கிருந்து வெளிவீதியை பார்க்க முடியும். நான் ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்துகிட்டு கார்ல போகும் ஆம்பளைங்களை கூப்பிட வசதியா இருக்கும்.”

ராதா முகத்தைச் சுழித்தாள். ஆனால் அவளால் அந்தக் கறுப்பி சரஸ்வதியுடன் வாதம் செய்யமுடியாது. அவள் சரஸ்வதியைப்போல நிறைய சம்பாதிக்கவில்லையே. “பொறம்போக்கு” என்று அருகில் இருந்தவளின் காதுகளில் முனகினாள். “எவனாவது பார்த்துட்டா போதும் அவ இப்படியும் அப்படியுமா இடுப்பை எப்படி ஆட்டுவான்னு பார்த்திருக்கியா? த்தூ...”

வீட்டு வேலை செய்பவர்களும் மற்ற பணியாளர்களும் பரிவுடன் வந்து சென்றனர். ஆயி அந்தப் படுக்கை விரிப்பின் மேலே அமர்ந்திருந்தாள். இன்ஸ்பெக்டர் உள்ளே வரும்போது உச்சிப் பொழுதாகியிருந்தது.

“ஏன் எனக்கு தகவல் சொல்லி அனுப்பவில்லை?” என்று அவநம்பிக்கையோடு இன்ஸ்பெக்டர் கேட்டார். ஆயி நெற்றியில் பச்சை குத்தியிருந்த குறியைச் சுரண்டியபடி விடாமல் அழுது கொண்டிருந்தாள்.

“எனக்கு மட்டும் முதலிலேயே தகவல் கிடைச்சிருந்தா அந்த எடுபட்ட சிறுக்கியை கையோடு பிடிச்சுக் கொண்டு வந்து தள்ளியிருப்பேன். எனக்கு பஸ் ஸ்டாண்ட்லயும் ரயில்வே ஸ்டேஷன்லயும் ஆளுங்க வேவு பார்க்க இருக்காங்க. அவங்க மூலமா அந்தப் பொறுக்கிப் பயல உள்ள தள்ளியிருப்பேன். இந்த நேரம் அவங்க சிட்டியை விட்டு வெகு தொலைவு போயிருக்கணும். ஏதாவது கிராமத்துல போயி வயித்துப் பொழப்பு தேடிகிட்டிருக்கணும்.”

“அவனை ஜெயிலில் போட்டு என்ன ஆவப் போவுது? மீரா ஆசைப்பட்டுதான் போயிருக்கா. அவ ஒண்ணும் சின்னப் பொண்ணு கிடையாது. அவ அவனை ரகசியமா கலியாணம் கட்டிக்கிட்டாளாம். ருக்மிணி சொன்னா.”

“கல்யாணமா?” அந்த இன்ஸ்பெக்டர் அலறினார். “ஒரு கண்ணியமான வாலிபன் ஒரு வேசையை எதுக்கு கல்யாணம் செஞ்சுக்கணும்? அவளை கட்டிக்கிட்டு ப்ரோக்கர் வேலை பார்க்கப் போறானா? அவ மூலமா காசு சம்பாதிக்கப் போறான். லட்சுமி பாய். இந்த கில்லாடி உலகத்தின் நடவடிக்கைகள் தெரியாத அப்பாவியா இருக்கியே. அந்தத் திமிர் பிடிச்சவ என்னைத் தொட அனுமதிச்சது இல்லை, தெரியுமில்ல? ஒருநாளைக்கு முப்பது ரூபா வரைக்கும் தரேன்னு கேட்டுப் பார்த்தேன். அதுக்கு அவ ‘இல்லை இன்ஸ்பெக்டர் ஐயா, நான் நேசிக்கிறவருக்கு துரோகம் செய்ய மாட்டேன்’ அப்படின்னு சொன்னா. உன்னை மாதிரி ஓரளவு டீசன்ட்டான தொழில் பண்றவங்க வீட்டுப் பொண்ணு இப்படிதான் என்னை மாதிரி ஒரு செல்வாக்கு உள்ள ஒருவனிடம் பதில் சொல்லுவாளா? நான் அவளை என் லத்தியால போட்டு அடி நொறுக்கியிருப்பேன். உன் குடியில் வீணா அமளி ஏற்பட வேணாமேன்னு சும்மா இருந்தேன். நீ என்னோட அக்கா மாதிரி லட்சுமி பாய்.”

“வாஸ்தவம்தான். இன்ஸ்பெக்டர் ஐயா நீங்க என் தம்பி மாதிரிதான். எனக்கு ஒரு கஷ்டம்னு வந்தா நான் உங்க உதவியைத்தானே நாடி வர்றேன்? உங்க தயவு இல்லாம என்னால இந்த இடத்தில் குப்பை கொட்டியிருக்க முடியுமா? நான் நெறைய தடவை யோசிப்பேன் ஏன் நம்மால மட்டும் இந்தப் பொண்ணுங்களை கூட்டிகிட்டு இதையும் விட ஒரு நல்ல இடத்துக்கு போயி தொழில் பண்ண முடியலைன்னு. கிரான்ட் ரோடோ இல்லை கொலாபாவிற்கோ. என் பொண்ணுங்களுக்கு எப்படி நடந்துக்கணும்னு வகுப்பு எடுக்கறேன். இல்லியா? என்னோட இந்தக் குட்டி ராஜாத்தி ருக்மிணி இங்க வரும் வாடிக்கையாளர்களை கவர்ந்துகிட்டு இருக்கா. மினுமினுன்னு நல்ல வாசனை வீசும் உடம்பு அவளுக்கு. இன்ஸ்பெக்டர் ஐயா நேத்திக்கு அவ என்னிடம் என்ன சொல்லிக்கிட்டு இருந்தா தெரியுமா? அவளுக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்காம். நீங்க அழகனாம். சொல்றா.”

“எங்கே அவள்?” என்று அவர் தேடினார். இடைகழியின் இருளின் ஊடே அவர் கண்கள் கூர்ந்து நோக்கின.

“ஹாலில் படுத்துத் தூங்கிட்டு இருப்பான்னு நினைக்கிறேன். அவதான் மீரா ஓடிப்போனதுக்கு ரொம்ப அழுதது. தெனம் மீராதான் அவளுக்கு தலை பின்னிவிட்டு பாட்டு சொல்லிக் கொடுப்பா.”

“அவளை கொஞ்சம் பார்க்கலாமா?” என்றார் அவர்.

ஆயி கூடத்திற்குள் நுழைந்தாள். உள்ளே அந்தச் சின்னஞ்சிறுமி இரண்டு பொம்மைகளுக்கு திருமணக்கோலத்தில் அலங்காரம் செய்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் பக்கவாட்டில் படுத்துக்கொண்டு சீதா ருக்மிணி பொம்மைகளுடன் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“இன்ஸ்பெக்டர் ஐயா உன்னை பார்க்கணுமாம்” என்று ஆயி கிசுகிசுத்தாள். “நீ அந்த பொம்மைங்களை இங்கே வச்சுட்டு என் ரூமுக்கு பக்கத்தில் இருக்கும் சின்ன ரூமுக்கு போ. நான் அவரை அங்கே அனுப்பி வைக்கிறேன்.”

“ஆயி இப்ப வேணாம். நாங்க ரெண்டு பெரும் இப்பதான் ஒரு விளையாட்டு விளையாடிக்கிட்டு இருக்கோம். எங்ககிட்ட இருக்கும் பொம்மைக்கு நேத்து வாங்கிட்டு வந்த புது பொம்மையை கல்யாணம் செஞ்சு வைக்கப்போறோம். இந்த பொம்மைங்களுக்கு மீரா கிருஷ்ணான்னு பேர் வச்சிருக்கோம். அந்த தடியனை போகச் சொல்லுங்க.”

ஆயி குனிந்து ருக்மிணியின் காதை முறுக்கினாள். “எந்திரு உடனே. இன்ஸ்பெக்டர் ஐயா மனசை நோகடிக்காதே. அவரு முக்கியமான புள்ளி. நீதான் வேணும்னு அவரு கேட்டா நீ வாயை மூடிக்கிட்டு போய் அவரை குஷிப்படுத்திட்டு வரணும். இப்படி நீ நான் சொன்ன பேச்சைக் கேட்காம இருக்கறது எனக்கு பிடிக்கலை.”

“சரி சரி ஆயி” என்று அந்தச் சிறுமி தரையிலிருந்து எழுந்தாள். “சீதா, நான் வர்ற வரைக்கும் இங்கேயே இரு. கொஞ்ச நேரத்தில் வந்திடுவேன். அப்புறம் கல்யாணம் பண்ணி வைக்கலாம்.”

அந்த இன்ஸ்பெக்டர் அவளிடம் சற்று மென்மையாக நடந்துகொண்டார்.

“உனக்கு கண்ணை மூடி மூடி திறக்கும் பொம்மை வேணுமா?” என்று

அவளுடைய திரண்ட தோள்களை வருடியபடி கேட்டார்.

“வேணும்” என்று ருக்மிணி தலையாட்டினாள்.

“அப்படி ஒரு பொம்மை சர்ச் கேட்டில் இருக்கு. நான் பார்த்திருக்கேன். அது வயித்தில அழுத்தினா அம்மான்னு கத்தும். வெளிநாட்டு பொம்மை. கொறஞ்சது நூறு ரூபாயாவது இருக்கும். உனக்காக அவ்வளவு பணம் செலவு செய்யிறது எனக்கு ஒரு பொருட்டு இல்லை. என்ன அப்பப்ப எனக்கு கொஞ்சம் தயை காட்டு போதும். இந்த உலகில் இருக்கும் மத்த எல்லாரையும் விட உன் மேலதான் எனக்கு இஷ்டம் ஜாஸ்தி.”

“உங்க மனைவி குழந்தைங்கள்ளாம்..?”

“உன் மேல் விருப்பம் வச்சிருக்கும் அளவுக்கு அவங்க மேல இல்லை. உன் வயசில் எனக்கு ஒரு பேத்தி இருக்கா ருக்மிணி. அவளைக் கூட உன் அளவுக்கு நேசிச்சது கிடையாது. நீ என்கிட்டே அன்பா இருந்தா நான் உனக்கு மாசாமாசம் இதுமாதிரி பொம்மை வாங்கித் தருவேன். நான் அந்த காலேஜ் பையன் மாதிரி அழகா இல்லாம இருக்கலாம். ஆனா எனக்குள் ஒரு அழகான இதயம் இருக்கு. நான் அசிங்கம் பிடிச்சவன். ஒரு குரங்கு மாதிரி இருக்கேன். என் மூஞ்சியைப் பார்த்தா உனக்கு உடனே சிரிக்கணும்னு தோணுது இல்லியா?” என்றார் அவர்.

அவரது தணிந்த குரல் அவளை இளகச் செய்தது. “நீங்க அசிங்கம் கிடையாது. எனக்கு உங்களைப் பார்த்தா எங்களையெல்லாம் விட்டுட்டு ஓடிப்போன எங்க அப்பாவை ஞாபகப்படுத்துது. அவ்வளவுதான்.”

“இனிமே உன் வாழ்க்கையில் வருத்தம் என்பதே வராது என் சின்னக் குட்டி” என்று இன்ஸ்பெக்டர் விம்மினார். “நான் ஒன்னை காப்பாத்துறேன். என்னைத் தவிர மத்த கஸ்டமருங்க உன்னைத் தொடவிடாம இருக்கறதுக்கு லட்சுமி பாய் கிட்ட சொல்லிட்டுப் போறேன். அவளுக்கு மொத்தமா ஒரு தொகையை கொடுத்திடறேன். அப்பதான் அவ வாயை மூடிகிட்டு இருப்பா. எப்படி இந்த ஏற்பாடு உனக்கு பிடிச்சிருக்கா?” என்றார்.

“ஆனா எவனாவது சின்ன வயசுப் பசங்க என்னைப் பார்த்து கலியாணம்

பண்ணிக்கிறியான்னு கேட்டா நான் என்ன சொல்றது?” என்று அந்தச் சிறுமி கேட்டாள்.

“நாந்தான் உன்னோட சின்னப் பையன் என் மல்லிகை மொட்டே...” என்று கிறக்கத்தில் கிசுகிசுத்த இன்ஸ்பெக்டர் அவளைக் கெட்டியாக அணைத்தார்.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் வெள்ளை முடித் திட்டுகள் நிறைந்த அவன் வழுக்கைத் தலையால் அவள் மீது மோதும்போது ருக்மிணிக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. ஆனால் அவள் அந்த நூறுரூபாய் விலையுள்ள பொம்மையை நினைத்துக்கொண்டு தனது கண்களை இறுக்க மூடிக்கொண்டாள்.

•

சிந்துத்தாயி தனது கைகளில் பச்சை இலையில் அரைத்த விழுதையும், அது பார்ப்பதற்கு மருதாணி விழுதுபோல இருந்தது, கூர்மையான கோல் ஒன்றையும் கொண்டு ஆயி அறைக்கு அருகில் இருந்த அந்தச் சின்ன அறைக்குள் நுழைவதைப் பார்த்ததும் ருக்மிணிக்கு அவளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று தோன்றியது. சீதாவை அந்த அறைக்குள் ஏற்கெனவே கொண்டு போய்விட்டார்கள். ஆயிதான் அவளுடைய மெலிந்த தோள்களைப் பற்றி இழுத்துக்கொண்டு போனாள். சீதா “வேணாம் ஆயி, என்னை அந்த சூனியக் கிழவியை தொடச் சொல்லாதீங்க...” என்று அழுது அரற்றியும் பயன் எதுவும் இல்லை. கதவு உள்பக்கம் தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தாலும் ருக்மிணி கதவுக்கு வெளியில் நின்று கொண்டு உள்ளேயிருந்து வரும் ஒலிகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சிந்துத்தாயி தனது கீச்சுக் குரலில் சீதாவை ஏசிக் கொண்டிருந்தாள். கூடவே சீதாவின் புலம்பல் கேட்டது. சிறிதுநேரம் கழித்து அதீதமான முறையில் சீதா வீறிட்டு அலறும் ஓசை கேட்டது. உடனே அந்த ஓசையை யாருடைய கைகளோ தொண்டைக் குழியிலேயே பாதியில் நிறுத்தியது. ருக்மிணிக்குக் கால்கள் நடுங்கின. அவர்கள் அவளது சிநேகிதி சீதாவை என்ன செய்கிறார்கள்?

ருக்மிணி அங்கிருந்து விலகி தாழ்வாரத்தில் இருந்த இரும்பு அழிகள்

அருகே சென்று வெளியில் பார்வையை ஓடவிட்டாள். ஓர் இரட்டை மாடிப் பேருந்து கடந்து சென்றது. அதிலிருந்த ஆடவர்கள் அவளை நோட்டமிட்டனர். ஆகாயம் மீண்டும் வெள்ளையடிக்கப்பட்ட சுவரைப்போல தோன்றியது. ஒரே மாதத்தில் நிகழ்ந்த அந்த ஐந்து சாவுகளைப் பற்றி சீதா கூறியது நினைவில் வந்தது. அப்போது பயங்கரமான வீறிடல் ஒன்றை அவள் அந்த அறைக்குள்ளிருந்து கேட்டாள். அமானுஷ்யமாக இருந்தது அந்தக் குரல். கூண்டிலிருந்து தப்பிய விலங்கின் அலறலைப்போல ருக்மிணிக்குத் தோன்றியது. சில நிமிடங்களில் சிந்துத்தாயி வெளியில் வந்து எதுவும் பேசாமல் ஆயியின் திவானில் அமர்ந்தாள். வெற்றிலைப் பெட்டியிலிருந்து காய்ந்த புகையிலை எடுத்து வாயில் போட்டு மெல்லத் தொடங்கினாள். “சீதாவுக்கு நேரக் கூடாதது எதுவோ ஆயிடுச்சு. அவ செத்துப் போயிட்டான்னு நினைக்கிறேன்” என்றாள் சிறிது நேரம் கழித்து.

ருக்மிணி தாழ்வாரத்திலிருந்து வீட்டிற்குள் குடுகுடு என்று ஓடினாள். அந்த அறையின் கதவு பாதி திறந்தது. உள்ளே ஆயியும் ராதாவும் அவள் தொடைகளின் வழியாக ஒரு சீலையைக் கட்டி விட்டுக் கொண்டிருந்தார்கள். உணர்வே இல்லாமல் சீதா தரையில் ஒரு பொம்மைபோல கிடந்தாள். கூரையிலிருந்து விழுந்த உச்சி வெயில் அவளை மேலும் வெளுப்பாகக் காட்டியது. அவளைப் பார்த்தால் ஒரு வெளிநாட்டு பொம்மையைப்போல இருந்தது. வயிறு மட்டும் அவளுடைய மெல்லிய உடலிலிருந்து வெளியில் துருத்தி உயிர்ப்புடன் இருப்பதைப்போல தெரிந்தது. இப்போது அந்த பொம்மையைப்போல இவளது வயிற்றை அழுத்தினால் அவளிடமிருந்து ‘ அம்மா’ என்ற சப்தம் வருமா?

“ருக்மிணி, சீதா நம்மை விட்டு போயிக்கிட்டே இருக்கா…” பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆயி மெல்லிய குரலில் கூறினாள். “அவ சொர்க்கத்துக்கு போயிட்டிருக்கா. செத்தப்புறம் நல்லவங்கள்ளாம் அங்கதான் போகணும்?”

“சீதா செத்துப்போகப் போறாளா?” என்ற ருக்மிணியின் கேள்விக்கு அங்கே ஒருவரும் பதில் சொல்லவில்லை.

அடுத்த சில மணித்துளிகளுக்கு அந்த இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார். அவர்தான் மருத்துவர் ஒருவரை அழைத்து வந்து மருத்துவ அறிக்கை எழுதித் தரச் செய்தார். அடுத்த ஒரு மணிநேரத்தில் அவளது உடல் அருகில் இருந்த மின் மயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு ஆயி மற்றும் மூன்று வயதான பெண்களின் முன்னிலையில் தகனம் செய்யப்பட்டது. சீதாவின் நினைவாகக் கடை வீதியிலிருந்து வாங்கி வந்து கிருஷ்ணா என்று பெயரிடப்பட்ட அந்த வெளிர் பச்சை வண்ண ஆண் பொம்மை மட்டுமே எஞ்சியிருந்தது. மாலை வேளையில் ருக்மிணி அந்த இரண்டு பொம்மைகளுக்கு நடுவில் படுத்துக்கொண்டு மௌனமாக அழுது கொண்டிருந்தாள். ஒரு வாடிக்கையாளன் கதவைத் தட்டியவுடன் ராதா "ஐயா, தயவுசெஞ்சு இன்னிக்கு போயிடுங்க. இன்னிக்கு இந்த வீட்டில் ஒரு இழவு விழுந்திடுச்சு." வந்தவன் மறுப்பெதுவும் சொல்லாமல் கிளம்பிவிட்டான்.

அன்று இரவு சரஸ்வதியின் அறையிலிருந்து ஓர் ஆண் குரல் கேட்கவே ருக்மிணி விழித்துக் கொண்டாள். சரஸ்வதிக்குத் துக்கப்பட கொடுக்கப்பட்ட காலத்தின் நீளம் அவ்வளவுதான். ருக்மிணிக்கு உடனே ஒரு உணர்வுபூர்வமான பாதுகாப்பு தேவைப்பட்டது. ஆயி அருகில் வந்து தோள் மீது கை போட்டு ஆறுதல் சொன்னால் திரும்பியும் தூங்க முடியும் என்று தோன்றியது. சீதா அந்த அறையிலேயே இருப்பதுபோல இருந்தது. இப்போது அந்த இன்ஸ்பெக்டர் வந்து அவளை எந்தச் சிறிய அறைக்குள் அழைத்துக்கொண்டு சென்று இந்த உலகத்தில் உள்ள அனைவரையும் விட அவள் மீதுதான் இஷ்டம் அதிகம் என்று கூறினால்.

மறுநாள் ஆயி ஒரு ஜோசியனை அழைத்து வந்தாள். அந்த ஜோசியன் தரையில் சில கட்டங்களை வரைந்தான். ஒவ்வொரு கட்டத்திலும் சில சோழிகளை வைத்தான். "தசா புத்தி சரியில்லை. அதனால்தான் உனக்கு இவ்வளவு கஷ்டங்கள்" என்றான் அந்த ஜோசியன். "ஒரு பொண்ணு எவன் கூடயோ ஓடிப் போயிடுச்சு. இன்னொரு பொண்ணு செத்தே போயிட்டா. இது மட்டுமில்லை இன்னும் நிறைய கஷ்டம் வரும். இதுக்கெல்லாம் பரிகாரமா உன்னை ஆட்டிப் படைக்கும் கிரகங்களை உனக்கு சாதகமா ஆக்கிக்கணும்னா ஒரு பூஜை பண்ணணும்."

“கிரகங்கள் சரியில்லையா?” என்று ஆயி கேட்டாள். “என் கெட்ட வேளை, கிரகங்கள் கூட எனக்கு எதிராக் கிளம்பியிருக்கு. இந்த ஏரியாவில்தான் எனக்கு எதிரிங்க இருக்காங்கன்னு நினைச்சுகிட்டு இருக்கேன். எல்லாருக்கும் என் மேல பொறாமை. எனக்கு யாருன்னு தெரியும். யாருன்னு பேர் சொல்ல மாட்டேன். இங்கேயிருந்து வேற நல்ல இடத்துக்கு மரைன் டிரைவோ இல்லை கொலாபாவில் பஸ்தா சந்திற்கோ போயிடப்போறேன். அப்பவாவது எனக்கு நிம்மதி கிடைக்குமா?”

“புது இடத்திற்கு மாறுவது உனக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுக்கும்தான். ஆனா குடக்கூலியே ஒரு லட்சத்திற்கு மேல கொடுக்க வேண்டி வரும். இந்த ஏரியாவே சரியான பார்வையில்தானே இருக்கு? நீ பண்ண வேண்டியது எல்லாம் ஒரு ஹோமம் மட்டும்தான். மிஞ்சிப் போனா ஆயிரம் ரூபாய் செலவாகும்.உன்னோட எதிரிகளை காணாமப் பண்ணிடும். அப்புறம் உன் தொழில் அமோகமா இருக்கும்.”

“எனக்காக அந்த ஹோமம் பண்ணக்கூடிய பிராமணன் உனக்கு யாரையாவது தெரியுமா?” என்று ஆயி ஜோசியனைக் கேட்டாள்.

கூடத்தில் இருந்த பெண்கள் மீது ஜோசியன் தனது காமப்பர்வையைப் படரவிட்டான். “நானே பண்ணிக் கொடுக்கறேன் ஆயி” என்றான். “ஆனா ஒண்ணு அந்த ஹோமத்தை ரகசியமா செய்யணும். பின்பக்கம் இந்த வீட்டில் தாழ்வாரம் ஏதாவது இருக்கா?”

ஜோசியன் கிளம்பிப் போனதும் சிந்துத்தாயி ஆயியின் பக்கம் வந்து ஆறுதல் சொல்ல வந்தாள். “கடவுள் சித்தம். ஆயி நம்ம கையில் என்ன இருக்கு? அப்படி இல்லைன்னா ஏன் ஒரு சின்னப் பொண்ணு கர்ப்பமாகணும்? அவள் இன்னும் வயசுக்குக் கூட வரவில்லை. இப்படி ஒரு விஷயத்தை யாராவது கேட்டதுண்டா? அவளுக்கு ஆயுசு அவ்வளவுதான். அவ சீக்கிரமே சாகப் போறதுக்கு நிறைய அறிகுறிங்க அப்பவே இருந்துச்சு. அவ உதடை கவனிச்சிருக்கியா? வெளுத்துப் போயி... அப்புறம் ஒடிஞ்சு விழுவது மாதிரி இடுப்பு.”

ஆயி அழத் தொடங்கினாள். “ரொம்ப அனுசரணையான பொண்ணு சீதா. தெனம் மத்யானம் அவதான் எனக்கு தாம்பூலம் செஞ்சு கொடுப்பா. ஒரு

கிராமத்து பொம்பள தரகர்தான் அவளை என்னிடம் முன்னூறு ரூபாய்க்கு பத்து வருஷம் முன்னாடி வித்துட்டுப் போனாள். அவளைப் பெத்தவங்க காலராவில் செத்துப் போயிட்டாங்களாம். ஒவ்வொரு பனிக்காலத்திலும் அவளுக்கு நான் விடாம மீன் எண்ணெய் மாத்திரை கொடுத்துக்கிட்டுதான் வந்தேன். என்னவோ அவ உடம்பு தேறவே இல்லை. அப்புறம் அந்த இன்ஸ்பெக்டர்தான் அவளை கொழுக்க வைக்கும் முயற்சியை கை விடச் சொன்னாரு. 'அவளுக்கு மெல்லிய உடம்பு. நாட்டியத்துக்கு உகந்த உடம்பு. நடனம் கத்துக் கொடு, அப்புறம் உன் வாடிக்கையாளர்களை அவ எப்படி வசீகரிப்பா பாரு'ன்னு சொன்னாரு. நானும் அவளை நல்ல நடனப் பள்ளியில் சேர்த்து பாரத நாட்டியம் கத்துக் கொடுக்கலாம்னு நினைச்சுகிட்டு இருந்தேன். ஆனா அந்த ஆண்டவன் என் குழந்தையை என்கிட்டே இருந்து பறிச்சுகிட்டானே. சிந்துத்தாயி உன்னை மன்றாடிக் கேட்டுக்கறேன். யாரிடமும் என்ன நடந்ததுன்னு மட்டும் சொல்லிடாதே. டாக்டர் அவரு சர்டிஃபிகேட்டில் அவளுக்கு அப்பெண்டிசிடிஸ் வெடிச்சிருச்சுன்னுதான் எழுதிக் கொடுத்திருக்காரு."

"அப்பெண்டிசிடிஸ்னா என்ன? கர்ப்பப் பையா?" என்று சிந்துத்தாயி கேட்டதற்கு, "என்னவோ அதுக்கும் மேலன்னு நினைக்கிறேன்" என்று ஆயி பதில் சொன்னாள்.

"இனி வருங்காலத்திலாவது இதை விட ஜாக்கிரதையா இரு லட்சுமி. எதுக்கும் வாய்ப்பு கொடுக்காதே. இதே விதி ருக்மிணிக்கும் வர வேணாம். அவளும் கர்ப்பம் தரிச்சுடப் போறா. நல்ல திரண்டு நிப்பதைப் பாரு."

"ஓ... அவளைப் பத்தி கவலையில்லை சிந்துத்தாயி. அவளை அந்த இன்ஸ்பெக்டர் பாசமா பார்த்துக்கறாரு. அவரோட கூத்தியாளா போயிடுவா போலிருக்கு. அவருக்கு வயசாயிடுச்சு. அதுனால பிரச்சனை இல்லை."

"வயசானதுனால ஆம்பிளைங்க பிள்ளை கொடுக்க முடியாதுன்னு நம்பாதே லட்சுமி பாய். எனக்குத் தெரிஞ்சு ஒரு எண்பது வயசுக் கிழவன் இருபது வயசுக் குமரியைக் கட்டிக்கிட்டு ரெண்டு பிள்ளையும் கொடுத்தான்னா பார்த்துக்கோயேன். அந்த இன்ஸ்பெக்டர் ஆம்பிளைச் சிங்கம். இந்த பூலோகம் பிள்ளை பெத்து நிரப்பும் அளவுக்கு

வீரியமானவன்."

ஆயி சிரித்தாள். அவள் சிரிப்பு சிந்துத்தாயியின் கொக்கரிப்புடன் சேர்ந்துகொண்டது.

"வளையல் வேணுமா?" என்று வாசலில் வந்து நின்ற வளையல்காரன் கேட்டான். அவன் தோள்களில் பெரிய பிரம்புக் கூடைகளில் கண்ணைக் கவரும் பல வண்ண வளையல்கள் மினுங்கிக் கொண்டிருந்தன. ருக்மிணி ஆவலுடன் அவற்றைப் பார்க்க ஓடி வந்தாள். அவன் கூடையிலிருந்து சில அட்டைப்பெட்டிகளை வெளியில் எடுத்தான்.

ஒவ்வொரு பெட்டியிலும் மூன்று டஜன் பிளாஸ்டிக் வளையல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"அந்த ஆரஞ்சு வளையல்களை காட்டுங்க" என்று சரஸ்வதி தனது கரங்களை நீட்டிக் கேட்டாள். "நைலான் வளையல் வெச்சிருக்கீங்களா?"

"இருக்கு. ஆனா விலை அதிகம்."

"என்னைப் பார்த்தா அவ்வளவு விலை கொடுத்து வாங்கறவ மாதிரி தெரியலையா?" என்று கண்களில் கேலி மின்ன அந்தக் கறுப்பி கேட்டாள்.

அதற்கு இணக்கமாக ஒரு புன்னகையை வீசிய வளையல் வியாபாரி, "உனக்கென்ன கண்ணு தங்க வளையலே வாங்கி மாட்டிக்கலாம்" என்றான்.

அவள் கலகல என்று சிரித்தாள். வெள்ளிமணியின் ஓசையைப்போல இருந்தது அந்தச் சிரிப்பு.

"ருக்மிணி உனக்கு வளையல் வேண்டாமா?" என்று ஆயி அவளிடம் கேட்டாள். "பாரு அந்த சிவப்பு நிற நைலான் வளையல் உன் கைக்கு பொருத்தமா இருக்கும்."

ருக்மிணி தனது மறுப்பைத் தலையாட்டிக் காட்டினாள். அந்த வளையல்கள், அவளுக்குச் சட்டென்று சீதாவை நினைவூட்டின. கைகளில் வளையல்களை மாட்டிக் கொள்ளவேண்டும் என்ற ஆசையே போய்விட்டது. "வேண்டாம் ஆயி. எனக்கு எதும் வேண்டாம்" என்றாள்.

சரஸ்வதி தனது உள்ளங்கையை மடக்கி மணிக்கட்டில் வளையல்களை மாட்டிவிடச் சொல்லி அந்த வளையல்காரனிடம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

“நான் இந்த வளையலுக்கு காசு கொடுக்க மாட்டேன்னா என்ன செய்வீங்க?” என்று அவனிடம் பசப்பு வார்த்தைகளைக் கொட்டினாள். அவன் ஆடுபோல கனைத்தான்.

“நீ காசே கொடுக்க வேணாம்” என்றான்.

“நல்ல வியாபாரி நீ” என்றாள் சரஸ்வதி, அவனை மயக்கும் தன்மையுடன்.

மெல்லிய சோளியிலிருந்து வெளியில் பிதுங்கிக் கொண்டிருந்த அவளது முலைகளையும் அகன்ற இடுப்பையும் நோட்டமிட்டபடி அவன் அவளைப் பார்த்து இளித்தான். “நான் வியாபாரி மட்டுமில்லை. ஆம்பிளையும்கூட. காட்டட்டுமா?” என்றான்.

சரஸ்வதி வாய் விட்டுச் சிரித்தாள். உள்ளே போய் பணம் எடுத்துக் கொண்டுவரப் போனாள்.

“எந்த ஊரிலருந்துப்பா வர்ற நீ?” என்று ஆயி அவனைக் கேட்டாள்.

“எனக்கு சொந்த ஊர் வாரணாசி. இங்கே என் அண்ணன் ஒருத்தன் தாதரில் பீடா கடை வச்சிருக்கான். நாங்க ரெண்டு பேரும் சயானில் கோலிவாடாவில் குடியிருக்கோம்.”

“பீடா விற்பதில் காசு நிறைய வருமா?”

“இல்லை தாயி. ஏதோ பொழப்பு ஓட்டிகிட்டு இருக்கோம்.”

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அந்த இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தான். அவனுக்கு அநியாயமாக வியர்த்திருந்தது.

“எல்லாம் சரியாச்சு. அப்பாடா. இப்போ எனக்கு கொஞ்சம் ஓய்வா இருக்கணும். ருக்மிணி இருக்காளா? அட அதோ அங்க இருக்காளே...” என்றார்.

ஆயி அந்தச் சிறுமியை இன்ஸ்பெக்டருடன் சிறிய அறைக்குள்

தள்ளிவிட்டாள். ருக்மிணி மூடிய கதவுகளில் சாய்ந்துகொண்டு படுக்கையில் கிடந்த அந்தப் பருத்த மனிதனைப் பார்த்தாள். அவன் அப்போதே உடலிலிருந்து பாதி உடைகளைக் கழற்றி இருந்தான். அவனுடைய லத்தி தலையணைக்கு அருகில் கிடந்தது. “என் அருகே வா என் கண்மணி” என்று இரைஞ்சிய அவன் குரலில் காமம் வழிந்து ஓடியது. ருக்மிணி ஓர் அடி கூட முன்னால் எடுத்து வைக்கவில்லை.

“என் மேல கோபமா டார்லிங்?” என்றான் அவன். “அந்த வெளிநாட்டு பொம்மையை சர்ச் கேட் பக்கத்திலிருந்து வாங்கிட்டு வரலேன்னு கோபமா? அந்த சீதா செத்துப் போனதில் எனக்கு இன்னிக்குப் பூரா வேலை. அவ சாவு அதுக்கப்புறம் தகனம் அது சம்பந்தமான நுணுக்கமான வேலைகள். எனக்கு கொஞ்சம் நேரம் கொடு கண்ணு. இன்னும் மூணு நாள், அப்புறம் அந்த பொம்மை உன்னோடது. உன் தோழி ஞாபகமா நீ அந்த பொம்மையை சீதான்னு கூப்பிடலாம்.”

அதைக் கேட்டதும் ருக்மிணி தனது இறந்து போன தோழிக்காக உடைந்து அழத் தொடங்கினாள். அவள் அந்த மனிதனை நோக்கி ஓடி தனது அழும் முகத்தை மயிர்க்கற்றைகள் நிறைந்த மார்பில் புதைத்துக் கொண்டாள். “அப்பா அப்பா...” என்று அவள் அழுது கொண்டிருந்தாள். அவன் வார்த்தைகளால் விவரிக்க இயலாத அளவிற்கு நிதானத்தை இழந்து அவளுடைய சுருட்டை மயிரை வருடத் தொடங்கினான்.

“அப்பா, என்னை இங்கிருந்து கூட்டிக்கிட்டு போயிடுங்க. இல்லாட்டி நானும் செத்துப் போயிடுவேன்.”

அவன் அவளுடைய கூந்தலை முத்தமிட்டான். அவனுடைய காமம் வடியத் தொடங்கியது.

“அப்பா... நீ உன் தகப்பனையும் இப்படிதானே கூப்பிடுவ?”

“ஆமாம்” என்ற ருக்மிணி, “அப்பா என்கிட்டே ரொம்பப் பிரியமா இருப்பாரு. ஆனா அவரு அம்மா கூட சண்டை போட்டுக்கிட்டு என்னிடம் கூட சொல்லிக்காம வீட்டை விட்டுப் போயிட்டாரு. திரும்பி வரவே இல்லை. தீபாவளிக்கு முன்னாடி அவரு எப்படியும் திரும்பி வருவாரு,

எனக்கு அழகா ஒரு பாவாடை வாங்கிட்டு வருவார்ன்னு காத்துக்கிட்டு இருந்தேன். ஆனா அவர் வரவே இல்லை. அவர் வரவே மாட்டாரு இல்லை? என்னை மறந்துவிட்டார். இல்லையா?"

"அழாதே மகளே. என்னை உன் தந்தையா நினைத்துக் கொள். இன்றிலிருந்து நான் உன்னை என் மகளாகவே நினைத்துக் கொள்கிறேன்.போதுமா ருக்மிணி?"

ருக்மிணி அவன் தோள்களில் சாய்ந்துகொண்டு உறங்கத் தொடங்கினாள். அவளுக்கு உறக்கத்தில் ஒரு கனவு வந்தது. அவளும் சீதாவும் ஒரு இரட்டை மாடிப் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெரிய கொய்யா மரம் கிளைகளில் பழங்கள் குலுங்க அவர்களைக் கடந்து சென்றது. அவளும் சீதாவும் கைகளை வெளியில் நீட்டி நிறைய கொய்யாப் பழங்களைப் பறித்தனர். அந்தப் பழங்களை அதன் விதைகளுடன் சேர்த்து ருசித்துச் சாப்பிட்டனர்.

•

மீராதாயி திரும்பி வந்தபோது அவளுடைய ஆடைகள் கலைந்திருந்தன. அவளே பைத்தியம் பிடித்தவள்போல காணப்பட்டாள். ஆயி அந்த மதியப் பொழுதில் ஒரு குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தாள். தட்டாம்பூச்சிகள் வந்தால் விழுங்குவதற்குத் தோதாக நாக்கை வெளியில் நீட்டிப் படுத்துக் கொண்டிருக்கும் ஒரு முதலையைப்போல வாயைப் பிளந்து உறங்கிக் கொண்டிருந்தாள். தூங்கும்போது ஆயி அசிங்கமாகத் தோன்றினாள். ருக்மிணி அவள் அருகில் அமர்ந்து அவள் தூங்குவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மீராதாயி அவளுடைய அகலமான மார்பின் மேல் விழுந்து அழுதாள்.

"எனக்கு உதவி பண்ணுங்க ஆயி. இன்ஸ்பெக்டர் ஐயா ஸ்டேஷனில் இருக்கும் ஏட்டுங்களை விட்டு அவரை அடிச்சுக் கொல்லச் சொல்லிட்டாரு. அவங்க அவரை காவல்நிலையத்தில் துவம்சம் பண்ணிக்கிட்டு இருக்காங்க. இப்படியே அடிச்சாங்கன்னா அவர் இன்னும் ஒருமணி நேரத்தில் செத்துதான் விழுவார். அப்புறம் நான் விதவைதான்.

தயவுசெஞ்சு அங்க போயி அவரை அடிக்க வேண்டாம்னு சொல்லுங்க தாயி.”

ஆயி அவளை வெறித்துப் பார்த்தாள். அவள் கறுத்த முகத்தில் எவ்வித மாற்றமும் தெரியவில்லை, “என்ன நடந்தது மீரா?” மெல்ல பேசினாள். “நீ திரும்பி வர்றதுன்னு முடிவு பண்ணிட்டியா?”

“அவங்க அவரை அடிச்சே கொன்னுடுவாங்க போலிருக்கு ஆயி... எந்திருங்க. இன்ஸ்பெக்டர் ஐயாகிட்ட தப்பு அவர் மேல இல்லைன்னு சொல்லுங்க. என்னை யாரும் இங்கேயிருந்து கடத்திட்டுப் போகலை. நாந்தான் அவரிடம் பசப்பு வார்த்தை பேசி இங்கிருந்து கூட்டிக்கிட்டுப் போகச் சொன்னேன். அப்புறம் ஏன் என்னை விட்டுட்டு அவரை பழி வாங்கணும்?”

“அந்தப் பையன் இப்ப எங்கே இருக்கான் மீரா?” என்று ஆயி கேட்டாள்.

“அந்த போலிஸ் ஸ்டேஷனில் இருக்கார். அவரை வெளியில விடச் சொல்லுங்க ஆயி. என் வாழ்நாள் பூரா நான் ஜெயிலில் இருக்கேன்னு சொல்லுங்க.”

ஆயி தனது திவானிலிருந்து எழுந்து தாம்பூலம் தரித்துக் கொண்டாள்.

“இதோ இப்பவே போலிஸ் ஸ்டேஷனுக்குப் போயி இன்ஸ்பெக்டர் ஐயாவிடம் சொல்றேன். நீ உள்ள போயி ஒரு குளியலைப் போடு. ராதாகிட்ட சொல்லி சாப்பிடு. உன்னைப் பார்த்தா ஒரு வாரம் பட்டினி கிடந்தவ மாதிரி இருக்கு.”

மீராதாயி ஆயியின் கரங்களைப் பரிவுடன் முத்தமிட்டு உள்ளே போனாள். நம்ம மீரா திரும்பி வந்துட்டா. ஆயி மனதுக்குள் சொல்லிக் கொண்டாள். அவள் ருக்மிணியைத் துணைக்கு அழைத்துக்கொண்டு காவல் நிலையத்திற்குச் சென்றாள். “ஒரு ஆடவன் மேல் காதல் கொள்வது எவ்வளவு ஆபத்தானதுன்னு பார்த்துக்கோ...” என்றாள் ருக்மிணியிடம். “அது உன்னையே கயித்தில் கட்டிக்கிட்டது மாதிரி. நீ யாரையும் காதலிக்கவில்லை என்றால் நீ கட்டுக்குள் சிக்கிக்க மாட்ட. ஞாபகம் வச்சுக்கோ.”

அவர்கள் போகும்போது அந்தப் பையனை ரத்த விளாராக ஆக்கியிருந்தார்கள். ஒரு டோங்காவை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அவனை அள்ளிப் போட்டுக்கொண்டு வீட்டிற்குக் கூட்டி வந்தார்கள். அவன் தலை தொங்கிக் கண்களில் நீர் வழிந்தபடி இருந்தது. “என் பேரில் எந்தக் குற்றமும் இல்லை” என்று ஒரே ஒருமுறை முனகினான். ஆனால் ஆயி அவனுடன் பேசுவதற்கு விரும்பவில்லை.

டோங்கா வீட்டு வாசலில் வந்து நின்றதும் ஆயி அந்தப் பையனை வண்டியை விட்டு இறங்கச் சொன்னாள். அவன் இறங்குவதற்கு ருக்மிணி உதவி புரிந்தாள், “என் எலும்பெல்லாம் நொறுங்கிப் போய்க் கிடக்கு” என்று முனகியபடி அவன் இறங்கினான்.

“உங்களுக்கு இன்னிக்கு ஒரு தபால் வந்திருக்கு தாயி” என்று தபால்காரர் ஒரு கடிதத்தை நீட்டினார்.

“அதைத் திறந்து என்ன எழுதியிருக்குன்னு எனக்கு படிச்சுக் காட்டு ருக்மிணி” என்று ஆயி அலறினாள். “கடைசியில் என் மகன் இந்தப் பாவியை மன்னித்துவிட்டானா?” என்றாள்.

முனகிக் கொண்டிருந்த அந்த இளைஞன் உள்ளே சென்று அமர்ந்தான். தபால்காரர் அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் ஆவலில் தனது பயணத்தைத் தாமதித்த வண்ணம் நின்றார். ருக்மிணி படிக்கத் தொடங்கினாள்.

‘அன்புள்ள ஆயி,

நான் கடந்த பத்து வருடங்கள் மௌனமாக இருந்துவிட்டேன். இன்று என்னுடைய முதலாளி, நிறைய படித்தவர், என்னிடம் தூய்மையான அன்பு என்றால் என்ன என்று விளக்கினார். நான் உங்களைக் காயப்படுத்தியதற்கும் பத்து வருடங்கள் வீட்டை விட்டுத் தள்ளியிருந்ததற்கும் கடிந்து கொண்டார். எல்லாத் தொழிலுக்கும் அந்தத் தொழிலுக்குண்டான தருமங்கள் இருக்கும் என்றும் அதற்காக நான் வெட்கப்படத் தேவையில்லை என்றும் கூறினார். அவர் பெரிய பணக்காரர். பெரிய கார் பட்டறை வைத்துக் கொண்டிருப்பவர். பத்து வருடங்களுக்கு

முன்பு இறந்து போன தாயார் தனக்குக் கிடைப்பார் என்றால், தனது உடைமைகளை எல்லாம் இழக்கத் தயாராக இருப்பதாகக் கூறினார். நாம் எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம், வீடு வாசல் மனைவி குழந்தைகள் என்று ஆயிரம் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் நம்முடைய தாயாரை இழந்தால் இழந்ததுதான். திரும்பக் கிடைக்காது என்றார். அவர் என்னை நச்சரித்ததால் நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நான் வரும் சனிக்கிழமை மதியம் உங்களை எல்லாம் பார்க்க வருகிறேன்.

உங்கள் அன்பு மகன்,

சதாசிவ மனே.'

ஆயி கதறி அழுதாள். ருக்மிணி தனது கண்களில் கண்ணீர் வழிவதை உணர்ந்தாள். தபால்காரர் கூட சற்று நெகிழ்ந்துவிட்டார். "நல்ல சேதிதானே ஆயி" என்றார். ஆயி தனது இடுப்பு சுருக்கஞ்சியிலிருந்து ஒரு ரூபாய் தாள் ஒன்றை எடுத்து தபால்காரருக்கு இனாமாக அளித்தாள்.

"பாருங்க என்னோட பையன் எவ்வளவு புத்திசாலியா மாறிட்டான்" என்று ஆயி தனது மூக்கை அழுத்தித் தேய்த்துவிட்டுக் கொண்டாள். அப்போது வெளியில் வந்த மீரா, அந்தப் பையன் ஒரு சிலையைப்போல கீழே அமர்ந்திருப்பதைப் பார்த்தாள்.

"என்னை மன்னிச்சிடுங்க" என்று அவன் பாதங்களின் கீழ் விழுந்தாள். "என்னை இந்த வீட்டை விட்டு கூட்டிக்கிட்டுப் போகச் சொல்லலேன்னா உங்களை அவங்க இப்படி போட்டு அடிச்சிருப்பாங்களா? அடி பலமா? கொஞ்சம் சூடா பால் கொண்டுவரட்டுமா? உள்ள வந்து ஒரு மணிநேரம் ஓய்வு எடுக்கலாம் வாங்க."

"மீரா அவன் அப்படியே இருக்கட்டும். அவனை கொஞ்சம் நிம்மதியா இருக்கவிடு. அவன் உன்னால்தான் இவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கான். அவனைத் தனியா நிம்மதியா இருக்க விடு."

"என்னை விட்டுவிட்டு அவனுக்கு ஏது நிம்மதி? அவனுக்கு என் மேல் காதல் இல்லையா?" என்று மீரா கேட்டாள்.

அந்த யுவன் தரையில் நீட்டிப் படுத்துக்கொண்டு கண்களை மூடி

உறங்கத் தொடங்கினான்.

“நீ இன்னும் என்னை காதலிக்கவில்லையா?” என்று மீரா அவனிடம் விடாது கேட்டாள்.

“தெரியலை” என்றான் அவன் முனகியபடி.

“நீ உடனே கிளம்பி உங்க வீட்டுக்குப் போ தம்பி. உன்னைக் காணும்னு உங்கம்மா பாவம் அவதிப்பட்டுக்கிட்டு இருப்பாங்க.”

“இல்லை, அவங்க தேடி வருந்த மாட்டாங்க. என் அம்மாவும் அப்பாவும் பூனாவில் சொந்தக்காரங்களைப் பார்க்கப் போயிருக்காங்க. இன்னிக்கு ஏழுமணிக்கு திரும்பறதா இருக்காங்க. நான் அதற்குள் போனா போதும்.”

“அப்படின்னா இது ஒருவார விடுமுறைக் கொண்டாட்டம் மட்டும்தானா?” இதைக் கூறும்போது மீராவின் தொண்டையிலிருந்து ஒரு விம்மல் கிளம்பியது. “அப்போ நானும் நீயும் கணவன் மனைவியா வாழ்க்கை நடத்தப்போறோம்னு நீ சொன்னதெல்லாம் பொய்யா?”

அவன் பதில் எதுவும் கூறவில்லை.

“உனக்கே வயசு எத்தனை ஆகுதுப்பா?” ஆயி வாயில் வெற்றிலையை மென்றபடி கேட்டாள்.

“எனக்கு பத்தொன்பது வயசு” என்றான் அந்த வாலிபன்.

“நல்ல பிள்ளையா உன் வீட்டுக்கு திரும்பிப் போப்பா. மீராவை மறந்துடு. படிப்பு முடிச்சு நல்ல வேலையா தேடிக்கிட்டு நல்லா சம்பாதிச்சிட்டு ஒரு வேசை குடிக்குப் போய் காசு செலவு பண்ணும் அளவிற்கு ஐவேஜ் வர்றப்ப இங்க வா. இப்ப கிளம்பு” என்றாள் ஆயி.

மீரா அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு சுருங்கிப் போனாள். அந்த வாலிபன் எழுந்து அவர்களுக்கு ஒரு சல்யூட் வைத்துவிட்டு அங்கிருந்து கிளம்பினான்.

“நன்றி கேட்ட நாயி.” மீரா சீறினாள். “அவன் என்கிட்டே அவனுக்கு வயசு இருபது, ஒரு மில்லில் வேலையா இருக்கறதா சொன்னான். பொய்யன்.

நாத்தம் புடிச்ச வாயன்” என்று சீறினாள். ஒரு நொடியில் உலகமே வேறு ஓர் உலகமாக மாறியதுபோல அவளுக்குத் தோன்றியது.

மீரா தனது அறையிலிருந்த சரஸ்வதியின் பொருட்களை வெளியில் கடாசினாள். அதன்பிறகு பெரிய தகராறு நிகழ்ந்தது. சரஸ்வதி மீராவின் முகத்தைக் கீறினாள்.

“ஒழுக்கங்கெட்ட கழுதை. இது உன் சொந்த வீடுன்னு நினைச்சியா? இவ ஒரு ஸ்கூல் பையனோட ஓடிப்போவாளாம், அப்புறம் ஒண்ணுமே நடக்காத மாதிரி திரும்பி வருவாளாம். நாம அவளைச் சேர்த்துகிட்டு திருப்பியும் பழைய ரூமையே கொடுக்கணுமாம். நிச்சயமா இந்த ரூமில் உன்னைத் தங்க விடமாட்டேண்டி. ரைட் ராயலா இந்த ரூம் என்னுதுடி.”

அனுபவத் தகுதி அங்கே முன் நின்றது. இந்த முறை ஆயி மீராவுக்குப் பரிந்துகொண்டு வரவில்லை. மீரா குற்றம் புரிந்தவள். அதில் எள் முனையும் சந்தேகம் கிடையாது. அவர்கள் எல்லோரையும் விட சரஸ்வதிக்குதான் தகுதி அதிகம். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவள். தொழில் நுணுக்கம் கொண்டவள். அவள்தான் அந்தக் குடியில் இருக்கும் ஆகச் சிறந்த அறைக்குத் தகுதியானவள்.

மீராவிற்கு வேறு வழியில்லை. அறையை அவளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டு சின்னஞ்சிறுசுகள் கூடத்தில் படுத்துக்கொள்ளும் பாயைப் பகிர்ந்துகொண்டாள். அவள் தன்னை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர முயலவேண்டும்.

இன்ஸ்பெக்டர் வந்தபோது ஆயி அவனுக்கு ஒரு தட்டு நிறைய லட்டு கொண்டுவந்து கொடுத்தாள்.

“இன்னிக்கு என்ன விசேஷம்?” என்று இன்ஸ்பெக்டர் கேட்டான்.

அந்தக் கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்துக் காட்டினார்கள். கடிதத்தைப் படிக்கும்போது மேலும் நான்கைந்து விழிகளில் நீர் திரண்டது.

“உனக்கு அதிர்ஷ்டம் திரும்புது லட்சுமி” என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் ருக்மிணியை அழைத்தார். தனது கையிலிருந்து ஒரு பெரிய பொட்டலத்தை எடுத்தார்.

“திறந்து பார் மகளே, உனக்கு நான் என்ன வாங்கிட்டு வந்திருக்கேன்னு...” என்றார்.

சொல்லவே வேண்டாம் அது அந்த வெளிநாட்டு பொம்மைதான். அது கொஞ்சம் கொஞ்சம் சீதா மாதிரியே தெரிந்தது. அதன் மிருதுவான மேனி வெளுப்பாகவும், சற்று பூசின வயிறுமாக இருந்ததுதான் அதற்குக் காரணம். ருக்மிணி அதன் வயிற்றை அழுத்தியதும் அது “அம்மா...” என்று தனது பாதி மூடிய விழிகளுடன் அலறியது.

“அப்பாக்கு முத்தம் கிடையாதா?” என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

ருக்மிணி அந்த இன்ஸ்பெக்டரை இரு கரங்களாலும் கட்டிப் பிடித்து அவர் காக்கி சட்டையில் தனது மூக்கை அழுத்தித் தேய்த்தாள்.

“ரொம்ப உணர்ச்சி வசப்படறீங்களே...” என்றாள் ஆயி.

அவர் அதனை ஆமோதித்துத் தலையை ஆட்டினார். அவர் முகம் முழுவதும் விரிந்த புன்னகை மலர்ந்தது. “லட்சுமி பாய் எனக்கு வயசாகுது இல்லை? நான் இப்போ கிழவன்.”

“இந்தப் பொண்ணைப் பார்த்தா பூனாவில் என் சொந்தக்காரங்க வீட்டில் இருக்கும் என் பேத்தி ஞாபகம் வருது. அவளும் இப்படிதான் என்கிட்டே அன்பாவும் பிரியமாவும் இருப்பா. தீபாவளி சமயம் அவ எனக்கு அன்பொழுக கடிதம் போடுவா.”

“பிரியத்தை விட வேற என்ன வேணும் சொல்லுங்க இன்ஸ்பெக்டர் ஐயா?” என்று ஆயி கேட்டாள். புகையிலை துணுக்கை உள்ளங்கையில் வைத்துக் கசக்கினாள்.

“நானும் முன்ன மாதிரி குமரி கிடையாது. எனக்கும் வயசாயிகிட்டே போகுது. ஏன் இந்த வீட்டுப் பொறுப்பை சரஸ்வதிகிட்ட ஒப்படைச்சிட்டு காசிக்குப் போய் அங்கேயே மீதி வாழ்நாளைக் கழிக்கக் கூடாதுன்னு வருது. என்கிட்டே சாகற வரைக்கும் வேற யாரிடமும் கை ஏந்தாம வாழ கொஞ்சம் காசு இருக்கு. அப்படியே என்னோட இங்கிருந்து யாரையாவது துணைக்கு கூட்டிகிட்டுப் போகலாம்னு நினைக்கிறேன். சிந்துத்தாயியைக்

கேட்கணும். அவளுக்கும் இந்த ஊரில் சொந்த பந்தம் யாருமில்லை. என் மகன் சனிக்கிழமை வந்ததும் முடிவு பண்ணலாம்னு இருக்கேன்.”

“உங்களை பிரிஞ்சு இருப்பது கஷ்டம் லட்சுமி பாய். நீங்க இல்லாம இது பழைய மாதிரி இருக்காது. அப்புறம் நம்ம ருக்மிணி, பாவம் அவ என்ன பண்ணுவா உங்களை விட்டுட்டு? இந்த வீட்டுக்கு யாரு அடுத்த ஆயியா வரப்போறாங்களோ அவங்க தயவை எதிர்பார்த்து இருக்கணும் இந்தச் சின்னப் பொண்ணு.”

“அவளை என் மகனுக்கு கட்டி வச்சிடுவேன். ஒரு மனைவியைக் காப்பாத்தும் யோக்கியதை அவனுக்கு இருக்கும்னு நம்புறேன்.”

“ரொம்ப சீக்கிரம் வந்துட்டேனா?” என்றபடி படியேறி வந்த வாடிக்கையாளன் ஒருவன் உள்ளே நோட்டமிட்டான்.

“இங்க இவ்வளவு சீக்கிரம் யாரும் வரக்கூடாது. பரவாயில்லை வாங்க...” என்று சரஸ்வதி அவனை உள்ளே அழைத்துக்கொண்டு போனாள். அவன் அவளைக் கண்களால் பாராட்டியபடி உள்ளே போனான்.

“நீங்க வேணா கொஞ்ச நேரம் மீராவோட ஆசுவாசமா இருந்துட்டுப் போங்க இன்ஸ்பெக்டர் ஐயா. உங்களுக்குதான் மீராவை ரொம்பப் பிடிக்குமே...” என்று ஆயி இன்ஸ்பெக்டரிடம் கூறினாள்.

“இல்லை லட்சுமி பாய். இன்னிக்கு எனக்கு ஒரு பொண்ணோட படுத்துக்கணும்னு தோணலை” என்று கூறிய அவர் வெற்றிலைகளில் நிதானமாக சுண்ணாம்பு தடவினார்.

“என்னிடம் இன்று ஏதோ ஒன்று மறைந்துவிட்டது” என்றார்.

“வேறு ஏதோ ஒன்று உங்களிடம் பிறந்திருக்கிறது” என்று ஆயி ஒரு முறுவலுடன் கூறினாள்.

ருக்மிணியின் பொம்மை “அம்மா அம்மா...” என்று குரல் எழுப்பியது.

# 2. தெருவீதிப் பெண்கள்

## பாபுராவ் பாகுல்

கிரிஜா ஹாஜி மலாங் தர்காவிற்கு இராத்திரிதான் போயிருந்தாள். காலையில் எழுந்திருந்த கையோடு பாபா தர்கா பிரசாதத்தை அந்தச் சின்னஞ்சிறு ஊரில் இருந்தவர்களுக்குப் போய்க் கொடுத்தாள். கொடுத்துவிட்டு காலை ஆகாரம் எடுத்துக்கொள்ளப் போனாள். எதிர்படுபவர்களுக்குக் கொடுக்கக் கையில் இன்னும் கொஞ்சம் பிரசாதம் பாக்கி இருந்தது. காலை ஆகாரம் முடித்துக்கொண்டு மலைக்குப் போக வேண்டும். மேலே அவள் ஏற்கெனவே ஊற வைத்திருந்த துணிகளைத் துவைத்துப் பிறகு தனது உடலை சோப்பு, நார் கொண்டு நன்றாகத் தேய்த்துக் குளிக்க வேண்டும். இரவு வரும்போது வாயில் பீடாவைக் குதப்பிக்கொண்டு தனது தொழிலைப் பார்க்கப் போகவேண்டும். அப்போதுதான் பணத்தை அள்ளமுடியும். அவளுக்கு அந்தப் புதுப் பெண்ணிடம் இனி அச்சம் எதுவுமில்லை. பாபாவிடம் மனம் உருகி பிரார்த்தித்துக் கொண்டுவிட்டாள். அந்தப் புதுப் பெண் நாசமாகப் போக வேண்டும். அவள் மனசு போலதான் எல்லாம் இனிமேல் நடக்கும். அவளுக்கு பாபாவைப்போல நிறைய பக்கிரிகளின் ஆசீர்வாதம் உள்ளது. ஒரு பரதேசியைக் கூப்பிட்டு இரண்டுநாள் சோறு போட்டிருக்கிறாள். கணக்கே இல்லாமல் தான தர்மம் பண்ணியிருக்கிறாள். ஒருமுறை பாபாவிற்குப் பாலாபிஷேகம்கூட செய்திருக்கிறாள். எல்லாம் நம்பிக்கையின் பேரில் செய்யும் பிரார்த்தனைகள். நிச்சயம் அவள் நம்பிக்கை வீண்போகாமல் அவள் தொழில் அவளுக்கு நல்ல வாய்ப்புகளைக் கொண்டுவரும்.

இவற்றையெல்லாம் அசை போட்டபடி கிரிஜா அந்த உணவு விடுதியின் படிகளில் துள்ளியபடி நடை போட்டு, “கஸம் இந்தப் பிரசாதம் வாங்கிக்கோ” என்று உரத்துக் கூவினாள். சிற்றுண்டி விடுதியின் முதலாளி அவளுக்குக் கடன் கொடுத்து, கடன் கொடுத்து சலித்துப் போய் அவளைத் தன் அருகில் வரும்படி கூப்பிட்டான். அவள் தனது இருக்கையிலிருந்து அசையக்கூட இல்லாமல் தனது ஆர்டரை உரத்த குரலில் சப்ளையரிடம் கூறிக் கொண்டிருந்தாள். அவளுடைய மிதப்பைப் பார்த்து அவனுக்குச் சூடு ஏறியது. அவன், “உனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது” என்று உரத்த குரலில் சொன்னான்.

இது அவள் காதில் விழுந்ததும் தனது இருக்கையைப் பின்னால் பெருத்த ஓசையுடன் ஒரு தள்ளு தள்ளிவிட்டு, “தந்தியா...” என்று கூப்பாடு போட்டாள். உணவு விடுதியின் முதலாளி அவளிடம் தந்தி வாசகத்தை நிதானமாக மாரத்தியில் சொன்னான். அவன் சொன்னதைக் காதில் வாங்கிக்கொண்ட கணம் அவள் கூக்குரலிட்டாள். தடாலென்று அவன் காலில் விழுந்து தனது கிராமத்திற்குப் போக அவனிடம் பணம் கடனாகக் கேட்டாள். அவள் கெஞ்சல் குரலுக்குக் கொஞ்சமும் அசைந்து கொடுக்காத அவன், “உனக்கு வந்த தந்தியை நான் ரெண்டு நாளா குப்பைத் தொட்டியில் போடாம வச்சிருக்கேன். இன்னொரு விஷயம். உன்னையும் ஒரு பொம்பளையா மதிச்சுப் பேசறேன். ஏற்கெனவே உனக்கு கடன் கொடுத்தாச்சு. ஏகப்பட்ட கடன். கிளம்பு... உனக்கு நிறைய செஞ்சாச்சு.”

அவள் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் கிளம்பினாள். அவளுடைய ஆற்றாமை எரிமலையின் புகைச்சலாகக் கிளம்பியது. ஒவ்வொரு அணுவும் உணர்ச்சியில்லாமல் போனது. முகத்திற்கு சோப்பு போட்டுக் கழுவினாள். முகத்தில் இருந்த ஈரத்தை ஒரு பழைய இரவிக்கையால் துடைத்துக் கொண்டாள். கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். இதுவரை அடங்கிப் போயிருந்த அழுகை கண்ணாடியில் முகத்தைப் பார்த்ததும் மீண்டும் பீறிட்டுக்கொண்டு வந்தது. கையிலிருந்த கண்ணாடி நழுவி கீழே விழுந்தது. சமாதானம் ஆகும் வரையிலும் அழுது தீர்த்தாள். தன்னைத்தானே தேற்றிக்கொள்ளக் கீழே தரையில் அமர்ந்தாள். தலைக்கு

எண்ணெய் பூசிக் கொண்டாள். இறுக்கமாக இல்லாமல் கூந்தலைக் கொஞ்சம் பம்பையாக மாற்றி ரப்பர் பேண்டால் சுற்றிக் கொண்டாள். இப்போது கொஞ்சம் இளமையாக இருப்பதுபோல தோன்றியது. கூந்தலை முன்னால் போட்டுக் கொண்டாள். நெற்றியில் சின்னக் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாள். இரவிக்கையை எடுத்துவிட்டு அதன் விளிம்பை இறக்கி மார்புகள் நன்றாகத் தெரியும்படி இழுத்துவிட்டுக் கொண்டாள். கட்டிக் கொண்டிருந்த சேலையை உள்பக்கமாக இழுத்துவிட்டு முதுகு நன்றாகத் தெரியும்படி புடைவைத் தலைப்பை இறக்கிவிட்டுக் கொண்டாள். தனது சிறிய அறையை விட்டு வெளியில் வந்தாள். முன்னங்காலை ஊன்றி டாக் டாக் என்று குதி நடை போட்டாள். பலமுறை கெஞ்சிய பிறகு கொஞ்சம் வெற்றிலையும் பாக்கும் வாங்கிக் கொண்டாள். அவள் வெற்றிலையை மடிக்கும் நிலையில் இல்லை. அதனை மென்னும் நிலையிலும் அவள் இல்லை. வலுக்கட்டாயமாக அந்தத் தாம்பூலத்தைத் தரித்துக் கொண்டாள். உதடு இரண்டும் சிவக்க வேண்டுமே... அவள் உதடுகள் சிவப்பதாக இல்லை. முகத்தில் ஒரு பிரகாசமும் ஏற்படவில்லை. அவள் நடையில் ஒரு நளினம் இல்லை. மனம் நொந்து போயிருந்தாள். உள்ளே சொல்லமுடியாத கவலை ஒன்று அவளை வாட்டிக் கொண்டிருந்தது. அதனை அவள் தணிக்க முற்படும்பொழுதெல்லாம் அது தணியாமல் வலுத்தது. அந்தத் தந்தியைப் பார்த்ததிலிருந்து அவள் மனம் அவளிடம் இல்லை.

துயரம் அவளைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டிருந்தாலும் அவள் பூங்காவை நோக்கிப் புறப்பட்டாள். இந்தப் பூங்காதான் பல வருடங்களாக அவள் தொழில் செய்யும் இடம். இன்னும் எந்தக் கிராக்கியும் திகையவில்லை. வெற்றிலையை வாயில் குதப்பிக் கொண்டிருந்தாலும் இதழ்கள் சிவக்காமல் வறண்டே இருந்தன. பூங்காவிலிருந்த குழாயடியில் முகத்தைக் கழுவிக் கொண்டாலும் அதில் இருந்த சோகத்தைக் கழுவ முடியவில்லை. அங்குத் திரிந்த ஆண்கள் அவளைக் கண்டுகொள்ளவே இல்லை. இதயத்தின் அழுகை வெடித்துச் சிதற வழியின்றித் தளும்பிக் கொண்டிருந்தது.

ஆண்களைப் பார்த்து புன்னகைத்தாள். அவர்களை வசீகரிக்கத் தன்னிடம்

உள்ள திறமைகளை எல்லாம் ஒன்று திரட்டி முயன்று கொண்டிருந்தாள். ஒருவனும் அவளிடம் வந்து ரேட் பேசவில்லை. காலம் கடந்ததுதான் மிச்சம். அவளது வருத்தத்தை அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அன்றைய தினம் பூமி ஒரு பெரிய கிட்டங்கைப்போல எல்லா ஆண்களையும் விழுங்கி விட்டதோ என்று தோன்றியது.

அப்போதுதான் அவள் அவனைப் பார்த்தாள். அந்த வயதான பெண்ணிடம் ஏதோ பேசிவிட்டு அவளை நோக்கி வந்தான். அவன் அருகில் வரவர அவள் இதயம் துள்ளிக் குதிக்கத் தொடங்கியது. அதே நேரம் அவன் தனது உடலின் மீது நிகழ்த்தவிருக்கும் வன்கொடுமைகளை எண்ணி அவள் உடல் வியர்க்கத் தொடங்கியது. அவன் அவள் அருகில் மிகவும் நெருங்கி வந்தான். அவன் ஆவலுடன் பேச எத்தனித்தான். அவன் பேச ஆரம்பித்துவிட்டால் அவளால் மறுப்பு சொல்ல முடியாது. அவனுடன் படுப்பதைத் தவிர வேறு வழியில்லை. அவன் செய்யும் வக்கிரங்களுக்கு அடிபணிவதைத் தவிர வேறு கதி இல்லை. அவன் சில்மிஷத்தை தானும் ரசிப்பதாக நாடகம் வேறு ஆட வேண்டியிருக்கும். அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இதிலிருந்து எப்படித் தப்பிப்பது? அவளுக்கு திகிலானது.

அவன் அவளைக் கடந்து சென்றான். அவள் பூமியில் வேர் பிடித்ததைப்போல ஒரே புள்ளியில் நின்றிருந்தாள். நெடுநேரம் அவனுடைய விரிந்த முதுகுப் பகுதி அவள் விழிகளுக்குள்ளேயே இருந்தது. அவள் தன்னிலை அடைந்த பின்னர்தான் அவனைப் பார்த்து புன்னகையை வீசியிருக்க வேண்டும், பேச்சுக் கொடுத்திருக்க வேண்டும் என்ற நினைப்பு வந்தது. சீக்கிரம் தொழில் முடிந்தால்தான் தனது மகனை விரைவில் பார்க்க முடியும். அவள் அவசரமாக முன்னால் எட்டு எடுத்து அவனை அழைப்பதற்கு எத்தனித்தாள். வார்த்தை எதுவும் எழாமல் தொண்டைக்குள்ளே சிக்கிக் கொண்டது. முன்பு அவனுடன் தான் அனுபவித்த பாலியல் வன்புணர்வு அவள் மனதில் நிழலாட ஜடமாக நின்றிருந்த அவளை உயிர்த்தெழ வைத்தது. அவள் பின்னால் திரும்பி அந்தக் கிழவியை நோக்கி ஓடினாள்.

“நாசமாப்போற சூனியக் கிழவி. எதுக்கு அந்த மிருகத்தை அந்தச் சின்னப் பொண்ணு கிட்ட அனுப்பின?” என்றாள்.

“ஏன்? அதிலென்ன தப்பிருக்கு?” என்று அந்தக் கிழவி அவள் முகத்தைக்கூட ஏறிட்டுப் பாராமல் கேட்டாள்.

“நான் சொல்றேன், வேண்டாம். அவ்வளவுதான்...” என்று கிரிஜா கத்தினாள்.

“எங்க தொழிலைப் பார்க்க விடும்மா. நீ கிளம்பு” என்று கூறிய அந்தக் கிழவி கிரிஜாவின் பச்சாதாபத்தை எட்டி உதைத்தாள்.

கிரிஜா வெறுப்பில் முகம் சுழித்தாள்; ஆத்திரத்துடன் சாபமிட்டாள்; அவள் அருகில் இருந்த மரத்தடியில் அமரச் சென்றாள். கால் நொண்டியது. பூமியுடன் கோபித்துக் கொண்டதைப்போல மரத்தின் நிழல் வேகமாக மரத்திடமிருந்து பிய்த்துக்கொண்டு ஓட முயன்றது. பூமி அதனைப் போக விடவில்லை. கிரிஜா மரத்தின் அடியில் கிடந்தாள். வயிறு பசித்தது; நெஞ்சு எரிந்தது. அவள் மனமும் அந்த மரத்தின் நிழலைப்போல தப்பித்துச் செல்ல எண்ணினாலும் தப்பிச் செல்ல இயலாது.

“கிரிஜா.”

நாராயண ஷெட்டி அவள் முன்னர் நின்றபோது அவள் தனது முக பாவத்தை மாற்றிக் கொண்டாள்; மனதை சரி செய்துகொண்டு எழுந்தாள். காசுக்கு இவர் உத்தரவாதம். அவர் அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல இருக்கிறார். இனி இந்த வருத்தமும், எதிர்பார்ப்பும் இருக்காது. இன்னும் இருவரை அழைத்துக்கொண்டு வருவார். அவளை ஒரு மனுஷியாக நடத்தப் போகிறார். அவள் வருத்தம் அவளை விட்டகலப் போகிறது. நாராயணனைப்போல ஒரு வாடிக்கையாளரை நழுவ விடக்கூடாது என்பதில் அவள் தீர்மானமாக இருந்தாள். இனி தான் அழ வேண்டியிருக்காது என்று தோன்றியது. அவள் ஒரு நொடியில் சகன்பாவ் லாவணியின் அழகு ராணியாக மாறிப் போனாள். விசிறிபோல உள்ளங்கையை மாற்றி முகத்தை மூடித் திறந்து கை விரல்களை நெட்டி முறித்தாள்.

“இத்தனை நாளா எங்க போயிருந்தீங்க?”

அவளுக்குள்ளிருந்த தாய்மை தன் மனக்குறையை அவனிடம் வாய்விட்டுச் சொல்லி ஆறுதல் தேடச் சொன்னது. ‘குழந்தைக்கு உடம்பு முடியவில்லை. தந்தி வந்திருக்கு. கையில் தம்பிடி காசு கிடையாது.’ இதுதான் அவள் சொல்ல நினைத்தது. ஆனால் உடனே விழித்துக் கொண்டாள். பச்சாதாபத்தை ஏற்படுத்தும் அழுகையை அடக்கிக் கொண்டாள். கையில் சிக்கிய வாடிக்கையாளரை அந்த அழுகை கெடுத்துவிடும். அப்புறம் அவளால் தனது குழந்தையைப் பார்க்கவே முடியாமல் போய்விடும். தனது சாகசங்களைக் கை மேற்கொள்ளத் தொடங்கினாள். எழுந்தாள். முகம் சிவந்தாள். நாணி நின்றாள். வெட்கத்தில் சிரித்தபடி “தொட்டேன்னா பாரு...” என்றாள். இது ஒருவகை சாகச மொழி. இதைக் கேட்கும் கிராக்கியின் சிந்தை தடுமாறிவிடும். அதன்பிறகு அவன் பேரம் எதுவும் பேசாமல் கேட்கும் ரேட்டைக் கொடுத்து அவளைக் கூட்டிக்கொண்டு போவான். இது அவளுக்குத் தெரியும். அதனால்தான் அவள் அப்படிப் பசப்பினாள். ஒரு கூரிய கத்தி அவளது மார்பில் பாய்ந்தது.

“ஓ... நிஜமாவா?” என்று அவன் முனகினான்.

“அஞ்சு ரூபாய்” என்றாள் அவன் தனது நிதானத்தை இழந்து நின்ற நிலையில்.

“அஞ்சா?”

அவள் சாகசம் பண்ணி மேலும் இரண்டு மூன்று கிராக்கிகளிடம் தன் உடலை ஐந்து ரூபாய்க்கு விலை பேசி இரவோடு இரவாகத் தனது சொந்த கிராமத்திற்கு இரயில் ஏறிப் போகப் போகிறாள். அவனை மேலும் உசுப்பேற்றும் விதமாகச் செல்லம் கொஞ்சியபடி அவன் சட்டைப் பையிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை உருவி கைகளில் பிடித்து நின்றாள்.

முகத்தில் வெட்கமும், சிவப்பும் மாறாமல், “நீதான் இன்னிக்கு முதல் கிராக்கி” என்றாள் போதை ஏற்றும் குரலில்.

அவனை மார்புடன் தழுவி தன்னை முற்றிலும் இழப்பதற்கு ஏதுவாக அவன் மேல் சரிந்து நின்றாள். அவன் அவளைத் தனது நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு சரியும் நிலையில் இருந்த அவளை நிலை நிறுத்தினான்.

“நிஜமா அஞ்சு ரூபாயா?” என்றவன் அவள் கேட்ட தொகையைக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. தனது உடல் மொழியால் அவனைப் பல்வேறு விதமாக வசீகரிக்க அவள் முயன்றாள். பயன் எதுவுமில்லை. அவளுக்கு வருத்தம்தான். இருந்தாலும் ஓர் ஆடவனை மயக்கும் கலையில் தனது தொழில் திறன் இன்னும் குறையாமல் இருந்ததில் அவளுக்குப் பெருமையாக இருந்தது. அவளது அங்க சேஷ்டைகளை இன்னும் சிலர் நோட்டமிட்டனர். அவளுக்குத் தெரியும் இன்னும் ஓரிரு கிராக்கிகள் அவளை அடைய வருவார்கள். நேரம் கடந்து கொண்டிருந்தது. ஆனால் ஒருவரும் வரவில்லை. பசி வளர்ந்தது. கவலையும் உடன் வளர்ந்தது. அவள் நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். அழ நினைத்தாள். ஆத்திரப்பட நினைத்தாள். அவளுடைய நல்ல தன்மை கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டிருந்தது. பூங்காவை விட்டு வெளியில் வந்தாள். ஆனால் மீண்டும் உள்ளே போனாள். புயலில் சிக்கித் தவிக்கும் அகல்விளக்கின் சுடரைப்போல அவள் மனமும் அலைக்கழிந்தது. தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொள்ளும் முகமாக அவள் மீண்டும் நாராயண ஷெட்டியைத் தேடிச் சென்றாள். அவளுக்கு இப்போது உள்ள கால அவகாசம் மிகக் குறைவானது. எந்த விலைக்கு வேண்டுமானாலும் தன்னை விற்க முடிவு செய்தாள். அப்போதுதான் நடு இரவிற்குள் அவள் சுதந்திரமாக இருக்க முடியும். மீண்டும் அந்தப் பூங்காவிற்குள் நுழைந்து நாராயண ஷெட்டியை மோகவலையில் வீழ்த்துவதற்குச் சென்றாள். தனது நிர்வாணத்தைக் கடை விரிக்கச் சென்றாள்.

பூங்காவில் எல்லா இடங்களிலும் தேடியும் அவனைக் காணவில்லை. வேறு யாரும் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இரண்டு பயில்வான்கள் அவளை நோக்கி வருவதைக் கவனித்தாள். அவர்களைப் பார்த்துக் கண்ணடித்தாள். அவர்களை நோக்கிச் செல்வதுபோல சென்று பிறகு

திரும்பிப் பார்த்தாள். புடைவைத் தலைப்பை இழுத்து முகத்தில் உள்ள வியர்வையை விசிறிவிட்டுத் துடைத்துக் கொண்டாள். ஆனால் அவளுடைய செய்கையின் நிஜமான அர்த்தம் தனது இடுப்பையும், பிட்டத்தையும் அவர்களுக்குக் காட்டுவதற்குதான். அந்த இருவரும், "ங்கோத்தா பாருடா! அந்த வயசான அம்மா கண்ணடிக்குது..." இருவரும் காறி உமிழ்ந்துவிட்டு சிரித்தபடி சென்றனர்.

அவமானத்தில் ஆத்திரமடைந்து, வருத்தமுற்று, முயற்சிகளின் தோல்வியில் ஓய்ந்து போய், பசியினால் வாடி, வெறித்தனத்துடன் கைகளில் கண்ணாடித் தம்ளருடன் நின்று கொண்டிருந்த அந்த ஆண்மகனை தனது தலையைத் திருப்பிப் பார்த்தாள். அவன் அவளிடம் ரேட் பேசினான்.

"அஞ்சு ரூபாய்" என்றாள். அவள் உடலில் சக்தி இல்லை. குரலும் மெலிதாகத் தேய்ந்து ஒலித்தது. குரலில் நடுக்கமிருந்தது. தனது களைப்பின் காரணம் கோழைத்தனம் என்பது புரிந்தது. அவளது அனுபவமின்மையின் காரணம்.

"இரண்டு ரூபாய்" அவளது போதிய அனுபவமின்மையையும், சீரில்லாத உடையையும் கணக்கில் கொண்டு பேரம் பேசத் தொடங்கினான். கிரிஜா இல்லை என்று தலையசைத்தாள்.

"வாம்மா..." என்றான் அவன் பொறுமையை இழந்தவனாக. பொறுமையில்லாதவன்போல காட்டிக் கொள்வதால் அந்த ஏரியா பெண்களைப் படிய வைக்கலாம் என்பதை அறிந்து வைத்திருந்தான். அவனுடைய அவசரத்தைக் கண்ட கிரிஜா அவன் வழியில் வீழ்ந்து விட்டதைப் புரிந்துகொண்டு தனது உடல் மொழியால் அவனை வசீகரிக்க முயன்றாள்.

"எத்தனை வருஷமா நீ இந்த தொழில்ல இருக்க?" என்று அவன் கேட்டபோது முற்றிலும் கிளர்ச்சியடைந்திருப்பது அவளுக்குத் தெரிந்தது.

அவன் எதற்காக அப்படிக் கேட்கிறான் என்று அவளுக்குத் தெரியும் என்றாலும் பொய் சொன்னாள். "ரெண்டு மாசமா."

"அதுக்கு முன்னால என்ன பண்ணிக்கிட்டு இருந்த?" அவனுக்குப் பேச்சை

நீட்டிப்பதில் விருப்பமில்லை. அவளுடைய நோக்கம் அவனை மயக்கி அதிகமாகப் பணம் பறிப்பது ஒன்றுதான். எனவே மேலும் ஒரு பொய் சொன்னாள். "நான் ஒரு நடனக்காரியாக இருந்தேன்."

இதனைக் கூறும்போது எந்த மாதிரி உடல் அசைவுகளுடன் சொன்னால் அவன் வீழ்வானோ அப்படி ஓர் அசைவுடன் சொன்னாள். அவன் வாயிலிருந்து வந்த ஒரே சொல் 'வா' என்பதுதான்.

"முதலில் பணத்தை எடு. பம்பாயில் எல்லாம் ஜனங்கள்." இப்போது அவள் ஓர் ஒன்றுமறியாத அப்பாவிப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டாள். அவளது மனதிற்குள் இருந்த தாய்மை அவளது தலையை ஒரு பசுவைப்போல நக்கிக் கொடுத்தது.

"நான் ஓடிப் போயிட மாட்டேன்."

"நீ ஓடிப்போனால் உன்னைத் துரத்திப் பிடிக்கும் தெம்பு என்னிடம் இல்லை." தனது சேலைத் தலைப்பைக் கண்கள் அருகே கொண்டுசென்று எந்தநேரமும் தடைகளை மீறி பொங்குவதற்குத் தயாராக இருந்த கண்ணீரைத் தடுக்க முயன்றாள். புடைவையை விலக்கிவிட்டுக் கொண்டாள். அவள் முகம் வேதனையுடன் காணப்பட்டது. அவள் சொல்லிற்குக் கட்டுப்பட்டு, மாறிய அவளது முக பாவங்களைக் கண்டதும் அவன் விரைந்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டை அவள் கைகளில் திணித்தான். ஃபோரஸ் சாலைக்குச் ( ஃபோரஸ் வீதி மும்பையில் உள்ள சிவப்பு விளக்குப் பகுதி - மொழிபெயர்ப்பாளர்) செல்வதற்கு ஒரு டிராம் வண்டியில் ஏறினார்கள்.

கிரிஜா அவனிடம் மேலும் பணம் பறிக்கும் முகமாக ஒரு மரியாதைக்குரிய பெண்ணைப்போல நடந்து கொண்டாள். வழியில் செல்லும்போது மற்ற கிராக்கிகளை வசீகரிக்கச் செய்யும் அங்க அசைவுகள் எதையும் செய்யாமல் சென்றாள். வேறு ஒருவரையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தனது சேலை மார்பிலிருந்து நழுவாமல் பார்த்துக் கொண்டாள். சேலை நுனியால் முகத்திற்கு முக்காடு போட்டுக் கொண்டாள். அவள் விழிகளில் ஒன்றுமறியாத பெண்ணின் பாவங்கள் அசைந்து கொண்டிருந்தன. அவள் நிஜமாகவே ஒரு மரியாதைக்குரிய பெண்ணாக மாறிப் போயிருந்தாள்.

அவனுடன் ஒட்டி நடந்தாள். தனது மகனைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற நினைப்பு கூர் வாளினைப்போல அவள் மனத்தைக் காயப்படுத்திக்கொண்டே இருந்தது. எவ்வளவு முயன்றும் அந்தக் கூர்மையை மொன்னைப்படுத்தவே முடியவில்லை.

இவளைப் பார்த்தால் மேலும் பல வாடிக்கையாளர்களுடன் படுப்பவள்போல தெரியவில்லை. இவளது நடவடிக்கையும் நேர்மையாகதான் இருக்கிறது. நல்லது. இப்படிப்பட்டவளிடமிருந்து எதையெல்லாம் பெற வேண்டுமோ அவற்றை எல்லாம் பறித்துக்கொண்டு ஏமாற்றுவது சுலபம். அவன் அவளை ஏமாற்றத் தீர்மானித்தான்.

ஃபோரஸ் சாலையின் இறுதியில் ஓர் அறைக்குள் நுழைந்தனர். அவள் ஒரு வாடிய மலரினைப்போல படுக்கையில் கிடந்தாள். அவன் அறைக்கதவை மூடிவிட்டு அவளைப் பார்த்து, “எழுந்திரு” என்றான்.

அவளுடைய பாவனையில் தொழிலுக்குப் புதிதாக வந்த ஒருத்தி கிராக்கி கட்டளையிட்டதும் உடனே எழுந்துவிடக் கூடாது. ஆனால் உண்மையைச் சொல்வது என்றால் படுக்கையிலிருந்து எழுந்திருப்பதற்கு அவள் உடலில் சக்தி இல்லை.

“எழுந்திரு” அவன் அவளை அவசரப்படுத்தினான். அவள் மறுத்து தலையசைத்தாள். அவன் அவளை வற்புறுத்திக்கொண்டே இருந்தான். அவள் தனது மறுப்பைத் தொடர்ந்தவண்ணம் இருந்தாள். இத்தனை பிடிவாதமும், நாணமும் கொண்ட அவளை அவனுக்குப் பிடித்திருந்தது. அவள் கைகளில் இரண்டு ரூபாயை வைத்து அழுத்திவிட்டு அவளை அவளுடைய கக்கத்தில் தனது கரங்களை நுழைத்துத் தூக்கி நிறுத்தினான். வேக வேகமாக வற்புறுத்தி, அவள் மறுப்பைப் புறந்தள்ளிவிட்டு, அவள் கையில் பணத்தைத் திணித்துவிட்டு அவள் ஆடைகளை ஒவ்வொன்றாகக் களையத் தொடங்கினான். அவள் உடலில் ஒட்டுத் துணி ஏதுமின்றிக் கைகளில் பணம் திணிக்கப்பட்ட நிலையில் நின்றாள். அதன் பிறகு தான் என்ன என்னவற்றிற்கு ஆசைப்பட்டானோ அவற்றை நிறைவேற்றிக்கொள்ளத் தொடங்கினான். ஒவ்வொரு செயலுக்கும் அவன் அவளுக்குக் காசு கொடுத்துக் கொண்டிருந்தான்.

மலாங்கில் இருந்த பாபாவின் மகிமையை அவள் உணரத் தொடங்கினாள். அவள் அந்தக் காசை பயபக்தியுடன் பெற்றுக் கொண்டாள். தனது உடலை ஒரு கல்லாக பாவித்துக்கொண்டு அதன் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களைத் தாங்கிக் கொண்டாள். தனது கிராமத்திற்குச் சென்று திரும்புவதற்குக் கையில் காசு சேர்ந்துவிட்டது. திரும்பி வந்து மருந்திற்கும், சாராயத்திற்கும்கூட பணம் சேர்ந்துவிட்டது. அவள் தனது உடலை அவனுடைய வக்கிரமான பாலியல் இச்சைகளுக்கு இரையாக்கினாள்.

அவளது சக்தி முழுவதும் வடிந்துவிட்டது. தனது சுய நினைவை இழந்தாள். பணத்தை இறுக்கி வைத்திருந்த மணிக்கட்டு தளர்ந்தது. உடலில் நெருப்பு பற்றிக்கொண்டதைப்போல அவள் திடுக்கிட்டு விழித்தாள். கண்களில் இருந்த மயக்கம் விலகிவிட்டது. தனது கரங்களை உயர்த்தி மணிக்கட்டை நோட்டமிட்டாள். அது காலியாக இருந்தது. படுக்கையில் இருந்தபடி தனது கரங்களால் படுக்கையைத் துழாவினாள். அவள் கைகளில் எதுவும் தட்டுப்படவில்லை. அவள் பார்வை வாசல் வரை சென்றது. அவன் தனது உடைகளை அணிந்து கொண்டிருந்தான். அவனுடைய நரித்தனம் விளங்கியது.

அவளுக்குப் பல்வேறு வகையான திகில் நினைப்புகள் எழுந்தன. அவளது பொறுமை வடியத் தொடங்கியது. இப்போது அது சீற்றமாக மாறியது. அந்தச் சீற்றம் அவள் உடலில் மின்னலெனக் கிளம்பியது. அந்த மின்னல் அவள் தசைகளுக்கு சக்தியை அளித்தது. அரவத்தைப்போல ஓர் எஃகின் தன்மை அவள் கண்களில் ஒளிவிட்டது. ஆத்திரத்தில் முகம் சிவந்தது. அவள் மேல் உதடு நாசியுடன் சேர்ந்து ஒரு நேர்கோடாகத் தெரிந்தது. எப்படியோ உடலில் சேலையைச் சுற்றிக்கொண்டு எழுந்தவள் ஒரு வெடிகுண்டைப்போல வெடித்துச் சிதறினாள். “ங்கொம்மாள அவுசாரிப் பயலே, எங்க போகலாம்னு நினைக்கிற தேவிடியாப் பயலே… முதலில் என் பணத்தைக் கொடு.” அவளுடைய முற்றிலும் மாறுபட்ட தோற்றம் அவனை ஒருகணம் திகைப்படையச் செய்தது. அதன்பிறகு நிலைக்குத் திரும்பியவன் கிரிஜா அருகில் வரும் வரையில் காத்திருந்தான். அவள் அவனைக் கைகளால் ஓங்கிக் குத்தியதும் அவன் அவள் குரல்வளையைப்

பிடித்துக் கீழே தள்ளினான். அவள் கழுத்தைப் பிடித்து ஒரு பூனைக்குட்டியைப்போல தூக்கிக் கீழே போட்டான்.

தாய்மையின் ஆவேசத்தால் தனது கட்டுப்பாட்டினை இழந்து, வேதனை நெருப்பில் வீழ்ந்து, தூக்கி வீசப்பட்டாள். அந்த இடத்திலிருந்து எழுந்திருக்கும் திராணி இன்றிக் கிடந்தாள். உடலைப் போர்த்திய சேலையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்த கரங்கள் இறுகின. தியாகத் தீயில் கொழுந்துவிட்டு எரியும் அக்னியைப்போல கனன்று எழும்பிய நாக்கு சோர்வில் பற்களின் சிறையில் முடங்கிக் கிடந்தது.

மற்றும் ஒன்று.

அந்த உணவு விடுதியின் முதலாளி அவளிடம் ஒரு பொய்யைச் சொல்லியிருந்தார். அவள் மகன் நோய்வாய்ப்பட்டுக் கிடப்பதாகத் தந்தி வாசகம் சொல்லியிருக்கவில்லை. அவன் இறந்துவிட்டான்.

ஆம், அந்தத் தாயின் மகன் இறந்துவிட்டான்.

(மராத்தி மொழியிலிருந்து ஆங்கிலத்தில் - சாந்தா கோகலே)

# 3. கடைசி வாடிக்கையாளன்

## நிரஞ்சனா

அந்தக் குறுக்குவெட்டுப் பகுதியைத் தாண்டிச் செல்வதற்கு ஒருவருக்கும் விருப்பமில்லை. முடிவேயில்லாத கட்டடங்களின் விரிவும் திறந்த வெளியிலிருந்து வீசிய குளிர்காற்றும் ஒரு கெட்ட நாற்றத்தைக் கொண்டுவந்தது. கூடி நின்று வம்பு பேசிக் கொண்டிருந்தாலும் பேசியது புரியவில்லை.

சூரியன் எழ எழ வானிலை வெப்பமடையத் தொடங்கியது. அந்தக் குறுக்குவெட்டுப் பகுதியைக் கடந்து செல்வதைத் தவிர வேறுவழியில்லாதவர்கள் வேக வேகமாக அந்த இடத்தைக் கடந்து சென்றனர். லேசாகத் தங்கள் இடது பக்கம் திரும்பிப் பார்த்தவர்கள் அவர்கள் கண்ட காட்சியின் கோரத்தால் தலையைக் கூடத் தூக்காமல் விரைந்தனர். அனைவரும் மும்முரமாக இருந்தனர். ஒருவருக்கும் எதற்கும் நேரமில்லை. இதற்குள் செய்தி நகரசபைக்குப் போனது.

•

நள்ளிரவில் கண் விழித்துப் பார்த்தபோது இதுவரையில் கனியின் அருகில் உறங்கிய அவளது கூட்டாளியைக் காணவில்லை. பதினாறு வயதே அந்தப் பெண், இந்தப் பையனை நம்பி தமிழ்நாட்டின் ஏதோ ஒரு பகுதியிலிருந்து கர்நாடகாவின் தலைநகருக்கு ஓடி வந்தவள். அவன் ஒரு குப்பைப் பொறுக்கி. அவனது கரம் இருக்கும் இடத்தில் மரக்கட்டை ஒன்றுதான் இருந்தது. இந்த மரக் கையுடன்தான் சென்ற இரவுகளில் அவன் அவளைத் தழுவியிருக்கிறான். நெஞ்சில் ஒருவித

நடுக்கத்துடன்தான் அவள் அவனை இதுகாறும் பார்த்திருக்கிறாள். அவன் மரக் கரத்தை எண்ணிப் பார்த்தாள். மரமா அது? இரண்டாள் பலம் பொருந்திய கரம்.

அன்றைய நாளின் இரவில்தான் இருவரும் ஓடிப்போனார்கள்.

அவளுக்கும் ஒரு வீடு இருந்தது. வீடு ஒரு சின்னக் குடிசை. துண்டு நிலம் ஒன்றைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அவளுடைய பெற்றோர் விவசாயம் செய்து பிழைத்து வந்தார்கள். அந்த வருடம்தான் அவர்கள் அனைத்தையும் இழந்து நின்றனர். நிலத்துச் சொந்தக்காரர், ஒரு தேசபக்தர், குத்தகை தொகையை அதிகப்படுத்தி அதற்கு ஒப்புக்கொண்டால் விவசாயம் செய்யலாம், இல்லையெனில் நிலத்தை அதிகக் குத்தகை பணம் கொடுக்க முன் வருபவர்களுக்குக் கொடுக்கப் போவதாகச் சொல்லி விட்டார். கனியின் பெற்றோர் தங்களுக்குச் சோறு போட்ட நிலத்தை இழந்தனர். எஞ்சியிருந்த சட்டி பானைகளை எடுத்துக்கொண்டு புலம் பெயர்ந்தனர். மூத்தவன் கூலி வேலை செய்ய மதராசுக்குக் கிளம்பினான். இளைய மகன் பெற்றோருடன் சண்டை போட்டுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான். இந்த ஊமைப்பெண்ணை உடன் அழைத்துக்கொண்டு அவர்கள் ஒவ்வொரு நகரமாக பிழைப்பு தேடிச் சென்றனர்.

நகரத்தில் அவர்களுக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு இடத்திலும் வேலை கேட்டுக் கெஞ்சி ஒரு வேளை சோற்றுக்குப் பிச்சை எடுக்க உத்தேசித்தனர்.

அந்த ஊமைச் சிறுமிக்குத் தனது பெற்றோரை விட்டுப் பிரிய விருப்பமில்லை. மரக் கட்டையைக் கரமாகக்கொண்ட அந்தப் பிச்சைக்காரனை நம்பி ஓடி வந்தாள். இரவு நேரங்களில் ஒரு வீட்டின் நிழல் மறைவில் அவள் மேல் அவன் விழுந்து கிடந்தாலும் அவன் மட்டுமே அவளுடைய ஒரே ஆதாரம். அந்தத் தேசலான ஆதாரமும் போன நிமிடத்திலிருந்து கை நழுவிப் போய்விட்டது.

அவர்கள் வீட்டை விட்டு ஓடிவந்து இன்றோடு பத்துநாட்கள் ஆயிற்று. இன்று பதினோராம் நாள். தான் தனித்து விடப்பட்டிருக்கிறோம். முடிவே

இல்லாத பெருங்குழியில் பற்றிக்கொள்ள ஒரு பிடி புல் கூட கிடைக்காமல், உதவிக்குத் தான் அலறுவதைப்போல அவளுக்குத் தோன்றியது.

அன்று முழுவதும் அழுத வண்ணம் இருந்தாள். வயிற்றைப் பிசைந்து கொண்டாள். தலையை ஒரு குட்டிச் சுவரில் முட்டிக்கொண்டு அழுதாள். இலக்கில்லாமல் நடந்தாள். பயனில்லை. உடன் ஓடி வந்தவனைக் காணவில்லை. இந்த நேரம் அவன் ஒரு இரயிலைப் பிடித்துக் கள்ளத்தனமாக இன்னொரு ஊருக்கு ஓடிப் போயிருப்பான்.

இரயில் நிலையத்தை ஒட்டியிருந்த ஏரியை நோக்கி கனி நடந்தாள். கால்களை நீரில் நனைத்தபடி ஏரிக் கரையில் அமர்ந்தாள். தனது சோளியிலிருந்து ஒரு சீப்பை எடுத்து நீரில் நனைத்துத் தலையை சீவிக் கொண்டாள். நீரை வாரிக் குடித்துவிட்டு அவள் ஏரிக்கரையின் மீது நடக்கத் தொடங்கினாள்.

மெலிந்த தேகம் அவளுக்கு. இருந்தாலும் அவளை யாரும் பார்க்க நன்றாக இருப்பதாகச் சொன்னதில்லை. ஆனால் அவள் பருவத்திற்கு ஏற்ற திரட்சியுடன்தான் காணப்பட்டாள். சதையை மேயும் மிருகங்களுக்கு அவள் நல்ல விருந்து.

பின்னால் யாரோ வருவது போலிருக்கவே அவள் யாரென்று பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள். எவனோ ஒருவன் வாயில் சிகரெட் கங்குடன் அவளைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தான். அப்போதுதான் வீதி விளக்குகள் எரியத் தொடங்கின. அந்த விளக்குகளை அவள் வியப்புடன் பார்த்தாள். ஒரு புதிய உலகம் அவள் கண் முன் விரிந்தது. ஒரு சைக்கிள்காரன் அவளை வேகமாகக் கடந்து சென்றான். தூரத்தில் போலீஸ்காரனின் விசில் காற்றைக் கிழித்தது. அவள் மீண்டும் திரும்பிப் பார்த்தாள். அவன் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

வழியில் இருந்த தேவதாரு மர நிழலில் ஒதுங்கினாள். அவனும் அவள் அருகில் வந்து ஒரு கொறியுணவுப் பொட்டலத்தை வெளியில் எடுத்து நீட்டினான். அவள் தொண்டையில் சில வினோத ஒலிகள் எழுந்தன. அவள் அந்தப் பொட்டலத்தை எடுத்து உணவுப் பொருளை விழுங்கத் தொடங்கினாள். அவன் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

அவன் அவளிடம், “உன்னை காலையிலிருந்து கண்காணிச்சுக்கிட்டுதான் இருக்கேன்” என்றான். சடசடவென்று ஓர் ஒலி அவள் செவிகளில் கேட்டது. ஆனால் அந்த ஒலிக்கு எந்த அர்த்தமும் இல்லை.

அவன் உதட்டசைவிலிருந்து அவன் ஏதோ பேசுகிறான் என்று புரிந்தாலும் அவள் செவிகளில் இருந்த செவிப்பறைக்கு எதுவும் புரியவில்லை.

அவள் தனது ஊமையின் பரிபாஷையில் பதில் அளித்தாள். அவளது இயலாமை கண்ணீராக வழிந்தது. அவள் மேல் இரக்கம் கொண்ட அவன் அவளைத் தன்னைத் தொடர்ந்து வருமாறு சைகையில் சொன்னான். அவன் பின்னே ஒரு நன்றியுள்ள நாயைப்போல தலையைக் கவிழ்ந்தபடி சென்றாள்.

இவ்வாறு இனம் தெரியாத ஓர் அடைக்கலம் அடுத்த நாளுக்கு அவளை இட்டுச் சென்றது.

•

இதேபோல நான்கு நாட்கள் நகர்ந்தன. அவள் தன் கூந்தலைப் பின்னிவிட்டுக் கொண்டாள். தன்னை அழகுபடுத்திக் கொண்டாள். சில வாசகங்களாலும் உடல் மொழியாலும் “நான் ரெண்டு மூணு கிராக்கிகளைப் பிடிச்சுகிட்டு வரேன். நீ வாயே திறக்கக் கூடாது. வர்றவங்களுக்கு நீ ஊமை என்பது தெரியாமப் பார்த்துக்க. சரியா?” என்று அவன் அவளிடம் சொல்லிவிட்டுச் சென்றான்.

அவள் தலையசைத்தாள். அவன் அவளை ஊமை என்று கூறியபோது அவளுக்குப் பெரும் சீற்றம் எழுந்தது. ஆனால் அவளுடைய கோபம் அவளுடைய அர்த்தமற்ற ஊளையில் கரைந்து போனது.

அவன் பார்ப்பதற்குக் கொஞ்சம் கண்ணியமான ஒருவனைத் தன்னுடன் அழைத்து வந்தான். அவன் எதிரில் நின்று இளித்துக் கொண்டிருந்த அவனுடைய பார்வை கீழ் நோக்கி இருந்தது. எலும்புத் துண்டைப் பார்க்கும் நாயைப்போல அந்தப் புதிய மனிதனின் மணிபர்ஸின் மீது அவனது பார்வையிருந்தது. அவன் அழைத்து வந்திருந்த புதியவன் அவளிடம் முற்றிலும் ஒரு மிருகத்தைப் போல நடந்து கொண்டான்.

அவனுடைய வன்மையான செய்கைகள் கனியைக் கடுமையாகத் தாக்கின. தாங்க முடியாத வலியினால் அவள் பெரிதாக ஊளையிட்டு ஊமைக் குரல் எழுப்பி அவனைத் தனது இரு கரங்களினாலும் தரையில் தள்ளிவிட்டாள். இது வாய்த் தகறாராக மாறியது. அவளுடைய எஜமானன் அவளை ஒரு நாயைப்போல அடித்தான். அவள் அறையின் மூலையில் முடங்கிக் கிடந்தாள். வந்தவன் கோபப்பட்டுக்கொண்டு வெளியேறினான்.

நடு இரவில் அவளைத் தரையிலிருந்து எழுப்பி ஒரு பாயில் கிடத்தினான். "அந்த மிருகம் தாக்கினானா?" என்றான். அவள் பதில் கூறவில்லை. அவள் விழிகள் உணர்ச்சிப் பெருக்கில் பாவங்களைக் கொட்டின. அது அந்தக் கெட்ட புத்திக்காரனின் கண்களுக்குப் புலப்படவில்லை.

அன்றிலிருந்து அவள் கொஞ்சம் பாங்காக நடந்துகொள்ள ஆரம்பித்தாள்.

அவன் மீது அவளுக்குத் துளிகூட காதல் இல்லை. அந்த மரக் கையனிடம் ஏற்பட்ட காதலுக்குப் பின் அவளுக்கு வேறு ஒருவர் மீதும் காதல் ஏற்படவில்லை.

கனிக்குப் பணத்தின் அர்த்தம் புரியவில்லை. தனக்கு இவ்வளவு வருமானம் என்பதுகூட அறியாதவளாக இருந்தாள். இரண்டு சேலைகள், ஒரு இரவிக்கை, ஒரு போர்வை, கிழிந்த கம்பளியில் தயாரிக்கப்பட்ட பெண்கள் அணியும் மேல் கோட், கூந்தலில் சூடிக்கொள்ளச் சில மலர்கள், அந்தக் கூந்தலைப் பின்னிக்கொள்ள தலைக்குக் கொஞ்சம் வாசனை எண்ணெய், வயிறார ஒருவேளைச் சாப்பாடு இவ்வளவுதான் அவளது வாழ்க்கை. இப்படியே போய்க் கொண்டிருந்தது.

கடவுளுக்குதான் நன்றி சொல்லவேண்டும், நல்லவேளை அவள் நடுவில் கருத்தரிக்கவில்லை.

சில நாட்கள் அவளுடைய துக்கம் ஆறாகப் பெருகும். இருந்த இடத்திலேயே அந்த மாதிரி நேரங்களில் அலைக்கழிவாள். தன்னுடைய கிராமத்தை நினைத்துக் கொள்வாள். அவள் பிறந்த குடிசை, அவளுடைய தாய்மொழி, அவளுடைய முதற் காதல்; கைக்குப் பதில் கட்டையை உடைய காதலன். உக்கிரமாவாள். இரண்டு இரவுகள் அவளுடைய ஓலம்

நிற்காமல் இருக்கும். அந்த நேரங்களில் எந்த ஒரு வாடிக்கையாளனும் அவள் பக்கம் நெருங்க முடியாது.

ஒருநாள் விடிகாலையில் கொஞ்சம் உணவுப்பொருட்கள், கொஞ்சம் துணிமணி இவைகளை ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு அந்த இடத்தை விட்டு ஓடிப் போனாள். அந்த இடத்தை விட்டு நகரத்தின் மற்றொரு பகுதிக்குச் சென்றாள்.

•

நகரின் எல்லையில் இருந்த ஒரு பகுதியில் அவள் உலாவத் தொடங்கினாள். நிலத்தில் இரண்டு காளைகளைக் கொண்டு உழவர்கள் மும்முரமாக உழுது கொண்டிருந்ததை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். தனது கூந்தலை வாரிப் பின்னிக்கொள்ள வேண்டும் என்பதுகூட மறந்து போனது. அந்த ஒரு பைசா கண்ணாடியில் தனது முகத்தை அழகு பார்த்துக்கொள்வாளே அது கூட மறந்து போனது.

சமீபத்தில் பெய்த மழையால் அவள் காலடி நிலம் முழுவதும் பசுமையான புற்களால் பச்சைப் பசேல் என்றிருந்தது. பயிர் நிலத்திலிருந்து விலகி புல்தரையில் கனி அமர்ந்து கொண்டாள்.

அவளது மனதில் சிறுமியாக இருந்த காலத்திலிருந்து பல நூறு ஞாபகங்கள் எழுந்தன. அவள் கண்கள் இருண்டன. மெல்ல மெல்ல மயக்கத்தில் ஆழ்ந்து அவள் அந்த வெறுந்தரையில் சரிந்தாள்.

சாயங்காலத்தில் யாரோ தன்னைத் தொட்டு எழுப்புவதை அறிந்து கண் விழித்தவள் அங்கிருந்த குடியானவப் பெண்கள் அவளை எழுப்பிக் கொண்டிருந்ததைப் பார்த்தாள். இருட்டிய பிறகு அந்தக் கிராமம் அதிகம் பயமுறுத்துவதாக இருந்தது. மீண்டும் நகரத்தை நோக்கிச் சென்றாள். நகரத்தின் விளிம்பில் ஒரு பள்ளிக்கூடம் இருளில் மூழ்கிக் கிடந்தது. அங்குக் கைப்பிடிச் சுவரின் அருகில் ஒதுங்க இடம் கிடைக்கவே அவள் படுத்து உறங்க ஆரம்பித்தாள்.

•

காலையில் நன்கு விடிந்ததும் அவள் எழுந்து அந்த இடத்தை விட்டு

அகன்றாள். தனது கோரமான முடியை அழுத்தி வாரி பின்னல் இட்டுக்கொண்டு தன் கையோடு கொண்டுவந்திருந்த அலங்காரப் பொருள்களால் அழகுபடுத்திக் கொண்டாள்.

சிறிது நேரம் அங்கே உலாவியதும் அவளுக்கு அந்த இடம் கொஞ்சம் பழக்கமானது. ஒரு பெரிய புல்வெளி. அதன் மீது ஒரு குறுக்குவெட்டுப் பகுதி, நடுவில் ஒரு நீரூற்று, தூரத்தில் ஒரு மனிதனின் சிலையும் அருகில் உயர்ந்த கட்டடம் ஒன்றும் இருந்தன.

நிலக்கடலையைக் கூவி விற்றுக்கொண்டு சென்றவனை நிறுத்திக் கொஞ்சம் கடலை வாங்கினாள். பணத்தின் அருமை தெரிந்தது. அவள் வாங்கிய கடலை அவள் வயிற்றை நிரப்பும் வண்ணம் இல்லை.

இரவு கவிந்ததும் மீண்டும் அந்தக் குறுக்குவெட்டுப் பகுதிக்கு வந்தாள். ஒரு மூலையில் அமர்ந்தாள். வேகமாக எட்டி நடை போட்ட ஓரிருவர் கடக்கும்போது அவள் மீது பார்வையை வீசிச் சென்றனர். வேறு சிலர் அவளைக் கடந்து சற்று தூரம் போன பின்பு திரும்பி நின்று பார்த்துவிட்டுச் சென்றனர்.

ஓரளவு மதிப்பிற்குரிய ஒரு மனிதன் தனது மூக்குக் கண்ணாடியைத் திருத்தியபடி அவள் அருகில் வந்து நின்றான். கனி எழுந்து அருகில் இருந்த மரத்தின் பக்கமிருந்த சின்னப் புதரை நோக்கிச் சென்றாள். அந்த மனிதன் அவளைத் திருட்டுப் பார்வையுடன் பின்தொடர்ந்தான்.

மறுநாள் அவள் கையிலிருந்த காகிதத்தைக் கொண்டு சிறிது உணவும் பாக்கிச் சில்லறையும் பெற முடியும் என்பதைத் தெரிந்துகொண்டாள். எவ்வளவு, எப்படி என்பது போன்றவை அவளுடைய சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

அதன் பிறகு அதுவே அவளது வாடிக்கையானது. காலை முழுவதும் உலா வருவாள். மாலையில் ஓரிரு வாடிக்கையாளர்களுடன் அந்தக் குறுக்குவெட்டுப் பகுதியில் இருந்த மறைவான பகுதிகளில் ஒதுங்கத் தொடங்கினாள். அந்தப் புல்வெளியில் இருந்த புதர் மறைவுகளில் ஒரு முறையோ இருமுறையோ செத்துச் செத்துப் பிழைத்தாள். இறப்பதும்

பிறப்பதுமான வாழ்க்கை என்றானது.

உயிருடன் மீண்டு வருவது மறுநாள் மாலையில் இறப்பதற்கு.

அவள் நாட்கள் இவ்வாறு கழியத் தொடங்கின.

தன்னிடம் வரும் மனிதர்களை அவள் என்றுமே கணக்கெடுத்தது கிடையாது. குடிகாரர்கள், முறைதவறிப் பிறந்தவர்கள், கள்ளத்தனமான ஆசைகளுக்குப் பலியான ஆத்மாக்கள், காலையில் நல்லவர்கள் என்ற போர்வையை அணியும் ஒழுக்கங் கெட்டவர்கள், இல்லறத்தையும் திருமணத்தையும் வெறுப்பவர்கள். அவள் ஊமையாக மட்டும் இல்லாதிருந்தால் ஆவலுடன் படுக்க வருபவர்களில் ஒரு சிலரின் உலகங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பாள். ஆனால் இது போன்ற விஷயங்கள் அவளுக்கு அற்பமாகப் போய்விட்டன. அவர்கள் முகங்களை ஏறிட்டுப் பார்த்து அறிந்து கொண்டால் ஒருவேளை அவள் இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டிருப்பாள். ஆனால் இருளில் எந்த முகம் தெளிவாகத் தெரிந்திருக்கிறது?

அவளுக்கு அவர்கள் புரியும் செயல்கள் எல்லாம் மனிதத்தனமானவையா இல்லை மிருகத்தனமானவையா என்பதுகூட தெரியாது. அவளுக்குக் காதல் என்றால் என்ன காமம் என்றால் என்ன என்றுகூட தெரியாது. முரட்டு மீசையுடன் இருக்கும் ஆண்களுக்கும், முடியில்லாமல் இருக்கும் வயதான மனிதர்களுக்கும் அவளுக்கு வித்தியாசம் தெரியாது. அவள் உடல் சோர்ந்து போகும்போது வலியில் ஊளையிடுவாள். அவளுடைய உடல் வேதனைகள் அவளிடமிருந்து துயரம் தோய்ந்த முனகல்களையும், ஓலங்களையும் எழுப்பும்.

தெருவில் அலைந்து கொண்டிருக்கும் ஓர் ஊமைப் பெண்ணிடம் சுகம் தேடி வரும் ஆண்களின் மனதில் உள்ள விஷயங்கள் அவள் அறிவிற்கு அப்பாற்பட்டது. எது நிகழ்ந்தாலும் அது கடிகார வேலைதான். ஒரு சுவாசிக்கும் எந்திரத்தை விட கொஞ்சம் மேலானவள் அவ்வளவுதான்.

•

மழை வலுப்பெறத் தொடங்கியது. கண்ணுக்கெட்டிய தொலைவில் ஒரு

கிராக்கியும் தென்படவில்லை. அவள் வரும்படி கரையத் தொடங்கியது. கனி மெலிந்து பலவீனமாகத் தொடங்கினாள். வலிய ஆண்கள் அருகில் செல்வதும் அவர்களை நோட்டமிட்டும் பார்த்துவிட்டாள். கன்னங்கள் இரண்டும் விழுந்து போயின; அவள் கண்களில் ஓர் இருளும் சூனியமும் கவியத் தொடங்கியது. உடலில் காய்ச்சல் ஏறத் தொடங்கியது. அதனை விரட்டுவதற்கு அவள் தன்னை அலங்கரித்துக் கொள்வாள்.

தூரத்திலிருந்து பார்க்கும்போது அவள்மேல் புரளும் கூந்தலும், அதில் அவள் சூடிக் கொண்டிருக்கும் மலர்களும் ஒரு சுமாரான தோற்றத்தைக் கொடுத்தாலும் அருகில் வந்து அவளுடைய சூனியம் நிரம்பிய கண்களைப் பார்ப்பவர்கள் மருண்டு விடுவார்கள். அவை ஆவியின் கண்களைப்போல இடுங்கிக் காணப்படும்.

சில அற்பர்கள் அவள் இரவில் உறங்கும் பள்ளிக்கூடக் கட்டடத்திற்கு வருவார்கள். காமம் மீதுறப் படுத்துக் கொண்டுவிட்டு பதிலுக்கு ஒரு பைசாகூட கொடுக்காமல் சென்று விடுவார்கள். அவள் அவர்களுடன் போராடுவாள். ஆனால் அவர்கள் அவளைப் பிடுங்கியெடுத்து வன்புணர்வில் ஈடுபடுவார்கள். அவர்களது கொடூரமான சிரிப்பும், மிருகத்தனமான ஓலங்களும் நடுக்குற வைக்கும். அவளுடைய எதிர்ப்பு இலக்கில்லாமல் போகும்போது அவள் அவர்களுடைய மிருகத்தனமான செயல்களுக்கு உடன்படுவாள்.

அவளுடைய காய்ச்சல் அதிகமானது. அவள் உள்மனது ஏரியில் குளிக்க வேண்டாம் என்று எச்சரித்தது. ரொம்ப நாட்களாகவே ஒரு வினோதமான நோய் அவள் தோலைத் தாக்கத் தொடங்கியிருந்தது அந்தச் சின்னஞ்சிறு பெண் அவதிப்பட ஆரம்பித்தாள். அவள் உடலிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

கனி தனது வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டாள். ஒரு பர்லாங் தூரத்தில் இருந்த ஒரு தாழ்ந்த பகுதிக்குச் சென்றாள். ஒரு நடுத்தர வயது பிச்சைக்காரன் வந்து மாளிகையை அங்குக் கட்டிக் கொண்டிருந்தான்.

அவன் அவளுக்கு மூன்று நாட்கள் கஞ்சி வைத்துக் கொடுத்தான்.

மேல் கூரையின் வழியாக மேலே வானத்தைப் பார்த்தபடி அவள் உறங்கிப் போனாள். நான்காவது நாளிலிருந்து காய்ச்சல் இறங்கத் தொடங்கியது.அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். அந்தப் பிச்சைக்காரன் அவளை மோகத்துடன் பார்த்தான். அவள் முகத்தில் ஒரு சிறிய உணர்ச்சி கூட வெளிப்படவில்லை. உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தன்மையை அவள் இழந்து நெடுநாட்கள் ஆயிற்று. அவன் வெளியில் சென்று பிச்சை எடுப்பதை நிறுத்திக்கொண்டு வீட்டில் அவளையே சுற்றி வந்தான். நோயில் வீழ்ந்து கிடந்த அவனது உடல் மறந்திருந்த சுகங்களை எல்லாம் மீண்டும் பெற ஆசைப்படத் தொடங்கியது.

மாலையானதும் கனி அந்தக் கம்பளி கோட்டை மேலே போர்த்திக்கொண்டு அந்தப் புல்வெளியைக் கடந்து இருள் கவிந்து கிடக்கும் அதன் மறுமுனையில் நின்று கொண்டாள். அவளுக்கு மயக்கம் வரும் போலிருந்தது. அவர்கள் ஒரு காலத்தில் உழுத நிலம், அவளுடைய அம்மா, அப்பா, மரக்கட்டைக் கையுடன் இருந்த அவளது காதலன் ஆகியோர் அவளது மனக்கண்ணில் வந்து சென்றனர். மதராஸில் கூலி வேலை செய்து பிழைக்கச் சென்ற அண்ணனும், கோபத்துடன் வீட்டை விட்டு ஓடிப்போன சின்ன அண்ணனும் அவளைப் பார்த்து வாழ்த்துவதுபோல தோன்றியது. அவள் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தாள்.

சிறிது நேரம் கூட நிற்கமுடியாமல் தரையில் சரிந்து விழுந்தாள். தூரத்தில் கடலை விற்பவனின் வண்டியில் தெரிந்த மண்ணெண்ணெய் விளக்கு சிமிட்டிக் கொண்டிருந்தது. அவளிடம் நயா பைசா கிடையாது. ஒரு கை வேர்க்கடலை வாங்கி கறுக் மொறுக் என்று கடித்துச் சாப்பிட ஆசையாக இருந்தது. ஆனால் அப்படி மென்று தின்பதற்குக் கூட அவளிடம் தெம்பு கிடையாது.

இரவு ஒரு மணியானது. பன்னிரண்டரை மணி வெகு நேரத்திற்கு முன்பு ஆனது போலிருந்தது. செயற்கை நீரூற்றின் அருகில் உலாவிக் கொண்டிருந்த மக்கள் அவரவர் வீடு நோக்கித் திரும்பி விட்டனர். கனி அவர்கள் ஒவ்வொருவரையும் மன்றாடும் விழிகளுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரே ஒரு மனிதன் மட்டும் அங்கே தன்னந்தனியாக நின்று கொண்டிருந்தான். வாட்டசாட்டமாக இருந்தான். கண்களில் ஏதோ ஒன்று சரியில்லாமல் மின்னிக் கொண்டிருந்தது. அவளைக் கையசைத்துக் கூப்பிட்டான். கனி தள்ளாடி எழுந்து அவன் பின்னே சென்று நின்றாள்.

அவனுக்கு இது புதிது போலிருக்கிறது. அவளை அருகிலிருந்த ஒரு புதரின் மறைவிற்கு அழைத்தான். கனி அவனுடன் சென்றாள். அவளிடமிருந்து ஒரு கேவல் வெளிப்பட்டது.

அது அந்த மனிதனை எரிச்சல் மூட்டியது. வாய் கொப்பளித்து விட்டு அவன் தயாராக நின்றான். அவன் அவளை அவசரப்படுத்தினான். காரியம் ஆனதும் வெறுப்புடன் சண்டை போட்டான். கனி உட்காருவதற்கு முயன்றாள். அவள் உடலில் ஒரு துளி சக்தி இல்லை.

அவளுடன் மீண்டும் சண்டையிட்டுக்கொண்டு காசு எதுவும் கொடுக்காமல் சென்றுவிட்டான். பலத்த ஊளையிட கனி தனது வாயைத் திறந்தாள். ஆனால் வாயிலிருந்து ஒலி எதுவும் வரவில்லை. நிற்பதற்கு முயற்சித்தாள். பலனில்லை.

அவன் வேக வேகமாக எட்டு வைத்துப் போய்க் கொண்டிருந்தான். ஒரு வழியாக கனி எழுந்து நின்றாள். பெற்ற பிள்ளையைத் திருடிச் செல்லும் திருடனைத் துரத்தும் தாயைப்போல அவள் அவனைத் துரத்திச் சென்றாள். தனது ஊமை மொழியில் ஊளையிட்டபடி ஓடினாள்.

அவளுக்குக் காசு கொடுக்காமல் ஓடுவதிலேயே அவன் குறியாக இருந்தான். அவள் தனது ஊமைப் பிதற்றல்கள் மூலம் அப்படி ஏமாற்றிச் செல்லவேண்டாம் என்று மன்றாடினாள். அவள் கதறியபடி தனது ஊமை பரிபாஷையில் சொல்ல நினைத்தது, ‘என்னோட ஒருவேளை சோத்தில் கை வைக்காதே’ என்பதாகும்.

அவன் அவளை அச்சத்துடன் திரும்பிப் பார்த்தான். அப்போது அருகில் ஒன்றிரண்டு பேர் இருந்தனர். அவர்கள் காதில் இது விழக் கூடாதா? அங்கிருப்பவர்களில் யாராவது அவனை நிறுத்தி என்னப்பா இது என்று கேட்கக் கூடாதா?

போய்க் கொண்டிருந்தவன் தடாலென்று நின்றான். திரும்பினான். அவளைக் கழுத்தில் கை வைத்துப் பிடித்து ஆக்ரோஷத்துடன் கீழே தள்ளி "கேடு கேட்ட நாயே" என்று கர்ஜித்தான். அவள் வயிற்றில் ஓங்கி மிதித்தான்.

அந்தக் கணமே கனி நிலை குலைந்தாள். அவள் தொண்டையில் எழும்பிய கேவல்களுக்கு ஒலி வடிவமில்லாமல் போனது. விட்டு விட்டு வந்த சுவாசமும் சிறிது நேரத்தில் அடங்கியது. அவளுடைய இறுதி மூச்சு மிகவும் வேதனையுடன் வெளிப்பட்டது.

•

அனைவரும் நில்லாமல் நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஒருவருக்கும் நின்று பார்க்க நேரமில்லை.

யாரோ யாரிடமோ நகரசபையிலிருந்து மோட்டார் வாகனத்தை வரவழைத்துப் பிணத்தை எடுத்துப் போகச் சொல்லவேண்டும் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

மேலே ஆகாயத்தில் வட்டமிட்டுச் சுழன்று கொண்டிருந்த கழுகு விர்ரென்று தாழப் பறந்து வந்தது.

அந்தக் கழுகை வெறித்துப் பார்ப்பதைப்போல கனியின் விழிகள் மேல் நோக்கித் திறந்திருந்தன. தாழப் பறந்து வந்த அந்தக் கழுகு அவள் மீது அமர்ந்தது அவளுடைய கடைசி வாடிக்கையாளனாக.

(கன்னட மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ஏ.பி.அஸ்வின் குமார்)

# 4. ஹிங் கச்சோரி

## பிபூதிபூஷன் பண்டியோபாத்யாயா

ஹரிபாபுவின் வீட்டில்தான் நாங்கள் ஒரே ஒரு அறையில் வாடகைக்குக் குடியிருந்தோம். மூங்கில், ஓடுகளால் ஆன வீடு அது. நிறைய அறைகளைக் கொண்ட பெரிய வீடு. நிறைய குடும்பங்கள் அந்தப் பெரிய வீட்டில் வசித்து வந்தன. இன்னொரு அறையில் ஒரு வளையல்காரனும் அவனுடைய மனைவியும் வசித்து வந்தனர். வளையல்காரனின் பெயர் கேஷப். நான் அவரை சித்தப்பா என்றுதான் அழைப்பேன்.

தினமும் காலையில் குழாயில் குடிதண்ணீர் வரும்போது அந்தக் குடியிருப்பில் இருக்கும் எல்லோரும் குடம், பானை, தேக்சா, வாளி இவைகளை எடுத்துக்கொண்டு குழாயடிக்கு வந்து விடுவார்கள். ஒரே அடிதடி ரகளையாக இருக்கும்.

அப்பா அம்மாவிடம், “இங்கே குடியிருக்க யோக்கியதையே இல்லை. இப்படியா பட்டிக்காட்டானுங்க மாதிரி அடிச்சுப்பானுங்க? நாம வேற எடத்துக்கு குடி போயிடுவோம்” என்று கூறிக்கொண்டே இருப்பார்.

ஆனால் நாங்கள் ஏன் வேறு வீட்டிற்கு வாடகைக்குப் போகவில்லை என்று யோசித்துப் பார்த்தால் ஒரே விடைதான் கிடைக்கும். நாங்கள் ஏழைகள். அப்பாவிடம் வேறு வீட்டிற்கு மாற்றிச் செல்ல கையில் பைசா இல்லை.

ரோடுக்கு எதிர்ப் பகுதியில் ஒரு அரிசிக் கிடங்கும், வெல்ல மண்டியும் உள்ளன. அதற்கு எதிரில் ஒரு முனிசிபல் குழாய் உள்ளது. தினமும் சண்டை கூச்சல் போட்டபடி ஒரு கூட்டம் வந்து குடிநீர் பிடித்துக்கொண்டு போகும். தினமும் பெண்கள் தண்ணீர் பிடிக்கும்போது சண்டை போடாமல்

இருந்ததே இல்லை.

நாங்களும் போன ஜூனிலிருந்து ஒரு வருஷம் அந்த வீட்டில் குடியிருந்தோம்.

போன ஜூனில்தான் நாங்கள் எங்கள் கிராமத்திலிருந்து பெட்டி படுக்கையைத் தூக்கிக்கொண்டு இந்த நகரத்திற்கு வந்தோம். கிராமத்தில் ஒரு மூங்கில் தோப்பிற்கு அருகில்தான் நானும் காளியும் குடிசை போட்டிருந்தோம். பக்கத்தில் ஒரு ஊமத்தைக் காடும் இருந்தது. காளி என்னைவிட பலசாலி. கட்டுக் கட்டாக மரக் கொப்புகளையும் கட்டைகளையும் அவன்தான் காட்டிலிருந்து கொண்டுவந்தான். நாங்கள் இருவரும் பக்காவாக நிஜமாகவே ஒரு வீடு மாதிரியே ஒன்றைக் கட்டினோம். காளிக்கு அதில் பெருமை. எங்கிருந்தோ ஒரு பறவை கூட்டைக் கொண்டுவந்து அருகில் இருந்த மரக்கிளையில் தொங்க விட்டான். இரவு மரங்கொத்தியும், மஞ்சமூக்கு ஆட்காட்டி பறவையும் ஆவணி மாத நடுவிலோ, புரட்டாசி நிலா இரவுகளிலோ அதில் வந்து முட்டையிடும் என்பான் காளி.

அவை முட்டையிட்டதா என்பதைக்கூட எங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதற்குள் நாங்கள் ஆனி மாதமே இங்கே குடி பெயர்ந்துவிட்டோம்.

அந்த மூங்கில் தோப்பின் அருகில் நாங்கள் கட்டிய குடிசையையும் காளி மரக்கிளையில் தொங்கவிட்ட பறவைக் கூட்டையும் அதில் முட்டையிடவரப் போகும் பறவைகளையும் அடிக்கடி நினைத்துக் கொள்வேன். மரங்கொத்திப் பறவை அந்தக் கூட்டில் புரட்டாசி மாத நிலா இரவில் முட்டையிட்டிருக்குமோ?

இந்தக் கல்கத்தா வீடு, இடம் கம்மியாக இருந்ததோடு நெருக்கடியாகவும் இருந்தது. நான் தினமும் தகர ஷீட்டால் மூடியிருக்கும் திண்ணையில் அமர்ந்துகொண்டு எதிரில் முனிசிபாலிடி குழாயடியில் நடக்கும் ரகளைகளை ஆவலுடன் பார்ப்பேன். அந்த மண்டியில் தினமும் காலையில் மூட்டை மூட்டையாக வெல்லம் வண்டிகளில் வந்து இறங்கும். என்னைப் போலவே ஓர் இளம் பெண் - திருமணமானவள் - ஒருத்தி

தெருமுனையில் இருந்த இரண்டடுக்கு வீட்டின் தெருவோர ஜன்னலிலிருந்து வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாள். எங்கள் சந்தின் ஆரம்பத்தில் தெரியும் மெயின் ரோடிலிருக்கும் பிஹாரி கடையிலிருந்து நான் சில சமயம் குழிப் பணியாரம் வாங்கிக்கொண்டு வருவேன். மெயின் ரோடில் எப்பொழுதும் வாகனங்கள் வருவதும் போவதுமாக இருக்கும். எங்கள் கிராமத்து வீதிகளில் நான் ஒரு குதிரை வண்டியைக்கூட பார்த்ததில்லை. மெயின் ரோடுக்குப் போனால் வண்டிகள் மேலே ஏறிவிடும் என்று பயந்து அம்மா என்னை வெளியில் அனுப்ப மாட்டாள்.

இந்தச் சந்தின் இன்னொரு முனையில் நாங்கள் குடியிருக்கும் வீட்டைப் போலவே மூங்கிலாலும், ஓலைக் கீற்றுகளாலும் செய்யப்பட்ட குடிசைகள் வரிசையாக நாலைந்து இருந்தன. அங்கு சிலநாட்கள் போயிருக்கிறேன். சுத்தமான வீடுகள். சாணி போட்டு மெழுகப்பட்டு உள்ளே சுவர்கள் எல்லாம் சுத்தமாக இருக்கும். சுவரில் கண்ணாடி, பொம்மை, ஷோ-கேஸ் எல்லாம் இருக்கும். சுவரில் படங்கள் கூட மாட்டியிருப்பார்கள். ஒவ்வொரு அறையிலும் ஒரு பெண் வசித்துக் கொண்டிருந்தாள். அவர்களைப் பெரும்பாலும் மாலை வேளைகளில்தான் போய்ப் பார்ப்பேன். எப்பொழுதாவது காலை வேளைகளிலும் போய்ப் பார்ப்பதுண்டு.

அந்த வீடுகளில் இருந்த ஒருத்திக்கு குஸூம் என்று பெயர். அவளுக்கு என்னை ரொம்பப் பிடிக்கும். எனக்கும் அவளை ரொம்பப் பிடிக்கும். பாதி நேரம் நான் குஸூம் அறையில்தான் விழுந்து கிடப்பேன். அவள் என்னோடு அரட்டை அடிப்பாள். எங்கள் கிராமத்தைப் பற்றி எல்லாம் விசாரித்துத் தெரிந்து கொள்வாள். அவளுடைய ஊர் பர்தமான்[1] என்பதாகும். ஆனால் அவள் இந்த அறையில்தான் வசித்து வந்தாள்.

“உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. தினமும் வரியா?” என்று குஸூம் என்னைக் கேட்டாள்.

“எனக்கும் உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. தினமும் வரேன்.”

“உங்க ஊர் எது?”

“அஷ்ணகிரி. ஜெசூரில் இருக்கு.”

“கல்கத்தாவுக்கு இப்பதான் வர்றியா?”

“ஆமாம்.”

குஸூம் தினமும் சாயங்காலம் ஆனதும் அழகாக உடை உடுத்திக் கொள்வாள். நெற்றியில் பளிச்சென்று குங்குமம் வைத்துக் கொள்வாள். ஏதேதோ பூக்களின் வர்ணத்தில் கன்னத்தில் பௌடர் பூசிக் கொள்வாள். கூந்தலைக் கூட அலங்காரமாகப் பண்ணிக் கொள்வாள். என்ன அழகான கூந்தல் தெரியுமா? ஆனால் அதன்பிறகு அவள் என்னை அவள் அறையில் இருக்க விட மாட்டாள்.

“கிளம்பு, என்னோட பாபு வரும் நேரம்” என்று விரட்டிவிடுவாள்.

ஒருநாள் பொறுக்கமுடியாமல் கேட்டேன். “பாபு பாபுன்னு சொல்றியே... யாரு உங்க பாபு?”

“அதெல்லாம் உனக்குத் தெரிய வேண்டாம். இப்போ நீ கிளம்பு.”

எனக்கு வருத்தமாகிவிடும். “பாபு வந்தா வரட்டுமே... அதுக்கு என்ன? பாபு என்னை என்ன செஞ்சுடப் போறாரு?” என்பேன்.

“இல்லை கிளம்பு. இங்க நீ இருக்கக் கூடாது. கண்ணுல்ல?”

“பாபுங்கறது யாரு? உங்க அண்ணனா?”

“உனக்கு புரியவைக்க முடியாது. வீட்டுக்குப் போ.”

எனக்கு அந்த பாபுவைப் பார்க்கவேண்டும் என்று ஆவலானது. குஸூம் எதற்கு என்னை விரட்டுகிறாள்?

அந்த பாபுவை நான் ஒருநாள் பார்த்துவிட்டேன். சற்று பருமனான ஆசாமி. பெரிய நீளமான முடியுடன் கையில் உணவுப் பொட்டலம்போல எதையோ வைத்துக் கொண்டிருந்தான். கடைகளில் இங்கெல்லாம் இப்படிதான் காய்ந்த வாதாம் இலையில்தான் உணவுப் பொருட்களை மடித்துக் கொடுக்கிறார்கள். எங்கள் ஊரில் இந்த மாதிரி வாதாம் இலைகள் கிடையாது. முறுக்கோ ஜிலேபியோ வாங்கினால் தாமரை

இலையில்தான் கட்டித் தருவார்கள்.

குஸும் அந்தப் பொட்டலத்தைப் பிரித்து ஒரு பெரிய கச்சோரியை எடுத்து என்னிடம் நீட்டினாள்.

“இந்தா பிடி. போற வழியில் சாப்பிடு” என்றாள்.

நான் ஆவலை அடக்கமுடியாமல் அங்கேயே கடித்துத் தின்றேன். ரொம்ப நல்லா இருந்தது. இதற்கு முன்னால் இப்படி ஒரு கச்சோரியை எங்க ஊரில் நான் தின்றதே இல்லை. ஹரி கூட கச்சோரிகளை எண்ணெயில் பொரித்துக் கொடுப்பார். ஆனால் இந்த அளவு அவை சுவையாக இருந்ததில்லை.

நான் மகிழ்ச்சியுடன், “அற்புதம். ஆமாம் இதில எப்படி இப்படி ஒரு அருமையான வாசனை வருது?” என்றேன்.

“இது சாதா கச்சோரி இல்லை. ஹீங் கச்சோரின்னு பேரு. பெருங்காயம் போட்டு பண்ணுவதால் இப்படி வாசனை வருது. கல்கத்தாவில் ரொம்பப் பிரபலம். இப்போ கிளம்பு நீ” என்றாள்.

குஸுமின் அந்த பாபு அவளிடம் கேட்டான், “யாரு இது?”

குஸும் சொன்னாள், “தெருக் குழாய்க்கு எதிரில் இருக்கும் வீட்டில் வசிப்பவர்களுடைய பையன். ஐயர் வீட்டுப் பையன்.”

என்னைப் பார்த்து குஸுமின் பாபு, “கிளம்பு பையா உன் வீட்டுக்கு போ” என்றார்.

ஏன் நான் அங்கே தங்கக் கூடாது? நான் தங்கினால் என்ன தப்பு? இப்படியெல்லாம் கேள்வி கேட்க வேண்டும் என்றுதான் தோன்றியது. ஆனால் குஸுமின் பாபுவைப் பார்த்ததும் வார்த்தை எழவில்லை. எனக்கென்னவோ அவரைப் பார்த்தால் அடித்துவிடுவாரோ என்று பயமாக இருந்தது. ஆனாலும் அதன் பிறகு நான் குஸுமின் பாபு வரும்வரையில் அவர் கொண்டுவரும் ஹீங் கச்சோரிக்காகக் காத்திருக்க ஆரம்பித்தேன். தினமும் குஸும் குறைந்தது இரண்டு கச்சோரிகளாவது என் கையில் கொடுத்து “போற வழில சாப்பிட்டுகிட்டே போ” என்பாள்.

குஸூமின் பாபு “அடடா அவனுக்கு கஸ்தா கோஜா [2] வாங்கிட்டு வரணும்னு நினைச்சேன். மறந்துட்டேன். நாளைக்கு நிச்சயம் வாங்கிட்டு வர்றேன்” என்றார்.

அதன் பிறகு பாபு மேல் எனக்கிருந்த பயம் போய்விட்டது. “நிஜமா மறக்கக் கூடாது சரியா?” என்றேன்.

பாபு கொஞ்சும் குரலில் “மாட்டேன் மாட்டேன்” என்றார்.

“தம்பி இப்போ நீ கிளம்பு” என்றாள்.

“நான் போக மாட்டேன். ஏன் நான் இங்க இருக்கக் கூடாதுன்னு சொல்றீங்க?” என்று கேட்டேன்.

குஸூமின் பாபு என்னிடம் ஏதோ பதில் சொன்னார். ஆனால் அவர் சொன்னதன் அர்த்தம் எனக்குச் சுத்தமாகப் புரியவில்லை.

“சின்னப் பையனிடம் இதுதான் சொல்றதுன்னு வரைமுறை இல்லை?” என்று குஸூம் பாபுவிடம் கோபமாகக் கூறினாள்.

நான் வீட்டிற்குப் போனதும் அம்மாவிடம் “அம்மா நீ இதுக்கு முன்னாடி ஹீங் கச்சோரி சாப்பிட்டிருக்கியா?” என்று கேட்டேன்.

“எதுக்கு?”

“நான் சாப்பிட்டிருக்கேன். பெருங்காய வாசனையோட ஜம்னு இருக்கும்.”

“உனக்கு எங்கே கிடைச்சது?”

“குஸூம் அக்காவோட பாபு வாங்கிட்டு வந்தாரு. அவருதான் எனக்கு கொடுத்தாரு.”

“துடுக்குப் பயலே. அங்க போகக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்” என்று அம்மா என்னைக் கடிந்து கொண்டாள்.

“ஏன் கூடாது?”

“ஏன்னா அவங்கள்ளாம் நல்லவங்க இல்லை. கெட்டவங்க. அதனால சொல்றேன் அங்க போகக் கூடாது.”

“போம்மா. குஸூம் அக்கா ரொம்ப நல்லவங்க. அவங்களுக்கு நான் என்றால் ரொம்ப இஷ்டம். தினம் எனக்கு ஹீங் கச்சோரி கொடுப்பாங்க.”

“உன் ஹீங் கச்சோரி புராணத்தை நிறுத்து. இங்கே உனக்கு ஒழுங்கா சாதம் போடறோம்தானே? இனிமே நீ அங்கே போனாத் தெரியும் சேதி.”

அதற்கப்புறம் நான் ஒன்றிரண்டு நாட்கள் குஸூமின் வீட்டிற்குப் போவதைத் தவிர்த்தேன். ஆனால் என்னால் போகாமல் இருக்க முடியவில்லை. ஒருநாள் அம்மாவிடம் சொல்லிக் கொள்ளாமல் போய் நின்றேன்.

“ஏன் இப்பல்லாம் நீ வருவதில்லை?” என்று குஸூம் என்னைக் கேட்டாள்.

“அம்மா போக்கூடாதுன்னு சத்தம் போட்டாங்க.”

“அப்படின்னா நீ வர வேணாம். எதுக்கு அனாவசியமா உங்க அம்மாகிட்ட திட்டு வாங்கற?”

“அதான் ரெண்டு நாள் நான் வரலை.”

“அப்புறம் ஏன் வந்த?”

“உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அதான்.”

“என் கண்ணே... நீ வரலைன்னதும் எனக்கும் பிடிக்கவேயில்லை. உன்னை ரொம்ப காணுமேன்னு வாடிப் போயிட்டேன்.”

“நானும்தான்.”

“என் நேரம். என்ன செய்ய? உங்க அம்மா உன்னைத் திட்டுவாங்களேன்னுதான் எனக்கு வருத்தமா இருக்கு.”

“நான் இங்க வந்ததை அவங்ககிட்ட சொல்ல மாட்டேன். அப்ப திட்ட மாட்டங்க. இப்ப கிளம்பறேன்.”

“சாயந்திரமா வா.”

“சரி.”

நாங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டபடி மாலையில் குஸூம் இல்லத்திற்குச் சென்றேன்.

குஸூமின் பாபு வந்து “அடேய் பொடியா திரும்பியும் வந்துட்டியா? ரெண்டு மூணு நாளா எங்க ஆளைக் காணும்? உனக்கு நான் ரெண்டு நாளா கஸ்தா கோஜா வாங்கிட்டு வந்தேன். அதைச் சாப்பிட உனக்குதான் அதிர்ஷ்டம் இல்லை. இந்தா குஸூம் அவனுக்கு இந்தக் கச்சோரியை தின்னக் கொடு” என்றார்.

“நாளைக்கு கோஜாவை மறக்காம வாங்கிட்டு வாங்க” என்றேன்.

“நிச்சயமா சின்ன அய்யிரே. நீ சரியான தீனிப் பண்டாரம். நாளைக்கு ஜிலேபி கூட வாங்கிட்டு வரேன். சரியா? எப்பவாது ஜாங்கிரி சாப்பிட்டிருக்கியா?”

“இல்லை.”

“நாளைக்கு வாங்கிட்டு வர்றேன். ஆனா நீ இங்க வரணும்.”

“நான் இங்க வர்றதை யார்கிட்டயும் சொல்லிடாதீங்க. எங்கம்மாவுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான். என்னை வெளிய விடவே மாட்டாங்க.”

“உங்கம்மா நீ இங்க வர்றதுக்கு கோச்சுக்கிறாங்களா?”

“ம்ம்...”

குஸூம் குறுக்கிட்டு, “அவன் சொல்றதை எதுக்கு பெருசா எடுத்துக்கறீங்க? அவனுக்கு என்ன தெரியும்? சின்ன பையன். பொடியா நீ இப்போ கிளம்பு. இந்தா இந்த ஹீங் கச்சோரியை வாங்கிக்க. போற வழில தின்னுகிட்டுப் போ.”

“இல்லை. நான் இங்கேயே இதைத் தின்னுட்டு ரெண்டு டம்ளர் தண்ணி குடிச்சுட்டுப் போயிடறேன். இல்லாட்டி எங்கம்மா கண்டுபிடுச்சிடுவாங்க.”

“உனக்கு இங்கே தண்ணி தர மாட்டேன். நீ தெருக் குழாயில போயி குடிச்சுக்க.”

குஸூமின் பாபு “ஏன் அவனுக்கு ஒருவாய் தண்ணி தர மாட்டேங்கற? என்ன கெட்டுப் போச்சு அதனால்?” என்றார்.

குஸூம் சீறினாள். “சும்மா இருங்க. அவன் அய்யர் பையன். அவனுக்கு

என் கையால் தண்ணி கொடுக்கக் கூடாது. இது எனக்கு விதிச்சிருக்கும் தர்மம். என் கையால் அவனுக்குத் தின்பண்டம் தருவதே பெரிய பாவம். இதில் தண்ணி வேற தரணுமா?"

எனக்கு குஸூம் பேரில் வருத்தமானது. குஸூம் அக்கா கையிலிருந்து தண்ணீர் வாங்கிக் குடிக்க முடியாத அளவிற்கு நான் கெட்டவனா? நான் கிளம்பும்போது குஸூம் மீண்டும் மீண்டும் சொன்னாள். "நாளைக்கு காலையில் மறக்காமல் வா."

நான் பதில் சொல்லவில்லை.

மறுநாள் காலையில் குஸூம் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

"வா பையா" என்று அழைத்தாள்.

"உங்க கிட்ட பேச மாட்டேன்."

"ஏன்? எதற்கு? நான் அப்படி என்ன பண்ணினேன்?"

"உங்க கையால் ஒரு டம்ளர் தண்ணி தர மாட்டேன்னு நேத்திக்கு சொன்னீங்கல்ல... அதனால."

"அவ்வளவுதானா? இப்படி உக்காரு பையா. உனக்கு நான் சொன்னா புரியாது. நீங்க ஐயருமாருங்க. உங்களுக்கு நாங்க தண்ணி தரக் கூடாது. புரியுதா? நான் இலந்தை வடை பண்ணப் போறேன். வேணுமா? இன்னும் முழுசா முடிக்கலை. இப்பதான் எலந்தம்பழத்தோட வெல்லம் சேர்த்துப் பிசைஞ்சு வச்சிருக்கேன். வேணுமா?"

நானும் குஸூமும் மீண்டும் நண்பர்களானோம். அவள் எனக்கு இலந்தை வடை கொடுத்ததும் என்னுடைய கோபமெல்லாம் பறந்து போனது. நாங்கள் சாப்பிட்டுக்கொண்டே நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். நான் அருகில் இருந்த மாகன் அறைக்குள் போனேன். அவள் அறையை நூற்றுக்கணக்கான பொம்மைகள் அலங்கரித்தன. ஒரு மர ஷெல்பில் ஆப்பிள், மாம்பழம், லிச்சி பழம் போல அச்சு அசலாகக் களிமண்ணில் செய்து வர்ணம் பூசப்பட்ட பொம்மைகள் இருந்தன. அசல் ஆப்பிள்,

அசல் மாம்பழம்.

மாகன் "வா பையா. அந்த பொம்மைகளை கையால் தொடக் கூடாது. உடைஞ்சு போயிடும். இப்படி உட்காரு" என்றாள்.

"நீ ஏன் புகை பிடிக்கறே?"

"ஏன் கூடாது? நிறைய பேரு புகை பிடிக்கறாங்கதானே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"பொம்பளைங்க புகை பிடிப்பாங்களா? எங்க அம்மா பிடிக்க மாட்டங்க. எங்க அப்பா பிடிப்பாரு."

"அவன் சொல்வதைப் பாரேன். ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் பையா புகை பிடிக்கறவங்க பிடிக்கதான் செய்வாங்க."

"குஸூம் அக்காவோட பாபு எனக்கு கஸ்தா கோஜா குடுப்பாரு."

"அப்படியா? நல்லா இருக்கே கேட்க."

"உன்னோட பாபு எங்கே?"

மாகன் தனது சேலைத் தலைப்பால் வாயை மூடிக்கொண்டு சிரித்தாள்.

"ஹி ஹி... இந்தப் பையனைப் பாரு என்னெல்லாம் கேட்கறான்? குஸூம் இங்க வந்து கேளேன்... இவன் என்ன சொல்றான்னு."

மாகன் குஸூமை விட பெரியவள் மாதிரி இருந்தது. அங்கிருந்தவர்களில் குஸூம்தான் ரொம்ப அழகு. அவள் மாகனை அக்கா என்றுதான் அழைத்தாள்.

குஸூம் உள்ளே வந்து என்னைத் தன்னுடைய அறைக்குக் கூட்டிக்கொண்டு போனாள். என்னை வேறு ஒருவருடைய அறைக்கும் போக வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள். நிஜமாகச் சொல்ல வேண்டும் என்றால் இன்னும் வேறு ஏதாவது அங்கே தின்னக் கிடைக்குமா என்பதற்காகதான் போனேன். ஆனால் எனக்கு அந்தப் பெண்ணின் பாபு எப்போது வருவார் என்பதெல்லாம் தெரியாது. எனவே எனக்கு இதில் ஏமாற்றம்தான். தனது அறைக்குள் கூட்டிக்கொண்டு போய் குஸூம்

என்னை ஏசினாள்.

“ஏன் அவங்க கிட்டேயெல்லாம் போய் பேசற? நீ சின்னப் பையன். இன்னொரு தடவை உன்னை அங்கே பார்த்தேன்னா தெரியும். இங்கேயே இரு போதும்.”

“நான் பிரபாவோட அறைக்கு போகட்டுமா?”

“எதுக்கு? என்னத்துக்கு? அங்கே அவங்க உன்னைப் பத்தி என்னல்லாம் சொல்றாங்கன்னு உனக்கு தெரியுமா? அறிவுகெட்டவனே. எப்பப் பாரு தீனி, தீனி, தீனிதானா? இப்பதானே ஒரு குல்ச்சா கொடுத்தேன்?”

நான் பொய்யான ஆச்சரியத்தோடு சொன்னேன். “நான் ஒண்ணும் கேட்கலை. வேணும்ன்னா பிரபாவை கேட்டுப் பாருங்க.”

“சரி சரி பிரபா ரூமுக்கு போக வேணாம்.”

“ஒரே ஒரு நிமிஷம் போயிட்டு இப்ப வந்துடறேன்” என்றேன்.

நான் பிரபாவின் அறைக்குப் போக விரும்பியதன் காரணம் தீனி மட்டுமில்லை அங்கிருந்த கிளியும்.

நான் ஒவ்வொரு முறை அந்த அறையினில் நுழையும்போதும் அந்தக் கிளி “யாரு? யாரு? போ போ. மாமி” என்று மழலையில் மிழற்றும்.

“என் பெயர் வாசுதேவ்” என்று நான் அதனிடம் சொல்வேன்.

“யார் அங்கே? யார் அங்கே?”

நான் சிரித்தேன். கிளிப் பேச்சு கேட்க அவ்வளவு தமாஷாக இருக்கும். அது நிஜமாகவே ஒரு மனிதனைப்போல “யார் அங்கே? யார் அங்கே?” என்று மிழற்றும்.

அறைக்குள்ளிருந்து பிரபா, “யாரு வந்திருப்பது?” என்று கேட்டாள்.

உள்ளே சமைத்துக் கொண்டிருந்தவள் கையில் ஒரு குழம்புக் கரண்டியுடன் ஓடிவந்தாள்.

“என்னை அடிக்க ஓடி வந்தீங்களா?” என்றேன் அவள் கையில் இருந்த

கரண்டியைப் பார்த்து.

“ஓ, நீதானா புத்திகெட்ட பிராமணனே? நான் கூட இந்த மத்தியான வேளையில் யாருடா இவ்வளவு சீக்கிரமா வந்திருப்பதுன்னு பார்த்தேன்.”

“உங்ககிட்ட குல்ச்சா இருக்கா? எனக்கு குஸுமாக்கா குல்ச்சா கொடுத்தாங்க. ரொம்ப நல்லா இருந்துச்சு” என்றேன்.

“க்கும். குஸுமாவோட பாபு நல்ல பணக்காரன். எனக்கு அப்படி ஒரு பாபு இல்லை. அப்புறம் எங்கிருந்து நான் உனக்கு குல்ச்சாவும் ஆம்சாவும் தர முடியும்?”

“குஸுமாவோட பாபு எனக்கு தினமும் திங்கறதுக்கு கோஜா கொடுப்பார்.”

“ஏன் கொடுக்க மாட்டார்? கூட்டு ரோடில் இருக்கும் பெரிய மளிகைக் கடையை குஸும் பேரில் எழுதி வச்சுட்டார். அவங்க சொல்றதை காதில் வாங்காதே. உன் வறட்டு கௌரவத்தால ஒரு பிரயோஜனமும் இல்லை... நான் சாகனும்...”

நான் அச்சத்துடன், “என்கிட்டே கோச்சுக்காதீங்க பிரபாக்கா” என்றேன்.

“ச்சே ச்சே... உன்கிட்ட எதுக்கு கோச்சுக்கப் போறேன்? வருத்தம். அவ்வளவுதான். நானும் இங்கே தனி மனித வேசிதான். நாங்க ஒண்ணும் இங்கே மிதந்துகிட்டு இல்லை. என்னோட துரதிருஷ்டம், நான் பதினஞ்சு வயசிலேயே வீட்டை விட்டு ஓடி வந்துட்டேன்.”

“ஏன் வீட்டை விட்டு ஓடி வந்தீங்க?”

“உனக்கு எதுக்கு அந்த சோகக் கதையெல்லாம்? தெரிஞ்சுகிட்டு உனக்கு என்ன ஆகப் போகுது? இரு, பருப்பு கொதிக்குது. வெறும் வாய் வார்த்தை வயித்தை நிரப்பாது.”

“நான் கிளம்பட்டுமா?”

“உள்ளே சமையல்கட்டுக்கு வாயேன்.”

பிரபா நல்ல கறுப்பு. பருமனும் கூட. மூக்கின் மீது மச்சம் மாதிரி பெரிய மரு ஒன்று இருந்தது. ஒருநாள் அவள் எனக்குக் கொஞ்சம் பொரியும்

ஜிலேபியும் தின்னக் கொடுத்தாள். அவள் அறையில் அதிகமாக ஒன்றுமில்லை அந்தக் கிளியைத் தவிர.

சல்தா பழங்களை நறுக்கிப் போட்டு பிரபா ஒரு ரசம் தயாரித்துக் கொண்டிருந்தாள். சல்தா துண்டுகளை ஒரு பீங்கான் பாத்திரத்தில் ஊற வைத்திருந்தாள். நான் கிராமத்திலிருந்து வந்த பிறகு சல்தா பழத்தைச் சாப்பிடவே இல்லை. இந்த மாதத்தில் வயல் வரப்புகளில் இருக்கும் சல்தா மரங்களின் கிளைகளில் சல்தா பழங்கள் பழுத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும்.

“சல்தா பழம் உங்களுக்கு எங்கேயிருந்து கிடைக்கும் பிரபா?” என்று அவளிடம் கேட்டேன்.

“மார்க்கெட்டுல. வேற எங்க கிடைக்கும்?” என்றாள்.

“பார்த்தாலே எச்சில் ஊறுது.”

பிரபா பதில் சொல்லவில்லை. அவள் சமைத்த வண்ணம் இருந்தாள்.

“உங்க அப்பா அம்மால்லாம் எங்கே?” என்று கேட்டேன்.

“இந்தப் பாவப்பட்ட வாயினால் அவங்க பேரைச் சொல்லும் யோக்கியதை கூட இல்லை பையா.”

“நீங்க வீட்டுக்குப் போக மாட்டீங்களா?”

“வீடா? எது வீடு?”

“ஊரில இருக்குமே அந்த வீடு.”

“நான் இனிமே நரகத்துக்குதான் போகணும். அதுதான் என்னோட வீடு.”

“இலந்தை மரம் இருக்கா உங்க ஊரில்? எங்க ஊரில் நெறைய இலந்தை மரம் இருக்கு.”

பிரபா பதில் சொல்லவில்லை. அவள் சமைத்துக்கொண்டே இருந்தாள். மண் அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து தனக்கு மட்டும் தேநீர் தயார் செய்து அதனை ஒரு டம்ளரில் விட்டு தனது சேலையால் மூடி சூடு மாறாமல் குடித்தாள். ஒரு வாயாவது எனக்கு வேண்டுமா என்று

கேட்கவில்லை. எனக்கு டீ பிடிக்காது சரி. எனக்குத் தேநீரின் மேல் மிதக்கும் பாலேடு ரொம்பப் பிடிக்கும்.

பிரபா சமைத்துக்கொண்டே அவள் ஊரில் இருந்த பசுக்களைப் பற்றியும், அவை கறக்கும் பாலைப் பற்றியும், வீட்டின் அருகில் இருந்த குளத்தையும் அதிலிருந்த மீன்களைப் பற்றியும் கூறிவிட்டு தான் மீண்டும் தன் ஊருக்குப் போகவே முடியாது என்று கூறினாள்.

பிறகு பிரபா அசாதாரணமான ஒன்றைச் செய்தாள். அவள் என்னிடம் “கொஞ்சம் சாதமும் சல்தாவும் சாப்பிடறியா?” என்று கேட்டாள்.

நான் பயத்துடன், “நான் தயார். ஆனா நான் இங்கே சாப்பிடுவது குஸுமுக்கு தெரியக் கூடாது” என்றேன்.

பிரபா சிரித்தாள். “எதுக்கு குஸுமுக்குப் போய் இப்படி பயப்படற? அவளுக்கு தெரிஞ்சாதான் என்ன? சாப்பிடு.”

நான் சல்தா ரசத்தை அன்னத்தில் விட்டுக்கொண்டு பிசைய ஆரம்பித்தேன்.

“பிரபாக்கா, அந்த அய்யர் பையன் உன் வீட்டில் இருக்கானா? அவனை உடனே அவன் வீட்டுக்கு அனுப்பு. ரொம்ப நேரமா இங்கதான் இருக்கான். அவன் ஒண்ணும் இங்கே குடியிருக்கவில்லை” என்று குஸுமின் குரல் வெளியில் கேட்டது.

நான் அறையின் ஒரு மூலையில் ஒளிந்து கொண்டேன். என் கைகள் அன்னத்தை அளைந்து கொண்டிருந்தன. குஸும் உள்ளே நுழைந்து பிரபா பதில் சொல்வதற்கு முன்னர் நான் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டாள்.

“என்ன இது? எதுக்கு மூலையில் ஒளிஞ்சுகிட்டு இருக்க? உன் கையில் இருக்கும் சோறு யாருக்கு?” என்று கேட்டாள்.

பிரபாவை ஆச்சரியத்துடன் பார்த்து, “பிரபா, அவன்தான் புத்தி கேட்டு போயிருக்கான்னா உனக்கு புத்தி எங்கே போச்சு? நீ எப்படி அவனுக்கு சோறு போடலாம்?” என்று கத்தினாள்.

தாழ்ந்த குரலில் பிரபா, “அவன்தான் குஸுமா சல்தா பழத்தைப் பத்தியே சொல்லிக்கிட்டு இருந்தான். அதனாலதான் கொஞ்சம் சோறும், சல்தா ரசமும் போட்டுக் கொடுக்கலாம்னு நினைச்சு…”

“வெட்கங் கெட்டவனே… வா என்னோட. இதுவரைக்கும் நாங்க பண்ணின பாவமே ஏழேழு ஜென்மத்துக்கும் போதுமானது. போதும். ஒரு பிராமணப் பையனுக்கு சோறு போட்டு எங்க பாவத்தை அதிகமாக்காதே. வா. அது என்ன உன் கையில் சோத்துப் பருக்கை? சாப்பிட ஆரம்பிச்சிட்டியா?”

நான் அவமானத்துடன், “இல்லை” என்றேன்.

“வா என்னோட. கையை அலம்பி விடறேன்.”

குஸும் என்னை இழுத்துக்கொண்டு போகும்போது பிரபா, “அவன் ஒரு வாய் கூட சாப்பிட ஆரம்பிக்கவில்லை. இப்படி கூட்டிகிட்டுப் போறியே…”

“அவன் ஒண்ணும் இங்கே சாப்பிட வேணாம்.”

குஸும் இந்த விஷயத்தில் என்னிடம் கண்டிப்புடன் நடந்து கொண்டாள். என் தாயார் கூட என் மீது இவ்வளவு கண்டிப்புடன் இருந்ததில்லை. நான் என் உணவை உண்ணாமல் அவள் பின்னால் போகும்படியானது. புறக்கடையில் ஓர் ஒதுக்குப்புறமான இடத்திற்கு அழைத்துச் சென்று என் கைகளை அலம்பிவிட்டாள்.

“ஏன் இப்படி ஒரு தீனிப் பண்டாரமா இருக்க? அங்கெல்லாம் சாப்பிடக் கூடாதுன்னு உனக்கு தெரியாதா? கேவலமா இல்லையா? நான் உனக்கு சாயங்காலம் கச்சோரி கொடுக்கறேன். இனிமே அங்கே சாப்பிடப் போகாதே. நீதான் சின்னப் பையன். அவளுக்கு மாடு மாதிரி வயசாகுதில்ல? ஒரு அய்யர் பையனுக்கு சோறு போடலாமா கூடாதா என்னும் அறிவு வேணாம்? நல்லா இருக்கு இவங்க பண்ற காரியம்.”

நல்லவேளை இது எதுவும் பிரபாவின் செவிகளில் விழவில்லை. அவள் அருகிலேயே இல்லை.

“என் அம்மாகிட்ட சொல்லிடாதீங்க” என்றேன்.

“இதைப் போய் உங்கம்மாகிட்ட சொல்வதுதான் எனக்கு வேலையா?

எனக்கு வேற வேலை இருக்கு.”

“அம்மாவுக்கு இது தெரிஞ்சா என்னை அடித்து நொறுக்கி விடுவாள்.”

“அடிக்கட்டும். அப்பவாவது நீ உன் பேராசைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறியான்னு பார்ப்போம்.”

வீட்டுக்குப் போனதும் என்னுடைய தாயார் “எங்கேடா போயிருந்த இவ்வளவு நேரம்?” என்று கேட்டாள்.

“அங்கே ரோட்டுப் பக்கம் போயிருந்தேன்.”

“வேற எங்கயும் போகலியே?”

“இல்லை.”

•

ஒருநாள் நான் மாட்டிக்கொண்டேன். என் மேல் தப்பில்லை. குஸூம் பேரில்தான் தவறு. ஒரு நாள் அவள் என்னை அழைத்து “பொடியா என் கூட வர்றியா? சும்மா ஒரு நடை நடந்துட்டு வரலாம்.”

அது பிற்பகல் நேரம். வெயிலும் அவ்வளவு கடுமையாக இல்லை. நாங்கள் டிராம் வண்டிகளுக்குப் போடப்பட்டிருந்த தண்டவாளங்களைக் கடக்க முற்பட்டபோது நான் பயத்துடன், “அம்மா என்னை மெயின் ரோடைக் கடந்து போகக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க” என்றேன்.

“நான்தான் உன் கூட இருக்கேன் இல்ல? வா தைர்யமா...” என்றாள்.

ரோடைக் கடந்து கொஞ்ச தூரம் போய்க் கொண்டிருந்தோம். சின்னஞ்சிறு குடிசைகள் நிறைந்த சேரி ஒன்று தென்பட்டது. அந்தச் சந்தின் இரு முனைகளிலும் நெருக்க, நெருக்கமாகக் குடிசைகள். நாங்கள் நுழைந்த கட்டடத்தில் முழுவதும் பெண்களாகவே இருந்தனர். மருந்துக்குக் கூட ஒரு ஆண்மகனையும் காணவில்லை.

அங்கிருந்த ஒருத்தி குஸூமைப் பார்த்து “வா குஸூம். எங்கே ரொம்ப நாளா ஆளையே காணும்? நம்ம எல்லாருக்கும் ஆம்பளப் பசங்க சிநேகிதங்களா இருக்க வாய்ப்பில்லைதான். அதுக்காக எங்களை எல்லாம்

இப்படியா மறந்து போவுறது?” என்று கிண்டலுடன் கேட்டாள்.

என்னை ஒரு பார்வை பார்த்து, “யார் இந்தப் பையன்? ரொம்ப அழகா இருக்கான்?”

“அய்யர் வீட்டுப் பையன். எங்க சந்துலதான் குடியிருக்கான். எப்பப் பார்த்தாலும் என்னையே சுத்திகிட்டு இருப்பான்.”

“அட இதைக் கேட்கவே எவ்வளவு நல்லா இருக்கு. உக்காரு தம்பி.”

“சரியான சாப்பாட்டு ராமன். ஏதாவது தின்னக் கொடு. சந்தோஷப்படுவான்.”

“இப்போ உனக்கு கொடுக்க என்னிடம் எதுவும் இல்லையே... கொஞ்சூண்டு இலந்தை வடை இருக்கு. சாப்பிடறியா?”

நான் ஒரு நொடிகூட தாமதிக்காமல் “எனக்கு இலந்தை வடைன்னா ரொம்பப் பிடிக்கும்” என்றேன்.

குஸும் என்னைப் பார்த்து, “சாப்பிடற பொருள் எதுதான் உனக்கு இஷ்டமில்லாம போகும்? வேணாம், அவனுக்கு இப்பதான் சளி நின்னுருக்கு. இலந்தை வடை கொடுக்காதே.”

எனக்கு இதயமே நின்றுவிட்டது போலிருந்தது. சளி வந்தால் அது என் தவறா? ஐயோ எனக்கு இலந்தை வடை அவ்வளவு பிடிக்குமே.

கொஞ்ச நேரம் அங்கே பேசிக் கொண்டிருந்துவிட்டு இன்னொரு வீட்டிற்குப் போனோம். அவர்களும் என்னைப் பற்றி நிறைய கேள்விகள் கேட்டனர். அவர்களே செய்த ஹல்வாவைக் கொஞ்சம் எடுத்து ஒரு கிண்ணத்தில் போட்டு எனக்குத் தின்னக் கொடுத்தார்கள். இதையும் குஸும் சாப்பிட விடவில்லை. எனக்குக் கொஞ்ச நாட்களாக அஜீரணமாம்.

மாலை வருவதற்குள் நாங்கள் டிராம் தண்டவாளங்களைக் கடந்தோம். குஸும் எனக்குப் பாதுகாப்பாக இருந்தாள். ஒரு டிராம் வண்டி எதிரில் வந்தது. “குஸுமாக்கா கொஞ்சம் இருங்களேன். நான் டிராம் வண்டியைப் பார்க்கணும்” என்றேன்.

“இருட்ட ஆரம்பிச்சாச்சு. அப்புறம் உங்கம்மா சத்தம் போடப் போறாங்க.”

“திட்டட்டும்.”

“அட, என் சிங்கக் குட்டிக்கு ரொம்ப தைரியம் வந்துடுச்சே.”

“ஏன் குஸுமாக்கா அப்படி பண்ணினீங்க? ஏன் எனக்கு கொடுக்க வந்த இலந்தை வடையை வேண்டாம்னு சொன்னீங்க?”

“நீ சின்னப் பையன். உனக்கு என்ன தெரியும்? அந்தப் பக்கம் இருக்கறவங்களுக்கெல்லாம் விதம் விதமா நோய் இருக்கு. யாரு வந்து உனக்கு சாப்பிடக் கொடுத்தாலும் நான் பார்த்துகிட்டு இருப்பேன்னு நினைச்சியா? நீ எங்க வேணாலும் எது கிடைச்சாலும் சாப்பிடுவியா? உனக்கு கொஞ்சம் கூட முன்யோசனை என்பதே கிடையாது. அங்க இருக்கும் பெண்களுக்கு என்ன மாதிரியான வியாதி இருக்குன்னு தெரியுமா?”

“ஆம்பள சிநேகிதங்கன்னா என்ன அர்த்தம் குஸுமா?” என்று கேட்டேன்.

“ஒரு அர்த்தமும் இல்லை. யாரு சொன்னா உனக்கு இந்த வார்த்தையை?”

“அவங்க சொல்லிக்கிட்டு இருந்தாங்களே...”

“அவங்க ஆயிரம் சொல்லுவாங்க. அதையெல்லாம் காதில் வாங்கிப்பியா? போக்கிரி.”

என்னைப் போக அனுமதிக்கும் முன் “பாபு உனக்கு கச்சோரி வாங்கிட்டு வந்திருப்பாரு. வாங்கித் தின்னுட்டு போ. வா.”

“சரி. எனக்கும் பசிக்கறது” என்றேன்.

“உனக்கு பசிக்காத நேரம் இருக்குமா என்ன? என்னிக்காவது உங்க அம்மாவை சந்தித்தால் நான் அவங்க கிட்ட ஏன் உங்க பையன் இப்படித் தீனி தீனின்னு கிடந்து அலையறான் என்றுதான் கேட்பேன்.”

“நான் எப்படி இருந்தா உங்களுக்கு என்ன? எனக்கு கச்சோரி கொடுங்க.”

“வா வா.”

“அவர் கோஜா வாங்கிட்டு வந்திருக்காரா?”

“எனக்கு தெரியாது.”

“நாளைக்கு எனக்கு கோஜா வாங்கித் தருவீங்களா?”

“ச்சை... அந்தச் சந்து எவ்வளவு கேவலமா இருந்துச்சு.”

“எனக்கு கோஜா குடுப்பீங்களா?”

“கொடுக்கறேன் கொடுக்கறேன். இப்போ இந்தக் கச்சோரியை வாங்கிட்டு ஆளை விடு.”

குஸும் என்னுடன் தெருக் குழாய் வரையில் வந்து என்னை விட்டுச் சென்றாள்.

என் தாயாரிடம் உண்மையைச் சொல்லிவிட்டேன். நான் குஸும் வீட்டிற்குச் செல்வதையும், அவள் எனக்குக் கச்சோரி கொடுப்பதையும் கூறிவிட்டேன். என் தாயார் என் மீது ஆவேசமானாள். என்னைக் கட்டிப் போடப் போவதாக மிரட்டினாள். இரவு அப்பா வந்ததும் சொல்லப் போவதாக எச்சரித்தாள். ஆனால் அப்பா அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

•

மறுநாள் காலையில் எனக்குக் காய்ச்சல் கண்டது. நான்கைந்து நாட்கள் படுத்துக் கிடக்கும்படியானது. ஒரு வயதான மருத்துவர் என்னைப் பரிசோதித்து விட்டு மருந்துகளை எழுதிக் கொடுத்தார்.

என் படுக்கை ஜன்னலுக்கு அருகில் இருந்தது. ஒருநாள் குஸும் என் வீட்டிற்கு எதிரில் நின்றுகொண்டு உற்று நோக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மாகனும் உடன் இருந்தாள். இரண்டு வீடு தள்ளி நின்று கொண்டிருந்தாள்.

நான் கூவினேன். “குஸும்...”

திரும்பிப் பார்த்த குஸும் என்னை கவனித்து விட்டாள்.

மாகனைப் பார்த்து “இதோ இந்த வீடு அக்கா” என்று கூறினாள்.

என்னுடைய தாயார் முனிசிபல் குழாயடியில் நின்று கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் என் வீட்டு ஜன்னல் அருகில் வந்து நின்றனர்.

"ஏன் அந்தப் பக்கம் நீ வரலை?" என்று குஸூம் கேட்டாள்.

மாகன் "நீ ஏன் வரலன்னு குஸூமுக்கு தலையே வெடிச்சிடும்போல இருந்தது. அவனுக்கு என்ன ஆச்சோ ஏது ஆச்சோன்னு பதறிப் போயிட்டா. நான்தான் போயி பார்த்துட்டு வரலாம்னு கூட்டிட்டு வந்தேன்."

"எனக்கு போன அஞ்சு நாளா காய்ச்சல்."

குஸூம், "உங்க அம்மா எங்கே?" என்றாள்.

"போயிடுங்க குஸூம். எங்கம்மா உங்களைப் பார்த்த அப்புறம் என்னை அங்கே போகவே விடமாட்டாங்க. போயிடுங்க. எனக்கு உடம்பு சரியானதும் நானே வந்து பார்க்கறேன்" என்றேன்.

அவர்கள் போய்விட்டார்கள். ஆனால் மறுநாள் குஸூம் மெல்ல மெல்ல என் வீட்டு ஜன்னல் அருகில் வந்து மெதுவான குரலில், "நான் வரலாமா?" என்று கேட்டாள்.

அப்போது என் தாயார் வீட்டில் இல்லை. வைத்தியநாதனின் மளிகைக் கடைக்கு பருப்பு அளப்பதற்குப் போயிருந்தாள். கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் கிளம்பினாள். கிளம்புவதற்கு முன் என்னை அழைத்து, "பூனை குழந்தைக்கு வச்சிருக்கும் பாலை குடிச்சிடாம பார்த்துக்கோ" என்று கூறிவிட்டுச் சென்றிருந்தாள்.

நான் குஸூமைப் பார்த்து "உள்ளே வாங்க" என்றேன்.

என் ஜன்னலின் அருகில் நின்றுகொண்டு "இப்போ எப்படி இருக்கு உனக்கு?" என்று கேட்டாள்.

"ரொம்பத் தேவலை. நாளையிலிருந்து சாதம் சாப்பிடலாம்னு டாக்டர் சொல்லிட்டார்."

"நான் கொஞ்சம் ஆரஞ்சுப் பழம் கொண்டுவந்திருக்கேன். சாப்பிடறியா?"

"சீக்கிரம்" என்றேன்.

“பழத்தை சாப்பிட மறக்காதே.”

“மாட்டேன்.”

“சரியான உடனே என் வீட்டுக்கு வரணும் சரியா?”

“நிச்சயமா.”

“நாளைக்கு சோறு சாப்பிடுவியா?”

“சாப்பிடலாம்னு எங்கப்பா சொல்லியிருக்கார்.”

“நாளைக்கும் நான் வருவேன்.”

“வாங்க. ஆனா நான் சொல்றவரைக்கும் ஜன்னல் பக்கம் வராதீங்க.”

“சரி. நான் ரோடுக்கு அந்தப் பக்கம் நிற்பேன். உனக்கு விசில் அடிக்கத் தெரியுமா?” என்று கேட்டாள்.

“தெரியாது. நான் கையை அசைக்கிறேன். அப்போது வாங்க.”

குஸும் அதற்குப் பிறகு இரண்டுநாள் வந்தாள். ஒருநாள் பிரபாவைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தாள். பிரபா என்னைப் பார்க்க வேண்டும் என்றாளாம். நான் பொய் சொல்ல விரும்பவில்லை. பிரபாவும் எனக்குக் கொஞ்சம் ஆரஞ்சுப் பழங்களைக் கொண்டுவந்திருந்தாள். நான் அவற்றைத் தலையணைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு அம்மா வெளியில் போனதும் உரித்துத் தின்றுவிட்டு தோலை ஜன்னல் வெளியில் வீசி எறிந்துவிட்டேன்.

எனக்கு உடல்நிலை சரியானதும் இரண்டு முறை குஸும் வீட்டுக்குப் போயிருந்தேன்.

அதன்பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. நாங்கள் வீட்டைக் காலி செய்துகொண்டு எங்கள் ஊருக்கே திரும்பிப் போகவேண்டி வந்தது. ஒருநாள் என் தாயார் சோடா பாட்டில் ஒன்றைத் திறக்க முயன்றபோது அவளுடைய கரங்களில் கண்ணாடித் துண்டு ஏறிவிட்டது. அவள் மணிக்கட்டிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது. எல்லோரும் உதவிக்கு ஓடி வந்தார்கள். பிபின் பாபு அறையின் மூலையிலிருந்து

எழுந்து வந்து ஏதோ ஒரு மருந்தைத் தடவி மணிக்கட்டில் கட்டு போட்டுவிட்டாள். ஆனால் அம்மாவின் காயம் ஆறுவதாக இல்லை. நாளுக்கு நாள் மோசமானது. அவளால் சமைக்க முடியவில்லை. தினமும் இரவில் வேதனை தாளாது அரற்றினாள். மருத்துவர் விடாமல் வந்து சிகிச்சை அளித்தார். என் தாய்வழி மாமன்கள் நல்ல வசதியுடன் இருந்தனர். இந்த விஷயத்தைக் கடிதம் வாயிலாகக் கேள்விப்பட்ட ஒரு மாமா எங்களை அவருடன் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

ஆடி மாதத்தின் ஆரம்பத்தில் இது நடந்தது. பனம்பழங்கள் மரங்களில் பழுக்கத் தொடங்கிவிட்டன. என் தாய் மாமா குடியிருக்கும் வீட்டின் அருகில் உள்ள ஏரிக் கரையில் நிறைய பனை மரங்கள் உள்ளன. நான் அங்கே போயிருந்த முதல்நாள் கீழே ஒரு பழுத்த பனம் பழத்தைக் கண்டேன்.

இவை எல்லாம் நடந்து முப்பது வருடங்கள் ஓடிப் போனது.

நான் ஒரு விடுதியில் உதவியாளனாக வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். என் ஊரில் என் மனைவியும் குழந்தைகளும் வசித்து வந்தனர். நான் ஒருநாள் என் கல்லூரி நண்பன் ஸ்ரீபதியிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது அவன் "போன வாரம் பிரேம்சந்த் போரல் வீதி வழியே - அந்த வீதியின் இரு மருங்கிலும் முகத்திற்குச் சாயம் பூசிய பெண்களின் வரிசை நின்று கொண்டிருக்கும் - நடந்து போய்க்கொண்டிருந்தபோது அவர்களைப் பார்த்தேன். யப்பா என்ன பயங்கரம்" என்றான்.

"நானும் பார்த்திருக்கிறேன். எனக்கும் அதுதான் வழி. ஆனால் எனக்கு அவர்கள் மீதான பார்வையே வேறு. ஒரு காலத்தில் நான் சிறியவனாக இருந்தபோது அவர்கள் இல்லங்களுக்கு அடிக்கடி சென்றிருக்கிறேன்."

என் நண்பன் ஆச்சரியத்துடன் "நீயா?" என்றான்.

"ஆமாம். நான்தான். சத்தியமா."

"கேவலம். நான் நம்ப மாட்டேன் இதை."

“சரி என் கூட வா, நான் நம்ப வைக்கிறேன்.”

பதினைந்து வருடங்களுக்கு முன்பு நான் நந்தாராம் பகுதியில் ஒரு சந்தில் இருந்த மாகன் வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கே குஸும், பிரபா யாரும் இருக்கவில்லை. மாகன் மட்டும் அந்தக் குடியிருப்புப் பகுதியில் இருந்தாள்.

நான் மீண்டும் அந்தச் சந்திற்கு ஸ்ரீபதியை அழைத்துக்கொண்டு போனேன். மாகன் இன்னும் உயிருடன் இருந்தாள். அவள் முடி எல்லாம் வெளுத்து விட்டிருந்தது. பற்கள் விழுந்து அவளைப் பார்ப்பதற்கு ஒரு சூனியக் கிழவியைப்போல இருந்தது.

என்னைப் பார்த்ததும் “வா! எப்படி இருக்க?” என்று வினவினாள்.

“என்னை தெரியறதா?” என்றேன்.

“எப்படி மறந்து போகும்? எங்கள் கண் எதிரில் வளர்ந்த பையனாயிற்றே நீ? மறக்க முடியுமா? அப்புறம் இன்னொன்னு, நாங்க குஸும் இருக்கும் இடத்தை கண்டுபிடிச்சிட்டோம்.”

“அப்படியா? எங்கே எங்கே? குஸும் எங்கே இருக்கிறாள்?”

“அவள் ஷோபா பஜாரில் ஒரு விடுதியில் வேலைக்காரியாக இருக்கிறாள். இடது பக்கம் இருக்கும் முதல் கட்டடம். இடிஞ்சு போயிருக்கும் இரண்டு மாடிக் கட்டடம். கோயிலுக்கு பக்கத்தில் இருக்கு. நேத்திக்கு கோயிலுக்கு கூட்டிக்கிட்டுப் போயிருந்தாங்க. அப்போ பார்த்தேன்.”

நானும் ஸ்ரீபதியும் ஒரு படகில் ஏறி அவள் இருக்கும் பகுதிக்குச் சென்றோம். அப்போது மாலை மயங்கத் தொடங்கவில்லை. நான் கீழே பணியில் இருந்த பரிசாரகனிடம் “இங்கே வேலை பார்க்கும் பெண் எங்கே?” என்று கேட்டேன்.

“பக்கத்தில் இருக்கும் மார்க்கெட்டுக்கு போயிருக்கா. இப்ப வந்துடுவா. எதுக்கு கேட்கறீங்க?” என்றான்.

“இல்லை, அவங்களோட கொஞ்சம் பேசணும். அவங்க பேரு குஸும்தானே?” என்றேன்.

“ஆமாம் ஐயா.”

சிறிது நேரத்தில் சற்று உயரமான மெலிந்த தேகமுடைய ஒரு பெண் - அச்சு அசலாக ஒரு வேலைக்காரியின் தோற்றத்துடன் - வாசல் வழியாக நுழைந்து வந்தவள் சமையல்கட்டில் வந்து நின்றாள்.

“இந்த ரெண்டு புண்ணியவான்களும் உன்னை பார்க்க வந்திருக்காங்க குஸூம்” என்றான் பரிசாரகன். நான் அந்த வேலைக்காரியை ஆச்சரியத்துடன் பார்த்தேன். நான் சிறு வயதில் பார்த்த அழகு நிறைந்த அந்த குஸூமா இவள்? அவள் மாகன் அளவிற்கு வயதானவள் இல்லை என்றாலும் இவளும் வயதான மாதுதான். அவளை எவருடனும் ஒப்பிட முடியாது. அவளது முகம் எனக்கு நினைவில் இருக்கிறது. இந்த முகத்திற்கும் அதற்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை. அந்தப் பரிசாரகன் மட்டும் சொல்லியிருக்காவிட்டால் நான் அவளைக் குஸூம் என்று நம்பியிருக்க மாட்டேன்.

குஸூமிற்கும் அதே ஆச்சரியம்தான், “என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்களாம். யார் அனுப்பினாங்க உங்களை?” என்று கேட்டாள்.

“மாகன் அனுப்பினா” என்றேன்.

“எந்த மாகன்?”

“மாகன். நந்தாராம் சந்தில் இருந்தாங்களே... அவங்க.”

“அப்படியா? சரி நீங்க எதுக்கு என்னைத் தேடி வந்தீங்க?”

“அதோ அந்தப் பக்கம் வாங்க. நான் உங்களோட கொஞ்சம் பேசணும்.”

“சாப்பாட்டுக் கூடத்துக்கு போவோம்” என்று எங்களை உணவு பரிமாறும் கூடத்திற்கு அழைத்துச் சென்றாள்.

நான் அவளை உற்றுப் பார்த்து, “என்னை ஞாபகம் இல்லையா குஸூம்?” என்று கேட்டேன்.

“இல்லை தம்பி.”

“நாமல்லாம் நந்தாராம் சென் சந்தில் குடியிருந்தோமே... எனக்கு அப்போ

எட்டு வயசு, என்னோட அப்பா அம்மா அந்த நாவிதர் வீட்டில குடியிருந்தோமே... ஞாபகம் வருதா?" என்றேன்.

குஸும் புன்னகைத்தபடி, "ஞாபகம் வருது. அப்போ அந்த அசட்டு ஐயர் பையன் நீதானா? எப்படி வளர்ந்துட்ட... உங்க அப்பா அம்மா உசுரோட இருக்காங்களா?"

"யாரும் உசுரோட இல்லை."

"எத்தனை பசங்க உனக்கு."

"அஞ்சு."

"உக்காரு, இப்படி உக்காரு."

நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். குஸும் என்னைக் கொஞ்சநேரம் இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனாள். சிறிது நேரம் கழித்து உள்ளே வந்த குஸும் கையில் இரண்டு உணவுப் பொட்டலத்தைக் கொண்டுவந்து என் கையில் நீட்டினாள். நாங்கள் கிளம்பினோம்.

அதில் என்ன இருந்தது என்று எனக்கு எவ்வித யோசனையும் இல்லை. இரவு உணவு உண்ணும்போது அந்தப் பொட்டலத்தைப் பிரித்தபோதுதான் பார்த்தேன், அதனுள் நான்கு பெரிய ஹீங் கச்சோரிகள் இருந்தன. எனக்கு உடனே குஸுமின் பாபுவும் அவர் வாங்கி வரும் கச்சோரிகளும் நினைவுக்கு வந்தன. நான் முப்பது வருடங்கள் பின்னால் போய் ஹீங் கச்சோரிக்கு ஆலாய்ப் பறக்கும் ஏழு வயதுப் பையனாக மாறிப் போனேன். நான் அந்தக் கச்சோரியை உண்ண ஆரம்பித்ததும் என் நினைவின் புகைமூட்டம் முப்பது வருடங்களுக்குப் பின்னால் நகர்ந்து நந்தாராம் பகுதியின் சந்தில் இருந்த முனிசிபல் குழாயடிக்கும், வெல்ல மண்டிக்கும் அருகில் இருந்த அந்தப் பகுதிக்கே சென்றுவிட்டது. அங்கேதான் குஸும் இருபத்தைந்து பருவமுள்ள இளம்பெண்ணாக இருந்தாள். அவள் பாபு அங்கே அடிக்கடி வருவார், ஹீங் கச்சோரி அடங்கிய பொட்டலத்துடன்.

(வங்க மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - அருணவா சின்ஹா)

# 5. நூறு மெழுகுவர்த்திகளின் ஒளியாற்றலுடன் ஒரு மின்சார விளக்கு

## சாதத் ஹசன் மண்ட்டோ

அவன் கேய்ஸார் பூங்காவின் அருகில் அமைந்த சதுக்கம் ஒன்றில் இருந்த மின் கம்பத்தில் சாய்ந்தபடி ஜன சந்தடியற்ற அந்தப் பாழ்வெளியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். பூங்காவின் வெளியில் ஒன்றிரண்டு டோங்காக்கள் மட்டுமே வாடிக்கையாளர்களுக்காகக் காத்திருந்தன.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்தப் பூங்கா எப்போதும் கசகச என்று ஜனநடமாட்டம் மிகுந்திருக்கும். இப்போது ஆள் அரவமற்ற ஒரு பாழ்வெளி. எங்கு ஆண்களும் பெண்களும் மற்றவர்களைக் கவரும் வண்ணம் புதுப் புது நவீன மோஸ்தரில் ஆடைகளை அணிந்து திரிந்தார்களோ இன்று அங்கே இருப்பவர்கள் பழைய கந்தல் உடைகளை அணிந்துகொண்டு அலைகிறார்கள். மார்க்கெட்டில் கூட்டம் இருந்தாலும் அதில் ஒரு உயிர்ப்போ பளபளப்போ இல்லை. மார்க்கெட்டைச் சுற்றியுள்ள சிமெட்டிக் கட்டடங்கள் வாய் பிளந்து வெற்றுப் பார்வையுடன் திகழும் விதவைப் பெண்களைப்போல இப்போது சோபையிழந்து நிற்கின்றன.

அங்கிருந்த மங்கலான தோற்றம் அவனை வியப்பில் ஆழ்த்தியது. ஒரு புதுமணப் பெண்ணைப்போல தோன்றிய கவர்ச்சி எங்கே ஓடி ஒளிந்தது? அந்த இனிய ஸ்வரங்களின் கோர்வை எங்கே ஓடி ஒளிந்தது? அப்போது ஒலித்த பாடல்களின் இனிமை எங்கே புதைந்து போனது? இத்தனைக்கும்

நெடுங்காலமாகவில்லை அவன் இங்கே வந்து - இரண்டு வருட காலம் என்பது அதிகமில்லைதான் - கல்கத்தாவில் ஒரு நல்ல நிறுவனம் கொடுக்க முன்வந்த அதிகச் சம்பளம் அவனை இங்கே இழுத்து வந்தது. கேய்ஸார் பூங்கா அருகில் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்திக்கொள்ள அவன் எத்தனை பாடுபட்டிருப்பான்... எத்தனை பேரிடம் கெஞ்சியிருப்பான்? எல்லாம் வீண் ஆனதுதான் மிச்சம்.

இப்போது பார்த்தால் ஒரு செருப்புத் தொழிலாளியோ, நாவிதரோ அல்லது ஒரு சாதாரண நெசவாளி கூட எளிதில் இந்த அடுக்குமாடி வீடுகளில் வாடகைக்குக் குடியேறுவது சுலபம் என்று தோன்றுகிறது.

ஒரு பெரிய சினிமா கம்பெனி இங்கேதான் இருந்தது. அதனால் பல நூறு வீடுகளில் அடுப்பு எரிந்தது. நகரின் மிடுக்கான மக்கள் இங்குதான் குடியேறியிருந்தார்கள். இப்போது சலவைத் தொழிலாளிகள் மட்டமான துணிகளைதான் துவைக்கின்றனர்.

என்ன ஒரு மாபெரும் மாற்றம் இரண்டு வருடங்களுக்குள்?

அவனுக்கு ஆச்சரியம்தான். ஆமாம். இருந்தாலும் அவனுக்கு இதன் காரணமாக விளங்கிய சூழலும், பின்னணியும் தெரியும். செய்தித் தாள்களும், நண்பர்களும் இந்த நகரத்தைத் தாக்கிய புயலைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். என்ன ஒரு கொடூரமான புயல். அந்தப் புயல் அந்தக் கட்டடங்களின் வண்ணத்தையும் ஒளியையும் உறிஞ்சிவிட்டது. ஆண்கள் ஆண்களைக் கொன்றுவிட்டனர். பெண்களைத் தரம் தாழ்த்தினர். சரி, ஆனால் எப்படி அவர்களால் இதே அழிவினைக் கட்டடங்களுக்கும் அளிக்க முடிந்தது?

அந்தப் புயலில் பெண்களின் ஆடைகள் உருவப்பட்டு அவர்கள் நிர்வாணமானார்கள். பெண்களின் முலைகள் திருகி எறியப்பட்டன. இப்போது இங்கு தோன்றும் அனைத்தும் நிர்வாணமாக எவ்வித உணர்ச்சியையும் தூண்டாமல் இருப்பது போலிருந்தது.

அவன் அந்த மின்கம்பத்தில் சாய்ந்தபடி இந்தப் பகுதியில் குடியிருப்பதற்கு வீடு வாடகைக்குப் பேசித் தருவதாகச் சொல்லியிருந்த

நண்பன் ஒருவனின் வருகைக்காகக் காத்திருந்தான். அந்த நண்பன் இவனை கேய்ஸார் பூங்கா அருகில் இருந்த டோங்கா ஸ்டாண்ட் பக்கம் காத்திருக்கச் சொன்னான்.

அவன் இந்த ஊருக்கு வந்த புதிதில், அதாவது இரண்டு வருடங்களுக்கு முன்பு, இந்த டோங்கா ஸ்டாண்ட் நகரத்திலேயே பெரிய டோங்கா ஸ்டாண்ட். அங்கிருக்கும் பல டோங்காக்கள் பிரமாதமாகவும், பெரிதாகவும் பலவிதங்களில் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன. காரணம், நகரின் இந்தப் பகுதியில்தான் களிப்பும் உவகையும் பொங்கி வழிந்தன. அடுத்தடுத்து நிறைய உன்னத உணவகங்களும், விடுதிகளும் மிகுந்து காணப்பட்டன. இங்குதான் உன்னதமான தேநீரும் சுவையான உணவு வகைகளும் கிடைத்தன. வேறு எதுதான் இங்கு உன்னதமில்லை? நகரின் பெரிய பெண் தரகர்களும் ஏஜண்டுகளும் சுற்றிக் கொண்டிருந்த இடம் இது. கேய்ஸார் பூங்காவின் அருகில்தான் சில பெரிய பெரிய நிறுவனங்களின் அலுவலகங்கள் இயங்கியதால் இந்தப் பகுதியில் பணமும் சாராயமும் தண்ணீர்போல ஓடின.

தன் நண்பனுடன் இரண்டு வருடங்களுக்கு முன்பு கழித்த சில பொன்னான தருணங்களை நினைவு கூர்ந்தான். ஒவ்வொரு நாள் இரவிலும் ஓர் அழகிய இளம்பெண்ணுடன் படுத்திருக்கிறான். யுத்தம் தொடங்கிய நேரம் என்பதால் நகரின் பிற பகுதிகளில் ஸ்காட்ச் கிடைப்பது கடினம். ஆனால் இந்தப் பகுதியில் கை சொடுக்கும் நேரத்திற்குள் ஒரு டஜன் ஸ்காட்ச் பாட்டில்களை வாங்க முடியும்.

இப்போதும் டோங்காக்கள் இருக்கின்றன. ஆனால் அந்த ஜிகினா வேலைப்பாடு மிகுந்த வண்ண ரிப்பன்கள், பூம் பூம் ஒலி, பளபளக்கும் பித்தளை பட்டிகள் எதையும் காணோம். ஒருவேளை இங்கிருந்த மற்றவைகளைப்போல அவைகளும் இறக்கை கட்டிப் பறந்து போய்விட்டனவோ என்னவோ.

கடிகாரத்தில் மணி பார்த்தான். ஐந்து மணி. அது பிப்ரவரி மாதம் என்பதால் மாலை நேர நிழல்களின் நீளம் அதிகமாகத் தொடங்கின. அவன் தன் நண்பனைச் சாபமிட்டபடி அருகில் இருந்த மங்கிப் பாழ்பட்டுப்

போயிருந்த ஒரு ஹோட்டலுக்குச் சென்று தேநீர் அருந்தி வரலாம் என்று எண்ணிய சமயம் யாரோ மிக மெதுவான குரலில் கிசுகிசுப்புடன் அழைப்பது கேட்டது. ஒரு கணம் தன் நண்பன்தான் வந்துவிட்டான் என்று நினைத்துத் திரும்பியவன் வேற்று மனிதன் ஒருவன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். வந்தவன் ஒரு சாதாரண மனிதன்.

வெள்ளை சல்வாரும் - அதில் இனிமேலும் பருக்க இடமின்றி சதைபிதுங்கி, பலநாள் சலவையைப் பார்க்காத ஒரு நீல நிற பாப்ளின் சட்டையும் அணிந்து நின்றிருந்தான்.

“கூப்பிட்டீங்களாண்ணே?” என்று அவனைக் கேட்டான்.

அந்த மனிதன் “ஆமாம்” என்றான்.

அவன் அந்த மனிதனை ஒரு புலம் பெயர்ந்தவன் என்றெண்ணி, “என்ன வேண்டும் உங்களுக்கு?” என்றான்.

அந்த மனிதனின் குரல் அதே கிசுகிசுப்புடன் “ஒண்ணும் வேண்டாம்” என்றவன் மேலும் ரகசியமாக, “உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?” என்றான்.

“என்ன?”

“ஒரு பொண்ணு...” என்று கூறிவிட்டு இரண்டடி பின்னால் நகர்ந்து கொண்டான்.

அவன் நெஞ்சில் ஒரு கணை பாய்ந்தது போலிருந்தது. அவனைப் பாருங்கள், இந்த நிலையில் கூட, அவன் மனிதர்களின் உடல் இச்சைகளின் மூலம் தனது உணவைத் தேடிக் கொள்கிறான். இந்த மொத்த மனித குலத்தின் மீதான மூர்க்கமான கோபம் அவனை மீறியது. தனது மனதில் பொங்கிய உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு “பொண்ணா... எங்கே?” என்று கேட்டான்.

அவன் கேட்ட விதம் அந்தத் தரகனுக்கு ஏற்புடையதாக இல்லை. அவன் மேலும் ஐந்தாறு அடிகள் பின்னால் நகர்ந்து, “விடுங்க. உங்களைப் பார்த்தா வேண்டாம்னு தோணுது.”

அவன் அந்தத் தரகனை நிறுத்தி, “நீயா எப்படி இது ஒருவனுக்குத் தேவையில்லை என்று சொல்லப் போகும்? நீ ஏற்பாடு செய்து கொடுக்கும் விஷயம் ஒரு மனிதனுக்கு எந்த நேரத்திலும் தேவையான விஷயம்தான். அவன் தூக்குமரத்தில் நின்றுகொண்டு முடிச்சு இறுகும் நேரத்திலும், கனன்று எரியும் சிதையின் மேல் இருக்கும் நேரத்திலும் கூட அவனால் தவிர்க்க முடியாத தேவை” என்றான்.

அவன் முடிக்கும்போது ஒரு ஞானி போலவே ஆகியிருந்தான். “இங்க பாரு, நீ கூட்டிகிட்டுப் போற இடம் பக்கத்துலதான் இருக்குன்னா, நான் உன் கூட வர்றேன். நான் இங்கே என் சிநேகிதன் ஒருவனுக்காகக் காத்திருக்கிறேன்” என்றான்.

அந்தத் தரகன் “இதோ இங்கதான் பக்கத்துல இருக்கு” என்றான்.

“எங்கே?”

“அதோ வலது பக்கத்தில் இருக்கே அந்தக் கட்டடத்தில்தான்.”

“அதோ அந்தப் பெரிய கட்டடத்திலா?”

“ஆமாங்கையா.”

அவனிடம் ஒரு நடுக்கம் பரவ “அப்படியானால் சரி” என்று தன்னை உதறிக்கொண்டு “உன்னுடன் நான் வரவா?” என்றான்.

“தாராளமா வாங்க. ஆனா நான் முன்னாடி போயிக்கறேன்” என்றான். அந்தத் தரகன் அவர்கள் முன்னால் இருந்த கட்டடத்தை நோக்கி நடந்தான். மனத்தைக் கசிக்கிப் பிழியும் பல துயர நினைவுகளுடன் அவன் பின்தொடர்ந்தான்.

அந்தக் கட்டடம் எட்டிவிடும் தூரத்தில்தான் இருந்தது. இரண்டு நிமிடங்களில் அந்தக் கட்டடத்தை அடைய முடிந்தது. கால ஓட்டத்தில் உருக்குலைந்து போயிருந்த ஒரு பெயர்ப்பலகை அந்தக் கட்டடத்தில் மாட்டப்பட்டிருந்தது. அந்தக் கட்டடம் அருகில் இருந்த கட்டடங்களை எல்லாம் விட மிகவும் மோசமான தோற்றத்துடன் சுவரில் சுண்ணாம்பு உரிந்து, செங்கற்கள் பல்லை இளித்துக் கொண்டு, எல்லாக் குழாய்களும்

வெளியில் தெரியும்படி, சுற்றிலும் ஒரே குப்பைக் கூளத்துடன் காணப்பட்டது.

அந்தி நேரம் ஆகிவிட்டது. அந்தக் கட்டடத்தின் வாயிலை நெருங்கியபோதுதான் உள்ளே இருட்டாக இருப்பது தெரிந்தது. பெரிய முற்றம் ஒன்றைக் கடந்து ஒரு மூலையை அடைந்தனர். இங்கே கட்டடம் நின்று போயிருந்தது. பாதி எழுப்பப்பட்ட செங்கற்சுவர், சுற்றிலும் கெட்டிதட்டிப் போயிருந்த சிமெண்டு மூட்டைகள், சுண்ணாம்புக் கலவை, பொடி ஜல்லி எல்லாம் சிதறிக் கிடந்தன.

அந்தத் தரகன் அங்கே பாதி நிலையில் எழுப்பப்பட்டிருந்த மாடிப்படிகளில் ஏறினான். "இங்கயே இருங்க. ஒரு நிமிஷத்தில வந்துடறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

இரண்டு நிமிடங்கள் கழிந்தன. அவன் காத்திருக்கப் பொறுமையின்றி வேக வேகமாக மேலே தாவி ஏறினான். மாடிப்படியின் மேலே அந்தத் தரகன் உரத்த குரலில் பேசுவது தெளிவாகக் கேட்டது. தரகனின் குரல் தடித்தும் உரத்தும் இருந்தது. "நீ இப்போ எழுந்திருப்பியா மாட்டியா?"

ஒரு பெண்ணின் குரல் உள்ளேயிருந்து கேட்டது. "நான் மாட்டேன்னு சொன்னேனா? என்னை தூங்க விடு."

தரகனின் குரல் கடுமையானது. "நான் சொல்றேன் எழுந்திரு. நான் சொல்றதை கேட்கலன்னா நான் அப்புறம் உன்னைக்..."

அவள் குரலில் ஒரு நடுக்கம் இருந்தது. "என்னைக் கொன்னு போட்டாலும் பரவாயில்லை, எனக்கு தூங்கணும். கொஞ்சம் இரக்கம் காட்ட மாட்டியா?"

இப்போது அவன் குரல் குழைந்தது. "எழுந்திரு செல்லம். இப்படிப் பிடிவாதம் பிடிச்சா எப்படி கண்ணு? நமக்கு சோத்துக்கு வேற வழி இருக்கா சொல்லு."

அந்தப் பெண் பதிலளித்தாள். "இப்படி வாழறதுக்கு நரகத்துக்குப் போகலாம். நான் செத்துப் போனாலும் பரவாயில்லை, என்னை தொந்தரவு பண்ணாதே. நான் தூங்கணும்."

தரகன் ஆத்திரமடைந்தான். “அப்போ நீ எழுந்திருக்க மாட்டியா? பொட்ட நாயி. பன்றிக்குப் பொறந்தவளே…”

அந்தப் பெண்ணின் குரல் பலமாகக் கேட்டது. “நான் எழுந்திருக்க மாட்டேன் எழுந்திருக்க மாட்டேன், மாட்டேன்.”

தரகன் தனது குரலைத் தணித்துக்கொண்டு, “கொஞ்சம் மெதுவா பேசும்மா. யாரு காதிலாவது விழப் போகுது. வா இப்போ எழுந்திரு. நான் உனக்கு முப்பதோ நாற்பதோ வாங்கித் தர்றேன்.”

அந்தப் பெண்ணின் குரலில் ஒரு மன்றாடல் மிகுந்தது. “பாரு, உன்னை கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன். நான் ராத்திரி ரொம்ப நேரம் கண் முழிச்சு இருந்துட்டேன். உன்னைக் கெஞ்சிக் கேட்கறேன் என் மேல கொஞ்சம் கருணை காட்டு. ஆண்டவன் பேருல மன்றாடிக் கேட்டுக்கறேன் இரக்கம் காட்டு.”

“ஒரு மணி நேரமோ ரெண்டு மணி நேரமோ அவ்வளவுதான், அதுக்கப்புறம் நீ நல்லா தூங்கலாம். மாட்டேன்னா அப்புறம் நான் உன்னிடம் ரொம்பக் கடுமையா நடந்துக்க வேண்டி வரும்.”

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. அவன் தட தடவென்று இரண்டடி எடுத்து அறைக்குள் நுழைந்தான். உள்ளிருந்து பிரகாசமான ஒளிவெள்ளம் வெளியில் பாய்ந்தது.

ஒரு சிறிய அறை தென்பட்டது. ஒரு பெண் கீழே தரையில் படுத்திருந்தாள். உள்ளே ஒன்றிரண்டு பாத்திரங்களைத் தவிர அந்த அறையில் பெரிதாக எதுவும் இல்லை. அந்தத் தரகன் அவள் காலடியில் அமர்ந்து அவள் கால்களை அழுத்திவிட்டுக் கொண்டிருந்தான். அவன் அவளிடம் “வாம்மா. ஒரு மணி ரெண்டு மணி நேரத்துக்கு மேல ஆகாது. அதுக்கப்புறம் தூங்கிக்கோ.”

நெருப்பு சூடு பட்டுக்கொண்ட சுண்டெலிபோல அவள் துள்ளி எழுந்து “சரி சரி, நான் இப்போ போறேன்” என்றாள்.

அவன் ஒதுங்கி நின்றான். சொல்லப்போனால் அவன் கொஞ்சம் பயந்து போயிருந்தான். முன்னங்கால்களால் மட மடவென்று கீழே இறங்கினான்.

அங்கிருந்து ஓடிப் போய்விடலாம் என்று கூட எண்ணினான். இங்கிருந்து. இந்த நகரத்திலிருந்து. இந்த உலகத்திலிருந்து. ஆனால் எங்கே போவது?

எண்ணிப் பார்த்தான். யார் இந்தப் பெண்? ஏன் அவளுக்கு இவ்வளவு கொடூரம் நடக்கிறது? யார் இந்தத் தரகன்? அவனுக்கும் அவளுக்கும் என்ன உறவு? ஏன் அவர்கள் குறைந்தது நூறு மெழுகுவர்த்திகளின் வெளிச்சம் தரும் ஒரு மிகப் பிரகாசமான பல்பு எரியும் அறையில் வசிக்கிறார்கள்? எவ்வளவு காலமாக அந்த அறைக்குள் வசிக்கிறார்கள்?

அந்த பல்பின் வெளிச்சம் அவன் கண்களை உறுத்தியது. அந்தப் பிரகாசமான கண்ணைக் கூச வைக்கும் ஒளியில் தன்னைச் சுற்றி உள்ள எதையும் அவனால் பார்க்க இயலவில்லை. அவன் யோசித்தான். ஏன் இவ்வளவு பிரகாசமா ஒரு விளக்கு? இதை விட ஒரு சிறிய பல்பை மாட்டியிருக்கக் கூடாதா? பத்து பதினைந்து மெழுகுவர்த்திகளின் ஒளியைக் கொடுக்கும் சிறிய மின்சார விளக்கு போதுமே அந்த அறைக்கு வெளிச்சம் தருவதற்கு.

அவன் தன்னை மறந்து யோசனையில் ஆழ்ந்திருந்த சமயம் பின்னால் யாரோ வரும் காலடியோசை கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். இரண்டு மனித நிழல்கள் அவன் அருகில் நீண்டு விழுந்து கிடந்தன. ஒரு நிழல் அவனைப் பார்த்து, “பார்த்துக்குங்க. உங்களுக்குதான்.”

அவன், “பார்த்துட்டேன்” என்றான்.

“ஓகேயா?”

“ஓகே.”

“நாற்பது ரூபாய்.”

“ஓகே.”

“இப்பவே என்கிட்டே கொடுக்கணும்.”

அவன் இப்போது பகுத்தறியும் நிலையை இழந்துவிட்டான். தனது பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து கொத்தாக சில ரூபாய் தாள்களை வெளியில் எடுத்து அந்தத் தரகனிடம் நீட்டினான்.

“எண்ணிப் பாரு. எவ்வளவு இருக்கு?”

நோட்டுகளை என்னும் சப்தம் கேட்டது.

அந்தத் தரகன், “ஐம்பது ரூபாய் இருக்கு” என்றான்.

அவன் “அம்பது ரூபாய் வச்சுக்க.”

“சலாம் பாபு.”

அவன் தலையில் ஒரு கல்லைப் போட்டுக் கொன்றுவிடலாமா என்று அவனுக்குத் தோன்றியது.

அந்தத் தரகன், “கூட்டிட்டுப் போயிக்குங்க. அவளை ரொம்பக் கஷ்டப்படுத்தாதீங்க. ஒரு மணிநேரமோ ரெண்டு மணிநேரமோ கழிச்சு கொண்டுவந்து விட்டுடுங்க.”

“நான் பார்த்துக்கறேன்.”

அவன் அந்தக் கட்டடத்திலிருந்து வெளியேறியபோது அந்தக் கட்டடத்தில் மாட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தான். இந்தப் பெயர்ப் பலகையை இரண்டு வருடங்களுக்கு முன்பு பல நூறு முறை வாசித்திருக்கிறான்.

ஒரு டோங்கா வாசலில் காத்துக் கொண்டிருந்தது. அவன் அதை நோக்கி நடந்தான். அந்தப் பெண் அவன் பின்னால் தொடர்ந்தாள்.

அந்தத் தரகன் மீண்டும் ஒருமுறை சலாம் வைத்தான். மீண்டும் ஒருமுறை அவனை ஒரு கல்லை விட்டு எறிந்து கொன்றுவிட்டால் என்ன என்று தோன்றியது.

டோங்கா கிளம்பியது. கொஞ்சம் சுமாரான ஹோட்டல் முன்பு போய் நின்றது. தன்னை இதுகாறும் அலைக்கழித்த பதற்றம் கொஞ்சம் அடங்கவே அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவள் முற்றிலும் சேதமடைந்து காணப்பட்டாள். அவள் கண்கள் வீங்கிப் போயிருந்தன. அவள் பார்வை கீழ் நோக்கியிருந்தது. எப்போது வேண்டுமானாலும் தூங்கி விழுந்து விடுபவளைப்போல இருந்த அவளின் இடுப்பிற்கு மேலிருந்த பகுதி எந்த

நேரமும் இடிந்து விழக் காத்திருக்கும் கட்டடத்தின் பகுதிபோல முன்னோக்கி வளைந்திருந்தது.

அவன் அவளிடம், “கொஞ்சம் தலையைத் தூக்கிப் பாரு” என்றான்.

அவள் வெகுண்டு,””என்ன?” என்றாள்.

“ஒண்ணுமில்லை” என்ற அவன், “ஏதாவது பேசு” என்றான்.

அவள் கண்கள் நான்கைந்து சிவந்த மிளகாய்களைத் தேய்த்துக் கொண்டதைப்போல ரத்தச் சிவப்புடன் இருந்தன. அவள் பேசாமல் இருந்தாள்.

“உன் பெயர் என்ன?”

“எனக்கு பெயர் இல்லை” அவள் குரல் அக்கினி திராவகம்போல கொதித்தது.

“எங்கிருந்து வர்ற?”

“நான் எங்கிருந்து வந்தா பரவாயில்லைன்னு நீ எதிர்பார்க்கிறாய்?” என்றாள்.

“ஏன் உன்னிடம் இப்படி ஓர் ஆவேசம்?”

இப்போது அந்தப் பெண் தனது தூக்கத்திலிருந்து முழுவதும் விடுபட்டிருந்தாள். இருந்தாலும் சிவப்பு மாறாத கண்களினால் என்னை விழித்து நோக்கி, “உன் வேலையைப் பாரு. நான் போகணும்.”

அவன் கேட்டான். “எங்கே போகப் போற?”

அவள் வறண்ட குரலில் ஆனால் அலட்சியமாக “எங்க இருந்து கூட்டிகிட்டு வந்தியோ அங்கே” என்றாள்.

“நீ இப்பவே போகலாம்.”

“என்ன செய்யணுமோ அதை செஞ்சுட்டு என்னை விட்டுடுய்யா. ஏன் தொந்தரவு பண்ற?”

அளவுக்கதிகமான பரிவைக் குரலில் வரவழைத்து அவளிடம் “உன்னை

நான் தொந்தரவு செய்யலை. எனக்கு உன் மேல் பரிதாபமா இருக்கு” என்றான்.

அது அவளை மேலும் சினப்படுத்தியது. “உன் பரிதாபம் ஒண்ணும் எனக்குத் தேவையில்லை.”

சொல்லிவிட்டு கிட்டத்தட்ட அலறும் குரலில், “உனக்கு என்ன வேணுமோ அதைப் பண்ணிக்கிட்டு போய்யா... எனக்குப் போகணும்” என்றாள்.

அவன் தனது கரத்தை அவள் தலையில் ஆதரவாக வைக்கக் கொண்டுபோனான். அவள் வேகமாக அதைத் தட்டிவிட்டாள்.

“இந்தா பாரு. என்னை தொந்தரவு செய்யாதே. நான் ரொம்ப நாளா கண்ணு முழிச்சுகிட்டு இருக்கேன். நான் இங்கே வந்ததிலிருந்து எனக்கு தூக்கமே கிடையாது.”

தலை முதல் கால்வரை அவள் மேல் அவனுக்குக் கருணை பொங்கியது.

“தூங்கு. இப்பவே இங்கேயே தூங்கு” என்றான்.

அவள் கண்கள் மேலும் சிவப்பாயின. கூர்மையான த்வனியில், “நான் உன்னோட ஒண்ணா தூங்கறதுக்கு வரவில்லை. மேலும் இது என் வீடு கிடையாது” என்றாள்.

“அதுதான் உன் வீடா... நீ இருந்த வீடு?”

அவள் மேலும் எரிச்சலடைந்தாள். “உவ்ஃப்... உன்னோட வெட்டிப்பேச்சை நிறுத்தறியா? எனக்கு வீடுன்னு எதுவும் இல்லை. வந்த வேலையைப் பாரு. இல்லை என்னை எங்கிருந்து கூட்டிகிட்டு வந்தியோ அங்கே கொண்டு விட்டுட்டு. உன் பணத்தை திருப்பி வாங்கிட்டு போ அந்தக்...” என்று காது கூசும் ஒரு வசைச் சொல்லுடன் முடித்தாள்.

அவளிடம் பேசுவது பயனளிக்காது என்பது அவனுக்குத் தெரிந்தது. அவளுடைய நிலை அப்படி. அடுத்தவர்களின் இரக்கத்தைப் பெறும் நிலையையும் கடந்துவிட்டாள். எனவே அவன் அவளிடம், “வா திரும்பிப் போகலாம்” என்றான். அவளை மீண்டும் அந்த நூறு மெழுகுவர்த்திகளின் ஒளி சக்தியுடைய பல்ப் மாட்டிய அறையில் கொண்டுவிட்டான்.

மறுநாள் கேய்ஸார் பூங்காவின் அருகில் ஒரு மட்டமான ஹோட்டலில் தனது நண்பனிடம் முதல்நாள் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூறினான். நண்பனுக்கும் அது பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. சீற்றத்துடன், “அவள் ரொம்பச் சின்னப் பொண்ணா?” என்று கேட்டான்.

அவன், “தெரியவில்லை. அவள் முகத்தைக் கூட என்னால் சரியாப் பார்க்க முடியலை. அப்போ எனக்கிருந்த ஒரே நினைப்பு அந்தத் தரகன் தலையில் ஒரு கல்லைப் போட்டுக் கொன்னுடலாமா என்பதுதான்.”

“ஆமாம், அப்படிப் பண்ணியிருந்தால் அது ஒண்ணுதான் நீ அவளுக்குக் காட்டிய மிகப் பெரிய கருணையா இருந்திருக்கும்.”

அவனால் அந்த ஹோட்டலில் நெடுநேரம் உட்கார்ந்திருக்க முடியவில்லை.முதல் நாள் நிகழ்வுகள் அவன் மனதில் பாரமாக ஆடிக் கொண்டிருந்தன. அவசர அவசரமாக ஒரு தேநீரை மட்டும் குடித்துவிட்டு அவன் கிளம்பினான்.

அவனுடைய நண்பன் டோங்கா ஸ்டாண்டை நோக்கி நடந்தான். பின்தொடர்ந்து சென்ற அவன் அந்தத் தரகனைத் தேடினான். ஆனால் அவன் கண்களுக்குத் தரகன் தென்படவில்லை. மணி ஆறரை. அந்த வெறுப்பூட்டும் கட்டடம் அங்கேதான் இருந்தது. அவன் அதனை நோக்கி நடந்தான். சில நிமிடங்களில் அதனை எட்டி விட்டான்.

ஆட்கள் கும்பலாக இறங்கிக் கொண்டிருந்தாலும் அவன் வேகமாக அந்தப் படிகளில் ஏறினான். அவன் படிக்கட்டில் விளக்கின் பிரகாசம் பாய்வதைக் கண்டான். அவன் மேலே பார்த்தான். படிகளில் ஓசைப்படாமல் சென்றான். சில நிமிடங்களில் கடைசிப் படிக்கட்டை நெருங்கிவிட்டான். பளிச்சென்று ஒளிவெள்ளம் உள்ளேயிருந்து பாய்ந்ததே தவிர உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளே எந்த ஓசையும் கேட்கவில்லை. உள்ளே நுழைந்தான். அந்த அறையின் கதவு பாதி திறந்து கிடந்தது. அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு உள்ளே போனான். அந்த விளக்கு எங்கிருக்கிறது என்று பார்க்கக் கூட முடியவில்லை. அத்தனை பிரகாசம். அதன் ஒளி கண்களை நேரடியாக உறுத்தியது. அவன் முகத்தைத் திருப்பி வெளியில் உள்ள இருட்டில் பார்வையை ஓடவிட்டு அந்தப்

பிரகாசத்திற்குப் பழகிக் கொண்டான்.

மீண்டும் அந்த அறைக்கதவை நோக்கி நகர்ந்தான். அந்த பல்பின் ஒளிவெள்ளம் தன் மேல் விழாமல் ஜாக்கிரதையாக நடந்தான். அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அந்த அறைக்குள் நுழைந்தான். உள்ளே ஒரு பெண் பாயில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவன் முன்னால் குனிந்து அவளை நன்றாகப் பார்த்தான். அவள்தான். அவள் உறங்கிக்கொண்டுதான் இருந்தாள். துப்பட்டாவை முகத்தின் மீது போட்டுக்கொண்டு உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் மார்பு மூச்சுக் காற்றுக்கு ஏற்ப ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தவன் அலறும் நிலைக்குப் போய்விட்டான். தனது அதீத உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு அங்கே அவன் கண்ட காட்சி திகிலூட்டுவதாக இருந்தது. அந்தப் பெண்ணிடமிருந்து நான்கைந்து அடிகள் விலகி ஒரு மனிதன் மல்லாக்கக் கிடந்தான். அவன் தலை நசுங்கிக் கிடந்தது. அவன் அருகில் இரத்தம் குளம் கட்டியிருந்தது. இவை எல்லாவற்றையும் ஒருசேர பார்வையிட்டவன் படிக்கட்டை நோக்கி விரைந்தான். மடமடவென்று கீழே இறங்கினான். தடுமாறி விழுந்தான். நான்கைந்து இடங்களில் சிராய்ப்பு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாமல் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஓடினான். மிகவும் சிரமப்பட்டு தனது வீட்டை அடைந்தான். அன்றைய இரவு அவன் கனவுகள் எல்லாமே அதி பயங்கரமாக இருந்தன.

(உருது மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ரக்ஷந்தா ஜலில்)

# 6. சதை ஆறு

## கமலேஷ்வர்

ஜூக்னுவைப் பரிசோதித்த டாக்டர் அவளுக்குப் பால்வினை நோய் இல்லை என்பதை உறுதி செய்தாலும் காச நோய்க்கான அறிகுறிகள் நிச்சயம் தெரிவதாகக் கூறினார். மருந்துச் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு சத்தான ஆகாரம் சாப்பிடச் சொல்லி அறிவுறுத்தினார்.

அந்தப் பரிந்துரைக் குழு ஏற்கெனவே இந்தத் தொழிலைத் தடை செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்தது அவர்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அது எவ்வளவு தூரம் போகும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. மருத்துவப் பரிசோதனைகள் பலருக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டன. இப்ராஹிம் தரகன் மூலம் வரும் பெண்கள் பரிசோதனையில் 'தப்பித்தவர்கள்'. எனவே அவர்களுடைய சண்டித்தனம் பரவத் தொடங்கியது. தங்கள் வம்சாவளியை தம்பட்டம் அடித்துக்கொள்ளத் தொடங்கினர்.

இப்ராஹீம் நல்ல புஷ்டியான பெண்களைத் தேர்வு செய்து நகரத்தின் பல பகுதிகளில் அவர்கள் பரவுவதற்கு உதவி செய்து வந்தான். அவர்களை பத்திரமாகப் பார்த்துக்கொண்டதோடு மட்டுமில்லாமல் அவர்களைக் கூட்டிக்கொண்டு போகும் விபசார விடுதிகளுக்குப் பணமும் கட்டி வந்தான். ஒருமுறை ஜூக்னு இப்ராஹிமிடம் தன்னை அவனுடைய பகுதிகளில் ஒன்றை அவளைக் குடியேற்றக் கேட்டுக் கொண்டதற்கு அவளை மட்டம் தட்டுவதுபோல, “இது என்ன கல்யாணமா ஒரே தடவை ஒரு பார்ட்டியை ஏமாத்த? யாரு வந்தாலும் உன் உடம்பை இஞ்சு இஞ்சா அளப்பானுங்க” என்றான்.

ஜுக்னு மனதளவில் உடைந்து போய்விட்டாள். தான் அந்த அளவிற்கா கேடு கெட்டுப் போய்விட்டோம்? அடுத்த அடி பக்கத்து அறையில் இருந்த ஷெஹனா. அவளைக் கேவலமான ஜாடை காட்டி பழி சொன்னபோது விழுந்தது. “அர்ரே அல்லா உனக்கு சைத்தானோட வழியத்தான் காட்டுவாரு. ஒரு மனுசனும் உன் வீட்டுக் கதவைத் தட்ட மாட்டான்.”

மொத்த முஹல்லாவும் இந்தச் சம்பவத்தால் கதி கலங்கிப் போயிருந்தது. அவளது சாபம் மறைக்கப்பட்டது. இந்தத் தொழிலில் ஒருத்திக்கு எத்தனை துயரம் வந்தாலும் ஒருவரை ஒருவர் வாழ்த்தி முகமன் கூறிக் கொள்வதுதான் வழமை. “உன்னுடைய ஆண்கள் நீடூழி வாழட்டும்.” “அல்லா உனது ஆண்களுக்கு நல்ல வேலையையும் திண்மையான தொடைகளையும் வழங்கட்டும்.”

அதே நாள்தான் அவன் முதன்முறையாக அங்குத் தயங்கியபடி வந்தான். விதியைத் தன்னுடன் கொண்டுவந்தான். காக்கி பேன்ட்டும், நீல நிற மேல் சட்டையும் அணிந்திருந்தான். கையில் ஒரு துணிப்பை. மெலிதாக தாடி வைத்திருந்தான். அவன் சிகையில் புழுதி படர்ந்திருந்தது. ஜுக்னு அறைக்குள் நுழைந்து திவானில் அமர்ந்து கொண்டாள். அவன் பையை எங்கே வைப்பது என்று எண்ணியபடி நின்று கொண்டிருந்தான். அவள் எவ்வித முனைப்புமின்றி அதை எடுத்து தலையணை பக்கமாக வைத்தாள். அவன் அமைதியாக ஜுக்னுவின் அருகில் அமர்ந்தான்.

சிறிது நேரம் கழித்து ஜுக்னு, “உங்க கால் ஷூவை கழற்றிடுங்க” என்றாள். அவன் ஷூவைக் கழற்றியதும், கெட்ட நாற்றம் வீசியது, ஆடவர்கள் சட்டையைக் கழற்றியதும் அடிக்குமே ஒரு நாற்றம் அதைப்போல. குறிப்பாக அந்த குமாஸ்தா மன்சூவிடமிருந்து வருமே ஒரு நாற்றம் அது மாதிரி. இதுவரை மன்சூ பதினொரு இரவுகளில் அங்கு வந்து அவள் அறைக் கதவைத் தட்டியிருக்கிறான். ஒவ்வொரு முறை எல்லாம் முடிந்தபின்பு அவன் மெத்தை மேல் முதுகுவலி காரணமாக இறுக்கமாக அமர்ந்திருப்பான். ஜுக்னுதான் கை கொடுத்து எழுந்திருக்க உதவி செய்ய வேண்டும். அவன் தொடைகள் இரண்டும் உரசி உரசி நடந்து செல்வான். அந்த உரசல் சத்தம் ஜுக்னுவிற்கு நாராசமாக

ஒலிக்கும். அடுத்தது இந்தக் கன்வர்ஜீத். ஹோட்டல் முதலாளி. இவனிடமும் துர்நாற்றம். கூடுதலாக அவன் எல்லாம் முடிந்தபின்பு புளித்த ஏப்பம் வேறு விடுவான்.

ஒருமுறை அந்த நாற்றம் பொறுக்காமல், “உன் ஏப்பத்தைத் திருப்ப எடுத்துக்கிட்டு கிளம்பு” என்றாள்.

அவன் திரும்பவும் ஏப்பம் விட்டு மெத்தையிலேயே உட்கார்ந்திருந்தான். ஜுக்னுவிற்குக் கடுப்பானது.

அவனை ஒருநிமிடம் உற்றுப் பார்த்த ஜுக்னு, “இது ஒண்ணும் வரவேற்பறை இல்லை; உன் வேலையை முடிச்சிட்டு இடத்தை காலி பண்ணு” என்றாள் எரிச்சலுடன்.

அவனுக்கு தான் அவமானப்படுத்தப்பட்டது பிடிக்காமல் அதனை எதிர்க்கும் விதமாக “உன் பெயர் என்ன?” என்று கேட்டான்.

“ஜுக்னு.”

“எந்த இடத்திலிருந்து வர்ற?”

“உன் வேலையை பார்த்துட்டுப் போ.”

அங்கு வரும் அத்தனை ஆடவர்களைப் போலவே கேட்டான். “உனக்கு இந்தத் தொழில் பிடித்திருக்கிறதா?”

“எனக்கு பிடிச்சிருக்கு. உனக்கு...” என்றவள் மெத்தையில் படுத்துக்கொண்டு சேலையைத் தொடை வரை மேலே இழுத்தாள். அவனும் அவள் அருகே படுத்துக்கொண்டு தைரியமில்லாமல் அவள் இரவிக்கைக்குள் கையை விட முயன்றான்.

அவள் அவனைத் தட்டிவிட்டு, “என்னை தொந்தரவு செய்யாம இருந்தா உனக்கு புண்ணியம். எதுக்கு அதைப் போய்த் தொறக்கற?” என்று கேட்டாள்.

அவனுக்குத் தொடங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. ஜுக்னுவின் முகத்தில் மட்டமான பௌடர் திட்டு இருந்தது. அதே திட்டு கழுத்திலும் தெரிந்தது.

உதட்டில் காய்ந்துபோன இரத்தத் திட்டுகள். தவளையின் கண்களைப்போல காதுத் தோடு தொங்கிக் கொண்டிருந்தது. தலையில் எண்ணெய் பூசியிருந்தாள். தலையணை கேவலமாக இருந்தது. படுக்கை விரிப்பு காய்ந்து போன மல்லிகைப் பூவைப் போலிருந்தது. அந்தச் சின்ன அறையில் கெட்ட நாற்றம் ஒன்று அடித்தது. ஒரு மூலையில் மண்பானையில் நீர் இருந்தது. இன்னொரு மூலையில் கொஞ்சம் கந்தல் துணிகள்.

அவன் படுக்கையில் படுத்துக்கொண்டு சுற்றும் முற்றும் பார்வையை ஓடவிட்டான். படுக்கையின் அருகில் ஒரு சின்ன அலமாரி. அலமாரியின் மேலே எண்ணெய்த் தீற்றுகள். அதன் மேல் உடைந்த சீப்பு, மட்டமான நெயில் பாலிஷ் பாட்டில், நான்கைந்து கொண்டை ஊசிகள் சிதறிக் கிடந்தன. அலமாரி கதவில் ஒன்றிண்டு பெயர்களும், சில தொலைபேசி எண்களும் குறித்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் சில சினிமா பாட்டுப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சவுரி முடிக் கற்றைகள் பாம்பைப்போல சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையின் சூழல் அவனுக்கு வெறுப்பேற்றியது. ஓய்விற்காக அவன் ஜுக்னுவின் திறந்து கிடந்த தொடையில் கைகளைப் போட்டான். செத்த மீனைப் போல அது வழுக்கியது. கம்பளம்போல சொர சொரப்பாகவும் இருந்தது. அவள் அவன் கைகளைத் தட்டி விட்டாள். அது அவள் தொடை அருகில் படுக்கையின் மேல் விழுந்து படுக்கையை ஈரமாக்கியது.

“இது பணம் சம்பாதிக்கும் நேரம். இந்த நேரத்தில் நான் நாலுபேருடன் படுத்து காசு பார்த்திருப்பேன்” என்று கூறிய ஜுக்னு அவனைத் தோள்களோடு சேர்த்து இருக்கிக் கொண்டாள்.

அவன் எழுந்து உட்கார்ந்ததும் ஜுக்னு அவன் பையைத் திறந்து பார்த்துவிட்டு வாயைப் பிளந்தாள். “அட, இவ்ளோ பணமா வச்சிருக்க?” என்று அதிசயப்பட்டாள். அவள் வியப்பு அவனுக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. மாறாக, தன்னிடம் மேலும் காசு கறைப்பதற்கு நடிக்கிறாள் என்று அவன் எண்ணிக் கொண்டான். முதல் முறையாக அவளை கவனமாகப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் கிளம்பினான்.

ஜுக்னு எப்போதும் தெருவில் இறங்கும்போது தலைக்கு முட்டாக்கு போட்டுக் கொள்வாள். தன்னைக் கடந்து செல்லும் ஆண்களை அவள் என்றுமே தன்னைக் கேலி செய்ய அனுமதித்ததே இல்லை. அவள் அவர்கள் அனைவருக்கும் சொந்தம் என்ற பார்வைதான் அவர்களிடம் இருக்கும். தனது வாடிக்கையாளர்களையும், நன்கு தெரிந்த நபர்களையும் மட்டும் அவள் ஏறெடுத்துப் பார்ப்பாள். பிறகு ஒருநாள் அவள் அதே மனிதனை அதே காக்கி பேன்ட் நீல நிற பாப்ளி சட்டையுடன் பார்த்தாள். கையில் அதே பை. கட்டடத்தின் முதல் தளத்தில் நின்றுகொண்டு இடது முழங்கையை ஜன்னல் விளிம்பு ஒன்றில் சாய்த்து மறு கையால் பீடி புகைத்துக் கொண்டிருந்தான். கட்டடத்தின் மேலே பறந்து கொண்டிருந்த சிவப்புக் கொடியின் நிழல் அவன் தோள்களில் விழுந்து கொண்டிருந்தது. அவள் செருப்பை மாட்டிக் கொள்வதற்கு நிற்பவளைப்போல நின்றவள் அவன் உள்ளே சென்றிருப்பான் என்று நினைத்தாள்.

அன்று இரவு அவன் வந்தான். அவன் கண்களில் பரிச்சயமான முகபாவம். இந்த முறை அவன் கோழையாக நடந்து கொள்ளவில்லை.

படுக்கையில் அமர்ந்திருந்த அவனிடம் அவள், “என்ன வேலை பார்க்கற?” என்று கேட்டாள்.

“ஒண்ணுமில்லை. நான் ஒரு தொழிலாளி.”

“எனக்கும் வேலை கொடு. நானும் ஒரு தொழிலாளிதான்” என்றாள்.

“இன்னிக்கு நீ லேட்டா?” என்று கேட்டான். “இன்னிக்கு எனக்கு உடம்பு சரியில்லை” என்றாள் அவள் சிரத்தையில்லாமல்.

“என்ன ஆச்சு?”

“பின் கழுத்தில் ஒரே வலி. உடம்பெல்லாம் கூட வலிக்குது. ஏன்னு தெரியல. நான் வேணா தாராவை கூப்பிடட்டுமா? தாரா நல்ல பொண்ணு. ரொம்ப இணக்கமா நடந்துக்குவா.”

அவளது கொடையை அவன் நிராகரித்தான். ஆவலுடன் சிறிது நேரம் வெறுமனே உட்கார்ந்திருந்து விட்டுக் கிளம்பும்போது, “சும்மா அப்படியே வந்தேன்” என்றான். எதுவும் பேசாமல் இருட்டில் படிகளில் இறங்கி

வெளியேறினான். அவன் இன்னொரு அறையின் படிகளில் ஏறுவான் என்று அவள் நினைத்தாள். தெருவில் நடமாட்டம் அவ்வளவாக இல்லை. தூரத்தில் நான்கைந்து பேர்கள் கூடி நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் யாராவது ஒருவர் படி ஏறி வரலாம். பேக்கரி கடையிலிருந்த சிம்னியிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது. அவளது பார்வை அவன் பின்னோடு போனது. அவன் எங்கும் நிற்கவில்லை. மெதுவாக அந்தத் தெருவில் நடந்து மெயின் ரோடுக்குப் போய்ச் சேர்ந்தான்.

ஜுக்னுவிற்கு மகிழ்ச்சியானது. படுக்கையில் வந்து மகிழ்வுடன் அமர்ந்தாள்.

அறை ஈரமாகவும் புழுக்கமாகவும் இருந்தது. கதவை மூடிக்கொண்டு ஒரு சினிமா பாட்டுப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள். கதவு தட்டப்படும் ஓசையும் கூடவே அம்மா, “ஜுக்னு கண்ணு, அந்தப் பொறுக்கி போயிட்டானா?” என்று கேட்பதும் காதில் விழுந்தது.

“உள்ள யாருமில்லை அம்மா.”

“அப்படின்னா பால்கனில வந்து நில்லு தங்கம். வெளிய காத்து ஜிலு ஜிலுன்னு வருது. வீதியும் கலகலன்னு இருக்கு.” அம்மாவின் அன்பிற்குப் பின்னால் காரணம் இருக்கிறது.

கதவைத் திறந்ததும் உள்ளே வந்த அம்மா, “நீ சொஸ்தமாயிட்டியா?” என்று கேட்டாள்.

“என்னமோ சரியில்லை அம்மா.”

“ஒரு லோட்டா பால் குடி செல்லம். இன்னும் நேரம் கிடக்கு. யாருன்னா வரலாம்.”

அவள் எழுந்து பால்கனிக்கு வந்தாள். அம்மா அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். டயர் போல இடுப்பில் சதை ஏறிக் கிடப்பதை கவனித்தாள். “உன் ஆரோக்கியத்தில் நீ அக்கறை காட்ட மாட்டேங்கிற. இதைப் பாரு. உனக்கு உடற்பயிற்சி வேணும்” என்றாள். பக்கத்து அறையிலிருந்து எழுந்த அலறல் சப்தத்தைக் கேட்டுவிட்டு முணுமுணுத்துக்கொண்டே அதை நோக்கி நகர்ந்த அம்மா, “சிறுக்கி...

ஒரு அமளி இல்லாம இந்த நாய்க்கு அடங்கத் தெரியாது. பாரு ஒருநாளைக்கு இல்லாட்டி ஒரு நாள் அந்த ரூமில் ஒரு கொலைதான் விழப் போகுது."

இது வழமைதான். அம்மா பிகிஸை இப்படிதான் சாபமிடுவது வழக்கம். தன் அறைக்குள் நுழையும் எவனும் திரும்பிப் போகும்போது முதுகுவலி இல்லாமல் போகக் கூடாது என்பது அவளது தீர்மானம். அவளும் அதை ரசிப்பாள். ஆண்கள் அவள் அறையிலிருந்து அகன்றதும் வாசலுக்கு வந்து, "ஜுபேதா பாரேன், ருஸ்தம் எப்படி பின்வாங்கினான்னு. தான்தான் பலசாலின்னு நினைப்பு. இனிமேல் இன்னொரு பொம்பளையோட அவனுக்கு படுக்கத் தோணும்னு நினைக்கற?" சொல்லிவிட்டு கைதட்டுவாள்.

எரிச்சலடைந்த ஒரு வாடிக்கையாளன் ஒருமுறை, "இது என்ன கூத்து?" என்று கேட்டான்.

"தோட்டி மகனே, இந்தா இதை எடுத்துட்டுப் போயி புதுப் பாலேடு வாங்கித் தின்னு" என்று அவன் கொடுத்த பணத்தை அவன் முகத்தில் விட்டெறிந்தாள்.

அவன் அவமானத்துடன் படிகளில் இறங்கிப் போனான். மொத்த கட்டடமும் பில்கிஸ் நடந்து கொள்ளும் விதத்தால் திகிலடைந்து போயிருக்கும். எந்த நேரம் அவள் தனது வாடிக்கையாளர்களுடன் சண்டை பிடிப்பாள் என்பது யாருக்கும் தெரியாது. எதைப் பற்றியும் கவலைப்படாமல் மோசமான சைகைகள் காட்டி காறி உமிழ்வாள், "என்னமோ வர்றவனுங்க அத்தனை பேருக்கும் கன்னி கழியாதவளோட படுக்கறதா நினைப்பு."

பில்கிஸ் ஜுக்னுவைப் பார்க்கும்போதெல்லாம் "போயி எந்த அறையிலாவது உட்காரு" என்பாள். ஜுக்னு பதிலே பேச மாட்டாள். அவளுக்கு அடுத்தவர்களுடன் சண்டை போடத் தெரியாது. பில்கிஸ் ஒரு வாயாடி. அவள் அம்மாவைக்கூட சில சமயம் விட்டு வைக்க மாட்டாள். ஆனால் அம்மா அவள் உடல்நலனில் அக்கறை கொள்வாள். எப்போதும் கொஞ்சம் கடுமையான த்வனியில் அவள் உடல் குறித்துப்

பிடுங்கிக்கொண்டே இருப்பாள். "உடம்பைப் பாரு, எருமையாட்டம் ஆக்கி வச்சிருக்க. மொதல்ல சாட்டின் உள்பாவாடை கட்ட ஆரம்பி. உருளைக்கிழங்கு சாப்பிடுவதை நிறுத்து."

சுபேதாவின் வயிறு தொளதொள என்று ஆனதை முதலில் பார்த்துவிட்டு அவளுக்கு ஒரு இடுப்பு பெல்ட் வாங்கி வந்தாள். "காலையில பூரா இதை இடுப்பில் இறுக்கிக் கட்டிக்கோ. அடிக்கடி டீ சாப்பிடுவதை நிறுத்து." அம்மா அனைவருக்கும் ஆடம்பரமான சோளிகள் வாங்கி வருவார். அம்மாவின் கவலை ஒன்றே ஒன்றின் மீதுதான், "என் கட்டுப்பாட்டில் இருந்தால் காலத்தை உங்களுக்காக நான் நிறுத்தி வைப்பேன்."

மதிய நேரங்களில் அம்மா எவளாவது ஒருத்தியின் சவுரியை அலசிக்கொண்டோ, ஒருத்தியின் புடைவைக்கு இஸ்திரி போட்டுக்கொண்டோ இருப்பாள். வசந்தகாலம் வந்தால் அவர்களுக்குப் பெரும்பாலும் பளீர் மஞ்சளில் புடைவை எடுத்துக் கொடுப்பாள். பண்டிகைகளுக்குக் கலர் கலராக ஸ்கார்ஃப் வாங்கிக் கொடுப்பார். அம்மா ஈகைப் பெருநாள், பக்ரீத் இரண்டையும் கொண்டாடும் அதே உற்சாகத்துடன்தான் தீபாவளியையும், ஹோலிப் பண்டிகையையும் கொண்டாடுவார். சில சமயம் கமலாவைப் பற்றி நினைப்பு வந்தால் கண்கள் ஈரமாகி, "ஆயிரம் கர்ப்பப்பை தோன்றினாலும் அப்படி ஒரு சிசுவைத் தரிக்க முடியாது. அவளுடைய அபரிமித அழகு கடவுள் அவளுக்கு அளித்த கொடை. லேசா தொட்டால்கூட அவள் ஒளி குன்றிவிடும். கூட இருந்தவங்க பொறாமையே பாவம் அவளை அழிச்சிடுச்சு. கேடிப்பசங்க அவளுக்கு விஷம் வச்சிட்டாங்க. எப்படி வேதனையால துடிச்சா. பாவி என்னால் அவளை ஆஸ்பத்திரிக்குக்கூட கூட்டிக்கிட்டு போக முடியாமப் போச்சு."

ஜுக்னு இடைகழியில் நின்று தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் தேய ஆரம்பித்தது. பூ விற்பவர்களும், மாலை தொடுப்பவர்களும் நடையைக் கட்டத் துவங்கி விட்டனர். தினம் போலவே மன்னத் ஒரு பூச்சரத்தைத் தூக்கி கலாவதியின் ஜன்னலுக்குள் எறிவதையும் அதற்கு அவள் பசப்பிச் சிரித்து

அவனுக்குப் பொய்யான சாபமிடுவதையும் பார்த்தாள். பன்னே ஒரு இறுக்கிக் கட்டிய வேட்டியும் மேலே சல்லாத் துணியில் அரைக்கைச் சட்டையும் அணிந்துகொண்டு ஷெஹனாவின் அறைக்குள் நுழைந்தான்.

பாதி கிறுக்குபோல தோற்றமளிக்கும் சன்னிலால் ஷங்கரின் பீடாக் கடையின் முன்பிருந்த திண்ணையில் தனது அழுக்குத் துணியை விரித்தான். கையில் ஒரு பித்தளைக் கிண்ணத்தில் டீயை உறிஞ்சியபடி முணுமுணுத்துக் கொண்டிருந்தான். “இரக்கமில்லாதவளே... என்னிக்காவது ஒரு நாளைக்கு நீ தாளம் தப்பிப் பாடும்போது உன் கைய வெட்டறேன். இதோ இந்தக் கந்தல் துணி மேலதான்டி நமக்கு முதல் இரவு. இரக்கமில்லாதவளே...” என்று போதையில் உளறினான்.

இதற்கு நடுவில் ஜுக்னு திரும்பியும் அந்த நீல நிறச் சட்டைக்காரனை ரோடின் முனையில் நிற்பதைப் பார்த்தாள். அவன் திரும்பியும் வந்துவிட்டான்போல. அவன் ஏதாவது ஒரு படிக்கட்டில் ஏறிக் கதவைத் தட்டுவான். இல்லை, அது வெறும் மாயத் தோற்றம்தான். அது அவன் இல்லை.

பல தினங்கள் கழிந்து அவன் மீண்டும் வந்தான். ஜுக்னு அறைக்குள் நுழைந்தவன் ஷூவைக் கழற்றாமல் அவள் படுக்கையில் ஏறி அமர்ந்து கொண்டான்.

“உன் பெயரையாவது சொல்” என்றாள் ஜுக்னு.

“மதன்லால். எதுக்கு கேக்கற?”

“சும்மாதான். ஆமாம் எங்கே உன்னை இந்தப் பக்கமே காணோம்?”

“ஜெயிலுக்குப் போயிருந்தேன். தடுப்புக் காவலில் உள்ள போட்டுட்டாங்க.”

“ஏன்?”

“ஒரு போராட்டம் நடந்தது. முதலாளிமாருங்க எங்களை உள்ள வச்சுட்டாங்க. ஆனா ரொம்பக் கஷ்டப்பட்டுதான் வெளிய வர முடிஞ்சுது.”

“இந்தப் போராட்டமெல்லாம் பயனுள்ளதுதானா? ஏன் பண்றீங்க?”

“அவங்க நோட்டீஸ் எதுவும் கொடுக்காம எங்களை பணிநீக்கம் செஞ்சாங்க. வேற காரணமும் இருக்கு. உனக்கு அதெல்லாம் புரியாது. நான் என் ஷூவைக் கழற்றிடட்டுமா?” என்று அவன் தயக்கத்துடன் கேட்டான்.

“ஓ... கழற்றுங்களேன்.”

அவனது பழைய ஷூவிலிருந்தும், துவைக்காத உறையிலிருந்தும் கிளம்பிய துர்நாற்றத்தை இன்று அவள் பொருட்படுத்தவில்லை. எரிச்சலைக் கிளப்பும் அந்த நாற்றம் மெல்ல மெல்லப் பழகிவிட்டது.

மதன்லால் போனாலும் அவனுடைய துர்நாற்றம் இன்னும் மீதம் இருந்தது. மதன்லால் வந்து போய்க்கொண்டிருந்த வேளையில்தான் அவர்கள் அனைவரும் குழந்தை நல மருத்துவரிடம் பரிசோதனைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். அப்போதுதான் மருத்துவர் அவளுக்குப் பால்வினை நோய் எதுவும் இல்லை என்றும், காசநோயின் ஆரம்ப அறிகுறிகள் தென்படுவதாகவும் சொன்னார்.

சீக்கிரமே அவளுக்கு இருமல் அதிகரித்தது. அடிக்கடி காய்ச்சல் வந்தது. அம்மா அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். ஆனாலும் அவள் உடல் நிலையில் அதிக முன்னேற்றம் இல்லை. மெல்ல மெல்ல அவள் அவளுடைய தொழிலுக்கு ஏற்றவளாக இல்லாமல் போனாள். ஒரு நாள் இரத்தம் கக்கினாள். பில்கிஸ் பயத்தில் அலறினாள். “இந்த இடத்திலிருந்து அவளை வெளியேற்றுங்கள். நாங்களும் காசநோய் தொற்றிச் சாகணுமா?” அம்மா பில்கிஸ் அப்படிப் பேசியதற்குக் கடிந்துகொண்டாலும் போகப் போக அவளும் மனம் மாறினாள். அவள் ஜுக்னுவிடம் ஆரோக்கியம் கருதி வேறு இடத்திற்குப் போகச் சொன்னாள். வேண்டுமென்றால் கொஞ்சம் பணம் கூட எடுத்துக்கொண்டு போகச் சொன்னாள்; ஆனால் அவளது தேக ஆரோக்கியம் முக்கியம்.

ஜுக்னுவிற்கு எங்கே போவது என்று ஒரு யோசனையும் கிடையாது. அவளிடம் பணம் இல்லை. எவ்வளவு கைக்குக் கிடைத்தாலும் இரண்டு நாட்களுக்கு மேல் தங்குவதில்லை. நாளாவட்டத்தில் அவள் ஒரு சானிட்டோரியத்தில் சேர்க்கப்பட்டாள். அவள் கையிலிருந்த காசு கரைந்து

போனது. அவள் அங்கே மூன்று அல்லது நான்கு மாதங்கள் தங்கியிருந்தாள். அப்படியும் தேக நலனில் பெரிய முன்னேற்றம் எதுவுமில்லை. அவளுக்கு வெளியுலகத் தொடர்பு மறுக்கப்படவில்லை என்றாலும் அம்மாவை ஓரிரு முறைதான் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள். அம்மா அவளுக்கு, “நீ எங்கு இருக்கிறாய் என்பதை யாரிடமும் வெளிக் காட்டிக்காதே. நான் இங்க இருக்கறவங்க கிட்டே எல்லாம் ராம்பூரில் இருக்கும் உன்னோட சகோதரி வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொல்லி வச்சிருக்கேன். ஆனா இந்தப் பாழாப் போற இன்ஸ்பெக்டர் மட்டும் நீ வேற ஒரு இடத்தில் தொழில் பண்ணுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்” என்று புத்திமதி கூறினாள்.

அம்மாவின் கண்களில் சிறிது பரிவு ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும்தான் அவள் கொஞ்சம் சமாதானம் ஆனாள். அம்மாவிற்கு அவளுடைய தேகம் வியாதியின் காரணமாக உருக்குலைந்து வருவதைப் பார்க்க வருத்தமாக இருந்தது. தோல் வறண்டு போக ஆரம்பித்தது. முடி கொட்டியது. முகத்தின் பொலிவு மங்கத் தொடங்கியது.

ஜுக்னுவிற்குக் கண்ணாடியில் தனது பிம்பத்தைப் பார்க்க பயமாக இருந்தது. இனிமேல் என்ன நேரிடும்? மீதி நாட்களை அவள் எவ்வாறு கழிக்கப் போகிறாள்? அவளிடம் எண்ணிப் பார்த்தால் கையிருப்பு என்று ஒன்றுமே இல்லை. அவளுக்கு வேறு வேலை எதுவும் தெரியாது.

அவர்கள் தொழிலை அரசாங்கம் முடக்கிய போதிலும் வாரணாசியிலிருந்தும், லக்னோவிலிருந்தும் பெண்கள் சப்ளை தொடர்ந்த வண்ணம் உள்ளது. இந்தப் புதுப் பெண்கள் இந்தத் தொழிலின் தர்மத்தையே குலைத்து விடுபவர்கள்போல நடந்து கொள்கின்றனர். ஷெஹனா வாழ்வுக்குப் போராடுகிறாளாம். கலாவதி நசிந்து வருகிறாளாம். கேள்விப்பட்டாள். அவள் மனச்சோர்விற்கு ஆளானாள்.

கடைசியாக அம்மாவிடம் பணம் கேட்கப் போனபோது அம்மா தனது குறைகளைச் சொல்லி ஒரு பாட்டம் அழுதாள். அம்மாவின் வாழ்வும் நடுக்கமுறத் தொடங்கிவிட்டது. மீண்டும் சானிட்டோரியத்திற்குத் திரும்பும் வழியில் அவளுக்குப் பரிச்சயமான ஆண்களைப் பார்த்தாள். அவர்களை

அவளுக்குத் தெரியும். இதே ஆண்கள் அவள் தொழிலில் கொடி கட்டிப் பறந்தபோது அவள் அறையை வட்டமிட்ட வண்ணம் இருந்தவர்கள்தான்.

அந்த குமாஸ்தா மன்சூ தனது கடையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அவளுக்கு வெறுப்பு எழுந்தது. அவன் படுக்கையில் கிடந்த விதம், அவன் முதுகு வலிக்கு அவள் அளித்த சிகிச்சை, அவன் தொடைகள் இரண்டும் உரசி உரசி நடந்து செல்வது.

கன்வர்ஜீத், அந்த ஹோட்டல் முதலாளி, தனது கல்லாவில் அமர்ந்து காசை எண்ணிக் கொண்டிருந்தான். அவன் எப்போதும் கேவலமாக விடும் ஏப்பம் அவளுக்குக் குமட்டலைதான் வரவழைக்கும்.

ஜுக்னு நெடுநாட்கள் அந்த சானிட்டோரியத்தில் இருக்கவில்லை. அவள் மீண்டும் வர நேர்ந்தது. தக்க நேரத்தில் தனக்கு உதவி புரிந்த அனைவருக்கும் அவள் நன்றிக் கடன்பட்டவளானாள். மருந்துச் சீட்டுக்குப் பின்னால் தான் யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறோம் என்று எழுதி வைத்திருந்தாள். கழுத்து வரை கடன் இருந்தது. கன்வர்ஜீத் அவளுக்கு மொத்தம் நாற்பத்தியேழு ரூபாய் கடன் கொடுத்திருக்கிறான். மன்சூ அவளுக்குத் தர வேண்டிய பாக்கிப் பணத்தைக் கூடிய விரைவில் கொடுத்து விடுமாறு நிர்பந்தித்தான். என்னவோ அவன் தரவேண்டிய இருபத்தைந்து ரூபாய் இல்லாவிட்டால் அவனது வியாபாரம் படுத்துவிடும் என்று ஒரு நினைப்பு.

அந்தப் பட்டறைக்காரன் சாந்தாராம் அவளுக்கு இருபத்தைந்து ரூபாய் கடனாகக் கொடுத்தான். ஆனால் ஒரே ஒரு மட்டமான நிபந்தனையுடன். “வட்டிக்கு பதில் மாசம் ஒரு தடவ என்னோட படுக்கணும்.” அவனது வக்கிர புத்தி அவளுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் ஒரு விஷயம் தெளிவானது. அவளை விரும்புபவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவள் உடல் அப்படி ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை.

ஒருமுறை அவசியமென்று அவள் மதன்லாலிடமிருந்து கூட முப்பது ரூபாய் கடனாக வாங்கி வந்தாள். “இது நான் வாங்கி வெச்சிருக்கும் நன்கொடையின் ஒரு பகுதி. முடிந்தால் இதை நீ சீக்கிரம் திருப்பித் தரப் பார். என்னிடம் என் செலவுகளைச் சமாளிக்க வேறு சேமிப்பு இல்லை”

என்றான். அவன் கெஞ்சும் குரலில் சொல்லியபடி அந்தத் தொகையை அவளிடம் கொடுத்தான். ஜுக்னு தன்னைத் தப்பிதமாக எண்ணிவிடக் கூடாது என்பதற்காக வார்த்தைகளை அளந்து அளந்து பேசினான். தனது கட்சி அலுவலகத்திலிருந்து வெளியேறும் முன்னர் அவளிடம் தான் ஒன்றும் அத்தனை பெரிய பணக்காரன் இல்லை என்பதைக் கூறினான். அவளுடைய தேவை அப்படி. அவன் கொடுத்த பணத்தையும் அவள் வெட்கமில்லாமல் வாங்கிக் கொண்டாள்.

அவள் சானிட்டோரியத்திலிருந்து திரும்பியதும் போலீஸ் அவளைப் பின்தொடர்ந்தது. போன ஏழு மாதங்களாக அவளிடமிருந்து அவர்களுக்கு வரவேண்டிய மாமூல் தொகை வசூல் ஆகாதது காரணம். அவள் குடியிருப்பில் அவர்கள் ஒவ்வொரு பெண்ணிற்கு ஒவ்வொரு மாமூல் தொகையை நிர்ணயித்திருந்தனர்.

அவள் தொழிலுக்குத் திரும்பியதும் மிகவும் பலவீனமாக உணர்ந்தாள். அவள் உடல் எந்த அழுத்தத்தையும் தாங்க முடியாமல் இருந்தது. அவளுடைய வாடிக்கையாளர்கள் ஆர்வமுடையவர்களாக இருந்தால் அவளுக்குத் தாங்க முடியாத வேதனையாக இருக்கும். அவளுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தாலும் ஆண்கள் தங்கள் முழு எடையுடன் அவள் மேல் கிடப்பார்கள்.

அவளுக்குத் தொழிலில் புதிதாக இறங்குவதுபோல, முதன் முதலில் ஏற்பட்ட அனுபவம் போலவே இருந்தது. கிலி, படபடப்பு எல்லாம் இருக்கும்.

கலாவதியிடமிருந்து ஏழு ரூபாய் கொடுத்து ஒரு சவுரி வாங்கிக் கொண்டாள். பிராவில் உள்ளே துணி வைத்துத் தைத்துக் கொண்டாள். உள்ளே பஞ்சு வைப்பதும் ஒவ்வொரு முறை அதனை அகற்றுவதும் மரண வேதனையாக இருந்தது. கஞ்சி போட்ட புடைவைகளையே அவள் இழிவாகக் கருதினாலும் பஞ்சு வைத்த பிராக்கள் அவளை மேலும் எடுப்பாகக் காட்டின என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வளவு பிரயத்தனப்பட்டும் அவள் நினைத்தபடி வரும்படி கிடைக்கவில்லை. சில இரவுகள் ஆண்கள் இல்லாமல் கழியும்.

அப்போதெல்லாம் தனது வருங்காலம் குறித்த யோசனையிலும், சிதைந்துகொண்டே வரும் தனது உடல் நிலை குறித்த யோசனையிலும் இரவைக் கழிப்பாள். எதற்கும் லாயக்கில்லாத ஆண்கள் அவளுக்குக் கோபத்தை ஏற்படுத்தினர். அவர்கள் அவளுடைய ஒவ்வொரு சதையையும் தோண்டித் துருவி எழுச்சி ஏற்படும் வரையில் அவளைப் பாடாய்ப் படுத்துவார்கள். உடலெங்கும் விரல்களால் அளந்து கேவலமான சைகைகளைப் புரிவார்கள்.

தோட்டா நிரப்பப்பட்ட துப்பாக்கிகளைப்போல வரும் ஆண்களையே அவள் விரும்பினாள். வந்தோமா துப்பாக்கியை எடுத்து இரண்டு நிமிடத்தில் சுட்டோமா என்று போய்க்கொண்டே இருப்பார்கள். வள வள என்று பேசிக்கொண்டிராமல் வந்த காரியத்தில் குறியாக இருந்துவிட்டு போய்விடுவார்கள். இருந்தாலும் வருமானம் போதவில்லை. அவள் கடன் தீரவில்லை. அவள் மருந்துச் சீட்டுக்குப் பின்னால் எழுதி வைத்திருந்த கடன் தொகையைப் பார்த்தபோது அவள் கையில் போதுமான பணம் இல்லை என்பது புரிந்தது.

பணம் சம்பாதிப்பதைத் தவிர அவளுக்கு வேறு மார்க்கமில்லை. உள்ளூர் மருத்துவரிடம் தொடை மடிப்புகளின் நடுவில் முளைத்திருக்கும் கொப்புளங்களைக் காட்டச் சென்றபோது வழியில் மன்சூவைப் பார்த்தாள். “கொஞ்ச நாளா உன்னோட தொழில் சூடு பிடிக்க ஆரம்பிச்சுடுச்சுபோல. காசிக்குப் போயிருந்தேன். கங்கையில் மூழ்கும்போது இனிமேல் தேவிடியா வீட்டுக்குப் போகறதில்லைன்னு சங்கல்பம் பண்ணிகிட்டேன். இதோ பாரு துளசிமணி மாலை கூட போட்டுக்கிட்டு இருக்கேன்” என்றான்.

மன்சூ அப்படிச் சொன்னதும் ஜுக்னு வாய் விட்டுச் சிரித்தாள். அவன் அவளைக் கண்கள் விரிய ஆச்சரியத்துடன் பார்த்தான்.

தொடையின் உள்ளே உள்ள கொப்புளங்களுடன் அவளால் அத்தனை எளிதாக நடக்க முடியவில்லை. கால்களைச் சற்று அகட்டி அகட்டிதான் நடக்க முடிந்தது. அவள் அப்படி நடந்த விதம் மன்சூவிற்குக் கிளர்ச்சி ஓடியது.

“நீ அதுக்கு எப்போ ஏற்பாடு பண்ணப் போற?”

“உனக்கு தைர்யம் இருந்தா நீயே வந்து எடுத்துக்க” தனது இயலாமையை மறைத்துச் சீண்டி விடும் த்வனியில் கூறினாள். தனது பதிலை நினைத்து அவளுக்கே அருவருப்பாக இருந்தது. கொஞ்சம் யோசித்ததில் அதில் என்ன தவறு என்று தோன்றியது? இனிமேலும் என்ன பொல்லாத அந்த ‘நல்ல பெயர்’ வேண்டிக் கிடக்கிறது? இவ்வளவு கடனை வைத்துக்கொண்டு சாகலாமா? எவ்வளவுக்கெவ்வளவு திருப்பிக் கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. உள்ளூர் மருத்துவர் அந்தக் கொப்புளம் பழுக்க இன்னும் இரண்டு மூன்று நாட்கள் ஆகும் என்றும் அதுவரை அதன் மேல் ஒரு பிளாஸ்திரி போட்டு மூடிக் கொள்ளுமாறு சொன்னார். மதியம் அவள் திரும்பி வந்தபோது குடியில் இருந்த அத்தனைப் பெண்களும் பல் தேய்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த நேரம்தான் அவர்கள் அனைவரும் அமர்ந்து இரவிற்குத் தங்களைத் தயார் செய்துகொள்ளும் நேரம்.

இதற்கு நடுவில் தெருவில் நான்கைந்து விடலைப் பையன்கள் கடந்து சென்றனர். அங்கிருக்கும் பெண்களை அசிங்கமாக சைகைகளினால் வெறுப்பேற்ற, அந்தப் பெண்கள் அந்தப் பையன்களின் அப்பா அம்மாக்களை வசை பாட இழுத்தனர். தினமும் அந்தப் பொறுக்கிப் பையன்கள் கடந்து போகும்போதும் இதே ரகளைதான். வயதான பெண்கள் பதிலுக்கு அவர்களின் அப்பா அம்மாக்களை வசை பாடினால், இளவயசுப் பெண்கள் வெறும் புன்னகையால் அவர்களை நிராகரிப்பார்கள். சில நேரங்களில் ஹாசன், பன்வாரி அல்லது கால் முடமாகிப் போன மட்டாடின் அந்தப் பையன்களை வீதி கடைசி வரையில் துரத்திச் சென்று விட்டு வருவார்கள். அப்போதும் அந்தப் பொடியன்கள் அடங்காமல் அங்கே நின்று தங்கள் டவுசர்களையும் முட்டியையும் உயர்த்தி கேலி செய்வார்கள். மசூதிக்குப் பின்னால் இருக்கும் காலனியிலிருந்து வரும் பையன்கள்.

மதிய நேரம்தான் அங்கிருக்கும் பெண்கள் ஒருவரை ஒருவர் நலம் விசாரிக்கும் நேரம்; ஒருவர் அடுத்தவரைப் பற்றி வம்பு பேசும் நேரம். அவர்கள் இலக்கு நிச்சயமாக இப்ராஹிம் நகரத்தின் முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்லும் அழகும், வனப்பும் மிகுந்த

இளம்பெண்களைப் பற்றிதான் இருக்கும்.

மாலை மயங்க மயங்க தெரு உயிர்ப்புடன் விழிக்கும். பூக்காரர்கள் தங்கள் வியாபாரத்தைத் தொடங்குவார்கள். பீடாக் கடை சுறுசுறுப்பாகிவிடும். ஒரு போலீஸ்காரன் கஃபூர் கடையின் முன் வந்து நின்றுகொள்வான். அதன் பிறகு கஃபூர் எவ்விதத் தடையுமின்றி பாட்டில்களை விற்க ஆரம்பிப்பான்.

ஜுக்னு இரவு வேளைகளில் தனது தொடையில் இருக்கும் பிளாஸ்டரைக் கழற்றிவிடுவாள். விருப்பமேயின்றி ஒப்பனை செய்துகொள்வாள். கொப்புளம் பழுக்க ஆரம்பித்துவிட்டது. வலி அதிகமானது. இருந்தும் அவளால் ஓரிரு வாடிக்கையாளர்களை மட்டுமே திருப்தி செய்ய முடிந்தது.

பால்கனியில் அமர்ந்து தனது எதிர்காலம் குறித்த கவலையில் மூழ்கியிருந்தாள். அச்சம் மூட்டும் தருணங்கள். என்ன ஆவாள்? ஒவ்வொரு பிடி சோற்றுக்கும் யாரையாவது சார்ந்தே இருக்க வேண்டும். நொண்டிக் குதிரையாக எவ்வளவு நாள் வாழ்க்கையை ஓட்டுவது? தலையில் ஒரு முக்காடைப் போட்டுக்கொண்டு ஏதாவது ஒரு பள்ளிவாசல் முன்பு அமர்ந்து பிச்சை எடுக்கும் நிலைக்குதான் தள்ளப்படுவாளா? இந்த நினைப்பு அவளை மீறும்போது அக்தாரி, பீகாபொன், சம்பா போல தானும் விஷம் குடித்து உயிரை மாய்த்துக் கொண்டுவிடலாமா அல்லது ஓடும் நதியில் குதித்து மூழ்கிவிடலாமா என்று எண்ணுவாள்.

எத்தனையோ ஆண்கள் அவள் வாழ்வில் கடந்து போயிருக்கின்றனர்; ஒருவர் கூட அவள் ஒதுங்க நிழல் கொண்டுவந்ததில்லை.

பரிச்சயமான ஆண்கள் என்றால் அவள் கடன் வாங்கிய ஆண்கள்தான். ஆனால் அவர்களிடம் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? அவர்கள் தொடர்ந்து வரப் போவதில்லை. பின் எப்படி அவர்களை நம்ப முடியும்? வேசிகளுக்கு வயதானால் நாடிவரும் ஆண்கள் அவர்களை அண்டுவதில்லை. பிள்ளைகள் பெரிதானதும் அவர்கள் அவளைத் தேடி வர மாட்டார்கள். கெட்ட நடவடிக்கைகளில் சீரழிய ஆண்களுக்குப் பல்லாயிரம் பொழுதுபோக்குகள் உள்ளன. பிறகு யார்தான் அவளைத் தேடி வருவார்கள்? பார்த்த பழைய முகங்களில் ஒன்று கூட அவளுடைய

வாழ்வின் விளிம்பில் எட்டிப் பார்க்க மாட்டார்கள். எவ்வளவு கேவலம்! என்ன ஒரு இழி நிலை! இதுவரை வாழ்ந்த நாட்களுடன் சற்றும் தொடர்பில்லாத ஒரு வாழ்க்கையை வாழ்வது எவ்வளவு வேதனை தரும்? அவளுக்கு ஆறுதல் கடன் கொடுத்தவர்களிடமிருந்து மட்டுமே கிடைத்தது. மன்சூ கூடிய விரைவில் வருவான் என்று எதிர்பார்த்தாள். அதேபோல அவனும் வந்தான்.

அதே பரிச்சயமான நாற்றம். மன்சூ இரவு பதினொரு மணிக்கு வந்தான். வழக்கம்போல எல்லாம் ஆனதும் முதுகு வலியால் விறைப்புடன் உட்கார்ந்திருந்தான். ஜுக்னுவும் களைப்புடன் படுத்துக் கொண்டிருந்தாள். கொப்புளத்தின் வீரியம் அவளை வாய்விட்டுக் கதற வைத்தது. அவள் எழுந்து மன்சூவைத் தூக்கி நிறுத்துவதற்குத் தெம்பின்றிக் கிடந்தாள்.

முதுகுவலி கொஞ்சம் குறைந்ததும் அவன், “என் பணத்தையும் கொஞ்சம் ஞாபகம் வச்சுக்கோ” என்றான்.

ஜுக்னு புரிந்துகொண்டதன் அடையாளமாகத் தலையசைத்தாள். பிறகு அவனைப் படுக்கையிலிருந்து எழுவதற்கு உதவி புரிந்தாள்.

இரவின் பெரும்பகுதி போய்விட்டது. ஜுக்னு தனது படுக்கையில் படுத்தபடி வெற்றுச் சுவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பார்ப்பதற்கு எதுவுமில்லை அங்கே. தூசி படர்ந்த அழுக்கான சுவர்கள். இவற்றின் மீதுதான் ஒரு காலத்தில் பிரபலமான திரை நட்சத்திரங்களின் படங்களைப் பிரபல பத்திரிகைகளிலிருந்து கிழித்து ஒட்டி வைத்திருந்தாள். சுவரில் ஒரு கம்பியில் பழைய வளையல்கள் அடுக்கடுக்காகத் தொங்கிக் கொண்டிருந்தன. சுவரின் அருகில் தரையில் ஒரு காலியான நகப் பாலிஷ் பாட்டில் திறந்து கிடந்தது.

ஒரு மெல்லிய மெத்தையும் ஒரு சின்னத் தகரப் பெட்டியும் அவளது படுக்கைக்குக் கீழே வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெட்டியில் ஒரு காகிதத் துண்டு இருந்தது. அதன் மீது இருந்த எழுத்துக்கள் மங்கலாகத் தெரிந்தன. அது இப்போது அர்த்தமில்லாமல் போயிருந்தது. அதன் மீது இருந்த ஈர்ப்பு கூட இப்போது இல்லை. எவரால் பின் நோக்கி நகர முடியும்? அல்லது கடந்த காலத்தில் இங்கிருந்து எவரால் குரல் எழுப்ப

இயலும்? வலிந்து நெளிந்து செல்லும் கால நதி வாழ்க்கைகளின் நடுவில் ஓடுகிறது. காலநதி போகப் போக அகலமாக, கரைகள் தொலைதூரத்தில் விலகிப் புள்ளிகளாகத் தோன்றுகின்றன.

மறுநாள் காலையில் அவள் விழித்தபோது அசாத்தியமாக உடல் வலித்தது. அந்தக் கொப்புளங்களின் வலி தாங்க முடியாமல் உள்பக்கத் தொடை பிளந்துவிடுவதுபோல வலித்தது. அவள் ஒருவழியாகக் கஷ்டப்பட்டு எழுந்து மாலைக்குத் தயாராகத் தொடங்கினாள். மீண்டும் அந்தப் பிளாஸ்டரை அகற்றினாள். தான் அடைக்க வேண்டிய கடன் தொகையைக் கூட்டிப் பார்த்தாள்.

அலமாரியின் கதவின் உள்பக்கத்தில் தான் கடன் கழிக்க வேண்டிய கடனாளிகளின் வருகையையும் இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கிறது என்பதையும் குறித்து வைத்திருந்தாள். பட்டறைக்காரன் சாந்தாராம் திமிராக நடந்து கொண்டான். வெறும் இருபது ரூபாய்க்கு அவன் நான்கு முறை வந்து போய்விட்டான். ஐந்தாவது முறை முடிந்து அவன் கிளம்பும்போது ஜுக்னு அவனிடம், “ஒண்ணும் கொடுக்காம போவியா?” என்று கேட்டதற்கு, “எதுக்கு கொடுக்கணும்?” என்று கேட்டான்.

“போன தடவையோட உன் கடன் தீர்ந்து போச்சு” என்று அவள் மெல்லிய ஆனால் உறுதியான குரலில் கூறினாள்.

“இது வட்டிக்கு” என்று பரிகாசத்துடன் கூறிவிட்டுச் சிரித்தவன், “காசு சும்மா கிடைக்காது. தெரிஞ்சுதா?” என்றுகூறிவிட்டு மறுவார்த்தை பேசாமல் படியிறங்கிப் போனான். ஜுக்னுவால் வெற்றுப் பார்வை மட்டுமே பார்க்க முடிந்தது. மற்ற பெண்களைப்போல அவளால் தனது வாடிக்கையாளர்களுடன் மல்லுக்கு நிற்க முடியாது. அல்லது வாய்ச்சண்டை போடத் தெரியாது. ஆண்களை அவமரியாதை செய்யும் பழக்கம் அவளிடம் இல்லை.

கன்வர்ஜீத்திடமிருந்து மட்டும் மிகப் பெரிய தொகையை வாங்கியிருக்கிறாள். அவன் இதுவரை மூன்று முறை வந்திருக்கிறான் - பதினைந்து ரூபாய் கழிந்திருக்கிறது - மன்சூவின் இருபது ரூபாய் கழிக்கப்பட்டு விட்டது. ஜுக்னுவிற்குத் தனது கடன் சுமை குறைந்ததில்

கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது. ஆனால் திடீரென்று அவளுடைய தொடையில் இருந்த கட்டியிலிருந்து அதீதமான வலி ஏற்பட்டது. வேதனையில் தனது கால்கள் இரண்டையும் அகட்டி வைத்துப் படுத்துக் கிடந்தாள்.

கதவு சத்தம் போட்டது. வெளியில் மதன்லால் நின்று கொண்டிருந்தான். அவனை அங்கே பார்த்ததும் அவளுக்கு முதலில் எரிச்சல் வந்தது. இன்னொரு கடன்காரன் கடனை வசூலிக்க வந்திருக்கிறான் என்ற நினைப்புதான் அந்த எரிச்சலுக்குக் காரணம். கொஞ்ச நாட்களாகவே மதன்லால் அவளைத் தேடி வருவதில்லை. எனவே அவன் வருகை அவளை முதலில் மகிழ்ச்சியடைய வைக்கவில்லை. வேறுவழியில்லாமல் அவள் அவனை உள்ளே அழைத்தாள். அவன் உள்ளே நுழைந்து படுக்கையில் வந்து அமர்ந்து கொண்டான். அவன் தனது பையை அவளுடைய தலையணையின் அருகில் வைத்தான். அவள் அந்தப் பையை மெல்ல தொட்டுப் பார்த்தாள். சில போஸ்டர்கள், ஒரு சுருட்டி மடக்கி வைக்கப்பட்ட கொடி ஒன்று, கூடவே இரண்டு மூன்று பழைய ரெஜிஸ்டர் நோட்டுகள். அவன் கொடுத்த பணத்தைப் பணமாகவே கேட்பானோ என்று இதயம் அடித்துக்கொள்ளத் தொடங்கியது. தொடையில் இருந்த கட்டி ஏற்படுத்திய வேதனை வேறு குறைவதாகத் தெரியவில்லை.

அவன் அதே பழைய ஷூ, பழைய சட்டையை அணிந்திருந்தான். அவனுடைய வியர்வை நாற்றம் அறையில் பரவத் தொடங்கியது.

“ரொம்ப நாள் கழிச்சு வந்திருக்கீங்கபோல” என்றாள்.

“என் ஷூக்களை கழற்றலாமா?” என்று கேட்டான்.

“ஓ தாராளமாக” என்றாள்.

“கதவை மூடி விடட்டுமா?”

“நான் இன்னிக்கு தாங்க முடியாத வலியில் அவதிப்படுகிறேன். ஒரு கட்டி என்னோட உள்தொடையில் பெருசாயிகிட்டு வருது. நான் காலை நேரா நீட்டிக்கறேன். மடக்கினா வலி உயிர் போகுது” என்றாள். மதன்லால்

சட்டென்று பெல்ட்டைக் கழற்றிக் கொண்டிருந்தவன் நிறுத்திவிட்டான். அவனுக்குக் கொஞ்சம் அவமானமாகப் போனது. ஜுக்னுவிற்கும் அது விநோதமாகதான் இருந்தது. ஆனால் அவன் அவளிடம் பரிவுடன் பேசி அவளுக்கு எழுந்த குற்ற உணர்ச்சியைப் போக்கினான். அவன் பல விஷயங்கள் குறித்துப் பேசிக்கொண்டிருந்தான். ஆனால் அவளுக்குதான் அவன் எங்கே நடுவில் பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்டுவிடுவானோ என்றிருந்தது.

"சரி அப்போ நான் கிளம்பறேன்" என்று கூறிவிட்டு மதன்லால் பை வைத்திருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அவளைப் பிரிய வருத்தப்படுபவன்போல ஜுக்னுவைப் பரிவுடன் பார்த்தான். ஜுக்னுவிற்கும் அவனை இருக்கச் சொல்ல முடியவில்லை. அவள் மெதுவாக அந்த திகிலூட்டும் விஷயத்தைப் பற்றிக் கேட்டாள். "உங்க பணம்..."

"அதனால்தான் நான் இங்கே வரவில்லை" என்ற மதன்லால், "இப்போ உனக்காக வந்திருக்கிறேன்" என்றான். அவள் புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"நான் இங்கே வந்தால் எங்கே நான் பணத்தைக் கேட்டுவிடுவேனோ என்று நீ தயங்கலாம் இல்லையா? இப்போ ஏன் வந்தேன் என்றால் உன் மீது உள்ள ஆசை" என்றான்.

அவன் அக்குளில் படர்ந்திருந்த வியர்வை கருந்திட்டாக மை போல காட்சியளித்தது. ஈரமான தனது கரங்களால் ஜுக்னுவின் கரங்களைப் பற்றினான். அந்தக் கரங்களின் மென்மையையும், இளஞ்சூட்டினையும் உணர்ந்தாள்.

"வருத்தப்படாத, நான் திரும்பவும் இன்னொரு நாள் வர்றேன்" என்று கூறிவிட்டு அவன் மறைந்தான். ஜுக்னு உடனே பால்கனிக்கு ஓடினாள். அவன் மீண்டும் வரவேண்டும் என்று நெடுமூச்செறிந்தாள். அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் இரண்டு மூன்று வீதிகளைக் கடந்ததும் திரும்பிப் பார்த்தான். அவன் அப்படி வீதியில் நின்றதை அவளால் தாள முடியவில்லை. அவன் அங்கிருந்த மாடத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் படிகளில் ஏறினான். என்னவோ தெரியவில்லை அவனது

அந்தச் செயல் அவளைக் காயப்படுத்தியது. அவளுடைய கட்டி அதிகமான வேதனையை அளித்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த வேதனை வடிவது போலிருந்தது. அவள் அவனைப் போக வேண்டாம் என்று தடுத்திருந்தால் ஒருவேளை அவன் வேறு படியின் மீது ஏறியிருக்க மாட்டன். அவனுக்கும் தேவைகள் இருக்கும்தானே? அவளுடைய வேதனை மட்டுப்பட்டிருந்தது. அவன் அவளை விட்டு விலகிச் சென்றது அவளுடைய அவதியை மதித்துதானே? அந்த ஈரக் கரத்தின் சூடு ஒன்றும் ஏமாற்றுவதைப்போல தெரியவில்லை.

அவள் அங்கே நின்று கொண்டிருந்தபோது கன்வர்ஜீத் வந்தான். அழையாத விருந்தாளி. இருந்தாலும் ஜுக்னு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

பில்கிஸ் ஒரு மூலையில் நின்று பருமனான ஆடவன் ஒருவனுடன் பேசிக் கொண்டிருந்தாள். ஜுக்னு எதுவும் பேசாமல் கன்வர்ஜீத்தை உள்ளே அழைத்துச் சென்றாள். அவன் தனக்குப் பின்னாலிருந்த கதவைச் சார்த்தித் தாள் போட்டான்.

“இன்னிக்கு எனக்கு வலி அதிகமாயிடுச்சு. கட்டி நல்லா பழுத்துடுச்சு.” ஜுக்னுவின் குரலில் வேதனையும் விரக்தியும் மிகுந்திருந்தது.

“இன்னும் கட்டி சரியாகலியா?” என்றான் கன்வர்ஜீத்.

“இல்லை இன்னும் ஒண்ணு ரெண்டு நாளில் உடைஞ்சிடும்னு நினைக்கறேன்” என்றாள். இன்னிக்கு விட்டுடு என்ற கெஞ்சுதல் அதில் தெரிந்தது.

“உனக்கு வலிக்கவே வலிக்காது. மெதுவா செஞ்சுட்டுப் போயிடறேன்.”

சொல்லியபடி கன்வர்ஜீத் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

“இன்னிக்கு இரவு...” ஜுக்னு ஆரம்பித்தாள். ஆனால் கன்வர்ஜீத் அவளை மெதுவாகத் தனது அருகில் கிடத்தினான். ஜுக்னு இப்போது முற்றிலும் எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டாள். அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை. அவன் தனது கைகளை அவள் முலைகளின் மேல் போட்டான். அவள் மெதுவாக ஒருக்களித்துப்

படுத்தபடி விளக்கை அணைத்தாள். தனது மார்புக் கச்சைக்குள் இருந்த பஞ்சை அகற்றி படுக்கைக்கு அடியில் ஒளித்து வைத்தாள்.

அவள் பலமுறை கூக்குரலிட்டு கன்வரை நிறுத்தச் சொன்னாள். ஒவ்வொரு முறை கன்வர் தனது முழு எடையையும் அவளது தொடைகளின் மீது போடும்போது வலியில் உயிர் போனது. அதுபோன்ற சமயங்களில் கன்வர்ஜீத் தனது வேகத்தை மட்டுப்படுத்துவான். அவனுடைய மிருகவெறி அதிகரிக்கும்போது மீண்டும் வேகத்தைக் கூட்டுவான்.

“அர்ரே... நிறுத்துங்க” என்று அவள் அவனைக் கீழே தள்ளிவிட்டாள்.

“அம்மா கொல்றானே...” என்று அவள் போட்ட கூச்சல் நிஜமாகவே அவளை யாரோ கொல்வது போலவே கேட்டது. அவள் புரண்டு படுத்தாள். அவள் முற்றிலும் நிலை குலைந்து போயிருந்தாள்.

“நாயே...” என்று கூறியபடி அமர்ந்தவனுக்கு மூச்சு வாங்கியது.

அவளுக்குத் தன்னைச் சுதாரித்துக்கொள்ள ஒரு சில நிமிடங்கள் ஆயின. கொஞ்சம் கொஞ்சமாக அந்த வலி வடியத் தொடங்கிய பின்புதான் அவளால் தனது கால்களை அசைக்க முடிந்தது. தலையணைக்கு அடியில் இருந்து ஒரு துணியை எடுத்துக்கொண்டு விளக்கைப் போட்டாள். உடைந்த கட்டியிலிருந்து சீழ் வழிந்து அவள் தொடைகளை நனைத்திருந்தது. கன்வர்ஜீத் வழக்கம்போல ஏப்பம் விட்டான்.

“பாரு உடைஞ்சிடுச்சு” என்று எழுந்தான். ஜுக்னு புடைவையைக் கீழே இழுத்துத் தொடையை மறைத்துக் கொண்டாள். “ஞாபகம் வச்சுக்கோ. இது நான்காவது முறைதான்” என்று அவளுக்கு நினைவுபடுத்திவிட்டு கதவைத் திறந்து கிளம்பினான்.

அவன் போனதும் ஜுக்னு புடைவையை மேலே தூக்கி சீழை நன்றாக வழித்துத் துடைத்தாள். ஃபேட்டியைக் கூப்பிட்டாள். ஃபேட்டிதான் அவளுக்கு ஒரு மக்கில் நீர் கொண்டுவந்து கொடுத்தாள். ஜுக்னு அந்தப் புண்ணை நன்றாக அழுத்தித் துடைத்தபடி, “ஃபேட்டி, கொஞ்ச நேரத்துக்கு முன்னால ஒரு மனுஷன் விமலா ரூமுக்குள்ள நுழைஞ்சான். அவன் இன்னும் கிளம்பிப் போகலைன்னா அவனை இங்கே கூட்டிகிட்டு வா.

நீலநிற சொக்காயும், கையில் ஒரு பையும் வச்சுகிட்டு இருப்பான்” என்று அடையாளம் சொன்னாள்.

“அவரு இங்க வரும் கிராக்கியா?” என்று ஃபேட்டி கேட்டாள்.

“இல்லை தெரிஞ்சவன். இன்னும் கொஞ்சம் தண்ணி எடுத்துட்டு வர்றியா?”

ஃபேட்டி கையில் தண்ணீருடன் வந்தபோது, ஜுக்னு ஆழ்ந்த யோசனைக்குப் பின்பு, “விடு ஃபேட்டி, போயி உன் வேலையைப் பாரு. அந்த ஆளு இன்னொரு நாள் வருவதாக சொல்லியிருக்கிறார்.” அவள் அந்தக் கட்டியை நன்றாக அமுக்கி அதன் உள்ளிருக்கும் சீழை வலிக்க வலிக்க எடுக்கத் தொடங்கினாள். அவள் நெற்றியில் வியர்வை வழிந்து கொண்டிருந்தது.

(ஹிந்தி மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ஆராதனா பிரதான்)

# 7. கீர்த்தி பங்கம்
## பிரேம்சந்த்

நா ன் கதைகளிலும், வரலாற்று நூல்களிலும் சமஸ்தானங்களின் எழுச்சி குறித்தும், வீழ்ச்சி குறித்தும் மிகவும் ஆச்சரியமான, மிகவும் சுவாரசியமான கதைகளைப் படித்திருக்கிறேன். கண்ணுக்குப் புலப்படாத ஊழின் காரணமாக ஆண்டிகள் அரசர்களானதுண்டு; அரசர்கள் ஆண்டிகளானதுண்டு. வீதிகளில் குப்பை பொறுக்கிக் கொண்டிருந்த பெண்கள் தங்க சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளனர். எவருடைய கட்டளைக்கு ஊழ் கூட தலை வணங்குமோ அத்தகைய ஆடம்பரங்களை ஆராதிக்கும் பக்தர்கள் உருத்தெரியாமல் காக்கைகளுக்கும், பருந்துகளுக்கும் இரையானதுண்டு. ஆனால் இவை யாவும் எனக்கு நேர்ந்ததற்கு ஈடாகாது. ஓ! அவற்றை இப்போது எண்ணினாலும் எனது மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்கின்றன. எனக்கே நம்ப முடியாமல் உள்ளது. நான் ஏன் இன்னும் உயிருடன் இருக்க வேண்டும்? எதற்காக? அழகு ஒன்றுதான் அனைத்து ஆசைகளின் ஊற்றுக்கண். என் இதயத்திலும் ஆசைகள் பிறக்காமல் இருந்தனவா? ஆனால் அவற்றை எல்லாம் குரூர விதியின் கரங்கள் துடைத்து எறிந்துவிட்டன. என்னுடைய ஒவ்வொரு அசைவையும் பூஜித்து வந்த ஒருவன், எனக்காக அனைத்தையும் பலி கொடுக்க சித்தமாயிருந்தவன் ஒருநாள் என்னை இந்த அளவிற்கு அவமானப்படுத்துவான், என்னை அழித்துவிடுவான் என்று நினைத்திருப்பேனா?

நான் இந்த இல்லத்திற்குள் அடியெடுத்து வந்து இன்றோடு மூன்று வருடங்களாகிறது. அப்போதெல்லாம் இந்த இல்லம் பூத்துக் குலுங்கும்

ஒரு சோலையைப் போலிருக்கும். அந்தச் சோலை எங்கும் பறந்து, தென்றலில் தவழ்ந்து, கிளைகளில் பாடி, பூக்களில் உறங்கிய ஒரு வானம்பாடியாக நான் திளைத்தேன். சயீது என்னுடையவன், நான் அவனுடையவள். பளிங்குக் கற்களால் கட்டப்பட்டுள்ள குளத்தில் நாங்கள் காதல் சதுரங்கம் விளையாடினோம். “என்னுடைய காதல் நீ” என்பான் அவன். நான் பதிலுக்கு, “நீ என் உயிர்” என்பேன். எங்களது செல்வப் பாரம்பரியம் பிரமாண்டமானது. எங்கள் உலகில் கவலைகள் இல்லை. எங்கள் வாழ்வில் துயரங்கள் இல்லை. உடல் வேட்கை என்னும் தீராத பேரின்பத்தைத் தவிர வேறு எதுவும் எங்கள் உலகில் கிடையாது; ஆசைகள் மலர்ந்து மகிழ்ச்சி புன்னகைக்கும் வசந்தத்தின் மாயாஜாலத்தில் முடிவேயில்லாத பேரின்பம் அது. உலகம் எங்கள் ஆசைகளுடன் நகர்ந்தது. வானம் எங்களை வாழ்த்தியது. ஊழ் எங்கள் தோழனானது.

ஒருநாள் சயீது என்னிடம் வந்து, “என் ஆருயிரே! உன்னிடம் ஒரு விண்ணப்பத்துடன் வந்திருக்கிறேன். உன் புன்னகை ததும்பும் இதழ்களிலிருந்து மறுப்புச் சொல் எதுவும் வரக் கூடாது. எனது உடைமைகள் அனைத்தையும் உன் பெயருக்கு சாசனம் செய்து வைக்கிறேன்; என் சொத்துக்கள் முழுவதும் உனக்குதான். எனக்கு உன் காதல் ஒன்றே போதும். அதுவே எனக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம். என்னுடையது என்ற தனி அடையாளம் எனக்குத் தேவை இல்லை. உன் காலடியில் ஒரு யாசகனாகக் காலம் கழிக்கவும் சித்தமாயிருக்கிறேன். நீ என்னுடைய நூர்ஜஹான்; நான் உன்னுடைய சலீம். உன்னுடைய பவளம் போன்ற மெல்லிய பாதங்களில் என்னுடைய எஞ்சியுள்ள வாழ்நாளைக் கழிக்க விரும்புகிறேன்” என்று கூறினான். எனது கண்களில் நீர் நிரம்பியது. மகிழ்ச்சி அதன் உச்சத்தை அடைந்து கண்ணீர்த் துளிகளாக மாறியது.

•

இது நடந்து ஒரு வருடம் கூட ஆகியிருக்காது. சயீதின் நடத்தையில் ஒரு மாற்றத்தை நான் உணரத் தொடங்கினேன். எங்களுக்கு நடுவில் ஊடலோ

அல்லது மனத்தாபமோ எதுவும் இல்லை என்றாலும் அவன் பழைய சயீது இல்லை. ஒரு கணம் என்னைவிட்டுப் பிரிந்தாலும் துடித்துப் போகும் அவன் இப்போதெல்லாம் ஒரு இரவு, இரண்டு இரவுகள் என்று பல இரவுகள் நானில்லாமல் இருக்க ஆரம்பித்தான். முன்பு அவன் கண்களில் மின்னிய காதல் இப்போது இல்லை; அவன் நடத்தையில் முன்பு வெளிப்பட்ட தாபம் இப்போது இல்லை; அதேபோல் அவன் மனப்போக்கில் கனன்ற காதலின் வெப்பம் தணிந்து போயிருந்தது.

சிறிது நாட்களாகவே அவன் என்னை இவ்வாறு புறக்கணிக்க ஆரம்பித்ததும் என் கதறல் நில்லாமல் தொடர்ந்தது. நாங்கள் பாடித் திரிந்த காதல் நினைவுகள் என்னை வேதனைப் படுத்தியது. அந்த ஊற்றுக்கண் இத்தனை விரைவில் வடிந்துவிட்டதா? ஓ இல்லை, அந்த சந்தோஷ ஊற்று இன்னொரு சோலையை மலர வைத்துக் கொண்டிருந்தது. இறுதியில் நானும் சயீதைத் தவிர்க்கத் தொடங்கினேன். அவன் மீது அக்கறை இல்லை என்பது காரணம் இல்லை, அவன் கண்களை ஊடுருவிப் பார்க்கும் துணிச்சல் எனக்கு இல்லாமல் போனதே காரணம். அவனை வெறுமனே பார்த்தால் கூட காதலின் அற்புதங்கள் என் முன் தோன்றி என் விழிகளில் கண்ணீரை வரவழைத்துவிடும். என் மனம் இன்னும் அவன் பக்கம் என் கட்டுப்பாட்டையும் மீறி சாய்ந்துவிடுகிறது. ஏக்க மிகுதியால் அவன் பாதங்களில் விழுந்து, ‘என் உயிரே, எதற்காக இத்தனை கொடூரம்? ஏன் என்னைவிட்டு விலகிச் சென்று விட்டீர்கள்? நான் அப்படி என்ன தவறு இழைத்து விட்டேன்?’ என்று கதற நினைத்தேன். ஆனால் பாழாய்ப் போன கர்வம் என் முன்னே ஒரு சுவரென எழுந்து நின்றது. மெல்ல மெல்ல என் மனதில் எந்த அளவிற்குக் காதல் இடம் பிடித்திருந்ததோ அந்த அளவிற்குப் பொறாமை இடம் பிடிக்கத் தொடங்கியது. ஏமாற்றத்தால் விளைந்த நிதானம் எனது இதயத்தைச் சமாதானப்படுத்தியது. சயீத் என்னைப் பொறுத்தவரையில் வசந்த காலத்தில் மறந்துபோன ஒரு பாடல் போல ஆகிவிட்டான். என் நெஞ்சில் இருந்த காதல் வடிந்துவிட்டது. காதலின் ஜோதி ஊதி அணைக்கப்பட்டு விட்டது. இது மட்டுமன்று என் இதயத்தில் அவனுக்கிருந்த மதிப்பும் மரியாதையும் கூட அகன்று விட்டது. எந்த

மனிதனின் காதற்கோயில் புனிதம் கெட்டுப் போனதோ அவனுக்கு நான் தேய்வதும் அழிவதும் தெரியக் கூடாது.

ஒருநாள் நான் என்னுடைய படுக்கையில் படுத்தபடி ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தபோது ஓர் அழகான இளம்பெண் என் அறைக்குள் நுழைந்தாள். என் அறையில் ஒளி வெள்ளம் பாய்ந்தது போலிருந்தது. அவளுடைய அழகின் வெண்ணிற ஜ்வலிப்பு அங்கிருந்த சுவர்களில் பற்றிக்கொண்டு வெள்ளையடித்தது போலானது. அவளது ஆடம்பரமான அழகும், மலரைப் போன்ற வசீகர முகமும், இச்சையைத் தூண்டும் இனிமையும் என்னிடம் ஓர் அபரிமிதமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவளை எனக்கு எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. என்னுடைய அழகு குறித்த கர்வம் அவளின் முன்பு மண்ணைக் கவ்வியது. இந்த அழகிய இளம் ஜீவன் எதற்காக என்னுடைய அறைக்குள் வந்தது என்று வியந்து நின்றேன். என்னை நானே சமாதானப்படுத்திக்கொண்டு எழுந்து அவளிடம் விசாரிக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் சயீது உள்ளே நுழைந்தான். என் கர்வம் என்னுள் வளர்ந்து நின்றது. நான் எழுந்து நெஞ்சை நிமிர்த்தி நின்றேன். வியப்பைக் காட்டவேண்டிய விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன. சட்டென்று அந்தப் பெண் அழகிய தேவதையின் தோற்றத்தை இழந்து நச்சுப் பற்களுடன் சீறும் நாகம்போல தோன்றினாள். நான் என் படுக்கையில் அமர்ந்துகொண்டு மீண்டும் அந்தப் புத்தகத்தை விரித்து வைத்துப் படிக்கத் தொடங்கினேன். அந்த இளம்பெண் சுவரில் மாட்டியிருந்த என் புகைப்படங்களைப் பார்வையிட்டு விட்டு அறையை விட்டு அகலும் முன்னர் ஒருமுறை என் மீது பார்வையை வீசிவிட்டுச் சென்றாள். கனன்று புகையும் கரித் துண்டுகளைப்போல அவள் கண்கள் மின்னின. அதன் ஒளிக்கீற்றில் கொடிய பழி வாங்கும் செம்மையைக் கண்டேன். என்னுள் ஒரு வினா எழுந்தது. எதற்காக சயீது இவளை இங்கு அழைத்து வந்திருக்கிறான்? என் கர்வத்தை உடைத்தெறியவா?

•

சொத்து முழுவதும் என் பெயரில்தான் இருந்தது என்றாலும் அது வெறும்

கண்துடைப்புதான். அதன் முழு உரிமையும் சயீதிடம்தான் இருந்தது. பணியாட்கள் கூட சயீதைதான் எஜமானன் என்று எண்ணிக் கொண்டு என்னிடம் சில நேரங்களில் மரியாதைக் குறைவுடன் நடந்து கொள்கின்றனர். நான் பொறுமையுடன் எனது வாழ்நாட்களைக் கழித்து வந்தேன். இதயத்தில் அனைத்து நம்பிக்கைகளும் இல்லாமல் போன பிறகு வலியை மட்டும் உணர்வதால் என்ன பயன்?

மழைக்கால தொடக்கத்தின்போது ஒருநாள் ஆகாயத்தைக் கருமேகங்கள் சூழ்ந்திருந்தன. வானம் தூறிக் கொண்டிருந்தது. தோட்டத்தில் பொறாமையின் இருள் சூழ்ந்திருந்தது. மரங்களில் மின்மினிப் பூச்சிகள் பறந்து கொண்டிருந்ததைப் பார்க்க அக்னி உமிழப்படுவது போலிருந்தது. அசூயையின் இந்த நாடகத்தை நான் வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒளி வெள்ளம் பாய்ந்து செல்வதைப்போல அந்த மின்மினிப் பூச்சிகள் மின்னி மறைந்தன. எனக்குப் பாட வேண்டும் ஆட வேண்டும் என்று தோன்றியது. மழைக்காலம் எத்தகைய பொறாமை பிடித்த மனங்களையும் மந்திரம் போட்டு மாற்றி விடுகிறது. தோட்டத்தில் ஒரு வட்ட வடிவமான பங்களா இருந்தது. நான் அதனுள் சென்று, வராந்தாவில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சல் மீது ஏறி, வீசி வீசி ஆடத் தொடங்கினேன். அனைத்து ஆசைகளும் பூர்த்தியான ஒருவனின் ஏமாற்றம் கூட அவனுக்கு ஒருவகையில் ஆன்மிகப் பேரின்பத்தை அளிக்கவல்லது என்பதை உணர்ந்தேன். மல்ஹார் ராகத்தில் ஒரு பாடலை அனுபவித்துப் பாடத் தொடங்கினேன். மழைக்காலம் பிரிவிற்கும், துயரத்திற்குமான காலம். ஒரு பழைய கதைப் பாடல் அது. உடைந்த இதயத்தை துயரம் தோய்ந்த வார்த்தைகளால் ஒட்ட வைக்க முயன்றது. என் கண்களில் கண்ணீர் அருவிபோல வழிந்தது. அப்போது ஒரு கைவிளக்கின் ஒளி அசைந்து முன்னால் வந்து கொண்டிருந்தது. சயீதும் அந்தப் பெண்ணும் என்னை நோக்கி நடந்து வந்தனர். அந்த அழகிய இளம்பெண் என் அருகில் வந்து, “இன்றைய இரவு ஆடல் பாடலுடன் கூடிய ஒரு கொண்டாட்டம் இந்த பங்களாவில் நடைபெற உள்ளது. நான்கைந்து சுற்று மதுக் களியும் இருக்கும்” என்றாள்

நான் வெறுப்பு தட்டிய குரலில், “வாழ்த்துகள்” என்றேன்.

அந்த அழகிய யுவதி தொடர்ந்தாள். “பரமச ராகமும் மல்ஹார் ராகமும்தான் முக்கிய ராகங்கள். பாட்டு வித்வான்களும், வாத்தியக்காரர்களும் வந்து விடுவார்கள்.”

“உன் மனம் போல” என்றேன்.

அவள் இடித்துரைக்கும் குரலில், “உன் இதயம் பொறாமையில் புழுங்கித் தவிக்கும்” என்றாள்.

சயீத் என்னைப் பார்த்து, “சுபைதா உன் அறைக்குச் செல்” என்றான்.

அந்த அழகி என்னை அச்சுறுத்தும் விதமாகப் பார்த்து, “என் கால் தூசுக்குக் கூட உன்னை நான் சமமாக பாவிக்கவில்லை” என்றாள்.

என் நிதானத்தை நான் இழந்தேன். நான் மூர்க்கத்தோடு அவளைப் பார்த்து, “நீ யாரென்று எண்ணிக் கொண்டிருக்கிறாய்? யாரோ தின்று போட்டு துப்பிய எச்சில் எலும்புகளைக் கடிக்கும் தெருநாய் நீ” என்றேன்.

இப்போது சயீதின் மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்பட்டது. வெறுப்பு உமிழும் கண்களால் என்னைப் பார்த்து, “சுபைதா... உனக்கு என்ன பேயா பிடித்திருக்கிறது?” என்று கேட்டான். சயீதின் வார்த்தைகள் என் மீது பாய்ந்தன. நான் உக்கிரமானேன். எந்த உதடுகள் காதல் மொழிகளைச் சிந்தினவோ அவை இப்போது விஷத்தைக் கக்குகின்றன, அதுவும் ஒரு அப்பாவி மீது. ஒரு விலைமாது என்னை இகழும் அளவிற்கா நான் கேவலப்பட்டுப் போனேன்? எனக்கு அளிக்கப்படும் மரியாதை இவ்வளவுதானா? என் வாய் அடைக்கப்பட்டு விட்டது. ஒரு வருடமாக என் நெஞ்சில் கொதித்துக் கொண்டிருந்த சுரத்தின் வெப்பம் அன்று வெளியேறத் தொடங்கியது. நான் ஊஞ்சலிலிருந்து குதித்து இறங்கி அவனுடைய கண்களை உற்று நோக்கி இடித்துரைக்கும் விதமாக, “பேய் யார் தலையில் உட்கார்ந்திருக்கிறது? என் தலையிலா? உன் தலையிலா? சயீத் இதுவரையிலும் நீ ஒரு கண்ணியமானவன், சுய மரியாதை உள்ளவன் என்று நம்பியிருந்தேன். நீ அந்த வெட்கங்கெட்ட வேசிக்காக உன் சுய கௌரவத்தை இப்படி முற்றிலும் விட்டுக் கொடுத்து என்னை அவமதிப்பாய் என்று கனவில் கூட நான் நினைக்கவில்லை.

ஆண்டவன்தான் இதற்கு தக்க தண்டனை வழங்க வேண்டும்” என்றேன்.

அந்த அழகிய யுவதி என்னைப் பார்த்துச் சீற்றத்துடன், “என்னைப் பார்த்தா கேடு கேட்ட வேசி என்றாய்?” என்று சீறினாள்.

நான், “சந்தேகமேயில்லை உன்னைத்தான்” என்று பதிலளித்தேன்.

சயீத், “நானும் மானம் கெட்டவனா?” என்று கேட்டான்.

நான், “சந்தேகமேயில்லாமல் ஆமாம். வெட்கம் கெட்டவன் மட்டும் இல்லை, நீ நடிக்கவும் செய்கிறாய். நீ ஏமாற்றுக்காரன்; பாவி. இன்னும் வேறு என்னவெல்லாம் கூற முடியுமோ அத்தனையும் நீதான். என் வார்த்தைகள் வெறுப்பை உமிழ்பவைகளாக இருந்தாலும் என் உள்ளத்தில் எரிந்து கொண்டிருக்கும் கோபாக்னியின் சீற்றத்தைச் சிறிது கூட வெளிப்படுத்தவில்லை” என்றேன்.

நான் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருந்தபோது சயீதின் ஆஜானுபாகுவாக இருந்த மெய்க்காப்பாளன் எனது இரண்டு தோள்களையும் பற்றிக் கொண்டான். கண் சிமிட்டும் நேரத்திற்குள் அந்த அழகி ஊஞ்சலின் கயிற்றை உருவி என்னை அருகில் இருந்த தூணோடு கட்டிப் போட்டாள். அந்த நேரத்தில் என் மனதில் ஓடிய எண்ண ஓட்டங்களை இப்போது என்னால் நினைத்துப் பார்க்க இயலவில்லை என்றாலும் என் கண்களில் இருள் சூழ்ந்தது மட்டும் நினைவிருக்கிறது. அவர்கள் மனிதர்களைப்போல தோன்றவில்லை; மரணத்தின் அதிகாரிகளாகத் தெரிந்தனர். என் மனத்தில் கோபம் இருந்த இடத்தை அச்சம் சூழ்ந்து கொண்டது. வேற்று கிரகத்தைச் சேர்ந்த கண்ணிற்குப் புலப்படாத சக்தி ஒன்று என்னைக் கட்டிப் போட்டுள்ள கயிற்றைத் துண்டாக்கி, என்னை விடுவித்து, என் கையில் கூர்மையான வாளினைக் கொடுத்திருந்தால் கூட நான் ஏதும் செய்யத் தோன்றாமல் எனக்கு ஏற்பட்ட அவமானத்தை நினைத்துதான் புலம்பியிருப்பேன். ஆண்டவன்தான் இப்படி ஒரு மீளாத் துயரத்தை என் தலையில் போட்டுவிட்டான். ஒருவேளை என்னுடைய இறை நம்பிக்கையும், தொழுகையும் முறையாகச் செய்யப்படவில்லை போலும். என் கடந்தகாலத்தில் என்ன தவறு செய்தேன், இப்படி ஒரு தண்டனை

பெறுவதற்கு என்று எண்ணிப் பார்த்தேன். என்னை அப்படியே விட்டு விட்டு அவர்கள் மூவரும் உள்ளே சென்றுவிட்டனர். என்னுடைய கடுமையான சோதனை முடிந்துவிட்டது என்றாலும் எதற்கு என் கட்டை அவிழ்க்காமல் உள்ளே சென்றனர்? என் பணிப்பெண்கள் என்னை இந்த நிலையில் பார்க்க நேரிட்டால் எனக்கு எவ்வளவு பெரிய அவமானம்? வேண்டாம். இனிமேல் இந்த வீட்டில் வசிப்பது மரியாதையாக இருக்காது. நான் எனது கட்டுக்களை அவிழ்க்கும் வழி தெரியாமல் இருந்தேனே அன்றி இதுவரை எனக்கு நேர்ந்த கொடூரம் பெரிய கொடூரத்தின் ஒரு சிறிய பகுதிதான் என்பது அறியாமல் இருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். அதுவரையில் கூட அந்த மனிதன் எத்தகைய கொடுமைக்காரன், சிறுமதி படைத்தவன் என்பதை அறியாமல் இருந்தேன். இந்த நிலைக்கு நான் எந்த விதத்திலாவது காரணமா என்று எனக்குள் கேள்வி கேட்டபடி இருந்தேன். அந்த அழகிய யுவதியின் பேச்சுக்கு மறுபேச்சு பேசாமல் இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காதோ? இல்லை அப்போதும் இது நிகழ்ந்திருக்கும். அந்தக் கருநாகத்தின் உத்தேசமே என்னைக் கொத்துவதுதான். அதனால்தான் அவள் அப்படி வலி ஏற்படுத்தும் விதமாகப் பேசினாள். நான் கோபம் கொள்ள வேண்டும், அவளைத் தூற்ற வேண்டும், பிறகு அதுவே அவள் அளிக்கப் போகும் தண்டனைக்குக் காரணமாக அமையும்.

விடாமல் மழை பொழியத் தொடங்கியது. என் மேனி முழுவதும் நனைந்தது. மை இருட்டு வந்து கொண்டிருந்தது. உள்ளே என்ன சூழ்ச்சி நடைபெறுகிறது என்பதை அறிய என் செவியைத் தீட்டி வைத்துக் கொண்டாலும் பலமான மழை காரணமாக உள்ளே என்ன பேசிக் கொண்டிருந்தனர் என்பது என் செவிகளில் விழவில்லை. சிறிது நேரம் போனபின்பு வராந்தாவில் விளக்கு வெளிச்சம் தோன்றியது. அந்தத் திகிலூட்டும் மூவரின் முகங்கள் என்னை நோக்கி வந்தன. அவள் கரங்களில் ஒரு மெல்லிய குச்சியை வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் என் இரத்தம் உறைந்து போனது. அவள் கண்களில் இரத்த வெறி பிடித்த மிருகத்தின் சீற்றம் தட்டுப்பட்டது. ஒரு ஏளனப் பார்வையை என் மேல் வீசியபடி, “ஷாஹிபா பேகம்! நீ கொட்டிய நீசத்தனமான

வார்த்தைகளுக்கு உன் வாழ்நாள் முழுவதும் நினைவில்கொள்ள தக்க பாடம் ஒன்றை உனக்கு கற்பிக்கப் போகிறேன். நீ கேள்விப் பட்டதில்லையா அடி உதவுவது மாதிரி அண்ணன் தம்பி கூட உதவ மாட்டார்கள் என்று?" என்று கேட்டாள்.

சொல்லிவிட்டு அந்த பயங்கரி என்னை அடிக்கத் தொடங்கினாள். யாரோ என் முதுகில் நெருப்பை அள்ளிக் கொட்டியது போலிருந்தது. என் பெற்றோர் என்னை மலர்ச் செண்டால் கூட அடித்ததில்லை. நான் கதறி அலறத் தொடங்கினேன். கர்வமும் வெட்கமும் கரைந்து போயின. அச்சத்தின் வாயிலில் தெள்ளத் தெளிவான நிதர்சனத்தின் முன்பு எனது உணர்ச்சிகள் அத்தனையும் மறைந்து போயின. கணவன் இறந்த பின்பு உடன்கட்டையேறும் ஹிந்துப் பெண்களுக்கு மனம் இரும்பால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அந்த நேரத்தில் எனக்கு அந்தக் கொடுமையிலிருந்து எப்படியாவது தப்பித்தால் போதும் என்பதாகத்தான் இருந்தது. சயீத் ஒரு சிலையைப்போல மௌனமாக நின்று கொண்டிருந்தான். நான் அவனை மன்றாடும் கண்களுடனும், அவமானத்துடனும் பார்த்து, "சயீத் அல்லாவின் மீது ஆணையாக நீ என்னை இந்தக் கொடியவள் கைகளிலிருந்து காப்பாற்று. எனக்கு விஷம் கொடு அல்லது என் கழுத்தில் கத்தியைப் பாய்ச்சி என்னை ஒரேயடியாகக் கொன்று விடு. என்னால் இந்த அவஸ்தையைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. என்னோடு ஆத்மார்த்தமாக பேசிய பேச்சுக்களை மறந்துவிட்டாயா? என் காதலை எண்ணிப் பார். அதற்காகவாவது என்னை இந்தப் பேரழிவிலிருந்து காப்பாற்று. அல்லா உனக்கு வெகுமதி வழங்குவார்" என்று கதறினேன்.

சயீதிற்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மனம் சற்று இளகியிருக்க வேண்டும். "சரீனா போதும். நான் சொல்கிறேன். கிளம்பலாம்" என்று அந்த அழகியிடம் கூறினான்.

மனம் மாறியவள் போல சரீனா, "உங்களுக்காக நான் எதையும் செய்யத் துணிவேன். ஆனால் என்னால் குற்றங்களைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது" என்றாள்.

“அவள்தான் ஏற்கெனவே செய்த குற்றத்திற்கு தண்டனையை அனுபவித்துவிட்டாளே.”

“என் கௌரவத்தின் மீது தாங்கள் மிகுந்த மதிப்பு வைத்திருப்பது எனக்கு தெரியும். நான் எத்தனையோ மகாராணிகளை மலம் அள்ள வைத்திருக்கிறேன். இந்த பேகம் சாஹிபா மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? அவளை வாளால் வெட்டிக் கொன்றால் கூட அவள் பேசிய தீச்சொற்களுக்கு அது சரியான தண்டனையாக இருக்காது அன்பரே.”

சயீத் “இந்தக் கொடுமையை என் கண்களால் காணச் சகிக்கவில்லை” என்றான்.

“அப்படி என்றால் உங்கள் விழிகளை மூடிக் கொள்ளுங்கள்.”

“சரீனா என்னை கோபப்பட வைக்காதே. நான் சொல்கிறேன். விட்டு விடு அவளை.”

சரீனா அவனைக் கொட்டுவதைப்போல பார்த்தாள். அவன் அவளின் அடிமை என்று நினைப்பு. என்ன சொக்குப் பொடி போட்டாள் என்பது அந்த அல்லாவிற்குதான் வெளிச்சம். இல்லையென்றால் அவன் தனது குல கௌரவத்தையும், அந்தஸ்தையும் இவ்வளவு ஏன் மனிதாபிமானத்தையும் கூட மறந்து விட்டானோ? ஒருவேளை சிறந்த ஆண்மகனுக்கு உரிய கோபத்தை இழந்து விட்டானோ? உருவத்தை மட்டும் மனதில் கொண்டு மனிதனை எடை போடுபவர்கள் அவன் உள்ளத்தில் முற்றிலும் மாறாக வேறு ஒன்று ஒளிந்திருப்பது தெரியாமல் பிழை செய்து விடுகிறார்கள். அழகு என்னும் முகத் திரையின் பின்னால் இப்படி ஒரு கொடூரம் மறைந்திருக்கிறது. தோற்றங்களை அறிந்துகொள்ள அழகு என்றும் ஒரு தடைதான்.

சரீனா, “அப்படி என்றால் என் மீது வெறுப்படைய ஆரம்பித்து விட்டீர்கள் இல்லையா? ஆமாம், இவள்தானே உங்களுடைய மனைவி. நான் வெறும் ஒரு வெட்கங்கெட்ட வேசிதானே?” என்றாள்.

“நீ என்ன குத்தல் மொழி வேண்டுமானாலும் கூறு. இந்த இரத்தத்தை

என்னால் பார்க்க முடியவில்லை.”

“அப்படி என்றால் இந்தச் சவுக்கு விளாறை நீங்கள் கையில் வாங்கிக்கொண்டு நூறு முறை எண்ணிக்கொண்டே அடியுங்கள். அப்போதுதான் உங்கள் கோபம் அடங்கும். இதுதான் இதற்கு ஒரே வழி.”

“திரும்பியும் கேலிப் பேச்சு வேண்டாம்.”

“நான் கேலி பேசவில்லை.”

சயீத் அந்தக் குச்சியை வாங்குவதற்குக் கையை நீட்டினான். ஆனால் சரீனாவின் மனதில் என்னவிதமான சந்தேகம் தோன்றியிருக்கும் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. அவள் நீட்டிய குச்சியை இழுத்துக் கொண்டு, “என் கரங்களின் மீது உங்களுக்கு அவ்வளவு அவநம்பிக்கை வேண்டாம். என் திறமையை இப்போது பாருங்கள்” என்று கூறிவிட்டு என் மேல் பாய்ந்த அந்த ஈவு இறக்கமற்ற கல்நெஞ்சுக்காரி கணக்கற்ற எண்ணிக்கையில் என்னை விளாசத் தொடங்கினாள். வலியால் துடித்துப் போன நான் வாய்விட்டுக் கதறினேன். அவளிடம் மன்றாடி மன்னிப்பு கேட்டேன். பக்கிரிகள் மீதும், இறை தூதர் மீதும் ஆணையிட்டு மன்றாடினேன். அந்தக் கொலைகாரி சிறுதளவுகூட இரக்கம் காட்டவில்லை. மரக்கட்டைபோல நின்று கொண்டிருந்த சயீத் நடந்தவற்றைப் பார்த்து சிறிதளவு வருத்தத்தைக் கூட காட்டவில்லை. என்னுடைய மிகப் பெரிய விரோதி கூட நான் கெஞ்சிய கெஞ்சல்களுக்குக் கொஞ்சம் கருணை காட்டியிருப்பான். என்னுடைய முதுகு கிழிந்து தொங்கி இரத்தக் களரியாகியிருந்தது. புதிய இரணங்கள் என் முதுகில் தீ பற்றியது போல எரிந்து கொண்டிருந்தது. அவள் என்னை எத்தனை முறை விளாசியிருப்பாள் என்று தெரியாது, ஆனால் அந்தக் குச்சிக்கு என் மேல் இரக்கம் வந்து இரண்டாக உடைந்து போனது.

•

என்னை இந்த அளவிற்கு அவமானப்படுத்திச் சின்னாபின்னப் படுத்திவிட்டு அந்த மூன்று சைத்தான்களும் அகன்று விட்டன. சயீதின் பணியாள் போகும்போது எனது கயிற்றை அவிழ்த்து விட்டுப் போனான்.

இனி நான் எங்கு போவது? திரும்பியும் இந்த வீட்டிற்குள் இருக்க முடியுமா? என்னுடைய உடலே ஒரு பெரிய ரணகளமாக மாறிப் போயிருந்தது. இருப்பினும் என் இதயத்தில் கிளம்பிய கொப்புளங்கள் என் வாழ்வு குறித்த அச்சத்தை அதிகப்படுத்தின. என் இதயத்தில் மிகப் பெரிய காயம் ஏற்பட்டிருக்கிறது. அதில் இனி உணர்ச்சிகளுக்கு இடமில்லை. அந்தக் கணம் பார்வையற்ற ஒருவன் கிணற்றில் தவறி விழுந்திருந்தால் கூட நான் வாய்விட்டுச் சிரித்திருப்பேன். ஓர் அனாதை குழந்தையின் அழுகைகூட எனக்குச் சிரிப்பை வரவழைத்திருக்கும். என்னிடம் மிகப் பெரிய மாறுதல் நிகழ்ந்து கொண்டிருந்தது. எனக்கு கோபமோ, வருத்தமோ ஏற்படவில்லை. நான் சாவிற்குக் காத்திருக்கவில்லை. என் மனதில் பழிவாங்கும் விருப்பம் எதுவுமில்லை. நான் நினைத்திருந்தால் என்னால் சயீதை சட்டத்தின் முன் கொண்டு நிறுத்தி அவனை ஒரு வாய் சோறுக்குக் கெஞ்ச வைத்திருக்க முடியும். ஆனால் எனக்கு நேர்ந்த அவமானம், என்மீது போடப்பட்ட பழி, இந்த அவதூறு எனக்குப் பழிவாங்கும் நினைப்பை ஏற்படுத்தவில்லை. என்னிடம் எஞ்சியிருந்தது அவமானம் ஒன்றுதான். நான் மொத்தமாக அவமானப் படுத்தப்பட்டு விட்டேன். இந்தக் கறை கழுவக்கூடிய கறையா? நிச்சயமாக இல்லை. ஆனால் மறைக்க முடியும். அதற்கு ஒரே வழி தீரா அவமானம் என்ற சாக்கடையில் வீழ்ந்து என்னுடைய கறையை அந்தச் சாக்கடையில் கரைப்பதைத் தவிர வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அஸ்திவாரம் ஆட்டம் கண்டுள்ள இந்த வீட்டில் எனக்கு நிகழ்ந்த நாசத்தை விட நான் திட்டமிட்டுள்ள நாசம் பெரிதில்லை. என்னுடைய இந்த வருந்தத்தக்க நிலையில் இந்த வாதம் எனக்குச் சரி என்று தோன்றியது. நான் விளைவிக்கப் போகும் நாசத்திற்காக என் நோக்கத்தை நான் மேலும் பலப்படுத்திக் கொண்டேன். என் அவமானத்தை மேலும் விரிவாக்கிக் கொண்டேன். ஏற்கெனவே கரி பூசப்பட்டிருந்த என் முகத்தில் மேலும் கரி அள்ளிப் பூசிக் கொண்டேன். அந்த நீண்ட இரவில் நான் வேதனையுடன் முனகியபடி, நினைவு தப்பிப் போய்ப் படுத்துக் கிடந்தேன். விடியும் நேரம் நான் அந்தத் தோட்டத்தை விட்டு நீங்கினேன்.

எனது அவமான உணர்வு எங்கு சென்றது எனத் தெரியவில்லை. கடல்

பயணத்தில் புயலை எதிர்த்து நின்ற ஒருவனுக்குக் குளமும், ஆறும் பெரிய விஷயமே இல்லைதான். வீட்டின் சுவர்களைப் பார்த்தே வெட்கப்படும் நான் இன்று வீதியில் திறந்த வெளியில் வெட்கமில்லாமல் அலைந்து கொண்டிருந்தேன். நான் அலைந்தது சாதாரண வீதியில் இல்லை; எந்த வீதியில் அவமானம் போற்றப்படுமோ, எந்த வீதியில் மற்றவர்களைப் பார்த்து ஒருவரும் நகைக்க மாட்டார்களோ, எந்த வீதியில் அபகீர்த்தி கடை விரித்துள்ளதோ, எந்த வீதியில் கற்பு விற்பனைப் பொருளோ, எந்த வீதியில் கௌரவம் கொள்ளையடிக்கப்படுமோ அந்த வீதியில் அலைந்து கொண்டிருந்தேன். ஆம், நான் விபசாரிகள் வசிக்கும் வீதியில் அலைந்து கொண்டிருந்தேன்.

நான் கிளம்பிப் போன மூன்றாவது நாள் விபசார அழகிகள் திரியும் ஒரு கடை வீதியின் மூலையில் இருந்த ஒரு விபசாரக் குடியின் உள்ளே அமர்ந்து அந்தச் சந்தையை அளந்து கொண்டிருந்தேன். தோளோடு தோள் நெருக்கித் தள்ளும் அளவிற்கு அன்று ஆடவர் கூட்டம் அதிகமிருந்தது. அன்று மழைக்கால சந்தை கூடியிருந்ததால் மக்கள் சுத்தமான ஆடை உடுத்திக்கொண்டு வரிசை வரிசையாக நதியை நோக்கிச் சென்றனர். கடைவீதியில் விலை மதிப்பற்ற சரக்குகளும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. சில இடங்களில் பெண்கள் ஆடிக் கொண்டிருந்தனர். வேறு இடங்களில் தங்கள் தோழமையுடன் அலைந்து கொண்டிருந்தனர். எனக்கு என்னவோ இந்தக் கடைவீதியின் அழகு நதிக் கரையிலிருந்து பார்க்கும்போதுதான் கூடுதலாகப் பிரகாசிப்பதாகத் தோன்றியது. இந்த நகரத்தின் அனைத்து வீதிகளும் மூடப்பட்டு இந்தக் குறுகலான சந்து மட்டும் திறந்திருப்பது போலிருந்தது. அனைவரது கண்களும் இந்த விபசார விடுதிகளின் மேலேயே நிலைகுத்தி நின்றன. இந்த வீதியில் செல்பவர்கள் நடந்து செல்லாமல் இறக்கை கட்டிக்கொண்டு பறந்து செல்பவர்களைப்போல காணப்பட்டனர். படித்தவர்களும் அந்த வீதியில் கடந்து போனார்கள். ஆனால் படித்தவர்களுக்கு அத்தனை துணிச்சல் இல்லை. அவர்களும் பார்த்தனர் என்றாலும் ஓரக்கண்களால் திருட்டுத்தனமாகப் பார்த்தனர். நடுவயது ஆசாமிகள்தான் சுத்த வெட்கங் கெட்டவர்களாக இருந்தனர். தங்களது

இளமையை முன்னிறுத்துவதே அவர்களது நோக்கமாக இருந்தது. அவர்கள் முகங்கள் ஒரு திசையிலும், பார்வை இன்னொரு திசையிலும் இருந்தன. தரகர்களும், போக்கிரிகளும் குழுமத் தொடங்கினர்.

திடீரென்று சயீதின் சாரட்டு வண்டி அங்கே வந்து நின்றது. நான் அதில் அடிக்கடி பயணித்து இருக்கிறேன். அதனுள் சயீத் சீராக ஆடையணிந்து விறைப்பாக அமர்ந்திருந்தான். அத்தனை எடுப்பும், வசீகரமும் கொண்ட இளைஞனை அந்த நகரில் எங்கு தேடினாலும் கிடைக்க மாட்டான். அப்படி ஓர் அழகன். ஆண்மை அவன் தலையிலிருந்து பாதம் வரை ததும்பி நின்றது. நான் இருக்கும் விபசார விடுதியை நோக்கி அவன் கண்கள் சிறிது உயர்ந்தன; பின்பு தாழ்ந்து விட்டன. விஷப் பாம்பு தீண்டிய ஒருவனின் முகம் வெளுத்துக்கிடப்பதைப்போல சாவின் வெளுப்பு அவன் முகத்தில் படர்ந்திருந்தது. அவன் அந்த வண்டிக்காரனிடம் ஏதோ சொன்னான். சில நிமிடங்களில் அந்தச் சாரட்டு வண்டி காற்றில் மறைந்தது. ஓர் ஆத்ம திருப்தியை உணர்ந்தேன். அந்தத் தருணத்தில் என்னுடைய ‘அந்த’ உடலை மரத்துப் போகச் செய்த மரண வலி அதன் நிஜத் தன்மையை இழந்தது. என்னை அவமானப்படுத்திக்கொண்டே நான் அவனையும் அவமானப்படுத்தி விட்டேன். இந்த அவமானத்தின் கூர்மை அவர்கள் உபயோகித்த குச்சி நுனியை விட கூர்மையானது. என் கண்களை அவனால் சந்திக்க இயலவில்லை. ஆம், நான் அவனை ஜெயித்து விட்டேன். நான் அவனை ஆயுளுக்கும் ஓர் உணர்ச்சிச் சிறைக்குள் தள்ளி விட்டேன். இந்த இருண்ட சிறையிலிருந்து அவனால் வெளிவரவே முடியாது. அவனுடைய குலகௌரவம் அத்தனை உயர்ந்தது.

மறுநாள் காலையில் மிர்ஸா சயீதை யாரோ சில கொலைகாரர்கள் கொன்றுவிட்ட தகவல் கிடைத்தது. அவன் உடல் அந்த வட்டவடிவமான பங்களாவில் கிடந்தது என்பதும் அவன் மார்பில் ஒரு குண்டு பாய்ந்திருந்ததும் கூடுதல் தகவல்கள். காலை ஒன்பது மணிக்கு அடுத்த சேதி வந்தது. அதே இரவில் சரீனாவையும் எவரோ கொலை செய்துவிட்டனர் என்ற சேதியே அது. அவள் தலை அவள் உடலிலிருந்து துண்டிக்கப்பட்டுக் கிடந்ததாம். தீவிர விசாரணைக்குப் பின்னர் இந்த இரண்டு கொலைகளுக்கும் சயீத்தான் காரணம்; அவன் முதலில்

சரீனாவைக் கொன்றுவிட்டு தனது வீட்டிற்கு வந்து தன்னைத் தானே சுட்டுக்கொண்டு மாண்டிருக்கிறான் என்பது தெரிய வந்திருக்கிறது. இந்தச் செய்கையின் மூலம் ஆண்மையுடன் வெளிப்பட்ட அவனது சுயமரியாதை அவன் மேல் எனக்கிருந்த காதலைத் துளிர்விடச் செய்தது.

மாலையில் நான் என் இல்லத்திற்குத் திரும்பினேன். வெறுமனே நான்கு நாட்கள் மட்டுமே நான் வெளியில் இருந்துவிட்டு வந்தேன். இருந்தாலும் என்னவோ நான்கு வருடங்கள் பிரிந்திருந்ததைப் போல ஓர் நினைப்பு. அங்கு நிலவிய சூழல் மனதுக்கு உவப்பளிக்கவில்லை.

அந்த மாளிகைக்குள் நுழைந்ததும் சயீதின் அந்தச் சிரித்த முகம்தான் என் கண்களில் மறையாமல் நின்றது. அதே ஆண்மையின் கம்பீரம், அதே அழகு, அதே வசீகரிக்கும் கண்கள். நிலைகுலைந்து என் கண்களில் கண்ணீர் சேர்ந்தது. ஒரு நீண்ட பெருமூச்சை என் இதயம் வெளிப்படுத்தியது. என் வருத்தம் சயீத் தன் உயிரை மாய்த்துக் கொண்டதற்காக இல்லை. அவனுடைய சுயநினைவு கடந்த கொலைபாதகத்தையும், அழகின் பின்னால் அலைந்ததையும் என்னால் என் வாழ்நாள் உள்ளவரை மறக்க முடியாது. ஒருவேளை இந்தப் பைத்தியக்காரத்தனம்தான் அவனைக் கொன்றிருக்க வேண்டும். சிறிது நாட்களிலேயே அவனுடைய துரோகம் என் நெஞ்சில் ஏற்படுத்திய காயம் ஆறிவிடும், எனக்கு நேர்ந்த அவமானத்தின் சுவடுகள் அழிந்து போய்விடும். ஆனால் அவனுடன் எனக்கு இருந்த காதலின் தடம் மட்டும் அழியாது என்பதை என் இதயம் சொன்னது. இதுதான் என் உயிரின் ஆதாரம்.

(ஹிந்தி மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - அனிதா சம்காரியா)

# 8. வம்சாவளி

## குராத்-உல்-ஐன் ஹைதர்

அந்தப் பெரிய ஈரமான குளிப்பறை பகலில் கூட மங்கிய விளக்கு வெளிச்சத்தில் இருந்தது. பெரிய பெரிய பித்தளை தாழிகள், கழுத்து நீண்ட வடிகலங்கள், சற்று உயரமான குளியல் தொட்டி, வட்டவடிவிலான பரணிகள், முக்காலி ஒன்று, பல வர்ணம் பூசப்பட்ட சோப்பு டப்பா ஒன்று, கடலை மாவு, பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட வாசனை திரவியங்கள் என்று அந்தக் குளியல் அறை நிரம்பி வழிந்தது. படிகாரக் கற்கள், சிறிய வடிகலங்கள், கைப்பிடி மூடியுடன் கூடிய வடிகலங்கள், ஒரு கொக்கியில் குவியல் குவியலாகத் தொங்கிக் கொண்டிருந்த கராராக்கள், துப்பட்டாக்கள், தட்டுக்களில் குவித்து வைக்கப்பட்டிருந்த உலர்ந்த பழங்கள், கூந்தலைச் சுத்தப்படுத்தும் பொடிகள், இவை அனைத்தின் கதம்பக் குவியலாக அந்த அறை கிட்டத்தட்ட அலிபாபாவின் குகையைப்போல காட்சியளித்தது.

சில நேரங்களில் அந்தக் குளிப்பறை சம்மி பேகத்தின் மகிழ்ச்சியற்ற வாழ்விற்கு ஒரு புகலிடமாக விளங்கியது எனலாம். பச்சை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டிருந்த அந்தக் குளிப்பறையின் ஜன்னல் கண்ணாடி சம்பேலி(மல்லிகை) குடியிருப்பைக் கண்காணிக்க உதவியது. வெளியில் ஊடுருவிப் பார்ப்பதற்கு சம்மி பேகம் கண்ணாடியின் வர்ணத்தைச் சில இடங்களில் நகத்தால் கீறி விட்டிருந்தாள். காரணம், அவள் மிகவும் நேசிக்கும் சிற்றப்பன் மகன் அஜ்ஜூ பாய் மல்லிகைக் குடியிருப்பில் வசித்து வந்தான். மணிக்கணக்காக அந்த ஜன்னல் கண்ணாடியின் ஊடே மல்லிகைக் குடியிருப்பைப் பார்த்துக் கொண்டிருப்பாள். ஒருவேளை

ஷாஜஹான் கூட தனது சிறையிலிருந்து இதே உற்சாகத்துடன் தாஜ்மஹாலைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஓர் இரண்டாந்தர ஜமீன்தாருக்குச் சொந்தமான இந்தப் பாரம்பரியக் குடியிருப்பு இரண்டு கட்டுகளைக் கொண்டது. அந்தக் குடியிருப்பின் மர்தானாவில் இருந்த முற்றத்தில் சம்பேலி (மல்லிகைப்) புதர்கள் மண்டிக் கிடந்ததாலே அது சம்பேலி குடியிருப்பு என்று அழைக்கப்பட்டது. அந்த மாளிகையின் அந்தப்புரத்தின் உள் முற்றத்தில் ஒரு பெரிய புளிய மரம் அடர்த்தியான நிழல் பரப்பிக் கொண்டிருந்தது. மொத்த மகாலும் இந்த அந்தப்புரப் பகுதியை புளியமர வீடு என்றே குறிப்பிட்டது. இரண்டு பகுதிகளையும் தடுக்கும் சுவரில் ஒரு சிறிய கதவு இரண்டு கட்டுகளுக்கும் போக, வர வழியாக இருந்தது.

சம்மி பேகத்தின் தந்தையும், அஜ்ஜூ பாயின் தந்தையும் ஒன்றாகக் குடியிருந்தனர். சம்மி பீவி பிறந்தவுடன் அவளுக்கும் அஜ்ஜூ பாய்க்கும் திருமணம் நிச்சயமானது. நிச்சயம் ஆனவள் என்பதால் ஒன்பது பத்து வயதிலிருந்தே சம்மி பேகம் பர்தா அணிய நிர்பந்திக்கப்பட்டாள். அஜ்ஜூ பாய் அழகன் என்பதோடு குறும்புக்காரனும் கூட. பெற்றோருக்கு ஒரே மகன் என்பதோடு இரண்டு சகோதரர்களின் மொத்த சொத்திற்கும் அஜ்ஜூ பாய்தான் ஒரே வாரிசு. செல்லக்குட்டி. அவன் தனது நாட்களைப் பட்டம் விடுவது, புறாக்களை வளர்ப்பது என்று பல்வேறு பொழுதுபோக்குகள் மூலம் கழித்து வந்தான். அவன் பெற்றோரைப் போலவே அவனுடைய பெரியப்பா பெரியம்மா இருவரும் அவனுக்குத் திருமணமாகி விட்டால் மாறிவிடுவான் என்று நம்பினார்கள்.

திருமணம் குறித்த விவரம் தெரியத் தொடங்கிய காலத்திலிருந்து சம்மி பேகம் அவனைத் தனது ஆருயிர் துணைவன் என்றும், ஆன்ம குரு என்றும் கருதத் தொடங்கினாள். அவளும் தனது பெற்றோரின் ஒரே கொழுந்து என்பதால் அனைத்துச் சலுகைகளுடனும் வளர்ந்தாள். சிடுசிடுப்பும், கடுகடுப்பும், முன்கோபமும் நிறைந்த சம்மி பேகம் பதினாறு வயதை எட்டியபோது இருவருக்கும் திருமணத் தேதி நிச்சயிக்கப்பட்டது. இரண்டு குடும்பங்களும் மிக விரிவாகத் திருமண ஏற்பாடுகளைக்

கவனித்துக் கொண்டிருந்தபோது மரணத்தின் கரிய நிழல் அவர்களது மகிழ்ச்சியின் மீதும், நிம்மதியின் மீதும் படிந்தது.

அந்த வருடம் ஷாஜஹான்புரத்தில் கொள்ளை நோய் காலரா பரவியது. சம்மி பேகத்தின் பெற்றோர் அதற்கு பலியானார்கள். வாழ்க்கை ஒரு முடிவிற்கு வந்ததாகவே கருதிய சம்மி பேகம் தனது சித்தப்பா சின்னம்மா இருவரின் அரவணைப்பில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டாள். இதையெல்லாம் விட அவள் அஜ்ஜூவை இன்னும் சிறிது நாளில் திருமணம் செய்துகொள்ளப் போகிறாள். தனது பெற்றோரின் மறைவிற்காகச் சிறிது காலம் வருத்தப்பட்ட சம்மி பேகம் அஜ்ஜூ பாயுடனான தனது எதிர்காலம் குறித்த வண்ணக் கனவுகளில் மிதக்கத் தொடங்கினாள்.

திருமண நாள் சிறிது காலத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டது. அடுத்த தேதி குறிப்பதற்குள் பெரியப்பா இருதய வலி கண்டு எவரும் எதிர்பாராதபோது இறந்து போனார்.

பெரியப்பா இறந்ததும் அஜ்ஜூ பாய் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த சில வழக்குகளை நடத்த லக்னோ சென்றுவிட்டான். நம்பிக்கையான சிலருடன் அவன் கிளம்பிப் போனான். இப்போது தனது கவலைகளில் மூழ்கியிருந்த பெரியம்மாவும், சம்மி பேகமும் அந்தப் புளியமர வீட்டில் தனியாக வசித்தனர். அந்த மர்தானா வனாந்திரமாகத் தனித்து விடப்பட்டது. தம்மு கான் என்ற மூத்த காவலாளி உள்ளே இருப்பதைக் கவனித்து வந்தான். சலாமத் அத்தை அழுதழுது கண்ணையும் மூக்கையும் சிந்தியபடி இருந்தாலும் அவள்தான் சமைத்தாள். பெரியம்மா முல்லன் கான் என்ற வயதான உறவினரை அழைத்து வீட்டிற்குக் காவல் வைத்தாள். அவர் வீட்டின் வராந்தாவில் ஒரு நார்க்கயிற்றுக் கட்டிலைப் போட்டுக்கொண்டு வசித்து வந்தார்.

அஜ்ஜூ பாய் தொடர்ந்து லக்னோவில் இருந்து வந்தான். தனது தாய்க்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் வழக்கு மேலும் ஒரு சில நாட்களுக்கு ஒத்தி போடப்பட்டிருப்பதாகவும், வழக்கு முடிந்த பின்பு ஓரிரு மாதங்களில் திரும்புவதாகவும் எழுதினான். ஒருவழியாக ஆறுமாதம் கழித்துத் திரும்பிய

மகனிடம் திருமணப் பேச்சைத் தாயார் எடுத்தாள். சொத்து சம்பந்தமான வழக்குகள் முடியும்வரை தனக்குத் திருமணம் செய்துகொள்ளும் உத்தேசம் இல்லை என்று அஜ்ஜூ மறுத்துவிட்டான். இதைக் கேட்டதும் சம்மி பேகம் குளிப்பறையில் துவைக்கப்பட இருந்த ஒரு துணிக் குவியலின் மீதிருந்து வெளியில் தெரியாமல் அழுது கொண்டிருந்தாள்.

இதற்குள் சம்மி பேகத்திற்குப் பிராயம் பத்தொன்பதானது. அஜ்ஜூ லக்னோவில் தொடர்ந்து இருப்பதென்று முடிவு செய்தவன் போலிருந்தான். லக்னோவிலிருந்து வந்த செய்திகள் கேட்கும்படியாக இல்லை. அவன் ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்வதாகத் தகவல்கள் வந்தன. இன்னும் என்னவெல்லாம் சம்மியின் விதி அவளைக் கொண்டு செலுத்தப் போகிறதோ என்று அக்கம்பக்கத்தினர் பேசத் தொடங்கினர். ஒருநாள் பெரியம்மாவிற்கும் இருதயக் கோளாறு ஏற்பட்டு, அவளும் மாண்டாள்.

விதியின் கரங்களால் தூக்கி வீசப்பட்ட சம்மி பேகம் மட்டும் இப்போது எஞ்சி நின்றாள். அந்த மாளிகையின் உள்முற்றம் இப்போது அமைதியாக மாறியது. பாதுகாப்பிற்காக மட்டும் பார்வையிழந்த முல்லன்கான் புளியமர வீட்டிற்கு இடம் மாறினார். வராந்தாவில் அவர் இருமிக் கொண்டிருந்தார். தம்மு கான் மாளிகை நுழைவாயிலில் இருமிக் கொண்டிருந்தார்.

அஜ்ஜூ பாய் தனது தாயார் செத்ததற்கு வந்தான். மூன்றாம் நாள் தொழுகை முடிந்த பின்னர் அவன் லக்னோவிற்குக் கிளம்பினான். அல்லாஹ்! எந்த நேரத்தில் சம்மி பேகத்திற்கு அஜ்ஜூ உறுதுணையாக இருக்க வேண்டுமோ அந்த நேரத்தில் அவளைக் கைவிட்டுச் சென்றது மிகுந்த வேதனையானது. இதைப் பற்றி எண்ணும்போது பேகத்திற்கு இதயம் இரண்டாகப் பிளந்துவிடும் போலிருந்தது. ஒவ்வொரு மாதமும் அஜ்ஜூ பாய் இருநூறு ரூபாய்க்கு மணி ஆர்டர் அனுப்பிவிட்டு கூடவே அவர்களது நலன் விசாரித்து முல்லன் கானுக்கு இரண்டுவரி எழுதுவான்.

பரேலியிலிருந்து முல்லன் கானின் மனைவி வந்து சேர்ந்தாள். அவளுடைய இயல்பிற்கு சம்மி பேகத்தால் ஒத்துப் போக முடியவில்லை. பொழுதிற்கும் தனது உறவினர்களுடன் சதா சர்வகாலமும் தகராறு; அல்லது காரணமில்லாமல் ஒரு கோபம், சண்டை. சம்மிபேகம் பாதி

நேரம் குளிப்பறையில் அழுதபடி இருந்தாள். அல்லது வீட்டிற்குள் என்ன நடக்கிறது என்பதை ‘ஷாஜஹான்’ ஓட்டை வழியாகப் பார்த்துக் கொண்டிருப்பாள். ‘என்ன விதமான வாழ்க்கை இது?’ என்ற கேள்வி எழும். ஒரு சமயம் என்னிடம் எல்லாம் இருக்கிறது. இன்னொரு சமயம் என்னிடம் ஒன்றுமில்லை. பூஜ்யம். முன்பெல்லாம் மொத்த வீடும் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கும். சாய் நாற்காலிகள் வராந்தாவில் போடப்பட்டிருக்கும். கை நாற்காலிகள் முற்றத்தில் போடப்பட்டிருக்கும். கியாஸ் விளக்குகள் பிரகாசமான ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும். அப்பா மற்றும் பெரியப்பாவின் நண்பர்கள் அங்குதான் கூடுவார்கள். இங்குதான் முஷைராக்கள் நிகழ்த்தப்படும். கவாலி இசை நிகழ்ச்சிகளால் அந்த இடமே அதிரும். அஜ்ஜூவின் நண்பர்கள் நிறையப்பேர் வரும்போது அஜ்ஜூ இரண்டு வீடுகளையும் பிரிக்கும் பகுதியில் இருக்கும் சின்னக் கதவின் அருகில் வந்து நின்று, “அர்ரே பாயி சம்மி! கொஞ்சம் தேநீர் கலந்து கொண்டுவர முடியுமா?” என்பான்.

அத்தனை அவநம்பிக்கையிலும், கையறுநிலையிலும் அஜ்ஜூ ஒருநாள் திரும்பி வருவான், மீண்டும் அந்த இல்லம் மகிழ்ச்சியிலும், கொண்டாட்டத்திலும் திளைக்கும் என்று சம்மி நம்பிக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவள் அந்த இல்லத்தின் ஆண்கள் பகுதிக்குச் செல்வாள். தம்மு கான் மற்றும் சலாமத் புவா இருவரின் உதவியுடன் தோட்டத்தைச் சுத்தம் செய்து இலை மண்டிக் கிடக்கும் புதர்களைத் திருத்தி வராந்தாவில் தொங்கும் ஒட்டடைகளைச் சுத்தம் செய்வாள். உள்ளே இருந்த அறைகள் மூடியே கிடந்தன. அப்பா, பெரியப்பா மற்றும் அஜ்ஜூவின் அறைகளுக்குள் கதவுகளில் உள்ள கண்ணாடி வழியாக எட்டிப் பார்ப்பாள். தலையை அசைத்துக் கொள்வாள். நெடிய பெருமூச்சு ஒன்று அவளிடமிருந்து வெளிப்படும்.

சம்மி பேகத்திற்கு வயது முப்பதை எட்டியது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நரை முளைத்தது. இப்போது மல்லிகைத் தோட்டத்தைப் பராமரிப்பதை நிறுத்திவிட்டாள். உலக விஷயங்களில் விருப்பம் காட்டுவதை அவள் நிறுத்திக் கொண்டாலும் நிதானமின்மையும், படபடப்பும் தொடர்ந்தன. வயதாக வயதாக அவை மோசமாகின.

சம்மி பேகத்தின் கோபத்திற்கும் எரிச்சலுக்கும் காரணம் இல்லாமல் இல்லை. அவளுடைய பெற்றோர்கள் ரோஹில்லா பதான் வம்சாவளியினர். அவர்களின் ஓரளவு விரிந்த சாம்ராஜ்யத்திற்கும் வாழ்விற்கும் தகுந்தாற்போல இல்லாமல் சற்று மாற்று குறைந்த ஜமீன்தார் பட்டமே வழங்கப்பட்டது. மொத்தக் குடும்பத்தினரும் வெள்ளை வெளேர் அல்லது செக்கச் செவேல். மற்ற பதான் குடும்பங்களைப் போலவே இந்தக் குடும்பமும் சுயசார்புடைய குணாதிசயத்தால் அறியப்பட்டது. அதன் நீண்ட பாரம்பரியத்தின் அடையாளமாகவே கட்டுங்கடங்காத கோபம் அறியப்பட்டது. குடும்பப் பாரம்பரியம், பரம்பரைச் சொத்து மாசுபட்டுப் போய்விடக் கூடாது என்ற நம்பிக்கை சம்மி பேகத்தை ஒரு தனிமை வாழ்வில் கொண்டுவிட்டது. மற்ற பெண்களுடன் அவள் அடிக்கடி பேசுவதையோ, பழகுவதையோ கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக்கொண்டு விதவைகள் அணிவது போன்ற வெண்ணிற உடையணிந்து, தொழுகை விரிப்பிலேயே தனது பகல் பொழுதைக் கழிக்க முற்பட்டாள். வெப்பமான நண்பகல் மதியப் பொழுதுகளில் முற்றத்து ஜன்னலில் அமர்ந்து வாயில் குங்குமப்பூ கலந்த புகையிலையை மென்று அதக்கிக்கொண்டு தனக்குத் தானே அச்சமூட்டும் குரலில் பேசிக் கொள்வாள். அல்லாஹ் தான் படைத்த உயிர்களைப் பார்த்து இருமுறை மட்டுமே பரிகாசம் செய்கிறான். ஒன்று தன்னால் மனவலிமையுடன் படைக்கப்பட்டவர்களுக்கு ஊறு விளைவிப்பவர்களைப் பார்த்து. இன்னொருமுறை தன்னால் அழிக்கப்படுவதற்கென்று குருட்டு அதிர்ஷ்டத்துடன் அனுப்பி வைக்கப்பட்டவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டதை விட அதிகமாகப் பணம் பண்ணும்பொழுது.

அது ஒரு நவச்சண்டி நேரத்து வியாழக்கிழமை. சம்மி பேகம் குளித்துக் கொண்டிருந்தாள். கனன்று கொண்டிருந்த பாய்லர் கரித் துண்டுகள் நெடுநேரம் முன்பே சாம்பலாகிப் போயிருந்ததால் சம்மி பேகம் குளிரில் நடுங்கியபடி குளித்தாள். மளமள என்று தனது உடலைத் துடைத்துக் கூந்தலை ஈரத் துண்டால் சுற்றிக் கொண்டாள். அவள் கால்களில் மரச்செருப்பை அணிந்து வெளியில் வர எத்தனித்தபோது சலாமத் புவாவின் பேத்தி கரையான் அரித்த குளிப்பறை மரக்கதவை பலமாகத்

தட்டி, “அக்கா அக்கா சீக்கிரம் கதவைத் திறங்க. சீக்கிரம் வெளியில் வாங்க” என்றாள்.

“என்னது முட்டாளே?” என்று சம்மி பேகம் சீறினாள்.

“அக்கா, மல்லிகைக் குடியிருப்பிலிருந்து உடனே மூன்று அல்லது நான்கு கோப்பை தேநீர் வேண்டுமாம்.”

“என்னது? நிஜமாகவா?” என்று சம்மி தனது ஷாஜஹான் துளை வழியாகப் பார்த்தாள்.

முற்றத்திற்கு வெளியில் இருந்த கதவு திறந்து கிடந்தது. இரண்டு குதிரை வண்டிகள் வெளியில் நின்றிருந்தன. இரண்டு மூன்று போக்கிரிப் பையன்கள் அவற்றிலிருந்து மூட்டை முடிச்சுகளை இறக்கிக் கொண்டிருந்தார்கள். கறுப்பு நிறமும் கூர்மையான அங்கங்களும் உடைய பெண்மணி ஒருத்தி சிவந்த நிற ஜார்ஜெட் சேலை அணிந்து பச்சை நிற வாரணாசி சால்வை போர்த்திக்கொண்டு, கால் மேல் கால் போட்டுக்கொண்டு, கை நாற்காலி ஒன்றில் அமர்க்களமாக அமர்ந்துகொண்டு, கால்களை ஆட்டியபடி அழைப்பு மணியை அடிப்பதும் பணியாட்களை ஏவுவதுமாக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தாள். பதின் பருவப் பெண் ஒருத்தி பார்வை அத்தனை சரியில்லை, தோற்றத்தில் கிட்டத்தட்ட அவள் அம்மாவின் ஜாடையில் சுடிதார் சல்வார் அணிந்துகொண்டு கீழே அமர்ந்து பெரிய சூட்கேஸ் ஒன்றைத் திறந்து கொண்டிருந்தாள். அந்த நேரம் அஜ்ஜூ மேலும் கவர்ச்சிகரமான, மேலும் வசீகரமான தோற்றத்துடன் உள்ளேயிருந்து வராந்தாவிற்கு வந்தான். அவன் அந்தச் சிவப்பியின் அருகில் குனிந்து ஏதோ கூறினான். அதைக் கேட்டு அவள் பெரிதாகச் சிரித்தாள். அவநம்பிக்கையின் மேகங்கள் சம்மி பாயின் மனதில் கவிந்தன. ஏற்கெனவே பாதி இருட்டில் இருந்த குளிப்பறை முற்றிலும் இருளானது. சம்மி குளிப்பறையில் இருந்த ஒரு முனையைப் பிடித்துக்கொண்டு தடுமாறாமல் இருந்தாள். பிறகு மெதுவாக எழுந்து தள்ளாடி நடந்து தனது படுக்கையில் மயங்கிச் சரிந்தாள்.

அந்த வேசி கல்லூ அஜ்ஜூவுடன் நெடுநாட்கள் லக்னோவில் வசித்து வந்தது பின்பு தெரிய வந்தது. அவன் அவளை முறைப்படி நிக்காஹ்

செய்து கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். இப்போது அவள் அவனுடைய சட்டபூர்வமான மனைவி. கல்லூ தன்னுடன் பதின்பருவ மகளையும் - அதுதான் பழுப்பு நிற சல்வார் கமீஸ் அணிந்துகொண்டிருக்கும் பெண் - அழைத்துக்கொண்டு வந்துவிட்டாள். அவள் முறைப்படி அஜ்ஜூவால் மகளாக்கிக் கொள்ளப்படவில்லை.

அன்று மாலை அஜ்ஜூ பாய் எவ்வித முன்னறிவிப்புமின்றி பெண்களை பர்தா போட்டுக்கொள்ள எச்சரிக்காமல் தடாலென்று புளியமரப் பகுதிக்கு வந்துவிட்டான். வராந்தா வரை வந்தவன் "அரே சம்மி, வா... வந்து உன்னுடைய மதனியைப் பார்" என்றான்.

சம்மி பாய் நடுங்கினாள். படுக்கையிலிருந்து எழுந்து குளிப்பறைக்கு மீண்டும் ஒருமுறை தள்ளாடி நடந்து உள்ளே பத்திரமாகக் கதவைச் சார்த்திக் கொண்டாள். அஜ்ஜூ கொஞ்சம் குற்ற உணர்வு கொண்டவனைப்போல வாசல் வளைவின் கீழ் நின்றான். கல்லூ அவன் பின்னால் நின்று கொண்டிருந்தாள். ஒருசில நிமிடங்கள் கணவனும், மனைவியும் அப்படி நின்றுவிட்டு மல்லிகைக் குடியிருப்பிற்குத் திரும்பினர்.

அன்றிலிருந்து சம்மி பேகத்தின் வாழ்க்கை முறை அடியோடு மாறியது. பகல் முழுவதும் அவள் குரான் ஓதுவதில் பொழுதைக் கழித்தாள். பல வருடங்களாக அஜ்ஜூ பாய் அவளை ஏமாற்றி இப்போது வேறு ஒருத்தியை மணம்புரிந்து வந்துள்ளான். அவளது வாழ்வைப் பாழ்படுத்தி விட்டான். அந்தத் திருமணமே தாங்க முடியாத நிகழ்வு என்றால் கல்லூபாய் போன்ற விலைமகளைத் திருமணம் புரிந்து அந்தப் பரம்பரையின் பெருமைக்கு இழுக்கைத் தேடிக்கொண்டு விட்டான். இந்தக் குற்றத்தை சம்மி பேகம் மன்னிப்பதாக இல்லை. பல சமயங்களில் கல்லூ, சம்மி பேகத்திடம் அன்பு பாராட்ட முயன்றும் பலனில்லை. அடிக்கடி இரண்டு பகுதிகளையும் பிரிக்கும் கதவின் அருகில் வந்து நின்று "மகளே, உனக்கு ஏதாவது வேண்டுமென்றால் என்னிடம் சொல்லு" என்று கனிவாகக் கேட்பாள். மல்லிகைக் குடியில் புதிதாக எந்த உணவுப் பதார்த்தம் சமைக்கப்பட்டாலும் ஒரு தட்டு நிறைய சம்மி குடியிருக்கும் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும். தம்மு கானை சம்மி கூப்பிட்டு

மல்லிகைக் குடியிருப்பிலிருந்து சின்ன இறகு உள்ளே வந்தால் கூட அவர் காலை உடைத்து விடப் போவதாக எச்சரித்து அனுப்பி விட்டாள்.

அஜ்ஜூ பாய் திரும்பி வந்து ஒருமாதம் ஆன பின்பு லக்னோவில் மாதாமாதம் அனுப்பிக் கொண்டிருந்த இருநூறு ரூபாய் பணத்தை முல்லன் கானிடம் கொடுத்துவிட்டான். ஆனால் இப்போதுதான் நிலைமையே மாறிக் கிடக்கிறது. சம்மி பேகம் தனது ஜன்னலிலிருந்து ஓர் ஆவேச சபதத்தை வீசி எறிந்தாள். “இறந்த ஜூமா கானின் மகளும், இறந்த ஷாபூ கானின் மருமகளுமான சமீதா பேகம் ஒரு விலைமகள் குடியிலிருந்து ஒற்றை நயாபைசா பெற்றுக்கொண்டாலும் நாசமாகத்தான் போவாள். முல்லன் கான் நீங்கள் உண்மையிலேயே ஒரு சிறந்த பதான் வம்சத்தைச் சேர்ந்தவர் என்றால் இந்தப் பணத்தைக் கொடுத்தவர் முகத்தில் விட்டெறியுங்கள்.” இவ்வாறு கொதித்தெழுந்த பின் அவள் தனது கதவை பெரிய அடிதண்டால் போட்டு அறைந்து மூடினாள்.

தனது உடலையும் ஆன்மாவையும் பேணுவதற்காக சம்மி பேகம் தனது நகைகளை ஒவ்வொன்றாக விற்கத் தொடங்கினாள். அவையெல்லாம் விற்றுத் தீர்ந்த பின்னர் வீட்டில் இருந்த பழங்காலப் பொருள்களை அடாவடி விலைக்குச் சந்தையில் விற்றாள். ஆனால் பசி என்பது தீராத நோய் என்பதோடு நாள்தோறும் சிகிச்சைக்கு ஆட்பட்ட நோய். இதுவன்றியும் சம்மி பேகம் முல்லன் கான், தம்மு கான் மற்றும் சலாமத் பாய் மூவருக்கும் சோறு போட வேண்டியிருந்தது. அவள் வீட்டிலேயே பாலகர்களுக்கு என்று ஒரு குரான் பயிற்சி வகுப்பைத் தொடங்கினாள். அக்கம்பக்கத்தினருக்கு துணிமணி தைத்துக் கொடுக்க ஆரம்பித்தாள். அதிகப்படியான உடல் உழைப்பு அவளை நோயில் கொண்டு தள்ளியது. அவள் உடல் காய்ச்சலில் அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தபோது ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருந்த சலாமத் அத்தை அவளை வாய்க்கு வந்தபடி ஏசினாள். “பீபி செத்தால் கூட உன் சுய மரியாதையை விட்டுக் கொடுக்க மாட்டாயா? அப்படி என்ன ஒரு சுய கௌரவம்?” ஆனால் அதற்குள் சம்மி பேகம் மயக்க நிலைக்குச் சென்றுவிட்டாள். சலாமத் பரபரப்புடன் மல்லிகைக் குடியிருப்பிற்கு ஓடினாள்.

கல்லூ உடனடியாக பர்காவை மாட்டிக்கொண்டு புளியமர வீட்டிற்கு நடுக் கதவு வழியாகப் போகாமல் வீதியைச் சுற்றிக்கொண்டு போனாள். மருத்துவர் வரவழைக்கப்பட்டார். அன்றைய இரவு முழுவதும் கல்லூ தனது நாத்தியின் அருகில் அமர்ந்திருந்தாள். அஜ்ஜூ பாய் நான்கைந்து முறை சம்மி பேகத்தைப் பார்க்க வந்தாலும் தான் அவளுக்கு இழைத்த ஏமாற்றத்தின் குற்ற உணர்வு காரணமாகத் திரும்பிப் போய்விடுவான். ஒருவேளை சலாமத் அத்தை சொல்வதுபோல அந்தக் கறுப்புத் தோல் கல்லூ நிஜமாகவே அஜ்ஜூவிற்குச் சொக்குபொடி போட்டிருப்பாள் என்றே தோன்றியது.

சம்மி பேகம் கண் விழித்ததும் எதிரில் இருந்த கல்லூவின் முகத்தைப் பார்த்ததும் தாங்க முடியாத வருத்தமும் கோபமும் கொண்டாள். பதான் வம்சத்தினருக்கு உரிய இந்த மிதமிஞ்சிய கோபத்தைக் கண்டு கல்லூ மிரண்டு போனாள். அவள் உடனே அங்கிருந்து எழுந்து தனது பகுதிக்குச் சென்றுவிட்டாள்.

மற்ற பல வேசிகளைப் போலவே கல்லூவும் அஜ்ஜூவை மணந்து கொண்டதும் அவனுக்குப் பத்தினியாகவே வாழ்ந்தாள். அவளுடைய நெஞ்சில் இருந்த ஒரே ஆசை சம்மி பேகம் தன்னைப் பதான் குடும்பத்து மருமகளாகவும் தன்னை அவளது மதனியாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். தன்னையும் புளியமர வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டும். கல்லூவின் ஆசை கனவாகவே இருந்தது.

பத்து வருடங்கள் ஓடின. அஜ்ஜூ பாய்க்கு சம்மி பேகத்தின் திருமணம் உறுத்திக்கொண்டே இருந்தது. அவளும் நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருந்தாள். இனி அவளை யார் மணந்துகொள்ள வருவார்கள்?

சம்மி பேகம் இன்னமும் அஜ்ஜூ, கல்லூவின் கண் பார்வையிலிருந்து மறைந்தே இருந்து வந்தாள். இசுலாமியச் சிறுமிகளுக்கு ஒரு மதராஸா பள்ளி நடத்தி அதில் கிடைத்த வரும்படியைக் கொண்டு காலத்தை ஓட்டி வந்தாள். நாடு பிரிவினைக்கு ஆட்பட்டது. மதராஸாவில் படித்த பாதிச் சிறுமிகள் தங்கள் பெற்றோருடன் பாகிஸ்தான் சென்றனர். ஷாஜஹான்புரம் பாலைவனமாக மாறியது. சம்மி பேகத்தின் குடியிருப்பில் கடுமையான

உணவுப் பற்றாக்குறை நிலவியது. மேலும் கெட்ட காலம் வந்ததால் ஒரு பணி நிமித்தம் டெல்லி சென்ற அஜ்ஜூ பாய் அங்கு நேர்ந்த கலவரம் ஒன்றில் உயிர் இழந்தான். அவன் உடல் அங்கு கொண்டுவரப்பட்டபோது முற்றிலும் சிதைந்து போன கல்லூவை யாராலும் தேற்ற முடியவில்லை. வளையல்களை உடைத்துக்கொண்டாள். ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டாள். வளையல்கள் நிறைந்த கரங்களால் இரண்டு குடிகளுக்கும் இடையில் இருந்த கதவை கைகளில் ரத்தம் வரும் அளவிற்கு ஓங்கி ஓங்கித் தட்டினாள். “மகளே, மகளே! கதவைத் திறம்மா. மகளே மகளே... ஐயோ மகளே, எனக்குப் போக்கிடம் இல்லையம்மா...” என்று கதறினாள்.

வராந்தாவில் இருந்த கட்டிலில் சம்மி பேகம் படுத்திருந்தாள். அழுகுரல் கேட்டு எழுந்த சம்மி பேகம் ஜன்னல் கட்டையில் இருந்த கொக்கியில் மாட்டியிருந்த சாவியை எடுத்து இடைக் கதவைத் திறந்தாள். அந்தப் பக்கம் அழுதழுது முகமெல்லாம் வீங்கி, தலை முடி புரள ஒருகூனியக் கிழவிபோல கல்லூ நின்று கொண்டிருந்தாள். “என் துணைவன் என்னைவிட்டு அகாலமாகப் போய்விட்டார். ஐயோ மகளே, நான் விதவையாகி விட்டேன்” என்று புலம்பினாள். அவள் ஜன்னல் வழியாக சம்மியை நோக்கி ஆதரவு வேண்டி தனது கரங்களை நீட்டினாள். சம்மி பேகம் கரங்களை நீட்ட மறுத்ததோடு இரண்டடி பின்னால் நகர்ந்து கொண்டாள். தூக்கக் கலக்கத்தில் கண்களைக் கசக்கிக் கொண்டாள். நிதர்சனம் முகத்தில் அறைந்தது. ஜன்னல் திட்டையில் அமர்ந்து கலங்கிப் போய்த் தனது வெண்ணிறத் துப்பட்டாவை இழுத்து வாய் பொத்தி அழுதாள். அழுதுகொண்டே அவள், “அர்ரே... நீ இன்றுதான் விதவையானாய். நான் எப்போதோ விதவையாகி விட்டேன்” என்று கூறினாள். அஜ்ஜூவின் இறுதிச் சடங்குகளில் நான்காம் நாள் தொழுகை முடிந்த உடன் கல்லூ அந்த இல்லத்தை விட்டு அகன்றாள். எங்கு சென்றாள் என்று ஒருவருக்கும் தெரியாது. அவளுடைய மகள் அஷரபியின் திருமணம் அல்லாஹின் இணையடி நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்த அஜ்ஜூ பாயினால் அவன் இறப்பதற்கு முன்பே அவனுடைய அடிவருடி ஒருவருடன் நிச்சயமாகியிருந்தது. அவன் லக்னோவிலிருந்து வந்தான். வீட்டில் இருந்த சாமான்களைத் திரட்டினான். இரண்டு வண்டிகளில்

அள்ளிப் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டான். நிலையற்ற இந்த உலகில் வருவதும் போவதுமான நிகழ்வுகளை சம்மி பேகம் குளிப்பறையின் ஜன்னல் கீறல்கள் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மல்லிகை இல்லம் புதிதாக வந்த அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுசெல்லப்பட்டது. சம்மி பேகத்தால் அஜ்ஜூ பாய் பாகிஸ்தானுக்குப் புலம் பெயராமல் பிரிவினைத் தகராறில் இறந்ததை நிரூபிக்க முடியவில்லை. அனைத்தையும் இழந்த அவள் ஒரு வயதான வௌவாலைப்போல அந்தப் புளியமர இல்லத்தில் வசிக்கத் தொடங்கினாள். முதுமையும், வறுமையும் முல்லன் கானையும், தம்மு கானையும் வாட்டின என்றால் சலாமத் அத்தையைப் பாரிச வாயு தாக்கியது. அவளது மகள்களும், மருமகன்களும் பாகிஸ்தான் சென்றுவிட்டனர். உடலையும் ஆன்மாவையும் பேணுவதற்காக சம்மி பேகம் பழைய தையல் தொழில் செய்து பிழைத்து வந்தாள். அவருக்கு அந்தப் பெரிய வீட்டில் தனியாக வசிக்க அச்சம் எதுவுமில்லை. அவர்தான் இப்போது தலை முழுவதும் நரைத்த கிழவியாகிவிட்டாரே. அவருக்கு அந்த இல்லத்தின் போற்றுதலுக்குரிய மூத்த பெண்மணி என்ற பட்டம் வேறு கிடைத்துவிட்டது.

சிறிதுகாலம் கழித்து அடைக்கலம் தேடி வந்த சீக்கிய மருத்துவர் ஒருவர் தனது குடும்பத்துடன் மல்லிகை இல்லத்தில் குடியேறினார். சில நேரங்களில் வீட்டுப் பெண்மணிகள் இரண்டு இல்லங்களுக்கும் நடுவில் உள்ள ஜன்னல் அருகில் வந்து அமர்ந்து கதை பேசுவார்கள். சம்மி பேகமும் அந்தப் பெண்களும் தங்களது வாழ்வில் கடந்து வந்த இன்ப துன்பங்களைப் பரிமாறிக் கொள்வார்கள். மருத்துவரின் மகள் சிரஞ்சித்தை டெல்லியில் அரசுப் பணியில் இருந்த ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்திருந்தனர். ஒருமுறை விடுமுறைக்கு வந்திருந்த மகள் தந்தையிடம் தனது கணவரின் மேல் அதிகாரியின் இசுலாமிய மனைவி தனது பிள்ளைகளுக்கு உருது மொழியும், குர்ரானின் சூராக்களும் சொல்லிக் கொடுக்க வயதான பெண்மணியைத் தேடிக் கொண்டிருக்கும் தகவலைச் சொன்னாள். “இதை சம்மி பேகத்திடம் சொன்னால் அவர் கோபித்துக்கொண்டு விடுவாரோ என்று பயமாக இருக்கிறது. இதை

நீங்களே ஏன் அவரிடம் சொல்லக் கூடாது?” என்று கேட்டாள்.

டாக்டரின் மனைவி இந்த விஷயத்தை சம்மி பேகத்தின் கருத்திற்குக் கொண்டுசென்றாள். அந்த அம்மாள் தர்க்க ரீதியில் சம்மி பேகத்திடம் வாதிட்டாள். “சகோதரி, இன்னும் எத்தனை நாட்கள்தான் தனிமையுடனும், வறுமையுடனும் போராடுவீர்கள்? நான் சொன்னபடி புது தில்லிக்குப் பயணமாகுங்கள். அங்கே சபியுதினின் இல்லத்தில் வசதியாகவும் சுயமரியாதையுடனும் வாழலாம்” என்றாள்.

சம்மி பேகத்தின் துர்புத்தி எப்போதோ மாறிவிட்டது. அவருடைய புலம்பல்கள், கோபதாபங்கள், எரிச்சல், சிடுசிடுப்பு எல்லாம் எப்போதோ மறைந்துவிட்டன. நாளையே அவர் இறக்க நேரிட்டாலும் தனது ஆத்மாவின் நிம்மதியான பயணத்திற்கு சூரா யாசீன் ஓதுவதற்கு யாராவது இருப்பார்கள் என்று பதில் கூறினார். ஒரு நெடுங்கதையைச் சுருக்கமாகக் கூறுவதென்றால் சம்மி பேகம் தனது பர்காவை அணிந்துகொண்டார்; கொஞ்சம் துணிமணி அடங்கிய சூட்கேஸ் ஒன்று, படுக்கைவிரிப்பு ஒன்று, புள்ளி அலங்காரம் போட்டிருந்த ஒரு கழுத்து நீண்ட வடிகலம் (வெற்றிலை எச்சில் துப்ப) ஒன்று இவற்றுடன் புது தில்லி நோக்கிப் பயணமானார். சிரஞ்சித் எழுதிய கடிதத்தைப் பார்த்துவிட்டு சபியுதீன் தில்லி இரயில் நிலையத்திற்குக் கார் கொண்டுவந்து சம்மி பேகத்தை அழைத்துச் சென்றான். அன்றிலிருந்து ஜும்மா கானின் மகளும், ஷாஜஹான்புரத்தின் ஜமீந்தாரிணியுமான சம்மி பேகம் ஒரு வீட்டு நிர்வாகியாக வேலைக்குச் சென்றார்.

சம்மி பேகம் சபியுதீன் வீட்டில் பன்னிரண்டு வருடங்கள் வாழ்ந்தார். எப்போதும் நெற்றி வரை ஒரு வெள்ளைத் துப்பட்டா உடலை மறைத்துக் கொண்டிருக்கும். அவள் பாடம் சொல்லிக் கொடுத்த பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள். மூத்த பையன் தனது பி.ஏ படிப்பை முடித்ததும் பாகிஸ்தானில் இருந்த தன் தாய் மாமனோடு போய் இருக்கத் தொடங்கினான். இளைய மகளும் கராச்சி சென்று விட்டாள். கடைக்குட்டி பெண் மட்டும் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். பேகம் சபியுதீனுக்குச் சம்மி பேகத்தின் சேவை வேண்டியிருக்கவில்லை. சபியுதீன்

சாஹேபு பணி ஓய்விற்குப் பின்னர் தனது சொந்த ஊரான மிஜாபூர் திரும்ப உத்தேசித்தார். அவர்கள் கிளம்பும் முன்னர் சம்மி பேகத்தை சபியுதீனின் மனைவி தனது சிநேகிதி பேகம் ரஷித் அலி பொறுப்பில் விட்டுச் சென்றாள். ரஷீத் அலி சாஹேபும் நல்ல பதவியில் இருக்கும் அரசு அதிகாரி.

சம்மி பேகம் சபியுதீன் இல்லத்தில் வசதியாக வாழ்ந்து பழகிவிட்டார். வீட்டில் ஒரு வயது முதிர்ந்த பெண்மணி என்ற மதிப்பு அவருக்கு இருந்தது. அவரும் மூன்று குழந்தைகளிடமும் உயிரை வைத்திருந்தார். இப்போது அவருக்குக் கோபம் வருவது அபூர்வம். அப்படியே வந்தாலும் தனது பழைய நிலைமையை எண்ணிக்கொண்டு சமாதானமடைவார். அவரைப் பற்றி வம்பு பேசுபவர்களோ, அன்பு பாராட்டுபவர்களோ அல்லது அவரது கோபத்தைச் சகித்துக் கொண்டிருப்பவர்களோ இப்போது உயிருடன் இல்லை. எப்போதாவது கல்லூவைப் பற்றிய நினைப்பு எழும். அந்தப் பாவி இப்போது எங்கே இருக்கிறாளோ? இல்லை இறந்துவிட்டாளோ? இதை என்னவென்று சொல்வது? வாழ்க்கை எத்தனை அநித்தியமாகிவிட்டது.

ரஷித் அலியின் மனைவி சபியுதீனின் பேகத்திற்கு நேர்மார். அவளைப்போல அத்தனை கருணையும் இல்லை. அத்தனை உலக அறிவும் கிடையாது. இவற்றையெல்லாம் விட நவீன யுகத்தைச் சேர்ந்த நவநாகரீக நாரியாக நடந்து கொண்டாள். இருப்பினும் அவள் சம்மி பேகத்திற்கு உரிய மரியாதை கொடுத்துப் பார்த்துக் கொண்டாள். சம்மி பேகமும் சொந்த வீட்டில் இருப்பது போன்ற வாழ்வை வாழ்ந்து வந்தார். ரஷித் அலியும் அவருக்கு உரியமுறையில் பாதுகாப்பு அளித்தார். அத்தனை பேருக்கும் சம்மி பேகத்தின் இணக்கமான முகமும், அவரது பெரிய பரம்பரையும் வியப்பை அளித்தன. ரஷீதின் பேகம் தனது நண்பர்களிடம் சம்மி பேகத்தைப் பற்றிய பேச்சு வரும்போது இப்படிக் கூறுவாள். “மனிதர்களுக்கு சில நேரங்களில் வாழ்வே தடம் மாறுவதுபோல மாற்றங்கள் நேர்ந்து விடுகிறது. எங்கள் வீட்டில் இருக்கும் முக்லனியின் கதை தெரியுமா உனக்கு? அவங்க ஷாஜஹான்புரத்தில் அப்படி ஒரு ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவங்க…” அதனைக் கேட்கும்

பெண்களிடம் இருந்து நீண்ட பெருமூச்சு கிளம்பும். அவர்களும் தங்கள் பங்கிற்குத் தங்களது அரட்டைகளில் வாழ்வின் சுழற்சியைக் கூற நேரும்போது மறக்காமல் சம்மி பேகம் கதையைக் கூறத் தொடங்கினர்.

ரஷித் அலியின் குழந்தைகள் மிகவும் சிறியவர்கள். அவர்களை ஹைதராபாதிலிருந்து தருவிக்கப்பட்ட ஆயா ஒருத்தி பார்த்துக் கொண்டாள். சம்மி பேகம் வீட்டு நிர்வாகியானார். ரஷித் அலியின் பேகத்திற்கு சம்மி பேகத்தின் தேவை அத்தியாவசியமானது. ரஷிதின் பேகத்திற்கு பார்ட்டிக்குச் செல்வதற்கும், பார்ட்டி நடத்துவதற்கும், கிளப்பிற்குச் செல்வதற்கும், ரஷிதின் அலுவலக விசேடங்களுக்குச் செல்வதற்குமே பொழுது சரியாக இருந்தது.

சம்மி பேகம் ஐந்து வருடங்கள் ரஷித் அலியின் வீட்டில் இருந்தார். ரஷித் சாஹேப் வாஷிங்டனிற்கு வேலைக்குச் செல்ல நேர்ந்தபோது சம்மி பேகத்திற்கு மாற்று ஏற்பாடு செய்ய உத்தேசித்தார். ரௌஷன் ஆரா கிளப்பில் ஒரு பிரிவு உபசார விருந்தில் கலந்துகொள்ளச் சென்றபோது முன்னியைப் பார்த்துக் கொள்ள சம்மி பேகத்தையும் உடன் அழைத்துக்கொண்டு போனாள்.

சம்மி பேகம் அங்கு போய்ச் சேர்ந்தபோது ஏற்கெனவே மதிய உணவு பரிமாறத் தொடங்கப்பட்டு விட்டது. முன்னியின் கைகளைப் பற்றிக்கொண்டு சம்மி பேகம் வெளியில் இருந்த புல்வெளியில் ஓடியாடிக் கொண்டிருந்தார். சம்மி பேகம் இப்போதெல்லாம் பர்தா போடுவதில்லை. மேலும் வெளியில் செல்லும்போது மற்ற பெண்களைப்போல சேலை அணியத் தொடங்கினார். ஆமாம், இனிமேலும் இந்தப் புது தில்லியில் இது ஜமீன்தாரிணி சம்மி பேகம் என்று அடையாளம் சொல்ல யார் இருக்கிறார்கள்? வராந்தாவில் நான்கைந்து நாற்காலிகள் போட்டு சீட்டுக்கட்டு அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தது. நடுத்தர வயது நவீன உலகின் பிரதிநிதி போன்ற பெண் ஒருத்தி அங்கிருந்த ஐந்து ஆண்களுக்கு ஈடு கொடுத்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தாள்.

சம்மி பேகத்தின் பதினேழு வருடப் புது தில்லி வாசம் அவளுக்கு இது போன்ற ஹை-சொசைட்டி பெண்களை அடையாளம் கண்டுகொள்ளப்

பழக்கியிருந்தது. நவீன இந்தியப் பெண்ணின் நடவடிக்கைகள் பழகிப் போனதால் அவள் அந்தப் புல்வெளியில் அவர்களைப் போலவே முகத்தை மூடாமல் நடக்கப் பழகிக் கொண்டாள். கொஞ்ச நேரம் போனதும் அந்த நவநாகரிக நங்கை தன் புருவத்தை உயர்த்தி சம்மி பேகத்தை அளந்தாள். அந்த நங்கை தன்னுடன் விளையாடுபவனிடம் எதையோ சொல்ல அந்த மனிதன் நீள நீள எட்டெடுத்துத் தன்னை நோக்கி வருவதை கவனித்தார் சம்மி பேகம்.

அவன் அவர் அருகில் வந்து "பெரியம்மா கொஞ்சம் அந்தப் பக்கம் வருகிறீர்களா?" என்று அழைத்தான்.

சம்மி பேகம் புல்வெளியைக் கடந்து வராந்தா நோக்கிச் சென்றார். அந்த அடையாளம் தெரியாத நங்கை முன்னியின் பெற்றோர் குறித்தும், சம்மி பேகம் குறித்தும் விசாரித்து அறிந்துகொண்டு தான் புது தில்லிக்குப் புதியவள் என்றும் வசிப்பது மும்பையில் என்ற தகவலையும் கூறினாள். அதுவுமில்லாமல் தனது மும்பை வீட்டைப் பராமரிக்கவும் பார்த்துக் கொள்ளவும் சம்மி பேகம் போன்ற வயது முதிர்ந்த அனுபவமுள்ள பெண்மணி ஒருத்தியைத் தேடிக் கொண்டிருப்பதாகவும், அப்படி யாராவது அவருக்குத் தெரிந்தால் தன்னிடம் சொல்லுமாறும் கேட்டுக்கொண்டாள். சம்மி பேகம் இனி எப்படி ஆகுமோ என்ற நிலையில் தனது வாழ்வாதாரத்திற்கு வழி காட்டிய எல்லாம் வல்ல அல்லாவிற்கு மௌனமாக நன்றி செலுத்தினார். தனது சுயமரியாதையை விட்டுக் கொடுக்காமல் அதேநேரம் மிகவும் கண்ணியமான த்வனியில் தான் இன்னும் சிறிது நாளில் தற்சமயம் பார்க்கும் பணியிலிருந்து நிற்கப் போவதையும் தெரிவித்தார். "என் எஜமானி இப்போது வருவார். நீங்களும் ஒரு வார்த்தை கூறிவிடுங்கள்" என்றார். ரஷித் அலியின் பேகத்திற்கு அவர் வராந்தாவில் காத்திருந்தார்.

ரஷிதின் பேகம் வந்ததும் அந்தப் புதிய நங்கை அவளை வரவேற்றுத் தன்னை திருமதி. ரசியா பானு என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். உடனே சம்மி பேகத்தைக் குறித்து விசாரித்தாள். ரஷிதின் பேகத்திற்கு மனசு நிம்மதியானது. தான் வாஷிங்டன் போவதற்கு முன்பு சம்மி

பேகத்தை மும்பைக்கு ரயில் ஏற்றிவிட்ட பிறகே போகப் போவதாகக் கூறினாள். ரசியா பானு தான் அன்றிரவே மும்பைக்கு இரயிலில் செல்லப் போவதைக் கூறியிருந்தாள். ரசியா பானு ஒரு துண்டுச் சீட்டில் தனது மும்பை முகவரியை எழுதி சம்மி பேகத்திடம் கொடுத்தாள். “பெரியம்மா, நீங்கள் தனியா மும்பை போவீங்களா?” என்று ரஷிதின் பேகம் மிகுந்த அக்கறையுடன் கேட்டாள்.

வாழ்வின் இந்தக் காலகட்டத்தில் சம்மி பேகம் எதற்கும் முடியாது என்று சொல்லும் நிலையைக் கடந்திருந்தார். (இந்த வரியை மொழிபெயர்க்கும்போது கோடான கோடி நிராதரவுப் பெண்களுக்காக நான் வாய் விட்டு அழுதேன் - மொழிபெயர்ப்பாளர்.) ரசியா பானுவிடம் தனது சம்பளத்தைக்கூட பேசி வைத்துக்கொள்ள எண்ணவில்லை. மனக் கணக்காக ஒரு நாற்பது ரூபாய் கிடைத்தால் போதும் என்று நினைத்துக் கொண்டாள். வீட்டோடு இருப்பதால் மூன்று வேளையும் சாப்பாடு போடுவார்கள். சொந்தச் செலவுக்கு நாற்பது ரூபாய் அதிகம். பழைய எஜமானர்கள் வாங்கிக் கொடுத்த துணிமணி வேண்டும் என்கிற அளவிற்கு இருக்கிறது. துணிமணி, ஆபரணங்கள், பாத்திர பண்டம், சொத்து, துணை, ரத்த பாசம், அன்பு, நேசம் எல்லாம் காலத்தோடு அழியும் தன்மை உடையவை என்பது சம்மி பேகத்திற்குப் புரியத் தொடங்கி நாள் பலவாயிற்று. அவள் அவற்றின் மீதிருந்த பற்றை விலக்கிக்கொள்ளத் தொடங்கிவிட்டார்.

ரஷிதின் பேகமும், சம்மி பேகமும் எழுந்து கிளம்ப நினைத்தபோது ரசியா பானு தனது மணி பர்ஸிலிருந்து நூற்றைம்பது ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து “இது போக்குவரத்து செலவுக்கும், இதர பயணச் செலவுக்கும்” என்று எவ்வித பந்தாவுமில்லாமல் கொடுத்தாள். ரஷித் அலியின் பேகத்திற்கு ரசியாவின் தாராள மனசு ஆச்சரியமாகப் போனது. அவளுக்கும் ரசியா பானுபோல செல்வச் சீமாட்டிகள் மும்பை நகர் முழுதும் இருக்கிறார்கள் என்பது தெரியும். சம்மி பாய் அவள் கொடுத்த பணத்தைத் தான் அணிந்திருந்த கையில்லாத நேரு ஜாக்கெட்டின் உள் பையில் வைத்துக் கொண்டார். வாழ்வின் சின்னச் சின்ன ஆச்சரியங்கள் அவருக்கு இப்போது வியப்பளிப்பதில்லை.

பம்பாயில் சென்ட்ரல் இரயில் நிலையத்தில் இறங்கியதும் சம்மி பேகம் மும்பை நகரின் தள்ளு முள்ளு சந்தடியைப் பார்த்துக் கொஞ்சம் மிரண்டுதான் போனார். புது தில்லியில் அமைதியான சூழலில் ஒரு சாந்தமான வாழ்க்கைக்குப் பழகிவிட்ட அவருக்கு பாம்பேயின் சந்தடி பிடிக்கவில்லை. சின்னத் தொழுகை ஒன்றைப் புரிந்துவிட்டு ஒரு போர்ட்டரை கூலிக்கு அமர்த்திக் கொண்டார். அவன் அவரது ஒரு தகரப்பெட்டியையும் படுக்கையையும் சுமந்துகொண்டு வந்தான். சம்மி பேகம் வெற்றிலை துப்பும் கழுத்து நீண்ட குடுவை ஒன்றையும், விசிறி ஒன்றையும், வெற்றிலைப் பெட்டியையும் தூக்கிக் கொண்டு ஒரு டாக்சி பிடித்து டாக்சி டிரைவர் சர்தாரிடம் குல்சார் ஜோர்டான் சாலை என்று முகவரி கூறினார். சில நிமிடங்களில் அந்த டாக்சி ஒரு நவீன அதி உயர கட்டடத்தின் போர்டிகோவில் நுழைந்தது. வரும் வழியெல்லாம் விடாது தொண தொணவென்று பேசிக்கொண்டு வந்த அந்த சர்தார்ஜி ஓட்டுநருக்கு டாக்சி வாடகையைக் கொடுத்துவிட்டு உள்ளே போனாள். கட்டடத்தின் லிஃப்டிலிருந்து வெளியில் வந்த இரண்டு பெண்கள் டாக்சியில் ஏறிக் கிளம்பிவிட்டனர். சர்தார்ஜியும் வண்டிக்கு மீட்டரைப் போட்டுவிட்டு சத்தமே இல்லாமல் வண்டியைக் கிளப்பிக்கொண்டு போனான். இந்த உலகில் எத்தனை விஷயங்கள் கனகச்சிதமாக நியதி மாறாமல் நிகழ்கிறது.

மீண்டும் ஒருமுறை சம்மி பேகம் தனது ஜாக்கெட்டிலிருந்து துண்டுச் சீட்டைப் பிரித்து அதில் எழுதியிருந்த முகவரியுடன் தான் நின்ற கட்டடத்தின் விலாசத்தைச் சரி பார்த்தார். வாயில் காவலாளி ஒரு வார்த்தைகூட பேசாமல் அவருடைய பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு லிஃப்டில் வைத்தான். சம்மி பேகத்திற்கு உள்ளூர உதறியது. ஆனால் அந்தக் காவலாளி பதினோராவது தளம் வரை கூடவே வந்தான். இப்போது சம்மி பேகம் அந்தப் பரந்த இடைகழியில் தனி ஒருத்தியாக நின்று கொண்டிருந்தார். அருகில் இருந்த கதவின் நிலையில் ஒரு உலோகப்பட்டையில் மூன்று என்ற எண் எழுதியிருப்பதைப் பார்த்தார். ஓர் இரும்பு அழிக் கதவில் கொண்டி போட்டுப் பூட்டப்பட்டிருந்தது. இது மாதிரி கேட்டுகளை வங்கி லாக்கர்

அறைகளில்தான் பார்த்திருக்கிறார்.

வாசல் மணியை அடித்தார். சிறிது நேரம் கழித்து முதியவர் ஒருவர் கதவில் இருந்த மறைவு துவாரத்தின் வழியாகப் பார்ப்பது தெரிந்தது. சட்டென்று பேகத்திற்குப் புளிய மர வீட்டில் இருக்கும்போது குளிப்பறையிலிருந்து மல்லிகை வீட்டிற்குள் நடப்பதைத் தான் ஜன்னல் கண்ணாடியின் கீறல் வழியாகப் பார்த்தது நினைவில் எழுந்தது. சிறிது நேரம் கழித்துக் கதவு திறந்தது. எரிச்சலூட்டும் வகையில் ஒரு கூர்க்கா வெளியில் வந்தான். கூர்க்கா சம்மி பேகத்தை சந்தேகக் கண் கொண்டு மேலும் கீழும் அளந்தான். ஒரு கணம் கலவரமடைந்த சம்மி பேகம் தான் ஒரு பதான் பரம்பரையைச் சேர்ந்தவள் என்ற நினைவு வரப் பெற்று தனது முகவாயைச் சற்று தூக்கி அந்த கூர்க்காவைப் பார்த்து, “உள்ளே இருக்கும் பேகம் சாஹேபிடம் தில்லியிலிருந்து சம்மி பேகம் வந்திருப்பதாக போய்ச் சொல்” என்றார்.

“தெரியும். தில்லியிலிருந்து நீங்கள் வருவது தெரியும். உள்ளே வாருங்கள்” என்றான் அந்த கூர்க்கா ஒரு வறட்சியான குரலில். வெளியில் வந்து சம்மி பேகத்தின் தகரப் பெட்டியையும் படுக்கையையும் சுமந்து கொண்டு உள்ளே போனான். சம்மி பேகம் அவன் பின்னே தொடர்ந்தார். அவர் உள்ளே வந்த மறுநிமிடம் கூர்க்கா பின்னால் இருந்த வாசல் கதவைத் தாழ் போட்டுப் பூட்டினான். இப்போது சம்மி பேகம் மங்கிய ஒலியுடன் கூடிய ஒரு வரவேற்பறையில் நின்று கொண்டிருந்தார். சபியுதீன் வீட்டிலோ அல்லது ரஷித் அலி வீட்டிலோ வரவேற்பறை இத்தனை அமெரிக்கையாக இருந்ததில்லை. ஒரு சுவரில் கறுப்பு ஸ்க்ரீன் மறைத்துக் கொண்டிருந்தது. மூடியிருந்த சுவரில் சினிமாத் திரை ஒன்று வைக்கப் பட்டிருந்ததை சம்மி பேகம் கவனித்தார்.

கையில் கைவைத்த கழுத்து நீண்ட குடுவையையும், விசிறியையும், வெற்றிலைப் பெட்டியையும் சுமந்து கொண்டிருந்த சம்மி பேகம் கூர்க்காவிடம் “எஜமானியம்மா எங்கே?” என்று கேட்டாள்.

“மேம் சாஹேப் தூங்கறாங்க.”

“எஜமானர்?” ஒவ்வொரு இல்லத்திலும் வேலைக்குச் சேரும் முன் வீட்டு

எஜமானர் கேட்கும் கேள்விகளுக்கு எப்போதும் சம்மி பேகம் நடுங்குவார்.

கூர்க்கா அவர் கேள்விக்கு பதில் கூறவில்லை. மாறாக அவன் ஒரு நீண்ட தாழ்வாரம் போன்ற பகுதிக்குள் நுழைந்தான். அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டே சம்மி பேகம் பின்தொடர்ந்தார். தாழ்வாரத்தின் இரண்டு பக்கங்களிலும் நான்கு நான்கு கதவுகள் இருந்தன. அத்தனை கதவுகளும் மூடப்பட்டிருந்தன. பரந்த, ஆடம்பரமான, அலங்கரிக்கப்பட்ட ஃபிளாட் அது. தாழ்வாரத்தின் இறுதியில் அடுத்தடுத்து இரண்டு அறைகளும் ஒரு சமையல்கட்டும். இரண்டு அறைகளுமே பணியாட்கள் தங்குவதற்குக் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு அறையிலும் ஒரு பால்கனி இருந்தது. பணியாட்களின் அறைக்குச் செல்லும் படியில்கூட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கூர்க்கா ஓர் அறைக்குள் நுழைந்தான். சின்ன ரூம்தான். ஆனால் பிரகாசமாகவும் சுத்தமாகவும் இருந்தது. கூர்க்கா அவருடைய தகரப் பெட்டியையும் படுக்கையையும் உள்ளே வைத்தான். அங்கிருந்து ஒரு வார்த்தைகூட பேசாமல் அகன்றான். சம்மி பேகம் தன் கையில் இருந்தவற்றைத் திட்டை போன்ற அமைப்பில் வைத்துவிட்டு அறையை, இல்லை தனது புகலிடத்தை ஒருமுறை நன்றாக நோட்டமிட்டார். ஒரு மூலையில் இரும்புக் கட்டில் ஒன்று இருந்தது. ‘இதில் படுத்தால் உடல் வலிக்கும்’ மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். அந்த அறையின் சுவரில் நட்சத்திரங்களில் வண்ணப் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. இதற்கு முன்னால் தங்கியிருந்தவனின் ஆர்வக்கோளாறு போலிருக்கும். உள்ளே ஒரே புழுக்கமாக இருந்தது. சம்மி பேகம் ஜன்னல் கதவுகளைத் திறந்தார். என்ன ஆச்சரியம், எதிரில் கடல் விரிந்து காணப்பட்டது. கடல் பரந்தது விரிந்தது; ஆழமானது, அவர் வாழ்க்கையைப்போல. இதற்கு முன்னால் இப்படி ஒரு காட்சியை அவர் கண்டதில்லை. இந்தக் கடல்வழி மார்க்கமாகதான் மெக்கா மதீனாவிற்குப் புனிதப் பயணம் மேற்கொள்ள வேண்டும். இப்படி ஒரு கடலின் முன்பு தன்னைக் கொண்டுவந்த அந்த எல்லையில்லாக் கருணை உள்ள இறைவன் முன்பு விழுந்து தொழ வேண்டும் என்று சம்மி பேகத்திற்குத் தோன்றியது. ஹாஜி யாத்திரைக்கு இனிமேல் போய் வர வசதியா இருக்கும். சம்மி பேகத்திற்கு அந்த நினைப்பு வந்ததுமே மனம் விம்மத்

தொடங்கியது.

அந்த அறையில் கழிப்பிட வசதியுடன் கூடிய குளிப்பறை ஒன்றும் ஒட்டியிருந்தது. சம்மி பேகம் தனது பெட்டியைத் திறந்து மாற்றுடை எடுத்துக்கொண்டு குளிப்பறைக்குள் நுழைந்தாள். தனது பாரம்பரிய வீட்டில் பெரியதாகவும், மங்கிய ஒளியிலும் இருந்த அந்தக் குளியலறையுடன் ஒப்பு நோக்கினால் இது நேர் எதிர். அவளுடைய இந்த நெடிய பயணத்தில் தனது எல்லா வசதிகளையும் ஒதுக்கி வைக்கப் பழகிக் கொண்டு விட்டார். பணியாட்கள், தெரிந்தவர்களிடமிருந்து பெரும் உதவி எல்லாம். ஆடவர்கள் நாளா வட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு எளிதில் பழகிக் கொள்வார்கள். அதிக நாட்கள் உயிருடன் இருக்கவும் மாட்டார்கள். குளித்து உடை மாற்றிக்கொண்டு அவர் வெளியே வந்தார். ஒருவித அமைதி அந்த வீட்டில் சுற்றிப் படர்ந்திருந்தது. பணியாட்கள் வெளியில் போயிருக்க வேண்டும், வீட்டுத் தலைவன் பணிக்குச் சென்றிருக்க வேண்டும்; பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றிருக்க வேண்டும். எஜமானியம்மாள் உறங்கிக் கொண்டிருக்க வேண்டும். மதியம் சம்மி பேகத்திற்குத் தேநீர் குடிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. தனது வாழ்வில் அவர் சந்திக்க நேரிட்ட நிதர்சனங்கள் அவரைப் பொறுமையுடையவராக, எல்லாவற்றையும் சகித்துப் போகக்கூடிய அல்லது எல்லாவற்றையும் மன்னிக்கும் பக்குவத்திற்கு வந்துவிட்ட ஒரு மூதாட்டியாக மாற்றியிருந்தது. இப்போது எதுவும் பேசாமல் ‘நாமே போய் தேநீர் போட்டுக் கொள்வோம்’ என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டார்.

சமையலறையில் இருந்த எல்லாமே கேஸ் அடுப்புகள். அவருக்கு கேஸ் அடுப்பை எப்படிப் பற்ற வைப்பது என்பது தெரியாது. கொஞ்சம் தடுமாறிய அவர் தாழ்வாரத்திற்கு வந்தார். நான்கு கதவுகளில் ஒன்று திறந்திருந்தது. வாசலில் அலங்கார திரைத் துணி தொங்கிக் கொண்டிருந்தது. அவரது காலடியோசையைக் கேட்டு உள்ளிருந்து, “யார் அது?” என்ற குரல் வந்தது.

“சம்மி பேகம். தில்லியிலிருந்து வந்திருக்கிறேன்” என்று நேரடியாக பதில் கூறினார்.

“ஓ ஓ... நீங்கள் வந்து விட்டீர்களா? உள்ளே வாருங்கள்.”

திரையை விலக்கிவிட்டு உள்ளே போனார். கனவில் வருவதுபோல கவர்ச்சியான படுக்கை அறை. உள்ளே அமெரிக்கன் மாடலில் ஒரு கட்டில். நேருக்கு நேராகப் படுத்துக் கொண்டிருந்த ரசியா பேகத்தை சம்மி பேகம் பார்த்தார். ரசியாவின் கண்கள் பாதி திறந்திருந்தன. பிங்க் வர்ணத்தில் நைலான் நைட்டி அணிந்திருந்தாள். கைகளில் சிகரெட் துண்டு புகைந்து கொண்டிருந்தது. சம்மி பேகத்திற்கு ரசியாவின் உடை சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆனால் அதனைக் குரலில் வெளிப்படுத்தவில்லை. அதற்கு பதில் மனதில், ‘ஒவ்வொருத்தரும் அவங்க அவங்க விருப்பம்போல. இந்த ஊர் நாகரீகம் இதுதான் போல’ என்று சொல்லிக் கொண்டார். அவள் சிகரெட் பிடிப்பதையும் அவர் விரும்பவில்லை. சபியுதீனின் பேகமும், ரஷித் அலியின் பேகமும் சிகரெட் புகைக்க மாட்டார்கள். இருந்தாலும் சம்மி பேகம் ரசியாவைப் பார்த்து, “அஸ்ஸலாம் அலைக்கும்” என்று முகமன் கூறினார்.

“உள்ள வாங்க அத்தைம்மா. வந்து இப்படி உட்காருங்க” என்று அவரை அழைத்தாள்.

எப்போது தனது தந்தை பாட்டன் வீட்டை விட்டு ஒரு கௌரவமான வாழ்வை வாழ வெளியேறினாரோ அப்போதிலிருந்து யாரும் அவரை ‘அத்தைம்மா’ என்று அழைத்ததில்லை. சம்மி மாமி. இல்லையென்றால் வெறும் மாமி. இப்படிதான் அழைப்பார்கள். ரசியாவின் அழைப்பில் இருந்த மாற்றத்தில் மயங்கி சம்மி பேகம் அந்த திவானில் அமர்ந்தார்.

ரசியா பேகத்தின் இரு புறமும் இரண்டு தொலைபேசிகள் இருந்தன. ஒன்று சிவப்பு. மற்றது வெளுப்பு. வெள்ளை ஒலித்தது. ரசியா ரிசீவரை பதவிசாக எடுத்து ஒயிலாகப் பேசினாள். தனது கரத்தை நீட்டி அருகில் இருந்த மேசையின் மேல் இருந்து ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தை எடுத்து என்னவோ எழுதி விட்டு ரிசீவரைத் தொலைபேசியில் வைத்தாள். சிவப்பு நிறத் தொலைபேசியை எடுத்து மீண்டும் குழையும் குரலில், “மாதோ நாலாம் நம்பர், தொண்ணூற்று மூணு” என்றாள். இவற்றையெல்லாம் நோட்டமிட்டபடி சம்மி பேகம் அந்த அறையின்

நேர்த்திகளைப் பார்வையிட்டார். ஒரு சலவைக்கல் சிலை, சுவரில் பெரிய பெரிய வண்ண ஓவியங்கள், ஒரு ரேடியோகிராம், பெரிய வெள்ளை நிறத்தில் துணிமணிகளுக்கு ஒரு அலமாரி. வனப்பும் வசீகரமும் கொண்ட இளவயதுப் பெண் ஒருத்தி கவுன் அணிந்து உள்ளே வந்தாள். யாரோ தாழ்வாரத்தில் இருந்த அறைக்கதவைத் திறந்திருக்கிறார்கள். உள்ளிருந்து இரைச்சலுடன் நவீன இசை முழங்கியது. அந்தப் பெண் ரசியாவிடம் என்னவோ அவசரமாக உரையாடிவிட்டு வெளியேறினாள். தாழ்வாரத்தில் இருந்த அறைக்கதவு மீண்டும் சாத்திக் கொண்டது. நவீன இசையின் இரைச்சலும் நின்று போனது.

“கடவுள் புண்ணியத்தில் தங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?” என்று சம்மி பேகம் ரசியாவைக் கேட்டாள்.

“எனக்கு பிள்ளைகள் கிடையாது. இந்தப் பெண்கள் என்னுடைய மருமகள்கள். என்னுடன்தான் இருக்கின்றனர்.” ரசியா பேகம் சுருக்கமாகக் கூறிவிட்டு மீண்டும் அந்தப் பெரிய ரெஜிஸ்டர் புத்தகத்தை எடுத்து விரித்தாள்.

“அவர்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்க வேண்டும்” என்றார் சம்மி பேகம்.

“யார்?”

“உங்கள் மருமகள்கள்.”

“ஹ்ம்ம்.”

“கடவுள் கிருபையில் உங்கள் கணவர் தொழிலதிபரா?” சம்மி பேகத்திற்கு பாம்பேயில் வசிப்பவர்கள் எல்லாம் தொழிலதிபர்கள் என்று ஒரு நினைப்பு.

“ஹ்ம்ம்... என்னது?” அந்த நோட்டுப் புத்தகத்திலிருந்து தலையை நிமிர்த்தி ஆச்சரியத்துடன் , “என் கணவர் தொழில் அதிபரா? அவர் எப்போதோ இறந்து போய்விட்டார்” என்றாள்.

“நாம் அனைவரும் அல்லாவின் சொத்து. மீண்டும் அவரிடம்தான் போக வேண்டும்” என்று சம்மி பேகம் வாய் தவறிக் கூறிவிட்டார். ஒரு சில

கணங்கள் சம்மி பாய் மறைந்த அஜ்ஜூ பாயை நினைத்துக் கொண்டார். அவன் அவர் இணையடியில் இளைப்பாறட்டும். ஒவ்வொருமுறையும் எவரது மரணத்தை அறிய நேரிட்டாலும் உடனே சம்மி பேகத்திற்கு மறைந்த அஜ்ஜூ பாயின் நினைவு வந்துவிடும். சம்மி பேகத்தின் இந்த மோசமான வாழ்க்கையையும் அதன் இருண்ட பகுதிகளைச் சுயக் கட்டுப்பாட்டுடன் கடந்து வந்துள்ளதையும் யாரால் அறிய முடியும்? தனக்கு விதிக்கப்பட்டதை அவர் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். அதற்கு நன்றியும் செலுத்தினார்.

மற்றுமொரு பைஜாமா சுடிதார் அணிந்து கொண்டிருந்த இள நங்கை அந்த அறைக்குள் நுழைந்தாள். ரசியா பானு அவளிடம் ஏதோ ஆங்கிலத்தில் கூறினார். அந்த நங்கை வந்தது மாதிரியே குதிரை நடை போட்டுக்கொண்டு தனக்குத் தானே சிரித்துக்கொண்டு வெளியேறினாள். ரசியா பானு இப்போது தனது கவனத்தை ஒரு தேநீருக்காக ஏங்கிக் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும் சம்மி பேகத்தின் மேல் திருப்பினாள். ரசியா தனது முழங்கையின் அடியில் இருந்த தலையணையில் சாய்ந்துகொண்டு “அத்தைம்மா” என்றாள். சம்மி பேகத்திற்கு மீண்டும் ஒருமுறை உடல் நடுங்கியது. “ரொம்ப நல்லது நீங்க என்னுடைய இடத்திற்கு வந்தது. முதன் முதலில் உங்களைப் பார்த்ததுமே உங்களுடைய அவல நிலை எனக்குப் புரிஞ்சிடுச்சு. உங்களுக்கு ஓர் ஆதரவு தேவை அப்படின்னு நினைச்சேன். இனிமே இந்த வீட்டை உங்க சொந்த வீடா நினைத்துக் கொள்ளுங்கள். எனக்கு கொஞ்ச நாளாகவே ஒரு வயதான மூதாட்டி என் இல்லத்தில் இருந்து குரான் ஓதி, நமாஸ் செய்ய வேண்டும் என்ற நினைப்பு இருக்கிறது. ஹைதராபாதிலிருந்து வந்த ஒரு மூதாட்டி ரொம்ப நாள் என்னுடன் இருந்தாங்க. போன வருடம் ஹஜ் யாத்திரை போகணும்னு சொல்லிக் கிளம்பிப் போனவங்க அங்கேயே இறந்துட்டாங்க. கவலைப்படாதீங்க. உங்க சௌகரியம்போல எவ்வளவு நாள் வேண்டுமானாலும் இங்கே இருக்கலாம்.”

ரசியா பானு தனது குரலை மாற்றிக்கொண்டு, “என்னோட மனசில் இருப்பதை உங்களுடன் பகிர்ந்துக்கலாம் என்று நினைக்கிறேன். பாம்பே நகரம் நமது பாவ புண்ணியங்களுக்கு இறைவன் தண்டனை வழங்கும்

இடம் போன்றது. நல்ல செயலுக்கும், கெட்ட செயலுக்கும் இங்கே உடனடி பலன் கிடைக்கும். இந்த ஊரில் எல்லா விதமான மக்களும் இருக்கிறார்கள்; எல்லாவிதமான பழக்கவழக்கங்கள் உள்ளன. நீங்கள் இங்கு யார் சொல்வதையும் கேட்கக் கூடாது. எதைக் காண நேரிட்டாலும் நம்பக் கூடாது. உங்கள் வேலை எதுவோ அதை மட்டும் பாருங்கள். ஒட்டாமல் இருக்கப் பழகுங்கள். சமையல்கட்டின் மீது மட்டும் எப்போதும் ஒரு கண் இருக்கட்டும். மற்ற நேரங்களில் தொழுகை, நோன்பு போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள். இனிமேல் நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்பதில்லை. இது ஓய்வெடுத்து இறைச் சிந்தனையுடன் இருக்க வேண்டிய காலம். குரான் சூராக்களை ஓதிக் கொண்டிருங்கள். அப்படியே என் மோட்சத்திற்கும் பிரார்த்தியுங்கள். என் மருமகப் பெண்களைப் பார்த்துக்கொள்ள ஏற்கெனவே ஓர் ஆயாம்மா இருக்கிறார்கள். சமையல்காரர் பெயர் இப்ராஹிம். கூர்க்காவின் பெயர் பிஷன் சிங். டிரைவர் பெயர் மாதோ. யார் சொந்த விஷயங்களிலும் மூக்கை நுழைத்து சச்சரவில் மாட்டிக்கொள்ளாதீர்கள்."

"நான்..." பேசுவதற்கு வாய் திறந்த சம்மி பேகத்தைத் தடுத்து, "நான் ஆண்டவன் கிருபையால் வளம் கொழிக்கும் ஒரு தொழிலை மேற்பார்வை பார்த்து வருகிறேன்" என்று கூறியவள் வேண்டுமென்றே நிறுத்திவிட்டு, "ஏற்றுமதி இறக்குமதி அப்படி என்றால் என்னவென்று தெரியுமா அத்தைம்மா?" என்று கேட்டாள்.

"தெரியும்" சம்மி பேகம் தலையாட்டினார். சபியுதீன் அரசாங்கத்தின் வர்த்தகம் மற்றும் வணிக அமைச்சகத்தில் அதிகாரியாக இருந்தவன். எனவே அவளுக்கு அந்த வார்த்தைப் பிரயோகங்கள் நன்கு தெரியும். சம்மி பேகத்திற்கு ரசியா பானுவின் அறிவும், இறை நம்பிக்கையும் பிடித்திருந்தது. எனவே அவளது அரைகுறை ஆடையை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

"நான் தனியொரு பெண்ணாக இருந்துகொண்டு ஒரு வெற்றிகரமான தொழிலை கவனித்து வருகிறேன். அதுவும் போக என் மருமகப் பெண்கள் அழகாகவும் நவீன சிந்தனையுடனும் இருப்பவர்கள். அவர்களை

அவர்களது ஆண் நண்பர்கள் அடிக்கடி வந்து சந்திப்பார்கள். போலீஸ் கூட இரண்டு முறை இங்கே சோதனை போட வந்திருக்கிறார்கள்."

"போலீஸா?" சம்மி பேகத்தின் குரலில் திகில் மிகுந்திருந்தது.

ரசியா பானு வேடிக்கையாகச் சிரித்தாள். "பயப்படாதீங்க. இந்த நகரத்தில் நிறைய வர்த்தகர்கள் காவல்துறை மற்றும் வருமானவரித் துறை அதிகாரிகளின் தேவைகளுக்கு அடிபணிய நேரிடும். இதற்கும் மேலே நான் ஒரு பெண். ஒருமுறை எனக்கு வேண்டாத யாரோ சிலர் நான் ஒழுங்காக வரி செலுத்துவதில்லை என்று வருமானவரி அலுவலகத்திற்கு எழுதிப் போட்டு விட்டார்கள். அவ்வளவுதான், போலீஸ் என் வீட்டுக் கதவைத் தட்டியது. எனவே நான் வாசலுக்கு இரண்டு கதவு போட்டிருக்கிறேன். ஒன்று மரக்கதவு; இன்னொன்று இரும்புக் கதவு. மரக்கதவில் ஒரு சின்னத் துளை இருக்கு வெளியில் பார்க்க. அந்தத் துளை வழியாக வெளியில் அழைப்பவர்களை அடையாளம் கண்டு கொண்டுதான் நீங்கள் கதவைத் திறக்க வேண்டும். சில நேரம் போலீஸ் சாதாரண உடையில் கூட வருவாங்க. நாமதான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

ஆனால் இப்போது தனது நெடுந்தொலைவுப் பயணத்தால் சோர்ந்து போயிருந்த சம்மி பேகத்திற்கு ஒரு கோப்பை தேநீர் குடித்தால் தேவலை என்று இருந்தது. இனிமேல் தாங்கமுடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட சம்மி பேகம் எழுந்தபடி, "பீபி கேஸ் அடுப்பை எப்படிப் பற்ற வைப்பது?" என்று கேட்டார்.

அவளது தலையணைக்கு அருகில் இருந்த ஒரு மின்சாரப் பொத்தானை ரசியா பானு அழுத்தினார். ஒரு நிமிடத்திற்குள் சமையல்காரன் இப்ராஹிம் அங்கே வந்து நின்றான்.

"இப்ராஹிம், இவங்கதான் இனிமேல் இங்கே அத்தையம்மா. இவங்களுக்கு உடனே ஒரு கோப்பை தேநீர் கொண்டுவா."

சம்மி பேகம் எழுந்து இப்ராஹிமின் பின்னால் சமையல் கட்டை நோக்கிச் சென்றாள்.

•

ஜூஹர் தொழுகை, அசர் தொழுகை, மரிப் தொழுகை ஆனபின்பு சம்மி பேகம் பால்கனியில் நின்று வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். வீட்டில் ஒரு வேலையும் இல்லை. ரசியா பானு தீர்க்கமாக நல்ல நகைகளை அணிந்து வெளியில் கிளம்பிவிட்டாள். இரண்டு மருமகப் பெண்களின் அறைகளில் விளக்கு எரிந்து கொண்டிருந்தன. மூன்றாவது மருமகளைக் காணவில்லை. வேலையாட்கள் கூட யாரும் இல்லை. எனவேதான் சம்மி பேகம் நான்கைந்து முறை அழைப்பு மணி ஒலித்த பின்னர்தான் தன்னை சுதானப்படுத்திக்கொண்டு வாசல் கதவைத் திறக்க வேண்டும் என்ற நிச்சயத்திற்கு வந்து வாசல் வரை சென்றார். அவசரமாக உள் கதவைத் திறந்துவிட்டார். வெளிக் கதவு திறந்தே இருந்தது. சபியுதீன் மற்றும் ரஷித் அலி இல்லங்களில் கற்றுக்கொண்ட இதமான வரவேற்பு பழக்கத்தினைப்போல உள்கதவைத் திறந்து வெளியில் இருந்தவர்களை, “வாருங்கள்” என்று வரவேற்றார்.

மார்வாரியிலிருந்து இரண்டு பருமனான மனிதர்களும், நெடியைக் கிளப்பும் வாசனை திரவியம் பூசிக் கொண்ட ஒரு பணக்கார இளைஞனும் உள்ளே நுழைந்தனர். அந்தப் பணக்கார இளைஞன் நேரே அங்கிருந்த மதுபானச் சாலைக்குச் சென்றான். இரண்டு பருமனான ஆசாமிகளும் சோபாவில் அமர்ந்தனர். சபியுதீன் வீட்டிற்கு வர்த்தகம் குறித்துப் பேசுவதற்கு ஆட்கள் வந்து போவார்கள். ஆனால் சம்மி பேகத்திற்கு மூக்கைத் துளைக்கும் வண்ணம் வாசனை திரவியம் அடித்துக்கொண்டு வந்திருந்த அந்த இளைஞனைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை இதுதான் அந்த நகர நாகரீகமாக இருக்கும் என்று சம்மி பேகம் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். வந்த விருந்தாளிகளுக்குத் தேநீர் பிஸ்கட் கொடுத்து உபசரிப்பதா வேண்டாமா என்று சம்மி பேகம் தடுமாறிக் கொண்டிருந்தபோது சட்டையில் தங்கப் பொத்தானும், காதில் வைரத் தோடும் அணிந்து கொண்டிருந்த அந்தப் பணக்கார இளைஞன் “மேடம் எங்கே?” என்று கேட்டான். சம்மி பேகத்திற்கு மேடம் என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பேகம் என்பது பொருள் என நன்கு தெரியுமாதலால், “மேடம் வெளியில் போயிருக்காங்க” என்றார்.

“அந்தக் கேடுகெட்ட வேலைக்கார நாயிங்க எங்க போயிருக்குங்க?”

சம்மி பேகம் பொறுமை இழந்தார். அவருக்கு பம்பாய் நகர மக்களின் நாகரீகமற்ற பேச்சு குறித்து ஏற்கெனவே தெரியும் என்றாலும் இத்தகைய முரட்டுத்தனத்தை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. “யாரைச் சொல்கிறீர்கள்? மேம் சாபின் மருமகள்களையா?” என்று கேட்டார். கதவு திறந்தது. ரசியா பானு உள்ளே நுழைந்தாள். சம்மி பேகத்திடம், “அத்தைம்மா, நீங்க உங்க அறையில் போய் ஓய்வெடுங்க” என்று உத்தரவு பிறப்பித்தாள்.

“சரி” என்று கூறிவிட்டு தாழ்வாரத்திற்குள் புகுந்தார் சம்மி பேகம். கடக்கும்போது ஓர் அறையிலிருந்து ஒரு இளைஞனும் ரசியாவின் ஒரு மருமகளும் வெளியில் வந்தனர்.

தனது அறையில் தொழுகைக்கு ஒதுக்கி வைத்திருந்த இடத்தில் சம்மி பேகம் தொழுகைக்கான விரிப்பை விரித்தார். உளு செய்து கொண்டு வந்து நஃபில் தொழுகையை முடித்துக்கொண்டு அல்லாவிற்கு நன்றி கூறினார். அல்லாஹ் மாட்சிமை மிக்கவர்; அல்லாஹ் ஈகை நிறைந்தவர். அவர் மனிதர்களைக் கண்டு இரண்டு முறைதான் எள்ளி நகையாடுகிறார். அந்த இறைவன் தன்னுடைய தந்தையின் கௌரவத்தையும், தனது பாட்டனாரின் கௌரவத்தையும் தூக்கி நிறுத்தியவர்; மிகச் சிறந்த பதான் வம்ச பாரம்பரியத்தின் மேன்மையைத் தூக்கி நிறுத்தியவர்; தனக்குத் தேவையான நல்ல ஆரோக்கியமான ஆகாரத்தை, நேர்மையான வழியில் பணம் ஈட்டும் ஓர் உன்னதக் குடும்பத்திலிருந்து அவர்தான் தனக்கு வழங்கி தன்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

(உருது மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ஃபாத்திமா ரிஸ்வி)

# 9. காலிப் பெட்டி

## இந்திரா கோஸ்வாமி

முக்கால்வாசி ஜனம் இந்த நேரத்தில் தூங்குவார்கள். சுடுகாடு சுற்றியுள்ள பகுதியில் வந்து தங்கியிருக்கும் பிச்சைக்காரர்கள் கூட இத்தனை விடியலில் எழுந்திருக்க மாட்டார்கள்.

தோராதோய் குடிசையின் முன்பு இருக்கும் நாரத்தை மரக்கிளைகளில் புல்புல் பறவைகள் இப்போதுதான் சிலிர்க்கவும் சிணுங்கவும் தொடங்கியுள்ளன. மஞ்சள் மூக்குடைய கொக்குகளின் கூட்டம் ஒன்று ஒரு நேர்கோட்டில் கீழ் திசையில் பறந்து பிரம்மபுத்திரா நதியை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. எரிந்த பிணத்தின் வாடையும், தூரத்திலிருந்து வீசிய நாரத்தம் பூக்களின் மணமும் கலந்து புதுவித மணமாக வீசியது.

தோராதோய் குடிசைக்கு வெளியில் வந்தாள். சிதைக்கு எரியூட்ட விறகு விற்கும் ஹைபோர் வழக்கம்போல மரத்தின் அடியில் நின்று கொண்டிருந்தான். விடிகாலையின் மங்கிய வெளிச்சத்தில் அவனுடைய அரைக்கால் சட்டையிலிருந்து வெளிப்பட்ட கால்கள் தனித்துத் தெரிந்தன. அவன் பற்கள் துப்பிப் போடப்பட்ட கரும்புச் சக்கையைப்போல இருந்தன.

அவள் அதிருப்தியுடன் முணுமுணுத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள். எலும்புகளை உறிஞ்சிவிடுவதுபோல பார்த்துக்கொண்டு அவன் ஒவ்வொரு நாளும் அங்கே நிற்பதற்கு அவளிடம் அப்படி என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. அவன் சொன்ன சில விஷயங்கள் இன்னமும் காதிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. “உன் புருஷன், அந்தக் குடிகார டிரைவர் இப்போதைக்கு ஜெயிலிலிருந்து வரப்போவதில்லை. யாருக்குத் தெரியும்

அவன் வராமலே கூட போகலாம். ஒருத்தருக்கு ரெண்டு பேர்களை கார் ஏத்திக் கொன்னிருக்கான். போதாததுக்கு கார் ஓட்டும்போது குடிச்சுட்டு கார் ஓட்டினான்னு கோர்ட்டில் கேஸு தாக்கல் பண்ணியிருக்காங்க. வருத்தப்படாதே, நான் இருக்கேன். ஒரே ஒரு நாள் உன் வீட்டுக் கதவை எனக்காக திறந்து வை. அப்புறம் உன் பிள்ளைகள் பசி பட்டினின்னு கிடக்க மாட்டாங்க."

அவள் வீட்டுக் கதவு என்றாவது திறக்காதா என்ற நம்பிக்கையில்தான் அவன் தினமும் அதிகாலையில் பறவைகள் ஒலியெழுப்பும் நாரத்தை மரத்தின் கீழ் ஆட்கள் யாரும் வரும் முன்னர் வந்து காத்துக் கிடக்கிறான்.

தோராதோய் சிறிது நேரம் கழித்து வெளியில் எட்டிப் பார்த்தாள். அரைக்கால் சட்டை மனிதன் போய்விட்டான். அவள் சுடுகாட்டிலிருந்து ஒரு கறுப்பு சவப்பெட்டியைக் கொண்டுவந்திருக்கிறாள். அதனை நோட்டம் இடுவதற்கென்று ஒரு கூட்டம் அவள் வீட்டைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. நல்லவேளை அந்தக் கூட்டத்தில் ஹைபோர் இல்லை.

அவள் இன்னும் யாராவது அந்தக் கறுப்புப் பெட்டியை நோட்டமிட திருட்டுத்தனமாக அங்கே சுற்றிக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தாள். என்னவிதமான மனுஷங்க இவங்க? நாய்கள் மாதிரி ஒருத்தன் உடலை மற்றவன் முகர்ந்து அடுத்தவன் என்ன சாப்பிட்டிருப்பான் என்று துப்பறிய முயலும் ஜென்மங்கள். அடுத்தவன் முதுகுத் துணியைப் பிய்த்து அவனை அம்மணம் ஆக்கவில்லை என்றால் அவர்களுக்குத் தூக்கம் வராது.

சோக் ரஸ்தா ஜமீன்தார் இறந்தவுடன் பிணம் இந்தச் சுடுகாட்டிற்குதான் வந்தது. பாடையும் ரொம்ப உசத்தியான மரத்தில் செய்த பாடை. அந்தப் பாடையைப் படுக்கையாக மாற்றி ஹலாதர் சௌகிதாரும் அவன் அசிங்கம் பிடித்த பெண்டாட்டியும் அதில்தான் படுத்துக் கொள்கிறார்கள். விறகு வெட்டி பிழைப்பு நடத்தும் சுகுராவின் மனைவி இப்போது பிடிக்கும் ஹுக்கா கூட ஒருமுறை சுடுகாட்டில் யாரோ விட்டுப் போனதுதான். ஒருமுறை பெரிய பணக்காரப் பிணத்துடன் வந்தவர்கள் இரண்டு தங்கக் காசுகளை விட்டு விட்டுப் போனார்கள். ஆனால் அதைக் கண்டு இங்கே

யாரும் வாயைப் பிளக்கவில்லை. அத்தனை பெரிய அலங்கார மரக் கட்டிலில் பஞ்சத்தில் அடிபட்ட ஹலாதரின் அசிங்கம் பிடித்த மனைவி படுக்க முடிவது எப்படி என்று யாராவது ஒரு வார்த்தை கேட்டிருப்பார்களா?

அந்த இடுகாட்டைச் சுற்றியிருக்கும் குடிசைகள், தகரக் கொட்டாய்கள், கொட்டில் இன்னும் இதுபோன்ற அற்பத்தனமான வீடுகளில் பலவற்றிலும் இதே போன்று பிணத்தைக் கொண்டுவரும் செல்வந்தர்கள் விட்டுச் செல்லும் பொருள்கள் நிறைய இருக்கும். பணக்காரர்களின் இல்லங்களில் அந்தஸ்தின் அடையாளமாக பளபளப்புடனும், பகட்டுடனும் விளங்கிய பல பொருள்கள் இதுபோல ஒன்றுக்கும் ஆகாத, பத்துப் பைசாவிற்குப் பிரயோஜனம் இல்லாத வறியவர்களின் இல்லங்களில் பொருத்தமில்லாமல் கிடக்கும். இதெல்லாம் அடுத்தவர்கள் கண்களை உறுத்தியதில்லை. இவள் மீதும் இவளுடைய கறுப்புப் பெட்டி மீதும்தான் இந்த வீணாய்ப் போன மனிதர்களுக்கு ஒரு கண்.

தோராதோய் குடிசைக்குள் சென்று தன் இரண்டு மகன்களையும் பார்த்தாள். நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர். மெலிந்து பரிதாபமான தோற்றத்தில் இருந்தார்கள். விலா எலும்புகளை எண்ணிவிடலாம் போலிருந்தன. குச்சி போன்ற தோற்றம் இருவருக்கும். இருவரது அரை டிரவுசர்களும் கசாப்புக் கடையில் உரித்த ஆட்டிலிருந்து தொங்கும் தோலைப்போல இடுப்பிலிருந்து தொளதொள என்று ஆடிக் கொண்டிருக்கும். அவர்கள் பக்கத்தில்தான் அந்தக் கறுப்புப் பெட்டியைக் கிடத்தியிருந்தாள். உள்ளே ஒரு வாலிபன் படுக்கலாம்போல அப்படி ஒரு நீளமான பெட்டி.

பெட்டியின் வெளிப்புறத்தில் மதுகந்த பூவேலைப்பாட்டினைத் தடவிப் பார்த்தாள். நிஜமாகவே மதுகந்தப் பூக்கள் மலர்ந்திருந்ததைப்போல தெரிந்தது. அவ்வளவு அழகான வேலைப்பாடு. குனிந்து அந்தப் பெட்டியின் மழமழப்பில் தனது கன்னங்களை உரசிக் கொண்டாள். பெட்டிக்குள் ஏறி நின்று கொண்டாள். அந்தப் பெட்டியைக் கொண்டுவந்த நாள் முதல் அவள் அதில் ஏறி உள்ளே படுத்துக் கொள்கிறாள்.

அந்தப் பெட்டியின் மந்திரத்தில் கட்டுண்டவள்போல அந்தப் பெட்டியில் சிறிதுநேரம் கண்மூடிக் கிடந்தாள். சொல்ல முடியாத மகிழ்ச்சி அவளிடம் ஏற்பட்டது. அது ஏதோ ஒரு பிணத்தை எரிப்பதற்காக கொண்டுவரப்பட்ட சவப்பெட்டி. அதை அவள் எடுத்துக்கொண்டு வரும்போது அதனுள் இரத்தக் கறையுள்ள ஐஸ் கட்டித் துண்டுகள் இருந்தன. ஆனால் அது எதுவும் இப்போது தோராதோய்க்கு நினைவில் இல்லை. அவள் பெட்டிக்குள் இருந்து அழவேண்டும்போல இருக்கும்.

கொஞ்ச நேரம் ஆனபின்பு ஒரு போலீஸ் ஜீப் மிகுந்த சப்தத்துடன் வந்து அவள் குடிசையின் முன்பு நின்றது. அந்தப் பகுதியில் கடந்து செல்லும் வண்டிகள் பெரும்பாலும் போலீஸ் வாகனங்கள் மட்டும்தான். விசாரணைக்கு வருவார்கள். மயானத்தில் எரிக்கப்படும் பிணங்களுக்கு வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்கள் முறையானவைதானா, முறைதவறி பிறந்த சிசுக்களைக் கொன்று அவற்றைக் கள்ளத்தனமாகப் புதைப்பதற்கு மருத்துவர்களிடமிருந்து உரிய சான்றிதழ் இல்லாமல் யாராவது வந்தார்களா... இப்படி நிறைய கேள்விகள். சாத்கோன் பகுதியிலிருந்து ஒரு வேசி வேறு இங்கு அலைகிறாள். அங்கே பிணங்கள் எரியும்; எரிப்பவர்களின் சதை எரிந்து உள்ளிருக்கும் மிருக வெறி வளர்ந்து வந்தது. பதிவு செய்யப்படாத பல பிணங்கள் இங்கே எரியூட்டப்பட வருகின்றன. இது போன்ற பல காரணங்களுக்காக போலீஸ் வாகனங்கள் அங்கே வட்டமிடுவதுண்டு. வருவார்கள்; அங்கு நிலவும் பிரச்சனைகளைச் சொல்லுவார்கள்; மயான கமிட்டி ஆட்களுடன் வாக்குவாதம் செய்துவிட்டுப் போவார்கள்.

போலீஸ் ஜீப் சத்தம் கேட்டதும் தோராதோய் சவப்பெட்டிக்குள் உட்கார்ந்து கொண்டாள். அது என்ன இந்தப் பெட்டியுடன் அப்படி ஒரு பிணைப்பு? அவளுக்கே ஆச்சரியமாகப் போனது. அவளிடம் அந்தப் பெட்டியைப் பற்றி சொல்லுவதற்கும் எண்ணுவதற்கும் நிறைய விஷயங்கள் உள்ளன. கடவுளே! அந்தப் பெட்டியின் உள்ளே பூக்களும் குங்குமமும் சிதறிக் கிடந்தன. நேற்று இரவு அவள் தனது மணநாளின்போது அணிந்துகொண்ட இரவிக்கையைப் போட்டுக் கொண்டாள் - அது ஒன்றுதான் அவளிடம் கிழியாமல் இருக்கும் இரவிக்கை - மங்கிய

மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியில் கண்ணாடி முன் நின்று பத்து வருடங்களுக்கு முன்பு திருமண நாளின்போது அலங்கரித்துக் கொண்டதைப்போல தலை சீவி அழகுபடுத்திக் கொண்டாள். தலையை வாரும்போது சீப்பு கழுத்திலும் தோளிலும் பட்டுக்கொண்டே இருந்தது. ஒருகாலத்தில் அவளும் கொழுக் மொழுக் என்று எலும்பு தெரியாத மேனியாகதான் இருந்தாள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் அவள் எப்போது எலும்புக்கூடுகள் மிகுந்த சுடுகாட்டின் அருகில் வசிக்க வந்தாளோ அன்றிலிருந்து அவளும் எலும்புக்கூடுபோல ஆகிவிட்டதாகக் கூறுகிறார்கள்.

அவள் உள்ளே என்ன செய்கிறாள் என்பதை யாராவது எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ? அவள் பெட்டியை வைத்துக்கொண்டு என்னதான் செய்கிறாள் என்பதை அறிய பலரும் அவள் குடிசைக்குள் ஜன்னல் ஓட்டைகள், கதவு இடுக்குகள் வழியாக எட்டிப் பார்க்க முயன்றனர். தனது பிள்ளைகளிடம் கூட தான் பெட்டியை வைத்துக்கொண்டு என்ன செய்கிறாள் என்பதை வேவு பார்க்கச் சொல்வார்களோ என்று ஐயம் கொண்டாள்.

“என்ன கண்றாவியோ? பிணப் பெட்டிக்குள் யாராவது தூங்குவார்களா? தூக்கி எறியச் சொல்ல வேண்டும் அதை” என்று புலம்பியிருப்பார்கள்.

தோராதோய் சவப்பெட்டியில் மீண்டும் படுத்துக் கொண்டாள். அந்த நினைப்பு, தனித்தனமையுடைய அந்த நினைப்பு அவளை மீண்டும் வசீகரித்தது. இதற்கு முன்பு தோன்றியிராத அந்தப் பரவச நினைப்பு.

தோராதோய் சவப்பெட்டியில் மீண்டும் படுத்துக் கொண்டாள். அந்த நினைப்பு, தனித்தன்மையுடைய அந்த நினைப்பு அவளை மீண்டும் வசீகரித்தது. திடீரென்று யாரோ வாசல் கதவைக் கால்களால் ஓங்கி உதைத்து சப்தம் எழுப்பவே துள்ளி எழுந்து வெளியில் வந்தாள். உன்னிப்பாக கவனித்ததில் அது சோமேஷ்வர், அவளுடைய அண்ணன் ஒருவன் போலீஸில் வேலை பார்ப்பவன், அவன்தான் என்பது தெரிந்தது.

“தோராதோய்! தோராதோய்…” அவன் வெளியிலிருந்து கூப்பிட்டான். அவள் கதவைத் திறந்ததும் சோமேஷ்வர் நின்று கொண்டிருந்தான். அவன்

ஒரு பருமனான மனிதன். காவலர் சீருடையில் பட்டையாக மீசை வைத்துக் கொண்டிருந்தான். கால்களில் பூட்ஸ் அணிந்து கைகளில் பிரம்பு வைத்திருந்தான்.

அவன், "உன் காதலன் உன்னைப் பார்க்கணும்னு உன் வீட்டுக்கு வரலை. சரியா? இன்னிக்குதான் நான் இங்கே டியூட்டியில் ஜாயின் பண்ணி இருக்கேன். சாத்கோனிலிருந்து ஒழுக்கங்கெட்ட பெண் ஒருத்தி இங்கே வந்து கணக்கு ஆரம்பிச்சிருப்பதா தகவல் வந்திருக்கு. இது நிஜமாவே தண்டனைக்கு உரியது. ஆச்சாரமும், ஒழுக்கமும் கெட்டுப் போயாச்சு. அன்னிக்கு அப்படிதான் ஒரு பருவா செத்துப் போயிருக்காரு (பருவா என்பது அஸ்ஸாமில் உள்ள பிராமணர்களின் பெயராகும்). அவரோட பிணத்தைச் சுமந்துகிட்டு அவரோட ரெண்டு பசங்க வந்திருக்காங்க. ஒருவன் கமோசா போட்டுக்கொண்டு காரியம் பண்ணிக் கொண்டிருந்தான். (கமோசா என்பது அஸ்ஸாம்) பிராமணர்கள் மதச் சடங்குகள் செய்யும்போது மேலே அணிந்துகொள்ளும் உடை - மொழிபெயர்ப்பாளர்.) இன்னொரு மகனைக் கண்ணிலேயே காணவில்லை. அவன் யார் கண்ணிலும் படாம அந்தத் தேவிடியா வீட்டுக்குப் போயிருக்கான். என்னத்தைச் சொல்ல? நாம இப்படி ஒரு கிரகச்சாரத்தில் வாழறோம்" என்று கூறிவிட்டு அறையை நோட்டமிட்டான். கொடிய விஷமுள்ள பாம்பைப் பார்த்தவன்போல துள்ளினான். அதிர்ச்சியில் தன் கண் எதிரில் இருந்த கறுப்பு சவப் பெட்டியைப் பார்த்தான்.

அதன் அருகில் வந்து கையில் இருந்த லத்தியால் தட்டினான். பிரதட்சிணம் வருவதுபோல சுற்றி வந்தான். அதன் அருகில் மண்டியிட்டு நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையை ஒரு கைக்குட்டையால் துடைத்தான். மிடுக்குடன் அந்தக் குடிசைக்குள் நுழைந்த அவள் அண்ணன், அந்தக் காவல்காரன், இப்போது ஒரு தோற்றுப் போன போர்வீரன்போல தோன்றினான். தோராதோயைத் திரும்பிப் பார்த்தவன், "தோராதோய், குடிக்க ஒரு கிளாஸ் தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டான்.

ஒரே மடக்கில் நீரைக் குடித்துவிட்டு கிளாஸைத் திருப்பிக் கொடுத்தான். தலையைக் கவிழ்த்து யோசனை செய்தவன், “எஸ்… நான் நினைத்தபடி நடந்திருக்கு. அதே பெட்டி. ஆமாம், அதே சவப்பெட்டி” என்று சொல்லிக் கொண்டிருந்தவன் சட்டென்று தலையை உயர்த்தி தோராதோய் கண்களைப் பார்த்து, “அவங்க வீட்டில்தான் நீ வேலைக்காரியா இருந்தே. அந்த வாலிபனோட அப்பா தாகூர் உடம்பு முடியாம படுத்த படுக்கையா கிடந்தப்ப நீதான் அவங்களுக்கு உதவியா இருந்தே, இல்லையா? நோயாளி துணிகளைக் கூட நீதான் துவைச்சுக் கொடுத்தே… இல்லையா? எல்லாருக்கும் இது தெரியும். தாகூரோட மகன்?”

அப்போது அந்த பருமனான காவல்காரன் உடைந்து அழுதான். அவன் உடைந்த குரலில் உணர்ச்சியுடன், “அவரோட புதல்வனுடன் உனக்கு காதல் ஏற்பட்டது. இல்லையா? அந்த நேரங்களில் அவன் உன்னைத் திருமணம் செய்துகொள்வதாக சத்தியம்கூட பண்ணிக் கொடுத்தான். சரியா? தாகூர் குடும்பம் முழுவதும் உங்கள் காதல் விவகாரத்தால் கொதிச்சுப் போயிருந்தது. இறுதியில் அவனுக்கு மேற்கு அஸ்ஸாமுக்கு மாற்றல் வந்திருச்சு. அப்புறம் இந்த விபத்து.”

எவ்விதப் பீடிகையுமில்லாமல், “எது அவன் மீது மோதியது?” என்று கேட்டாள்.

“ஒரு ஜீப்” சோமேஷ்வர் பதிலளித்தான். “என்ன அழகு தெரியுமா அவன்? நான்தான் சவப்பெட்டியில் இருந்த ரத்தக் கறை படிந்த ஐஸ் துண்டங்களை அகற்றி பிணத்தை எரியூட்ட வழி பண்ணிக் கொடுத்தேன். ஒரு அழகான வாலிபனின் ரத்தம். உன் காதலனின் ரத்தம். என் கைகளால்…” தன் அருகில் சிலையைப்போல சமைந்து நின்ற தோராதோயைப் பார்த்தவன் வாக்கியத்தைப் பாதியில் நிறுத்திக் கொண்டான். அவர்கள் எதிரில் அந்தச் சவப்பெட்டி ஒரு மர்ம குகைபோல காட்சியளித்தது.

சோமேஷ்வர் சினிமாவில் வருபவர்களைப்போல ஆவேசமாக எழுந்து நின்று கத்தினான். “தேயிலைத் தோட்ட முதலாளி ஒரு தோட்டத் தொழிலாளியின் மகளை ஒரு தோராதோயைக் கல்யாணம் செஞ்சுகிட்ட

காலமெல்லாம் மலையேறிப் போச்சு. ஒரு கூலிக்காரனின் மகளை மணந்து கொள்வேன் என்று அடித்துக் கூறிய ஜென்கின்ஸ் சாஹேபும் இறந்து பல வருடங்கள் ஆச்சு. தாகூரின் கடைசி மகன் சாரு போபாய் உன்னை மணப்பதாக உறுதிமொழி அளித்தான். ஆனால் உன்னால் அவனைக் கல்யாணம் செய்துகொள்ள முடிந்ததா? உன்னை இந்தக் குடிசையிலிருந்து கொண்டுபோய் அவன் பங்களாவில் குடித்தனம் வைக்க முடிந்ததா?"

தோராதோய் இதயம் வெடிப்பதுபோல அழுதாள். "அது நடந்து பனிரெண்டு வருஷமாயிடுச்சு. இத்தனை வருஷமும் என்னைக் கல்யாணம் செஞ்சுக்கலைன்னு அவரும் கல்யாணம் பண்ணிக்காம இருந்துட்டாரு. உயிரோட இருந்திருந்தா கல்யாணமே பண்ணிக்கிட்டு இருந்திருக்க மாட்டாரோ என்னவோ?"

அந்தப் பருமனான காவல்காரன் அவள் கூறுவதை நம்ப இயலாதவன்போல அவளை வெறித்துப் பார்த்துவிட்டு, "முட்டாள்" என்று ஏசினான். "ஒரு பொண்ணு எதையெல்லாம் பத்திரமா பாதுகாக்கணுமோ அதையெல்லாம் அப்பவே இழந்துட்டு நிக்கிறே. அப்படியும் உனக்கு புத்தி வரலை. இப்பவும் அதே முட்டாள்தனத்தோடதான் இருக்கே. நான் ஒரு போலீஸ்காரன். நீ பண்ணியிருக்கும் காரியத்தைக் கேள்விப்பட்டு நான் என்னை தயார் பண்ணிக்கிட்டு வந்திருக்கேன்."

தோராதோய் தனது அண்ணனை நிராதரவாகப் பார்த்தாள். 'இவன் என்ன சொல்றான்? கடவுளே, என்ன சொல்ல வர்றான்?' என்று அழுதாள்.

சோமேஷ்வர் தொடர்ந்தான். "இவ்வளவையும் நீ பறி கொடுத்தப்புறமும் உன்னிடம் இழக்க என்ன இருக்கிறது? ஆனா அந்த ஆளு நீ இதுநாள் வரைக்கும் பொக்கிஷமா எதைக் கட்டிக் காப்பாத்திட்டு வர்றியோ அதைக் களவாட நினைக்கிறான்."

இதற்கு நடுவில் இரண்டு பசங்களும் விழித்துக் கொண்டுவிட்டனர். அந்த மூவரும் சோமேஷ்வரைப் பார்த்து மலங்க மலங்க விழித்தனர்.

"ஐயோ... இப்போ அவன் என்னைப் பற்றி என்ன நினைத்துக்

கொண்டிருக்கிறான்?” என்று தோராதோய் சிந்தித்தாள். ‘என்ன சொல்ல வருகிறான்?’

பஞ்சத்தில் அடிபட்டதுபோல தோற்றமளித்த அவளும் அவளுடைய இரண்டு புதல்வர்களும் மயானத்திலிருந்து கிளம்பி வந்த ஆவிகளைப்போல தோற்றமளித்தனர்.

அவன் பைகளில் துழாவினான். பிள்ளைகள் இரண்டும் மாமன் தங்களுக்கு மற்ற விருந்தாளிகளைப் போல பணம் கொடுக்கப் போவதாக நம்பினார்கள். இப்படிதான் அந்த நாரத்தை மரத்தின் கீழ் எப்போதும் நிற்கும் ஆள் அவர்கள் கையில் யாரும் பார்க்காத நேரமாகப் பார்த்து அவர்கள் கையில் காசைத் திணிப்பான். இவர் தாய் மாமா. அம்மாவின் சொந்த அண்ணன், இருந்தாலும் அவர்களது தந்தையை போலீஸ் கைது செய்து ஜெயிலில் போட்டபோது ஒருமுறை என்ன ஏது என்று கேட்க வீட்டிற்கு வரவில்லை.

சோமேஷ்வர் எழுந்து தனது சட்டைப் பையிலிருந்து நான்கைந்து காகிதங்களை எடுத்து தோராதோய் முகத்தில் விட்டெறிந்தான். “பாரு. இதெல்லாம் அவனுடைய கல்யாணத்திற்கான அழைப்புகள். நான் சொன்ன மாதிரி நீ என்ன பண்ணப் போகிறாய் என்பதைத் தெரிஞ்சுதான் வந்திருக்கேன். பெருசா சொன்னியே அவன் உன்னைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ண மாட்டான்னு... பாரு, இது அவனோட கல்யாணப் பத்திரிகை. அவனுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சு. பத்திரிகையும் அடிச்சு வந்திடுச்சு. படிச்சுப் பாரு இந்தப் பத்திரிகையை. விநியோகிக்க ஊருக்கு வந்துகிட்டிருந்தப்பதான் அந்த விபத்து நடந்தது. படி... இந்தக் கடுதாசுகளைப் படி. அவன் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவன்கிட்டே வேண்டிக்கோ.”

அவன் வெளியில் கிளம்பும்போது அம்மாவுடன் ஒட்டி நின்ற இரண்டு புதல்வர்களின் மீதும் பார்வை போனது. முனகியபடி சட்டைப் பையில் துழாவி அவர்களுக்குக் கொடுக்க சில்லறைகளை எடுத்தான். பிணம் கொண்டு வந்தவர்களுடன் விபசாரம் செய்யும் அந்தப் பெண்ணைக் கையும் களவுமாகப் பிடித்திருந்தால் கூட கொஞ்சம் காசு கிடைத்திருக்கும்.

அது கூட வேண்டாம், வீணாய்ப் போன மரங்களை யானை விலைக்கு விற்கும் அந்த ஹைபோர் சிக்கினால் கூட கொஞ்சம் காசு பார்க்க முடியும். பையிலிருந்த காசுகளை மருமகப் பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டு வெளியேறினான். பாதி பட்டினியில் கிடந்த பிள்ளைகள் கையில் காசு கிடைத்தவுடன் அருகில் இருந்த பெட்டிக் கடைக்குச் சிட்டாய்ப் பறந்தனர்.

தோராதோய் அந்தக் கல்யாணப் பத்திரிகைகளின் அருகில் அமர்ந்துகொண்டு அவற்றைக் கைகளால் அளைந்தாள். எரியூட்டப்பட்ட சாம்பலில் தந்தையின் வேகாத அஸ்தி துண்டுகளைத் தேடுவதற்கு அளைவது போலிருந்தது. சந்தேகமில்லை, அவை கல்யாணப் பத்திரிகைகள்தான்.

இது முடிந்து நெடுநேரம் ஆனபின்பும் தோராதோய் தனது குடிசையை விட்டு வரவில்லை. பசியின் பிடுங்கலைப் பொறுக்க முடியாத இரண்டு பிள்ளைகளும் பிணத்தை எரியூட்ட வருபவர்களிடம் உணவுக்குக் கையேந்தினார்கள். இன்னும் சிலர் சின்னவனின் தலையில் காரியம் செய்து முடித்துப் போனவர்கள் கட்டியிருந்த கமோசாவைக் கட்டிவிட்டுச் சென்றனர். இரண்டு பையன்களும் எரிமேடைக்கு அருகில் இருந்த குவியலிலிருந்து இரண்டு காலியான பிராந்தி பாட்டில்களை எடுத்து வந்தனர். எருமை வாகனத்தில் வீற்றிருக்கும் எமராஜாவின் சிலைக்கு அருகில் ஒரு கிணறு இருந்தது. அதில் நீர் இறைத்து பாட்டில்களை நன்றாகக் கழுவி நீர் பிடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டார்கள். அக்கம்பக்கத்தினருக்கு என்ன நடந்தது என்பது தெரிய வந்தது. அவள் இப்போதெல்லாம் சமைப்பதில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். வாய் பிளந்து கிடக்கும் அந்தக் கறுப்புநிறச் சவப் பெட்டியின் முன்பு அவளும் வாய் பிளந்து உட்கார்ந்திருந்தாள்.

ஹைபோர் அவள் சம்மதத்திற்காக அந்த நாரத்தை மரத்தின் கீழ் காத்திருந்தான்.

விடிகாலையில் ஒருநாள் தோராதோயும் அவளது இரண்டு பிள்ளைகளும் அந்தச் சவப்பெட்டியை இழுத்துக்கொண்டு சுடுகாட்டுப் பக்கம் சென்றனர்.

எந்த இடத்தில் கள்ளக் காதலில் பிறந்த குழந்தை ஒன்றை எவ்வித மருத்துவமனை சான்றிதழும் இல்லாமல் எரித்துவிட்டதாக ஊர் பேசிக்கொண்டதோ அந்த இடத்தில் அந்த கறுப்புநிறச் சவப்பெட்டியை வைத்து எரித்தார்கள்.

புல்புல் பறவைகள் கண்விழித்துத் தங்கள் இனிய குரலால் ஒரு இரைச்சலான நாளைத் துவங்கின. பிரம்மபுத்ரா நதியின் மீது ஆதவன் இளஞ்சிவப்பாக உதயமானான். ஆதவனைச் சுற்றிலும் மஞ்சள் நிறமும் சாம்பல் நிறமும் தீட்டப்பட்டதுபோல மேகங்கள். அது எப்போதும் தோன்றும் சூரியனின் முகம் போன்று இல்லை - விருப்பமில்லாத ஆடவனுடன் இரவைக் கழிக்க நேரிடும் ஒரு வேசியின் முகம்போல அச்சமும் மருட்சியும் நிறைந்த முகம்போல தோன்றியது. வெளுத்துப் போன மேகங்கள் அந்தப் பெண்ணின் கையறு நிலையைக் கண்டு ஒன்றும் செய்யாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பது போலிருந்தது. ஆனால் அந்த முகத்தில் விதியை எதிர்த்துப் போராடும் மூர்க்கமும் இருப்பதை.......

கறுப்புப்பெட்டி முற்றிலும் எரிந்து அதன் சாம்பல் புதிதாக வெட்டப்பட்ட ஆட்டின் தோலைக் காலை வெயிலில் காயப் போட்டது போலிருந்தது.

புல்புல் பறைவகளின் இரைச்சல் அதிகமாகி ஜுர வேகப் புலம்பல் போல கேட்டது.

தோராதோய் தனது குடிசையிலிருந்து வெளியில் வந்தாள். முகத்தை முக்காடு போட்டு மறைக்கவில்லை.

ஆச்சரியம் என்னவென்றால் தினமும் நாரத்தை மரத்தின் கீழ் நின்று கொண்டிருக்கும் அந்த ஆளை அன்று காணவில்லை.

தோராதோய் இன்னும் கீழே நடந்து போய்ப் பார்த்தாள். ஆனால் அந்த ஆளைக் காணவில்லை.

(அஸ்ஸாமிய மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - காயத்ரி பட்டாச்சாரியா)

# 10. பொன்னகரம்

## புதுமைப்பித்தன்

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப்போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்பட வேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அதுதான் அங்கு 'மெயின்' ராஸ்தா. கைகோர்த்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால், இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால். சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை' - அல்ல, யமுனைதானே கறுப்பாக இருக்கும்? - அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள் - ஆமாம், வசிப்பதற்குதான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை - சாதாரண எண்ணெய் விளக்கு, அதாவது சந்திரன் இல்லாத காலங்களில்

(கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றி வைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக் கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? 'போனால்' பெற்றோருக்குத் தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன, 'கிளாக்ஸோ' 'மெல்லின்ஸ் பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போக முடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று 'குட்மார்னிங் சார்!' என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறம்தான் ஊர் கலகலவென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழுதிருந்துதான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்க வரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்.

இள வயதில் நரைத்ததுபோல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள் - விடிய விடிய மின்சார 'ஸ்பின்டிலை'ப் (கதிர்) பார்த்துக்கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான்; அவைகளும் அவனைக் கொன்றன; அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமையற்று, வம்சத்தை விருத்திசெய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய

வேட்டை, அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு - வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப் பற்றி அங்கு அதிகக் கவலையில்லை. அது வேறு உலகம் ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்கு மேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான்; சொந்த வண்டிதான். அம்மாளு, முருகேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை - ஆக நபர் ஐந்து சேர்ந்தது அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு - (குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் 'மாமூல்', முருகேசன் தம்பி திருட்டுத்தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு - எல்லாம் இதற்குள்தான். எல்லாரும் ஏகதேசக் குடியர்கள்தான். 'டல் ஸீஸ'னில் பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒரு நாள் இருந்தால் உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி, அவனும், அவன் குதிரையும் 'தண்ணி போட்டு' விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்கு பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டுவந்து போடும்பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்று பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலிபோட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

'கும்'மிருட்டு. பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வரவேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்துகொண்டால் முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் ‘கண்’ வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கதான்!

என்னமோ கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!

> (இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இந்தப் பொன்னகரம் என்ற தமிழ்ச் சிறுகதையை ஆங்கிலத்தில் திருமதி. லக்ஷ்மி ஹோம்ஸ்ட்ரோம் என்பவர் மொழிபெயர்த்துள்ளார். இது தமிழ் மொழியாக்கத் தொகுப்பு என்பதால் புதுமை பித்தனின் கதையை நேரடியாகவே பயன் படுத்திக் கொண்டுள்ளோம்.)

# 11. கைவிடப்பட்ட கடவுள்

## சித்திக் ஆலம்

மணி பத்து ஆனதும் இறந்தவர்களின் ஆன்மாக்கள் ஸ்தூபிகளிலிருந்தும், விதானங்களிலிருந்தும், கட்டைச் சுவர்களிலிருந்தும் இறங்கி அந்தப் பாழடைந்த தேவாலயத்தின் இருளடைந்த ஒளி மங்கிய மூலை முடுக்குகளை ஆக்கிரமித்துக்கொள்ளத் தொடங்கும். 'மனிதர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்?' என்ற கேள்வியை அவை ஒவ்வொன்றும் கேட்டுக் கொள்ளும். பூதங்கள்தான் பார்க்க சகிக்காது என்றால் இந்தச் சூனியக் கிழவிகள் மட்டும் என்னவாம்? இடுப்புவரையில் தலைமுடி புரள கோரமாக இருப்பார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறை விநோதமாக இருக்கும். 'இறந்தபின்பும் கூட முதுகில் குத்துவதை மனிதர்களால் நிறுத்தமுடியாது' என்று ஒருவருக்கொருவர் கிசுகிசுத்துக் கொள்வார்கள். அவர்களது வெடிச் சிரிப்பு தேவாலயத்தின் பழைய சுவர்களை ஆட்டம் காண வைக்கும்படியாக இருக்கும். மனிதர்களின் இந்தப் போக்கால் சூனியக் கிழவிகள் வெறுப்படைந்திருந்தார்கள். அவர்கள் உலகை ஒவ்வொரு கோணத்திலும் அளந்து பார்த்தவர்கள்; சீர்தூக்கிப் பார்த்தவர்கள்; கணித்தவர்கள். எத்தனை மந்திரங்களிலிருந்து தப்பியிருப்பார்கள். எத்தனை பில்லி சூனியத்திலிருந்து விடுபட்டிருப்பார்கள். எத்தனை கோபத்திலிருந்து நழுவியிருப்பார்கள். மனித சமுதாயத்தின் மீது ஆவிகளுக்கும், சூனியக் கிழவிகளுக்கும் இருக்கும் தவறான அபிப்பிராயங்கள், நியாயமற்ற பயங்கள் இவற்றிற்கும் அப்பால் மனிதனின் இந்தப் போக்கு அவர்களை வேதனைப்பட வைக்கிறது. இந்த சூனியக் கிழவிகள் அடிக்கடி கூடி அமர்ந்து ஆற்றாமையில் தங்களது தொங்கிப் போன மார்பகங்களைப்

பிசைந்தும், பற்களைக் கடித்தும் கண்ணீர் சிந்துவார்கள். அவர்களால் அழ முடியாது. மனிதர்கள்தான் அழுகையை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருப்பவர்கள். மனிதர்கள் தங்களது பெருமூச்சால் ஆகாயத்தையே மறைத்துவிட்டனர்; தங்களது அழுகையால் கடல் நீரை உப்பு நீராக மாற்றிவிட்டனர். இந்தக் கதை இப்போது வேண்டாம். பிறகு பார்த்துக்கொள்வோம்.

•

முர்ளி நாஸ்கர் முழுவதும் பைத்தியமான அன்று ஒரு பெட்டை நாய் அவனது வீட்டுப் புழக்கடையில் குட்டிகளை ஈன்றது. ஒருகாலத்தில் முர்ளி அந்த நாயைத் துரத்தியிருக்கிறான். முர்ளிக்கு நீளமான முடி; மொத்தக் குடும்பமும் அவனுடைய மரணத்திற்கு இறைவனை வேண்டிக்கொண்டது. நிஜமாகச் சொல்லவேண்டும் என்றால் முர்ளியின் குறைபாடே அவனிடமிருந்து நீங்கள் மிக மோசமானதையே எதிர்பார்க்க முடியும். இத்துணூண்டு பணத்திற்காக அவன் உடலை நீங்கள் சொந்தம் கொண்டாடலாம். பிக்பாக்கெட் அடிப்பவர்கள் தங்கள் பணத்தை அவனிடம்தான் கொடுத்து வைப்பார்கள். வேசிகள் தங்களது பால்வினை நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கு அவனைதான் மருத்துவமனைக்கு அழைத்துப் போவார்கள்.

ஓ..! யாராவது அவன் ஆன்மாவைப் புகுந்து பார்த்திருந்தால் அவனுக்கும் இது போன்ற பால்வினை வந்த வேசிகளின் கணவனாக நடித்து நடித்து சலித்துப் போயிருப்பது தெரியும். தனது கருவை வாங்கிக்கொள்ள அவனுக்கு நிஜமாகவே ஒரு மனைவி வேண்டும். அவள் அவனை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். கழுத்தில் ஸ்டெத்தாஸ்கோப் மாட்டிக்கொண்ட டாக்டர் ஒரு நீள பெஞ்சில் அவளைப் படுக்க வைத்து பரிசோதிக்க வேண்டும். இவர்கள் விலைமாதர்கள். பரிசோதிக்கும் ஆணின் விரல்களை வெறுக்க மாட்டார்கள். கடவுளுக்கு அடுத்தபடியாக உங்கள் ஆன்மாவை டாக்டரால் மட்டும்தான் நெருங்க முடியும். உங்களைத் தனது கட்டுக்குள் ஒரு மருத்துவர் கொண்டுவந்துவிட்டால் உங்கள் உடலைக்கூட நீங்கள் சொந்தம்

கொண்டாட முடியாது.

படிப்பின் மீது இருந்த காதல்தான் அவனைக் கல்கத்தா வரை இழுத்து வந்தது. அவனது பெற்றோர்கள் அவனை நிஜமாக பெற்றவர்கள் இல்லை. அவன் வளர வளர அவனை ஏதாவது ஒரு முறையில் ஏமாற்றி கைகழுவி விட முயன்று வெற்றியும் பெற்றார்கள். கல்கத்தாவிற்கு வந்த முர்ளி கல்வி ஒன்றுதான் எல்லாம்; கல்வி ஒன்றுதான் எல்லை என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டான். ஹாஸ்டலுக்குக் கட்ட பணம் இல்லை; புத்தகம் வாங்க பணம் இல்லை. மற்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களைப்போல ஒரு டிகிரி வாங்கி குமாஸ்தா வேலையோ அல்லது ஆசிரியர் வேலையோ பார்த்துத் தனது சொச்ச வாழ்வை ஒரு முட்டாளைப்போல ஓட்டிவிடலாம் என்று எண்ணியிருந்தான். சோனா கச்சில் இருந்து வந்த கிரிஜா சங்கர் என்ற பெயருடைய பெண் தரகன் ஒருவன் முர்ளியை அப்படி ஆகவிடாமல் ஆட்கொண்டான். இருவரும் கல்கத்தாவில் ஒரு லோக்கல் ட்ரெயினில் சந்தித்துக் கொண்டனர். அதன் பிறகு கிரிஜா சங்கர் அவனை சோனா கச்சிற்கு அழைத்து வந்து மெஹந்தி லக்ஷ்மி அறையில் வைத்துப் பராமரித்து வந்தான். சரியாக ஒருவாரம் கழித்து போலீஸ் கிரிஜா சங்கரைப் பிடித்துக் கொண்டுபோய் காவலில் வைத்து விட்டார்கள். கிரிஜா சங்கர் வாரம் ஒருமுறை அங்குள்ள விலைமாதர்களிடம் மாமூல் வசூல் செய்து காவல் நிலையத்தில் பொறுப்பில் இருக்கும் கயா பிரசாத் என்பவனுக்கு வாய்க்கரிசி போடுவது வழக்கம்.

இதையெல்லாம் மெஹந்தி லக்ஷ்மிதான் முர்ளி நாஸ்கருக்குச் சொன்னாள். மெஹந்தி லக்ஷ்மிக்கும் வயதாகிக்கொண்டு வருகிறது. ஒரு வாடிக்கையாளனைக் கவர்ந்து இழுக்கும் வயதைத் தாண்டிவிட்டாள். இருந்தாலும் இமாம் பக்ஷ் சந்தில் அவளைத் தெரியாதவர்களே இருக்க முடியாது. வயதான துறவி போலவும் நடந்து கொள்வாள், அதேசமயம் கிராக்கிகளின் தேவையையும் பூர்த்தி செய்வதிலும் கில்லாடியாக நடப்பாள். தான் நடத்தும் பாவத் தொழிலுக்குப் பிராயச்சித்தம் செய்வது போல் தனது அறையின் நான்கு சுவர்களிலும் சாமி படங்களை ஒட்டி வைத்திருக்கிறாள். முர்ளி நாஸ்கர் போல படிக்க வசதியில்லாத வாலிபர்களின் படிப்புச் செலவையும் ஏற்றுக் கொண்டிருக்கிறாள். தனது

அறையை ஒரு ஸ்க்ரீன் துணியால் இரண்டாகப் பிரித்து வைத்தாள். முர்ளியின் பகுதியில் அவன் நீட்ஷே, ரஜனீஷ் பகவான் ஆகியோருடைய புத்தகங்களை வாசித்துக் கொண்டிருப்பான். இந்த மாதிரி புத்தகங்களை அவன் கோல் பார்க் அருகில் உள்ள நூலகத்திலிருந்து திருடிக்கொண்டு வருவான். படித்து முடித்ததும் ஃப்ரீ ஸ்கூல் தெருவில் இருக்கும் சிந்திகாரனின் பழைய புத்தகக் கடையில் விலைக்குப் போட்டு காசு பார்த்துவிடுவான். இன்னொரு பகுதியில் மெஹந்தி லக்ஷ்மி தனது தொழில் சமையல், இராமாயணப் பாராயணம் பார்த்துக் கொள்வாள். இதையும் மீறி பொழுது இருக்குமானால் தனது கற்பனைக் கணவன் நவல் புரோகிதனுடன் குடும்பம் நடத்துவாள்.

“நவல் ப்ரோஹித்தா?” முர்ளி கேட்பான். “உசிரோட இருந்தா ஏன் உங்களோட சேர்ந்து வாழவில்லை?” என்பான்.

“உனக்கு என்ன தெரியும்? ஒரு எழவும் தெரியாது.” இப்படிதான் பதில் சொல்ல ஆரம்பிப்பாள். “எத்தனை புஸ்தகம் படிச்சு என்னா பிரயோஜனம்? ஒரு ஞானி மாதிரி வேற இப்போ திரியற. நீ பேசினதையெல்லாம் வாபஸ் வாங்கிக்கோ. நவல் ப்ரோஹித் உயிரோட இருக்காரு. அதுமட்டுமில்லை இந்த மொத்த மந்திர் ஹாத்தில் அவரைப்போல ஒரு மரத் தச்சனைப் பார்க்கவே முடியாது ஆமாம்.”

“என்ன ஒரு விசித்திரம்” என்பான் முர்ளி.

நீட்சேயைப் பற்றி என்னவெல்லாம் தெரிந்துகொண்டானோ அவற்றை அப்படியே அவனுக்கு வார்த்தைகளாகக் கொட்ட வேண்டும். ஏகப்பட்ட சிந்தனைகள் அவன் தலையில் திணிக்கப்பட்டு, திணிக்கப்பட்டு வெடித்து வெளியில் வரத் துடிக்கும். மெஹந்தி லக்ஷ்மியின் வாடிக்கையாளர்கள் வரும் வரையில்தான் இத்தனை தர்க்கமும், விவாதமும். அதன்பிறகு லக்ஷ்மி சர்ரென்று நடுவில் உள்ள திரைச் சீலையை இழுத்து, “பாரு உன் கண்கள் சோர்ந்து போயிக் கிடக்கு. போ, போயி கொஞ்ச நேரம் டி.வி பாரு” என்று விரட்டி விடுவாள்.

முர்ளி நாஸ்கர் அவன் புத்தகங்களைத் திரட்டிக்கொண்டு அவன் பகுதிக்குப் போய்விடுவான். அந்த மாதிரி நேரங்களில் தெரு மூலைப்

பெட்டிக் கடை கறுப்பு வெள்ளை டி.வியின் அடியில் கிடப்பான். வயதான வேசிகள், லைனுக்கு வராத சின்னப் பெண்கள், வேலையில்லாத தரகர்கள், சும்மா திரியும் ஷோக்காளிகள் எல்லோருக்கும் அந்த டி.விதான் ஒரு புகலிடம். சந்துகளின் வழியாக அங்கே எப்போதும் குளிர்ந்த காற்று வீசும். அங்குள்ள சுவரில்தான் மக்கள் வெற்றிலை பாக்கு மென்று புளிச் என்று துப்புவார்கள். அல்லது எவனாவது வெட்டி அரசியல்வாதியின் வீர பிரதாபங்களுக்குச் செவி மடுப்பார்கள். சரியாகச் சொல்வதென்றால் இங்கும் மற்ற வீதிகளைப்போல வாழ்க்கை போய்க் கொண்டுதான் இருக்கிறது. ஒரே வித்தியாசம் அக்கம்பக்கத்தில் இருக்கும் மதிப்பும் மரியாதையும் மிக்க சமூகத்தில் வசிக்கும் மனிதர்களுக்குத் தங்களது கெட்டபுத்தி நன்றாகத் தெரியும். ஆனால் இங்குள்ளவர்கள் சுத்தமான மனசாட்சி உள்ளவர்கள். இங்கே எதிலும் ஒளிவு மறைவு இல்லை. எல்லாமே வெள்ளிடைமலைதான். விலைமாதுக்கள் தங்கள் தொழிலை தினக்கூலிக்கு வேலை செய்பவர்களைப்போல உற்சாகத்துடன் செய்தனர். தரகர்களுக்கும் வீடு வாசல் குடும்பம் எல்லாம் உண்டு. ஷோக்காளிகளுக்குக் கூட ஒரு மரியாதையான வாழ்க்கைக்குத் திரும்பும் உத்தேசம் இருந்தது.

முர்ளி நாஸ்கருக்கு இங்கே பொருந்தி வரவில்லை. சுரேந்தர்நாத் கல்லூரியின் மாணவன் அரசியலில் புகலிடம் தேடினான். ஒரு அரசியல் பதாகையை உயர்த்திப் பிடித்தான். ஒரு கத்தியைக் கையில் எடுத்து டிராம் வண்டித் தடங்களில் வீசத் தொடங்கினான். வெடிகுண்டு தயாரிக்கக் கற்றுக் கொண்டான். ஒரு காங்கிரஸ் அபிமானியின் செவிகளை வெட்டி அவருக்கு செவியிழந்த சேகர் என்ற சிறப்புப் பெயர் வாங்கிக் கொடுத்தான். இறுதித் தேர்வுகள் நெருங்க நெருங்க அவன் இரவில் அதிக நேரம் கண்விழிக்கத் தொடங்கினான். வேறு இடம் போக முடியாமல் மெஹந்தி அவன் பக்கமாகவே இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்குவாள். ஒரு மாதிரியான கனவில் முர்ளி அவளைத் தள்ளி விடுவான். எக்கச்சக்கமாக வாடிக்கையாளர்களின் குறை தீர்த்த மெஹந்தி அவனைத் திரும்பி உதைக்கத் தெம்பில்லாமல் கிடப்பாள். காலையில் சூரியன் முகத்தில் வந்து அறையும் வரை அவள் அவனை எழுப்ப மாட்டாள்.

அவன் எழுந்ததும் அவனுக்காக வருத்தப்படுவாள், அரசியலில் தலையைக் கொடுத்து இப்படிப் படிப்பைப் பாழ் பண்ணிக் கொள்கிறானே என்று. அவனுக்கு டீ போட்டுத் தருவாள். கையில் டூத் பிரஷை நீட்டுவாள். அப்புறம் பிலு பிலுவென்று ஒரு பிடி பிடிப்பாள் “இங்க எதுக்கு வந்தே... உருப்படியா படிக்கணும் என்பதற்குதானே? நான் ஒரு பைத்தியம். உன்னைப் படிக்க வைப்பதன் மூலம் என் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் தேடிப்பதா நினைச்சுகிட்டு இருக்கேன். நீயான்னா படிக்காம அரசியல் அது இதுன்னு ஊரைச் சுத்தறே. நீயும் கடைசியா ஒரு மாமாவாதான் ஆகப் போறியா? இங்க பாரு முர்ளி. சுறுசுறுப்பா இரு. உன் படிப்பை முடி. இங்கிருந்து போயிடு. எனக்கு தலைக்கு மேலே ஆயிரம் வேலை இருக்கு.”

“எந்த மாதிரி வேலை?”

“உனக்கு அது அவசியமில்லை. முதலில் உன் படிப்பை முடிக்கும் வழியைப் பாரு. ஒழுக்கமான சமுதாயத்துக்குத் திரும்பப் பாரு. அழகான பொண்ணுங்க உன்னுடைய குழந்தைய சுமக்க வரிசையில் காத்துகிட்டு இருப்பாங்க.”

அதைக் கேட்டுவிட்டு முர்ளி வயிறு வெடிக்கச் சிரிப்பான். சரிதான் என்று எண்ணிக் கொள்வான். இந்த வேசிகள் வயிற்றில் குழந்தையை வாங்கிக் கொள்ள மாட்டார்களாம். ஆனால் நல்ல குடும்பத்துப் பெண்கள் மட்டும் கர்ப்பம் தரிக்க வேண்டுமாம். மரியாதைக்குரிய குடும்பங்கள். மீண்டும் ஒருமுறை ஏளனமாகக் கொக்கரித்தான். வேசிகள் நன்றாக உடை உடுத்தி அலங்காரம் பண்ணிக் கொள்வதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. வீட்டுக்குள் கடவுள் படங்களை ஒட்டி வைப்பதற்கும் குறைச்சல் இல்லை. கற்பனைக் கணவனுடன் குடித்தனம் பண்ணுவதிலும் குறைச்சல் இல்லை. ஒழுங்கான குடும்பங்களில் மனைவி மட்டும் சம்பாதிப்பவள் என்றால் மனைவி என்றும் கணவன் என்றும் தனித் தனியாகப் பிரித்துப் பார்ப்பது கடினம். கார்ல் மார்க்ஸ் கணவன் மனைவிக்கு நடுவில் இருக்கும் பொருத்தமில்லாத உறவு குறித்துக் கூறியிருப்பது அவனைத் தடுமாற வைக்கும். அவனுக்கு வேசிகள் என்றால் நன்றாகத் தெரியும், ஆனால்

குடும்பப் பெண்கள்... என்ன கண்றாவி இது? அவன் அவர்களுக்காகப் பரிதாபப்பட்டான். விடிந்ததிலிருந்து இரவு வரை அவர்கள் செய்யும் வேலைகளுக்கு நான்கில் ஒரு பங்கு கூலி கூட கிடைப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் வயிற்றுக்குப் போதுமான ஆகாரம் கிடைப்பதில்லை. உடுத்திக்கொள்ள கிழிசல் இல்லாத ஆடைகள் கிடைப்பதில்லை. குடும்பப் பெண்களுக்கு இந்த விபசாரிகள் எவ்வளவோ மேல்.

சோனாகச்சில் இருக்கும் வேசிகள் தங்களிடம் வரும் சொகுசுப் பேர்வழிகளிடம் இப்படிதான் கூறுவார்கள். “நான் உனக்கு தாலி கட்டின பொண்டாட்டின்னு நினைப்பா? இவ்வளவு நேரம் எடுத்துக்கற? சீக்கிரமா கிளம்பு. எனக்கு இன்னும் நிறைய கிராக்கி இருக்கு.”

ஓய்வாக இருக்கும் தருணங்களில் மனம் இது போன்ற இடத்தில் இருக்க விரும்பாதபோது வேறு மாதிரி யோசிப்பான். ‘இதையெல்லாம் விட்டுச் செல்ல வேறு ஏதாவது மார்க்கம் இல்லாமல் போகாது.’ நிறைய வழிகள் இல்லாமல் இல்லை. யார் அவனைத் தடுக்க? இந்த உலகைத் தவிர இன்னொரு உலகமும் இருக்கிறது. ஒழுக்கமான உலகம் என்ற பெயருடன். அவனுக்குக் கொஞ்சமும் ஒத்துவராத உலகம்.

ஒருநாள் கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் அவனுக்குள் புகுந்ததைப்போல இருந்தது. அந்த ஒழுக்கமான சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியையும் தேடிப் பார்க்கக் கிளம்பினான். அந்த உலகில் ஒழுக்கமாகவும், நேர்மையாகவும் சமூகத்தின் காவலர்களாகவும் விளங்க வேண்டிய காவல் அதிகாரிகள் டிராம் வழித் தடங்களில் நின்றுகொண்டு விபசார விடுதிகளிலிருந்து வாரா வாரம் மாமூல் வாங்கிக் கொண்டிருந்தனர். பெண் தரகர்களின் மூக்குப் பொடி டப்பிகளிலிருந்து பொடி எடுத்துப் போட்டுக் கொண்டார்கள்; விலைமாதுகளுடன் சிரித்துப் பேசிக்கொண்டும் வம்பு பேசிக்கொண்டும் பொழுதைக் கழித்தார்கள். இவர்களைத் தவிர சலிப்பான முகத்தை வைத்துக்கொண்டு வீற்றிருக்கும் கடைக்காரர்கள்; வியாபாரிகள் - இன்னும் என்னவெல்லாம் வழிகளில் தந்திரம் செய்து பணம் சம்பாதிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் வியாபாரிகள்; லஞ்சம் வாங்கி வாங்கி உடல் கொழுத்த அரசு அதிகாரிகள். கார் பங்களா - ஏசி

வசதியுடன் உடல் கொழுத்த அதிகாரிகள்; சினிமா நட்சத்திரங்களைப்போல அலங்கரித்துத் திரியும் அவர்களது இல்லத்தரசிகள். அப்புறம் இந்தப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் இவை எல்லாம் முர்ளிக்குள் குடி புகுந்திருந்த கொலம்பஸின் கண்களில் சிக்கின.

நேர்மையான சமூகம் - எங்கிருக்கிறது அது? அப்படிப்பட்ட ஓர் இடத்தில் மனிதர்கள் தங்கள் அன்றாடச் செயல்களுக்கு வெட்கப்படக் கூடாது; சங்கடப்படக்கூடாது. அப்படி ஓர் இடம் இருக்குமா? இது குறித்து அவன் தீவிரமாக யோசித்தான். அங்கு வசிப்பவர்கள் எப்படி இருப்பார்கள்? யார் மாதிரி இருப்பார்கள்? ஆனால் ஒன்று, அப்படி ஓர் இடம் இருந்தால் அது நிச்சயம் சுவாரஸ்யம் மிகுந்த இடமாகதான் இருக்கும். அவன் அந்தக் கற்பனையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டான்.

ஆனால் முடிவில், இந்தக் கற்பனைகள், பேச்சு எல்லாமே மாயாஜாலக் கதைகளில் வருவது மாதிரி முடிவுக்கு வந்துவிடும். சரி அப்படி ஒரு இடம் இருக்கிறது, நாம் எல்லாம் அங்கே குடி போகிறோம் என்றே வைத்துக் கொள்வோம். கொஞ்ச நாட்களிலேயே அதனை இன்னொரு சோனாகச்சியாக மாற்றிவிட மாட்டோம் என்பதற்கு என்ன உத்திரவாதம்? அதுவும் ஒரு இரக்கமற்ற வியாபாரத் தலமாகி விடாது? அங்கிருக்கும் அரசியல்வாதிகள் மட்டும் நேர்மையானவர்களாகவா இருப்பார்கள்? இல்லை இதன் வரலாறு நாம் பக்கம் பக்கமாகப் படிக்கும் வரலாற்று நூல்களில் கூறப்பட்டதை விட வேறு ஒரு புதிய வரலாறையா படைக்கப் போகிறது?

“முர்ளி நாஸ்கர், நீ ஒரு ஹிந்துவா?” ஒருநாள் மெஹந்தி லக்ஷ்மி அவனிடம் கேட்டாள்.

“ஆமாம்.”

“இல்லை நீ பொய் சொல்கிறாய். உன் கையில் குரானின் பிரதி ஒன்று உள்ளது.”

“என்னிடம் பைபிளும் பகவத் கீதையும் கூட இருக்கின்றன.”

“சரி சரி, உன் பேன்ட்டை அவிழ்த்துக் காட்டு. இந்தப் பிரச்சனை ஒரேயடியாக முடிவுக்கு வரட்டும். எனக்கு நீ ஒரு முஸ்லிம் என்றே தோன்றுகிறது.”

“நான் ஒரு இசுலாமியன் என்றாலும் அது உன் உலகை மாற்றப் போவதில்லை. ஏன் உனக்கு இப்படி ஒரு நினைப்பு? லக்ஷ்மி, இப்பொழுதெல்லாம் நீ நிறைய டிவி பார்க்க ஆரம்பிச்சுட்டன்னு நினைக்கிறேன். இந்த அரசியல்வாதிகள் தங்கள் பிழைப்பை நடத்த மதத்தையும் தங்களுடன் மேடைக்கு எடுத்துச் செல்கின்றனர்.”

“பயமா இருக்கா?”

“ஆமாம்.”

“எது மேல பயம்?”

“எதன் மீது பயம்னு தெரிஞ்சிருந்தா நான் அதை அழித்திருப்பேன்.”

“எதை அழித்திருப்பாய்?”

நாஸ்கர் சிரித்தான். “மெஹந்தி, உன்னுடைய சுவர்களை எல்லாம் கடவுள் படங்களால் மறைத்து வைத்திருக்கிறாய். சொல், எந்தக் கடவுள் வந்து உன் துயர் நீக்கியது?”

“நிறைய உதவி பண்ணியிருக்கிறார்கள். என்னோட இந்த வயசுக்கு நிறைய கிராக்கிகளை எதிர்பார்க்க முடியுமா? ஆனா வர்றாங்களே... ஏன்னு சொல்லு, எல்லாம் கடவுள் கிருபையாலே.”

“அப்படின்னா...” முர்ளி தனது தோல்வியை ஒப்புக்கொண்டு சிரித்தான். “கரெக்ட். உன்னிடமும் ஒரு பாயின்ட் இருக்கு” என்றான். வெற்றியில் முகம் சிவந்து போன லக்ஷ்மி மொட்டை மாடியில் ஈரத் தலையை உலர்த்துவதற்குக் கிளம்பினாள். அவனும் அவள் பின்னால் மொட்டை மாடிக்குச் சென்றான்.

“நான் சின்னப் பொண்ணா இருந்தப்ப நடந்தது...” என்று லக்ஷ்மி ஆரம்பித்தாள். “அப்போ சிக்கா மாமிதான் விடுதிக்குத் தலைவியா இருந்தாங்க. நான் ஸ்கூலுக்கு ஜம்முனு சீருடை பெல்ட் இதெல்லாம்

போட்டுகிட்டுப் போவேன். மொட்டுவிட்ட என்னோட அழகில் மயங்கி பில்லா, தாரான்னு ரெண்டு பேர் என்னைச் சுத்தி சுத்தி வந்தாங்க."

"நீ ஒரு வேசியின் மகள் என்று அவங்க கிட்ட சொல்லியிருக்கணும் இல்லியா?"

"நிச்சயமா சொல்லி இருக்கணும். ஆனா பில்லா தாரா ரெண்டு பெரும் என்னோட காதலர்கள். பில்லாவுக்கு நாய்னா பைத்தியம். கைய்லிஃப் தெருவிலிருந்து நாய்க்குட்டிகளைத் திருடிக்கொண்டு வந்து எனக்கு அன்பளிப்பா கொடுப்பான். என்னா அழகான நாய்க்குட்டிகள் தெரியுமா... காது பெருசா, கண்ணு ரெண்டும் பொத்தான் கணக்கா இருக்கும். சில குட்டிங்களுக்கு வாலே இருக்காது. ஒண்ணு ரெண்டுக்கு வால் இருந்தாலும் ரொம்ப குட்டையா இருந்தது. அதுங்க நடக்கறதைப் பார்த்தா கால்கள் மண்ணில் புதைஞ்சு போனா மாதிரி இருக்கும். தாரா பேசவே மாட்டான். அவன் சிக்கா மாமிக்கு உளவு வேலை பார்த்தான். அவன் ஏற்கெனவே போலீஸுக்கு ஆள் காட்டியா இருந்தவன். ஒருநாள் பில்லாவுக்கும் தாராவுக்கும் என்னை வைத்து கத்திச் சண்டை வந்துடுச்சு. அவங்க ரெண்டு பெரும் காணாமப் போயிட்டாங்க. அவங்க ரெண்டு பெரும் எங்கே போனாங்க என்ன ஆனாங்கன்னு தெரியாது."

"ரொம்ப விசித்திரமான கதையா இருக்கு நீ சொல்வது. கேட்கலைன்னா தலை வெடிச்சிடும்போல இருக்கு. கதையைக் கேட்கலாம்னா அதில் எந்த அர்த்தமும் இருப்பதாகத் தெரியல."

"என்னது?"

"நல்ல கதைதான். ஆனா கொஞ்சம் முன்னாடியே சொல்லியிருக்கலாம்."

"கேட்க வேணாம்னா கிளம்பு முர்ளி. என்னோட வாழ்க்கை பூரா வெறும் கதைகள்தான். உன்னோடது மாதிரி இல்லை, வெறும் புஸ்தகம் புஸ்தகம் புஸ்தகம் மட்டும்தான் உன் வாழ்க்கை. ஒரு முறை குஜராத்தி வியாபாரி ஒருத்தன் அவனோட வேலையெல்லாம் முடிச்சிட்டு இங்க வந்தான். என்னை அவனோட மும்பைக்கு வரச் சொன்னான். அப்போ நான் ரொம்பச் சின்னப் பொண்ணு. மும்பையில் அப்படி என்ன விசேஷம்னு

அவன்கிட்ட கேட்டேன். அதுக்கு அவன் கடல் இருக்குன்னு சொன்னான். கடலைத்தவிர வேற என்ன இருக்குன்னு கேட்டேன். உயர உயரமா அடுக்குமாடி கட்டடங்கள் அப்படின்னான். அடுக்குமாடி கட்டடம் தவிர? மும்பை சினிமா நகரம். அப்படின்னா சோனாகச்சி மாதிரி அங்கே இடம் இருக்கான்னு கேட்டேன். சோனாகச்சியை விட நல்ல இடங்கள் இருக்கு. நான் உதாரணம் சொல்லச் சொன்னேன். முகமது அலி வீதின்னு சொன்னான். அப்புறம் உனக்கு அங்கே ஒரு மெஹந்தி லக்ஷ்மி மாதிரி யாரும் கிடைக்கலியா, அப்படி ஒருத்தியை வச்சுக்க வேண்டியதுதானேன்னு கேட்டேன். அவன் அப்படியே போயி சிக்கா மாமிகிட்ட போட்டுக் குடுத்துட்டான். சிக்கா மாமி எனக்கு எதிரா கிளம்பிட்டாங்க. இந்த இடத்தைவிட்டு துரத்திட்டாங்க. அப்போ எனக்கு வயசும் யவனமும் இருந்துச்சு. காத்தும் என் பக்கமா வீசியது. நானே தனியா தொழில் பண்ண ஆரம்பிச்சேன்."

முர்ளி நாஸ்கர் மேற்கூரையில் இருந்து மௌத் ஆர்கன் ஒன்றில் சினிமா பாடல்களை வாசித்துக்கொண்டே அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அந்த மௌத் ஆர்கன் மெஹந்தி லக்ஷ்மியின் வாடிக்கையாளன் ஒருவன் அவளது படுக்கையில் மறந்து விட்டுவிட்டுப் போனது. வாசிப்பதில் சலிப்பு ஏற்பட்டால் தொடுவானம் வரை அடுக்கடுக்காக நீண்டுகொண்டே போகும் வீடுகளின் வரிசையைப் பார்த்துக் கொண்டிருப்பான். எல்லா வீட்டுக் கூரையின் மேலும் விலை மகளிர் குளித்துக்கொண்டோ, துவைத்துக்கொண்டோ, சமைத்துக்கொண்டோ, குழந்தைகளைத் தொட்டிலில் போட்டு ஆட்டிக்கொண்டோ, கூந்தலை சூரிய வெப்பத்தில் உலர்த்திக்கொண்டோ இருப்பார்கள். மேலே ஆகாயம், கீழே பூமி. இடையில் அந்த ஆண்டவன் படைத்த மனிதர்கள். ஆகாயத்தின் மீது அந்த மனிதர்கள் படைத்த பட்டங்கள் அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தன. உலகமும் அதில் உள்ளவர்களும் நூலில் கட்டி இழுக்கப்படும் பட்டங்கள்போல அங்கும் இங்கும் ஆடிக் கொண்டிருந்தனர்.

தனக்குத் தானே கேட்டுக் கொள்வான். எதற்காக நான் இங்கே இருக்கிறேன்? நான் அப்படி என்ன பெரிதாகக் கிழித்திருப்பேன் இந்த

சோனாகச்சிக்கு வந்திரா விட்டால்?

அவன் திரும்பி மெஹந்தி லக்ஷ்மியைப் பார்த்து, “சரி லக்ஷ்மி, நான் பில்லா தாரா போல திரும்பி வராம இருந்தால் நீ எனக்காக ஏங்குவியா?” என்று கேட்டான்.

“நீ ஒண்ணும் என்னோட பில்லாவோ தாராவோ கிடையாது. அப்புறம் நீ போனா நான் எதுக்கு வருத்தப்படணும்?” என்று கேட்டாள்.

“அதனாலதான் என்னால ஒரு முடிவுக்கும் வர முடியலன்னு நினைக்கறேன். என்னை நினைச்சு வருத்தப்பட யாராவது ஒருத்தர் ரெண்டு பேராவது இருக்கணும் இல்லையா?”

அன்றுதான் முர்ளி ஒரு முடிவுக்கு வந்தான். தனது ஆளுமையை மாற்றிக்கொள்ள முடிவு செய்தான். மீசை வளர்க்க ஆரம்பித்தான். ஆனால் இதில் கூட அவனுக்கு வேற்று மனிதரின் ஆலோசனை வேண்டியிருந்தது. கிரிஜா சங்கரிடம் கேட்கலாமா? ஆனால் கிரிஜா சங்கருடன் முன்பிருந்த நெருக்கம் இப்போது இல்லை. கிரிஜா சங்கர் சுன்னா கல்லியில் இருக்கும் ஒரு வேசியைக் கல்யாணம் செய்துகொண்டு கான்வென்ட் சாலையில் மூணாம் நம்பர் பாலத்திற்குக் கீழே சட்டத்திற்குப் புறம்பாக ஒரு குடிசையைக் கட்டிக்கொண்டு வதவதவென்று பிள்ளைகுட்டி பெற்றுத் தள்ளுவதில் முனைப்பாக இருந்தான். எப்படியோ திருட்டு முனைத் திருப்பத்தில் ஒரு டீக்கடை வைத்துக் கொண்டிருக்கிறான். அந்த டீக்கடை சரியான வம்பு மடமாகத் திகழ்ந்தது.

ஒருநாள் அவன் முர்ளியைப் பார்த்து இளித்துவிட்டு ஒருமர பெஞ்சில் உட்காரச் சொன்னான்.

“உன்னை யாரு மீசை வளர்க்கச் சொன்னது? மீசையோட உன்னைப் பார்த்தா அப்படி ஒண்ணும் மோசமாத் தெரியலை. இருந்தாலும் யாரு உனக்கு மீசை வளர்க்கும் யோசனையைக் கொடுத்தது?”

“என் மனசு.”

“எப்பவும் மனசு சொல்வதைக் கேட்கணும். நானும் என் மனசு சொன்னதைக் கேட்டேன். இப்போ பாரு எனக்கு மூணு பசங்க. இந்த

டீக்கடையும் அவ்வளவு மோசமா போகலை. ஆனா என் மனைவிக்குதான் உடம்பு சரியில்லை. ரெண்டு மாசத்துக்கு ஒருமுறை அவ உடம்பு மோசமாயிட்டே வருது."

"என்ன உடம்புக்கு?"

"எல்லாம் அந்த மாதிரி பொம்பளைங்களுக்கு வரும் நோய்தான். என்னை விளக்கம் கேட்காதே. இதையெல்லாம் வாய்விட்டுச் சொல்ல முடியாது. நான் அத்தனை நல்லவனும் இல்லை, அத்தனை மோசமானவனும் இல்லை முர்ளி."

"உனக்கு வருத்தமா கிரிஜா?""

"எதற்கு? இப்படி தரகு வேலை பார்ப்பதற்கா? சொல்லத் தெரியலை. ஆனாலும் இந்தத் தொழிலிலிருந்து ஒருத்தன் மாறணும்னு நினைச்சாக்கூட முடிவில் பழைய மாதிரிதான் ஆகறான்."

வரும் வழியில் ஒரு பாழடைந்த சர்ச் காம்பௌண்டு சுவரில் சிறுநீர் கழிப்பதற்காக நின்றான். ஜிப்பை இறக்கும்போது அவனுடைய ஆண்குறி ஜிப்பில் மாட்டிக்கொண்டு வலி உயிர் போனது. வலியில் கத்தினான். கண்ணீர் சேர்ந்துவிட்டது. கஷ்டப்பட்டு ஜிப்பிலிருந்து அதை எடுத்தான். சர்ச்சின் தள்ளு கதவில் முதுகு சாய்ந்து உட்கார்ந்தான். துடிக்கும் வலியுடன் பெருமூச்சு விட்டான். கண்களைத் துடைத்துக்கொண்டு வலி குறையுமா என்று பார்த்தான். யாரோ அவனுடைய மர்மக்குறியை இடைவெளி விட்டு கிள்ளுவதுபோல வலி விட்டு விட்டு வந்தது. கொஞ்ச நேரத்தில் ஓரளவு வலி குறைந்ததும் என்ன மாதிரி சேதம் என்று தனது குறியைப் பார்த்தான். ரத்தம் வருகிறதா? கதவைப் பார்த்தான். சங்கிலி போட்டு கட்டியிருந்தது. இருந்தாலும் சிரமப்பட்டு ஓர் ஆள் நுழைவதற்கு சந்து ஒன்று இருந்தது. முர்ளி அந்த இடுக்கு வழியாக உள்ளே புகுந்து சுவரின் மறைவில் நின்று ஜிப்பை இறக்கிப் பார்த்தான். சிறு துளிகளாக ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஒரு மண்டபத்திற்கு அருகில் இருந்த திறந்த வெளியில் ஒரு சின்ன மரத்தின் கீழ் தலையைக் கவிழ்த்து உட்கார்ந்தான். சர்ச்சில் இருந்த ஜன்னல் கண்ணாடிகள் எல்லாமே தூசி படிந்து அசிங்கமாக இருந்தன. ஆனால் உபயோகப்படும் நிலையில்

இருந்தன. ஒருபக்க மரக்கதவு உடைந்து உள்ளே விழுந்து கிடந்தது. அவன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து சர்ச்சிற்குள் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாது. இடது பக்கம் ஒரு சுருள் படி மாடியில் விதானத்தை நோக்கிச் சென்றது. அவன் உட்கார்ந்த இடம்வரை வௌவால்களின் புழுக்கை நாற்றம் வீசியது. வலி கொஞ்சம் குறைந்தது. அங்கிருந்து கிளம்பினான்.

கொஞ்சநாள் சென்று முர்ளி கிரிஜா சங்கரை அவனது டீக்கடையில் பார்த்தபோது அவன் முகம் ஏதோ போல் தெரிந்தது. வெளுத்துப் போயிருந்தது. தலையை மொட்டை அடித்திருந்தான். உடல் அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது.

“கேம்ப்பெல் ஆஸ்பத்திரிக்கு போய் காட்டிட்டு வா கிரிஜா. அதாம்பா, சீல்தா ஸ்டேஷன் பக்கம் இருக்கே பெரிய ஆஸ்பத்திரி அது.”

“அங்கதான் போயி காமிச்சுட்டு வந்திருக்கேன். ரத்தப் பரிசோதனை பண்ணினாங்க. இன்னிக்குதான் அதோட முடிவு தெரியும்” சியா துல்லாரி கொண்டுவந்த டீயை ஒரு வாய் குடித்தபடி பதில் சொன்னான்.

சியா துல்லாரியை முதன் முறை பார்ப்பவர்கள் அவள் சுனா கல்லியில் விபசாரம் செய்யும் பெண் என்று நம்ப மாட்டார்கள். அடுத்தடுத்து மூன்று பிள்ளைகளைப் பெற்றதால் அவள் உடம்பு அகன்று கனமாகிப் போயிருந்தது. இப்பொழுதும் அவள் காடியாக ஒப்பனை செய்துகொண்டு கோயிலுக்குப் போய்வருகிறாள். அவர்களுடைய சட்ட விரோதமான குடிசை ரயில்வே லைனை ஒட்டி இருந்தது. அந்தக் குடிசையின் முன்பு கொடிக்கம்பத்தில் மூங்கில் கழி ஒன்றில் சாமிக் கொடி பறந்து கொண்டிருந்தது. கொடியில் வீர ஹனுமான் இருந்தார். ஒரு கையில் கதை, ஒரு கையில் சஞ்சீவ பர்வதம். பத்து நிமிடத்திற்கு ஒருமுறை ரயில்கள் ஒவ்வொன்றாய்க் கடந்து போகும்போது அந்தக் குடிசை அஸ்திவாரம் வரை ஆட்டம் கண்டது. தண்டவாளங்களில் தவழ்ந்தே அவள் குழந்தைகள் வளர்ந்தன.

“உன் பழைய தொழிலே தேவலை கிரிஜா. கல்யாணம் பண்ணிக்கிட்டு இந்தப் பெண்ணை நாசமாக்கிட்டன்னுதான் சொல்லணும்.”

“நீ போயி மாமா வேலை பாரு, அப்போ தெரியும் அது எவ்வளவு கஷ்டம்ன்னு…” என்று கோபமாகக் கூறினான் கிரிஜா.

முர்ளி பதில் சொல்லவில்லை.

“உனக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகுது முர்ளி? ஒரு தேவிடியாவுக்கு மாமாவா இருந்து பாரு. அப்புறம் கடவுளுக்குக் கூட உன்னை பிடிக்காமல் போயிடும்.”

“டீ நல்லா இருந்துச்சு.” முர்ளி சொன்னான், “என் நெஞ்சில் இருந்ததையெல்லாம் வார்த்தையில் கொட்டினேன். அவ்வளவுதான். வார்த்தையில் வாந்தி எடுப்பவன்னு எனக்கு ஒரு பட்டப் பேரு உண்டு.”

“சரியான பேருதான்.” கணவன் மனைவி இருவரும் ஒரே நேரத்தில் சொன்னார்கள்.

முர்ளி கிளம்பினான். பிள்ளைகளுக்குத் தின்பண்டம் எதுவும் வாங்கிக்கொண்டு செல்லவில்லை என்பது உறுத்தியது.

“அடுத்த தபா வர்றச்சே பசங்களுக்கு சாக்லேட் வாங்கிட்டு வரேன்” என்றான்.

“நீ மட்டும் சாக்லேட் கொண்டுவராம அடுத்தவாட்டி வந்தேன்னா அப்புறம் பசங்க உன்னை மதிக்கவே மதிக்காதுங்க” என்று சிரித்த கிரிஜா இருமினான். “சம்சார வலையில் அகப்பட்டுக்காத முர்ளி. பிள்ளைங்களைப் பெத்து வளர்ப்பது ஒண்ணும் நீ நினைப்பது மாதிரி அத்தனை சுலபம் இல்லை. அவங்களால் ஒரு பிரயோஜனமும் இருக்காது. பெரியவங்க ஆனதுக்கப்புறம் அவங்களும் இந்த உலகில்தான் வந்து கலக்கணும்.”

அடுத்த முறை முர்ளி கிரிஜாவின் டீக்கடைக்குப் போனபோது கடை இருந்த சுவடே அங்கே இல்லை. ரயில்வே லைனை ஒட்டியிருந்த குடிசையும் இடிக்கப்பட்டிருந்தது. அக்கம்பக்கத்தினரிடம் கிரிஜாவைப் பற்றி விசாரித்ததில் அவர்களுக்கும் அவன் போன இடம் எங்கே என்பது தெரியவில்லை. ரயில்வே லைனை ஒட்டியிருந்த சேரிப்பகுதியில் மிச்சம் எதுவுமில்லை. எல்லாவற்றையும் இடித்து அரசாங்கம் தரைமட்டம்

ஆக்கியிருந்தது. ஒரு பாழ் வெளி, உடைந்த சாமான்களின் குவியல் ஒன்று, இடிந்த சுவர் இவ்வளவுதான் மிச்சம். முர்ளி சாக்லேட்டுகளை மென்றுகொண்டு கொல்கத்தாவின் நகரச் சந்தடியைப் பார்த்தபடி வீடு வந்து சேர்ந்தான். தான் காண நேரிட்டதை மெஹந்தியிடம் கூறினான்.

“கிரிஜா வீட்டை காலி பண்ணிட்டுப் போயிருப்பான்.” மெஹந்தி லக்ஷ்மி வாயில் வெற்றிலையை மென்றபடி கூறினாள். “கிரிஜா புத்திசாலி. இந்த ஏரியாவிலேயே அவ்வளவு அழகான வேசி சியா துல்லாரி. அவளையே கைக்குள் போட்டுக்கிட்டவன். அவனுக்கா பிழைக்கச் சொல்லித் தரணும்?”

“அவனுக்கு உடம்பு முடியாம இருந்தது லக்ஷ்மி.”

“ஏன் இதை நீ எனக்கு முன்னாடியே சொல்லலை? ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தியா?”

“நான் கவனிக்காம இருந்துட்டேன்னு பயப்படறேன். எதுக்கும் கேம்ப்பெல் ஆஸ்பத்திரி வரைக்கும் போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்.”

தினம் அந்த ஆஸ்பத்திரியில் நூற்றுக்கணக்கில் நோயாளிகள் சேர்வதும் ஆயிரக்கணக்கில் டிஸ்சார்ஜ் செய்யப்படுவதுமாக இருந்தனர். அத்தனை நோயாளிகள் நடுவே கிரிஜாவைத் தேடுவது கடினமான செயலாக இருந்தது. முர்ளி மருந்து வாசனை வீசிய காரிடார்களில் அலைந்ததுதான் மிச்சம். அதன் பிறகு ஒரு விஷயம் தெரிந்த காவலாளி ஆஸ்பத்திரியின் சவக்கிடங்கில் போய்ப் பார்க்கச் சொன்னான். பிணக் கிடங்கிலும் கிரிஜாவைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை.

“நான் இன்னமும் சொல்றேன், கிரிஜா வேற எங்கேயாவது மாத்திப் போயிருக்கணும். அழகான பொண்டாட்டியைக் கட்டினவன் ஊர் ஊரா சுத்திக்கிட்டுதான் இருக்கணும். கேள்விப்பட்டதில்லையா ஒண்ணுமில்லாதவன் பொண்டாட்டி ஊருக்கெல்லாம் வப்பாட்டின்னு?” என்று லக்ஷ்மி சமாதானப்படுத்தினாள்.

“போதும் மெஹந்தி. உனக்கும் வயசாயிக்கிட்டே வருது. உன்னோட வாடிக்கையாளர்களுக்கு உன்கிட்டே இருந்து என்ன சுகம் கிடைக்கும்னு தெரியலை.”

“வாடிக்கையாளர்கள் சுகத்தை நான் தரணும் என்பது இல்லை, அவங்களே கொண்டு வருவாங்க.” காவி தெரிய மெஹந்தி சிரித்துவிட்டு, “வழியைத்தான் நாங்க காட்டுவோம்” என்றாள்.

“அட, நீ சொல்வதும் சரிதான். நான் இதை இப்படி ஒரு கோணத்தில் பார்க்கலையே.”

அன்றிலிருந்து அவன் அந்த வீதிக்கு முனைப்புடன் வரும் கிராக்கிகளின் முகத்தைக் கூர்ந்து பார்க்கத் தொடங்கினான். நிஜம்தான், வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியைக் கொண்டுவந்தார்கள். பசித்த விழிகளுடனும், ஜொள் ஒழுகும் வாயுடனும் வல்லூறுகளைப்போல அவர்கள் வீதியின் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்ட வேசிகளைப் பார்த்தபடி இருந்தனர். இந்த வகை மனிதர்களை - வாலிபர், முதியவர்கள், திருமணமானவர்கள், ஆகாதவர்கள் - அவன் இந்த மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் பார்த்திருக்கிறான். அடையாளம் கண்டுகொள்வதால் மட்டும் என்ன பயன்? அவர்களை அவனால் மாற்ற முடிந்ததா?

நாள்பட நாள்பட அவன் லாலா, ரஹீம், பாகிச்சா, குலாப் சந்த் போன்ற பெண் தரகர்களுடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டான்.

“கங்கன் கோட்டாவிலிருந்து வரும் குட்டிங்க ஷோக்கா இருக்கும்.” லாலா சட்டிஸ்கரில் இருக்கும் ஒரு கிராமத்தைக் குறிப்பிட்டான். “நம்ம ஊர்ப் பொண்ணுங்க மாதிரி இத்தனை மிருது கிடையாது. தொட்டா சும்மா கிண்ணுன்னு மாதுளம்பழத் தோலைத் தொடறாப்பல இருக்கும். ஆனா அந்த நாயிங்க இந்த ஊருக்கு வராதுங்க.”

“பங்களாதேஷிலிருந்து வர்ற பொண்ணுங்கதான் இந்தத் தொழிலையே நாஸ்தி பண்ணுதுங்க.” பொடி போட்டு மூக்கை உறிஞ்சியபடி பாகிச்சா கூறினான். “தம்பிமார்களே, இப்போ இங்கே வரும் பொண்ணுங்க வயசைப் பார்த்தியா? சின்ன சின்ன பொண்ணுங்கள்லாம் வருது. குலாப். லோரேடோவிலிருந்து ஒருத்தி இங்கே வந்தாளே... எங்கே அவளக் கொஞ்ச நாளா கண்ணிலேயே காணும்?” என்றான்.

“கல்யாணம் ஆகி போயிருப்பா.” ரஹீம் நக்கலாகச் சிரித்தான். அவன் பற்களில் மஞ்சள் கறை ஏறியிருந்தது. அந்தத் தரகர்கள் நட்புடன் பேசிக் கொண்டிருந்தாலும் கவனமெல்லாம் அந்த வீதிக்குள் நுழையும் மனிதர்களின் மீதே இருந்தன.

ஒருநாள் மெஹந்தி லக்ஷ்மி ஆள் அனுப்பி அவன் இப்போது வழக்கமாக தொழில் செய்யும் இடத்திலிருந்து அழைத்து வரச் செய்தாள். மெஹந்தியின் வீட்டில் குள்ளமான வயதான ஒரு மனிதர் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

“சியா துல்லாரி சுனா கல்லியில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாளாம்” காவிக் கறை மின்னும் பற்களைக் காட்டியபடி லக்ஷ்மி கூறினாள்.

“எதுக்காக?” லக்ஷ்மி கொடுத்த தேநீர் கோப்பையை உறிஞ்சிக் கொண்டிருந்த கிழவனிடம் முர்ளி கேட்டான்.

“எனக்கு எதுவும் தெரியாது” என்றான் அந்தக் கிழவன். அவனும் ஒரு தரகன்தான். வேறு எப்படி இருக்க முடியும்?

“சியா துல்லாரி தகவல் அனுப்பிவிட்டிருக்கா. நல்லது தம்பி, உனக்கு ஏதும் வேணுமின்னா இந்தக் கிழவன் ஹரிநாத்தை நினைவு வச்சுக்கோ.”

ஹரிநாத் போனதும் லக்ஷ்மி அவனிடம், “நீ சுன்னா கல்லிக்கு போப்போறியா?”

“இல்லை.”

“ஏதாவது காரணம்?”

“காரணம் எதுக்கு சொல்லணும்? போவேணாம்னு தோணுது, அதனால் போகலை.”

அவன் மெஹந்தி லக்ஷ்மியிடம் பொய் சொன்னான். ஆனால் கிடைத்த சந்தர்ப்பத்தில் அவன் நேரே சுன்னா கல்லியில் போய் நின்றான்.

அவன் போனபோது அந்தக் கட்டடத்தின் நான்காவது தளத்தில்

குடியிருந்த சியா துல்லாரி தனது கடைசிக் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும் மார்பை புடைவைத் தலைப்பால் மூடிக் கொண்டாள்.

“கிரிஜா எங்கே?” தனக்கு அளிக்கப்பட்ட முக்காலியில் அமர்ந்தபடி கேட்டான். அவனுக்கு சுன்னா கல்லி மீது அவ்வளவு மதிப்பு கிடையாது. நாற்றம் பிடித்த இடம். பக்கத்துத் தெருக்களிலிருந்து உரித்த மிருகத் தோல்களின் நாற்றம் காற்றில் வந்தது.

“எனக்கு என்ன தெரியும்?” பதிலளித்த சியா, “ஒருநாள் சொல்லிக்காம ஓடிப்போயிட்டான். எல்லா ஆம்பளைங்களும் இப்படிதான்” என்றாள்.

முர்ளிக்கு அவள் கூறுவது பொய் என்று தெரிந்தது. அவளை உச்சி முதல் பாதம் வரை நோட்டமிட்டான். அவளிடம் முன்பிருந்த கவர்ச்சி இப்போது இல்லை என்றாலும், சுன்னா கல்லிக்கு வந்தபின்பு தான் இழந்த ஏதோ ஒன்றை மீண்டும் பெற்றதுபோல தோன்றினாள்.

முர்ளி நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டான். “கிராக்கிகள் புடிக்க ஆரம்பிச்சிட்டியா?” என்று கேட்டான்.

“இன்னும் இல்லை” என்றாள். கதவை மூடுமாறு அவனுக்கு ஜாடை காட்டினாள். “எனக்கு இப்போ ஆள் பிடிச்சுக் கொடுக்க ஒரு தரகன் வேணும்.”

“ஹரிநாத்துக்கு என்ன குறை? அந்தாளைப் பார்த்தா அத்தனை வயசானா மாதிரி தெரியலியே?”

“இல்லை” என்று கூறியவள், “எனக்கு புதுசா ஒரு ஆளு வேணும்” என்றாள்.

அந்தத் தருணத்தின் தீவிரத்தைக் குறைக்க அவன், “இப்பல்லாம் ஷோக்காளிங்க அவங்க ஜோடியை அவங்களே தேடிக்கறாங்க போலிருக்கு. நல்ல பவர் உள்ள கண்ணாடியா மாட்டிகிட்டு வருவாங்க போல.”

“என்னால வீதியில நின்னு ஆள் புடிக்க முடியாது. எனக்கு மூணு

பிள்ளைங்க இருக்காங்க."

"பேசாம அவங்களை அனாதை ஆசிரமத்தில் விட வேண்டியதுதானே?"

"நீயே கொன்று விடு."

சியாவின் கண்கள் ஈரமாவதை அவன் கவனித்தான்.

"இந்தளவுக்கு நெஞ்சில் இரக்கம் இருந்தா உன்னால இந்தத் தொழிலை பண்ண முடியாது." முர்ளி சிரித்துக்கொண்டே கூறினான். "நான் உனக்கு உறுதிமொழியெல்லாம் பண்ணித் தர மாட்டேன். கிரிஜா மேல எனக்கு இருக்கும் பழைய மரியாதை இன்னும் போகலை. ஒருதடவை அவனே என்னை நீ ஏன் தரகுத் தொழிலை எடுத்துக்கக் கூடாதுன்னு கேட்டான். இப்போ அவன் மனைவி என்னை அதுக்கு நிர்பந்திக்கிறா."

"வாழ்க்கையில் எல்லா பாதைகளும் ஒரே மாதிரிதான்." கண்களைப் புடைவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு சியா தொடர்ந்தாள். "ஒரு இடத்தில் ஒரு விஷயம் நல்லா இருந்தா இன்னொரு இடத்தில் வேற ஒண்ணு நல்லா இருக்கும். மொத்தத்தில் எல்லாம் ஒரே மாதிரிதான்."

"நீ சொல்றதை நான் எந்தப் புத்தகத்திலும் இதுவரை படிச்சதில்லை."

"சியா துல்லாரியிடமிருந்து கற்றுக் கொள்" என்று கூறியவள் கைக் குழந்தையை மெத்தை மேல் உட்கார வைத்து அதன் தலை முடியை சீவத் தொடங்கினாள். முர்ளி கண் முன்பாகவே சேலையைத் திருத்திக் கட்டிக் கொண்டாள். முகத்துக்கு சாயம் பூசிக் கொண்டாள். ஒரு மாடல் பெண்ணைப்போல இடுப்பில் கை வைத்து நெளித்துக்கொண்டு நின்றாள். முர்ளியின் தொண்டை வறண்டது. சியா துல்லாரி நிஜமாகவே அழகுதான். தலையைத் திருப்பிக் கொண்டான்.

"என்னைப் பார்த்தா குறைஞ்சு போயிட மாட்டியே?" என்றவள், "என்னை பிடிக்கலியா?" என்றாள்.

"இதை உன் வாடிக்கையாளர்களிடம் கேள்."

"உன்னிடம்தான் கேட்கறேன்."

“என்னிடம் வேண்டாம்.”

“அப்படி என்றால் நான் என் வாடிக்கையாளர்களிடமே கேட்டுக் கொள்கிறேன்” என்று கூறிச் சிரித்தவள், “முர்ளி, கிரிஜா உன்னைப் பத்தி என்னிடம் நிறைய சொல்லியிருக்கான். அவன் சொன்னதில் ஒரு எள்முனை மாற்றம் கூட உன்னைப் பார்க்கும்போது தெரியல. நிஜமாவே நீ ஒரு மாமா வேலை பார்ப்பவனை விட மோசமானவன்.”

சியாவிற்கு ஆள் ஏற்பாடு செய்வது கொஞ்சம் சிரமமாக இருந்தது. எல்லோருக்கும் இளம் பெண்கள்தான் வேண்டும். ஆனால் ஒரு முறை சியாவிடம் போனவர்கள் மீண்டும் அவளைத் தேடியே வந்தனர். தான் பார்க்கும் புது வேலையைக் குறித்து அவனாகச் சொன்ன பிறகுதான் மெஹந்தி லக்ஷ்மிக்குத் தெரிய வந்தது.

“ஒரு மாமாவா நீ?” லக்ஷ்மி ஆச்சரியப்பட்டுப் போனாள். “உன்னைப் பத்தி என்னவெல்லாம் நினைச்சு வச்சிருந்தேன் தெரியுமா? எத்தனை கனவு கண்டிருப்பேன்?”

“நீ ஒரு கனவுவாதி” சிரித்துக்கொண்டே முர்ளி கூறினான். “கனவு காண்பது ஆபத்தானது. யதார்த்தம் எதுன்னு தெரிஞ்சுக்கணும்” என்றான்.

ஆறு மாதத்தில் சியாவின் தொழில் சூடு பிடித்தது. அவளுடைய வாடிக்கையாளர்கள் மீண்டும் வரத் தொடங்கினார்கள். அவர்களில் பெரும்பாலோர் வர்த்தகத்தில் பெரிய ஆட்களாக இருந்தனர்.

ஒருநாள் நைந்து சோர்வுடன் திரும்பிய முர்ளியை லக்ஷ்மி வார்த்தைகளால் விளாசித் தள்ளினாள். “உன்மேல கெட்ட சாராய வாடை அடிக்குது முர்ளி. அந்தக் கேடுகெட்ட சிறுக்கி உன்னைப் பாழ் படுத்திகிட்டு இருக்கா” என்றாள்.

“என்னை என்ன வேணா சொல்லிக்கோ. அவளை ஏதும் சொல்றதா இருந்தா அப்பாலே போயிடு.” முர்ளியின் வார்த்தைகளில் சாராயம் கலந்திருந்தது. “ஆனா நினைப்பில் வச்சுக்கோ, அவள் இந்த சுன்னா கல்லியின் சூரியகாந்திப் பூ” என்றான்.

“அப்போ நான்?” மெஹந்தி சீறினாள்.

“நீ ஒரு பழைய குதிர் மெஹந்தி. உள்ளே ஒண்ணும் இல்லை. வெறும் சாம்பல்தான் இருக்கு.”

அவள் ஒரு செருப்பை எடுத்து வந்து அவனை அறையத் தொடங்கினாள். அவன் தாவித் தாவிச் சென்று அந்த அடிகளிலிருந்து தப்பிக்க முயன்று ஓடிக் கொண்டிருந்தான். மேல்கூரைக்குத் தப்பிச் செல்ல முயன்றான். மற்ற பெண்கள் அவர்கள் நிகழ்த்திய கூத்தை ரசித்துப் பார்த்தனர். இரண்டு பேரும் அடித்து ஓய்ந்ததும் அவன் அவளுடைய தலையை அவன் மார்பின் மீது சாய்த்தபடி, “கடும்பசி எனக்கு லக்ஷ்மி. எல்லா இடமும் காலியானது மாதிரி இருக்கு. வயிற்றுக்கு ஏதாவது கொட்டிகிட்டாதான் சரியாகும் போல...” என்றான்

மெஹந்தி உள்ளே போய் உணவுப் பதார்த்தங்களை சூடு பண்ணத் தொடங்கினாள்.

•

போன மூன்று நாட்களாக சியா துல்லாரி எந்த வெளி கிராக்கியையும் உள்ளே அனுமதிக்கவில்லை. தனது இருப்பிடத்தையும் மாற்றிக்கொண்டு விட்டாள். இப்போது அவள் வசிக்கும் வீட்டில் டிவி இருக்கிறது. குளிர்சாதனப் பெட்டி இருக்கிறது. ஒரு செவிலியை ஏற்பாடு பண்ணிக்கொண்டு குழந்தைகளை அவள் பொறுப்பில் விட்டு வருகிறாள். ஒரு தையல் இயந்திரத்தை ஓட்டக் கற்றுக்கொண்டு வருகிறாள். குல்லா போட்டுக் கொண்டிருக்கும் ஒரு வயதான மௌல்வி வீட்டிற்கு வந்து அவளுக்குத் தையல் பயிற்சி அளிக்கிறார்.

“சியா?”

“உம்.”

“உன்கிட்ட ஒண்ணு கேட்கலாமா?”

“வேண்டாம்.”

முர்ளி தலையைச் சொரிந்துகொண்டு கையிலிருந்த புத்தகத்தில் மீண்டும் புதையத் தொடங்கினான்.

“என்ன சொல்ல வர்ற?” சியா இயக்கிக் கொண்டிருந்த தையல் இயந்திரத்தை நிறுத்திவிட்டு கேட்டாள்.

“கடைசியா கிரிஜாவுக்கு என்ன நேர்ந்ததுன்னு தெரிஞ்சுக்கலாமா?”

“நான்தான் சொன்னேனே எனக்குத் தெரியாது.”

“உனக்கு என்னிடம் சொல்ல விருப்பம் இல்லை.”

“கிரிஜா இல்லாமல் இங்கே எது நின்னு போனது?”

இயந்திரம் மீண்டும் ஓடத் தொடங்கியது. கட கட... கட கட...

“ரொம்ப விசித்திரமா இருக்கு.”

முர்ளி சட்டென்று எழுந்து அவள் பின்னால் நின்றுகொண்டு அவள் கழுத்தை வருட ஆரம்பித்தான்.

“உனக்கு இப்ப என்ன வேணும்?” அவனிடமிருந்து விலகி நின்று அவள் கோபத்துடன் கேட்டாள்.

“இன்னிக்கு நீ புதுசா தெரியற. எனக்கும் ஒரு பொண்ணு வேணும்னு இன்னிக்குத் தோணுது.”

அவள் குதித்து அலறினாள், “என்ன தைரியம் உனக்கு நாயே? எவ்வளவு துணிச்சல் இருந்தால் என் மேல கை போட்டிருப்ப?” என்று கத்தினாள்.

“ஏன் கூடாது?” முர்ளி ஆவேசமானான். “சும்மா வர மாட்டேன்னா காசு கொடுக்கறேன்” என்றான்.

“முர்ளி வேணாம்... எச்சரிக்கை பண்றேன், கிட்ட வராதே” என்றவள் அடுப்பின் மேல் இருந்த இருப்புச் சட்டியைக் கையில் எடுத்து ஓங்கினாள்.

“நம்பமுடியல, ஆச்சரியமா இருக்கு...” என்று தலைக்கு மேல் இரண்டு கரங்களையும் குவித்துத் தன் தோல்வியை ஒப்புக்கொண்ட முர்ளி, “நீ யாரு? காசுக்கு உடம்பை விற்கும் வேசிதானே?” என்றான்.

“ஆமாம். ஆனா எல்லோருடனும் படுக்கணும் என்னும் அவசியம் எனக்கில்லை.”

“நான் கிளம்பறேன். நீ வேற ஒரு மாமாவைத் தேடிக்கோ.”

அவன் கிளம்ப எத்தனித்தபோது அவளது அழுகைக் குரல் கேட்டு நின்றான்.

“எனக்குத் தெரியாது முர்ளி. கிரிஜாவுக்கு கெட்ட நோய் வந்துடுச்சுன்னு கேள்விப்பட்டேன்.”

முர்ளி சட்டென்று நின்று அவளைத் திரும்பிப் பார்த்தான். கண்ணீர் கண்களில் தீட்டப்பட்டிருந்த மையைக் கரைத்துக் கொண்டிருந்தது.

“அவனோட ரத்தப் பரிசோதனை முடிவு வந்தவுடனே போலீஸ் அவனைத் தேடிகிட்டு வந்துட்டாங்க.போலீஸ் என்னையும் துரத்திச்சு. நான் மூணு குழந்தைங்களையும் தூக்கிகிட்டு ஓடிப் போயிட்டேன்.”

“கிரிஜா இன்னும் சிறையில்தான் இருக்கானா?”

“அவன் போலீஸ் கிட்டயிருந்து தப்பிச்சு தற்கொலை பண்ணிகிட்டான். இரும்புப் பாலத்துக்குக் கீழ தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து தற்கொலை பண்ணிகிட்டான்.”

முர்ளிக்குத் தலையே சுற்றுவது போலிருந்தது.

சியாவின் படுக்கையில் அமர்ந்தான்.

“சியா உனக்கு... உனக்கும் அந்த நோய் இருக்கா?”

“தெரியலை. நான் என் உடல் ஆரோக்கியத்தை இன்னும் பரிசோதிச்சுக்க போகலை.”

“நீ என்னை நெருங்க விடமாட்டேன்னு சொல்ற. ஏதோ தப்பாப் படுது எனக்கு.”

“உன்னோட சரிக்குச் சரியா விவாதம் பண்ண எனக்கு நேரமில்லை முர்ளி.”

தனது தையல் எந்திரத்தின் முன் அமர்ந்து மீண்டும் இயந்திரத்தை ஓட்டத் தொடங்கினள். சக்க ச்க்க சக்க சக்.

“இனிமேல் உன்னால எனக்கு பிரயோஜனம் இருக்காதுன்னு நினைக்கறேன். வேற ஆளைப் பார்க்க வேண்டியதுதான்.”

அந்த இயந்திரத்தின் ஒலியையும் தாண்டி அவளுடைய குரல் ஒலித்தது.

•

மெஹந்தி லக்ஷ்மிக்கு அவன் திரும்பி வந்ததில் ரொம்ப சந்தோஷம். அவன் புத்தகங்கள் மேலே தனது விரல்களை ஓடவிட்டாள். ஆனால் முர்ளிக்கு அது எரிச்சலை மூட்டியதால் பேசாமல் இருந்தான்.

“ஒரேடியா விரட்டிட்டாளா அவ உன்னை?” அவள் குசலத்தில் சந்தோஷம் மிகுந்திருந்தது.

“நிறுத்தறியா?” முர்ளி சீறினான். அதன் பிறகு சியா புராணத்தை அவள் எடுக்கவே இல்லை.

•

மசூதியில் முழங்கிய தொழுகைச் சத்தம் அங்கிருந்த எல்லா இல்லங்களிலும் அலறியது. முர்ளி மொட்டை மாடியில் இருந்த கைப்பிடிச் சுவரில் அமர்ந்து வானில் பறந்து கொண்டிருந்த பலவிதமான காற்றாடிகளை பார்த்துக்கொண்டிருதான்.’ வாயில் மௌத் ஆர்கனை வைத்துப் பாடிக்கொண்டே இருப்பான்; சிலநேரம் சும்மா இருப்பான். தெருக்களில் வாடிக்கையாளர்களின் கூட்டம் சாரி சாரியாக வரத் தொடங்கியது. அவன் காறி உமிழ்ந்துவிட்டு தனது விரல்களை அடர்த்தியான சிகைக்குள் நுழைத்துக் கொண்டான்.

முர்ஷிதாபாதிலிருந்து வந்த அந்த வயதான விலைமகள் மூர் பீவி தனது மகனின் நெற்றியில் கரித்துண்டால் கெட்ட ஆவிகளை விரட்ட கோடு போட்டாள்.

“நீ ஏன் ஒரு கல்யாணம் பண்ணிக்கக் கூடாது முர்ளி?” என்று அவள் முர்ளியைக் கேட்டாள்.

“மூர் பீவி என்னை யாரு கல்யாணம் பண்ணிக்க வருவாங்க?” என்று திருப்பிக் கேட்டான்.

“யாரு மாட்டேன்னு சொல்லுவாங்க?”

“இது என்ன பதில்?” என்று கேட்ட முர்ளி ஆகாயத்தின் உள்ளே இளஞ்சிவப்பு நிறத்தில் வர்ணம் மாறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். “அதோ அங்கிருந்து ஏதாவது வந்தால்தான் உண்டு” என்று ஆகாயத்தைக் காட்டிவிட்டு கீழே இறங்கிப் போனவன் அருகில் இருந்த சந்தில் ஒரு பெண் நாய் குட்டி ஒன்றை ஈன்று கொண்டிருக்கும் இடத்திற்கு அருகில் போனான். சுற்றி நான்கைந்து குட்டிகள் தாய் ஈனுவதைப் பார்த்தபடி சுற்றி சுற்றி வந்தன.

“போங்க போங்க, உங்க வீட்டுக்குள் போங்க” என்று அவைகளை விரட்டிவிட்டு சுன்னா கல்லியை நோக்கி விரைந்தான். சியா அவனைப் பார்த்து ஆச்சரியமடையவில்லை.

“சியா, நீ உன் விபசாரத் தொழிலை விட்டுவிடு. நான் உன்னை திருமணம் பண்ணிக்கறேன்” என்றான் திடுதிப்பென்று.

“ஆமாம், உன்னைக் கட்டிக்கலைன்னா நான் செத்துப் போயிடுவேன் பாரு” என்றாள் சியா ஆற்றாமையில்.

“எது எப்படியானாலும் இந்த கேவலமான தொழிலை நீ விடணும். உன்னைச் சுத்தி நோய் பரப்புவதை நான் அனுமதிக்க மாட்டேன்.”

“எனக்கு நோய் கண்டிருக்குன்னு யார் சொன்னாங்க? நான் தொழிலை விட்டுட்டா அப்புறம் என் கதி? எனக்கும் என் பிள்ளைகளுக்கும் யாரு சோறு போடுவாங்க?” என்றவள் சிரித்துக்கொண்டே, “சியா துல்லாரியோட மாமாவா?” என்று இரண்டு அர்த்தத்தில் கேட்டாள்.

“நிச்சயமா, நான் உங்களை காப்பாத்துவேன். முதல்ல நீ ரத்தப் பரிசோதனைக்கு வா.”

இரண்டொரு நொடிகள் அவள் மௌனமாக நின்றாள். பிறகு பைத்தியம் பிடித்தவள்போல அலறத் தொடங்கினாள்.

“என்னை விட்டுப் போயிடு. நான் உன்னைப் பார்க்க விரும்பலை. போயிடு போயிடு...” என்று பைத்தியம்போல கூச்சலிட்டாள்.

அவளுடைய அந்தப் பைத்தியக்கார வெறியில் சியா துல்லாரி முர்ளி கைகளில் மின்னிய கத்தியை கவனிக்கவில்லை.

•

முர்ளி நாஸ்கருக்குப் பைத்தியம் பிடித்த விஷயம் சோனாகச்சி முழுவதும் காட்டுத் தீ போல பரவியது. மெஹந்தி லக்ஷ்மி பெண் நாய் புதிதாய் ஈன்ற குட்டிகளைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு வந்துவிட்டாள். அவைகளுக்குப் பால் ஊட்டி அவள்தான் வளர்க்கிறாள். சேதி கேள்விப்பட்டதும் அவள் முர்ளியைப் பார்க்க ஓடினாள். ஆனால் அவன் அவளை அடையாளம் கண்டுகொள்ளவே இல்லை. அவன் பின்னால் இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் இருந்தார்கள். அவர்கள்தான் சுன்னா கல்லியில் இருந்த சியா துல்லாரியைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டதைக் கூறினார்கள். அவனை மற்ற தரகர்களின் உதவியுடன் பிடித்துக்கொண்டு போனார்கள். ஆனால் அவன் சில மாதங்களில் திரும்பவும் வந்து விட்டான். மெஹந்தி லக்ஷ்மியின் மாடத்தில் அவன் ஒரு தகர ஷீட்டினால் ஒரு தடுப்பு போட்டுக்கொண்டு அங்கேயே இருக்கத் தொடங்கினான். அவனது சிடுக்கு விழுந்த தலைமுடியும், திருத்தப்படாத தாடியும் கோரமாக தோற்றமளித்தன. சிலுவையில் அறையப்படப் போகின்றவனைப்போல ஒரு தோற்றம்.

எப்போது பார்த்தாலும் சுவரின் மீது சாய்ந்துகொண்டு போவோர் வருவோரைப் பார்த்து, “அங்க போகாதீங்க, அங்க போகாதீங்க… அது கிட்டயிருந்து விலகி இருங்க. அங்கே கொட்டும் விஷத் தேள்கள் நிறைய இருக்கு…” என்று அலறிக் கொண்டிருந்தான்.

மெஹந்தி அவன் இருக்கும் இடத்திற்கு அவனுடைய புஸ்தகங்களை அனுப்பி வைத்தாள், அப்போதாவது அவனுக்குப் பழைய ஞாபகங்கள் திரும்பாதா என்று அவளுக்கு ஒரு நப்பாசை. புத்தகங்கள் வைத்த இடத்தில் அப்படியே இருந்தன. அவன் அவற்றைத் திறந்துகூட பார்க்கவில்லை. ஒருநாள் அவற்றை எல்லாம் திரட்டி திறந்திருந்த சாக்கடை ஒன்றில் கொண்டு கொட்டினான்.

ஒரு பிச்சைக்காரன் சாக்கடை அருகில் அமர்ந்து அவன் புஸ்தகங்களைக்

கொட்டுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். குனிந்து அந்தப் புத்தகங்களை எடுக்கப் போனபோது, “போட்டுடு. அவை உனக்கு வேணாம். அவை எல்லாம் விஷத் தேள்கள்” என்று முர்ளி பயங்கரமாகச் சிரித்தான்.

•

தேவாலயத்திலிருந்து இறந்தவர்களின் ஆவிகள் வெளியேறுவதற்கு ஓடிக் கொண்டிருந்தன.

கிரிஜா சங்கரின் ஆவி தனது கரத்தை நீட்டி அவர்களைத் தடுத்தது. “நகர்ந்து போங்க” என்றது. ஆவிகள் கேட்காமல் விலகி ஓடிக்கொண்டே இருந்தன. தூரத்தில் வேறு ஓர் ஆவியைப் பார்த்துவிட்டு கிரிஜாவின் ஆவி, “அதோ சியா…” என்றது.

சியாவின் ஆவி ஒரு குறுகலான சுவரின் மீது தனது தலை முடியை விரித்துப் போட்டபடி நடந்து வந்தது, “என்னைப் பாரு” என்றாள் அவள். “பாரு, நான் என்ன கத்துகிட்டிருக்கேன்னு” என்று சுவரில் கையை விட்டு விட்டு நடந்து வித்தை காட்டியபடி வந்தாள்.

அவள் நிர்வாணமாக இருந்தாள்; அழகாகவும் இருந்தாள். பச்சை நிறக் கண்கள், மார்பில் பால் வழிந்து கொண்டே இருந்தது. அவள் கிரிஜாவை அடையாளம் கண்டுகொள்ள மறுத்தாள். கிரிஜா சங்கர் தனது நீண்ட நகங்களால் அவள் கண்களைக் கீறினான்.

“எதுக்கு?” சியாவின் ஆவி தடுத்தது.

ஆனால் கிரிஜா சியாவின் ஒரு கண்ணைப் பிடுங்கினான். அவளுடைய இன்னொரு விழி எவ்வித அக்கறையும் காட்டாமல் கண் சிமிட்டிக்கொண்டே இருந்தது.

“என் குழந்தைகளை விட்டுட்டு ஏன் வந்தே?”

“நாம் இல்லாமல் அவர்கள் சந்தோஷமாகவே இருக்கிறார்கள்.” சியாவின் ஆவி பதிலளித்தது. “முர்ளி தற்கொலை செஞ்சுகிட்டான். அவனோட ஆவி கூட இப்போ கூரை மேலதான் இருக்கு” என்று சியா கூறினாள்.

எல்லா ஆவிகளும் கூரையில் தொங்கிக் கொண்டிருந்தன. வானில் நட்சத்திரங்கள் மங்கலாக மின்னிக் கொண்டிருந்தன. அந்த மங்கிய ஒளியிலும் முர்ளி ஒரு புத்தகத்திற்குள் தலையை விட்டுக்கொண்டு அமர்ந்திருந்தான்.

அவர்களைப் பார்த்தான். ஒரு சீற்றத்துடன் ஒதுக்கித் தள்ளினான். நட்சத்திரங்களின் மங்கிய ஒளியில் உறங்கிக் கொண்டிருந்த அந்த நகரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இந்த நகரத்தைப் பார்த்தால் உங்களுக்கு வாந்தி வரவில்லை? காறித் துப்ப வேண்டும் என்று தோன்றவில்லை?"

"நீ என்ன நினைக்கறே?" மற்ற ஆவிகள் அவனைக் கேட்டன.

"வாயை மூடுங்க" அதட்டி விட்டு முர்ளி ஒரு மௌத் ஆர்கனை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். அந்த ஒலியானது அந்த நகர வீதிகளில் கண்ணுக்குத் தெரியாத ஓர் உருவம்போல பரவியது. தங்கள் வேலைகளில் மூழ்கியிருந்த அந்த மக்கள் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவர்களுக்கு வேறு பல முக்கிய விஷயங்கள் இருந்தன.

(உருது மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ஜாவீத் காஸி)

# 12. சந்தை விலை

## நபேந்து கோஷ்

“ந ல்லவேளை பிழைத்தேன். இப்படியா பயமுறுத்துவீங்க?” சாயா கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

“இதில் பயப்பட என்ன இருக்கு?” பல்ராம் சிரித்தான். “நான் உள்ள நுழையும்போது நீ அடுப்பு முன்னால் சிலை போல ஏதோ யோசனையில் மூழ்கியிருந்த. நான் என்ன அப்படிப் பண்ணினேன்? என்னம்மா ஏன் இப்படி சிலை போல இருக்கன்னு கேட்டேன். அதுவும் சத்தமா கூட கேட்கலை. கொஞ்சம் குரலை மாத்திக் கேட்டேன். உயிரே போனா மாதிரி துள்ளி குதிக்கற. கையில் இருந்த பாத்திரத்தையும் அடுப்பில் கவிழ்த்துட்ட. நல்ல வீராங்கனையோடதான் நான் குடித்தனம் பண்றேன்.”

“நான் கோழைதான் ஒத்துக்கறேன். சரி ஆள் பேர் தெரியாத ஊரில் தனியா இருக்கும்போது அடையாளம் தெரியாத குரலைப் பக்கத்துல கேட்டா நீங்க பயப்பட மாட்டீங்களா?” சாயா மண் அடுப்பின் அருகில் அமர்ந்தபடி கேட்டாள். இப்போது அவள் நிஜமாகவே அடுப்பை அணைத்தாள்.

கனன்று கொண்டிருந்த கங்குகளிலிருந்து கிளம்பிய பிரகாசம் அவள் முகத்தைச் செந்நிறமாக மாற்றியது. நெற்றியின் மீது வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன. பல்ராமிற்கு அவள் மேல் இருந்த ஈர்ப்பு இன்னும் அதிகமானது. தான் வாங்கி வந்த மளிகைச் சாமான்களை எடுத்து வைக்கக் கீழே குனிந்தபோது பல்ராம் சிரித்துக் கொண்டான்.

“சரி சரி. என் மேலயும் தப்பு இருக்கு. தப்பா எடுத்துக்காத” என்று

பல்ராம் கெஞ்சும் குரலில் கூறினான். சாயாராணி பதிலே கூறவில்லை.

“ஓ சாயாராணி.”

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பல்ராம் அவளை நெருங்கி அவள் முகத்தைத் திருப்பிப் பாடத் தொடங்கினான்.

“ராதே உனக்குக் கோபம் ஆகாதடி... ராதே உனக்குக் கோபம் ஆகாதடி

காதலியே தவறேது செய்தேன் பிரிய ராதே உனக்குக் கோபம் ஆகாதடி...”

அதற்கு மேலும் சாயாவால் உர்ரென்று இருக்க முடியவில்லை. புன்னகைப் பூக்களை வாரி இரைத்தாள்.

“திருப்பியும் பாட்டா? நீங்க நல்ல நடிகர்தான். பாடினது போதுமே.”

“நான் நல்லா பாடுவதை உன்னால் மறுக்கவே முடியாது. இதோ பார். ஒட்டுமொத்த கறிகாய் மார்க்கெட்டும் உன் காலடியில். உருளைக் கிழங்கு, தக்காளி, வெள்ளரிக்காய், பீன்ஸ், மிளகாய், எலுமிச்சை, கெளுத்தி மீன்...” அவன் அடுக்கிக்கொண்டே போனான்.

“போதும் போதும். எனக்கும் கண் இருக்கு. இன்னியிலிருந்து உங்களை மார்க்கெட்டிங் மேனேஜராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கறேன்” என்றாள்.

“ஓர் உறுதிமொழி எடுத்துக் கொள்கிறேன் மேடம். என்னுடைய இந்த வேலை பறிபோனால் கூட இப்படி ஒரு அழகான எஜமானியை இழக்க விரும்பமாட்டேன்.”

“கடவுளே! எனக்கு இப்படி ஒரு வெட்கங்கெட்ட மேனேஜரா?” சாயாராணி சிணுங்கினாள்.

“உன்னோட மார்க்கெட் பையைத் தூக்கிட்டு வந்ததில் என் கணுக்காலில் உயிர் போவது மாதிரி வலி” என்று பொய்யாக வேதனைப்பட்டவன், “ஒரு கப் டீ குடிக்காம இனி ஒரு வேலை கூட ஓடாது” என்றான்.

“நிச்சயமா உங்களுக்கு டீ போட்டுத் தரேன். அதுக்கு முன்னால கணக்கு

பார்த்திடலாமா?” என்றாள் சாயா ராணி.

பாதி சாய்ந்த நிலையில் பல்ராம் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். “விலை எல்லாம் எப்படி ஏறிப் போயிருக்கு தெரியுமா?” என்று புகையை வெளியில் விட்டபடி கூறினான். “உருளைக்கிழங்கு எட்டணா, காலி ஃபிளவர் ஆறணா, மீன் கிலோ மூணு ரூபாய் ஐம்பது பைசா, ஒரு மூட்டை அரிசி இருபத்தேழு ரூபாய்” என்று கணக்குச் சொன்னான்.

“கடவுளே. தினம் தினம் விலைவாசி மேலதான் போயிட்டிருக்கு.”

“நிச்சயமா நாமதான் முன்னேறும் நாடு. இல்லியா? அதனாலதான்.”

“முன்னேறும் நாடா? எப்படி?”

“உனக்கும் பொருளாதாரத்திற்கும் காத தூரம். என் இனிய கண்மணி முன்னேறும் நாடு என்றால் மக்கள் கைகளில் அதிகமாகப் பணப் புழக்கம் இருக்கிறது என்று பொருள். பணம் அதிகமாகப் புழங்கினால் பொருட்களின் விலையும் அதிகமாவது இயற்கை.”

“இருக்கட்டும். ஆனா இந்த மாதிரி விலைவாசி ஏறிக்கிட்டே போனால் மனித உயிர்களின் மதிப்பு கீழே போயிக்கிட்டே இருக்கும்” என்றாள்.

“உயிரின் மதிப்பு கீழே போனால் அரசாங்கத்திற்கு என்ன கவலை? நமக்கு முன்னேற்றம்தான் முக்கியம். அதில்தான் நமது தேசத்தின் மேன்மை அடங்கியிருக்கிறது. மனித உயிர்களின் மதிப்பா பெரிது நமக்கு?”

“போங்க. நீங்க பேசும் எதுவும் என் மண்டையில் ஏறலை.”

“எதுக்கு வருத்தப்படற? பொருளாதாரத்தை ஜீரணிக்க உனக்கு இன்னும் நிறையக் காலம் இருக்கு. போ போயி எனக்கு ஒரு கப் டீ போட்டுக் கொண்டுவா” என்றான்.

பொய்யான கோபத்தை முகத்தில் வரவழைத்துக்கொண்டு சாயா தேநீர் போடுவதில் மும்முரமானாள். கறிகாய்களை எடுத்து அடுக்கி வைத்தாள். மீனைப் பெரிய பாத்திரத்தில் நீர் ஊற்றிக் கழுவத் தொடங்கினாள். பிறகு அதன் செதில்களை அகற்றத் தொடங்கினாள். பக்கத்து வீட்டிலிருந்து

குழந்தை அழும் சப்தம் கேட்டது. எங்கோ தொலைவில் ரேடியோவிலிருந்து சினிமா பாடல் ஒலித்தது. இரண்டு மூன்று சிட்டுக் குருவிகள் வீட்டு ஜன்னல் திட்டையை விளையாட்டு மைதானமாக மாற்றி விளையாடிக் கொண்டிருந்தன.

“இந்தக் கால்கிலோ மீனுக்கு என்ன விலை?” சாயா அவனிடம் கேட்டாள்.

பல்ராம் வாய்விட்டுச் சிரித்தான். “இதைத்தான் நான் அந்த மீன்காரிகிட்டே கேட்டேன். கொஞ்சம் கருணை காட்டும்மா. அரை கிலோ மீனுக்கு விலை சொல்லாதம்மா கால் கிலோவுக்குச் சொல்லுன்னு கேட்டேன். என் பெண்டாட்டிக்கு மீன் விலையெல்லாம் நல்லா தெரியும்னு சொன்னேன். ஆனா அவ ஒத்துக்கவே இல்லை.”

“உங்களுக்கு என்னைப் பார்த்தா மீன்காரி மாதிரியா இருக்கு?” என்று சிணுங்கிய சாயா அக்கறையுடன் தொடர்ந்தாள். “அப்புறம் எப்படி சாதாரண ஜனங்கள் பொழப்பு நடத்த முடியும்? எங்கம்மா சொல்லியிருக்கா. அவள் கல்யாணம் ஆகி அப்பா இருக்கும் கிராமத்திற்கு வந்தப்போ - உங்களுக்கும் தெரியும் - ஜேசூர் மாவட்டத்தில் இருக்குதே கோரஜாபூர் கிராமம் அது, ரெண்டு கிலோ வஞ்சிரம் வெறும் மூணு அணாவுக்கும், நாலணாவுக்கும் கிடைக்குமாம். அதுவும் விலை அதிகமா இருந்தா குளத்தில் இறங்கிக் கட்டியிருக்கும் வேட்டியைத் தண்ணியில வீசினா கொறஞ்சது மூணு நாலு கெண்டையாவது சிக்குமாம். தேவையான மீனை எடுத்துகிட்டு மத்ததை வீசிட்டு வந்துடுவாங்களாம்.”

பல்ராம் தலையணையில் சாய்ந்திருந்தான். அவன் பார்வை அவள் மேல் நிலைகுத்தி நின்றது. சாயா குளித்து விட்டாள். ஈரமான கூந்தலை ஒரு சின்னக் கோடாலி முடிச்சுப் போட்டிருந்தாள். பாதங்களின் ஓரங்களில் செம்பஞ்சுக் குழம்பு அழகிய கோடுகளைத் தீட்டியிருந்தாள். அவளுடைய நீள் சதுர முகம் முழுமையான நிறைவுடன் காணப்படவில்லை. இருந்தாலும் அவளிடம் ஓர் ஈர்ப்பு இருந்தது. வடிவான உடல் போதை ஊட்டியது. பாவம்! அவள் மேல் பரிதாபப்பட்டான். அவள் கூறுவதில் கவனம் செலுத்தினான். சாயா ஆரம்பத்தில் ஒரு பேசா மடந்தையாகவே இருந்தாள். இப்போது அவள் ஆனந்தமே வார்த்தைகளைக்

கொட்டுவதில்தான் இருக்கிறது. தாவித் தாவி படிகளில் ஏறுவது மாதிரி, ஒவ்வொரு கண்ணியாகக் கோர்த்துக் கோர்த்து மாலை தொடுப்பதைப்போல அவள் எவ்வளவு மடமடவென்று தனது எண்ணங்களை வார்த்தைகளால் கோர்க்கிறாள்.

“நான் ஏற்கெனவே சொல்லிட்டேனா? தெரியலை. எங்கள் கோயில் குருக்கள் பட்டாச்சாரியாவோட பொண்ணு கல்யாணத்தின்போது நடந்த விஷயம். அவரு என்னோட தாத்தாவிடம் வந்து ஒற்றைக் கண் கெண்டை ஒண்ணு கல்யாணத்துக்கு வேணும்னு கேட்டாரு. தாத்தா ஒரு பெரிய கெண்டையைப் பிடிச்சு அதை பட்டாச்சாரி பொண்ணு கல்யாணத்துக்குப் பரிசா கொடுத்துட்டாரு. அந்த பட்டாச்சாரியாரோட பேரன் ஒருத்தனோட எனக்குப் பழக்கம். அவன்தான் இதை எனக்குச் சொன்னான். நாங்க பேசிகிட்டு இருக்கும்போது அவன் என்ன சொன்னான்னா...”

“சாயா.”

“ம்ம்.”

“கெட்டில் கொதிக்குது.”

“ச்சை மறந்துட்டேன். இருங்க.” சாயா தலையில் அடித்துக்கொண்டு தேநீர் போடக் கிளம்பினாள். அவனுக்கு ஒரு கோப்பை தேநீர் கொடுத்துவிட்டு சமையல் வேலையில் மும்முரமானாள்.

பல்ராம் அறையின் கூரையின் மேல் பார்வையை ஓடவிட்டான். தனி அறை. வெளியில் ஒரு ஒட்டுத் திண்ணை. காசி நகரில் சின்னச் சந்தில் கூட வாடகைக்கு வீடு தேடிப் போனால் குறைந்த வாடகையே இருபது ரூபாய். மிகவும் சாதாரண அறைதான். ஆனால் சாயாவின் கை பட்டதில் மாளிகை போல மாறிவிட்டது. இங்கு குடித்தனம் வந்து கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் ஆகின்றன. குடி வரும்போதே ஒரு வீட்டுக்குத் தேவையான சகல சாமான்களோடு வீடு கிடைத்தது. மரக்கட்டில், பிரம்பு நாற்காலி, படுக்கை, தலையணைகள், கொசு வலை, சமையல் பாத்திரங்கள், கோப்பைகள், குவளைகள் என்று குறைவில்லாமல் முழுமையான வீடாக இருந்தது.

பல்ராம் சாயாவைப் பார்த்தான். அவள் மீண்டும் தனது எண்ணங்களில் மூழ்கிக் கிடந்தாள்.

“எதைப் பற்றி பலமான யோசனை சாயா?” என்று கேட்டான்.

அவள் முகத்தில் சட்டென்று ஒரு புன்னகை மலர்ந்தது. “ஒண்ணுமில்லை.” கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“ஏய்... பொய்தானே சொல்ற? நிஜமா சொல்லு, இப்போ நீ வீட்டைப் பத்திதானே நினைச்சுகிட்டு இருக்க?”

“இல்லவே இல்லை.”

“இங்க வா.”

சாயா சிரித்துக்கொண்டே அவன் அருகில் சென்றாள்.

“சொல்லு.”

அவள் அவன் அருகில் அமர்ந்தாள்.

“இன்னும் கிட்ட வா.”

“போதும். நான் சமைக்கணும்.”

“சரி எனக்கும் அது தெரியும். ஆனா உன் மனசில் என்ன நினைச்சுகிட்டு இருக்க அப்படிங்கறதை என்னிடம் சொல்லு.”

“பெருசா ஒண்ணுமில்லை. இப்போ நமக்கு அவசியமானது உங்களுக்கு ஒரு வேலை. அதைப் பத்திதான் யோசிச்சுகிட்டு இருந்தேன். உங்களுக்கு ஒரு வேலை கிடைச்சா நாம இதை விட நல்ல வீட்டுக்குக் குடி போகலாம். பக்கத்து வீட்டுக்காரங்க அவ்வளவு நல்லவங்களா தெரியலை.”

“ஏம்மா அப்படிச் சொல்ற? யாராவது எதுனா சொன்னாங்களா?”

“இல்லை, ஆனா அந்த நாலாம் நம்பர் வீட்டுக்காரி அன்னிக்கு என்னைப் பார்த்து ஜோடிப் புறாவா நீங்க திரிவதைப் பார்த்தால் எனக்குப் பொறாமையா இருக்குன்னு நேரடியா சொல்றா.”

பல்ராம் சிரித்தபடி, “அதிலே என்ன தவறு இருக்கிறது?” என்று கேட்டான்.

சாயா முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு, “சரியான பூஜ்யம் நீங்க. ஒரு சின்னக் கீற்று கூட இங்கே மின்ன மாட்டேங்குது” என்று அவன் தலையைத் தொட்டுக் கூறினாள்.

‘பாவப்பட்டவள்’ மனதிற்குள் பல்ராம் நினைத்துக் கொண்டான். ‘அடைபட்ட பறவை மீண்டும் வானில் பறக்க ஆசைப்படுகிறது.’

“ஓகே” என்று கூறிய பல்ராம், “நாம வேற வீடு பார்க்கலாம்” என்றான்.

சாயா அவன் மார்பில் சாய்ந்தபடி, “வேலையைப் பத்தின தகவல் எப்போ தெரிய வரும்? ஒரு வாரம் ஓடியே போச்சு” என்றாள்.

பல்ராம் முகத்தில் சட்டென்று இருள் சூழ்ந்தது. சற்று யோசித்துவிட்டு, “இன்னும் ரெண்டு வாரமாவது காத்திருக்கணும். ஒரே ராத்திரியில் வேலை கையில் வந்து குதிராது” என்று பதில் கூறினான்.

“அது வாஸ்தவம்.” சாயா உடனே பதில் கூறினாள். “இன்னும் ஒரு மாசம் ஓட்டியாகணும். கையில நூத்தம்பது ரூபாய்தான் இருக்கு. சரியா?”

பல்ராம் தலையாட்டினான்.

“ஐயோ அடுப்புல சட்டி தீயுது.” துள்ளி எழுந்த சாயா ஓடிப் போய் விறகின் நெருப்பைத் தணித்து பாத்திரத்தைக் கரண்டியால் கிளறினாள்.

“பாருங்க, உங்களால எல்லாத்தையும் மறந்துட்டு நிக்கறேன்” என்று மீண்டும் ஒரு முறை காய்கறிகளைக் கிளறிவிட்டாள். பல்ராம் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான்.

“தூங்கறீங்களா?”

“இல்லை” பல்ராம் கண்களைத் திறந்தான்.

“அப்புறம் வேற என்ன யோசனை?” சாயா அவனது காலடியில் அமர்ந்தாள்.

“பாருடா திருப்பியும் பக்கத்துல வந்து உட்காருவதை. இன்னிக்கு மத்தியானம் கறி சோறா? வெறும் சோறா?” என்று கேட்டான்.

“ஜோ ஜோ என் தங்கம். என் பட்டு. பசிக்குதா? முகம் வாடிப்

போயிருக்கே...” அவன் பாதங்களை வருடியபடி கேட்டாள். “என் தெய்வத்துக்கு என் மேல் கோபம் இல்லையே?”

பல்ராம் சிரிக்கவில்லை.

இன்னும் அவன் அருகில் போன சாயாவின் முகத்தில் கலவரம் படர்ந்திருந்தது.

“என் மேலே சத்தியம் பண்ணி சொல்லுங்க.”

“என்ன சொல்லணும்?”

“உங்க மனசை பிடிச்சு வாட்டும் கவலை என்னன்னு?”

“உனக்கு எல்லாம் தெரிஞ்சாகணுமா?”

“ஆமாம் நிச்சயமா.”

“தேவையில்லை...”

“கண்டிப்பா தெரிஞ்சாகணும். இல்லை என்றால்...”

பல்ராம் சாயாவின் முகத்தைப் பார்த்து, “இந்த வேலை விஷயமாதான் அவங்களை நான் போன வாரம் போய்ப் பார்த்தேன்.”

“என்ன ஆச்சு?”

“ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேக்கறாங்க. ஹெட் கிளார்க்குக்கு வாய்க்கரிசி போடவாம். நான் காசு கொடுக்காததால் வேலை எனக்கு இல்லை. கையில் காசு இருந்திருந்தா அன்னிக்கே அந்த வேலையில் சேர்ந்திருப்பேன்.”

“ஆயிரம் ரூபாயா?” சாயாவின் முகத்தில் சுரத்தே இல்லை. “உங்களால் கொடுக்க முடியலேன்னா?”

“அவ்வளவுதான். வேலை இல்லை. பணம் கொடுக்கும் இன்னொருத்தனுக்கு அந்த வேலை கிடைக்கும். அதுக்குதான் ரெண்டு வாரம் டைம் கேட்டிருக்கேன். பார்க்கலாம்.”

“எப்படி அவ்வளவு பெரிய தொகையைத் திரட்டுவீங்க?”

“தெரியவில்லை.” பெருமூச்சு விட்ட பல்ராம், “எங்கேயாவது திருடவோ, கொள்ளையடிக்கவோ போனால்தான் உண்டு” என்றான்.

“பைத்தியம் மாதிரி உளறாதீங்க.” சாயா கடிந்துகொண்டாள்.

“பின்னே என்னை என்ன பண்ணச் சொல்ற?” ஒரு நக்கலான சிரிப்பு அவன் உதட்டில் நெளிந்தது.

“என்னிடம் அட்டிகை, ஒரு ஜோடி வளையல், புதுத் தோடு, கல்யாணத்தன்னிக்கு போட்ட மோதிரம் இவ்வளவும் இருக்கு” என்றவள், “அதை வித்து பணத்தைக் கட்டுங்க.”

“என்ன சொல்ற சாயா?”

“என்ன செய்யணுமோ அதைத்தான் சொல்றேன். நகையை விற்கணுமேன்னு யோசிக்காதீங்க. வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டா வேற புது நகை வாங்கிக்கலாம். உங்களுக்கு வேலை கிடைக்கும் வரை அந்த நகையால் எனக்கு என்ன பிரயோஜனம் சொல்லுங்க.”

“வாயை மூடு. இன்னொரு தடவை இப்படிப் பேசாதே. உனக்கு சீதனமா போட்ட நகையை விற்கணும் என்ற பேச்சுக்கே இடமில்லை.” அடித்துக் கூறிவிட்டு பல்ராம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

சாயா அதற்குப் பிறகு வாய் திறக்கவில்லை. பல்ராம் மன வருத்தத்தில் இருக்கும்போது அவனை மீறிப் பேசவும் முடியாது. ஆனால் இது அவனுக்கு ஏன் புரியமாட்டேன் என்கிறது? அவனுக்கு ஒரு வேலை இல்லையென்றால் அவர்களால் குடித்தனம் செய்ய முடியுமா? சாயா அழத் தொடங்கினாள். அவளுடைய அழுகை அவனை அசைத்தது. “ஏம்மா அழற?” என்றான்.

இப்போது சாயா முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டாள்.

பல்ராம் அவள் அருகில் சென்று அவள் தோள் தொட்டு, “அழாத சாயா” என்றான்.

“என் கிட்ட பேசாதீங்க.”

“என் வேதனை என்னோடன்னு விடேன்.”

“அது எப்படி? உங்களுக்கு ஒரு கஷ்டம்னா அது எனக்கு இல்லையா? மாசச் சம்பளம் இல்லாம சமையல்கட்டில் அடுப்புப் பத்த வைக்க முடியும்னு நினைக்கறீங்களா? தங்க ஆபரணமா வயிற்றை நிரப்பும்?” கேட்டுவிட்டு மீண்டும் பெரிதாக அழத் தொடங்கினாள்.

“பாருடா... திருப்பியும் அழ ஆரம்பிச்சுட்டா...” என்று கேலி பண்ணிய பல்ராம் பாடத் தொடங்கினான்.

“ஏன் அழுதாய் ஏன் அழுதாய்?

என் உயிரே ஏன் அழுதாய்?

நான் அழுது ஓய்ந்ததற்கு

நன்றி சொல்லவோ அழுதாய்?”

அவன் நீட்டி முழக்கிப் பாடியதைக் கேட்டு சாயா கண்ணீருக்கு நடுவில் சிரித்தாள்.

“சும்மா போங்க. எப்பப் பாரு ஒரு பாட்டு. இன்னொரு தடவை இப்படி நாடகத்தனமா பாடினா எனக்கு கோபம் வரும்.”

“நடிகனா இருப்பது தப்பா?”

“என் கேள்விக்கு பதில் சொல்லுங்க.”

“என்ன பதில்?”

“புரியாத மாதிரி கேட்காதீங்க. நான் நகைகளைப் பத்திக் கேட்கறேன்.”

“இங்க பாரு சாயா.”

“தலையைச் சுவத்தில் முட்டிகிட்டாலும் முட்டிப்பேனே தவிர நீங்க சொல்வதைக் கேட்க மாட்டேன். இந்த வேலை உங்களுக்கு அவசியம். அவ்வளவுதான்.” காதுகள் இரண்டையும் கைகளால் பொத்தியபடி கூறினாள்.

“அப்புறம் உன் விருப்பம்.” பல்ராம் தலையைத் திருப்பிக் கொண்டான்.

உடனே சாயா தனது இரண்டு கரங்களை விரித்து அவனைத் தன் பிடிக்குள் கொண்டுவந்து ஆரத் தழுவி, “என் கண்ணு என் ராஜா” என்று கொஞ்சினாள்.

“ஆனா ஒண்ணு சாயா…” அவள் கண்ணீரைத் துடைத்தபடி பல்ராம் கூறினான்.

கொஞ்சம்கூட தயங்காமல் அவன் உதடுகளைத் தனது இதழ்களால் முத்தமிட்டு மூடி, “போதும். இனிமே ஆனா ஆவன்னா எதுவும் கிடையாது” என்றாள்.

“இன்னிக்கு மத்தியானம் நாம ரெண்டு பேரும் நேரா நகைக்கடைத் தெருவுக்குப் போறோம். நகையை வித்துப் பணத்தை வாங்கறோம். நீங்க நாளைக்கே இந்தப் பணத்தைக் கொடுத்து வேலையை வாங்கறீங்க. புரிஞ்சுதா?” சாயா அவனுக்கு மறுபேச்சு பேச சந்தர்ப்பமே அளிக்கவில்லை. “ஒண்ணும் சொல்ல வேண்டாம்” என்று உறுதியாகக் கூறியவள், “நகையை வித்ததுக்கப்புறம் நாம எங்கயாவது ஊர் சுத்திட்டு வருவோம். ஒரு சினிமாவுக்குப் போயிட்டு வருவோம். சாயந்திரம் வெளியில் சாப்பிடுவோம். அவ்வளவுதான் சொல்லிட்டேன். என் பேச்சுக்கு மறுபேச்சு இல்லை. இப்போ போயி குளிச்சிட்டு வாங்க. சீக்கிரம்…” என்று அவனை விரட்டினாள்.

ஒரு சமத்துக் குழந்தையைப்போல பல்ராம் எழுந்தான். அவளுடைய விருப்பத்திற்கு எல்லாம் அடிபணிந்தான். வெளிச்சம் குறைவாக இருந்த அந்தக் காசி நகரச் சந்தில் அன்பு களிநடம் புரிந்தது. அந்தக் களிநடனத்திற்குக் காதல் என்று பெயர். பல்ராம் குளித்துவிட்டு வந்ததும் அவளே அவன் தலையைத் துவட்டி வகிடு எடுத்து தலை வாரி விட்டாள். சாப்பிடும்போதும் ஒருவர் இன்னொருவருக்கு ஊட்டி விட்டுச் சாப்பிட்டனர். பல்ராம் அவளைக் குஷிப்படுத்த தான் ரசித்த அல்லது தான் நடித்த ஜாத்ரா நாடகங்களிலிருந்து ஒரு சில வசனங்களை நடித்துக் காட்டினான்.

பக்கத்து வீட்டுக்காரி இவர்கள் காதல் மொழியைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். அவர்களின் கொஞ்சல் மொழியில் ஒன்றிரண்டு அவள் காதில் விழுந்திருக்கும். ஆனாலும் அவர்களின் காதல் நிலையை அவள்

கண்களால் பார்க்க முடியாது. அவர்கள் உல்லாசத்தை எட்டிப் பார்த்துப் பரவசம் அடையும் ஜீவன்கள் உண்டென்றால் அவை சிணுங்கல் மொழியில் அங்கும் இங்கும் தாவி ஜன்னல் திட்டையில் தங்களது சொந்தக் காதல் நாடகத்தை அரங்கேற்றும் அந்த இளம் சிட்டுக் குருவிகள்தான்.

சோம்பித் திரிந்த மதியம் நகர்ந்து மாலைப் பொழுதானது. சாயா பல்ராமை அதட்டி உடை மாற்றிக் கொள்ளச் சொன்னாள். அவளும் வெளியில் கிளம்பத் தயாரானாள். ஒருவரை ஒருவர் விழுங்குவதுபோல பார்த்துக் கொண்டனர். சாயா கீழே அமர்ந்து அவளுடைய பெட்டியைத் திறந்து உள்ளிருந்த சிறிய நகைப் பெட்டியை வெளியில் எடுத்தாள். அதனை ஒரு துணிப் பையில் வைத்தாள். பின்னர் அந்தத் துணிப் பையை ஒரு பெரிய கைக்குட்டையால் மூடினாள். பிறகு வீட்டிலிருந்து வெளியில் வந்து கதவைப் பூட்டிவிட்டு அவனுடன் ஜோடியாக வெளியில் நடந்தாள்.

“மார்க்கெட்டுக்கு எதுக்கு இவ்வளவு நகையை எடுத்துக்கிட்டுப் போகணும்?” அவன் கேட்டான்.

“ஷ்ஷ்... சத்தம் போடாம என் கூட வாங்க.”

“நல்லது அம்மணி. தங்கள் விருப்பம்.” பல்ராம் சிரித்தான்.

சாயா வீட்டைப் பூட்டிக் கொண்டிருந்தபோது பக்கத்து வீட்டு ஏழு வயதான நோஞ்சான் பையன் வெளியில் வந்து “அம்மா...” என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தது கேட்டது.

“அம்மாவுக்கு என்ன?” என்று ஒரு அதட்டலான பெண்ணின் குரல் தொடர்ந்து கேட்டது.

“வாம்மா, சீக்கிரம் வெளிய வந்து பாரும்மா.”

“சீக்கிரம்” சாயா அவசரப்படுத்தினாள். “பாருங்க, உடனே அவள் வாசலுக்கு வந்து நிப்பா.” சாயா தெருவில் இறங்கும் முன் பக்கத்து வீட்டு அந்த ஐந்து குழந்தைகளின் தாய் வெளியில் வந்தாள். வேக வேகமாக அடி எடுத்து பல்ராமும் சாயாவும் அந்தச் சந்தைக் கடந்து மெயின்

ரோடுக்கு வந்தனர்.

“ஊஃப்....” சாயா பெருமூச்சு விட்டாள். “நாம வெளியில் கிளம்புறோம்னு அவளுக்குச் சொல்லவே வேணாம். உடனே வெளியில் வந்துடுவா. நாம என்ன பொருட்காட்சியில் இருக்கும் காட்சிப் பொருளா?”

“பார்த்தா பார்க்கட்டும். நமக்கென்ன நஷ்டம்?” பல்ராம் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ள நினைத்தான்.

“கூடவே கூடாது. அவ சரியான பொறாமைக்காரி. நான் சந்தோஷமா இருப்பதைப் பார்த்தா வயித்தெரிச்சல் அடைவா.”

மெயின் ரோடுக்கு வந்துவிட்டனர். தை மாத சூரியன் அந்திவானில் மின்னியது. ஒரு டோங்கா பிடித்து நகைக் கடைத் தெருவிற்கு வந்தார்கள். ஓரிரு மணித்துளிகளில் மீண்டும் இருவரும் ஒரு டீக்கடையில் அமர்ந்து தேநீர் அருந்தினார்கள். பல்ராம் சட்டைப் பையில் பதினொரு நூறு ரூபாய் நோட்டுகள் இருந்தன.

“நகை போயிடுச்சுன்னு வருத்தப்படாதீங்க...” அவனைச் சமாதானப்படுத்திய சாயா, “இது போனா என்ன, புது நகை வாங்கிக்கலாம்” என்றாள்.

டீயைக் குடித்துவிட்டு ஒரு சினிமா தியேட்டருக்குப் போய் திரைப்படம் ஒன்றைப் பார்த்துவிட்டு, வெளியில் ஒரு ரெஸ்டாரண்டில் இரவு உணவை முடித்துக்கொண்டு வீட்டிற்குள் நுழையும்போது மணி பத்து அடித்தது.

அவர்கள் கதவு திறக்கும் சப்தத்தைக் கேட்டு மீண்டும் அந்த ஏழு வயது நோஞ்சான் பையன், “அம்மா சீக்கிரம் வா, அவங்க திரும்பி வந்துட்டாங்க” என்று கூவுவது கேட்டது.

“சீக்கிரம் உள்ள வாங்க” சாயா பல்ராமை அவசரப்படுத்தினாள்.

அவர்கள் உள்ளே நுழையும் முன்னர் நோட்டமிட பக்கத்து வீட்டுக்காரி வந்து விட்டாள். “சரியான சூனியக்காரி.” சுவரில் சாய்ந்தபடி சாயா குற்றப் பத்திரிகை வாசித்தாள்.

“ச்சீ ச்சீ... வெட்கமாக இல்லை உனக்கு?” பல்ராமின் குரலில் வெறுப்பு

மிகுந்திருந்தது.

விளக்கை ஏற்ற அவன் தீப்பெட்டியிலிருந்து குச்சியை எடுத்து உரசினான். சாயா ஓடிவந்து அதனை ஊதி அணைத்தாள்.

“என்ன ஆச்சு உனக்கு?”

“உஸ்ஸ்... உங்களிடம் ஒண்ணு சொல்லணும்.”

“சொல்லு. ஆனா ஏன் அதை இப்படி இருட்டில் சொல்ற?”

“அப்படிதான். நான் சொல்லப்போறதை இருட்டில்தான் சொல்ல முடியும். உங்க காதைக் கொண்டு வாங்க. எங்கே உங்க காது?”

அவன் செவிகளில் வந்து கிசுகிசுத்தபோது அவளுடைய சூடான மூச்சுக் காற்றின் ஸ்பரிசம் அவன் செவி மடலில் மோதியது. சொல்லி முடித்துவிட்டு அந்த நிம்மதியில் அவன் தோள் மீது படர்ந்தாள்.

“விடும்மா. நான் போய் விளக்கை ஏற்றுகிறேன்.”

“வேணாம். ஏன் நீங்க எதுவும் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்?”

“சொல்றேன். முதலில் விளக்கை ஏத்திட்டு வர்றேன் கண்ணே.”

அவன் சாயாவிடமிருந்து விலகி விளக்கைப் பற்ற வைத்தான். சாயா படுக்கையில் போய் அமர்ந்தாள். பல்ராம் அவள் அருகில் போய் நின்று அவளை விழுங்கி விடுவதுபோல பார்த்தான். அவன் முகத்தில் புன்னகை அரும்பியது.

“போங்க, அப்படிப் பார்க்காதீங்க. வெக்கமா இருக்கு.”

“சாயா ராணி.”

“சொல்லுங்க.”

“தங்க ரதம் போல் வருகிறாள்

அள்ளித் தண்டினை போலே வளைகிறாள்

குங்குமப்பூ போல் சிரிக்கிறாள்

இன்பக் கோட்டைக்கு என்னை அழைக்கிறாள்

காலையில் மலரும் தாமரைப் பூ - அந்திக்

கருக்கலில் மலரும் மல்லிகைப் பூ

இரவில் மலரும் அல்லிப்பூ - நீ

என்றும் மணக்கும் முல்லைப்பூ."

அவன் ராகம் போட்டுப் பாடினான்.

"உம்ம்..." அவள் சிணுங்கினாள்.

"எதுக்கு சிணுங்கற?" என்று அவன் புரியாமல் கேட்டான்.

"பெரிய சினிமா ஹீரோன்னு நினைப்பு. சினிமா பாட்டெல்லாம் நல்லாதான் பாடறீங்க."

"ஆமாம். இன்னிக்கு ராத்திரி பூரா உன்னைக் கட்டிப் புடிச்சுக்கிட்டு தூங்கப் போறேன்."

சாயா அவனது சிகையை அளைந்தாள். அவன் கண்களை உற்று நோக்கியபடி, "இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். உங்களுக்கு வேலை கிடைக்கட்டும். அப்புறம் நாம பெரிய வீட்டுக்குக் குடி போகலாம். ஆனா அந்த வீட்டில் ரெண்டு படுக்கையறை இருக்கணும். சம்பளம் இருநூத்தியம்பது ரூபாய் வரும்னு சொல்றீங்க. அப்போ முப்பது ரூபாய் ரெண்டு பெட்ரூம் வீட்டுக்குக் கொடுக்க முடியாதா என்ன? முப்பது ரூபாய் வாடகைக்கு, நூத்தைம்பது ரூபாய் வீட்டுச் செலவுக்கு. ஒரு பத்து ரூபாய் நம்ம வீட்டுக்கு வரப் போகும் புது ஜீவனுக்கு. அப்படியே இருந்தா கூட ஒரு முப்பது நாற்பது ரூபாய் சேமிப்பது கடினமா இருக்காதுன்னு நினைக்கறேன். என்ன சொல்றீங்க? முடியும்தானே?"

அவன் ஆமோதித்துத் தலையசைத்தான். "முடியும். இல்லையென்றால் ததிங்கிணத்தோம்தான்."

"எங்க கிளம்பறீங்க?"

"இதோ இப்போ வந்துடறேன். பெட்டிக் கடையில் சிகரெட் வாங்க

மறந்துட்டேன். இதோ தெருமுனைக் கடையிலிருந்து வாங்கிட்டு வந்துடறேன்."

சாயா அவன் போன பின் கதவை மூடினாள். உடை மாற்றிக்கொண்டு கண்ணாடியின் முன் போய் நின்றாள். மாட்டாள். அவள் மாற மாட்டாள். இன்றைய இன்ப இரவை அவள் இந்த சந்திப்பூர் புடைவையில் அனுபவிப்பாள். இன்றைய இரவு கொண்டாடப்பட வேண்டிய இரவு. கூந்தலில் கொஞ்சம் மலர்களைச் சூடிக் கொண்டிருக்கலாம். "சரியான மறதிக்காரி நீ." கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தைப் பழித்தாள். விடு. அவளிடம் கொஞ்சம் வெளிநாட்டு பாடி ஸ்ப்ரே இருக்கிறது. தானும் கொஞ்சம் அடித்துக்கொண்டு அவனுக்கும் கொஞ்சம் அடிக்கலாம்.

சாயா கண்கள் திறந்த நிலையில் கனவில் மூழ்கத் தொடங்கினாள். இப்படி ஒரு சந்தோஷத்தை அவளால் நான்கைந்து மாதங்களுக்கு முன்னால் கற்பனை பண்ணிக்கூட பார்த்திருக்க முடியுமா?

பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்தபோது சாயாராணி அம்மாவுடன் கல்கத்தாவிற்குப் புலம் பெயரப் பெட்டியைத் தூக்கினாள். அவளை ஓரளவு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பையனுக்குக் கட்டிக் கொடுத்தார்கள். அவள் கணவனுக்கு அருகில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் நிலையான உத்தியோகம். ஆனால் திருமணம் ஆகி இரண்டு வருடம் கூட ஆகியிருக்காது, அவள் கணவன் அம்மை நோய் தாக்கி மரணமடைந்தான். மகளின் விதவைக் கோலத்தைக் காண தாய்க்குச் சகிக்கவில்லை. அவளும் மாப்பிள்ளை போன இடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். அம்மாவும், வீட்டுக்காரரும் விட்டுப் போன கொஞ்சம் சொத்து, சவால் விடும் கட்டுக்குள் அடங்காத அவளது யௌவனம் இவ்வளவு இருந்தும் அவள் தனது மைத்துனர் வீட்டில் ஓர் அடிமையாகதான் நடத்தப்பட்டாள். கணவனின் அத்தை ஒரு கொடுமைக்காரியாக விளங்கினாள். சில வருடங்கள் சென்றன. அவள் மைத்துனன் அவனுக்குப் பார்க்கும் வரன்களை எல்லாம் தட்டிக் கழித்து வந்தான். அவன் அவளைச் சுற்றி வரத் தொடங்கினான். அவளிடம் பேசும் பேச்செல்லாம் இரட்டை அர்த்தத்துடன் ஒலிக்கும். ஆரம்பத்தில் இந்த ஹிம்சைகளை சாயா ஒரு

பொருட்டாக மதிக்கவில்லை. சாயா அவனுடைய அச்சரத்திற்கு மறுப்புத் தெரிவித்ததும் அவனுடைய அத்தை வாய் கூசாமல் அவளை, "வேசி" என்று கூறினாள்.

இந்தச் சமயம் ஒரு ஜாத்ரா நாடகக் குழுவினர் அவர்கள் பகுதியில் டேரா போட்டிருந்தார்கள். 'குருக்ஷேத்ரா' என்ற தலைப்பில் நாடகம் போட்டார்கள். பல்ராம் அதில் அர்ஜுனனாக வேடம் கட்டியிருந்தான். சாயா அவன் நடிப்பை வாய் பிளந்து பார்த்தாள். பல்ராமும் அர்ஜுனன் கதாபாத்திரத்திற்குத் தகுந்த நியாயம் வழங்கி நடித்திருந்தான். அவள் அவன் அழகால் வசீகரிக்கப்பட்டாள். விதவைகள் மீது புராண காலங்களிலிருந்து இழைக்கப்படும் அவதூறுகளுக்கு அவள் இதுவரை கவலைப்பட்டதில்லை. அக்கம்பக்கத்தில் பேசிக் கொள்ளும் வம்புகளிலிருந்து பல்ராம் அருகில்தான் வசிக்கிறான் என்றாலும் வேலை வெட்டி எதுவும் இல்லாமல் இருக்கிறான் என்றும் தெரிந்து கொண்டாள்.

ஒருநாள் பல்ராம் வலையில் வீழ்ந்தாள். அவள் கண்களில் பொங்கிய ஆர்வம் அவனை அவளது வீட்டு வாசல் வரை இழுத்து வந்தது. ஒவ்வொரு நாள் மதியம் அவளுடைய கணவனின் அத்தை மதிய உணவை மூக்குப் பிடிக்கத் தின்று கொண்டிருக்கும்போது சாயா அறை ஜன்னல் அருகில் வந்து நிற்பாள். அந்த நேரம் அவள் மைத்துனனும் வேலையாக இருப்பான். தெருவில் போகும் பல்ராம் ஜன்னல் வழியாகத் தெரியும் சாயாராணி மீது ஒரு பார்வை வீசி விட்டுச் செல்வான். ஆரம்பத்தில் சாயா ஜன்னலைச் சார்த்திதான் வைத்திருந்தாள். நாள் செல்ல நாள் செல்ல அவளே ஜன்னல் கதவுகளைத் திறந்து வைக்க ஆரம்பித்தாள்.

ஒருநாள் பல்ராம் அவளைப் பார்த்து புன்னகைக்க ஆரம்பித்தான். மறுநாளிலிருந்து சாயா அவனைப் பார்த்துப் புன்னகைக்கத் தொடங்கினாள். ஒருநாள் காளிகாட்டில் உள்ள கோயிலுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு சாயாராணி பல்ராமை ஒரு மைதானத்தில் சந்தித்தாள். பொழுது போவது தெரியாமல் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் கதையை முழுவதும் கேட்டுவிட்டு பல்ராம் அவளை மணந்து

கொள்வதாகக் கூறினான். பலநாள் மனப் போராட்டத்திற்குப் பின்னர் இனியும் தனது மைத்துனனின் கீழ்த்தர நோக்கத்திற்கு ஆளாக முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது சாயாராணி அவனுடன் வாழச் சம்மதித்தாள். அவர்கள் இணையப் போகும் நாளுக்காகக் காத்திருந்தாள். எனவே ஒருநாள் யாருக்கும் தெரியாமல் பஜாரில் மளிகை சாமான் வாங்கச் செல்பவள்போல கிளம்பிச் சென்று விட்டாள். போகும்போது ஒரு பையில் சில துணிமணிகளையும், அம்மா போட்ட நகைகளையும் எடுத்துக்கொண்டு சென்றாள்.

காசிக்கு வந்ததும் அவர்கள் ஒருமாதம் ஹோட்டலில் அறையெடுத்துத் தங்கினார்கள். பிறகு இந்த வீட்டை வாடகைக்குப் பேசி குடியேறினார்கள். முறையாகக் கடவுள் சந்நிதானத்தில் மாலை மாற்றிக் கொண்டார்கள். உள்ளூர் புரோகிதர் ஒருவர்தான் சாட்சி.

இது நடந்து ஆறு மாதங்கள் ஆகின்றது. ஒரு வேலைக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஒவ்வொன்றும் கை நழுவி போய்க்கொண்டே இருக்க, இதோ இப்போதுதான் கனிந்து வரும் நிலைக்கு அவர்களைக் கொண்டு நிறுத்தியிருக்கிறது. காசி விஸ்வநாதா! எங்கள் மேல் கொஞ்சம் கருணை வையப்பா. பல்ராமைச் சந்தித்ததிலிருந்து அவள் வாழ்வில் புதுப் புது அர்த்தங்களைத் தெரிந்து கொண்டாள். அவன் உற்சாகத்தின் ஊற்று. ஒரு சிகரெட் வாங்க இவ்வளவு நேரமா? யாராவது புதிய மனிதர்களைப் பார்த்திருப்பான். இவனுக்கு பேசுவதற்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்?

யாருடைய செருப்புச் சத்தம் இந்த நேரம் சந்தில் கேட்பது? எட்டிப் பார்த்தாள், அவன் இல்லை. சிறிதுநேரம் யோசனையில் ஆழ்ந்த அவள் வாசல் கதவின் தாழ் போட்டாள். வரட்டும். சரியா பாடம் எடுக்கறேன். கதவுக்கு வெளியில் காத்திருக்கட்டும். ஸ்ரீ கிருஷ்ணா லீலா ஜாத்ராவில் வருவதுபோல அவன் வெளியில் நின்று ‘எந்தன் காமி சத்யபாமா கதவைத் திறவாய்…’ என்று முழங்கினால் கூட திறக்கக் கூடாது.

சாயா தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். தனது இழுப்பறையிலிருந்து வெளிநாட்டு பாடி ஸ்ப்ரேயை எடுத்துக்கொண்டு வந்தாள். அறை

முழுவதும் வீசிய அந்த வாசனை திரவியத்தின் நறுமணம் அவள் நாசியில் நுழைந்து இதயத்திற்குச் சென்றது. அவனை ஆரத் தழுவ வேண்டும் என்ற பரவச உணர்வு மிகுந்தது. விழிகளில் பட்டையாக மை தீட்டிக் கொண்டாள். பல்ராமிற்கு அவளுடைய இச்சையின் வீச்சு முழுவதும் தெரிந்திருக்காது.

அந்தக் கணத்தில் பல்ராம் காசி இரயில் நிலையத்தில் இருந்தான். கொல்கத்தா வரை செல்ல டிக்கெட் வாங்கிவிட்டுச் சுற்றும் முற்றும் தன்னை யாராவது பார்க்கிறார்களா என்று பார்வையைச் சுழலவிட்டு தனது பையில் வைத்திருந்த சிகரெட் பெட்டியிலிருந்து ஒரு சிகரெட்டை உருவி பற்ற வைத்தான். நான்காம் எண் நடைமேடையில் முகல்சராய் செல்வதற்கான கடைசி இரயிலுக்காகக் காத்திருந்தான். கொல்கத்தா போனால் யார் கண்ணிலும் படாமல் தப்பித்துக் கொள்ளலாம். லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் தொலைந்து போவது சுலபம். ‘ஆஹா’, பாக்கெட்டில் உரசிய கரன்சி ரூபாய் நோட்டுகள் அவனைப் பரவசத்தில் ஆழ்த்தின. ஆயிரத்து நூறு ரூபாய்கள். அடுத்து நான்கைந்து மாதம் வண்டி சுலபமாக ஓடிவிடும். அதன் பிறகு வேறு புது ஏற்பாடு செய்ய வேண்டும். இது கலிகாலம். ஆறு மாதத்திற்கு மேல் யாரும் மனைவி என்ற உறவில் தொடரக் கூடாது. மாலை மாற்றிக்கொண்டது? ஒரு சாதாரணச் சடங்கு, வெறும் விளையாட்டு, அவ்வளவுதான்.

பல்ராம் அத்தனை இதயமில்லாதவன் இல்லை. அவன் சாயாவிற்கு நூற்றைம்பது ரூபாயும் நினைக்க நினைக்க இனிக்கும் காதல் இன்ப நினைவுகளை விட்டுச் சென்றிருக்கிறான். அவள் இளமை ஒரே இரவில் கற்பூரம்போல கரைந்து விடப் போவதில்லை. மேலும் அவன் அவளைக் காசியில் மகாதேவனின் ஊரில் விட்டுச் சென்றிருக்கிறான். காசி புனிதமான நகரம். தினமும் ஆயிரக்கணக்கில் யாத்ரிகர்கள் வந்த வண்ணம் இருக்கும் க்ஷேத்திரம். திரும்பிய பக்கமெல்லாம் சந்துகள் நிறைந்த ஊர்.

பல்ராம் நான்காம் எண் நடைமேடையில் நின்று கொண்டிருந்தான். தூரத்தில் பின்னிரவுப் பனிப் புகையில் பச்சை ஊடுருவிய பச்சை விளக்கின் ஒளி பெரிதாகிக்கொண்டே வந்தது. நீண்ட புகையைக்

கக்கியபடி வந்த இரயிலைப் பார்த்ததும் அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். பாவம் அந்தப் பெண் சாயா. என்ன அருமையான பெண் அவள். எத்தனை அழகு. அவளுடைய இளமையும் உறுதியும் கொண்ட மேனியை அவனால் தன் நினைவிலிருந்து அகற்றவே முடியவில்லை. அவனுடைய ஒரே ஆறுதல் அவள் நினைவுகளில் அவன் நிச்சயம் இருந்துகொண்டே இருப்பான். இறுகித் தழுவிய இரவுகள். பரவசத்தில் ஆழ்த்திய பகல் வேளைகள்.

சாயாவும் அவனை அவ்வளவு எளிதில் மறக்க மாட்டாள். பல்ராம் சௌத்ரி என்று அழைக்கப்பட்ட தீன்காரி தாஸை மறக்க மாட்டாள். அவளை அர்ஜுனனாக வசீகரித்த பல்ராம் சௌத்ரியின் நினைவு அவள் கருவில் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கும். அவள் கருப்பையிலிருந்து வெளி வந்தாலும் அது வளர்ந்துகொண்டேதான் இருக்கும். அது அவளது ஆன்மாவுடன் ஒன்று கலந்து அவளுடன் அவளுடைய இறுதி மூச்சு வரை வளரும். இல்லை, பல்ராம் அவளை மறந்தாலும் சாயா அவனை மறப்பதாக இல்லை.

(வங்க மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ரத்னோத்தம சென்குப்தா)

# 13. வர்றியா?

## குர்ஷித் அக்ரம்

**வ** ர்றியா?

இந்த வார்த்தை எனக்குப் பிரபலமான ஒரு வார்த்தை. செஞ்சிவப்பாக ஆதவன் மேற்கில் மறைந்ததும் புகைமூட்டமாக மாறிய மாலைப் பொழுதில் ஹூப்ளி ஆறு உருக்கி வார்த்த தாமிரத்தின் நிறம்போல மின்னியது. எனக்கு முன்னால் ஹௌரா பாலம்; பின்னால் ஹூக்ளி பாலம் ஒரு மெலிந்த விலாங்கு மீன் போல இருந்தது. நிர்மலமான வானம். குளிர் காற்று. நிறைய வருஷங்களுக்குப் பிறகு அப்படி ஒரு காற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். கடந்த எட்டு வருஷங்களில் ஒரு நாள் மாலைப் பொழுது கூட எனக்கு இப்படி மனதுக்கு இனிய சூழலைக் கொடுத்ததில்லை. நான் கல்கத்தாவிற்கு இப்போதுதான் திரும்பி வருகிறேன். இந்தக் காற்றிற்காகவே வீட்டு நினைவு வந்து எவ்வளவு நாள் ஏங்கியிருப்பேன். எனக்கு நண்பர்களும் இல்லை. துணையும் இல்லை.

ஆனால் நான் தனி ஆள் கிடையாது. இந்த நகரில் நான் தனியாக இருந்ததே இல்லை. இந்த நகரின் காற்றுக்குக் கூட என்னை அடையாளம் தெரியும். நான் இங்குள்ள தூசு தும்பைகளில் ஒருவன். இந்த நகரின் மூலை முடுக்கெல்லாம் எனக்கு அத்துப்படி. இந்த நகரின் எந்தப் பகுதியிலும், எந்த நேரத்திலும் எனக்கு இது நம்ம ஊரு என்ற நினைப்பு இருக்கும். ஒவ்வொரு பொருளும் என்னவோ கூடப் பிறந்தது போல ஒரு நினைப்பு. ஷியாம் பஜாரில் உள்ள ஒரு சிறிய சந்தில் முதன்முறையாக நுழைகிறேன். எனக்கு இது புதிதாகத் தோன்றவே இல்லை. இதற்கு முன்னால் இங்கே வந்ததைப்போல ஒரு நினைப்பு இருக்கிறது. முத்யா

புர்ஜில் ஒரு பஸ் கண்டக்டரைப் பார்த்தால் இவனை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம் என்ற நினைப்பு வருகிறது. எனக்குத் தெரியாது என்ற ஒன்று இங்கு இருக்க முடியுமா என்ன? இரட்டை அடுக்குப் பேருந்து ஒன்றின் பின்புறத்தைப் பார்த்தே அந்த பஸ் கிஜிர்பூர் போகிறதா அல்லது கோல் பார்க் போகிறதா என்று சொல்லிவிட முடியும். ரபிந்திர சாதனில் விழா நடக்கிறது என்றால் வரும் ரசிகர்களை வைத்தே உள்ளே நாடகம் நடக்கிறதா அல்லது ஓவியக் கண்காட்சி நடைபெறுகிறதா என்று என்னால் சொல்ல முடியும்.

மொத்த கல்கத்தாவும் என் உள்ளங்கையில். உண்மையில் அந்த நகரமே என் உள்ளங்கையில் ரேகைகளாக ஓடுகின்றன என்று கூறலாம். எட்டு வருடம் நான் இங்கே இல்லை என்றாலும் அதன் ஒவ்வொரு சிறு ஒலியும் என் காதுக்குத் தெரியும். கண்களை மூடிக்கொண்டே கூட ரசிகர்களின் ஆரவாரத்தை வைத்து அது மோகன் பேகன் மைதானத்திலிருந்து வருகிறதா அல்லது முகம்மெதன் மைதானத்திலிருந்து வருகிறதா என்று கூறிவிட முடியும். ஆட்டம், பாட்டம், வருகின்றவர்களின் சப்தம், போகின்றவர்களின் சப்தம் என்று எல்லா ஓசைகளும் எனக்கு அத்துப்படி. இப்போது கேட்டதே ஒரு வார்த்தை...

‘வர்றியா?’

அதையும் சேர்த்து எனக்கு இந்த நகரத்தின் ஒலிகள் மனப்பாடம்.

இந்த வார்த்தையை இதற்கு முன்னால் எண்ணில் அடங்கா முறை கேட்டிருக்கிறேன். கல்கத்தா சதுக்கம், விக்டோரியாவின் பின்புறம், மெட்ரோ டிராமில், கர்சன் பூங்காவில், ஆளுநர் மாளிகையின் இருள் கவியும் சுவர்களின் மறைவில், எங்கெல்லாம் மாநகராட்சி மின்விளக்குகள் மங்கலாக எரிகின்றனவோ அந்த இருள் பிரதேசங்களில் இந்த வார்த்தையைக் கேட்டிருக்கிறேன். கரப்பான்பூச்சிகளின் விர்ர் ஒலியைப் போல. பத்தொன்பது வயதில் முதன் முதலாக இந்த வார்த்தையைக் கேட்டுவிட்டு நான் எவ்வளவு நடுங்கி இருப்பேன் தெரியுமா? சிறு பிள்ளைகள் கரப்பான் பூச்சியைப் பார்த்து அலறுமே, அது மாதிரி. ஏன் அப்படி பயந்தேன் என்று இப்போது நினைத்தால் ஆச்சரியமாக உள்ளது.

ஹே... இது என்ன? நிறைய மனிதர்கள் இதைப் பற்றியே புலம்பித் தள்ளுகிறார்கள். விபசாரிகள் இப்போது தங்கள் தொழிலை பகிரங்கமாகச் செய்யத் தொடங்கிவிட்டனர். சீக்கிரம் நட, எவ்வளவு விரைவாக நடக்க முடியுமோ அவ்வளவு விரைவாக நட. உன்னை யாராவது அடையாளம் கண்டு கொண்டால்தான் என்ன இப்போது? விரைந்து நட. நான் இருளிலிருந்து விலகி வெளிச்சத்தை அடைந்து விட்டேன் என்றாலும் என் படபடப்பு இன்னும் அடங்கியபாடில்லை. என் முன்னே இருந்த கிராண்ட் ஆர்கேடில் இருந்த கடைகளின் வெளிச்சம் பகல்போல் தெரிந்தது. அங்கே பலர் நடமாடிக் கொண்டிருந்தனர். ஆனால் எனக்கென்னவோ தன்னந்தனியாக இருப்பதுபோல ஓர் உணர்வு. இந்த வெளிச்சமான சூழலிலும் பாதுகாப்பின்மையை உணர்வதற்குக் காரணம் ஒருவேளை இருட்டில் நான் உருவம் சார்ந்த சுயத்தை இழந்ததால் இருக்குமோ? ஓர் உணவு விடுதியின் உள்ளே நுழைந்து நான்கைந்து குவளை தண்ணீரைக் குடித்தேன். அண்ணே, இன்னும் கொஞ்சம் தண்ணி கொண்டுவாங்க. தொண்டை வறண்டுபோய்க் கிடக்கு.

இது என் பதின் பருவத்தில் நடந்தது. அதன் பிறகு எல்லாமே மாறத் தொடங்கியது. நானும் வளர ஆரம்பித்தேன். நகரமும் எனக்கு நிறைய பாடம் சொல்லிக் கொடுத்தது. முதலாவதாக நான் இது போன்ற விஷயங்களுக்கு அச்சப்படக் கூடாது. இவையெல்லாம் சின்னச் சமாசாரங்கள். இந்த இருட்டுப் பிரதேசத்தில் ஒரு குறுக்கு வழி உள்ளது. புல்வெளியில் நடந்து நடந்து மக்கள் குறுக்கே ஒரு பாதையை ஏற்படுத்தி விட்டார்கள். இருட்டில் பாதை மங்கலாகத்தான் தெரியும். பாதை தெரிந்துவிட்டால் அதுவே உங்களை அடியெடுத்துக் கூட்டிச் செல்லும். யாருக்கு அவசரமோ அவர்கள் அதில் செல்லலாம். தவறேதும் இல்லை. ஆனால் பாதையின் இரு பக்கமும் இருள் சூழ்ந்து இருக்கும். அந்த இருளிலிருந்துதான் இந்த வார்த்தை ஒலிக்கும். ‘வர்றியா?’

இந்த வார்த்தையைக் கேட்டதும் நான் எப்படி வாய் விட்டுச் சிரித்திருப்பேன்? இதுவா என்னை இப்படி பயமுறுத்தியது? இதில் பயப்பட ஒன்றுமில்லை. பயமற்ற ஒரு சின்னக் குழந்தை கரப்பான் பூச்சியை அதன் மீசையைப் பிடித்துத் தூக்குகிறது. மற்ற குழந்தைகள் பயந்து அலற

இந்தத் துணிச்சலான குழந்தை ‘இதில் பயப்பட என்ன இருக்கிறது? இது ஒன்றும் செய்யாது; கடிக்காது, கொட்டாது’ என்று ஒரு சுற்று சுற்றிக் காட்டும். கையில் அகப்பட்டுக்கொண்ட கரப்பான் பூச்சி எப்படியாவது தப்பித்தால் போதும் என்று துடிக்கும். தூக்கி எறிந்ததும் இருட்டான மூலையை நோக்கி ஓடிவிடும். தப்பித்தால் போதும்.

வயதாக ஆக நான் மிகவும் துணிச்சல் மிக்கவனாக மாறிவிட்டேன். நண்பர்களுடன் ஜமா சேரும்போது இந்த இருட்பகுதியில்தான் அடைவோம்.

“வர்றியா?” அதே குரல்.

“உட்காரட்டுமா?” அந்தக் குரல் கேட்கும். அருகில் அமர்த்துவோம்.

“நிச்சயமா. வா கிட்டக்க வா. என்ன வயசு உனக்கு?”

“கல்யாணம் பண்ணிக்கப் போறியா? அப்புறம் எதுக்கு வயசைக் கேட்கிறாய்? உட்காரணும்னு ஆசையா இருந்தா உட்காரு.”

“பார்க்கலாம். எங்கே ஒரு முத்தம் கொடு பார்க்கலாம்.”

“என் கூட வா. அப்புறம் முத்தமிட்டுக் கொள்ளலாம்.”

“ஓகே. ஆமாம், ஏன் உன் முதுகு இப்படி வியர்வையால் நனைஞ்சு போயிருக்கு?”

“ஹலோ... கை எடுங்க. முன்பணம் இல்லாம தொடுற வேலையை விட்டுடுங்க.”

“சரி சரி, உன் ரேட்டு எவ்வளவுன்னு சொல்லு. உன் வயசைதான் சொல்ல மாட்டேன்னு சொல்ற. ரேட்டையாவது சொல்லு.”

“ஒவ்வொருத்தருக்கும் பதினஞ்சு ரூபாய்.”

“உன் வயசுக்கு ரேட்டு ஜாஸ்தி. ஒருத்தருக்கு மூணு ரூபாய் தர்றோம்.”

“போ... உங்க அம்மாகிட்ட மூணு ரூபாய்க்கு படு. தேவிடியாப் பசங்க. நான் இங்க பொழப்பு நடத்துறேன், இந்தத் தேவிடியாப் பசங்க வேடிக்கை காட்டுதுங்க” என்று அவள் அர்ச்சனை செய்ய ஆரம்பித்தாள். நாங்கள்

வயிறு வெடிக்கும் அளவிற்குச் சிரித்தோம்.

மீண்டும் ஒருமுறை நான் போய்க்கொண்டிருந்தபோது அதே பழகிய வார்த்தையைக் கேட்டு நின்றேன். அவுட்ராம் வார்ஃப்பிற்கு எதிரில் வில்லியம் கோட்டைக்கு முன்பாக இருந்த திறந்தவெளியில் இருந்த நடைமேடையில் இந்த வார்த்தை பிரசித்தி பெற்ற வார்த்தை. நான் அப்படியே நின்றேன். ஒரு மரத்தின் பின்னால் யுவதி ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். பதினைந்து பதினாறு வயதுதான் இருக்கும். அவள் அருகில் அடுக்கடுக்காய் மரங்கள். மரங்களின் மறைவில் அடுக்கடுக்காய் அவளைப்போல அழை பெண்கள்.

வானில் பறவைகள் கூடு தேடித் திரும்பிக் கொண்டிருந்தன. சர்குலர் இரயில் நிறுத்தத்தில் வேலைக்குச் சென்றவர்கள் வீடு திரும்பக் காத்து நின்றனர். எந்தத் தருணம் நகரின் ஒரு பகுதி ஊழியர்கள் தங்களது பணிக்காலத்தை முடித்து வீடு திரும்ப எத்தனிக்கின்றனரோ, அதே தருணத்தில் மற்றொரு பிரிவு ஊழியர்கள் தங்கள் கடைகளைத் திறக்கின்றனர், இருட்டில்.

“வர்றியா?”

வயது குறைந்து காணப்பட்ட அந்தப் பெண்ணைப் பார்த்துப் பரிதாபப்பட்டேன். அவளை இந்த இருட்டில் கொண்டுதள்ளியது யார்? அவளை நான் கேட்க நினைத்தது, ‘பெண்ணே, பொன்னான பருவத்தில் உன்னை இப்படி ஓர் இருளில் மூழ்கடித்தது யார்? உன் வீட்டிற்குத் திரும்பிச் செல். இது வஞ்சகமான உலகம்.’ அவளுக்கு நல்லது கெட்டது தெரியாமலா இருக்கும்? இந்த இடத்திற்கு வருபவளுக்கு எது கெடுதி எது நல்லது என்று தெரிந்திருக்கும். அவள் வீட்டோடு இருப்பவள் என்றால் இந்த நேரத்தில் அவள் தந்தை, ‘ இருட்டிடுச்சு பாரும்மா. விளக்கைப் போடு’ என்று கூறியிருப்பார். வீட்டில் இருந்தால் அவளுக்கு நல்லது மட்டுமே பழகியிருக்கும். இவள் இந்த நரகத்தில் இருப்பவள். வஞ்சமும், சூழ்ச்சியும் மட்டும் தெரிந்திருக்கும். இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததால் அவளிடம் கேள்வியை இப்படி மாற்றிக் கேட்க வேண்டும் என்று தோன்றியது. ‘பெண்ணே, கெட்டது எதுவென்று

உனக்குத் தெரியும், ஆனால் நல்லவற்றின் இனிமை தெரியுமா? அதன் ருசி தெரியுமா?’ நான் எதுவும் சொல்லாமல் திரும்பிவிட்டேன்.

லேசாகத் திரும்புவதுகூட கடினமாக இருந்தது. நான்கு எட்டு எடுத்து வைத்திருப்பேன், காற்று நின்று போனதுபோல ஒரு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. எனது நுரையீரல் அத்தனை மோசமாகவில்லை, நான்கு எட்டு வைப்பதற்குள் திணறுவதற்கு. எனக்கு வயதாகவில்லை. ஒரே ஓட்டமாக இங்கிருந்து ஓடி ஹௌரா பாலத்தைத் தொட்டுவிட்டு அதே வேகத்துடன் இங்கே ஓடிவர முடியும். ஒரு தடுப்புச் சுவரின் பின்னால் நீர் தேக்கி வைக்கப்படுவதுபோல காற்றும் தடுக்கப்பட்டதோ என்று வந்தது. திடீரென்று எதுவோ தலையை உரசிச் சென்றதுபோல தெரிந்தது. காற்று. பலத்த காற்று என் முகத்தில் முத்தமிட்டு உள்ளே புகப் பார்த்ததைப்போல இருந்தது. நான் பலமாக மூச்சை உள்ளே இழுத்தேன். ஆ...! கல்கத்தாவின் மாலைக் காற்று! இந்த வாடை, இந்த மாலை, இந்த நதி... ஓ, எனக்கு மீண்டும் பிறந்தமண் வாடையடிக்கத் தொடங்கிவிட்டது.

காலாற நடப்பது நன்றாகதான் உள்ளது. எட்டு வருடங்கள் கழித்து மீண்டும் நான் இந்தப் பாதையில் நடக்கிறேன். பழகிய பாதையில் நடப்பதில் ஏன் கடினமாக இருக்கப் போகிறது? வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு நடப்பதும், அலுவலகம் முடிந்து வீட்டுக்குத் திரும்புவதும் நாம் யோசித்துச் செய்ய வேண்டிய செயலன்று. என் வீட்டு வாசல் படியில் ஏற யாரையும் வழி கேட்கவேண்டிய அவசியம் இல்லை. அதே போலதான் ‘ஆகாசவாணி அலுவலகத்திற்குச் செல்லும் வழி இதுதானா?’ என்று ஒருவரையும் கேட்கத் தேவையில்லை. இது கல்கத்தா. என் தாய் வீடு. ஈடன் கார்டன் ஸ்டேடியத்தின் இரவு விளக்குகள் அந்தப் பகுதியை பகல்போல மாற்றிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு இரவு பகல் கிரிக்கெட் விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. வங்காள கிரிக்கெட் சங்கத்தின் நூற்றைம்பதாவது ஆண்டு விழா கொண்டாட்டம். இந்திய மட்டை வீச்சாளர்கள் தென் ஆப்பிரிக்கப் பந்து வீசுபவர்களை விளாசிக் கொண்டிருந்தார்கள். அது அரையிறுதி ஆட்டம். இந்திய அணியை இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை விட்டால் யாரால் வெல்ல முடியும்? ஆனால் அந்த அணியினர் இந்தத் தொடரில் கலந்து கொள்ளவில்லை.

அப்படியே இருந்தாலும் ரசிகர்களின் கூச்சல் இம்ரான் கான் முதுகுத்தண்டைப் பிளந்திருக்கும். அவர்களுக்கு இந்த விளையாட்டு மைதானம் கல்கத்தாவில் இருக்கிறது என்பது தெரியாமலா இருக்கும்? பார்வையாளர்கள் நடுவிலிருந்து ஒரு பலத்த கரகோஷம். சிக்சராக இருக்கும். வெற்றி பெறவேண்டும். இந்தியா வெற்றி பெறவேண்டும். இந்திய தேசம் வாழ்க.

மோகன் பேகன் கிளப்பில் விளக்குகள் ஜகஜோதியாக மின்னிக் கொண்டிருந்தன. இந்த வருடம் மோகன் பேகன் கிளப்பின் வெற்றிகளுக்கு ஒரு எல்லையே இருக்காது போலிருக்கிறது. இந்த முறையும் வெற்றி வாகை சூடியது அவர்கள்தான். முதலில் டி.சி.எம் கோப்பை; அப்புறம் ருஷியக் கோப்பை, இறுதியாக ஃபெடரேஷன் கோப்பை. இதற்கு அர்த்தம் இந்த வருடம் முழுவதும் மோகன் பேகனுக்குதான் கால்பந்தாட்ட சாம்பியன்ஷிப். மோகன் பேகன் வாழ்க. மற்ற இந்திய கால்பந்தாட்ட அணிகளை வெற்றி வாகை சூடிய இந்த அணி கல்கத்தாவின் பெருமை. வங்காளத்தின் பெருமை. வாழ்க வங்காளம்.

ஆகாஷவாணி கட்டடம், ஆளுநர் மாளிகை, சட்டசபைக் கூடம், நேதாஜியின் முப்பத்து நான்கு உயரச் சிலை எல்லாம் பளீர் விளக்கொளியில் மின்னிக் கொண்டிருந்தன. எங்கெல்லாம் பேருந்துகள் நிற்கின்றனவோ அங்கெல்லாம், அதாவது பொதுவாக நிற்கும் நிறுத்தங்களிலும், போக்குவரத்து விளக்குகளிலும் நிற்கும்போது மக்கள் பேருந்துகளில் ஏறக் காத்திருந்தார்கள். இது கல்கத்தாவில் விசித்திரமான விஷயம். வண்டி ஓட்டுநர்களும் போக்குவரத்து விதிகளுக்கு ஏற்ப வண்டி ஓட்டுகின்றனர் என்று சொல்ல முடியாது. இங்குள்ளவர்களுக்குப் பிரதான வீதிகளில் வண்டி ஓட்டுகின்றோம் என்ற நினைப்பே இருக்காது, என்னவோ தங்கள் வீடு இருக்கும் சந்து என்ற நினைப்புதான். அத்தனை நெருக்கடியான வீதியில் தனியாக நிறுத்தங்கள் இல்லை. அவசரமாகத் தெருவைக் கடக்க வேண்டும் என்றால் போய்க் கொண்டிருக்கும் வாகனங்கள் கடப்பவர்களுக்கு ஒரு பொருட்டே இல்லை, கையை நீட்டிக்கொண்டே சாலையைக் கடந்துவிடலாம். கார் ஓட்டுபவர்கள்தான் பாதசாரிகள் மேல் கவனமாக இருக்க வேண்டும். இதுவும் கல்கத்தாவின்

அடையாளங்களில் ஒன்று. வேறு எந்தப் பெரிய நகரத்திலும் இப்படி நடக்காது. வாழ்த்தியனுப்பப்பட்ட நகரம் கல்கத்தா.

ரீட் ரோடு சட்டசபைக்குத் திரும்பும் இடத்தில் போக்குவரத்து விளக்கு நிறுத்தத்தில் பலர் பேருந்துகளில் ஏறக் காத்திருந்தனர். விளக்கு வெளிச்சம் அவர்கள் உடல், அவர்கள் உடை எங்கும் பட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. நான் சும்மா திரிந்து கொண்டிருந்தேன். ஓ, இந்தப் பிரகாசிக்கும் சாலை, அதன் வெளிச்சம், ஒவ்வொரு ஓட்டத்திற்கும் உற்சாகக் குரல் எழுப்பும் ரசிகர்கள். அந்த வீதியில் நடப்பதே ஓர் அனுபவம்தான். பலரும் இது போன்ற அனுபவத்தைக் கடந்து வந்திருப்பார்கள். நிறைய பார்த்திருப்பார்கள். ஆயிரக்கணக்கான விளக்குகள் ஸ்டேடியம் எங்கும் பிரகாசித்து இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கின்றன. கீழே ஊசி விழுந்தால் கூட எளிதில் தேடி எடுத்துவிடும் அள விற்கு ஒளிவெள்ளம். இது என்னுடைய கல்கத்தா. பின் ஏன் என் இதயம் பெருமையில் விம்மித் தணியாது? ரீட் ரோடைப் போய்ப் பார்க்கவேண்டும் என்று தோன்றியது. ரீட் ரோடு இப்போதும் அதே அழகுடன் இருக்குமா? நான் டெல்லியில் ராஜ்பவன் சாலைக்குப் போயிருக்கிறேன்; மும்பையில் மரைன் டிரைவ் சாலைக்குப் போயிருக்கிறேன். என்னைப் பொருத்தவரையில் மற்ற இரண்டு சாலைகளையும் விட ரீட் ரோடு இன்னும் கவர்ச்சியானதுதான்.

கூட்டத்தின் அருகில் போனதும் நான் நின்றேன். இத்தனை ஜனங்களும், பெண்களும் பஸ்ஸிற்காகவா காத்திருக்கிறார்கள்? இல்லை - ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து. அவர்கள் பஸ்ஸிற்குக் காத்திருக்கவில்லை. அவர்கள் காத்திருப்பது வேறு ஒன்றிற்கு. போக்குவரத்து நெரிசலின் சப்தத்திலும், அவர்கள் வாய் திறந்து பேசவில்லை என்றாலும் நடுங்கும் குரலில் அவர்கள் அழைக்கும் ‘வர்றியா?’ என்ற த்வனி என் செவிகளில் ஒலித்தது.

அவர்கள் உதடுகள் பேசவில்லை என்றாலும் விளக்கின் வெளிச்சத்தில் அவர்கள் கண்கள் பேசின. ‘வர்றியா?’

நான் சிறுவனாக இருக்கும்போது மத்யான வெளிச்சத்தில் சின்னக்

கண்ணாடித் துண்டு ஒன்றை எடுத்து வைத்து, சூரிய ஒளியை அதில் பிரதிபலிக்கச் செய்து, மூங்கில் கழிகளில் தாங்கி நிற்கும் ஓலைக் கூரையின் மேலே தொங்கிக் கொண்டிருக்கும் வௌவால்களின் கண்களின் மேல் பாய்ச்சி அவற்றைப் பறக்க வைப்பேன். பகல் வெளிச்சத்தில் அவை தடுமாறியபடி குருட்டுத்தனமாகப் பறப்பதைப் பார்த்துக் கைகள் சிவக்கும் வரையில் கை கொட்டிச் சிரிப்பேன். அதேபோலவே என் மன இருளில் ஒளிந்திருந்த வௌவால் அந்தப் பெண்களின் ஒளி மிகுந்த கண்கள் பட்டதும் பறந்து போனது. நல்லவேளை அங்கு இருக்கும் யாரும் இந்த மனம் என்னும் வௌவாலைப் பார்க்கவில்லை; இல்லையென்றால் அவர்களும் கைகொட்டிச் சிரித்திருப்பார்கள். எந்தத் தொழில் இருட்டில் நடந்ததோ அது இப்பொழுதெல்லாம் விளக்கு வெளிச்சத்தில் ஜாம் ஜாமென்று நடைபெறுகிறது. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று யாராவது என்னுடன் இந்த விஷயத்தில் முரண்பட முடியுமா?

பெண்கள் அனைவரும் பஸ்ஸிற்காகக் காத்திருக்கின்றனர். பேருந்திற்காகக் காத்திருக்கும் குடும்ப ஸ்த்ரீகள் என்று ஷான் மற்றவர்கள் அவர்களைப் பற்றி எண்ணுவார்கள். ஆனால் அவர்கள் குடும்பப் பெண்கள் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்று ஒருவர் நிரூபித்தால் கூட என் வேலையை விட்டுவிட்டுக் காளிகாட்டில் உள்ள கோயில் வாசலிலோ, மௌலா அஜிஸ் அலி மசூதி முன்போ பிச்சைப் பாத்திரம் ஒன்றை ஏந்திப் பிச்சை எடுக்கத் தயார். அவர்களை அடையாளம் காட்டுவேன். அவர்கள் அனைவரையும் எனக்குத் தெரியும். இதில் கஷ்டம் என்ன இருக்கிறது? என்னால் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போயிருந்தால் மற்றவர்களைப்போல நானும் அவர்கள் குடும்ப ஸ்த்ரீகள் என்றுதான் எண்ணியிருப்பேன். தலையை அழகாகப் பின்னி முடித்து கண்ணியத்துடன் காணப்பட்டார்கள். சேலையின் தலைப்பைச் சுற்றி இடுப்பில் செருகிக்கொண்டு வலது தோளின் மீது ஒவ்வொரு வங்காள தேசத்துப் பெண்களைப் போலவே போர்த்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் குடும்ப ஸ்த்ரீகளுக்கும் கொஞ்சம் கூட வேற்றுமை என்பதே இல்லை. ஒரே வித்தியாசம், குடும்ப ஸ்த்ரீகள் நிஜமாகவே பஸ்ஸிற்குக் காத்திருந்தனர். இவர்கள் வேறு எதற்கோ.

எப்படி அவர்களால் இங்கே நிற்க முடிகிறது? பளிச்சென்று விளக்கு வெளிச்சத்தின் கீழ் நிற்க அவர்கள் கூச்சப்பட மாட்டார்களா? இந்த நகரில் இருட் பிரதேசமே இல்லையா? எல்லா விளக்குகளும் அணையட்டும் என்று அவர்களிடம் சொல்லலாம் என்று நினைத்தேன். என் மனதில் என்ன இருந்தது என்பதை அறிந்துகொண்டதைப்போல அவர்கள், “பாருங்க, இன்னிக்கு இந்த இடத்தில் என்னா விளக்கு வெளிச்சம் இருக்குன்னு. கொஞ்ச நாளைக்கு முன்னாடி எல்லாம் இந்த இடம் இவ்வளவு பிரகாசமா இல்லை. இந்த ஒளி வெள்ளத்தில்தான் பணக்காரப் பசங்க வர்றானுங்க. இதை விட்டால் நமக்கு போக்கிடம் ஏது?” என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டது என் செவிகளில் விழுந்தது.

நீங்கள் எங்கே இருக்கவேண்டுமோ அங்கே இருங்கள் பெண்களே. நான் சொல்வதைத் தவறாக நினைத்தாலும் பரவாயில்லை. நான் சொல்ல வருவது என்னவென்றால் உங்கள் தொழில் இருளில் நடத்தப்பட வேண்டிய தொழில். பிரகாசமான விளக்கு வெளிச்சத்தில் அல்ல. இன்னும் சிறிது நாட்களில் இந்த விளக்கு வெளிச்சம் பழகிப் போய் நிர்வாணமாகக் கூட நிற்பீர்களா? உங்களுக்கு என்று ஒழுக்கம் இல்லையா? கண்ணியம் இல்லையா? வங்கப் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் அமைப்புகள் மீது உங்களுக்குக் கொஞ்சமாவது மட்டு மரியாதை இல்லையா? இவையெல்லாம் நான் கேட்க நினைத்த கேள்விகள்.

இருக்கிறது ஐயா. எங்களுக்கும் தர்மசங்கடமாகதான் இருக்கிறது. எங்கள் வீட்டை வந்து பாருங்கள். நாங்களும் பெண்கள்தான். இருபத்துநான்கு மணிநேரத்தில் இந்த நான்கு மணிநேர உழைப்பு இல்லையென்றால் எங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு ஒருவேளை காய்ந்த ரொட்டித் துண்டுகூட சாப்பிடக் கிடைக்காது. இந்த நான்கு மணிநேரத்தில் வெளிச்சம், இருட்டு எதைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. இளைஞன், சிறுவன், கனவான், கிழவன் என்ற பேதமும் நாங்கள் பார்ப்பதில்லை. இவையெல்லாம் அவர்கள் நான் கேட்டிருந்தால் அந்தக் கேள்விகளுக்குச் சொல்லும் பதில்களாக இருந்திருக்கும்.

பிறகு எனக்கு ஏது மட்டு மரியாதை? என் கனவில் விளங்கிய ரீட் ரோடு

எங்கே? போதும், இனிமேலும் எதையும் கண்கொண்டு பார்க்க முடியும் என்று தோன்றவில்லை. இந்தச் சாலையைக் கடந்தால் போதும் இப்போதைக்கு. இதைத் தாண்டவேண்டும், பிறகு இன்னொன்றைத் தாண்ட வேண்டும். அதைக் கடந்ததும் டிராம் பாதைக்கு அப்பால் மகாத்மா காந்தி சிலையைப் பார்த்தேன். அந்தச் சிலையை ஒட்டிய பகுதியும் ஒளிவெள்ளத்தில் ஜொலித்தது. சிலையின் தலையிலிருந்து பாதம் வரை பறவைகளின் எச்சம். நான் இருப்புப் பாதையைக் கடந்து அந்தப் பக்கம் சென்றேன். நல்ல தூரம் நடந்துவிட்டேன். நான் நினைத்ததை விட அதிகமான தொலைவைக் கடந்து வந்துவிட்டேன். கொஞ்ச நேரம் உட்கார்ந்தால் தேவலை. இங்கேதான் நிறைய வருடங்களுக்கு முன்னால் நான் என் நண்பர்களுடன் அமர்ந்து வீணாய்ப் போன காரியங்களில் ஈடுபட்டிருக்கிறேன்.

நாங்கள் நால்வரும் கையில் உள்ள காசைப் போட்டு ஒரு புதிய ஜெனித் கேமரா வாங்கினோம். அந்த நாளில் ஜெனித் கேமராக்கள் மேட் இன் ரஷியா என்ற முத்திரையைத் தாங்கி வரும். ஒரு புது ஃபிலிம் சுருள் போட்டுக்கொண்டு புத்தாண்டின் முதல் நாளில் கல்கத்தாவின் மையப் பகுதிகளில் படம் பிடிக்கச் சென்றோம். அன்று மகாத்மா காந்தி சிலையைப் பல கோணங்களில் புகைப்படம் எடுத்தோம். ஒரு படத்தில் சிர்ஜியில் இருக்கும் சர்வதேச மையம் அமைந்துள்ள டாடாவின் கட்டடம் ஒன்றும் விழுந்தது. மற்றொன்றில் ஈடன் கார்டன் ஸ்டேடியம் தெரிந்தது. அதன் பின்னால் ஹூக்லி ஆறு. இன்னும் தள்ளி ஹௌரா பாலம். ஹௌரா பாலத்திற்கு அருகில் ஹௌரா இரயில் நிலையம். இந்த இரயில் நிலையத்திலிருந்து பிகாருக்குச் செல்ல இரயில் கிடைக்கும். ஒருவித தந்திர ஷாட்டில் என்னுடைய ஒரு கை மகாத்மாவின் தோள் மீதும் இன்னொரு கை அவருடைய கைத்தடி மீதும் இருப்பதுபோல எடுத்தோம். இந்தப் புகைப்படத்தைப் பார்ப்பவர்களுக்கு காந்தி என்றுமே தனியாக நடப்பவர் இல்லை என்பதுபோல தோன்றும். அவ்வளவு தத்ரூபம். நான் அவருடன் நடக்கத் தயார் என்பதுபோல அந்தப் புகைப்படம் அமைந்திருந்தது. இதைப் பார்த்தவர்கள் மனதில் இந்தப் படம் நிச்சயம் பதிந்து போயிருக்கும்.

“அடேய் பையா, என்ன தொழில் நுட்பத்தில் இதை எடுத்தாய்?”

“என்னைக் கேட்காதீர்கள். என் திறமை என்பதை விட கேமராவின் தரம் என்பதும் உள்ளது. இது ரஷ்யாவில் தயார் செய்யப்பட்டது. விலை கம்மியானது இல்லை. ஃபான்சி மார்க்கெட்டில் வாங்கியது.”

இந்தப் புகைப்படத்தை நாங்கள் ஏகப்பட்ட பேர்களிடம் காட்டியிருப்போம். இப்போது யார் வசம் அது உள்ளது என்பது தெரியவில்லை; கண்டிப்பாக என்னிடம் இல்லை. சில காலங்களில் சில பொருட்கள் மிகவும் விலை மதிப்பற்றவையாக விளங்கும். ஆனால் நாம் அதற்கான உரிய இடத்தை வழங்க மாட்டோம். உதாரணத்திற்குக் காதல் கடிதங்கள்.

அங்கிருந்து எழுந்ததும் பூங்கா சாலையில் உள்ள ஒரு உணவு விடுதிக்குச் சென்று ஒரு கோப்பை தேநீர் பருகி என் களைப்பைப் போக்கிக்கொள்ள உத்தேசித்தேன். தெரிந்தவர்கள் யாராவது சிக்கியிருந்தால் ஒரு மதுக்கூடத்திற்குப் போயிருக்கலாம். என் முன்னே நீளமான காலி பாதை நீண்டிருந்தது. தூரத்தில் தெரிந்த பார்க் சாலைக்கான திருப்பத்தில் மட்டும் நடைபாதையில் ஓரிருவர் தென்பட்டனர். தெரு முழுவதும் கார்கள் நிரம்பி வழிந்தன. நான் மெதுவாக நடந்தேன். வேகமாகப் போகவேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை. என் சொந்த ஊரில் நான் ஒரு யாத்திரிகனாக இருக்கிறேன். கொஞ்ச தூரம்தான் போயிருப்பேன், என்னை நோக்கி ஒரு வயதான பெண்மணி வருவதைப் பார்வையிட்டேன். எனக்கும் அவளுக்கும் மிஞ்சிப் போனால் நூறடி இல்லையென்றால் இன்னும் கொஞ்சம் அவ்வளவு தூரம்தான் இடைவெளி இருந்திருக்கும். அவளும் நிதானமாக வந்து கொண்டிருந்தாள். அவளுக்கும் என்னைப்போல தலை போகும் அவசரம் இல்லை போலிருக்கிறது.

வருடும் மாலைக் காற்று. கருமேகங்கள் வானைச் சூழத் தொடங்கிய பொழுது. இதுதான் கல்கத்தா. எப்போது மேகங்கள் விலகும்? எப்போது நிலவு வரும்? தெரியாது. இன்னும் கொஞ்ச நேரத்தில் காற்று நின்று போவதற்குச் சாத்தியங்கள் உள்ளன. அப்புறம் அவ்வளவுதான், நீங்கள் ஒரு ப்ரெஷர் குக்கரில் உட்கார்ந்திருப்பதுபோல ஆகிவிடும். அந்தப்

பெண்மணி என்னை நோக்கி வருவதாகத் தெரிகிறது. ஒருவேளை சாதாரணமாகக் கூட இருக்கலாம். இந்த நேரத்தில் அவள் மகன் கூட என்னைப் போல ஏதாவது ஒரு மூலையில் இந்த நகரத்தில் அலைந்து கொண்டிருக்கலாம். இந்த மாதிரியான நினைப்பினால்தான் அவள் என்னை உற்றுப் பார்க்கிறாளோ? இல்லை, அவள் என்னை உற்றுப் பார்க்கிறாள். அவள் கண்களில் ஒரு நம்பிக்கை. என்ன விதமான நம்பிக்கை? இவள் பரதேசிபோல தெரியவில்லை. அவள் என் அருகில் வந்து ஒப்பாரி வைக்கப் போகிறாள். அழுதுகொண்டே, ‘மகனே, என் புருஷன் ஆஸ்பத்திரியில் சாகக் கிடக்கார். இரத்தப் புற்றுநோய் வந்திருக்கு. மருத்துவச் சிகிச்சைக்கு உன்னால் இயன்றதைக் கொடு. உன்னிடம் பிச்சை கேட்கணும் என்பது என் விருப்பமில்லை. என் நேரம் இப்படிப் பிச்சை கேட்கும் நிலைக்குக் கொண்டு தள்ளியுள்ளது. மகனே உதவி பண்ணு. நீ உன் உத்யோகத்தில் நல்ல நிலையை அடைய ஆண்டவன் அருள் புரிவான். உன் பெண்டாட்டி பிள்ளைகள் நல்ல ஆயுள் ஆரோக்கியத்துடன் இருக்கட்டும்’ என்று கூறப் போகிறாள்.

அதுவுமில்லை என்றால் அவள், ‘ஐயா, என் கணவன் வேலை பார்த்துவந்த தொழிற்சாலையைப் போராட்டம் நடத்தி மூடிட்டாங்க. ஊழியர்களை வெளியே அனுப்பிட்டாங்க. நீ நல்லா இருக்கணும் தம்பி, எனக்குக் கல்யாண வயசில் ஒரு பொண்ணு இருக்கா. அடுத்த மாதம் கல்யாணம் பேசி வச்சிருக்கோம். உனக்குப் புண்ணியமா போகும். உன்னால முடிஞ்சதைக் கொடு.’

இது போன்ற நாகரிக நடிப்புகளுடன் கூடிய ஏமாற்றுப் பிச்சைக்காரர்களை அவன் எவ்வளவு பார்த்திருப்பான்? கல்கத்தா என்று உருவானதோ அன்றே இது போன்ற ஏமாற்றுப் பேர்வழிகளும் உருவாகிவிட்டனர்.

எந்த மனிதர்களிடம் இரக்க குணம் தேவைக்கு அதிகமாக இருக்கிறதோ அவர்கள் இதுபோன்ற ஏமாற்றுக்காரர்களின் நாடகங்களை எளிதில் நம்பி அவன் பையை நிரப்பி விடுகிறார்கள். தாங்கள் செய்யும் தர்மத்திற்குக் கடவுள் வெகுமதி வழங்குவார் என்றும் நம்புகின்றனர். இவர்களின் முட்டாள்தனத்தைப் பார்த்து இந்த ஏமாற்றுக்காரர்கள் சிரிக்காமல் என்ன

செய்வார்கள்? முட்டாள் மனிதா... கல்கத்தாவில்தானே வாழ்கிறாய்? கடவுளே, உனக்கு ஒரு பெரிய கும்பிடு என்று வானத்தைப் பார்த்துக் கும்பிடு போடுவான். இவன் போன்றவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய அவசியம் இல்லை. இது போல எத்தனை பேரை இந்தக் கல்கத்தா நகரில் பார்த்திருப்பேன்? இருக்கட்டும். அவள் அருகில் வரட்டும். ஒற்றைப் பைசா கூட அவளுக்குத் தரப் போவதில்லை. எனக்கு இது போன்ற நல்ல காரியங்கள் மூலம் புண்ணியம் கிடைக்கும் என்றால் அது தேவையில்லை.

எனக்கும் அவளுக்கும் நடுவில் தூரம் குறைந்துகொண்டே வந்தது. அவள் பார்வை. அணிந்திருக்கும் உடை இவற்றை வைத்துப் பார்த்தால் அவள் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவள்போல தோன்றினாள். அப்படி என்றால் இவளைப் பார்த்ததும் எனக்கு வந்த முதல் மதிப்பீடு சரிதான். நிச்சயம் அவள் நெருங்கி வந்து தன் சோகக் கதையைத் தொடங்குவாள். அவளுக்குப் பைசா எதுவும் கொடுக்க மாட்டேன். ஆனால் அவள் கதையைக் காது கொடுத்துக் கேட்பேன். இவள் போன்ற ஏமாற்றுக்காரர்கள் என்னவிதமான புதுப் புதுக் கதைகளைக் கற்பனை செய்து கூறுவார்கள். கதை புதிதா? இல்லை அதே சாகக் கிடக்கும் கணவன், மில் ஸ்ட்ரைக் போன்ற அரதப் பழைய கதையா? எனக்கும் கேட்க ஆவலானது.

அவள் என் எதிரில் நின்றாள். நான் மௌனமாகக் காத்திருந்தேன். நான் அப்போது திடீரென்று அந்த ஒளிக்கீற்றை அவள் கண்களில் கண்டேன். என்னிடம் மறைந்திருந்த வௌவால் சிறகடிக்கத் தொடங்கியது.

எனக்கு இந்தக் கண்களைத் தெரியும். இந்தக் கண்கள் அதே கண்களா? இந்த வயதில் இப்படி ஒரு கண்கள். வேண்டாம். எனக்குள் உள்ளே ஒருவித திகில் குடி கொண்டது. அந்த விழியின் ஒளிவெள்ளம் என்னுள் இருந்த வௌவாலை படபடக்கச் செய்தது. ஏதாவது சொல் பெண்ணே. எதையோ சொல்ல நினைக்கிறாய் இல்லையா? என்னவென்று சொல். நீ வெறுங்கையுடன் போக வேண்டிய அவசியம் இருக்காது. என் தொண்டை வறளத் தொடங்கியது. என் கால்கள் பூமியுடன் கட்டிப் போடப்பட்டது போலாயின. கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப உன் சோகக் கதையைக்

கூறு. உனக்கு நிச்சயம் ஏதாவது தருகிறேன். வெறுங்கையுடன் உன்னை அனுப்ப மாட்டேன். சொல்லம்மா.

என் அருகில் வந்து வலதுபுறமிருந்த இருட்பகுதியைக் கண்களால் ஜாடை காட்டி கேட்டாள்.

“வர்றியா?”

(உருது மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ஜாவித் காஸி)

# 14. காளிந்தி

## மனிஷா குல்ஷ்ரேஷ்தா

அந்த சைக்கிள் ரிக்ஷாக்களின் நெரிசலின் நடுவில் நானும் ஒரு ரிக்ஷாவில் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தேன். அப்படி ஒரு கூட்டம். உரசி உரசி தோள்பட்டை கழன்று விடும்போல இருந்தது. ரிக்ஷாக்கள் ஒன்றை ஒன்று முட்டிக்கொண்டு சென்றன. ஜனத் தொகை பெருகிவிட்டது. நான் அந்தச் சந்தினை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன். ஒரு காலத்தில் அந்தச் சந்தில் ஏராளமான பெண்கள் வசித்து வந்தார்கள்; இப்போது கூட இருக்கலாம். அந்தப் பெண்களின் உடல் ஆடவர்களின் பொதுச் சொத்து. அவர்களின் வசீகரம் மிகத் தொலைவில் உள்ள ஆடவர்களையும் இழுத்து வந்தது. மும்பைக்குச் சரக்கு ஏற்றிக்கொண்டு வரும் லாரிக்காரர்கள், தொலை தூர பிரதேசங்களில் தங்கள் மனைவி மக்களை விட்டு விட்டு வேலைக்கு வரும் கூலியாட்கள், பணியாட்கள், தங்கள் மனைவிமார்கள் மீது சலிப்பு வந்த நடுவயதுக்காரர்கள் என்று அந்தச் சந்து முழுவதும் அறிமுகமில்லாத ஆடவர்களால் நிரம்பி வழியும். எப்போது வேண்டுமானாலும், எந்த நாளாக இருந்தாலும் இங்கு ஆட்டமும் பாட்டமுமாய் இருக்கும். காலம் அவர்களுக்கு ஒரு பொருட்டே இல்லை. அவர்கள் முகங்களில் எப்போதும் ஒரு தீராப் பசியின் சாயல் இருந்துகொண்டே இருக்கும்.

நான் போய்க்கொண்டிருப்பது ஒரு மூன்று மாடி மஞ்சள் நிறக் கட்டடம். லேசாக இடிந்தும் மேற்கூரை கொஞ்சம் சிதிலமடைந்தும் இருக்கும். வேண்டாத பல தில்லு முல்லுகள் நடக்கும் பகுதி இது. எல்லாக் குடும்பங்களும் நல்லது, கெட்டது என்று எல்லாவித நடவடிக்கைகளிலும்

ஈடுபட்டிருக்கும். சாராயம் விற்பவர்கள், பிக்பாக்கெட் அடிப்பவர்கள், போதை மருந்து விற்பவர்கள், சினிமா எக்ஸ்ட்ரா நடிகைகள், பாரிலும், இசை நிகழ்ச்சிகளிலும் ரெக்கார்ட் டான்ஸ் ஆடுபவர்கள் இன்னும் பலர் வசிக்கும் பகுதி அது. சதை வியாபாரத்தில் சில பெண்கள் நேரடியாக ஈடுபடுகிறார்கள். பெற்ற பிள்ளைகளின் கண்களுக்குத் தெரியாமல் கணவன்மார்கள், பெற்றோர் சம்மதத்துடன் உடல் சுகத்தைப் பணத்திற்கு விற்கிறார்கள். அற்பப் பணம்; பிச்சைக்காசுதான். இருந்தாலும் வீட்டில் உலை பொங்க வேண்டுமல்லவா?

இதுபோல பல மஞ்சள் கட்டடங்களின் வரிசைகள் உள்ளன. கட்டடங்களின் வாயிலில் விபசாரிகளின் கணவன்மார்களும் காதலர்களும் தரகு வேலை பார்த்துக் கொண்டிருப்பார்கள். உள்ளே வாடிக்கையாளர்கள் அந்தப் பெண்களின் உடலோடு போராடிக் கொண்டிருப்பார்கள். அறைகள் எப்போதும் இருட்டாகவும் இருக்கும். ஈரத்துடன் கெட்ட வாடை வீசும். பெண்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு அங்கே காத்திருப்பார்கள். மஞ்சள் கட்டடங்களின் இருட்டு நிழலில் எப்போதும் அச்சமும், திகிலும் சூழ்ந்திருக்கும். கத்திகள் பளபளக்கும். பாலியல் வன்கொடுமைகள் சர்வ சாதாரணம்.

சில நேரங்களில் நினைத்துப் பார்க்கும்போது இங்கு பொதுவாக நிலவும் போதை சமாசாரங்களில் நான் எப்படி சுலபமாக மாட்டிக்கொள்ளாமல் இருந்தேன் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. சுலபத்தில் கெட்ட நடத்தையுடைய ஆடவன் அல்லது மகளிரின் கைப்பாவையாக நான் ஆகியிருக்க முடியும். தெய்வாதீனமாக அப்படி எதுவும் ஆகவில்லை. துர்காவைப்போல தீராப் பாலியல் இச்சையுள்ள ஒரு பெண்ணிற்கோ, அல்லது டேவிட்போல கெட்ட புத்தி கொண்டவர்களுக்கோ நான் இரையாகி இருக்கலாம். அந்தக் குடியிருப்பில் இருந்த மற்ற சிறுவர்கள் போலவே நானும் எளிதில் பலியாகி இருப்பேன்.

அங்கே என்ன வகையான ஒழுக்கம் கெட்ட காரியங்கள் நடக்கிறது என்று ஜமுனாவுக்கு நன்றாகத் தெரியும். அவள் புத்திசாலி. என்னை எச்சரித்துக்கொண்டே இருப்பாள். அவனோட உட்காராதே; அவனோட

பேசாதே; உன்னை யார் அவன் ரூமுக்குப் போகச் சொன்னது? அவனோட விளையாடப் போகாதே. நான் அதே அச்சமூட்டும் கெட்ட காரியங்களைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருப்பேன். நான் அவைகளுக்கு பலியாகியிருந்தால் என்னவாகியிருக்கும்? அப்படி ஒரு விஷயம் எனக்கும் ஏற்பட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும்? நல்லவேளை ஜமுனாதான் காப்பாற்றினாள். வலியோடு கூடிய கடந்த கால நிகழ்வுகளை நினைத்துப் பார்ப்பது ஒருவித அலாதி சுகத்தை அளித்தது. சொரிந்து சொரிந்து இரத்தம் வரும் வரை காத்திருந்தேன். இனிமையான வலி; இனிமையான சந்தோஷம்.

என் வயதுக் குழந்தைகளுக்கு கிராக்கி என்ற வார்த்தை அதிக திகிலை ஏற்படுத்தும். கிராக்கி என்றால் பெண்களின் கழுத்தை நெரிக்கும் பிசாசு. அதன் பிடியில் பெண்கள் அலறுவார்கள். அந்தப் பிசாசு வரவில்லை என்றால் வீட்டில் ரொட்டி கிடைக்காது. தொட்டுக் கொள்ள சப்ஜி இருக்காது. இந்த வார்த்தையோடு பல கதைகள் இணைந்திருக்கும். முதன் முதலாக நான் இந்த வார்த்தையைக் கேட்டபோது எனக்கு ஏற்பட்ட விசித்திர உணர்வு மற்ற குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஒருநாள் இரவு மணி பத்தரை இருக்கும். வீட்டு பால்கனியில் நான்கைந்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது மாடிப்படி ஏறி வந்த சோட்டு தலால், "டே, பத்தரை மணி உங்களுக்கு விளையாடும் நேரமா? இனிமேல் அபின் கொடுத்தாக் கூட பிரயோஜனம் இருக்காது. போங்கடா, போய்த் தூங்குங்க. கிராக்கி வர்ற நேரம்" என்று சத்தம் போட்டாள். கிராக்கி என்று அந்த வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்துக் கொண்டேன்.

நான் இதுவரை ஒரு கிராக்கியைக்கூட பார்த்ததில்லை. ஒரு நாள் பள்ளிக்கூடம் விட்டு வரும்போது ஜமுனா அறையிலிருந்து ஒரு மனிதன் வெளியேறிக் கொண்டிருந்தான். நான் அவளிடம் "அம்மா, இதுதான் கிராக்கியா?" என்று கேட்டேன். அம்மா என்னை ஆச்சரியத்துடன் பார்த்தாள். பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ நேரே படுக்கையில் போய் விழுந்தாள். எனக்குத் தின்பதற்குக் கூட எதுவும் கொடுக்கவில்லை. நான் அன்று மாலை வரை பட்டினி. அவளுடைய பெட்டியில் இருந்த

புகைப்பட ஆல்பம் ஒன்றை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தேன். அதில் இருந்த புகைப்படங்கள் மங்கிய தோற்றம் கொண்டிருந்தன. அதில் இருந்த பல முகங்களை எனக்கு அடையாளம் தெரியவில்லை. ஒரு ஃபோட்டோவில் நிறைய பெண்கள் இருந்தனர். அதில் ஒருத்தி என்னுடைய அம்மா. மற்றொரு ஃபோட்டோவில் அம்மாவின் உருவம் முழுமையாகவும் ஓர் ஆடவனின் தோள் மட்டும் இருந்தது.

ஜமுனா, என் அம்மா, அந்தச் சந்தில் குடியிருக்கும் பெண்களைப்போல இல்லை. கொஞ்சம் வேறு மாதிரியானவள், தன் இஷ்டத்திற்கு வாழும் பெண்களைப்போல அது சரியோ தவறோ வாழ்ந்து வருபவள். எனவே அவளுக்கு அதிகப் படிப்பறிவு இல்லை என்பது கூட ஒரு பெரிய விஷயமாகப் படவில்லை. நான் குழந்தையாக இருக்கும்போது கூட அவளுடைய மன உறுதியும், பலமும் எனக்குப் பிடிக்கும். அடுத்தவர்கள் முன்னால் அமைதியாக இருப்பவள் தனியாக இருக்கும்போது வாய் ஓயாமல் அடுத்தவர்கள் மீது நூறு குற்றம் சொல்வாள். தனது பயங்களை என்னிடம் சொல்லும்போது ஒரு வீரச் சிறுவனாக என்னை பாவித்து அவற்றைப் போக்க வழி சொல்வேன். அவளுடைய பிரதான போராட்டம் அன்றாட வாழ்வுடன்தான். எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வாள். வீதி வீதியாகச் சென்று சோப்பு விற்பாள். சில சமயம் வீட்டில் அமர்ந்து சேலைகளின் விளிம்பில் ஃபால்ஸ் தைத்துக் கொடுப்பாள். வேறு சில சமயம் குடியில் உள்ள மற்ற விபசாரிகளின் உடம்பு பிடித்து வரப் போவாள். எது எப்படி ஆனாலும் நேர்மையான வழியில் காசு சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் அவளது நோக்கமாக இருந்தது.

தனது வாழ்வின் போராட்டத்திற்காக விட்டுக் கொடுத்த பூரணத்துவத்தின் மதிப்பை அவள் உணரவேயில்லை. வாழ்வில் சந்தித்த அடி, உதைகளால் அதன் பூரணத்துவத்தை அவள் உணரவே இல்லை. நைந்து போன முழுமையை அவள் நைந்து போன நிலையில்தான் அறிந்துகொள்ள முடிந்தது. இந்தச் சிதைவு எப்போது ஆரம்பித்தது என்பதன் சுவடு அவள் மனதில் மங்கலாகதான் இருக்கிறது.

இதோ வெகுநாட்கள் கழித்து மீண்டும் அவள் முன் அமர்ந்திருந்தான் அவன். அவள் படுக்கையில் கிடந்தாள். என்னைப் பார்த்துதான் படுத்திருந்தாள் என்றாலும் என் விழியை அவள் ஏறெடுக்கவில்லை. என் மனதின் இடைவெளிகளில் நூல் விட்டுப் பார்த்தேன். எனக்கும் இந்தப் பெண்மணிக்கும் உள்ள நட்பின் ஆழத்தை அளந்தேன். பார்வையை ஜன்னலுக்கு வெளியில் ஓடவிட்டேன். மிகப் பழைய மரம் ஒன்று தனது கிளைகளைக் காற்றில் வேகமாக அசைத்துக் கொண்டிருந்தது. தூசியினாலும், புகையினாலும் அந்த மரத்தின் இலைகளில் சாம்பல் நிறம் படர்ந்திருந்தது. அதன் வேர்கள் சாலையில் போட்டிருந்த தார் பூச்சைப் பிளந்துகொண்டு வெளியில் வந்து சுவாசித்துக் கொண்டிருந்தன. பூமியின் அடியில் ஈரம் இல்லை; வளம் இல்லை. வெறும் வறண்ட மணல். அந்த மரங்கள் விசித்திர நிலையில் இருந்தன. எப்படி அவை இந்த இடத்தை வந்து சேர்ந்தன என்பது வியப்பாகவே உள்ளது. அவை இங்கு முளை விடும்போது இந்தப் பகுதி ஒரு காட்டின் தொடக்கமாக இருந்திருக்க வேண்டும். இப்போது எங்கும் ஜனநெரிசல், கூட்டமான அங்காடித் தெருக்கள், சுற்றி சுற்றி சந்துகள். சுற்றி எழுந்த நாற்றத்தால் குமட்டல் ஏற்பட அவளைப் பார்த்தேன். உதைபட்டும், அடிபட்டும் நைந்து போன அவளது இருப்பு. இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு விதியுடன் போராடும் அவளது உறுதி. எதைச் சொல்வது? எதைச் சொல்லாமல் விடுவது?

என் பிள்ளைப்பருவத்தில் இவள் என் கனவுகளின் நாயகி. என் கனவு தெய்வம். எங்கள் இருவருக்கும் இடையில் குறைந்தது பதினைந்து வருட இடைவெளியாவது இருக்கும். நான் சிறுவனாக இருக்கும்போது அவள் பதின் பருவப் பெண். பள்ளிக்குச் செல்லும்பொது என்னுடன் வருவாள். என்னுடன் வாய் ஓயாமல் அரட்டை அடித்துக்கொண்டே வருவாள். அந்த இடமே அவள் அரட்டையால் வண்ண மயமானது போலிருக்கும். பள்ளி அமைந்திருக்கும் இரண்டு மைல் தூரம் வரையில் என் புத்தகக் கட்டை அவள்தான் சுமந்துகொண்டு வருவாள். நான் அவளிடம் அந்தப் பகுதியில் வசிக்கும் மற்ற சிறுவர்களைப்போல அருகில் உள்ள அரசுப் பள்ளியில் படித்துக் கொள்வதாகக் கூறுவேன். அப்படிப் படிப்பதால் இவ்வளவு தூரம்

நடக்க வேண்டாமே. அதற்கு அவள், “நீ மற்ற பிள்ளைகளைப்போல இல்லை. நீ வேறு மாதிரி. என்னைப்போல” என்பாள்.

நெரிசல் மிகுந்த அந்தச் சாலை அவளுடன் செல்லும்போது காட்டுப்பூக்கள் மலர்ந்ததைப் போலாகிவிடும். பள்ளிக்கூடம் கண்ணில் பட்டதுமே அவள் வீட்டிற்குத் திரும்பிவிடுவாள். நான் உரத்த குரலில், “பள்ளிக்கூட கேட் வரைக்கும் வா…” என்று கத்துவேன். அவள் உறுமலுடன் மறுப்பாள். “எனக்கு மத்த வேலையில்லையா?” உடனே அவளுடைய மிருதுவான முகம் இறுகிவிடும்.

என் குழந்தைப்பருவம் பூராவும் இவளை நான் நேசித்தேன். சாதாரண நைலான் புடைவையில் இருந்தாலும், காட்டன் சல்வார் கமீஸில் இருந்தாலும் அவள் எனக்கு தேவதைபோல தெரிவாள். அவளது கறுப்பு நிறம், சுருட்டை முடி, கண்களின் கீழ் இருக்கும் கருவளையங்கள், திரண்ட முதுகு, மூடப்படாத கால்கள், சற்றுத் தூக்கியிருக்கும் கழுத்து எலும்புகள் என்று அவளிடம் எனக்கு எல்லாமும் பிடிக்கும்.

எனக்கு வயதாக ஆக அவளைப் பற்றித் தெரிய வந்தபோது கோபம்தான் வந்தது. என்னைப் பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு அவள் எங்கே கண் மறைகிறாள் என்பது எனக்குத் தெரியாமலே இருந்தது. சோப்பு விற்பதையும், விபசாரக் கூடங்களில் இருக்கும் பெண்களுக்கு உடம்பு பிடித்து விடுவதையும் அவள் அப்போது செய்வதில்லை. நிறுத்திக் கொண்டுவிட்டாள். நான் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்போது அவள் வீட்டில் இருக்க மாட்டாள். நான் சிறுவன்தானே? அவளைக் காணாமல் கூச்சல் போடுவேன். வீட்டிற்குள் வந்ததும் என் கோபத்தைத் தனது புன்னகையால் தணித்து விடுவாள். எனக்கு ஒரு குவளை பாலும், ஒரு பன்னும் தந்து என்னை ஆசையுடன் பார்ப்பாள். மீண்டும் என்னுடன் அவள் மகிழ்ச்சியுடன் இருப்பாள்.

எனக்குப் பதினைந்து வயதாகும்போது மேலும் பல விஷயங்கள் புரியத் தொடங்கின. பல விஷயங்கள் இல்லை எல்லா விஷயங்களும் புரியத் தொடங்கின. நான் பயின்றது ஆங்கிலப் பள்ளியில், என்னுடைய சூழலோ முற்றிலும் வேறானது. இறுதியில் எனக்குக் குழப்பம்தான் எஞ்சியது. நான்

பெரிய தயக்கத்தில் இருந்தேன். எத்தனை விதமான ஆளுமைகள் என்னுள் தோன்றுவதும், மறைவதுமாக இருந்தன. பள்ளிக்கூடத்தில் அடுத்த பையன்களோடு சண்டை வந்தால் என் குடியிருப்பில் மோசமான பெண்கள் பேசும் தகாத வார்த்தை வசவுகளைச் சகட்டு மேனிக்குப் பயன்படுத்தி சக மாணவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவேன். உடனே என் மீது புகார் போகும். உடற் பயிற்சி ஆசிரியரிடம் தண்டனை உறுதியாகும். அதேபோல குடியில் இருக்கும் பையன்களிடம் பள்ளி ஆங்கிலத்தில் பேசி கேலியையும் கிண்டலையும் வாங்கிக் கட்டிக் கொள்வேன். எங்கள் குடியிருப்புப் பகுதியில் உடலைப் பற்றியும் அதன் மர்மங்கள் பற்றியும் சொல்லிக் கொடுக்கப்படும் இரகசியப் பாடங்களுக்குக் கணக்கே இருக்காது. பெரும்பாலும் மதிய நேரங்களில் வெறும் பாவாடை ஜாக்கெட்டுடன் திரியும் குடிப் பெண்கள் மாடிப்படிகளின் அடியில் மறைவாக இந்த இரகசியம் குறித்துப் பேசிக் கொண்டிருப்பார்கள். நான் நித்தம் கேட்க நேரிடும் சரச சல்லாப முனகல்களும், பாலியலின் மொழியும், வாடையும் என்னைக் கிட்டத்தட்ட ஊமையாக்கி இருந்தன.

ஒரு நாள் அறையின் மங்கிய ஒளியில் மாறுவதும் சேருவதுமான நிழல் தோற்றங்களை நான் விசித்திரமாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவள், “இப்பல்லாம் உனக்குள் விடை தெரியாத கேள்விகள் நிறைய வர ஆரம்பிச்சிருக்கும் இல்லையா?” என்றாள். நான் ஆமாம் என்பதன் அடையாளமாகத் தலையசைத்தேன். “கேளு, என்னென்ன விஷயமெல்லாம் உன்னைத் தொந்தரவு செய்கிறதோ என்னென்ன சந்தேகங்கள் உனக்கு வருகிறதோ அத்தனையையும் கேளு” என்று ஆரம்பித்தாள்.

நான் நெடுநேரம் ஒன்றும் பேசாமல் இருந்தேன். என் ஆன்மாவைத் தின்று, என்னைச் சித்திரவதை செய்து, என் இதயத்தில் துளை செய்துகொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேன்

“நீ இன்னும் கல்யாணமே பண்ணிக்கலையா?”

“இல்லை.”

“சரி நிஜமா சொல்லு. பண்ணிப்பியா?”

“ஆமாம்.”

“சத்தியமா?”

“என் மேல சத்தியம்.”

“என் மேல சத்தியம் பண்ணு.”

“உனக்கென்ன பைத்தியமா? சத்தியம் என்னிக்கும் சத்தியம்தான்.”

“அப்போ என் மேல சத்தியம் பண்ணு.”

“உன் மேல் சத்தியம்.”

“உனக்கு கல்யாணம் ஆகவில்லை என்றால் நான் எப்படி வந்தேன்?”

“மத்த குழந்தைகள் எப்படி வந்ததோ அதே மாதிரிதான் நீயும் வந்தே.”

“அப்படின்னா நானும் ஒரு வாடிக்கையாளனுக்கு பிறந்த பையனா?”

“இல்லை. அது அப்படி இல்லை.”

“உண்மை சொல்றேன்னு நீதான் சத்தியம் பண்ணியிருக்கே.”

“உனக்கு புரியாது.”

“இல்லை எனக்கு எல்லாம் புரியும்.”

“இல்லை உனக்கு புரியாது.”

“நீ சொல்ல மாட்டேன்னு எனக்கு தெரியும். நீ சத்தியத்தை மீறுகிறாய்.”

“நான் உண்மையைதான் சொல்கிறேன். நிஜமா நான் சொல்வது உண்மை. உனக்கும் ஒரு அப்பா இருக்கார். அவர் பெயரைதான் உன் பள்ளிக்கூடப் புஸ்தகத்தில் கொடுத்திருக்கிறேன். என்னை விட்டுட்டுப் போயிட்டார். அவர் பெயரை உன்னால் நீக்க முடியாது. ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படிக்க வச்சதுனாலதானே உன்னால இவ்வளவு கேள்வி கேட்க முடியுது? உன்னையும் கவர்ன்மென்ட் ஸ்கூலில் படிக்க வச்சிருந்தா இப்படியெல்லாம் என்னைக் கேட்டிருப்பியா? உனக்கே புரிஞ்சிருக்கும்.”

அவள் பற்றிய உண்மை விளங்கியதும் விபசாரிகளும், தரகர்களும்

நடனமாடும் பெண்களும் நிறைந்த அந்தக் குடியிருப்பிலிருந்து ஓடிப் போய்விட வேண்டும் என்று தோன்றியது.

“ஜமுனா, வா... நாம வேற எங்கேயாவது போய் நல்ல வாழ்க்கை வாழலாம்.”

“வீட்டு வாடகை எப்படிக் கொடுப்பே?”

“இதுக்கு எவ்வளவு கொடுக்கறே? எனக்கு மண் சுவரும் ஓலைக் கூரையும் உள்ள குடிசைகூட போதும். இந்த இடம் வேண்டாம்.”

“இதுக்கு நான் வாடகை கொடுக்கலை. இது என் அம்மாவோடது. அவள் இதை விலைக்கு வாங்கியிருக்கா.”

“ஆனா உன் வீடு ரத்னகிரி பக்கம் இருக்கு, உன் வீட்டுக்காரருக்கு நிறைய மாந்தோப்பு எல்லாம் இருக்குன்னு சொன்னியே?”

“ஆமாம் அதுவும் சரிதான். என் அம்மா ஒரு வேசி. அவள்தான் இந்த அறையை வாங்கினாள். என் கணவர் அதாவது உன்னுடைய அப்பாவின் வீடு ரத்னகிரியில் இருக்கு.”

“நீயும் அதே தொழிலைச் செய்ய ஆரம்பிச்சுட்டியே...”

அவள் கண்கள் பாறைகளைப்போல இறுகின. ஆவேசம் வந்தவள்போல தனது தலையைச் சுவரில் முட்டிக்கொள்ள ஆரம்பித்தாள். மெதுவாக ஆரம்பித்துப் பிறகு வேக வேகமாக. அந்த நாடகம் எனக்கு வெறுப்பூட்டியது.

அன்றைய தினமும் நான் ‘வாடிக்கையாளர்’ என்ற வார்த்தையை உபயோகித்ததும் பைத்தியக்காரி போல நடந்து கொண்டாள். அப்பாவிபோல நாடகம் ஆடினாள். தெருவில் உள்ள பிள்ளைகள் எல்லோரும் ‘கிராக்கி’ என்ற வார்த்தையை சர்வ சாதாரணமாகக் கூறுகிறார்கள். அவர்களுடைய தாய்மார்கள் அதற்காக அவர்களைக் கண்டிக்கக் காணோம். இவளுக்கு மட்டும் என்ன பெரிதாகக் கோபம்? இவளும் இவளுடைய நாடகமும்.

அன்றிலிருந்து நான் அவளிடம் எதுவும் கூறவில்லை; எதுவும்

கேட்கவில்லை. எனது சந்தேகம் ஊர்ஜிதமானது. என்னைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு அவள் தனது தொழிலைப் பார்க்கப் போய்விடுவாள் போலிருக்கிறது. தொழில் செய்யாமல் அவளால் அப்புறம் எப்படி என்னை ஓர் ஆங்கிலப்பள்ளியில் ஃபீஸ் கட்டிப் படிக்க வைக்க முடியும்? இரவில் எனக்கு ராஜா ராணி கதைகளைச் சொல்வதோடு தூங்க வைக்க அபினியும் கொடுப்பாள்போல தெரிகிறது. அவள் பர்ஸில் எப்போதும் கட்டுக் கட்டாகப் பத்து ரூபாய் நோட்டுகள் இருக்கும். இப்போதெல்லாம் ஒரு வங்கிக் கணக்குப் புத்தகமும் கண்ணில் தென்பட ஆரம்பித்திருக்கிறது.

•

ஒருநாள் நான் பள்ளிக்கூடத்திற்குப் பாதி வழியில் போய்க் கொண்டிருந்தபோது ஒரு மட்டமான ஹோட்டல் ஒன்றின் மேஜை மீது எனது புத்தகப் பையை இறக்கி வைத்தேன். அன்று அவளது நடவடிக்கைகளைக் கண்காணிப்பது என்று முடிவு பண்ணினேன். ஹோட்டல் எங்கள் மஞ்சள் கட்டடத்தின் முன்பு இருந்தது. சேலை ஒன்றைக் கட்டிக்கொண்டு வெளியில் வந்தாள். அவள் கூந்தல் பின்னப்படாமல் வெறும் ரப்பர் பேண்ட் ஒன்றினால் தளர்வாக முடியப்பட்டிருந்தது. கூந்தலை ஒரு சாமந்திப்பூ அலங்கரித்துக் கொண்டிருந்தது. கையில் ஒரு பர்ஸ் வைத்திருந்தாள். என் கால்கள் நழுவி பாதாளத்திற்குள் சென்றுவிடுவன போலிருந்தன.

நான் மேஜை மேல் புத்தகப் பையை வைத்துவிட்டு அவளைப் பின்தொடர்ந்தேன். தெருத் தெருவாக. குறுக்குச் சாலைகள், திருப்பங்கள், கரடு முரடான சாலைகள், இரயில் தண்டவாளங்கள். அதன் பிறகு ஒன்பதே காலுக்கு வரும் லோக்கல் பாசெஞ்சர். நான் டிக்கெட் எதுவும் வாங்காமல் இரயில் பெட்டியில் ஏறினேன். என்னைப் பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்தேன். ஆனால் அவள் முகத்தைத் திருப்பிச் சுற்றும் முற்றும் பார்க்கும்போதெல்லாம் நான் ஒரு பருமனான மனிதன் பின்னால் என்னை மறைத்துக் கொண்டேன். அவள் இறங்கிய இரயில் நிலையத்திலேயே நானும் இறங்கினேன். மீண்டும் அவள் நடக்க

ஆரம்பித்தாள். நான் கடுப்பாகினேன். இன்னும் எவ்வளவு தூரம்? பிறகு அவள் ஒரு கட்டடத்திற்குள் நுழைந்தாள். அது ஒரு கிறித்தவத் தேவாலயம். வாயிற்காப்போன் வேறு ஒருவரிடம் அனுமதிச் சீட்டு கேட்டுக் கொண்டிருந்தபோது நான் திட்டி வாசல் வழியாகத் திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்தேன்.

பெரிய தோட்டம் நன்கு பராமரிக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் சிவப்பு மற்றும் வெள்ளை வர்ணம் பூசப்பட்ட பெரிய கட்டடம் ஒன்று இருந்தது. பெரிய நுழைவாயில் வளைவுகள், உயரமான கதவுகள். எல்லாமே திறந்தும் விரிந்தும் காணப்பட்டன. சுத்தமான காற்றில் நறுமணம் தவழ்ந்து கொண்டிருந்தது. எனக்கு எல்லாமே மறந்து போனது. என் மனதில் மகிழ்ச்சி குடி கொண்டது. நான் குடியிருக்கும் நரகத்தை ஒப்புநோக்கும்போது இது சொர்க்கம். அதன் அழகில் மயங்கி அங்கேயே நின்றிருந்தேன். அவள் தேவாலயக் கட்டடத்தின் தாழ்வார வளைவுகளில் நடந்து கொண்டிருந்ததைப் பார்த்து விட்டேன். பெரிய கூடங்கள். வெண் சட்டை அணிந்த ஆடவர்கள். அழகும் தூய்மையும் நிறைந்த பெண்கள். மாணவர்கள் - ஆண், பெண் இருபாலரும் - உள்ளே வருவதும் போவதுமாக இருந்தனர். அவள் அங்கே வேலை பார்ப்பவளா? அல்லது அவளது சொந்தக்காரர்கள் யாராவது அங்கே இருக்கின்றார்களா? எனது சந்தேகங்கள் வளர்ந்துகொண்டே போயின.

அங்கிருந்த கூடம் ஒன்றில் நுழைந்தவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். பின்னால் தொடர்ந்து கொண்டிருந்த நான் சட்டென்று ஒரு பெரிய வெள்ளைத் தூண் பின்னால் மறைந்து கொண்டேன். அவள் அதே தூணை நோக்கி வந்தாள். ‘ என்னைப் பார்த்திருப்பாளோ?’ என் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஓடியும், நடந்தும் வந்ததால் என் சுவாசம் சீராக இல்லை. அவள் வேறு தோற்றம் கொண்டிருந்தாள். இதுவரை காணாத சற்று சோகமான ஆனால் அமைதி நிரம்பிய தோற்றம். நான் மறைந்திருந்த தூணுக்கு முன்னால் இருந்த பெரிய கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். தூண் மறைவிலிருந்து வெளியில் வந்தேன். இலைகளின் சலசலப்பிற்கும், குளிர்ந்த காற்றிற்கும் நடுவில் நான் தனியாக நின்றேன்.

நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். தாழ்வாரத்தின் இருபக்கச் சுவர்களிலும் வித விதமான ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. எல்லாமே மெகா சைஸ் ஓவியங்கள். விசித்திர உருவங்கள். பச்சை நிறப் பசுக்கள்; ஊதா வர்ணத்தில் மலைகள். பாதி நிர்வாணமான மெலிந்த மனிதர்கள் வயலில் குனிந்து வேலை செய்து கொண்டிருந்தனர்; நாடோடிப் பெண்களின் கும்பல் ஒன்று. மரங்களில் பெரிய சிவப்பு மலர்களில் மனித முகங்கள் வரையப்பட்டிருந்தன. சில முகங்கள் சிரித்தபடி; சில முகங்கள் அழுதபடி. என்ன வகையான ஓவியங்கள் இவை? விசித்திரமாகவும் திகிலூட்டும்படியாகவும் இருந்தன. திடீரென்று பலவிதமான காலடியோசைகள் எழுந்தன. பேச்சுச் சப்தம், சிரிப்புச் சப்தம் கேட்டன. நான் தாழ்வாரத்திலிருந்து புல் வெளிக்குத் தாவினேன்.

அவள் அந்த அறைக்குள் நுழைந்து பதினைந்து நிமிடங்கள் போயிருக்கும். நான் அந்த அறையின் வாசலிலிருந்து என் கண்ணை எடுக்கவில்லை. ஒரேயடியாக என் வயற்றில் ஒரு கலவரம் பிறந்தது. ஒரு பெரிய கலவர பூகம்பம் என் வயிற்றில் தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவள் இந்தத் தாழ்வாரத்திலும், இந்த அறைகளிலும் மறைந்து போனால் என்னால் என்ன செய்ய முடியும்? நான் இங்கு இருப்பது தெரியாமல் அவள் வீட்டிற்குப் போய்விட்டால்? நான் இந்தப் புரியாத சூழலில் மாட்டிக் கொண்டிருப்பது தெரியாமல் என்னை வீட்டில் தேட மாட்டாளா? எனக்குத் திரும்பிப் போக வழி தெரியாது. இரயில் நிலையங்களுக்குப் போய்ப் பழக்கமில்லை. நான் காட்கோபரைத் தாண்டி பயணம் செய்ததில்லை.

அவளுக்கு அங்கேதான் வேலை என்றால் அன்று தங்கிவிட்டு மறுநாள் நிச்சயம் திரும்பிவிடுவாள். அவள் பணிநிமித்தம் வராமல் ஏதாவது சேதி தெரிவிக்க வந்திருந்தால் நான் என்ன செய்வது? எனக்குப் பதினைந்து வயது ஆகியிருக்கிறதே தவிர இன்னும் நான் ஒரு குழந்தைதான். அந்தக் குடியில் இருக்கும் மற்ற பையன்கள் என்னை இன்னும் அம்மாவிடம் பால் குடிப்பவன் என்றும் இன்னும் அம்மாவின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு திரிபவன் என்றும் கேலி பண்ணுகிறார்கள். என் உள்ளங்கை இரண்டும் வியர்வையில் சொத சொத என்று ஆகிவிட்டன.

பசி வயிற்றைக் கிள்ளியது. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. நெஞ்சில் அச்சம் சூழ்ந்து கொண்டது. வாயில் காப்போனிடம் 'உனக்கு ஜமுனா பாய் சாலுங்கேயைத் தெரியுமா?' என்று கேட்கலாமா? அடேய் பொடியா, நீ எப்படி உள்ளே வந்தாய் என்று காதைப் பிடித்துத் திருகினால் என்ன செய்வது?

நான் நடுங்கியபடி தாழ்வாரத்தை ஒட்டியிருந்த புல்வெளியில் நடந்தேன். தாழ்வாரம் முடிந்ததும் ஜன்னல்கள் வரிசையாகத் தெரிந்தன. நான் ஒவ்வொரு ஜன்னலின் கீழ் உள்ள திட்டைகளைப் பிடித்துப் பிடித்து நடந்தேன். அப்படியே ஒவ்வொரு ஜன்னலுக்குள்ளும் என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்துக் கொண்டே சென்றேன். சில ஜன்னல்களைத் திரையிட்டிருந்தார்கள். சில ஜன்னல்கள் திறந்திருந்தன. உள்ளே தெரிந்த சற்றுப் பெரிய கூடங்களில் நிறைய ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. மாணவர்களும், மாணவிகளும் இன்னும் நிறைய ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருந்தனர். பெரியதும் சிறியதுமாக சிற்பங்கள் ஒரு கூடத்தில். ஒரு கூடத்தில் மரக்கட்டைகளைக் கடைந்து வினோத உருவங்களைச் செதுக்கிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கூடத்திலும் உயர உயரமாய் விளக்குகளும், பெரிய பெரிய கேமராக்களும் இருந்தன. எனக்கு நடுக்கம் அறவே போய் அடக்க முடியாத ஆவல் மேலிட்டது. அவளை எப்படியும் கண்டுபிடித்துவிடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

நான் ஒரு ஜன்னல் அருகில் சென்றதும் எனக்கு மூர்ச்சையாகிவிடும் போலிருந்தது. அந்தக் கூடத்தின் ஜன்னல் திரைகள் விலகியே இருந்தன. உள்ளே பலவித மனிதர்களின் ஓவியங்கள். அந்த ஓவியத்தில் இருந்த மனிதர்கள் உடலில் ஒரு சின்னத் துணி கூட இல்லாமல் நிர்வாணமாக நின்றனர். ஆண்கள் பெண்கள் - அவர்களில் வயோதிகர்களும் உண்டு, இளவயதினரும் உண்டு - ஆனால் ஒருவருக்கும் உடை என்பது கிடையாது. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இதற்கு நடுவில் நான் இப்படிப்பட்ட பெண்களின் நிர்வாணப் படங்களைச் சில புத்தகங்களில் பார்த்திருக்கிறேன். எங்கள் குடியில் அந்த மாதிரி புத்தகங்கள் ஏராளமாகக் கிடைக்கும். வெள்ளை வெளேரென்று, ஆடை எதுவுமின்றி அழகாக இருக்கும் பெண்கள். அந்தக் கூடத்தில் காணப்பட்ட சில ஓவியங்களில்

பாறைபோல முகங்கள். சில முகங்கள் தலை குனிந்திருந்தன. பெண்களின் முலைகள் தொங்கிப் போயிருந்தன. பிருஷ்ட பாகம் பெரிதாகத் தீட்டப்பட்டிருந்தன. எனக்கு வருத்தமாக இருந்தது. சில யுவன்களும், யுவதிகளும் உள்ளே நுழைந்தனர். அவர்களின் பின்னால் அதோ அவள். நான் அவளை அழைப்பதற்குக் குரல் எழுப்ப எத்தனித்தேன். அவள் ஒரு உயரமான மேஜை மேல் ஏறிக் கொண்டிருந்தாள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் சேலை கட்டியிருக்கவில்லை. உடலை ஒரு பெரிய துண்டால் போர்த்திக் கொண்டிருந்தாள். இதேபோல துண்டு எப்படிக் கட்டிக்கொள்வது என்று அந்த யுவன் யுவதிகளுக்குச் சொல்லிக் கொடுப்பாளோ? ஒரு குறுந்தாடி மனிதன் வெறும் வயிறுடன் குப்புறப் படுத்துக் கிடந்தான். அவன் கால்களை மடக்கி இடுப்பை உயர்த்திக் கொண்டிருந்தான். அவன் எழுந்து ஒரு வட்டமேஜையின் மீது அமர்ந்தான். யுவன்களும், யுவதிகளும் வட்ட மேஜையைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். அவள் இன்னொரு நீள மேஜையின் மேல் இருந்தாள். அவள். அவளா அது? அந்த மேஜையில் உடலில் துணி எதுவுமில்லாமல் இடுப்பை உயரத் தூக்கிக் கொண்டிருக்கும் பெண் யார்? அவள்தான்.

எனக்கு வாய் அடைத்துப் போனது. என்ன இதெல்லாம்? என் கைப்பிடி நழுவியது. நான் ஜன்னல் திட்டையிலிருந்து ஜடமாகக் கீழே விழுந்தேன். நான் எவ்வித அசைவுமில்லாமல் என்ன நடக்கிறது என்பதுகூட தெரியாமல் கிடந்தேன். இது என்ன மாதிரியான தொழில்? நான் பார்த்த மஞ்சள் பத்திரிகைகளில் இருக்கும் வேசிகளுக்கும், இதோ மற்றவர் முன்னால் தனது நிர்வாண மேனியைக் காட்டிக் கொண்டிருக்கும் இவளுக்கும் என்ன வேறுபாடு இருக்கப்போகிறது?

நீண்ட புல்வெளி மீதேறி ஓடி, ஒரு சுவர் ஏறிக் குதித்து அந்த இடத்தை விட்டு வெளியேறினேன். வாயில் காப்போனிடமிருந்து தப்பிக்க அவள் வரும் வரையில் ஓர் மறைவான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் காத்திருந்தேன். இரண்டு மணிநேரம் கழித்து அவள் அந்தக் கட்டடத்தை விட்டு வெளியில் வந்து விடுவிடுவென்று நடக்க ஆரம்பித்தாள். கொஞ்ச தூரம் போனதும் திரும்பிப் பார்த்தாள். நான் உடனே ஒரு மரத்தின்

பின்னால் என்னை மறைத்துக் கொண்டேன். மீண்டும் அவளை எச்சரிக்கையுடன் பின்தொடர்ந்தேன். மீண்டும் நடை என்னைத் தளர வைத்தது. அவள் வீடு போய்ச் சேர்ந்து இரண்டு மணிநேரம் போனபின்பே நான் ஊரெல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு வீடு போய்ச் சேர்ந்தேன். ஒரு பக்கம் பசி; இன்னொரு பக்கம் அவளிடம் கேட்க சிந்தையில் ஆயிரம் கேள்விகள்.

அவளுடைய அந்த நிர்வாணக் கோலம் என்னுள் விடை தெரியாத கேள்விகளாக பல வருடங்கள் அழியாமல் என் நினைவைச் சுற்றிக் கிடந்தன. கால ஓட்டத்தில் அந்தக் கேள்விகள் வதங்கிச் சருகாய் உதிர்ந்து போனாலும் ஒன்றிரண்டு கேள்விகள் இன்னமும் அப்படியே பசுமையாக இருக்கின்றன. அவள் வேறு ஏதாவது தொழில் செய்திருக்கலாம், அல்லவா? அப்படி நிர்வாணமாக போஸ் கொடுத்துதான் காசு சம்பாதிக்க வேண்டுமா என்ன? அவள் இன்றுவரை அங்கேதான் மாடலாக வேலை பார்க்கிறாள். ஓய்வூதியம் பெறும்வரை வேலை பார்ப்பேன் என்று கூறுகிறாள். அதுவரையில் அவள் இங்கேதான் இருப்பாளாம்... பிடிவாதக்காரி.

அவள் கண்களின் கீழ் கருவளையங்கள் வலை பின்னியிருந்தன. அந்த வலையில் என்னுடைய பல கனவுகளின் உடைந்த சிறகுகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. அவள் இமைகள் மூடிக் கிடந்தன. அவள் நிஜமாகவே புத்திசாலிதானோ? முப்பத்திரண்டு பற்களின் பின்னால் நாக்கு பாதுகாப்பாக இருப்பது போல அவளால் தனது மதிப்பீடுகள் சிதையாமல் பாதுகாப்பாக இருப்பது புத்திசாலித்தனம்தானா? தனது இருப்பைத் தக்க வைக்கும் அந்த நிர்வாணக் கோலங்களை என் கண்களிலிருந்து காலம் முழுவதும் மறைத்து தப்பி ஓடும் இந்தச் செய்கை புத்திசாலித்தனமானதுதானா?

•

அவன் பிடிவாதம் மட்டும் குறைந்திருக்கிறதா என்ன?

கலைக் கல்லூரியின் பேராசிரியர் இத்தனைக்கும் அவனுக்குத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பார்த்தும் அவன் காதில் வாங்கிக்

கொள்ளவில்லை. எனக்குத் தெரியும் அவன் வரமாட்டான்; அந்த இடத்தில் நிறைய பிசாசுகள் தூண்களின் பின்னாலும், மேஜைகளின் மீதும் உள்ளன, அவை அவனை விழுங்கிவிடும். இன்று மதியம் ஓவிய மாதிரிக்கு நான் நின்றபோது லேசாக மயக்கம் ஏற்பட்டது. ஒருவேளை நான் வெகுநேரம் முழங்கால்களை மடக்கி வைத்திருந்து அதனால் உடலில் ரத்த ஓட்டம் சீராக இல்லாமல் போனது காரணமாக இருக்கலாம். டாக்டர் வந்து பரிசோதித்து இரண்டு ஊசி போட்டுவிட்டுப் போனார். நரம்புகளில் குளுகோஸ் வேறு இரண்டு பாட்டில் ஏற்றினார்கள். ஓவியக் கல்லூரியிலிருந்து ஒரு ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து என் வீட்டில் கொண்டு விட்டார்கள். அப்பொழுதும் அவன் என்னைப் பார்க்க வரவில்லை. நான் இப்போதும் ஓவியர்களுக்கு மாடலாக இருந்து போஸ் கொடுப்பது அவனுக்குத் தெரியும். பேராசிரியர் கூறுவார். “ஒரு அழகிய இளம் பெண்ணின் உடலை யார் வேண்டுமானாலும் எளிதில் வரைந்து விடலாம். ஆனால் ஒரு வயது முதிர்ந்த பெண்ணின் முகத்தில் உள்ள வரிகளைத் தூரிகையில் கொண்டுவருவது அவ்வளவு எளிதில்லை. இள வயது ஓவிய மாதிரிகளை அதிலும் பெண் மாதிரிகளைக் கூட்டிக்கொண்டு வருவது அத்தனை எளிய காரியமில்லை.” இது பெரிய கலைக் கல்லூரி; இந்த நகரமும் மிகப் பெரிய நகரம். இருப்பினும் இந்தக் கல்லூரியில் இளவயது ஓவிய மாதிரிகள் என்னையும் சேர்த்து மொத்தம் ஆறு பேர்தான். இதில் நிரந்தர மாதிரிகளும், ஒப்பந்த மாதிரிகளும் அடக்கம். கலைக் கல்லூரியிலும் பல பிரிவுகள் உள்ளன. சிற்பம், புகைப்படம், நுட்பம், தற்காலம், சுவர் ஓவியம் எனப் பல பிரிவுகள். அவன் மெலிந்திருக்கிறான். எதற்காகத் தாடி வளர்க்கிறான் என்று தெரியவில்லை. பேசமாட்டேன் என்கிறான். நிறைய நேரம் ஒரு வார்த்தைகூட பேசாமல் சிலைபோல உட்கார்ந்திருக்கிறான். என் கண்களை நேருக்கு நேர் பார்க்க மறுக்கிறான். எனக்கு என்ன ஆயிற்று? அவன் அப்படியே இருக்கட்டும். வெளியில் மரங்களை வெறிக்கப் பார்க்கிறான். இப்படி எதுவும் பேசாமல் இருப்பதற்கு வருகிறான் என்றால் அவன் இங்கே வரவே வேண்டாமே? என் நலனை வெறும் தொலைபேசியில் கேட்டுத் தெரிந்துகொண்டால் போதாதா? இருந்தாலும் அவனுக்கு என் மேல் பாசம் இருக்கிறது.

நல்லவேளை அவன் முன்பெல்லாம் புலம்புவானே, ‘என்னுடன் வா.’ அந்தப் புலம்பல் இப்போது இல்லை. நான் அந்தச் சமூகத்திற்குள் செல்ல விரும்பவில்லை. என் தாய் இங்கேதான் தலையிலிருந்து பாதம்வரை புதைந்து கிடக்கிறாள். நான் என்னை இங்கிருந்து வேரோடு பிடுங்கி அங்குச் செல்ல பிரயத்தனப்பட்டேன். இதற்காக என் இந்த மண்ணிலேயே புதைந்து கிடந்த வேர்களை வெளியில் உலர்த்தினேன். வேர்களுடன் எங்கும் அலைந்தேன். வேர்களில் நீர் வற்றச் செய்தேன். அவனும். அவன் கூட ஒரு திரிசங்கு நிலையில்தான் இருக்கிறான். ஆனால் ஒன்று நிச்சயம், அவன் சந்ததிகள் அந்தச் சமூகத்தில் நிம்மதியாக வாழ்வார்கள். அதனால்தான் செல்லரித்துப் போன என் வேர்களுடன் அந்தச் சமூகத்திற்குள் நான் நுழைய விரும்பவில்லை.

எத்தனையோ காலங்கள் கழித்து அவன் மீண்டும் இங்கே வந்திருக்கிறான். நான் இதுவரையில் என் நிர்வாணம் குறித்த உண்மைகளை அவனுக்குத் தெரியாமல் மறைத்து வந்திருப்பதாக அவன் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். அதாவது அவனுக்கு எல்லாம் தெரிந்திருக்கும் என்பது அறியாமல் நான் அவனிடமிருந்து உண்மைகளை மறைத்து வைத்திருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். அவன் கண்களை நேருக்கு நேராகச் சந்திக்கக் கூடாது என்று அவன் நினைக்கிறான் போல. போயேன்... நீ என்னைப் பார்க்காதபோது நான் உன்னைத் தள்ளியிருந்து பார்த்துக் கொள்கிறேன். ஏழாவது மாதம் என்னிடமிருந்து நழுவி என் மடியில் விழுந்த உன்னைப் பார்ப்பதற்கு நான் ஏன் வெட்கப்பட வேண்டும்?

நீ நினைப்பதை விட நான் புத்திசாலி. நீ என்னைப் பற்றி அறிய விரும்பும் மறைத்து வைக்கப்பட்ட உண்மைகளை உனக்குச் சொல்லுவேன். இனியும் என்னைப் பற்றிய மர்மம் உனக்கு நீடிக்க வேண்டாம் என்று தோன்றும்போது நான் என்னைப் பற்றிக் கூறுவேன். எனக்கு உண்மை தெரியாது, அதாவது என்னைப் பற்றிய விவரங்களை நீ அறிந்துகொண்ட உண்மை என்றே நீ இன்னும் நம்பிக் கொண்டிரு. என்னைப் பற்றி என்ன வேண்டுமாயினும் நினைத்துக் கொள். பரத்தைகள் உலகில் நேர்மையானவளாக வேடம் போட்டவளாகவே இருந்துவிட்டுப் போகிறேன்.

உனக்கு என்னைப் பற்றி அத்தனை விஷயங்களும் தெரியும் என்பது எனக்கும் தெரியும். அவை நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கட்டும். உனக்கு நிச்சயம் அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும், உன் முதல் மூச்சை இழுத்து சுவாசிக்கத் தொடங்கியதிலிருந்து, என் மடியின் நடுவில் இரத்தம் தோய வந்து விழுந்த காலம் தொடங்கி என்னைப் பற்றிய அனைத்தும் உனக்குத் தெரிய வேண்டும்.

அவனிடமிருந்து நான் என்னைப் பற்றிய விஷயங்களை மறைத்தது பிழையா என்பது தெரியவில்லை. ஆனால் என் தாயைப்போல இல்லாமல் நான் பெரும்பாலும் அதீதமாக முயன்று என்னைப் பற்றிய விஷயங்களை அவனிடமிருந்து மறைத்தேன். நாங்கள் பள்ளியிலிருந்து வந்த நேரத்தில் ஒரு வாடிக்கையாளன் வந்துவிட்டால் என் தாயார் சிறிதும் முன்யோசனையின்றி, “தீபு லாலி ரெண்டு பேரும் கட்டிலுக்கு அடியில் போய் இருங்க” என்று விரட்டுவாள். தீபு என் தம்பி. நாங்களும் அந்த வாடிக்கையாளர் போகும்வரை படுக்கைக்கு அடியில் இருந்து வீட்டுப் பாடங்களைச் செய்வோம்.

நான் என் தாயின் உடலில் பலவித காயங்களின் தழும்புகளைப் பார்த்திருக்கிறேன். கருஞ்சாம்பல் நிறத் தழும்புகள் - வாடிக்கையாளர்களின் வக்கிர வெறியில் வைக்கும் சிகரெட் தழும்புகள் - இன்னும் ஊதா நிறத்தில், நீல நிறத்தில் தழும்புகள். எனக்கு என் அம்மாவின் மீது கோபம் கோபமாக வரும். ஏன் அவள் பற்றுப் பாத்திரம் தேய்க்கவோ, வீடு கூட்டி, துணி துவைக்கவோ போகக் கூடாது? ஏன் ஏதோ கொஞ்சம் பணத்திற்கு ஆண்களால் சிதைக்கப்பட வேண்டும்? நானும் அவள் வழியில் செல்ல வேண்டும் என்று எண்ண வேறு தொடங்கிவிட்டாள்.

நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது அம்மா என்னைப் பள்ளியிலிருந்து நிறுத்தி விட்டாள். என்னை ஒரு உயர்தர விலைமகளாக ஆக்க வேண்டும் என்பது அவளது ஆசை. இது குறித்து ஒரு தரகனிடம் கூட பேசி முடிவெடுத்துவிட்டாள். எனக்கு விலை உயர்ந்த விலைமகளாகவோ அல்லது கேவலமான ஒரு விளைமகளாகவோ போக

விருப்பமில்லை. ஒரு டாக்சி டிரைவருடன் ஓடிப் போனேன். மாளா காதல் கொண்டிருப்பதாக அவன் பிதற்றினான். அவன் சொன்னது, “எனக்கு ரத்தினகிரியில் சொந்தமாக ஒரு வீடும், மாந்தோப்பும் இருக்கிறது” என்று. சொல்லாமல் விட்டது ரத்தினகிரியில் அவன் முறைப்படி மணந்த ஒரு மனைவி இருக்கிறாள் என்பதை. என் வயிற்றில் சிசு உருவானதும் அவன் என்னை அடித்துத் துரத்திவிட்டான். இந்த மஞ்சள் கட்டடத்தைத் தாண்டி ஓர் உலகம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாமலே போனது.

நான் தப்பியோடியது போலவே என் தம்பி தீபுவும் ஒரு லாரி டிரைவரின் கிளீனர் பையனாகப் போனவன் திரும்பி வரவே இல்லை. என் தாயின் கோபம் அதன் எல்லையைக் கடந்தது. எந்தக் குழந்தைகளுக்காக இப்படி ஒரு உலகில் தான் சீரழிந்தாளோ அந்தக் குழந்தைகள் தன்னை விட்டு விட்டு ஓடிப் போன கோபம் அவளுக்கு. தன் கோபம் முழுவதையும் திரும்பி வந்த என் மீது காட்டினாள். நான் வீடு திரும்பியதும் சலவைக்காரி துணியை வெளுப்பதுபோல என்னைத் துவைத்து எடுத்தாள். அவள் அடித்த அடியில் உதிரப்போக்கு அதிகமாகி நான் குறைப் பிரசவமாக ஏழாவது மாதத்திலேயே என் மகனை ஈன்றெடுத்தேன். அம்மாவிற்கும் வயதாக ஆரம்பித்தது. வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியது. நான் அந்தப் பகுதியில் உள்ள விலைமகளிரின் உடலைப் பிடித்துவிட்டுத் தலைக்கு இல்லை உடலுக்கு ஐந்து ரூபாய் என்று வரும்படி ஈட்டத் தொடங்கினேன். அம்மாவும் இறந்து போனாள்.

நான் தனியானேன். தரகர்கள் என்னைச் சுற்றத் தொடங்கினர்.

என்னுடைய பள்ளித் தோழி ஜாலி என்பவளுடன் விற்பனைப் பெண்ணாக வேலை பார்க்க ஆரம்பித்தேன். நான் சகலமும் விற்கத் தொடங்கினேன் - சோப்பு, சர்ஃப், சமையலறைப் பொருட்கள், உள்ளாடைகள் என்று சகலமும். ஒருநாள் அவள் என்னை அந்தக் கலைக் கல்லூரிக்கு அழைத்துச் சென்றாள். ஓர் அமர்விற்கு இத்தனை பணம் என்று ஆரம்பத்தில் கொடுத்தார்கள். ஓர் அமர்விற்கு அறுபது ரூபாய் கூலி என்று நினைக்கிறேன். இது ஏழு வருடம் தொடர்ந்தது, முடிவில் ஒரு நிரந்தர

மாதிரிப் பெண்ணாகப் பணியில் அமர்த்தினார்கள். நான் அங்கு பதினேழு வருடங்களாகப் பணிபுரிந்து வருகிறேன்.

ஆரம்பத்தில் உடலில் பொட்டுத் துணிகூட இல்லாமல் நிற்பதற்குக் கூச்சத்தை விட அவமானம்தான் அதிகமிருந்தது. ஜாலிதான் தொழில் என்று நினைத்துக்கொண்டு செய்தால் அதில் எவ்விதத் தவறும் இல்லை என்று கூறினாள். “இது நல்ல தொழில்தான். ஆனால் கொஞ்சம் துணிச்சல் நிறைந்தது. ஜமுனா இதை நான் பல வருடங்களாகச் செய்து வருகிறேன். நான் பேக்கரி கடை வைத்திருக்கும் மோசசை மணந்து கொள்ளப் போகிறேன். திருமணத்திற்குப் பிறகு மாடலிங் செய்வதை அவன் விரும்பமாட்டான். எனக்கு மாற்றாகதான் உன்னை இந்தத் தொழிலில் இறங்கச் சொல்கிறேன்.”

வெறும் சாக்குப் படுதா போடப்பட்ட குளிப்பறையில் கூட நான் குளிக்கும்போது என் ஆடையைக் கழற்றியதில்லை. இத்தனை இளைஞர்கள் மத்தியில் எப்படி என் துணிகளைக் களைவேன்? அவர்கள் என் உடலைப் பார்த்து என்ன நினைப்பார்கள்? ஆனால் அவர்கள் ஒருவர் முகத்திலும் கேவலமான எண்ணம் இல்லை என்பது போகப் போகத் தெரிந்தது. என் கூச்சம் போகும் வரையில் அவர்கள் பொறுமையாகக் காத்திருந்தனர். என்னைச் சுற்றிய துவாலையைக் கழற்றும்போது இந்தத் தொழில் நிச்சயமாக விலைமகள் தொழிலை விட மேன்மையானது என்ற நினைப்புடன் கழற்றினேன்.

ஆரம்பத்தில் மாணவர்கள் எதிர்பார்க்கும் கடினமான தோற்ற வடிவங்களை அளிப்பதற்கு முரண்டு பிடிப்பேன். இதுவும் தொழில்தான் என்று இரண்டு நிமிடங்களில் என்னைச் சமாதானம் செய்துகொண்டு தோற்ற வடிவம் கொடுப்பேன். ஒரே நிலையில் தொடர்ந்து பதினைந்து நிமிடங்கள் எவ்வித அசைவுமின்றிச் சிலைபோல நிற்பது கொஞ்சம் கடினமாக இருக்கும். அந்தக் கால்மணிநேரம் மூச்சைப் பிடித்து போஸ் கொடுத்துவிட்டால் பத்து நிமிடம் ஓய்வு கிடைக்கும். ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் ஒரு கோப்பை தேநீர் கொடுப்பார்கள். அதன் பிறகு சுலபமான தோற்ற வடிவங்களில் நின்றுகொண்டோ படுத்துக்கொண்டோ போஸ் கொடுக்க

வேண்டும். அது ஒரு பதினைந்து இருபது நிமிட வேலை. உடலைச் சொரிந்துகொள்ள வேண்டும் என்று தினவெடுக்கும். அந்தத் தினவையும் எப்படிப் பொறுத்துக்கொள்வது என்று கற்றுக் கொண்டேன். என்னை மாடலாக வைத்து வரைந்த படங்களைத் திரும்பிக்கூட பார்க்க மாட்டேன். அவ்வளவு அசிங்கமாக இருக்கும் அவை.

ஈரப்பதம் காற்றில் மிகுந்திருக்கும் நாட்களில் என்னைச் சுற்றிப் போடப்பட்டுள்ள அதிகப் பிரகாசமான விளக்குகளின் வெப்பத்தால் உடலில் வியர்வை பெருகி என் மார்பின் வழியாக வழிந்து நாபியில் பாய்ந்து என் தொடைகளைச் சேரும். ஒரு முறை மாணவன் ஒருவன் துணியில் தீட்டிக் கொண்டிருந்த ஓவியத்தைப் பார்வையிட்டேன். என் மார்பிலிருந்து கீழ் இறங்கிய வியர்வைக் கோடு நாபியில் இறங்குவதைத் தத்ரூபமாக வரைந்திருந்தான். நான் அவனைக் கவனிப்பதைப் பார்த்ததும் இணக்கமாகச் சிரித்தான். எனக்கு என் மகனை நினைவுபடுத்தியது. பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்ததும் அவனும் இப்படிதான் இணக்கமாகச் சிரிப்பான். நான் கொஞ்சம் காலம் தாமதமாக வந்தால் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு பேசமாட்டான்.

அந்த ஓவியக் கூடத்தில் இருந்த என் படங்களில் எனக்குப் பிடித்தது ஒரே ஒரு படம் மட்டும்தான். மிகப் பெரியது. எட்டடி உயர ஓவியம். அதிலிருந்த என் மேனியின் நிறம் ஊதா. மார்பும், பிருட்டமும் இளஞ்சிவப்பு நிறம்; கூந்தல் மஞ்சள் வர்ணத்தில் ஆங்காங்கே நீல நிறத் தீற்றுக்களுடன். கோயிலில் இருக்கும் பெண் தெய்வங்களுக்கு இருப்பதைப்போல மலர்ந்த பெரிய விழிகள். அந்த ஓவியம் களைப்படைந்த, விரைப்பான பெண்ணின் தோற்றத்தை வெளிப்படுத்தாமல் வேறு மாதிரியாக இருந்தது. பேராசிரியர் மோனிஷ்தான் அதை வரைந்தார். அவர், “ஜமுனா உனக்குத் தெரியுமா, உன் உடல் நிறம் வெளுப்போ, சிவப்போ இல்லை, ஊதா நிறம். நான் இதுவரையில் இவ்வளவு பளீரென்ற வர்ணங்களைப் பயன்படுத்தியதே இல்லை. இன்று மின்விளக்குகளை அணைத்துவிட்டு ஜன்னல்களைத் திறந்து உன்னை இயற்கை ஒளியில் பார்த்தவுடன் இந்த வர்ணத்தை உபயோகப்படுத்தினேன். என் தூரிகை சாய்கோடுகளை இதுவரையில் தீட்டியதில்லை. ஆனால் இன்று உன் உடலின் வளைவுகள் என்னைக்

கட்டாயப்படுத்தி சாய்கோடுகளைத் தீட்டச் செய்தன” என்றார்.

அந்த ஓவியத்திற்குப் பேராசிரியர் உயரிய விருது ஒன்றைப் பெற்றார். ஒரு புத்தகத்தில் அந்த ஓவியத்துடன் அவர் புகைப்படமும் வெளியாகி இருந்ததைக் காட்டினார். “பார், உன்னுடைய ஓவியம் இன்று ‘ஆர்ட் டுடே’ பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. இதற்கு காளிந்தி என்று பெயர் சூட்டியுள்ளேன். காளிந்தி என்பது யமுனையின் இன்னொரு பெயர். இதோ இங்கே காளிந்தி என்று இருக்கிறது பார். காளிந்தி என்ற ஜமுனா, ஜமுனா சாலுங்கே” என்று எனக்கு அந்தப் படத்தைக் காட்டினார். பிறகு ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டைக் கட்டாயப்படுத்தி என்னைப் பெற்றுக்கொள்ளச் செய்தார். மேலும் சொன்னார், “ஓர் உயிருள்ள மாதிரிதான் ஓவியர்களின் தலைசிறந்த படைப்பிற்கு அடிப்படை. ஆனால் ஓவியர்கள் அது போன்ற மாதிரிகளுக்கு உரிய மரியாதையை வழங்குவதில்லை.”

ஒவ்வொரு வருடமும் புதிதாகச் சேரும் மாணவர்கள் நடுவில் பேராசிரியர் உரையாற்றும்போது, “இவர்கள் நவ நாகரீக மாதிரிகள் கிடையாது. அல்லது அழகிப் போட்டியிலிருந்து வருபவர்களும் கிடையாது. இவர்கள் சாதாரணமான ஆண்களும் பெண்களும், எல்லா வடிவிலும், எல்லா வயதிலும். நிஜ ஓவியம் என்றால் என்ன என்பதனை இவர்கள்தான் உங்கள் மூலம் ஓவியங்களில் கொண்டுவர உதவுபவர்கள். இங்கே நிர்வாணம் என்பதற்கு அர்த்தமே வேறு. ஒளிச் சேர்க்கை, கோடுகளின் அளவுகள் போன்றவற்றில் உங்கள் கவனம் இருக்குமானால் ஓவியத்தின் மீது மட்டும் உங்கள் அக்கறை இருக்கும். மாதிரிகளின் உடலின் மீது இருக்காது. முறுக்கேறிய நிலையிலும் தளர்ந்த நிலையிலும் உடலில் உள்ள வளைதசைகளின் வெவ்வேறு பரிமாணங்கள் எப்படியெல்லாம் வடிவம் பெறுகின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்வதுதான் முக்கியம். நான் ஏற்கெனவே சொன்னதுதான். நிர்வாண மாதிரியாகத் தோற்றம் கொடுப்பது அவ்வளவு எளிதான செயல் இல்லை. இதற்காக அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்; கடுமையாக முயற்சிக்க வேண்டும். இருபது நிமிஷங்களில் ஒரே நிலையில் இருந்தால் கால்கள் மரத்துப் போகும். இடுப்பு எலும்புகள் நோகத் தொடங்கும். இரத்த நாளங்கள் பின்னிக் கொள்ளும்.”

இதை அப்படியே ஒரு ஒலிநாடாவில் பதிவு செய்து என் மகனுக்குப் போட்டுக் காட்டவேண்டும் என்று எண்ணியிருந்ததும், அன்றுதான் அவன் ஜன்னல் வழியாக மறைந்திருந்து என்னை வேவு பார்த்தான். அன்றுதான் பேராசிரியரின் ஆகச் சிறந்த படைப்பு உருவான தினம். ஊதா நிற ஜமுனா. காளிந்தி.

ஆமாம், அன்று அவனை நான் பார்த்தேன். என்னைப் பின்தொடர்வதற்காக லோக்கல் பாசெஞ்சர் இரயில் பெட்டியில் அவன் ஏறுவதைப் பார்த்துவிட்டேன். அவன் கையில் காசு இருக்காது என்பது தெரிந்துதான் நான் ஒரு ரிக்ஷாவில் செல்லாமல் மீதி தூரத்தை நடந்தே கடந்தேன். அவனுடைய கேள்விகள் அனைத்திற்கும் பதில் அளிப்பது என்ற முடிவுடன் இருந்தேன். அதனால்தான் இயற்கை ஒளியில் ஓவியம் தீட்டப்படுவது குறித்து நான் அவருடன் முற்றிலும் உடன்பட்டேன். அவனை என்னுடைய கடைக் கண்களால் பார்த்தேன். அவன் முகம் சிவந்த நிறமாகி, ஊதா நிறமாகி முடிவில் கறுப்பு நிறமானது. அதன் பிறகு அவன் ஜன்னலிலிருந்து கீழே விழுந்துவிட்டான்.

அவன் வீட்டிற்கு வந்ததும் கோழிக் குழம்பும், ரொட்டியும் பக்கத்தில் இருந்த ஹோட்டலிலிருந்து வாங்கிக் கொடுத்தேன். அவனுக்குக் கோபத்தை விட பசி அதிகமாக இருந்தது. எந்தச் சத்தமும் போடாமல் ரொட்டியையும் கோழிக் குழம்பையும் சாப்பிட்டான். சாப்பிட்டு விட்டுத் தனது உதடுகளைக் கோபத்தில் கடித்தபடி இருந்தான்.

அவன் சாப்பிட்டு விட்டுக் கைகளைக் கழுவிக் கொண்டிருந்தபோது நான் அவனிடம், “இன்னிக்கு நீ பள்ளிக்கூடம் போகலியா?” என்று கேட்டேன்.

“ஏன்? போயிருந்தேனே?”

‘பொய் சொல்லாதே. நீ என்னை வேவு பார்க்க பின்னால் தொடர்ந்து வந்தாய். நீ லோக்கல் பாசெஞ்சர் வண்டியிலிருந்து கீழே இறங்குவதைப் பார்த்தேன். நீதான் சாமர்த்தியசாலி என்று நினைத்துக் கொள்ளாதே. உன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ என்ன பெரிய ஆளுன்னு நினைப்பா? எப்படி உள்ளே வந்தாய்? உன்னை அத்தனை சுலபமா காவல்காரன் உள்ளே விட்டிருப்பானா?’ என்றெல்லாம் கேட்க

நினைத்தேன்.

ஆனால் அவன் விட மாட்டான். குறுக்குக் கேள்வி கேட்பான். ‘அப்படி என்றால் ஏன் என்னையும் கூட்டிக்கொண்டு போகவில்லை?’ என்பான். இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? ‘அது என் தொழில்’ என்றா?

‘கேவலமான தொழில்’ என்பான். அதோடு நில்லாமல், ‘அதை விட்டு விடு’ என்று வேறு சொல்லுவான்.

நான், ‘எந்தத் தொழிலும் முற்றிலும் நேர்மையானதும் இல்லை; முற்றிலும் மோசமானதும் இல்லை. எனக்கு அந்த மாணவர்களுக்கு என்னுடைய தேவை அவசியம் என்பது மட்டும் தெரியும். நான் அப்படி இருப்பதால்தான் அவர்களால் கற்றுக் கொள்ள முடிகிறது. அவர்கள் யாரும் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. நான் இந்த வேலையை விடுவதாக இல்லை. எனக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது’ என்று பதில் சொல்ல நேரிடும்.

ஆனால் வாய் திறக்கவில்லை. மௌனமாக அவன் தின்று முடித்ததும் எச்சில் பாத்திரங்களைக் கழுவி வைத்தேன். அவன் நெட்டி முறித்தான்.

அவன் தனது படிப்பு உத்தியோகம் என்று இந்தச் சமூகத்தைவிட்டு கௌரவமாக வாழ வேண்டும் என்று அந்த சமூகத்திற்குச் சென்றுவிட்டான். நான்தான் அவனுடன் போகாமல் இங்கேயே தங்கிவிட்டேன். அவன் வருகையும் மெல்ல மெல்ல குறைந்தது. இதோ எனக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிந்து என்னைப் பார்க்க வந்திருக்கிறான்.

பார் இப்போது கூட அவன் எப்படி நெட்டி முறிக்கிறான். சொடக்குப் போடாதே எலும்புக்கு நல்லதல்லன்னு எத்தனை முறை கூறியிருப்பேன்?

“உன் விரல்களை உடைத்துக்கொள்ளப் போகிறாயா?” அவனை முறைத்தேன். அவன் சிரித்தான். அதே சிறு வயதுச் சிரிப்பு. சிறுவனாக இருந்தபோது சிரிப்பானே அதே சிரிப்பு.

“இப்போதாவது உன் தொழிலை விடேன்” என்றான்.

“நிச்சயமா விட்டுடப் போறேன். எனக்கும் ஓய்வெடுக்கும் காலம் வந்தாச்சு.”

“பணம் ஏதாவது வேணுமா?”

“வேணுங்கற அளவுக்கு இருக்கு. தேவைப்பட்டா நானே கேட்பேன். அப்புறம் நீ எப்படி இருக்கே? எல்லாம் எப்படி போயிட்டிருக்கு?”

“நல்லா இருக்கேன்.”

“உன் வேலை எப்படி இருக்கு?”

“நான் பழைய வேலையை விட்டுட்டேன்.”

“இப்போ புகைப்படங்கள் எடுக்கறதில்லையா?”

“எடுக்கறேன். முன்னே மாதிரி பூகம்பங்களையும், குண்டு வெடிப்புகளையும் எடுப்பதில்லை. செய்தித்தாள்கள் இப்போது புகைப்படங்களுக்கு நிறைய கொடுப்பதில்லை. என்னதான் இரத்தம் தோய்ந்த படம் என்றாலும் கிடைக்கும் கூலி குறைவுதான்.”

“அப்புறம்?”

“அப்புறம் என்ன? பிள்ளைகள் என்று ஆனதும் என் செலவுகள் பத்து மடங்கா ஆயிடுச்சு. ஒற்றை அறை வீடு லாயக்குப் படவில்லை. அதனால ஃப்ரீ லான்ஸ் வேலையில் இறங்கிட்டேன். பத்திரிகையில் வேலை செய்வதோடு தனியாகவும் புகைப்படங்கள் எடுக்கறேன்.”

“அதான் இப்படித் துரும்பா இளைச்சிருக்கியா? ஒருத்தரால் எவ்வளவு முடியுமோ அவ்வளவுதான் வேலை செய்யணும். அதிகமா உடலை வருத்திக்காதே.”

“இங்கே வசதியா இருந்தது மாதிரி அங்கே இருக்க முடியலை. இப்போதெல்லாம் நான் கூடுதலா பணம் சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டேன். விளம்பர நிறுவனங்களில் கூட நான் இப்போ வேலை பார்க்கறேன். மாடல்களை வைத்து விளம்பரப் படங்கள் கூட எடுக்கத் தொடங்கியிருக்கிறேன். சமீபமா ஒரு புகைப்படக் கண்காட்சி கூட

நடத்தினேன். அது குறித்து ஒரு விமர்சனம் கூட ஒரு பத்திரிகையில் வந்திருந்தது.”

“ஆர்ட் டுடே பத்திரிகையில்தானே? ‘தேவ நிர்வாணம்’ என்ற தலைப்பில்தானே? நிர்வாணத்தின் பல கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள். சரியா?”

“உனக்கு எப்படித் தெரியும்?” அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

நான் பதில் சொல்லவில்லை. விழிகளை மூடிக்கொண்டேன். அவன் வீம்பு அவனுள் வடிந்து போயிருந்தது. இனி அவனுக்குப் பணத்தட்டுப்பாடு இருக்காது.

(ஹிந்தி மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - புஷ்ரா ஆல்வி ரஸ்ஸாக்)

# 15. பண்டிட் ஜவஹர்லால் நேரு மற்றும் காயிதே ஆசாம் ஜின்னா அவர்களுக்கு: ஒரு வேசியின் கடிதம்

## கிருஷண் சந்தர்

இதற்கு முன்பு உங்களுக்கு ஒரு வேசியிடமிருந்து கடிதம் எதுவும் வந்திருக்காது என்று நினைக்கிறேன். அதேபோல என் முகத்தையோ அல்லது நான் வசிக்கும் பகுதியில் உள்ள மற்ற வேசிகளின் முகத்தையோ நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். உங்களுக்கு இப்படி ஒரு கடிதம் அதிலும் ஒரு திறந்த கடிதம் எழுதவேண்டும், என்னுடைய இந்த முயற்சிக்கு உங்களிடம் எந்த அளவிற்கு எதிர்ப்பு இருக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் நான் என்னதான் செய்ய முடியும்? நிலைமை அப்படி இருக்கிறது; இரண்டு பெண்களின் தேவையின் அழுத்தமே என்னை இப்படி ஒரு கடிதத்தை எழுத வைத்திருக்கிறது. நானே விருப்பப்பட்டு இதனை எழுதவில்லை. பேலா, பதுல் என்ற இரண்டு பெண்கள் என்னைக் கட்டாயப்படுத்தி இந்தக் கடிதத்தை எழுத வைத்துள்ளனர். வழுக்கி விழுந்த இந்தப் பெண்ணின் அசட்டுத் துணிச்சலை மன்னித்து விடுங்கள். தங்கள் தயாள குணத்தால் என்னை மன்னித்து விடுங்கள். என்னுடைய கடிதத்தில் ஆட்சேபணைக்குரிய கருத்துகள் இருந்தால் அவற்றையும் மன்னித்து விடுங்கள். எனது இயலாமையே அப்படிப்பட்ட கருத்துகளை எழுத வைத்துள்ளது.

எதற்காக பேலாவும், பதுலும் இந்தக் கடிதத்தை எழுதச் சொன்னார்கள்?

யார் இந்த இரு பெண்கள்? அப்படி என்ன அவர்களுடைய தேவைக்கு அத்தனை முக்கியத்துவம்? இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கும் முன்பு நான் என்னைப் பற்றிச் சில விஷயங்களைத் தெளிவுபடுத்தலாம் என்று நினைக்கிறேன். வருத்தப்படாதீர்கள், என்னுடைய கேவலமான வாழ்க்கையை நான் விவரிக்கப் போவதில்லை. அதேபோல நான் எப்படி, எந்தச் சூழலில் ஒரு வேசி ஆனேன் போன்ற தகவல்களையும் கூறப் போவதில்லை. எனது சோகக் கதையைக் கூறி உங்கள் அழுகையைச் சம்பாதித்து அதன் மூலம் பயன் பெற வேண்டும் என்பது என் நினைப்பில்லை. இந்தக் கடிதத்தின் நோக்கம் வேசித் தொழிலில் உள்ள விவரங்களைப் பட்டியல் இடுவது இல்லை. என் பக்க நியாயத்தைக் கூறப் போவதில்லை. என்னைப் பற்றி ஓரிரு விஷயங்களைக் கூறுவதன் மூலம் பேலா, பதுல் இருவருக்கும் ஒரு வழி பிறக்காதா என்றுதான் என்னைப் பற்றிக் கூறப் போகிறேன்.

நிச்சயமாக நீங்கள் மும்பைக்கு அடிக்கடி பல முறை போயிருப்பீர்கள். ஜின்னா அவர்கள் அடிக்கடி போயிருப்பார். ஆனால் நாங்கள் வசிக்கும் இந்த பஜார் பகுதிக்கு நீங்கள் போயிருக்க என்ன அவசியம்? என்னுடைய பஜார் இருக்கும் இடத்திற்கு ஃபாரஸ் வீதி என்று பெயர். அது கிரான்ட் ரோடிற்கும், மதன்புராவிற்கும் நடுவில் உள்ளது. கிரான்ட் ரோடின் அந்தப் பக்கம் லாமிங்டன் சாலை, சௌபாத்தி, மரைன் டிரைவ், ஃபோர்ட் எல்லாம் இருக்கின்றன. இது மும்பையின் மேட்டுக்குடி மக்கள் வசிக்கும் பகுதி. மதன்புராவின் இந்தப் பக்கம் மும்பையின் கீழ்த்தர மக்களின் குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. ஃபாரஸ் வீதி இவை இரண்டிற்கும் மத்தியில் உள்ளது. பணக்கார வர்க்கம், ஏழை வர்க்கம் இரண்டிற்கும் எங்களால் பயன். ஃபாரஸ் சாலைக்கும் மதன்புராவிற்கும் அதிக தூரமில்லை. என்றுமே ஏழ்மைக்கும், விபசாரத்திற்கும் நெருக்கம் அதிகம்தானே?

இந்த பஜார் அழகானது இல்லை. அதேபோல அதில் இருப்பவர்களும் அழகானவர்கள் இல்லை. இதன் மத்திய பகுதியில் டிராம் பாதை செல்வதால் எப்பொழுது பார்த்தாலும் ஒரே கூச்சலும் கூப்பாடும்தான். போதாததற்குத் தெரு நாய்கள், பொறுக்கிகள், சண்டை சச்சரவு

செய்பவர்கள், தெருவில் விடப்பட்ட அனாதைக் குழந்தைகள், குற்றவாளிகள் போன்றோர்களின் அடைக்கலம் எங்கள் வீதி. உடல் ஊனமுற்றவர்கள், அனாதைகள், போக்கிரிகள், அபின் வியாபாரிகள், முடிச்சவிக்கிகள், தீரா வியாதியஸ்தர்கள், மேகநோய் தொற்றிய வழுக்கை மண்டை வயோதிகர்கள் அனைவருக்கும் இந்த வீதிதான் புகலிடம். கீழ்த்தரமான ஹோட்டல்கள், நசநசவென்று ஈரமான பாதையில் மலையாய்க் குவிக்கப்பட்டிருக்கும் குப்பைக் கூளங்கள், விறகு மண்டி, கரி மண்டி, தொழில் தரகர்கள், வாடிப் போன பூமாலை விற்கும் பூக்காரர்கள், பழைய சினிமா புஸ்தகம் விற்கும் வியாபாரிகள், மஞ்சள் பத்திரிகை விற்பவர்கள், நிர்வாணப் படங்கள் விற்பவர்கள், சீன, முஸ்லிம் நாவிதர்கள், கோவணம் கட்டிய மல்யுத்த வீரர்கள் என்று இந்த வீதி நிரம்பி வழியும். நகரத்தில் உள்ள அத்தனை குப்பைகளையும் ஃபாரஸ் வீதியில் பார்க்கலாம்.

நீங்கள் ஃபாரஸ் வீதிக்குப் போயிருக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்வது சுலபம். எந்த நற்சிந்தனையுள்ள மனிதனும் இந்தப் பக்கம் தலை வைத்துக்கூட படுக்க மாட்டான். நாகரிகமான மக்கள் கிரான்ட் சாலைக்கு அந்தப் பக்கம் இருக்கிறார்கள். செல்வந்தர்கள் மலபார் ஹில்ஸ் பகுதியில் வசிக்கிறார்கள். ஒரு முறை ஜின்னா அவர்கள் வசிக்கும் பங்களாவைக் கடந்து போனபோது நான் அதன் முன்பு தலை குனிந்து வணக்கம் வைத்தேன். அப்போது என்னுடன் பதுலும் உடன் இருந்தாள். உங்கள் மீதும், ஜின்னா சாஹிப் மீதும் பதுலுக்கு உள்ள மரியாதையை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

அல்லாவிற்குப் பின்போ அல்லது இறை தூதருக்குப் பின்போ அவள் ஒருவர் மீது மரியாதை செலுத்துகிறாள் என்றால் அது உங்கள் மீதுதான். உங்களுடைய சிறிய படம் ஒன்றை டாலர் ஒன்றில் வைத்து அதைத் தனது கழுத்துச் சங்கிலியில் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறாள். இதில் தவறான நோக்கம் எதுவுமில்லை. பதுலுக்கு வயது வெறும் பதினொரு வருடங்கள் மட்டும்தான். அவள் மிகவும் சிறிய பெண். ஃபாரஸ் வீதி மக்களுக்கு அவள் மீது ஒரு கண் என்பது வேறு விஷயம். அதைக் குறித்து நான் பின்னால் கூறுகிறேன்.

இதுதான் ஃபாரஸ் தெரு. என் கடை இருட்டான இந்த வீதியின் மூலையில், மேற்குக் கோடியில் சீன நாவிதனின் சலூன் அருகில் உள்ளது. அதனை ஒரு கடையாகவே கருத முடியாது. நீங்கள் புத்திசாலி என்றால் அது உங்கள் கண்களுக்குத் தப்பாது. அதை நான் கடை என்றுதான் சொல்வேன். கறிகாய்க் கடை, பழக்கடை, உணவகம், மோட்டார் பட்டறை, சினிமா தியேட்டர், துணிக் கடை போல இதுவும் ஒரு கடை. மற்ற வியாபாரம் போலவே இலாபத்தையும் தாண்டி வாடிக்கையாளர்களைக் குஷிப்படுத்துவது இங்கும் உண்டு. ஒரு விஷயம், மற்ற வியாபாரிகளைப் போல கள்ளச் சந்தை என்னிடம் இல்லை. பிறகு எனக்கும் நான் குறிப்பிட்ட வியாபாரிகளுக்கும் பேதம் இல்லாமல் போய்விடும்.

என் கடை சரியான இடத்தில் இல்லை. தடுமாறும் மக்கள், அடிக்கடி நிகழும் திருட்டுகள், அசிங்கமாக வாந்தி எடுக்கும் குடிகாரர்கள், சதா சர்வ காலமும் தப்புத் தண்டாக்கள், சின்னச் சின்ன வாய்த் தகராறுகள், அடிதடி, சர்வ சாதாரணமாக நடக்கும் கொலைகள் என்று இங்கே எப்போதும் வாழ்க்கை அச்சத்துடனும் திகிலுடனும் நகர்கிறது.

நான் செல்வாக்கு மிக்க வேசியில்லை என்பதால் என்னால் பாலி ஹில்ஸிலோ அல்லது வோர்லி கடற்கரையின் உயர்ந்த மாளிகைகளிலோ வசிக்க முடியாது. நான் ஒரு சாதாரண வேசி. இந்தியாவின் பல்வேறு பகுதிகளைப் பலதரப்பட்ட மக்களுடன் சென்று பார்த்தவள் நான். கடந்த பத்து ஆண்டுகளாக ஒரே நகரத்தில் ஒரே தெருவில் ஒரே கடையில் இருந்து வருகிறேன். என் கடைக்குப் பகடியாக மாதம் ஆறாயிரம் ரூபாய் கொடுக்கறேன். அக்கம்பக்கத்தினர் சரியில்லை. இந்தக் கடையின் சுற்றுச் சூழல் வெறுக்கும்படி உள்ளது. எங்கும் சேரும் சகதியும், குப்பைக் குவியல்களும்தான். சொறி பிடித்த தெரு நாய்கள் இங்கு வரும் வாடிக்கையாளர்களைக் குறி வைத்துத் துரத்துகின்றன. அப்படியும் எனக்கு ஆறாயிரம் வசூலாகிறது.

ஒற்றைத் தளத்தில் கட்டப்பட்ட என் வீட்டில் இரண்டு அறைகள் உள்ளன. முதல் அறை எனது வரவேற்பறை. நான் ஆடிப் பாடி

வாடிக்கையாளர்களை மகிழ்விப்பேன். பின்னால் இருக்கும் அறையைச் சமையல் கட்டு, குளிப்பறை சில நேரங்களில் படுக்கையறையாகக் கூட உபயோகப்படுத்துவேன். ஒரு மூலையில் குழாய் ஒன்று, அடுப்பு, சமையல் பாத்திரங்கள் இருக்கின்றன. மற்றொரு மூலையில் பெரிய படுக்கை ஒன்றும் அதன் பக்கத்தில் சிறிய படுக்கை ஒன்றும் உள்ளன. சின்னக் கட்டிலின் கீழே துணிகள் நிரம்பிய பெட்டி ஒன்று உள்ளது. முதல் அறையில் மின்விளக்குகள் உள்ளன. பின் கட்டு முழுவதும் இருளில் மூழ்கியிருக்கும். வீட்டுச் சொந்தக்காரர் சுவர்களுக்கு வெள்ளையடித்துப் பல வருடங்கள் இருக்கும். இனிமேலும் வெள்ளையடித்துத் தருவாரா என்பது தெரியாது. இரவு முழுவதும் நான் ஆட்டம் போட்டுவிட்டுப் பகலில் இங்குதான் தலையணையில் தலைசாய்த்து ஓய்வெடுப்பேன்.

நான் இந்த இருட்டு அறையில் பேலாவையும், பதுலையும் குடி வைத்துள்ளேன். வாடிக்கையாளர்கள் முகம் கழுவிக்கொள்ளப் பின்கட்டுக்குப் போகும்போது இருவரும் அவர்களை மலங்க மலங்க பார்த்து விழிப்பார்கள். என் கடிதமும், அவர்களுடைய பார்வையும் ஒரே நேர்கோட்டின் மீதுதான் பயணிக்கின்றன. அவர்கள் என்னுடன் தங்கியிருக்கவில்லை என்றால் இந்தப் பாவப்பட்ட பெண் இப்படி ஒரு முட்டாள்தனத்தைச் செய்து கொண்டிருக்க மாட்டாள்.

பேலாவும், பதுலும் என் பெண்கள் என்று நீங்கள் தவறாக எண்ண வாய்ப்பிருக்கிறது. அவர்கள் என் பெண்பிள்ளைகள் இல்லை. அது அப்படி இல்லை. எனக்குக் குழந்தைகளே இல்லை என்பதுதான் உண்மை. நான் பஜாரிலிருந்து இந்தப் பெண்களை வாங்கிக்கொண்டு வந்தேன். ஹிந்து முஸ்லிம் கலவரங்கள் அதன் உச்சத்தில் இருந்தபோது கிரான்ட் ரோடு, ஃபாரஸ் ரோடு, மதன்புரா போன்ற இடங்களில் இரத்தம் வீதிகளில் வெள்ளம்போல ஓடியது. நான் பேலாவை ஓர் இசுலாமியத் தரகனிடமிருந்து நூறு ரூபாய்க்கு வாங்கினேன். அவன் பேலாவை டெல்லியிலிருந்து கூட்டிக்கொண்டு வந்திருந்தான். அவர்களது பெற்றோர் ராவல்பிண்டியில் உள்ள பூஞ்ச் மாளிகை முன்பிருந்த தெருவில் வசித்து வந்தனர். நடுத்தர வர்க்கம். எளிமையும் கண்ணியமும் அவர்கள் இரத்தத்தில் ஊறியவை. ராவல்பிண்டியில் ஜூலை மாதம் பன்னிரண்டாம்

தேதி இசுலாமியர்கள் ஹிந்துக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியபோது பேலா நான்காம் வகுப்புதான் படித்துக் கொண்டிருந்தாள்.

பேலா பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குத் திரும்பிய சமயம் தன் வீட்டின் முன்பும், மற்ற ஹிந்துக்களின் இல்லங்களின் முன்பும் பெரும் கூட்டம் கூடியிருப்பதைக் கண்ணுற்றாள். ஆயுதம் தாங்கிய மத வெறியர்கள் வீட்டிற்குள் இருந்த பெண்களையும், ஆண்களையும் வீதிக்கு இழுத்து வந்து கொன்று குவித்துக் கொண்டிருந்தனர். 'அல்லாஹூ அக்பர்' என்பதே எங்கும் முழக்கமாக இருந்தது. பேலாவின் தந்தை இறந்து கிடந்தார். தாய் பேலாவின் கண் முன்பு செத்துக் கொண்டிருந்தாள். அந்த இசுலாமிய அடிப்படைவாதிகள் தன் தாயின் இரு முலைகளையும் அறுத்து எறிவதை பேலா எதுவும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அதே தாயின் முலைகள், அந்தத் தாய் ஒரு ஹிந்துவா, இசுலாமைச் சேர்ந்தவளா, ஒரு யூதப் பெண்மணியா, சீக்கியப் பெண்மணியா என்ற ஆராய்ச்சிகளுக்கு அப்பால் மனித சமுதாயம் தழைக்கப் பால் வார்க்கும் முலைகள். அந்த அமுதூறும் முலைகளைதான் 'அல்லாஹூ அக்பர்' என்று கூக்குரல் இட்ட ஒரு கும்பல் பிடுங்கி எறிந்தது. இதற்கு முன்பு இப்படி ஒரு வெறியாட்டம் யாராவது ஆடியிருப்பதற்குச் சரித்திரச் சான்று இருக்கிறதா? ஏதோ ஒருவகை அறிவுகெட்டதனம் அவர்கள் ஆன்மாவை கறுப்பு மசியால் நிரப்பியிருந்தது. நானும் குரான் ஓதியிருக்கிறேன். ராவல்பிண்டியில் பேலாவின் பெற்றோருக்கு நேர்ந்த கொடூரம் குர்ஆனில் கூறப்பட்டதென்று என்பது மட்டும் உறுதி. அது மனிதாபிமானமில்லை; பகைமையுமில்லை, வஞ்சமும் இல்லை. வெறும் குரூரம்; கோழைத்தனம், கொடூரம், சைத்தானின் செயல். இருளடைந்த நெஞ்சில் தோன்றி மனித நம்பிக்கையைக் குலைக்கும் வெறித்தனம்.

பேலா இப்போது என்னுடன் இருக்கிறாள். இதற்கு முன்னால் ஒரு தாடி வைத்த இசுலாமியத் தரகனுடன் இருந்தாள். அதற்கும் முன்னால் டெல்லியில் ஒரு முஸ்லிம் தரகனுடன். நான்காம் வகுப்பு படிக்கும் அவளுக்கு வயது வெறும் பன்னிரண்டுதான். அவள் வீட்டில் பெற்றோருடன் இருந்திருந்தால் இந்த வருடம் ஐந்தாம் வகுப்பு சென்றிருப்பாள். அவளும் வளர்ந்து பெரியவளாகி இருப்பாள். அவளை

அவளது ஏழை பெற்றோர் ஓர் அடக்கமான ஆண்மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருப்பார்கள். அவளும் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்ந்திருப்பாள். கணவனுடன் சந்தோஷமாகக் குடித்தனம் செய்து பிள்ளை குட்டிகள் பெற்றுக் கொண்டிருப்பாள். இந்த இளந்தளிர் அப்படி ஒரு காயத்தால் பட்டுப் போனது. பேலா தனது வயதுக்குரிய தோற்றத்தை விட அதிகம் வயதானவள்போல இருக்கிறாள்.

காயிதே ஆசாம் சாஹிப், அவள் கண்களில் தெரியும் பயத்தை நீங்கள் பார்த்தால் போதும், அவள் நிலையை உங்களால் உணர முடியும். நீங்கள் மிகவும் புத்திசாலியான மனிதர். மேன்மையான குடும்பங்களில் இருக்கும் ஒரு எளிய அப்பாவி இசுலாமியப் பெண்ணையோ அல்லது ஹிந்துப் பெண்ணையோதான் நீங்கள் பார்த்திருப்பீர்கள். எளிமைக்கு மதமில்லை என்று நீங்கள் நம்பலாம். இதுதான் மொத்த மனித குலத்தின் பொறுப்பு. இந்த எளிமைதான் மொத்த உலகத்தின் கையிருப்பாக இருக்க வேண்டும். எந்த மதக் கடவுளும் இந்த எளிமையைச் சூரையாடுபவர்களை மன்னிப்பதில்லை.

பதுலும், பேலாவும் இங்கே இரண்டு சகோதரிகளைப் போலதான் வாழ்ந்து வருகிறார்கள். இருவருக்கும் இரத்த சம்பந்தம் எதுவுமில்லை. பதுல் ஓர் இசுலாமியக் குடும்பத்தில் பிறந்தவள். பேலா ஒரு ஹிந்துப் பெண். பேலா ராவல்பிண்டியில் பிறந்தவள். பதுல் ஜலந்தர் மாவட்டத்தில் கேம் கிரண் என்ற கிராமத்தில் வசிக்கும் கான் என்ற விவசாயியின் மகள். பதுலின் தந்தைக்கு ஏழு பெண்கள். அவர்களில் மூன்று பேருக்கு நிக்கா ஆகியிருந்தது. மற்ற நால்வரும் திருமணமாகாதவர்கள். அவர் வறியவர் என்றாலும் நற்குணங்களின் உறைவிடம். பல வருடங்களாக அங்கே வசித்து வந்தார்.

ஜாட் இனம் அதிகம் வசிக்கும் அந்த இடத்தில் ஒன்றிரண்டு பதான் குடும்பங்களே வாழ்ந்து வந்தன. பண்டிட்ஜி அவர்கள் அனுபவித்த அடக்குமுறையையும், நிலையையும் நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன். அவர்கள் இசுலாமியர்கள் என்றாலும் தங்கள் கிராமத்தில் ஒரு மசூதி கட்டிக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. தங்கள்

தொழுகையை வீட்டிற்குள்தான் செய்தார்கள். மகாராஜா ரஞ்சித்சிங் பதவிக்கு வந்ததிலிருந்து இதுதான் நடைமுறை. எந்தத் தனி இசுலாமியனும் கூட்டுத் தொழுகைக்கு அந்தக் கிராமத்தில் குரல் கொடுக்க முடியாது. மனத்தளவில் மத நம்பிக்கையுடன் இருந்தாலும் அதனை வெளிப்படுத்த முடியாமல் பல ஆண்டுகளாக நிலவும் பழைய கலாசாரம், வழக்கங்களில் மூழ்கி ஊமைகளாக வாழ்ந்து வருகின்றனர்.

பதுல் வீட்டின் கடைக்குட்டி; அப்பாவின் செல்லக் குட்டி. அவள் அப்படி ஓர் அழகி. காற்று பட்டால்கூட கன்றிப் போகும் அழகு. பண்டிட்ஜி நீங்களும் காஷ்மீரிலிருந்து வந்தவர் என்பதோடு நீங்கள் ஒரு ரசிகர் என்பதால் அழகு என்றால் என்னவென்று உங்களுக்குப் புரிந்திருக்கும். அப்படி ஓர் அழகு இந்தச் சாக்கடையில் வந்து கலந்துவிட்டது. நான் எங்கிருந்து ஒரு நல்ல கணவனாகத் தேர்ந்தெடுத்து இவளைக் கலியாணம் செய்து கொடுப்பது? இந்தக் குப்பையில் வயதாகி அழுகும் நிலையில் உள்ள மார்வாடிகள் கிடைப்பார்கள். பெரிய மீசையும், சிறிய எண்ணமும் கொண்ட கான்ட்ராக்டர்கள் கிடைப்பார்கள்; கெட்ட எண்ணம் கொண்ட கறுப்புப் பண முதலைகள் கிடைப்பார்கள். பதுல் படிப்பு வாசனை இல்லாதவள். அவள் தெரிந்து வைத்திருந்த பெயர் ஜின்னா என்பது மாத்திரம்தான். அவளும் அறியாப்பருவத்தில் பாகிஸ்தான் என்ற நாடகத்தில் இன்குலாப் ஜிந்தாபாத் என்று முழக்கமிட்டவள்தான். அப்போது அவளுக்கு வயது வெறும் பதினொன்றுதான்.

படிப்பறிவில்லாத பதுல் சமீபத்தில்தான் என்னுடன் சேர்ந்திருக்க வந்தாள். ஒரு ஹிந்துத் தரகன் என்னிடம் அவளைக் கொண்டுவந்து விட்டான். நான் அவனுக்கு ஐநூறு ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கினேன். அவள் இங்கே வருவதற்கு முன்பு எங்கிருந்தாள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவளைப் பரிசோதித்த பெண் மருத்துவர் அவளைப் பற்றிப் பல ஜீரணிக்கக் கொடுமையான தகவல்களைக் கூறினார். அவர் கூறிய அனைத்தையும் எழுதினால் உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விடும். பதுல் நல்ல மனநிலையில் இல்லை. ஜாட் இனத்தவரால் அவர் தந்தை கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை ஆறாயிரம் ஆண்டு பாரம்பரியம் கொண்ட ஹிந்து கலாசாரத்தை முடிவிற்குக்

கொண்டு வந்துவிட்டது. ஒரு மனித காட்டுமிராண்டித்தனம் அனைவரது முன்பும் அரங்கேற்றம் ஆனது. முதலில் ஒரு ஜாட் அவர் கண்களைப் பிடுங்கினான். மற்றொருவன் அவர் வாயினில் சிறுநீர் கழித்தான். அந்த ஜாட் சமூகத்தைச் சேர்ந்த அவர்கள் அந்த ஏழை இசுலாமியனின் உடலைக் கண்டந்துண்டமாக வெட்டிக் குடலை உருவி எடுத்தார்கள். அதோடு மட்டுமின்றி அவர் புதல்விகளை வன்புணர்வு செய்தனர். ரெஹனா, குல்வர்காஸ், மார்ஜியானா, சூசன் பேகம் நால்வரும் அவர்களது தந்தையின் பிணத்திற்கு முன்பாக வன்புணர்வு செய்யப்பட்டனர். எந்த மனித சமுதாயத்திற்காகத் தாலாட்டுப் பாடினார்களோ, எந்த மனித சமுதாயத்திற்காகக் கற்புடன் தலையைக் குனிந்து நடந்தார்களோ அதே மனித சமுதாயம் அந்தச் சகோதரிகளையும், தாய்மார்களையும் வன்புணர்வு செய்தது.

ஹிந்துமதம் அதன் புனிதத்தை இழந்துவிட்டது. அதன் கலாசாரமும், பண்பும் சிதைந்துவிட்டது. இன்று மௌனம்தான் நிலவுகிறது. குரு கிரந்தத்தின் ஒவ்வொரு வரியும் அவமானப்படுத்தப்பட்டு விட்டது. கீதையின் ஒவ்வொரு சுலோகமும் களங்கப்படுத்தப்பட்டு விட்டது. ஒருவராவது என் முன்னால் அஜந்தா ஓவியங்களின் கலை நயத்தைப் பாராட்டிப் பேச முடியுமா? அசோகரது எழுத்துக்களை உயர்த்திப் பேச முடியுமா? எல்லோராவின் சிற்பங்களைப் புகழ்ந்து பேச முடியுமா? நிர்கதியான நிலையில் கடித்துக் குதறப்பட்ட அவளுடைய இதழ்களில், காட்டுமிராண்டிகளும், வெறியர்களும் பல்தடம் பதித்த அவளுடைய தோள்களில், சிதைக்கப்பட்ட அவளது கால்களில் உங்களுடைய அஜந்தாவின் மரணம் நிகழ்ந்துள்ளது. உங்கள் எல்லோராவின் சிதை மூட்டப்பட்டது. உங்கள் நாகரிக சமூகத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டிருக்கிறது. வாருங்கள் வாருங்கள், பதுலின் சிதைக்கப்படாத அழகு எப்படி இருந்தது என்று கூறுகிறேன். இப்போது வாழும் பிணமாய் மாறிய பதுலையும் காட்டுகிறேன்.

கொந்தளிக்கும் உணர்ச்சி காரணமாகவே நான் நிறைய விஷயங்களை எழுதும்படியானது. நான் இவ்வாறு செய்திருக்கக் கூடாதுதான். இதனால் நீங்கள் மனவருத்தம் அடைந்திருக்கலாம். ஒருவேளை உங்களுக்கு இந்த

மாதிரியான விஷயங்களை எவரும் எடுத்துக் கூறாமல் விட்டிருக்கலாம். உங்களால் எங்களுக்கு எதுவும் செய்ய முடியாமல் போகலாம். ஆனால் இப்போது இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திர நாடுகளாக ஆனபின்பு ஒரு வேசிக்குக்கூட இந்தக் கேள்வியைக் கேட்கும் உரிமை இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். பேலா, பதுல் இருவருக்கும் என்ன நேரும்?

பேலாவும், பதுலும் இரண்டு சின்னஞ்சிறுமிகள் மட்டுமில்லை. இரண்டு மதங்கள்; இரண்டு கலாசாரங்கள். அவர்கள் கோயிலும், மசூதியும். பதுல் இப்போது ஒரு சீன சலூன் அருகில் தொழில் புரியும் ஒரு வேசியின் இல்லத்தில் வசிக்கிறாள். பேலாவும் சரி பதுலும் சரி இங்கிருப்பதை விரும்பவில்லை. நான் அவர்களை விலைக்கு வாங்கியிருக்கிறேன். எனக்கு விருப்பமில்லை என்றாலும் அவர்களை என் தொழிலில் கட்டாயப்படுத்தி இறக்குவேன். ஆனால் ராவல்பிண்டியிலும் ஜலந்தரிலும் நிகழ்ந்ததை மீண்டும் இங்கு நிகழ்த்த அனுமதிக்க மாட்டேன்.

இதுவரையில் நான் ஃபாரஸ் வீதியின் உலகத்திலிருந்து அவர்களைத் தூரத்தில்தான் வைத்திருக்கிறேன். ஆனால் என் வாடிக்கையாளர்கள் கை, கால்களைக் கழுவ பின்பக்கம் செல்லும்போது பேலா, பதுல் இருவரின் விழிகளும் எதையோ சொல்ல விழைகின்றன. அந்தப் பார்வையை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதன் பரிபாஷையை உங்களுக்குச் சரியாக எடுத்துரைக்கவும் முடியவில்லை. அவர்கள் விழி சொல்ல நினைக்கும் மொழியை ஏன் நீங்களே புரிந்துகொள்ளக் கூடாது? பண்டிட்ஜி நீங்கள் பதுலை உங்கள் மகளாகத் தத்து எடுத்துக் கொள்ளுங்கள். ஜின்னா சாஹிப் நீங்கள் பேலாவை உங்கள் மகளாகத் தத்தெடுத்துக் கொள்ளுங்கள். அவர்களை ஃபாரஸ் ரோடின் இரும்புப் பிடியிலிருந்து மீட்டு உங்கள் இல்லங்களுக்குக் கொண்டுசெல்லுங்கள். பல இலட்சம் ஆத்மாக்களின் முறையீட்டைக் கேளுங்கள். ஒட்டுமொத்தமான ஒரே ஒரு முறையீடு நவகாளியிலிருந்து ராவல்பிண்டி வரையிலும், பாரத்பூரிலிருந்து பம்பாய் வரையிலும் ஒரே குரலாய் ஒலிக்கிறது.

இந்த முறையீடு மக்கள் மன்றத்தில் கேட்கவில்லையா? நீங்கள் எங்கள் முறையீட்டைக் கேட்கப் போவதில்லையா?

இப்படிக்கு,

உண்மையுடன்,

ஒரு வேசி, ஃபாரஸ் சாலையிலிருந்து.

உருது மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ஹரிஸ் காதிர்

# 16. வைப்பாட்டி

## சுபாஷ் கோஸ்

ப டிக்கட்டில் கேட்ட காலடித் தடங்களுடன் ஆடவர் மற்றும் மகளிரின் சிரிப்புச் சத்தமும், பேச்சுச் சத்தமும் கலந்திருந்தன. ஓர் அதிகார த்வனி கதவிற்கு அருகில் விருந்தினர் வந்திருப்பதைக் கூறியது. “யாரது உள்ளே?” ஓர் ஆணின் குரல் உள்ளே மிதந்து வந்தது.

உள்ளே பிரசாத் திரு திரு என்று விழித்தபடி எழுந்தான். அந்த அறை தலைகீழாக இருந்தது, அவனது சிந்தையைப்போல. அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. பிறகு நிசப்தமான முறையில் அவன், “நான் எதற்கு பயந்தேனோ அது நடந்துவிட்டது. லதா சீக்கிரம் எழுந்திரு” என்றான்.

லதா முகத்தைத் திருப்பிக் கொண்டாள், “என்னை எதற்கு தொந்தரவு செய்கிறாய்? எனக்கு யாரிடமும் அச்சமில்லை” என்றாள் அலட்சியமாக.

அவள் திண்டில் சாய்ந்தபடி தனது சிகரெட்டைப் பற்ற வைப்பதில் கவனமாக இருந்தாள். படுக்கையின் அருகில் இருந்த மேஜையின் மேல் ஒரு விஸ்கி பாட்டில். அருகில் ஓப்பனர். அவள் இடுப்பில் கட்டியிருந்த பட்டுப் புடைவை நெகிழ்ந்து போயிருந்தது. இரவு வருவதை எரியும் விளக்குகள் கட்டியம் கூறின.

“அப்படி சொல்லக்கூடாது கண்ணே. தயவுசெய்து சீக்கிரம் இந்த அறையை ஒழுங்கு பண்ணு” பிரசாத் கெஞ்சினான். “இதில் என்ன பிழை இருக்கிறது? அதனால் எனக்கு மட்டுமில்லை உனக்கும்தான் மரியாதை கிடைக்கும். சீக்கிரம். நேரம் இல்லை. அவர்கள் வாசலில்

காத்திருக்காங்க.”

லதா எழுந்து உட்கார்ந்தாள். பிரசாத் விஸ்கி பாட்டிலை மேஜை கப்-போர்டைத் திறந்து உள்ளே மறைத்து வைத்தான். சுவரில் மாட்டியிருந்த ஓவியங்களைக் கழற்றி படுக்கைக்கு அடியில் தள்ளினான். வேறு ஏதாவது ஆபத்தான அடையாளங்கள் இருக்கின்றதா என்று நோட்டமிட்டான். ஆமாம், திரைச்சீலைகளின் ஓரத்தில் எம்ப்ராய்டரி செய்யப்பட்ட நிர்வாண பொம்மைகள் காற்றில் ஆடிக் கொண்டிருந்தன. அவன் அந்தத் திரைச் சீலையைப் பற்றி இழுத்தான், ஒரே பந்தாகச் சுருட்டிக் கட்டிலுக்கு அடியில் தள்ளினான்.

பிரசாத் “ஓடு” என்று அவளை விரட்டினான்.

லதா, “ஹக். எனக்கு இந்த போலித்தனம் பிடிக்கவே இல்லை. உன் தாளத்துக்கு என்னால் ஆட முடியாது. இன்னிக்குப் பூரா நான் உன் கட்டுப்பாட்டில் இருந்தாகணும். சத்தமா சிரிக்கக் கூட முடியாது. உன்னுடைய அந்த ‘மரியாதை’ நாசமாய்ப் போகட்டும். இன்னிக்குப் பூராவும் நான் இப்படிதான் நடிக்கணும்னா நான் அதை ஏன் இங்கே செய்யணும்? ஒரு தியேட்டரில் செஞ்சா நாலு காசாவது கிடைக்கும்.”

பிரசாத் ஒவ்வொரு நொடியும் பரபரப்பாகச் செயல்பட்டால் அவள் அதற்கு நேர்மாறாகக் கொஞ்சம்கூட ஈவு இரக்கமில்லாமல் சோம்பியபடி தனது அலட்சியத்தைக் காட்டினாள். பிரசாத் நிர்கதியாக நின்றான். அந்த நிலைக்குக் கொஞ்சம் மனம் இரங்குமாறு அவன் பார்வை அவளைக் கெஞ்சியது. லதா அவன் மோவாயைப் பிடித்துக் கொஞ்சினாள். ஒரு வெடிச்சிரிப்பு அவளிடமிருந்து கிளம்பியது. “மிஸ்டர், உன் கண்ணியத்தின் மீது உனக்கு இவ்வளவு பயம் இருக்குமானால் எதற்காக ஒரு பெண்ணை அறைக்குள் கூட்டி வருகிறாய்? கூழுக்கும் ஆசைப்பட்டு மீசைக்கும் ஆசைப்படக் கூடாது. சரியா?” என்றாள்.

கப்-போர்டிலிருந்து ஒரு புடைவையை உருவினாள். துண்டு ஒன்றை உடலில் சுற்றிக் கொண்டாள். அங்கிருந்து அகன்றாள். பிரசாத் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி கதவருகே சென்றான். கதவைத் திறந்தால் வெளியே ஒரு பட்டாளமே நின்று கொண்டிருந்தது. நான்கு நடுவயதுக்காரர்கள், ஒரு

சில இளைஞர்கள், அவர்களுடன் ஏழு யுவதிகள், குழந்தைகளுடன் இல்லத்தரசிகள்.

நல்ல மனிதர்கள். அப்படி ஒன்றும் ஆசாரம் பார்ப்பவர்கள்போல தெரியவில்லை. முதல் முறை வருபவர்கள் போன்ற கூச்சம் எதுவும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் சௌகரியத்திற்கு ஏற்ற இருக்கைகளில் அமர்ந்து கொண்டார்கள். ஒரு பெண் சட்டென்று மூலையில் இருந்த பாயை எடுத்து வந்தாள். தரையில் விரித்தாள். மற்ற பெண்கள் சொந்த வீடுபோல அதில் அமர்ந்தனர்.

அதில் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் ஓர் இளைஞனைப் பார்த்து, “ரஞ்சித், உன்னுடைய புகாரைச் சொல்லப்பா” என்றார்.

“எனக்கு உங்கள் மேல் ஒரு புகார் இருக்கிறது சார்...” என்று அந்த ரஞ்சித் என்பவன் நாடக பாவனையுடன் ஆரம்பித்தான். “நாங்களும் உங்களைப் போலவே விடுமுறையைக் கொண்டாட வந்திருக்கோம். நாங்க கொஞ்சம் பேர்தான். ஆனா இந்த ஊரில் நிறைய வங்காளிகள் இருக்காங்க என்பது உங்களுக்கு தெரியுமான்னு எங்களுக்கு தெரியலை. வங்காளிகள் எல்லாம் ஒண்ணா இருந்தா நல்லாருக்குமேன்னு முயற்சி பண்றோம். நீங்கதான் பிடி கொடுக்க மாட்டேன்னு நழுவி நழுவிப் போறீங்க” என்றான்.

“ஆமாம்.” முகம்சிவந்து போன பிரசாத், “நான் ஒதுங்கி இருந்துட்டேன்” என்றான்.

“அப்பா...” ஆபா பெண்கள் மத்தியிலிருந்து முனைந்து தனது தந்தையைப் பார்த்து, “நீங்க செய்வது உங்களுக்கே நல்லா இருக்கா? உங்க கும்பலுக்குப் புதுசா ஒரு நபரை சேர்த்துகிட்டீங்க. நாங்க என்ன செய்வது?” என்றாள். அவள் யாரைக் குறித்து இப்படிக் கூறுகிறாள் என்பது புரிந்தது.

“பொறுங்க பொறுங்க, இதோ கொஞ்ச நேரம்” பிரசாத் வெட்கத்துடன் சிரித்தான். “இதோ இப்போவே அவள் உங்களோட ஒண்ணுக்குள்ள ஒண்ணாயிடுவா” என்றான்.

குச்சியால் தள்ளப்பட்ட பில்லியர்ட்ஸ் பந்தைப்போல லதா அந்த அறைக்குள் நுழைந்தாள். பெரிய பார்டர் போட்ட சேலை ஒன்றை உடுத்தியிருந்தாள். அந்தக் கூட்டத்தில் அதிகம் வயதான ராகல் பாபுவைப் பார்த்ததும் ஒரு நொடி நின்று தனது முந்தானையை இழுத்துத் தலையில் முட்டாக்கு போட்டுக் கொண்டாள். வகிடின் நடுவில் பெரிதாகச் சிந்தூரம் தீற்றிக் கொண்டிருந்தாள். நெற்றியில் திலகம் வைத்துக் கொண்டிருந்தாள். கால்களில் செம்பஞ்சுக் குழம்பு தீட்டிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் பிரசாதின் முகம் மலர்ந்தது. வாவ்... அவன் தடையின்றிப் பேசத் தொடங்கினான்.

ஆபா அவளைப் பாயில் தன் அருகில் அமர்த்திக்கொள்ள விரும்பினாள். லதா அத்தனை பெண்களையும் தன் அறைக்குள் கூட்டிக்கொண்டு போனாள். அந்தக் கூட்டம் இரண்டாகப் பிரிந்து தனித் தனியாக அரட்டையில் ஈடுபட்டது. சின்னப் பையன்கள் சண்டையில் ஈடுபட சமாதானம் செய்யப் போன பெற்றோர்களால் கலாட்டாவும் இரைச்சலும் பெரிதானது. ஆறு மாதமாகத் தனிமையில் ஆளரவமற்று இருந்த அந்த பங்களா உயிர்ப்புடன் மிளிர்ந்தது.

லதா தேநீர், பலகாரம் செய்வதில் மும்முரமானாள். “ஏன் சிரமப்படற லதா? டீ போதும். பலகாரமெல்லாம் வேண்டாம்” என்று மற்ற பெண்கள் கூறினார்கள்.

“உங்களுக்கு சரி, சின்னப் பசங்களைப் பாருங்க. அவங்களுக்கு வெறும் டீயை மட்டும் கொடுக்க முடியுமா? சும்மா இருங்க” என்று லதா மறுத்தாள்.

“அங்க பாருங்க அந்த ஆண்களை. உலகமே மறந்து பேசிக்கிட்டிருக்காங்க. இங்க நான் ஒருத்தி தனியா திண்டாடறேனே உனக்கு ஏதாவது உதவி வேணுமான்னு அந்த மனுஷனுக்கு கேட்கத் தோணுதா?” என்று பொய்யாக நொடித்துக் கொண்டாள்.

பெண்களிடம் சிரிப்பொலி எழுந்தது. “உனக்கு பொறாமை, அவன் உன்னை விட்டுட்டுப் பேசறான்னு...”

ஆபா வரவேற்பறைக்குச் சென்று பிரசாத்தைப் பார்த்து, "மாமோய்... மச்சினிக்கு உங்க மேல கோபமாம். அடுப்பங்கரையில் அத்தனை வேலை இருக்கறப்ப நீங்க ஜாலியா இங்க உக்காந்து அரட்டை அடிக்கறீங்களாம்..." என்று கேலிக் குரலில் பிரசாத்தை அழைத்தாள்.

பிரசாத், "என்ன? என்ன விஷயம்?" என்றான்.

ஆபா: "வந்து பாருங்க உள்ள."

லதா தாழ்வாரத்திற்கு வந்தாள். பிரசாத் வந்ததும், "டீ போட்டுக்கிட்டு இருக்கேன். ஆனா பசங்களுக்குக் கொடுக்க ஸ்வீட் எதுவும் இல்லை. போய் கொஞ்சம் ஸ்வீட் வாங்கிட்டு வாங்க" என்றாள்.

"அண்ணி..." அவர்கள் பேசுவதைக் கேட்ட ஆபாவும், இன்னொரு யுவதியும் அருகில் வந்து, "எதுக்கு இவ்வளவு சம்பிரதாயமெல்லாம்?" என்றனர்.

"பிஸ்கட் டின்னை திறந்து தரட்டுமா? இல்லை கண்டிப்பா கடைக்கு போகணுமா?" என்று பிரசாத் கேட்டதும் லதா, "அடடா பிஸ்கட் இருக்கறதையே மறந்துட்டேன் நான்" என்று தலையில் அடித்துக் கொண்டாள். "போதும் பிஸ்கட் இருக்கே" என்றாள்.

வந்திருந்த கூட்டம் பத்து மணிக்குக் கிளம்பிச் சென்றபோது பிஸ்கட் டின் காலி. வந்தவர்கள் கேட்டுக் கொண்டதால் அவன் ஒரு பாட்டுப் பாட வேண்டியதாயிற்று. உறையில் மூடிக் கிடந்த சாரங்கி வெளியில் வந்தது.

ராகல் பாபு தான் கொண்டு வந்திருந்த சால்வையை எடுத்துத் தன் மீது போர்த்திக் கொண்டார். அவர் மனைவி தனது பெரிபெரி நோயை மறைக்கப் பருமனான பாதங்களை ஷூவிற்குள் மறைக்கத் தடுமாறினாள். தாரக் பாபு மற்றொரு சுருட்டைப் பற்ற வைத்துத் தனது கையிலிருந்த தடியால் தரையில் டப் டப் என்று தட்டி ஓசை எழுப்பினார். ஆபாவைத் தவிர மற்ற பெண்கள் எல்லாரும் அவருடைய மருமகள்கள். பொடிப் பசங்களில் கொஞ்சம் பேர் ராகல் பாபுவின் பேரப் பசங்கள். மீதி ஹரிஷ் பாபுவின் பேரப் பையன்கள். ஹரிஷ் பாபுவுக்குச் சமீபமாகத்தான் முடக்கு வாதம் வந்திருக்கிறது. அவரும் அவர் மனைவியும் மட்டும் வரவில்லை.

ராகல் பாபு கிளம்பும்போது, “இனிமேல் நீங்க நிம்மதியா உங்க வேலையைப் பார்க்கலாம்” என்று அர்த்தத்தோடு சிரித்தார்.

அப்படிச் சொன்னாரே தவிர இங்கே அங்கே என்று பேச்சுத் தாவி அவர்கள் நிஜமாகவே கிளம்ப மேலும் அரைமணி நேரமானது. பிரசாத் வாசல் வரை சென்று வழியனுப்பிவிட்டு வந்தான்.

“ஒருவழியா போயிட்டாங்க” என்று பெருமூச்சு விட்டான். கப்-போர்டைத் திறந்து விஸ்கி பாட்டிலை எடுத்தான். லதா சொஸ்தமாகிப் படுக்கையில் விழுந்தாள்.

“ஆ... இது என்ன மாதிரியான உறவு? அடுத்தவங்க விஷயத்தில் தலையைப் புகுத்திகிட்டு?” பிரசாத் பரபரத்தான்.

லதா அவனைக் கண்டுகொள்ளவே இல்லை. பிரசாத் அவளைத் தன் பக்கம் பற்றி இழுத்தான். லதா அவனைத் தள்ளிவிட்டு, “மட்டமா நடந்துக்காதீங்க” என்றாள்.

“சரி சரி, போய் இந்தக் கேவலமான டிரெஸ்ஸை மாத்திட்டு வா. நான் அதுக்குள்ள ரெண்டு பேருக்கும் ரெண்டு பெக் விஸ்கி ரெடி பண்றேன்.”

“ஏன் நீங்க இப்படி குரூரமா நடந்துக்கறீங்க? கொஞ்ச நேரம் முன்னால பேசின எதுவும் காத்தில் கரைஞ்சு போயிடாது.”

அவள் அடுத்த அறைக்குள் சென்றாள். சேலையைக் களைந்தாள். நெற்றியில் இருந்த குங்குமத்தை அழித்தாள். கால்களில் தீட்டியிருந்த செம்பஞ்சுக் குழம்பைக் கழுவி அழித்தாள். இல்லத்தரசியின் வேடங்கள் அனைத்தையும் களைந்துவிட்டு ஒரு மெல்லிய நைட்டியை மாட்டிக்கொண்டு அவன் இருந்த அறைக்குத் திரும்பினாள்.

“லவ்லி. இப்பதான் நீ டக்கரா இருக்கே” என்று பிரசாத் கூவினான்.

அவன் சொன்னதை அவள் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து ஜன்னல் அருகில் சென்று வெளியில் பார்வையை ஓட விட்டாள். தெருவில் மங்கலான வீதி விளக்குகளின் வரிசை. மற்ற இடங்களை இருள் போர்த்தியிருந்தது. அருகில் இருந்த

மரத்தின் அடியில் கிடந்த குப்பையிலிருந்து அழுகிய வாடை அடித்தது. அவள் சிகரெட் புகையை ஆழமாக இழுத்து வெளியில் விட்டாள்.

திடீரென்று பிரசாதிற்கு அவள் அவனிடமிருந்து விலகிச் செல்வதுபோல் தெரிந்தது. அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். ஏற்கெனவே ஒரு கிளாஸ் சாராயம் உளளே போயிருந்தது. புலம்ப ஆரம்பித்தான். "ஓகே அங்கேயே நில்லு. உன் நடிப்பை நீயே மெச்சிக்கோ. ஆனா ஒண்ணு ஒத்துக்கணும், நீ நிஜமாவே பிறவி நடிகை. இன்னிக்கு வந்த எல்லாரையும் முட்டாள் ஆக்கிட்ட. தாங்க் யூ டார்லிங். என் மரியாதையைக் காப்பாத்திட்ட. நான் உனக்கு போனஸ் தரேன். அடுத்த வாட்டி நாம காஷ்மீர் போகலாம். உனக்கு எத்தனை துணிச்சல் இருந்தா என்னை குரூரமானவன் என்று இப்போ சொல்லியிருப்ப? தேவிடியா! என்னை துஷ்டன் என்றா சொன்ன? இரு உன்னை உசிரோட உரிக்கிறேன்." கொஞ்சலுடன் ஆரம்பித்த பேச்சு கோபத்தில் முடிந்தது. பிரசாத் கோபத்தில் உறுமி அருகில் இருந்த மேஜையைத் தலைகீழாகப் போட்டான்.

"எதுக்கு இப்போ இப்படி ஒரு கோபம்?" அவள் அமைதியாக ஆனால் உறுதியான குரலில் கேட்டாள். "கொஞ்ச நேரம் பேசாம இருங்க" என்று அதட்டினாள்.

ஆனால் பிரசாத்தால் சும்மா இருக்க முடியவில்லை. புலம்பிக்கொண்டே இருந்தான். அவன் வாயை எப்படி அடைப்பது என்பது லதாவுக்குத் தெரியும். படுக்கையில் படுத்துக்கொண்டு அவன் மடியில் படும்படி கால்களை அசைத்தபடி கெட்ட வார்த்தை பேசிக்கொண்டோ, பரவசமூட்டும் மட்டரகப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தாலோ போதும், அவன் குழைந்து விடுவான். ஆனால் இன்று அவனுடைய கோபம் கொஞ்சம் அதிகம். அவளைப் பார்த்து, "நான் என்ன சொல்றேனோ அதைத்தான் நீ செய்யணும். நான் வச்ச இடத்தில்தான் நீ இருக்கணும்" என்று கட்டளையிட்டான்.

லதா, "ரொம்பச் சரி" என்றாள்.

பிரசாத், "உனக்கு எதுக்கு இத்தனை தெனாவட்டு? நீ ஒரு வைப்பாட்டி

என்பதை மறந்துடாத” என்றான்.

“எனக்கு தெரியும்.”

“நீ ஆபாவின் வேலைக்காரியா இருக்கக்கூட லாயக்கில்லாதவள்.”

தீ நாக்குகள் மேனியைத் தீண்டியதுபோல இருந்தது. இதுவரையில் அவள் ஒரு குடிகாரனின் பேச்சுக்கு மறுவார்த்தை கூறுவது முட்டாள்தனம் என்று எதுவும் பேசாமல் இருந்தாள். ஆனால் அவன் கடைசியாகச் சொன்ன வார்த்தை நிதர்சனத்தைக் காட்டி முகத்தில் ஓங்கி அறைந்தது போலிருந்தது.

அவள் பிரசாத் அருகில் போய் விஸ்வரூபம் எடுத்ததுபோல நின்றாள். கண்கள் கனலைக் கக்கிக் கொண்டிருந்தன. கணங்கள் யுகங்களாகத் தோன்றின. “என்னை உங்களோட கட்டிப் போடலை. நான் நாளைக்கே தாரகேஸ்வருக்கு திரும்பிப் போகப் போறேன்” என்றாள்.

தனது அறைக்குள் நுழைந்து உள்ளே தாழிட்டுக் கொண்டாள்.

நள்ளிரவில் அவன் அவளது அறைக்கதவைத் தட்டினான். போதை தெளிந்துவிட்டது. அவனுடைய பழைய எச்சரிக்கை உணர்வு திரும்பியது. அவளுடைய ஆத்திரத்தைத் தூண்டிவிட்டால் அது அவனுக்கு எந்த நன்மையையும் செய்யாது என்று அவனுக்குத் தெரியும். அவள் ஒரு பாவ வாழ்க்கையை வாழ்கிறாள். மதிப்பு, புகழ், செல்வாக்கு போன்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாத வாழ்க்கை. அவனுடைய கௌரவம் அவளுக்கு ஒரு பொருட்டே இல்லை. இந்த ஊரிலிருந்து கிளம்பும் முன்னால் தான் யார் என்பதை மற்றவர்களிடம் கூறிவிட்டால் அவனுக்குதான் நஷ்டம். காலம் பூராவும் அந்த அவப்பெயருடன் வாழ்வதுதான் கண்ட பலனாக இருக்கும்.

“லதா...” என்று கதவுக்கு வெளியில் நின்று அவன் கெஞ்சினான், “என் மேலே கோபப்படாதே. நீ என்னை மன்னிக்கும் வரையில் தூங்க மாட்டேன். நீ என்னை அவ்வளவு சுலபமா விட்டுட்டு போயிட முடியாது.”

அவன் தனது முறையீட்டை கதவின் மீது காட்டினான். “சரி,” முடிவில் இறங்கி வந்த லதா, “நான் போகவில்லை. நீங்க சாப்ட்டுட்டு படுங்க”

என்றாள்.

•

“அத்தை…” இது விக்ரமின் குரல். விக்ரம் சுபேதாரின் கடைசிப் பையன். அவன் விடும் பம்பரத்தின் விர்ர் ஒலி எப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கும். ‘ஏழு தடவை இதோட’ என்று பிரசாத் நினைத்துக் கொண்டான். இந்தப் பையன் தவறாமல் தினமும் வந்து நிற்பான். தினமும் காலையில் வந்து லதா கையில் தேநீரும், பிஸ்கட்டும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வெளியில் உள்ள பப்பாளி மரத்தின் அடியில் மண்வீடு கட்டப் போய்விடுவான். கட்டி முடித்ததும் ஒரு மட்டையால் அதைத் தரைமட்டமாக்கி வீட்டிற்குப் போய்விடுவான்.

நேற்று நடந்த நிகழ்ச்சிகள் பிரசாத்தின் மண்டைக்குள் ஓடின. படுக்கையில் கண்களை மூடிக் கிடந்தாலும் லதா எழுந்து உடை மாற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் கதவைத் திறந்துகொண்டு வராந்தாவிற்குச் செல்வது கேட்டது. அவள், “வா விக்ரம்” என்று அழைப்பது கேட்டது.

“எவ்வளவு நேரம் தூங்குவீங்க அத்தை?” விக்ரம் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தான். வேலைக்காரன் மகாவீர் வாசலைக் கூட்டத் தொடங்கிவிட்டான். அதன் பின்பு மகாவீர் பிரசாத்திற்குத் தேநீர் கொண்டு கொடுப்பான். அது எப்போதும் வழக்கம். பிறகுதான் அவனுடைய நாள் துவங்கும். ஒரு தேர்ந்த வீட்டுத் தலைவியைப்போல லதா அத்தனை வேலைக்காரர்களையும் கட்டி மேய்க்கிறாள். ஒவ்வொருவருக்கும் இந்த இந்த வேலைகள் என்று பிரித்துக் கொடுக்கிறாள். பிறகு குளிக்கப் போவாள். குளித்து முடித்து அருகில் உள்ள கோயிலுக்குப் போய்விட்டு வருவாள். இதுவெல்லாம் முடிந்த பின்பே காலைச் சிற்றுண்டியை எடுத்துக் கொள்வாள். அவள் போடும் குடும்ப நாடகத்தில் எந்தச் செயலும் வரிசை தப்பாது. அவளுடைய ஈடுபாடு நூறு சதவீதம்தான். அது அன்பினாலும் பாசத்தினாலும் பிணைக்கப்பட்டதல்ல. வெறும் எந்திர நடவடிக்கை. தானே இயங்கும். ஒரு நெடுந்தூரப் பயணம் செல்லும் பிரயாணியைப்போல பிரசாத் நாள் முழுவதும் இந்த உபத்திரவத்தைப் பொறுத்துக் கொள்வான்,

பகல் இரவென்ற ஊரை அடையும் வரை. பிறகுதான் அவன் அவனாக மாறுவான்.

விக்ரம் போனதும் லாலாவின் மனைவி வந்து தனது சோகக் கதையை ஒருபாட்டம் சொல்லிவிட்டுப் போவாள். லதாவின் மருமகனுக்கு நல்ல வேலை இல்லை. மகளின் துயருக்கு இதுவரை ஓர் எல்லை இல்லை. அதைக் கேட்டதும் லதா அந்தக் கதையின் சோகம் தாங்காமல் முகம் மாறுவாள்.

ஆனால் இன்று பிரசாத்திற்கு அவை அத்தனையும் ஒரு ஏமாற்று வேலை என்று தோன்றியது. ஒரு பெரிய பொய்யால் உண்மையை மூடி மறைக்க முடியும் என்றால் பகலுக்கும் இரவுக்கும் என்ன வேறுபாடு இருக்கப் போகிறது?

ராகல் பாபுவின் வேலைக்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தான்.

> ‘பிரசாத் பாபு,
>
> இன்று மாலை உங்களால் லதாவை எங்களுடன் அனுப்பி வைக்க முடியுமா? இன்று அவளும் எங்களுடன் சேர்ந்து இரவு உணவை உண்ணட்டும்.
>
> இப்படிக்கு,
>
> ராகல் பாபு.’

அந்தக் குறிப்பைப் படித்ததும் பிரசாதிற்கு வெறுப்பு வளர்ந்தது. அவனுக்குக் கவலையாக இருந்தது. அச்சமாக இருந்தது. என்ன செய்வது என்று தெரியவில்லை. திரையை விலக்கிப் பார்த்தான். லதா உள்ளே அரிசி புடைத்துக் கொண்டிருந்தாள்.

இன்று காலையில் அவளும் பழைய மாதிரி இல்லை. எது அவளைச் சங்கடப்படுத்திக் கொண்டிருந்தது என்பதை அவளால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இதற்கு முன்னால் இப்படி ஆனதில்லை. அவளை எவனாவது கேவலப்படுத்திவிட்டுத் தப்பிப் போய்விட முடியுமா என்ன? அவன் ஒரு ஜமீன்தார் பையனாக இருந்தால்கூட முடியாது. அவனிடம்

தன்னுடைய எதிர்ப்பைக் காட்டாதது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. சின்ன அளவில் கூட நேற்று நடந்த நிகழ்ச்சிக்கு எதிர்வினை ஆற்ற வேண்டும் என்ற நினைப்பு இல்லாமல் இருந்தாள்.

அதன் காரணம் பயமோ பலவீனமோ கிடையாது என்பதை அறிய அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆனால் ஏன்? ஏன் இந்த பலவீனம்? நேற்று நடந்த நிகழ்ச்சிகளை நினைத்தால் அவளுக்கு நிறைய கோபம் ஏற்பட்டது. அவன் தன்னைத் துரத்திவிட நினைக்கிறானா? இருக்கட்டும். அப்படியே துரத்தட்டும். அந்த மார்வாடிக்குதான் யோகம். ஆனால் போவதற்கு முன்பு இவனுக்குச் சரியான பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இவனைப் போன்றவர்கள் இனிமேல் வேறு ஒரு வேசியிடம் இப்படி நடந்துகொள்ள மாட்டார்கள்.

“லதா…”

அவனுடைய குரலைக் கேட்டதும் அவள் இதயம் ஒருநொடி நின்றது. அவன் அருகில் வரவர அவள் அரிசி முறத்தின் மேல் மேலும் குனிந்து புடைப்பதில் மும்முரமானாள்.

“ராகல் பாபு இன்று இரவு விருந்திற்கு உன்னை அழைத்திருக்கிறார். உன்னால் போக முடியுமா?” என்று கேட்டான்.

லதா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் முகத்தில் இருந்த பய மேகங்கள் விலகி இருந்தன.

“சம்மதம். ஆனா அங்கே யாரும் காட்டிக்கொடிக்கக் கூடாது” என்றாள்.

•

அரங்கு மாறியதும் காட்சியும் மாறியது. எந்த அளவிற்கு அது சிக்கல் நிறைந்ததோ அந்த அளவிற்கு சுவாரஸியமானதாகவும் இருந்தது. லதா மட்டுமில்லை பிரசாத்தும் தன் கூட்டை விட்டு வெளியில் வந்து நிறைய வெளிக் காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். பெரும்பாலான மாலைநேரங்கள் ஆபாவின் பங்களாவிலேயே கழிகின்றது. லதா மாற்றி மாற்றி ஒருநாள் ராகல் வீடு, ஒருநாள் தாரக் பாபுவின் வீடு, ஒருநாள் ஹரிஷ் பாபுவின் வீடு என்று போய் வருகிறாள். சுபேதார் மற்றும்

லாலாவின் வீடுகளையும் விட்டு வைக்கவில்லை. அவள் போகாத ஒரே இடம் ஆபாவின் மாளிகை. இத்தனைக்கும் இருமுறை அழைப்பு வந்துவிட்டது. என்னவோ இருமுறை அழைப்பு வந்தபோதும் அவளுக்கு உடம்பிற்கு முடியாமல் போனது. ஒருமுறை கடுஞ்சுரம்; இன்னொருமுறை தலை பிளப்பதுபோல வலி.

பிரசாத், “சொல்றேன் உன்னை நிஜமாவே பாராட்டியாகணும். அங்கிருக்கும் எல்லோரும் உன்னை நிஜமாவே கொண்டாடறாங்க. என்ன அழகான மோசடி நாடகம் நீ நடத்துவது.”

லதா அவன் சொன்னதற்குச் சின்னதாகச் சிரித்தாள். அவ்வளவுதான்.

“அவங்க நம்பிக்கை குலையாம பார்த்துக்கோ” என்றான்.

“எனக்கு என்ன நடந்தாலும் கவலையில்லை, நான் எங்கிருந்து வந்தேனோ அங்கேயே போயிடுவேன்” என்றாள்.

பிரசாத் சட்டென்று மன அழுத்தத்திற்கு ஆளானான். முகம் வாடினான். பிறகு வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டான். ‘ஆமாமாம், அது உனக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது.’

•

ஆபா, பிரசாத்தின் மாளிகைக்குச் சாயங்கால வேளையில் இரண்டுமுறை வந்துவிட்டாள். லதாவுடன் பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் அதில் முதல் நாள் பேசும்போது இருந்த உயிர்ப்பு மறுநாள் இல்லை. லதாவாலும் அதே உயிர்ப்புடன் பதில் கூற முடியவில்லை. இருவருக்கும் இடையில் மனக்கசப்பு வளர்ந்து வந்தது. அவர்கள் பரிபாஷையில் அடிக்கடி மௌனம் குறுக்கிட்டது. லதா தேநீர் கொண்டுவந்தால் ஆபா அதைச் சுத்தமாக மறுக்க ஆரம்பித்தாள். லதாவும் ஆபாவைத் தேநீர் எடுத்துக் கொள்ளச் சொல்லி நிர்பந்திப்பதில்லை. தேநீர் அப்படியே கோப்பையில் ஆறிப் போய்க் கிடக்கும்.

தனிமையில் லதாவும் பிரசாத்தும் தங்களுக்கு இடையில் வளர்ந்த இடைவெளியை உணரத் தொடங்கினார்கள். இருவர் நடுவிலும் வர வர பேச்சு வார்த்தை குறையத் தொடங்கியது. லதா ஒரு சுற்று வெளியில்

போய்விட்டு வரும்போது பிரசாத் வீட்டில் இருக்க மாட்டான். இரவில் நேரம் கழித்து அவன் வரும்போதெல்லாம் லதா பெரும்பாலான நாட்களில் உறங்கப் போய்விடுவாள்.

பெண்கள் கூடும்போது அவர்கள் வம்புப் பேச்சில் நிச்சயம் லதாவின் பெயர் அடிபடும். மாசிமா எப்போதும், “அவள் எப்பவும் இப்படிதான்” என்று கூற மறக்க மாட்டாள்.

தாரக் பாபுவின் மருமகள் பொதுவாகக் குறிப்பிடுவாள். “அவள் நிஜமாகவே நல்ல பெண்தான். ஆபா சொல்வது மாதிரி ஒண்ணும் அவள் இல்லை” என்பாள்.

மாசிமா பதிலுக்கு, “அவங்க ஏன் லதா மேல குத்தம் கண்டுபிடிக்கணும்?” என்பாள்.

மமதா உடனே, “லதா படிச்ச பொண்ணு இல்லையாம். பட்டிக்காடாம்” என்று பதில் கூறுவாள்.

“ஆபா தன்னைப் பத்தி என்ன நினைச்சுகிட்டு இருக்கா?” மாசிமாவிற்குச் சொல்ல முடியாத அளவிற்குக் கோபம் வந்தது. “அவ மட்டும் மெத்தப் படிச்ச மேதாவியா? வெட்கம். கல்யாணம் ஆன ரெண்டு மாசத்தில் புருஷனை பறி கொடுத்தாச்சு. அப்புறம் படிச்சு என்ன பிரயோஜனம்? படிச்ச படிப்பை கழுத்தில் தாலி மாதிரி கட்டிக்கவா முடியும்? அப்படிப் பேச அவளுக்கு வெட்கமாக இல்லையா?”

நிபாவும் பிரபாவும் விழுந்து விழுந்து சிரித்தனர். இப்படி ஒரு வெடிச்சிரிப்புக்கு - ஆபாவிற்கு எதிரான - அவர்களுக்குக் காரணம் தெரியவில்லை.

ஒருமுறை லதா வீட்டிற்குப் போகும்போது, லதா அவளைத் தடுத்து நிறுத்தினாள். அவளைத் தனது அறைக்குள் அழைத்துக்கொண்டு போனாள். வரவேற்பறையில் பிரசாத்தும் ஆபாவும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததுதான் காரணம். தான் கூறும் விஷயங்கள் ஆபாவை ஆத்திரம் கொள்ளச் செய்கிறது என்பது தெரிந்தும்கூட பிரசாத் தனது குரலைத் தணிக்கவில்லை. முகம் சிடுசிடுத்த ஆபா கதவைப்

பார்த்தபடி, “உங்களுக்கு யார் மீதும் எதன் மீதும் பயமே இல்லையா பிரசாத்?” என்றாள்.

சிறுது நேரம் கழித்து வெளியில் கிளம்பிச் சென்றார்கள். லாலாஜியின் மனைவி லதாவைப் பார்த்து, “இவள் யாரு துக்கிரி? அவளோட தளுக்கும் மினுக்கும் எனக்குச் சுத்தமா பிடிக்கலை. நீ அவளிடம் இன்னும் கடுமையா நடந்துக்கணும்” என்றாள்.

“நான் என் கணவனுக்கு உண்மையானவளா இருந்தால் என் கணவனும் அப்படிதான் இருப்பார்.” லதா பதில் கூறினாள். “யாரும் அவரை என்னிடமிருந்து கொண்டுபோக முடியாது.”

“அது என்னவோ வாஸ்தவம்தான்” அரைமனதுடன் லாலாஜியின் சகதர்மிணி ஒப்புக் கொண்டாள். ஆனால் லதாவிற்குத் தான் கூறியது உள்ளீடற்ற வெற்று முரணாகவே தோன்றியது. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

•

பிரபாவின் கணவன் வந்துவிட்டான். இருவரும் அன்றே கிளம்புவதாக இருந்தார்கள். பிரசாத்தும் லதாவும் அவர்கள் இருவரையும் மத்யானம் சாப்பிட அழைத்திருந்தார்கள். ஜீஜாஜியைக் கேலி செய்யும் பெண்களுடன் லதாவும் சேர்ந்து கொண்டாள். கிளம்பும்போது பிரபாவின் கணவன் லதாவின் பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

பிரசாத் எரிச்சலடைந்தான். வீட்டிற்கு வரும்போது, “நீ உன் எல்லைகளைக் கடந்துகொண்டே வருகிறாய்” என்றான்.

அவள் ஒப்புக்கொள்ளவுமில்லை. மறுக்கவுமில்லை.

பிரசாத்தான் தொடர்ந்து, “உனக்கு எதைப் பற்றியும் அக்கறை இருக்காது. எனக்குத் தெரியும். உன்னுடைய பாவச் செயல்களுக்கு எல்லாம் நான்தான் ஆளாக வேண்டும்.”

பிரசாத் சொன்னதை நம்பியிருந்தால் லதா தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டிருப்பாள். அவனுடனான தனது பாவச் செயல்கள் மூலம்

அவன் வாழ்க்கை சபிக்கப்படுவதாக இருந்தால் அவள் மிகவும் சந்தோஷப்படுவாள். ஆனால் அது எப்படிச் சாத்தியம்? தனக்கும் அதில் பங்கு உள்ளது. மறுப்பதற்கில்லை. நம் மீது அன்பு செலுத்துபவர்களையும், நேசிப்பவர்களையும் ஏமாற்றுவது துரோகச் செயலாகும். தானும் இந்தத் துரோகத்தில் ஒரு கூட்டாளிதானே? விரக்தியில் அவள் நெஞ்சு விம்மித் தணிந்தது. தன்னைத் தானே கடிந்து கொண்டாலும் பிரசாத்தின் கொந்தளிப்பைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது.

வீட்டிற்கு வந்ததும் பிரசாத் திரும்பவும் அந்தப் பேச்சை எடுத்தான். “நானும் பார்த்துக்கிட்டுதான் வரேன். உன்னைச் சுத்தி யாருமே இல்லாதப்பவும் குடும்பப் பொண்ணு மாதிரிதான் கொஞ்ச நாளா நீ நடந்துக்கற. ஏன் அப்படி?” என்று கேட்டான்.

“நீங்கதான் ராத்திரி வேளையில் என்னைக் கூப்பிட மாட்டேங்கறீங்களே…”

“அதனால என்ன இப்போ? எனக்கு எப்போ நீ வேணுமோ அப்போதான் கூப்பிடுவேன். நீ எதுக்கு சிகரெட் பிடிப்பதை நிறுத்திட்ட? நீ எப்படி இருந்தாயோ அப்படியே இரு. எனக்காக நீ உன் சௌகரியங்களைக் குறைச்சுக்க வேண்டாம்.”

“நீங்களும் எனக்கு அறிவுரை கூறுவதை நிறுத்துங்க. என் வாழ்வை எப்படி வாழணும்னு எனக்குத் தெரியும்.”

அவளுடைய திமிரான பேச்சு அவனுக்கு வருத்தத்தை அளித்தது. அவளை ஒதுக்கவும் முடியவில்லை; எதிர்க்கவும் முடியவில்லை.

லதா வரவர பொறுப்பில்லாமல் நடந்துகொள்ள ஆரம்பித்தாள். அவளுக்கு ஆபாவின் மீது வருத்தம். ஒரு செல்லாக் காசை அவள் திருட முயல்கிறாள். நாளுக்கு நாள் வளர்ந்து வந்த அவளுடைய நல்ல பெயரை யாரும் களவாட முடியாது. பிரசாத்தால் கூட முடியாது. அவள் ஒருத்தியால்தான் அதை நாசம் செய்து கொள்ள முடியும், எந்த அளவுகோலிலும்.

எஞ்சிய நாட்களும் இப்படியே சென்றால் கூட அவளுக்கு ஆட்சேபணை

எதுவும் இருக்கப் போவதில்லை. திருமண பந்தம் என்ற போர்வையில் சமூக உடன்பாட்டுடன் ஒரு வெற்று வாழ்க்கையை வாழ்ந்தால்தான் என்ன இப்போது? அவர்கள் நடத்தும் இல்லறம் சரியும் மணல் மீது எழுப்பப்பட்ட மாளிகையைப் போலதானே?

•

காலையில் ஆபாவின் உடல்நிலையைக் கேள்விப்பட்டதும் பிரசாத் அவள் மாளிகைக்குக் கிளம்பினான். வரும்போது மாலையாகிவிட்டது. அப்போதுதான் லதா தனது மாலை உலாவை முடித்துக்கொண்டு வீடு திரும்பியிருந்தாள். ஆபாவிற்கு நல்ல காய்ச்சல். கூடவே ஜன்னியும் கண்டிருந்தது. ரஞ்சித்திற்குக் கவலை அதிகமானது. இதற்கு முன்னால் ஆபாவிற்கு ஜுரம் வந்திருக்கிறது. ஆனால் இந்த மாதிரி ஜன்னி வந்ததில்லை.

பிரசாத்திற்கும் கவலை. அவன் நிர்கதியாக அந்த அறையில் நடந்து கொண்டிருந்தான். அடுத்தவரை கேலி செய்து விளையாடும் விளையாட்டு தன் மீது திரும்பியதை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டான்.

பிரபா வீட்டிற்குப் போயிருந்தபோதுதான் முதல் முறையாக அவன் லதாவைப் பார்த்து, “பொறுமையின் எல்லைகளை நீ தாண்டுகிறாய் லதா. உனக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால் ஆபாவைப் பற்றி இப்படி எல்லாம் பேசுவாய்?” என்றான்.

“அவளைப் பற்றி நான் பேசினேனா? மறந்தும்கூட நான் அவளைப் பற்றி யாரிடமும் குறைத்துச் சொன்னதில்லை.”

“இது கூட ஒருவரை மட்டம் தட்டும் வழிதான்.” பிரசாத் இதனை யோசித்தோ, பரபரப்புடனோ கூறவில்லை. அவன் குரலில் அப்படி ஒரு மென்மை, தீர்ப்பு வழங்கும் நீதிபதியின் அடங்கிய குரல் போல.

“ஓகே, உங்கள் நோக்கம் என்ன?”

“இந்த ஆள்மாறாட்டத்தை நான் தொடர விடமாட்டேன். இது வரைக்கும் நீ செஞ்சது போதும். நல்ல திட்டம் போட்டு செஞ்சுருக்கே. ஆனா உன்னைப் பத்தி கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தியா? எவ்வளவு காலம் இதையே

நீ செஞ்சுக்கிட்டு போக முடியும்?”

லதா பதில் எதுவும் கூறவில்லை. பிரசாத் தொடர்ந்தான். “யாருக்காவது உன் சுயரூபம் தெரிய வந்தால் என் கதி என்னவாகும்? நினைச்ச மாத்திரம் நீ என்னோட நன்மதிப்பையும் கௌரவத்தையும் குலைப்பதைப் பார்த்துகிட்டு என்னால் சும்மா இருக்க முடியாது. உன்னுடைய சுயநலத்திற்காக, மத்தவங்களுக்குத் தெரிஞ்சா என்ன ஆகுமோன்னு பயந்து பயந்து என் ஆசைகளை நான் குறைச்சுக்கறதா இல்லை.”

லதா எதுவும் சொல்லாமல் மேஜை விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சுமத்திய ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் அவளால் கூர்மையான பதில் கொடுத்திருக்க முடியும். யோசிக்காமல் அவள் ஆத்திரப்பட விரும்பவில்லை. அவள் கல்வியும், நிலையும் அவளைப் பேச விடாமல் தடுத்தன.

“நீ கிளம்பலாம்” என்றான் பிரசாத்.

லதா உடல் விறைத்தாள்.

“உனக்கு எவ்வளவு பாக்கியோ அதுவும் தருகிறேன். அதற்கு மேலும் தருகிறேன்.”

லதா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். “அப்புறம்? அதுக்கப்புறம் நான் எப்படி பொழைப்பு நடத்துவது?” என்று கேட்டாள்.

பிரசாத் வெடித்தான். “எனக்கு அதைப் பத்தி எல்லாம் அக்கறை இல்லை. உனக்கு என் பிரச்சனைகள் மீது அக்கறை இருந்ததா? முதல் நாள் உன்னை சமைக்கச் சொன்னதும் ஒரு ஆட்டம் ஆடினியே... மறந்துட்டியா? பெட்டி படுக்கையைத் தூக்கிக்கிட்டு இரயிலடிக்குக் கிளம்பினியே... ஞாபகம் இல்லை? என் தலைவிதி, ஒரு விபசாரி கிட்ட கெஞ்சி கூத்தாட வேண்டியிருந்தது.”

அவனுடைய குற்றச்சாட்டில் ஒன்றுகூட பொய் கிடையாது. ஒன்றையும் எதிர்க்கவும் வழி இல்லை. அவர்கள் வாழ்ந்த வரலாற்றின் பக்கங்கள் இவை. அத்தனையும் உண்மை.

பிரசாத் சிறிது நேரத்தில் இறங்கி வந்தான். “இனிமேல் நீ எனக்குத் தேவையில்லை” என்றான். “உன்னை இங்கே அழைத்து வந்தபோது இருந்த மனநிலையில் நான் இப்போது இல்லை.” அவன் குரல் தழைந்துகொண்டே வந்தது. “சத்தியமா சொல்றேன், இனிமேலும் என்னால் இதைப் பொறுக்க முடியாது. புரிஞ்சுக்கோ லதா” என்றான்.

பெரு வியாதியஸ்தன் ஒருவன் புலம்பும் புலம்பலைப்போல இருந்தது. லதாவிற்கு எப்படி பதிலளிப்பது என்று தெரியவில்லை. “நிஜமாவே நான் போகணுமா?” என்று கேட்டாள்.

“ஆமாம். நிச்சயமா. ஆனால் யார் கிட்ட உன்னைத் திருப்பி அனுப்புவது என்று யோசிக்கிறேன்.”

“நீங்க அதைப் பத்தி கவலைப்பட வேணாம்” என்று அலறிய லதா, “என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். யாராவது விசாரிச்சா நல்ல கதையா யோசிச்சு வையுங்க. என்னோட மாமா வந்து கூட்டிட்டுப் போயிருக்காருன்னு சொல்லுங்க. நாளைக்கு காலையில் நான் கிளம்பறேன்” என்றாள்.

•

ஒருநாள் இரவு மட்டும்.

அவள் தூங்கினாலும் இல்லையென்றாலும் இரவு முடிந்துவிடும். அதிகாலையில், மிக அதிகாலையில் அவள் கிளம்பிவிட வேண்டும். விக்ரம் வருவதற்கு முன்னால். போவதற்குள் பழி வாங்கிவிட்டுதான் போக வேண்டும்.

வராந்தாவில் ஒரு சிலைபோல உட்கார்ந்திருந்தாள். வற்றல் இன்னும் வெளியில்தான் காய்கிறது. பனியில் இருந்தால் கெட்டுப் போய்விடும். ஊறுகாய் ஜாடியை வேறு கிளறி விட வேண்டும். உள்ளே நிறைய வேலை இருக்கிறது. ஆனால் லதா எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. அசையாமல் அமர்ந்திருந்தாள்.

லதா எண்ணிக் கொண்டாள். அவன் பயப்படுகிறான். யாருக்காவது அவளைப் பற்றித் தெரிந்து விட்டால் அவமானம் என்று நினைக்கிறான்.

மாசிமாவிற்குத் தெரிந்தால்தான் இப்போது என்ன வந்துவிடும்? தாரக் சிற்றப்பாவிற்கும், ஹரிஷ் மாமாவிற்கும் நான் லதா இல்லை தாரகேஸ்வரில் இருக்கும் சம்பா பாய் என்பதை அறிய நேர்ந்தால்தான் என்ன? என் நிஜ அடையாளத்தை இவர்களிடம் காட்டுவதால் என்ன நேர்ந்துவிடும்? பிச்சைக்காரன். அவனுடைய பாழாய்ப் போன அந்தஸ்திற்கு என்ன வந்துவிடும்?

ஆனால் அது கூடாது. தனது பழி வாங்கும் எண்ணத்தை அவள் இப்படி நிறைவேற்றிக்கொள்ளக் கூடாது. இதுவரையில் சம்பாதித்து வைத்திருக்கும் நல்ல பெயருடனும், பிரியத்துடனும் அவர்கள் நினைவில் அவள் இனிமேலும் இருக்க வேண்டும்.

லதாவிற்குப் பிரசாத்தின் எண்ணம் எந்தப் பக்கம் பாய்கிறது என்பது தெரியாமல் இல்லை. இன்னும் ஒரு வருடமோ, இரண்டு வருடமோ போனால் கணவனை இரண்டு மாதத்தில் இழந்த ஆபா இந்த மாளிகைக்கு வந்து நெற்றியில் குங்குமம் வைத்துக் கொள்வாள். வகிட்டு நுனியில் சிந்தூரம் தீற்றிக் கொள்வாள். கூந்தலில் மலர் சூடிக் கொள்வாள். இந்த வீடு முழுவதும் அவளுடைய வளையல் ஒலியால் நிறைந்திருக்கும்.

அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? ஏன் அவன் அறையில் இந்தப் பாதி இரவில் கூட விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது? ஒரு வேளை படித்துக் கொண்டிருப்பான். மாறி விட்டானா? அவனை சோதித்துப் பார்த்தால் என்ன? ஒரு நைட்டியை மாட்டிக்கொண்டு, கூந்தலைப் பரட்டையாகப் புரள விட்டு, கண்ணுக்கு மை எழுதிக்கொண்டு, கையில் ஒரு விஸ்கி பாட்டிலுடன் சென்றால் அவனுடைய உறுதி நிச்சயமாகத் தளர்ந்துவிடும்.

ச்சீ...

இந்த மாதிரி செயல்களை இனிமேலும் அவளால் செய்ய முடியுமா? அவனைத் தொடுவதைக் கூட அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இந்த மாதிரி அவள் கீழ்மைப்பட்டுப் போனதில்லை. அவளுடைய பழைய வாழ்க்கையில் வக்கிரம் பிடித்த சில வாடிக்கையாளர்களின் செய்கையால்

கூசியிருக்கிறாளே அன்றிக் குன்றிப் போனதில்லை.

ஒருவேளை கொஞ்சம் விஸ்கி குடித்தால் அவளது செய்கை கொஞ்சம் பொறுத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆனால் விஸ்கியைக் குடிக்க வேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு ஒருவித எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியது.

அவளுடைய அனைத்து ஆயுதங்களும் கூர் மழுங்கிக் கிடக்கின்றன. ஒரு மாயத் தோற்றத்திற்குக் கிடைத்த பேரும் புகழும் அவளை நிராயுதபாணியாக்கிவிட்டன. இந்த மாயத் தோற்றத்தை அவள் அதிகமாகப் பேணத் தொடங்கி விட்டாள். முக்காடிட்ட தலை, சிந்தூரம், வளையல்கள் போன்றவற்றால் எழுப்பப்பட்ட பிம்பம். கூடாது அந்த பிம்பத்தைக் கலைக்க வேண்டாம். அந்த பிம்பத்தின் மீது சிறு விரிசல் கூட ஏற்படக் கூடாது. அவள் அந்த பிம்பத்தை நேசிக்கிறாள்.

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். அவள் கிளம்பும் நேரம் வந்துவிட்டது. தனக்குத் தானே வருத்திக் கொள்ளாமல் போக முடியாது போல. நிசப்தமான இரவில் அந்த ஒரு கணத்தை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தாள்.

சம்பா பாயாக இருந்திருந்தால் இந்த கண்ணியமான கனவானின் மீது தனது வெறுப்பை அவனது மொத்தத் தலைமுறையைப் பழிக்கும் வசைச் சொற்களுடன் சேர்த்துக் காறி உமிழ்ந்திருப்பாள். அவனால் அப்படிப் பதிலுக்குக் கீழே இறங்கி வசை பாட முடியாது. அவன் வளர்ப்பு அப்படி. அவள் அதற்கு நன்றி கூறினாள்.

•

பிரசாத் புத்தகத்தை மூடி வைத்தான். அவன் முகத்தில் கவலையின் ரேகைகள் ஓடின. அடிபட்ட நாகம் பழி வாங்காமல் போகாது. அவன் அச்சத்தில் மூழ்கினான். சிறிது கூட தனது கோபத்தை வெளிக்காட்டக் கூடாது. அதற்கு பதில் அவளைச் சமாதானப்படுத்திதான் அனுப்ப வேண்டும்.

இழுப்பறையிலிருந்து ஒரு கட்டு ரூபாய் நோட்டுகளை எடுத்துக்கொண்டு

லதா இருக்கும் இடத்தை நோக்கி நடந்தான்.

“ப்ளீஸ்... இதை வச்சுக்கோ. உனக்கு என் மேல் வருத்தம் இல்லைன்னு நம்பறேன்” என்றான். லதா கையை நீட்டி மறுபேச்சு எதுவுமின்றி அவன் தந்த நோட்டுகளை வாங்கிக் கொண்டாள்.

“கோபமில்லையே உனக்கு? என்ன லதா...” என்று கேட்ட பிரசாத், “ஏன் லதா எதுவும் பேச மாட்டேன் என்கிறாய்?” என்றான்.

அவள் அவனை ஏறிட்டாள். ஒரு சுடர் போல பிரகாசித்த அவள் கண்களின் ஒளி அவனுக்கு அச்சமூட்டியது. நாகம் ஒன்று தனது எதிரியைப் புற்றிலிருந்து இருளில் உற்று நோக்குவதுபோல இருந்தது. திகிலடைந்த பிரசாத் குரல் கம்ம, “லதா, நான் உனக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லை என்று நினைக்கிறேன்” என்றான்.

விளக்கின் பிரகாசத்தைத் தாங்க முடியாமல் போனதால் கூட அவள் தன் முக்காட்டைக் கீழே இறக்கி விட்டுக் கொண்டிருக்கலாம். ஓர் அற்பனுக்காக, ஓர் இழிவானவனுக்காகத் தன்னைப் பழி வாங்கிக் கொள்ள அவள் நினைத்தபோதும் தான் போர்த்திக் கொண்டிருக்கும் நல்ல பெண்மணி என்ற பொய்யான பிம்பத்தின் முக்காட்டை அவளால் கழற்ற முடியவில்லை. இரவில், யாருமில்லாத தனிமையில் கூட வைப்பாட்டி லதாவால் தாரகேஸ்வரில் வசிக்கும் விபசாரி சம்பா பாயாக மாற முடியாது. ஓர் அவமதிக்கப்பட்ட இல்லத்தரசியைப்போல, ஒரு காயப்பட்ட மனைவியைப் போல, அவள் பெருமூச்சு விட்டபடி, “ச்சே ச்சே... நீங்க எதுக்கு எனக்கு கெடுதல் செய்யணும்? என்னை நிர்கதியாக்கியது நீங்கள் இல்லை. என்னை ஆதரவில்லாமல் செய்தது ஆபா தாக்கூர்” என்று மட்டும்தான் கூற முடிந்தது.

(வங்க மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - ரத்னோத்தம சென்குப்தா)

# 17. வீட்டுக்காரி

## இஸ்மத் சுக்தாய்

மிர்ஸாவின் வீட்டிற்குப் புதிய வேலைக்காரி வந்து சேர்ந்தபோது தெரு முழுவதும் கொந்தளித்துப் போனது. பேருக்கு வீட்டைக் கூட்டிவிட்டுப் போகும் துப்புரவுப் பெண் இப்போது குனிந்து குனிந்து குப்பை எங்கே என்று தேடித் தேடிக் கூட்டுகிறாள். கண்டமேனிக்குத் தண்ணீர் கலந்து பால் கொடுக்கும் பால்காரன் இப்போது என்னடாவென்றால் கள்ளிச் சொட்டு மாதிரி பால் கொடுக்கிறான்.

லஜோ என்று எந்தப் புண்ணியவான் அவளுக்குப் பெயர் வைத்தானோ தெரியாது அவளிடம் அடக்கமும் இல்லை நாணமும் இல்லை. அவள் பிறந்த இடம், பெற்றோரின் விவரங்கள் யாருக்கும் தெரியாது. தெருவில் போவோர் வருவோர் கொடுப்பதை வாங்கித் தின்று வளர்ந்தாள். அவளிடம் கையேந்தும் வழக்கமே இல்லை. வேண்டும் என்பதைப் பிடுங்கித் தின்பதில் கில்லாடி. வயதுக்கு வந்த பிறகு அவளுடைய உடல்தான் அவள் சொத்து. தெருவில் இவளோடு சுற்றும் பொடியன்களிடம் உடலின் ரகசியங்களை அறிந்து கொண்டாள். கொஞ்ச நாளில் மூக்கணாங்கயிறு போடாத கோயில் காளை மாதிரி திரியத் தொடங்கினாள். அவள் யாரிடமும் போய் பேரம் செய்ய மாட்டாள். வஞ்சனை செய்ய மாட்டாள். அவளுக்குச் செய்யும் வேலைக்குக் கூலி ஏதாவது கிடைத்தால் பெரிய விஷயம். கிடைக்கவில்லையா கடனுக்குக்கூட வேலை செய்வாள். அதுவும் இல்லையா சும்மாகூட வேலை செய்து கொடுப்பாள்.

“உனக்கு வெட்கமா இல்லியா?” என்று அவளைக் கேட்பார்கள்.

“வெட்கமாதான் இருக்கு” என்று அவள் வெட்கமில்லாமல் சொல்லுவாள்.

“ஒரு நாளைக்கு நீ இதுக்கெல்லாம் வருத்தப்படுவே” என்பார்கள் திருப்பி.

லஜோவிற்கு இதிலெல்லாம் அக்கறை இல்லை. நல்ல வார்த்தை, கெட்ட வார்த்தை எல்லாமே அவளுக்குப் பழகிப் போனதுதான். அப்பாவிபோல ஒரு முகம். இயல்பில் அழகிய பெரிய கண்கள். சிறிய பற்கள். இனிமையான தோற்றம். அவளுடைய நடை சுண்டியிழுக்கும் நடை. தெருவில் போனால் திரும்பிப் பார்க்காதவர்களே இருக்க முடியாது.

மிர்ஸாவிற்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. தனியாகச் சமைத்துச் சாப்பிடும் சலிப்பில் இருந்தான். அவனுடையது ஒரு சின்ன மளிகைக் கடை - அதை அவன் ஜெனெரல் ஸ்டோர் என்று குறிப்பிடுவது வேறு விஷயம் - பகல் முழுவதும் கடையிலேயே பொழுது சரியாக இருக்கும். சொந்த ஊருக்குப் போய்க் கல்யாணம் செய்துகொண்டு வரக்கூட அவனுக்கு நேரமில்லை. சில நேரங்களில் வியாபாரம் காற்று வாங்கும். அனைத்துப் பொருள்களும் ஏலத்திற்கு வந்துவிடுமோ என்று தோன்றும் அளவிற்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். சில நேரங்களில் தலையைத் தூக்கிப் பார்ப்பதற்குக் கூட நேரமில்லாமல் வியாபாரம் பிய்த்துக்கொண்டு போகும். அந்த மாதிரி நேரங்களில்தான் ஒரு கல்யாணம் பண்ணிக்கொண்டால் என்ன என்ற யோசனை மிர்ஸாவிற்கு வரும்.

பக்ஷி லஜோவை ஒரு பஸ்-ஸ்டாப்பில் வைத்துப் பார்த்தான். லஜோ அவர்கள் வீட்டிற்கு வந்த கதையைக் கூறினான். அவன் மனைவி நிறைமாத கர்ப்பமாக இருந்ததால் ஒரு பணிப்பெண் அவர்களுக்கு அவசியம் வேண்டி இருந்தது. லஜோவை அழைத்து வந்தான். குழந்தை பிறந்து கொஞ்ச காலத்தில் பக்ஷி அவளை அடித்துத் துரத்திவிட்டான். அடி உதை லஜோவிற்குப் புதிதா என்ன? ஆனால் பக்ஷிதான் அவள் அழகில் மயங்கிக் கிடந்தான். ஆனால் என்ன செய்வது? அவனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்த சமயம் அது. மிர்ஸாவின் வீட்டில் லஜோவை விட்டுச் சென்றால் என்ன என்று தோன்றியது. மிர்ஸா ஏற்கெனவே விபசாரிகள் மனைகளுக்குச் சென்று பெயரைக் கெடுத்துக் கொண்டவன். போகட்டும் அவனாவது இந்த விருந்தை ஓசியில் அனுபவிக்கட்டும்.

“அல்லா காப்பாற்றட்டும். நான் கண்ட பொம்பளைங்களை என் வீட்டிற்குள் நுழைய விட மாட்டேன்” என்றான் மிர்ஸா ஆரம்பத்தில்.

“விடு மியான். அவ உன் வீட்டில் இருக்கட்டும். எல்லா வேலையையும் இழுத்துப் போட்டுக்கிட்டு செய்வா” என்றான்.

“வேணவே வேணாம். எதுக்கு இந்த வம்பை என் தலையில் கட்டப் பார்க்கிறாய்? வேண்டுமென்றால் நீ உன்னோட வெளிநாட்டுக்குக் கூட்டிகிட்டு போ.”

“என் ஒருத்தனுக்குதான் டிக்கட் வாங்கியிருக்கேன். ஒரு கும்பலுக்கு இல்லை.”

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் சமயம் லஜோ சேலையை இடுப்பில் தூக்கிச் செருகிக்கொண்டு வேலை செய்யத் தொடங்கிவிட்டாள். ஒரு நீண்ட கழியில் விளக்குமாறு ஒன்றைக் கட்டிக்கொண்டு உள்ளே புகுந்துவிட்டாள். மிர்ஸா அவனது எதிர்ப்பைத் தெரிவித்தும் அவள் அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பானைகளை ஷெல்ஃபில் எப்படி அடுக்குவது என்பதற்கு ஒரு விளக்கம் அளித்துவிட்டு ஒரு பானையைத் தூக்கிக்கொண்டு குழாயடிக்குச் சென்றாள்.

“வேண்டும் என்றால் உன்னை என் வீட்டுக்கு திருப்பிக் கூட்டிகிட்டுப் போயிடறேன்.”

“துத்தேரி... நீ என்ன எனக்குக் கட்டின புருஷனா வீட்டுக்குக் கூட்டிகிட்டுப் போறதுக்கு? உன் வேலையை நீ பாரு. மியானை எப்படி வழிக்குக் கொண்டுவர்றதுன்னு எனக்குத் தெரியும்.”

பக்ஷி அவள் மேல் கடுப்பானான். வசைமாரி பொழிந்தான். அவளை உயர்சாதி தெருநாய் என்று ஒரு சொல் ஏசி விட்டான். அவ்வளவுதான் வந்ததே அவளுக்குக் கோபம். படு கேவலமான வார்த்தைகளால் அவனைத் திட்டித் தீர்த்து விட்டாள். பக்ஷி சரியான காட்டான். அவனுக்கே கூட ஒரு நிமிடம் என்ன செய்வது என்று தெரியவில்லை. லஜோ போட்ட கூச்சலில் அவனுக்குக் கைகால் நடுங்கிவிட்டது.

பக்ஷி கிளம்பிப் போனதும் மிர்ஸாவிற்கு அவர்கள் போட்டுக்கொண்ட

கேவலமான வாய்த் தகராறு அருவருப்பூட்டியது. போட்டது போட்டபடி பேசாமல் மசூதிக்குத் தொழப் போய்விட்டான். தொழும்போது மனது ஒரு நிலையில் இல்லை. இவள் தனக்குச் செலவு வைப்பதோடு வீட்டில் உள்ளதைக் களவாடமாட்டள் என்பதற்கு என்ன உத்திரவாதம்? மாலை மக்ரிப் தொழுகை முடிந்து வீடு வந்து சேர்ந்தான். வந்தவனுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. மௌத் ஆன அவனது தாயார் உயிரோடு வந்ததைப்போல ஒரு பிரமை ஏற்பட்டது. வீடு புத்தம் புதிதாகக் காட்சியளித்தது. மண்பானைக்கு ஒரு மூடி போடப்பட்டிருந்தது. லாந்தர் விளக்கு பளபள என்று துடைத்து வைக்கப்பட்டு மின்னிக் கொண்டிருந்தது.

“சாப்பாடு கொண்டுவரட்டுமா மியான்?” லஜோ உலகம் தெரிந்த பெண்.

“சாப்பாடா?”

“ஆயிடுச்சு. சுடச் சுட ரொட்டி மட்டும் செய்யணும். அதுவும் ஒரு நொடியில் ஆயிடும். இப்படி உக்காருங்க” என்று அவன் பதிலுக்குக்கூட காத்திராமல் அவள் அடுப்படிக்குள் சென்றாள்.

கடைசியாக அவன் தாயார்தான் வெங்காயம் ஜீரகம் போட்டு உருளைக்கிழங்கு கீரை செய்து கொடுத்தது. இப்போது இவள். அவனுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

“உனக்கு ஏது இதையெல்லாம் வாங்குவதற்கு காசு?” என்று கேட்டான்.

“கடைக்காரனிடம் கடன் சொல்லிட்டு வாங்கி வந்தேன்.”

“உனக்கு திரும்பிப் போக எவ்வளவு வேணும்ன்னு சொல்லு.”

“திரும்பிப் போகவா?”

“இவ்வளவு செலவு பண்ணினா எனக்கு கட்டுப்படி ஆகாது தாயி.”

“உன் கிட்ட யாரு சம்பளம் கேட்டாங்க?”

“ஆனா...”

“சாப்பாட்டில் காரம் ஜாஸ்தியாவா இருக்கு?” பேச்சை மாற்றினாள்.

ஆமாம் சொல்ல வாய் திறந்தான். ஆனால் அந்தச் சண்டி சுடச் சுட

ரொட்டிகளைக் கொண்டுவந்து ஒரு தட்டில் வைத்தாள்.

விடியட்டும். இவள் கணக்கைத் தீர்த்து விடலாம். மிர்ஸா தனது அறைக்குள் போனான். முதன் முதலாக அவன் வீட்டில் ஒரு பெண் உடன் இருக்கிறாள். படுத்தவன் உடல் அசதியில் உடனே கண் அயர்ந்தான்.

மறுநாள் காலையில் அவன் அவளைத் திருப்பி அனுப்புவது குறித்துப் பேச்சை எடுத்தபோது அவள் பிடிவாதமாக, “இல்லை மியான் நான் போவது மாதிரி இல்லை” என்று மறுத்துவிட்டாள்.

“ஆனா...”

“ஏன் இந்த முட்டாள் சமைப்பது பிடிக்கலியா?” என்று கேட்டாள்.

“அது இல்லை.”

“வீட்டைத் துப்புரவா வச்சுக்கலியா?”

“எல்லாம் சரிதான். ஆனா...”

“அப்புறம் என்ன ஆனா ஆவன்னான்னுட்டு?” லஜோவிற்குக் கோபம் வந்துவிட்டது.

லஜோ முதன் முறை பார்த்ததுமே தன்வசம் இழந்து விட்டாள். அவனைப் பார்த்து இல்லை, வீட்டைப் பார்த்து. எந்த வீட்டில் பெண்கள் இல்லையோ அந்த வீடு அவளுடையது. அந்த வீட்டில் இருக்கும் ஆடவனுக்கு அது சொந்தமில்லை. அவன் அதில் ஒரு வெளியாள் மாதிரிதான். பக்ஷி, அந்தக் கேடு கெட்ட குடிகாரன். அவன் அவளை வீட்டிற்குள்ளா வைத்திருந்தான்? தனியாக ஒரு மூங்கில் தட்டி போட்ட குடிசையில் வைத்திருந்தான். அது குடிசை கூட இல்லை. மாட்டுத் தொழுவம். அவனோடது கூட இல்லை. மண்பானை செய்யும் நந்தியோட தொழுவம். அந்தத் தொழுவத்து மாடு செத்துப் போய் ரொம்ப நாள் ஆனாலும் மாட்டு நாத்தம் அவளுக்குக் குடலைப் பிடுங்குவதுபோல இருந்தது. இனிமேல் அவனைப் பத்தி என்ன பேச்சு வேண்டியிருக்கு? இந்த வீட்டில் அவள் ராணி மாதிரி இருக்கிறாள். இனி இங்கிருந்து அவள் கிளம்புவதாக இல்லை.

மிர்ஸா ஒரு வடிகட்டின முட்டாள். வந்த இரண்டு மூன்று நாட்களிலேயே அவள் இதைத் தெரிந்து கொண்டாள். அவன் வீட்டிலேயே அவன் ஒரு விருந்தாளி. வருவான். அவள் என்ன எடுத்து வைக்கிறாளோ அதைப் பேசாமல் சாப்பிடுவான். போகும்போது அவள் செலவிற்குக் காசு கொடுப்பான். கொடுத்த காசுக்கு அவளிடம் இரண்டு மூன்று தரம் கணக்குக் கேட்டான். லஜோ அவனை ஏமாற்றவில்லை என்பது தெரிந்தது. காலையில் போனால் பொழுது சாய்ந்துதான் வருவான்.

அவன் போனதும் வீட்டை ஒழுங்கு பண்ணிவிட்டுப் புறக்கடையில் குளித்துவிட்டு வருவாள். அடுத்த வீட்டில் இருக்கும் ராமு பாட்டி வீட்டிற்கு எப்போதாவது வம்பு பேசப் போவாள். ராமு மிர்ஸா கடையில்தான் வேலை பார்க்கிறான். லஜோவைப் பார்த்ததும் அவன் முகத்தில் ஒரு பிரகாசம் மின்னும். மிஞ்சிப் போனால் அவனுக்குப் பதின்மூன்று, பதினாலு வயது இருக்கும். முகம் முழுக்கப் பரு. சேர்க்கை சரியில்லை. அவன்தான் மிர்ஸா விலைமகளிர் இல்லங்களுக்குச் செல்லும் விஷயத்தை அவளிடம் சொன்னான்.

லஜோவிற்கு வருத்தம். அவன் செய்வது காசுக்குப் பிடித்த கேடு. அவர்கள் எல்லாம் கொள்ளைக்காரிகள். பிறகு அவள் எதற்கு இங்கே? இன்று வரையில் அவள் எந்த வீட்டில் வேலை செய்தாலும் உற்சாகத்துடனும், சுறுசுறுப்புடனும்தான் செய்வாள். வந்து ஒருவாரம் ஆயிற்று. இங்கு அவமதிக்கப்பட்டதைப்போல அவள் எங்கும் அவமதிக்கப்படவில்லை. ஒரு ஆண் பெண் உறவை அவள் பெரிய விஷயமாகக் கருதினாள். காதல் ஒன்றுதான் அழகான அனுபவம். இதற்கு முன்னால் அவளுக்குக் காதல் அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதைச் சரியான முறையில் கொண்டுசெல்ல வழி நடத்த மூத்தவர்கள் யாரும் அவளுக்குக் கிடையாது. அவள் பக்கத்து வீட்டில் வளரும் பெண் பூனை மாதிரி. ஆணின் காதல் அவளுடைய உரிமை. அதான் அவள் கேட்காமல் பறித்துக் கொள்வாள். இங்கு அப்படி எதுவும் நிகழாதது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவள் அங்கே வேலைக்குச் சேர்ந்ததும் பிற ஆடவர்களிடமிருந்து அழைப்புகள் வந்தன. ஆனால் அவள் தான் மிர்ஸாவின் பணிப்பெண்

என்பதை மறக்கவில்லை. மிர்ஸா பெயர் கெட்டுவிடும் என்று அவள் அப்படிப்பட்ட அழைப்புகளை எல்லாம் நிராகரித்தாள்.

மிர்ஸா வெளியில் பார்க்கதான் குளிர்ந்த ஐஸ் கட்டி மாதிரி இருந்தான். அவனுக்குள் ஓர் எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. வேண்டுமென்றே வீட்டுக்கு வருவதைத் தவிர்த்தான். அவன் மனம் ஒரு பெரிய இக்கட்டில் சிக்கிக் கொண்டிருந்தது. அக்கம்பக்க மைனர்களும் இதற்கு ஒரு காரணம். எங்கே போனாலும் லஜோவைப் பற்றிதான் பேச்சாக இருந்தது. இன்று ஒரு பால்காரன் முகத்தைக் கீறிவிட்டாள்; நேற்று ஒரு பீடாக்காரன் முகத்தில் சாணியை விட்டெறிந்தாள். அவள் எங்கே போனாலும் இதயத்தைக் கைகளில் ஏந்தியபடி ஓர் ஆடவர் கூட்டம் பின்னால் அலைந்தது. பள்ளிக்கூட வாத்தியார் அவளை ஏதாவது ஒரு சந்தில் பார்த்துவிட்டால் போதும், நீண்ட பிரசங்கம் கொடுக்கத் தொடங்கி விடுவார். மசூதி முல்லா இவளுடைய வளையல் ஒலி கேட்டால் போதும் சாத்தான்களை விரட்டுவதற்கு ஓதும் மந்திரத்தை முணுமுணுக்க ஆரம்பித்து விடுவார்.

மிர்ஸா உள்ளே நுழையும்போதே சிடுசிடுப்புடன் நுழைந்தான். லஜோ அப்போதுதான் குளித்துவிட்டு வந்திருந்தாள். அவள் கூந்தல் தோள்களில் புரண்டு கொண்டிருந்தது. அடுப்படியில் விறகை ஊதி ஊதி அவள் முகம் சிவந்து போயிருந்தது. கண்களில் புகை பட்டுச் சிவந்திருந்தது. நேரம் கெட்ட நேரத்தில் வீட்டு எஜமானனைப் பார்த்ததும் அவள் உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள். திணறிப் போன மிர்ஸா அவள் வலையில் விழாமல் பார்த்துக் கொண்டான். குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுவிட்டு தொழுகைக்குக் கிளம்பிப் போனான். மனது மட்டும் வீட்டில் தங்கிவிட்டது. அவன் திரும்பி வரும்போது லஜோ வாசலில் யாருடனோ சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். அவன் வருகையைப் பார்த்ததும் சண்டை போட்டுக் கொண்டிருந்தவன் தலைமறைவானான்.

“யாரு அவன்?” ஒரு சந்தேகம் கொண்ட கணவனைப்போல மிர்ஸா கேட்டான்.

“ரகுவா…” என்றாள் அவள்.

இத்தனை நாள் அவன் தன் வீட்டிற்குப் பால் ஊற்றுவது தெரியுமே தவிர அவன் பெயர் ரகுவா என்பது இப்போதுதான் தெரிந்தது.

“பால்காரனா?”

“உங்களுக்கு ஹூக்காவில் புகையிலை போட்டு ரொப்பி வைக்கவா?” என்றாள் லஜோ.

“அவன் எதுக்கு வந்தான்?”

“பால் எவ்வளவு லிட்டர் கொண்டு வரட்டும்னு கேட்டான். ரெட்டை அர்த்தம் இருந்தது அவன் பேச்சில்.”

“நீ அதுக்கு என்ன பதில் சொன்ன?”

“போய்ச் சாவுன்னு சொன்னேன். தெனம் எவ்வளவு ஊத்துவியோ அதையே ஊத்துன்னு சொன்னேன்.”

“அப்புறம்?” அவன் குமுறத் தொடங்கினான்.

“அதுக்கு நான் அப்பன் பேர் தெரியாதவனே அந்தப் பாலை உங்க அம்மாகிட்ட போய் ஊத்துன்னு சொன்னேன். எருமை மாடு.”

“நாசமாப் போகட்டும். பொறுக்கிப் பயல். இனிமேல் அவனிடம் பால் வாங்காதே. நான் ஸ்டோரிலிருந்து வரும்போது பால் வாங்கிட்டு வர்றேன்.”

இரவு உணவு முடிந்ததும் மிர்ஸா கஞ்சி போட்டு இஸ்த்ரி செய்து வைத்திருந்த குர்தா ஒன்றை சட்டை மேல் அணிந்து கொண்டான். அத்தர் தடவிய பஞ்சைக் காதுகளின் பின்னால் வைத்துக் கொண்டான். கைத்தடியை ஆடம்பரமாகச் சுழற்றியபடி வெளியில் இறங்கி நடந்தான். லஜோவிற்குப் பொறாமை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. ஒன்றும் செய்ய இயலாத ஓர் இல்லத்தரசிபோல அமர்ந்து அந்த விலை மகளிரை மனதிற்குள் சபித்தாள்.

அவன் போனபோது அந்த வேசி இன்னொருவனுடன் மும்முரமாக இருந்தாள். மிர்ஸாவிற்குக் கோபம் மேலிட லாலாவின் கடையில் போய்க் காத்திருந்தான். ஒன்றும் முடியாமல் வெட்டியாக நாட்டு அரசியல்,

விலைவாசி இவைகளைப் பேசிவிட்டு கொதிக்கும் மனதோடு வீடு திரும்பினான். வீடு திரும்பும்போது மணி பதினொன்றைத் தாண்டிவிட்டது. அவன் படுக்கைக்கு அருகில் ஒரு மண் கூஜாவில் தண்ணீர் நிரப்பி வைக்கப்பட்டிருந்ததைக் கவனிக்காமல் அடுப்படிக்குச் சென்று மண் பானையிலிருந்து நீர் எடுத்துக் குடித்தான். அவன் தாகம் தணியவில்லை. பெரிதானது.

லஜோவின் சந்தனக் கால்களைக் கதவின் இடைவெளி வழியாகப் பார்த்துவிட்டான். அவள் அலங்கோலமாகத் திரும்பிப் படுத்தாள். வளையல்கள் சிணுங்கின. கால்களை இன்னும் அகட்டி வைத்துக் கொண்டாள். மிர்ஸா இன்னொரு குவளை நீர் குடித்தான். முணுமுணுத்தபடி தனது படுக்கைக்குத் திரும்பிச் சென்றான்.

இப்படிப் படுப்பதும் அப்படிப் படுப்பதுமாக உடலை வருத்திக் கொண்டான். அதிக நீர் குடித்ததால் வயிறு பீப்பாய் போல இருந்தது. கதவுக்கு அந்தப் புறம் தெரிந்த கால்கள் அவனை இம்சித்தது. சொல்லத் தெரியாத பயம் உள்ளே ஓடியது. விஷயம் தெரிந்தால் அவள் உண்டு இல்லை என்று செய்து விடுவாள். ஆனால் என்ன செய்ய? அவன் முதுகில் உட்கார்ந்திருந்த சைத்தான் அவனை விரட்டிக் கொண்டிருந்தது. அடுப்படி வரை செல்வதற்குள் அவனுக்குப் பல மைல் நடப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

அவனுக்குத் திடீரென்று அப்பாவித்தனமாய் ஒரு யோசனை தலையில் ஓடியது. அவன் மெல்ல அவளுடைய சேலையை இறக்கிவிட்டு வெளியில் தெரியும் கால்களை இழுத்து மூடிவிட்டால் இந்தளவிற்கு தாகம் எடுக்காது. இந்த யோசனை வந்ததும் ஓரளவு நம்பிக்கை பிறந்தது. ஆனால் அவள் நடுவில் விழித்துக் கொண்டால் அவன் செய்கையை அவள் எப்படி எடுத்துக் கொள்வாள்? குய்யோ முறையோ என்று கூச்சல் போட்டுவிட்டால் என்ன செய்வது? தப்பிக்க வேண்டுமென்றால் சில நேரங்களில் சாகசம் மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

தன் கால் ஷூக்களைக் கழற்றிக் கட்டிலுக்கு அடியில் போட்டுவிட்டு மூச்சை அடக்கிக்கொண்டு பதுங்கி பதுங்கி நடந்தான். அவளுடைய

பாவாடையின் ஓரத்தைப் பற்றி மெதுவாகக் கீழே இறக்கினான். அவன் செய்கை அவனுக்கு வருத்தமளித்தது. உள்ளே கொதித்துக் கொண்டிருந்த ஆத்மாவின் சூட்டை உணர முடிந்தது. மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு திரும்பினான்.

அவன் வாயில் நிலைப்படி நோக்கி தனது நடுங்கும் பாதங்களைத் தூக்கி வைத்தபோது அத்தனையும் கெட்டது. அவனைப் பார்த்துத் திரும்பிப் படுத்த லஜோ அவனைப் பற்றி இழுத்தாள். மிர்ஸாவிற்கு வாய் அடைத்துப் போனது. இத்தனை வருடங்களில் மிர்ஸாவிடம் வேறு யாரும் இவ்வளவு உரிமை எடுத்துக் கொண்டதில்லை. அவன் எதிர்ப்பையும் மீறி லஜோ அவனுடைய வெட்கத்தைக் களைந்தாள்.

மறுநாள் காலையில் மிர்ஸா புது மணப்பெண் போல நாணிக் கொண்டிருந்தான். லஜோ வெற்றிக் களிப்பில் நெஞ்சை நிமிர்த்தி தோசைக் கல்லில் இருந்த பரத்தாவிற்குக் கூடுதலாக இரண்டு கரண்டி நெய் வார்த்துக் கொண்டிருந்தாள். நேற்றைய சல்லாபத்தின் சாயல் அவள் கண்களில் சிறிது கூட இல்லை. ஒன்றுமே நடவாததுபோல கதவடியில் அமர்ந்து ஈக்களை ஓட்டிக் கொண்டிருந்தாள். சின்னதாக ஒரு விரலை நீட்டினால் போதும் முழு உடலையும் அவள் சொந்தம் கொண்டாடிவிடப் போகிறாள் என்று மிர்ஸா அச்சப்பட்டான்.

அன்று மதியம் லஜோ அவனுக்கு மதிய உணவு எடுத்து வரும்போது அவள் நடையில் ஒரு துள்ளல் இருந்தது. அவளைப் பார்த்ததும் கடைக்கு வந்தவர்கள் சாமான்களின் விலையை அவளிடமே கேட்க முற்பட்டனர். இறுதியில் ஏதாவது ஒரு பொருளை அவர்கள் தலையில் அவள் சுலபமாகக் கட்டிவிட்டுக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு வியாபாரத்திற்கும் பொதிந்து வைத்த பொருட்களுடன் புன்னகை ஒன்றையும் இலவசமாக அளித்தாள். வியாபாரம் பிய்த்துக்கொண்டு போனது. ஒருநாள் முழுவதும் அவன் இருந்திருந்து செய்யும் வியாபாரத்தை அவள் ஒரே மணிநேரத்தில் முடித்தாள். அன்று அவனை இந்த நினைப்பு வாட்டிக் கொண்டிருந்தது.

மிர்ஸா ஒரு ராஜாவைப்போல ஜம்மென்று மாறத் தொடங்கினான். எடை கூடியது. நிறம் கூடியது. அவனைப் பார்ப்பவர்களுக்கு அவன் மேல்

பொறாமை ஏற்பட்டது. மிர்ஸாவிடமும் ஒருவகைக் கிறுக்குத்தனம் அதிகரித்தது. அவள் அவனுடைய தேவைகளைப் பூர்த்தி பண்ண, பூர்த்தி பண்ண அவன் தாகம் அதிகரித்ததே தவிர குறையவில்லை. மனத்தளவில் சுற்றியிருப்பவர்களுக்காக பயப்பட்டான். அவளிடமிருந்து முதல்தரமான காதல் அனுபவம் கிடைக்கத் தொடங்கியிருந்தது. அவள் மதியம் உணவு எடுத்து வரும்போது மொத்த பஜாரும் பூகம்பம் வந்ததுபோல குலுங்கும். அவள் வரும்போதெல்லாம் அவன் இரத்தம் கொதிக்கும். சும்மா வரமாட்டாள். யாரையாவது விரலால் ஒரு சுண்டு சுண்டுவாள்; இடுப்பை ஆட்டிக் காட்டுவாள், சாபமிடுவாள், உதட்டைச் சுழிப்பாள், சத்தமாய்ப் பேசுவாள். கட்டைவிரலை உயரத் தூக்கிப் பிடிப்பாள்.

ஒருநாள் அவன் அவளைக் கூப்பிட்டு, “இனிமேல் எனக்கு மத்யான சாப்பாட்டை இங்கே கொண்டு வராதே” என்று விட்டான்.

“ஏன்?” அவள் முகம் வாடியது.

வீட்டில் என்றால் பைத்தியம்போல மோட்டுவளையைப் பார்த்துக்கொண்டே தனியாக இருக்க வேண்டும். கடைவீதி என்ன அப்படியா? கல கல என்று எத்தனை உயிர்ப்புடன் இருக்கும்? வரக் கூடாது என்கிறாரே மியான்.

அவள் வீட்டில் தனியாக இருக்கத் தொடங்கிய பின்னர் அவன் மனதில் இல்லாத சந்தேகங்கள் தோன்றத் தொடங்கின. இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள் என்று எண்ணுவான். திடீர் திடீர் என்று அவளை வேவு பார்க்க வீட்டிற்குப் போவான். அவள் உடனே அவனது சலிப்பையும், விரக்தியையும் போக்க முற்படுவாள். இப்படி ஒருத்தி கலைநயத்தோடு இருந்தால் எந்த ஆடவனுக்குதான் அச்சம் ஏற்படாது?

ஒருநாள் அப்படி அவன் சொல்லாமல் கொள்ளாமல் போய் நின்றபோது லஜோ ஒரு பழைய பாத்திரக்காரனோடு பேசிக் கொண்டிருந்தாள். அந்த வியாபாரி முகத்தில் டம்ளர், டம்ளராய் சர்பத் வாங்கிக் குடித்ததுபோல ஒரு திருப்தி. மிர்ஸாவைப் பார்த்ததும் ஒரே ஓட்டமாக ஓடிப்போனான். ஆனால் மிர்ஸா விடுவதாக இல்லை. அவனைத் துரத்திப் பிடித்து செமத்தியாக இரண்டு சாத்துச் சாத்தினான்.

“என்ன விஷயம்?” என்று மிர்ஸா அவளைக் கேட்டான். அவனுக்குக் கோபம் உச்சி மண்டையைத் தொட்டுக் கொண்டிருந்தது.

“சவம். பழைய ஓட்டை உடைசல் சாமானுக்கு ஓர் எடைக்குப் பத்தணா தரேன்னு வந்து பல்லைக் காட்டினான். அந்தக் காசை அவன் அம்மாகிட்ட கொடுக்கச் சொல்லிக்கிட்டிருந்தேன். அப்பன் பேர் தெரியாத நாயி.”

பழைய சாமான்களின் அன்றைய விலை நிலவரம்; ஓர் எடைக்கு எட்டணா.

“உன்னை யாரு இதையெல்லாம் போடச் சொன்னது?” அவன் ஷூக்களின் லேஸைக் கழற்றியபடி கேட்டான்.

பதில் சொல்ல லஜோ இல்லை. வாசலில் சிறு பையன்களுடன் சடுகுடு ஆடக் கிளம்பி விட்டாள். அதைக் கண்டதும் அவன் கோபம் எல்லையைக் கடந்தது. அவள் ஓடும்போது பாவடையைத் தூக்கிவிட்டபடி ஓடினாள். சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்க, பெரியவர்கள் இலவசமாக லஜோவின் தரிசனம் கிடைக்கிறது என்று வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஏற்கெனவே லஜோவை முயன்று அவளால் நிராகரிக்கப்பட்டவர்கள்.

மிர்ஸா வேகமாகத் தலையைக் கவிழ்த்தபடி நடந்து போனான். கட்டிய மனைவி வீதியில் விளையாடுவது மாதிரி இவன் வருத்தப்படுகிறானே என்ற கேள்விதான் மற்றவர்களுக்கு.

நாளுக்கு நாள் அவள் அவனுக்கு ஒரு பிரச்சனையாக மாறினாள். அவளை விட்டு விலகிப் போய்விடுவோம் என்ற நினைப்பே அவனிடம் திகிலை ஏற்படுத்தியது. மளிகைக் கடையில் நிம்மதியாக வியாபாரம் பண்ண முடியவில்லை. வீட்டிலும் தனியாக விட்டு வைக்க முடியவில்லை. இப்போது கிடைப்பதை விட இன்னும் அதிகமாகக் கொடுத்தால் அவள் அவனை விட்டுப் போய்விடுவாள் என்று நம்பினான்.

“மியான் நீ ஏன் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது?” மீரான் பாய் கேட்டான்.

“அல்லா மன்னிப்பாராக. நிக்காஹ் என்பது புனிதமான சடங்கு. அது இவள் போன்ற விபசாரியுடனா? ஊரு பூரா பாவடையக் குலுக்கிட்டு வலம்

வருபவளை எப்படி மணப்பெண்ணாக உட்கார வைக்க முடியும்?”

வீட்டிற்குத் திரும்பியவன் அங்கே லஜோவைக் காணாமல் திகிலடைந்தான். அங்கேயே சுற்றிக் கொண்டிருந்த லாலா எல்லோருடைய காதிலும் விழும்படி, “அவளுக்கு குச்சு வீடெல்லாம் ஒரு வீடா? தூசுக்குச் சமானம். அவ விருப்பப்பட்டா பங்களாவில் கூட வாழ முடியும்” என்று கூறிக் கொண்டிருந்தான். மீரான் பாய்க்கு வேறு அவள் மேல் ஒரு கண் இருக்கத்தான் செய்கிறது. கழுகுகள் போல அந்தப் பகுதி ஆடவர்கள் அவளைச் சுற்றி வந்தவண்ணம் இருந்தார்கள். மிர்ஸாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

மிர்ஸா வீட்டிற்குள் உட்கார்ந்திருந்தபோது லஜோ மட மடவென்று உள்ளே நுழைந்தாள். இத்தனை நேரம் ராமுவின் பாட்டிக்கு முதுகு பிடித்துவிட்டு வந்தாள். மிர்ஸா அவளை மணந்துகொள்ள அன்றுதான் தீர்மானம் செய்து கொண்டான். அதனால் வீட்டிற்கும் அவன் குடும்பத்திற்கும் அவப் பெயர் வந்தாலும் பரவாயில்லை.

“என்னை நிக்காஹ் செஞ்சுக்கறியா?”

“எதுக்கு மியான்?” அவள் தடுமாறிப் போனாள்.

“ஏன்? வேற யாரையாவது பார்த்து வச்சிருக்கியா?”

“த்தூ... எனக்கு எதுக்கு இன்னொருத்தன் மேல பார்வை போகணும்?” என்றாள்.

“அந்த லால் ஒருத்தன் பின்னாடியே சுத்தினானே... பங்களா வாங்கித் தர்றதா சொன்னானே?”

“அவன் பங்களாவும் அவனும். அதில் என் எச்சில் விழக்கூட தகுதியில்லை. அவன் மூஞ்சில செருப்பால அடிப்பேன்.”

“அப்புறம் என்ன?”

நிக்காஹ் அவசியமில்லை என்று அவளால் மிர்ஸாவிடம் விவரித்துக் கூற முடியவில்லை. அவள் என்றுமே அவனுடையவள்தான். கல்யாணம் செய்துகொள்ளும் அளவிற்கு அவள் பெரிதாக எதுவும் செய்து

விடவில்லை. பல பிறவி எடுத்தாலும் மிர்ஸா போல ஒரு எஜமானன் கிடைக்க மாட்டார்கள். லஜோ பல மோசமான காலகட்டங்களைக் கடந்து வந்திருக்கிறாள். அவளைப் பொருத்தவரை மிர்ஸா ஒரு தேவன். ஆரம்பத்தில் காதலர்கள் போல பிரியத்துடன் இருக்கும் எஜமானர்கள் போகப் போக அவளை அடித்துத் துன்புறுத்தத் தயங்க மாட்டார்கள். இவை அவளுடைய பழைய அனுபவங்கள்.

மிர்ஸா அவளை ஒரு பூச்செண்டால் கூட அடித்ததில்லை. அவளை மனதாரக் காதலித்தான். இரண்டு ஜதை புது ஆடைகள் வாங்கிக் கொடுத்திருக்கிறான். தங்க ஆபரணம் ஒன்றிரண்டு வாங்கிக் கொடுத்திருக்கிறான். போன ஏழு தலைமுறைகளில் தங்கம் என்றால் என்னவென்று தெரியாத பரம்பரை அவளுடையது.

ராமுவின் பாட்டியிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தான். முதலில் அந்தப் பாட்டி அதிர்ந்து போய்விட்டாள்.

“ஏம்ப்பா கழுத்துல மணியைக் கட்டிக்க ஆசைப்படற? கேடு கேட்ட நாயி பெரியாளா காட்டிக்கப் பார்க்கிறாளா? ஓங்கி ஒண்ணு கொடு தன்னைப்போல வழிக்கு வந்துட்டுப் போறா. செருப்படிக்குப் பதிலா நிக்காஹ் தீர்வாகாதுப்பா” என்றாள்.

ஆனால் அவளை நிக்காஹ் செய்து கொள்வதில் மிர்ஸா உறுதியாக இருந்தான்.

“எதுக்காக மதம் குறுக்கே வரணும்...” என்று ராமுவின் பாட்டி லஜோவைக் கேட்டாள்.

“இல்லைம்மா அது ஒரு பிரச்சனையே இல்லை. அவரை நான் எப்பவும் சொந்தம் கொண்டாடிக்கிட்டுதான் இருக்கேன்.”

லஜோ அளவுக்கு அதிகமாக இனிமையான குணமுடையவள். அந்தக் கணத்தில் உள்ள வாடிக்கையாளனைக் கூட அவளால் கணவனாக வரிக்க முடியும். தனது காதலர்களிடமிருந்து அவள் எதையும் எடுத்துக் கொண்டதில்லை. அவள் அவர்களுக்கு வேண்டும் என்ற அளவிற்கு இன்பத்தை வாரி வழங்கியிருக்கிறாள். ஆனால் மிர்ஸா அவர்களில்

ஒருவன் இல்லை. விசேஷமானவன். அவள் மனதிற்குத் தெரியும் அவனுக்கு எந்த விதமான மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும், எந்த விதமான மகிழ்ச்சியை அவனிடமிருந்து எடுக்க வேண்டும் என்று. அவன் முன்னால் மற்றவர்கள் எல்லோருமே கேடுகெட்ட நாய்கள். அவன் அருகில் கூட நிற்பதற்குத் தகுதியில்லாதவர்கள். அவளுக்கு யதார்த்தம் தெரியும். நிக்காஹ் என்பது கன்னிப் பெண்ணிற்கு நிகழ்வது. தான் கன்னியாக இருந்த சுவடு கூட அவள் எண்ணத்தில் கிடையாது. அவளுக்கு மணப்பெண்ணாக அமரும் யோக்கியதை கிடையாது. அவள் அவனிடம் கெஞ்சினாள்; மன்றாடினாள். அவன் மசிவதாக இல்லை.

ஒரு நல்ல நாள் குறிக்கப்பட்டது. இரவு நிஷா தொழுகை முடிந்தபின்பு இருவருக்கும் திருமணம் நிறைவேறியது. முஹல்லா முழுவதும் பரபரப்புடன் இருந்தது. ஆட்டம் பாட்டம்தான். மேளச் சத்தத்திற்கு இணையாகப் பெண்களும், குழந்தைகளும் திருமணப் பாடல்களைப் பாடி ஆடினார்கள். பெண் வீட்டார் என்றும் மாப்பிள்ளை வீட்டார் என்றும் தனித் தனியாகத் தங்களைப் பிரித்துக்கொண்டு கொண்டாடினார்கள். மிர்ஸா வந்த அனைவரையும் வரவேற்று வெகுமதிகள் வழங்கினான். கனீஸ் பாத்திமா என்று பெயர் மாற்றப்பட்ட லஜோ, மிர்ஸா இர்ஃபான் பெக்கை மணந்து கொண்டாள்.

•

மிர்ஸா முதலில் பாவடைக்குத் தடை விதித்தான். அவளுக்குச் சரியான அளவுகளில் ஒரு பைஜாமாவும் குர்தாவும் வாங்கிக் கொடுத்தான். கனீஸ் பாத்திமாவிற்கு பைஜாமா போட்டுக்கொண்டு நடப்பதில் தடுமாற்றமாக இருந்தது. இரண்டு பைஜாமாக்கள் நடுவில் ஒரு தையல் வேறு. சரியான கொடுமை அது. எப்போது அதைக் கழற்றி எறிவோம் என்று துடிப்பாள். ஒருநாள் அவன் உள்ளே நுழைந்தபோது அவள் பைஜாமாவைக் கழற்றிக் கொடியில் தொங்கவிட்டு பாவடையைத் தலைவழியாக மாட்டிக்கொண்டு நின்றாள். அந்தப் பாவடை இடுப்பில் நிற்காமல் கணுக்கால் வரை கழன்று விழுந்தது.

“அல்லாஹ் மன்னித்து விடுங்கள்” என்று கூறியபடி மிர்ஸா ஒரு

போர்வையை எடுத்து அவள் மேல் எறிந்தான். மிர்ஸா நீளமாகப் பிரசங்கம் செய்தும் லஜோவிற்குத் தனது குற்றம் என்னவென்று தெரியவில்லை. இந்த மாதிரியான விஷயங்கள்தான் அவனை அதிகம் கோபப்பட வைத்தது. அவன் அவளுடைய அந்த மிக நல்ல பாவடையை எரியும் அடுப்பில் போட்டுவிட்டு வெளியில் போய்விட்டான்.

லஜோ அந்த இடத்திலேயே ஒரு திருடனைப்போல உட்கார்ந்திருந்தாள். போர்வையை உதறிவிட்டு தன் உடம்பைப் பார்த்துக் கொண்டாள். அவளுக்குக் குஷ்ட ரோகமா வந்து விட்டது? குழாயடியில் குளிக்கும்போது கூட அழுது கொண்டேதான் குளித்தாள். கோரைப் பாய் தயாரிப்பவரின் மகனான மித்வா எப்போதும் அவள் குளிப்பதை கூரை மேலிருந்து பார்ப்பான். இன்று மேலே நின்று பட்டம் விடுவது போல அவள் குளிக்கும் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். அன்று அவள் சோகத்தில் ஆழ்ந்திருந்ததால் அவன் செயலுக்கு எதிராகப் பழிப்பு காட்டவோ, செருப்பை உயர்த்திக் காட்டவோ, அதுவுமின்றி எழுந்து உள்ளே ஓடவோ இல்லை. தன்னை அந்தப் போர்வையால் மூடிக்கொள்ள மட்டும் செய்தாள்.

நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு அந்தப் பைஜாமாவை சபித்துக் கொண்டே மாட்டிக் கொண்டாள். அவள் போதாத நேரம் பைஜாமாவின் நாடா உருவி உள்ளே போய்விட்டது. அவள் பலமாகக் கத்தினாள். பில்லோ வந்து நாடாவை எடுத்துக் கொடுத்தாள்.

“இந்தப் பைஜாமாவைக் கண்டுபிடிச்சது யாரு? பீரங்கிக் குழாய் மாதிரி. பாத்ரூம் போவறதுக்கு முன்னாடி பின்னாடி நாடாவை அவிழ்க்கறதும், முடிச்சுப் போடறதும். துத்தேரி...”

எரிச்சலானாள்.

மிர்ஸா ஸ்டோரிலிருந்து வந்த பிறகு மீண்டும் ஒருமுறை பைஜாமாவின் நாடா உள்ளே போய்விட்டது. லஜோ விரலால் ஆனமட்டும் அதனை வெளியில் எடுக்க முயன்றாள். மிர்ஸாவிற்கு அவளைப் பார்த்ததும் காதல் பெருகியது. அவளை அணைத்து முத்தமிட்டான். அவளை மடியில் அமர்த்திக் கொண்டான். பெரு முயற்சிக்குப் பின்னரே அந்த நாடா

வெளியில் வந்தது. நாடாவை எப்படிப் போட்டுக்கொள்வது என்று சொல்லிக் கொடுத்தான். அதன் பிறகு அதனோடு அவள் போராட வேண்டியிருக்கவில்லை.

பைஜாமா பிரச்சனை முடிந்து இன்னொரு பிரச்சனை ஏற்பட்டது. லஜோவாக இருந்தபோது எந்தெந்த குணங்கள் அவனைக் கவர்ந்ததோ அதே குணங்கள் மிர்ஸாவின் மனைவியிடம் வெளிப்பட்டபோது அவனுக்கு ரசிக்காமல் போனது. தெருவில் சுற்றுபவளின் குணங்கள் வீட்டுப் பெண்களின் குணங்களோடு ஒத்துப் போவதில்லை. ஓர் இலட்சிய மனைவியாக லஜோவால் நடந்துகொள்ள முடியவில்லை. ஒருத்திக்கு அச்சம் நாணம் பயிர்ப்பு. இன்னொருத்திக்கு நிலத்தில் யார்க்கும் அஞ்சா நிலை. ஒருத்திக்குப் பொய்க் கோபம் அடையாளம். இன்னொருத்திக்குக் குற்றம் புரிவது வாடிக்கை. லஜோ வீதியிலிருந்து கொண்டுவரப்பட்ட மணி. ஓர் இல்லப் படுக்கையை அலங்கரிக்கும் மலராக அவளால் மலரவே முடியவில்லை. மிர்ஸாவும் தன் முயற்சியை விடவில்லை. சதா திட்டியும், குற்றம் கண்டுபிடித்தும் அவளுக்குச் சேணம் பூட்ட முயன்றான்.

அவளைப் பொறுப்புள்ள இல்லத்தரசியாக மாற்றியதில் மிர்ஸாவிற்குப் பெருமை பிடிபடவில்லை. இன்னொரு விஷயம், அவன் இப்போது தன்னைத் தனது நண்பர்கள் பெண்டாட்டிதாசன் என்று கூறிவிடக் கூடாது என்பதற்காகவே நண்பர்களுடன் பொழுதைக் கழித்துவிட்டு வீட்டிற்குச் சீக்கிரம் திரும்புவதைத் தவிர்க்க ஆரம்பித்தான். ஒரு கணவனுக்குத் தன் மனைவியின் ஆசைகளைப் பூர்த்தி செய்வது சுலபம். அவள் ஆணைகளுக்குக் கட்டுப்படுவதுதான் கடினம்.

அவன் நேரம் கழித்து வரத் தொடங்கவே வீட்டு வேலைக்கு ஒரு பணிப்பெண்ணை நியமிக்க மிர்ஸா எண்ணினான். அந்த யோசனையைக் கேட்டதுமே லஜோ கொதித்து எழுந்தாள். மிர்ஸா இப்போதெல்லாம் விபசாரி இல்லங்களுக்குச் சென்று வருகிறான் என்பது அவளுக்குத் தெரியத் தொடங்கியது. அக்கம்பக்கத்தில் இது ஒரு சாதாரண விஷயம். வெளியில் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், வீட்டிற்குள் அப்படி ஓர் அசிங்கத்தைக் கொண்டுவர அவள் விரும்பவில்லை. அவள் துலக்கி

வைத்த பாத்திரத்தின் மேல் விரல் படுவதற்குக் கூட யாருக்கும் அனுமதி இல்லை. அவள் அடுப்பங்கரையில் அவளைத் தவிர யாருக்கும் எட்டு எடுத்து வைக்க உரிமை இல்லை. மிர்ஸாவை எந்தச் சிறுக்கி வேண்டுமானாலும் பங்கு போட்டுக் கொள்ளட்டும், இந்த வீடு அவளுடைய ஆளுமையின் கீழ்தான் இருக்க வேண்டும்.

சிறிது காலம் சென்றதும் மிர்ஸா அவளை அந்த வீட்டில் கொண்டு வைத்ததோடு சரி, பிறகு அவளைப் பற்றி எண்ணிக்கூட பார்க்கவில்லை. ஒரு தகுதி வாய்ந்த இல்லத்தில் அவள் குடியேறிய பின்பு அவள் மற்றவர் கண்களுக்கு ஒரு தாய்; ஒரு சகோதரி, ஒரு மகள். இப்படிதான் அடுத்தவர் கண்ணோட்டம் மாறிப் போனது. திரைச்சீலைகளின் இடுக்கின் வழியாக எட்டிப் பார்க்கும் துணிச்சல் ஒருவருக்கும் இல்லை. மித்வா, அதுதான் அந்தக் கோரைப்பாய் முடைபவனின் மகன், மட்டும் தன் புத்தியை மாற்றிக் கொள்ளவே இல்லை. தனது மோகத்தின் கனலை அணைந்து விடாமல் வைத்திருந்தான். பக்கத்து வீட்டுக் கூரையின் மேலிருந்து பட்டம் விட்டுக் கொண்டிருப்பான். மிர்ஸா கிளம்பிப் போனதும் லஜோ தனது கைவேலைகளை முடித்துக்கொண்டு குளிக்கப் போவாள். குழாயடியில்தான் குளிப்பாள். அந்தக் குழாய் அவர்களுக்குத் தனியாகப் போட்டுக்கொண்ட குழாய். எனவே அவள் மேலே கூரையில் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பதை விட்டு விட்டாள்.

•

தசரா சமயம் ஒருநாள். மிர்ஸா தனது நண்பர்களுடன் ஒரு விருந்தில் இருந்தான். அன்று காலையில்தான் விருந்திலிருந்து வந்ததால் அவசரமாகக் குளித்துவிட்டுக் கடையைத் திறக்க ஓடினான். லஜோ குளிக்கப் போனாள். தன்னிச்சையாக மாடிக் கூரை மீது அவள் விழிகள் சென்றன. அவள் ஏற்கெனவே கடும் கோபத்தில் இருந்தாள். மித்வாவின் பார்வையில் உடல் துளைக்கும் கத்திகள் மின்னின. அந்தக் கத்திகள் நனைந்த அவள் உடலை ஊடுருவின. அன்றுதான் அவன் முதன் முதலாகப் பட்டம் விடுவதில் தடுமாறினான். பட்டம் நூலை அறுத்துக்கொண்டு போனது. தோய்ந்த நூல் காற்றில் அசைந்து அவள்

முதுகின் மேல் உரசி விழுந்தது. லஜோ விசும்பியபடி, அது நிஜமோ பொய்யோ எதுவென்று தெரியாது, தனது உடலை அரைகுறையாக ஒரு போர்வையால் மூடிக்கொண்டு வீட்டிற்குள்ளே ஓடினாள். மின்னல் ஒன்று மேற்கூரையில் மின்னி வெடித்தது. அவசரமாக ஓடி வந்ததால் குழாயை மூட மறந்துவிட்டாள். மீண்டும் பின்னால் ஓடினாள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எதிரில் இருக்கும் பலகாரக் கடையில் பலகாரம் ஏதாவது கொண்டுவரச் சொல்லலாம் என்று வாசல் ஸ்க்ரீனை விலக்கினால் நிச்சயம் மித்வா அங்கிருப்பதைப் பார்ப்பாள்.

“ஏய் மித்வா, என்ன சும்மா சுத்திகிட்டு இருக்க? கச்சோரி ரெண்டு வாங்கிட்டு வா. காரமா பச்சை மிளகாய் சேர்த்து வாங்கிட்டு வா” என்று ஏவுவாள். அவனும் தலைமேற்கொள்வான்.

மித்வா கலங்கிப் போனான். இப்போதெல்லாம் அவன் மாடியிலிருக்கும் நேரம் அவள் குளிக்க வரவில்லை என்றால் அவனுக்கு நிலை கொள்ளாது. அவள் பரிமாறிய அன்பு அபரிமிதமாகத் தெரிந்தது. மிர்ஸா ஒருவேளை உணவை நிராகரித்தால் அவள் அதனைத் தூக்கி எறியமாட்டாள். எடுத்து வைப்பாள். பசியோடு இருப்பவர்களுக்குப் போடலாமே? பெரும்பாலும் பசியோடு இருப்பவன் மித்வாதான்.

திருமணம் என்ற பந்தத்தில் சிக்கிக் கொண்டதும் லஜோ ஓர் இல்லத்தரசி என்றுதான் மிர்ஸா நம்பினான். தனது கண்களால் பார்த்திராவிட்டால் அவன் அதை நம்பியிருக்க மாட்டன். லஜோதான் முதலில் மிர்ஸாவை இடைகழியில் பார்த்துவிட்டுச் சிரித்தாள். மிர்ஸா அந்த அளவிற்குக் காயப்படுவான் என்று அவள் அப்போது நினைக்கவில்லை. ஆனால் மித்வாவிற்கு அவனுடைய கோபம் நன்கு தெரியும் என்பதால் ஒரே ஓட்டமாகத் தனது வேட்டியை எடுத்துக் கொண்டு ஓடி, இரண்டு மூன்று கிராமங்கள் போன பின்னர்தான் தனது ஓட்டத்தை நிறுத்தினான்.

மிர்ஸா அவளைப் போட்டு அடி அடி என்று விளாசித் தள்ளிவிட்டான். வாழ்க்கையில் லஜோ ஏற்கெனவே மேடு பள்ளங்களைச் சந்தித்து இருந்ததால் தப்பித்தாள். இல்லை என்றால் அவன் அடித்த அடிக்குச் சுருண்டு விழுந்திருப்பாள். மித்வாவும் லஜோவும் மிர்ஸாவிடம் கையும்

களவுமாக மாட்டிக்கொண்ட செய்தி அந்தப் பகுதி முழுவதும் காட்டுத் தீ போல பரவியது. மிர்ஸா இருவருக்கும் நரகம் என்பதைப் புரியவைத்து விட்டான் என்றும் பேசிக் கொண்டார்கள். மிர்ஸாவிற்கு அவமானமாகப் போய்விட்டது. தனது குடும்ப கௌரவம் காற்றில் பறந்தது என்று வருத்தப்பட்டுக் கொண்டான். அக்கம்பக்கத்தில் கும்பலாக அந்த அநியாயத்தைக் குசலம் விசாரிக்கக் கூடினார்கள். மித்வா சிக்காமல் ஓடிப் போனதில் அவர்களுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான். மிஸ்ராவின் மனைவிக்கு மரண அடி விழுந்ததும் வருத்தம்தான். "அவ பிழைச்சுப்பா. ராமுவோட பாட்டி பார்த்துப்பாங்க" என்று சமாதானமானார்கள்.

மிர்ஸா அந்த அடி அடித்ததும் பொதுவாக எல்லோருக்கும் லஜோ அவனை வெறுக்க ஆரம்பிப்பாள் என்றுதான் நினைத்தார்கள். ஆனால் நடந்தது வேறு மாதிரி. நிக்காஹை விட அந்த அடிதான் அவளது காதலை கெட்டிப்படுத்தியது. அடி வாங்கிச் சுருண்டு எழுந்ததும் அவள் முதலில் மிஸ்ராவின் நலத்தைதான் விசாரித்தாள். அவளுடைய பழைய எஜமானர்கள் அவள் வேலைக்குச் சேர்ந்த கொஞ்ச நாட்களில் அவளது காதலர்களாகி விடுவார்கள். அதன் பிறகு சம்பளம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. இலவசமாக அடி உதைதான் கிடைக்கும். இதோ இந்த நிமிடம் வரை ஒரு மலர்ச் செண்டால் கூட மிர்ஸா லஜோவை அடித்ததில்லை. அவளுடைய பழைய எஜமானர்கள் அவளைத் தங்கள் சினேகிதர்களுடன் பங்கு போட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மிர்ஸா அவளைத் தனது உடைமைப் பொருளாகவே கருதி மிகுந்த பாதுகாப்புடன் இருந்து வந்தான். இது அவளுக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவம். இதுவரை இப்படி ஒரு நிலை அவளுக்குப் பழகி வந்ததில்லை. அவள் அவன் மேல் உயிரையே வைத்திருந்தாள். அவளுக்குத் தன் காயங்களை விட மிர்ஸாவின் வலிதான் முதன்மையாகத் தெரிந்தது. அக்கம்பக்கத்தினர் உயிரின் மீது ஆசை இருந்தால் அவளை அங்கிருந்து ஓடிப் போகச் சொன்னார்கள்.

மீரான் மியான்தான் மிர்ஸாவை ஒரு நிலைக்குக் கொண்டுவந்தான். மிர்ஸாவிற்கு இருந்த ஆத்திரத்தில் லஜோவின் மூக்கை அரிந்து, முடியைச் சிரைத்து மொட்டையடித்திருப்பான். அவன் கௌரவம் பறி போனது.

அவளைக் கொன்று போட்டிருக்க வேண்டும். இந்த நிலையில் அவன் இந்த உலகின் முகத்தில் நாளை எப்படி விழிப்பான்?

“போயும் போயும் ஒரு வேசியைக் கொன்றுவிட்டு நீ தூக்கில் தொங்கணுமா?” என்று மீரான் கேட்டான்.

“எனக்குக் கவலையில்லை.”

“பேசாம விவாகரத்து பண்ணி அவளை வெட்டி விட்டுடு” என்று யோசனை கூறினான்.

“அவள் மட்டும் நல்ல குடும்பத்திலிருந்து வந்த பெண்ணாக இருந்திருந்தால் இப்போது நடப்பதே வேறு மாதிரி ஆகியிருக்கும்.”

மிர்ஸா உடனே அவளைத் தலாக் செய்து, ஜீவனாம்சப் பணமாக முப்பத்தியிரண்டு ரூபாயையும், அவளது துணிமணி, பொருட்களையும் ராமு பாட்டியிடம் திருப்பிக் கொடுத்தான். தான் விவாகரத்துச் செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டு லஜோ நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். தலையிலிருந்து பெரிய பாரம் இறங்கியதுபோல இருந்தது. அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே திருமண பந்தம் மீது உடன்பாடில்லை. இத்தனை சிக்கல்களுக்கும் அதுதான் காரணம்.

“மியான் ரொம்பக் கோவிச்சுகிட்டாரா?” என்று ராமுவின் பாட்டியிடம் விசாரித்தாள்.

“நான் உன் முகத்தைக் கூட பார்க்க விரும்பவில்லை. முகத்தில் கரி பூசிக்கிட்டே. இங்க இருக்க வேணாம். கிளம்பு” என்று ராமுவின் பாட்டி சீறினாள்.

மிர்ஸா அவளை தலாக் செய்துவிட்ட விஷயம் அந்த முகல்லா முழுவதும் பரவியது. லாலா உடனே அவளுக்குத் தூது அனுப்பினான். “பங்களா உனக்காகக் காத்திருக்கிறது.”

லஜோ இப்படி பதில் எழுதினாள்: உன் அம்மாவை அதில் குடி வை.

ஜீவனாம்சத் தொகையாக வந்த பணத்தில் பத்து ரூபாயை ராமுவின் அம்மாவிடம் கொடுத்தாள். தங்கியதற்கான வாடகை. சாப்பாட்டுச் செலவு

எல்லாவற்றிற்கும் சேர்த்து அந்தப் பணம். தனது பைஜாமாவை ஷகூராவின் மருமகளிடம் சிறிய தொகைக்குக் கொடுத்துவிட்டாள். பீடை விட்டது. பதினைந்தே நாட்களில் அவள் கையில் தம்படி காசு கூட இல்லாமல் போனது. சொல்ல முடியாத பாரம் ஒன்று அவளை விட்டு அகன்றதுபோல உணர்ந்தாள். மிதக்கும் சுதந்திரம் அவளை மீண்டும் வந்தடைந்தது. அந்த அடிதான் அவளைப் புதுப்பித்தது. அவள் நடையில் பழைய துள்ளல் தோன்றியது. அவள் பீடா வாங்கப் போகும்போதோ, பலகாரக்கடைக்குப் போகும்போதோ ஊரே மீண்டும் கண்களை விரித்துப் பார்க்கத் தொடங்கியது.

ஒருநாள் பீடாக்காரனிடம் பீடாவில் ஏலக்காய் குறைவாகப் போட்டுவிட்டான் என்று அவனை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தாள். பீடாக்காரன் உள்ளுக்குள் குஷியாக இருந்தான். அந்த வழியில் போன மிர்ஸாவின் கண்ணில் இந்தக் காட்சி பட்டது. மீரானிடம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டான்.

மீரான் அவனிடம், “எது உன்னை வருத்துகிறது? அவள் இப்போது நடந்து கொள்வதற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அவளுக்கு நீதான் விவாகரத்து கொடுத்துவிட்டாய். இதைத் தவிர உனக்கும் அவளுக்கும் என்ன உறவு?”

மிர்ஸா கொதித்துப் போய், “அவள் என்னுடைய மனைவியாக இருந்தவள்” என்றான்.

“அதுக்கு என்ன இப்போ? இப்போ அவள் உன் மனைவியா? அப்போது கூட அவள் உன் மனைவியாக இருக்கவில்லை.”

“அப்புறம் நிக்காவிற்கு என்ன அர்த்தம்?”

“அது சட்டப்படி செல்லாது.”

“என்னது?”

“நிக்காவே நடக்கவில்லைன்னு சொல்றேன். யாருக்கும் அவள் அப்பன் அம்மா பேர் தெரியாது. அப்பன் பேர் தெரியாத பெண்ணுடன் நடக்கும் நிக்காஹ் இசுலாமிய சட்ட ரீதியா செல்லாது.”

“அப்படின்னா நிக்காவே நடக்கவில்லை. அப்படிதானே?”

“ஆமாம். நடக்கவேயில்லை.”

வேறு ஒரு முல்லாவிடம் மிர்ஸா அந்தக் கல்யாணம் செல்லுபடியாகாத கல்யாணம் என்பதை உறுதிபடுத்திக் கொண்டான்.

“நல்லவேளை என் கௌரவம் தப்பிச்சது” மிர்ஸாவும் சிரித்தான். அவன் தலையிலிருந்தும் ஒரு பெரிய பாரம் இறங்கியது.

“வாஸ்தவம்” மீரான் ஆமோதித்தான்.

“ரொம்ப வினோதமான வியாபாரம் இது. அப்படி என்றால் விவாகரத்து கூட செல்லாது.”

“தம்பி நிக்காவே நடக்கவில்லை என்னும்போது தலாக் எப்படி நடந்திருக்க முடியும்?”

“அப்போ ஜீவனாம்சமா நான் கொடுத்த முப்பத்திரண்டு ரூபாய் தண்டம்தானா?” என்று அவன் வருத்தத்துடன் புலம்பினான்.

அவர்கள் இருவர் நடுவிலும் நிகழ்ந்த நிக்காவும் சட்டப்படி செல்லாது, தலாக்கும் சட்டப்படி செல்லாது என்ற செய்தியும் உடனே முகல்லா முழுவதும் பரவியது. அவனுக்கு நட்டமான முப்பத்தியிரண்டு ரூபாயையும் சேர்த்து.

இந்தச் சேதியைக் கேட்டதும் லஜோ குதியாட்டம் போட்டாள். அந்தக் குதியில் நெஞ்சிலிருந்த பெரிய பாரம் ஒன்று நழுவி விழுந்தது போலானது. நிக்காஹ், தலாக் என்ற இரண்டு தலைவலிகள் அகன்றதில் அவளுக்குச் சொல்ல முடியாத அளவிற்குக் குஷி.

அதையும் விட தனது எஜமானுக்கு ஏற்பட்ட கெட்ட பெயர் அகன்றதில் இன்னும் அதிக மகிழ்ச்சியானது. தனது எஜமான் நஷ்டம் அடைவதாக இருந்தால்தான் லஜோ மிகவும் வருத்தம் அடைந்திருப்பாள். அப்பன் பெயர் தெரியாமல் போனால்தான் என்ன இப்போது? அதுவே தனது எஜமானைக் காப்பற்றிவிட்டது என்பது சந்தோஷமான விஷயம்தான்.

அல்லா காப்பாற்றினார். அவள் மட்டும் முறையாகப் பிறந்திருந்தால் அவ்வளவுதான் எல்லாம் நட்டமாகியிருக்கும்.

ராமுவின் பாட்டி வீட்டில் இருப்பது அவளுக்கு முள் மேல் இருப்பதுபோல இருந்தது. இதற்கு முன்னால் அவளுக்கு ஒரு வீட்டை நிர்வாகம் செய்யும் வாய்ப்பு கிடைத்ததே இல்லை. அவன் வீட்டை எண்ணி கவலைப்பட ஆரம்பித்தாள். வீட்டில் வேலைக்கு ஆள் போட்டால் திருட்டுப் போய்விடும் என்ற பயத்தில் அவன் வேலைக்கும் ஆள் வைத்துக் கொள்ளவில்லை. வீட்டில் குப்பையும் கூளமும் சேரத் தொடங்கியது அவளைப் பெரிதும் வருத்தியது.

மிர்ஸா தனது மளிகைக் கடைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது லஜோ அவனை வழி மறித்தாள்.

“எஜமான் நான் இன்றிலிருந்து வீட்டு வேலைக்கு வரட்டுமா?” என்று கேட்டாள்.

“அல்லாஹ் மன்னிப்பாராக” என்றவன் தனது தலையைக் குனிந்தபடி யோசித்தான். எப்படியும் எனக்கு ஒரு வேலைக்காரி வேண்டும். அது ஏன் இந்தப் பாவப்பட்டவளாக இருக்கக் கூடாது?

“நாளையிலிருந்து வா” என்றான்.

லஜோ மறுநாள் வரையில் காத்திருக்கவில்லை. சந்தோஷத்தில் குதியாட்டம் போட்டபடி அவன் வீட்டிற்குள் நுழைந்து அவள் பாவடையை மேலே தூக்கி விட்டுக்கொண்டு வீட்டு வேலையில் மூழ்கினாள்.

அன்று மாலை வீடு திரும்பிய மிர்ஸா இறந்து போன தனது தாய் உயிருடன் வந்துவிட்டாளா என்று சந்தேகப்பட்டான். வீடு தூசி தும்பு இல்லாமல் பளிச்சென்று இருந்தது. சந்தன வாசமும், சாம்பிராணி வாசமும் அறைகளில் தவழ்ந்தன. மண்பானை சுத்தமாகக் கழுவப்பட்டு மூடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. லாந்தர் கண்ணாடி நன்கு துலக்கப்பட்டு பளிச்சென்று மின்னியது. அவனுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். மதிய உணவை வாய் மூடிக்கொண்டு சாப்பிட்டான். தனது நிலையறிந்த லஜோ அறைக் கதவின் அருகில் அமர்ந்து விசிறிக் கொண்டிருந்தாள்.

அன்றிரவு எல்லோரும் சாப்பிட்டான பின்பு லஜோ வழக்கம்போல அடுப்படியின் கீழ் படுத்துக் கொண்டாள். அன்று இரவும் மிர்ஸாவிற்கு வழக்கம்போல கடுமையான தாகம் ஏற்பட்டது. நெஞ்சம் சொல்வதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் அவன் திரும்பிப் படுத்துக் கொண்டான். காதில் அவளுடைய வளையோசை கேட்டது.

மிர்ஸாவின் நெஞ்சம் அவன் அவளை மிகவும் கருணையின்றி நடத்தியதற்காகக் கடிந்து கொண்டது.

“அல்லாஹ் மன்னிப்பாராக” என்றபடி படுக்கையிலிருந்து எழுந்தான். மெதுவாக அடி மேல் அடி எடுத்து அவள் படுக்கை வரை சென்றான். தனது இல்லத்தரசியை வாரி அணைத்துக்கொண்டான்.

(உருது மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - சமீரா ஹசன் சித்திக்கி)

# 18. பகடைக் காயின் பங்கு

## நயனா அதர்கர்

மேம்பாலத்தில் மாலை விளக்குகள் ஏற்றப்பட்டதும் பாலத்தின் கீழேயிருந்த குடிசைகளில் சில குறிப்பிட்ட செயல்கள் ஆரம்பமாகின. பெண்கள் அந்தத் தற்காலிகக் குடிசைகளிலிருந்து வெளியில் வந்து மீதம் இருக்கும் நீண்ட இரவிற்காகத் தங்களை அலங்காரம் செய்துகொள்ளத் தொடங்கினர். ஜைதுன் கால், கைகளை நீட்டிச் சோம்பல் முறித்தாள். உறங்கிக் கொண்டிருந்த படுக்கையிலிருந்து எழுந்தாள். அருகில் அவள் குழந்தை ஹமீது தூங்கிக் கொண்டிருந்தது. தலையை வகிடெடுத்து வாரிக் கொண்டாள். கட்டியிருந்த சேலையை உருவினாள். ஓர் உதறு உதறி அதை அழகாக மடித்தாள். சுருக்கங்களை நீவி விட்டாள். மீண்டும் அதையே உடுத்திக் கொண்டாள். அவளிடம் இதை விட நல்ல சேலை இல்லை. ஹுசைன்தான் இந்தப் புடைவையைக் கொடுத்தான். ஆனால் அந்தப் பொறுக்கி போகும்போது அவளிடம் இருந்த எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டான்.

“எழுந்திரு தேவிடியாப் பயலே. வேலைக்கு நேரமாச்சு” என்று ஹமீதை எழுப்பினாள். ஒரு பழைய படுக்கை விரிப்பில் அவன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனைக் கையில் எடுத்தாள். அவளால் உற்சாக மிகுதியில் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அந்த வட்டாரத்தின் கொச்சை மொழி எத்தனை சீக்கிரம் அவளுக்குப் பழகிவிட்டது. அதோடு சாராயப் பழக்கமும். அந்தக் குடிசையை விட்டு வெளியில் வந்தாள். ஜாக்கெட்டுக்குள் மறைத்து வைத்திருந்த பத்து ரூபாய் தாளை வெளியில் எடுத்தாள். நீளமாக நடந்து அருகில் இருந்த பழைய இரயில்

நிலையத்தில் போய் நின்றாள்.

ஜைதுனைப் பார்த்ததும் ஒரு லுங்கி ஆசாமி நெருங்கி வந்தான். அருகில் வந்து அவள் தோள்களில் கிடந்த ஹமீதைக் கொஞ்ச ஆரம்பித்தான். அவன் பேச்சை அவள் ஒதுக்கித் தள்ளினாள். அவனை எச்சரிக்கும் குரலில். “ஏய் ங்கொம்மாள போயி செய்யி. இது என்ன ஒங்கம்மாவோட கடையா ஓசில துன்னுட்டுப் போவறதுக்கு? அப்பன் பேர் தெரியாத நாயி” என்று சகட்டுமேனிக்குத் திட்டினாள். அவன் விடுவதாக இல்லை. தொந்தரவு கொடுத்த வண்ணம் இருந்தான். எரிச்சலான ஜைதுன் இரயில் நிலையத்தை விட்டு வெளியில் வந்தாள். ரோட்டைக் கடந்து ஜோஸின் கடைக்குள் நுழைந்தாள். பத்து ரூபாயை ஜோஸிடம் நீட்டினாள். அவன் கொடுத்த சாராயத்தைத் தொண்டைக்குள் இறக்கினாள். தோள்பட்டையில் வாயைத் துடைத்துக் கொண்டாள். வாசலுக்கு வெளியில் வந்தாள். அங்கிருந்த சுவரில் சாய்ந்து நின்றாள். ஹமீதை ஒரு சாக்கை விரித்துக் காலடியில் போட்டாள்.

பத்து நிமிடங்கள் போனது. ஒரு வாலிபன் தயங்கித் தயங்கி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். செமத்தியான வாடிக்கையாளனைப் பார்த்ததும் அவள் பரவசமானாள். அவனைக் கண்களால் அழைத்தாள். ஹமீதைத் தூக்கிக்கொண்டு அருகில் இருந்த தேவாலயத்திற்குள் சென்றாள். அந்த இடம் ஒரு பாழிடம். அவனுக்கு ஆசையும் இருந்தது; மானம் போய்விடுமோ என்ற தயக்கமும் இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தபடி பயத்துடன் அவளைப் பின்தொடர்ந்தான். ஜைதுன் அந்த நினைப்பை எண்ணிச் சிரித்தாள். அவளை ஹுசைன் இப்படிதான் அவன் வசித்த இடத்தின் அருகிலிருந்த மலை மேல் இருக்கும் தர்கா வரை கூட்டிச் செல்வான். அப்போது அவளுக்கு அச்சம் அதிகமிருக்கும். வெட்கமும் தன்மான உணர்வும் பிடுங்கித் தின்னும். கண்ணே மணியே என்று அவன் பிதற்றுவான். தடவிக் கொடுப்பான். கட்டிப் பிடிப்பான். இன்னும் மேலே சென்று பொட்டுத் துணி கூட இல்லாமல் அவள் எட்டாத இன்ப உயரங்களை எட்ட வைப்பான். அவனிடம் எப்படி மாட்டிக் கொண்டோம் என்பது நினைவில் இல்லை. என்ன செய்து என்ன? அவளுக்கு எல்லாம் விளங்கியபோது வயிறு பெருத்ததுதான் மிச்சம்.

அவளை கோவாவில் கை கழுவி விட்டு அவன் ஓடிப்போனான்.

அவளுடைய எண்ண ஓட்டம் அந்த வாலிபனின் பார்வையால் தடைபட்டது. அவன் அவளுடைய மார்பகங்களை வெறிக்கப் பார்த்தான். அவனுடைய நடுக்கத்திற்குக் காரணம் இது அவனுடைய முதல் அனுபவமாக இருக்கலாம். ஜைதுன் அவனுக்கு உதவி செய்ய முன்வந்தாள். ஆனால் அவனுடைய செய்கை பார்வையுடன் மட்டும் நிற்கவே அவள் எரிச்சலடைந்தாள். வெறும் வயிற்றில் குடித்த சாராயம் வேறு வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டது. கொஞ்ச நேரத்தில் ஹமீது வேறு பாலுக்கு அழத் தொடங்கி விடுவான்.

அந்த இளைஞன் அவளைத் தொட முயன்றபோது அவள் அவனிடம், “என்ன ஓசியில வேலையை முடிக்கலாம்னு பாக்கறியா?” என்று மேலாப்பைச் சரிசெய்து கொண்டாள்.

“எவ்வளவு?” என்று கேட்ட அந்த இளைஞன் தனது வாலட்டிலிருந்து கத்தையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த நோட்டுகளிலிருந்து ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை அவளிடம் நீட்டினான். முதன்முறையாக அவள் ஐம்பது ரூபாய் நோட்டைப் பார்க்கிறாள். அதுவும் வெறும் இச்சையூட்டிய செய்கைகளுக்கு. இதற்கு முன்னால் குடித்துவிட்டு வரும் வாடிக்கையாளர்களிடமிருந்து வெறும் ஐந்தோ பத்தோ மட்டுமே கிடைக்கும் எல்லா வேலைகளுக்கும் சேர்த்து. ஐம்பது ரூபாய் நோட்டைப் பார்த்ததும் அவள் விழிகள் விரிந்தன. இதே போல சம்பாதித்தால் அவள் தனது சொந்த ஊருக்கேகூட திரும்பிப் போக முடியும். அவன் கொடுத்த பணத்தை அவசரமாக வாங்கிக் கொண்டாள். அவன் கைகளை உரசினாள். சந்தைத் தாண்டி தெரிந்த பாதி கட்டப்பட்ட நிலையிலிருந்த பழைய கட்டடத்தைக் கை காட்டினாள். “அந்த இடம் தோதா இருக்கும். இன்னொரு ஐம்பது ரூபாய் கொண்டு வா. சரியா பதினொரு மணிக்கு கட்டடத்துக்கு மேல வந்துடு. வருவ இல்ல?” என்று வினவியபடி செல்லமாக அவன் கன்னத்தில் தட்டினாள். ஹமீதைத் தூக்கிக்கொண்டு அந்தச் சந்தைக் கடந்து போனாள். நேரே சாராயக் கடைக்குள் சென்று ஒரு கோப்பை சாராயம் வாங்கிக் குடித்தாள். வெளியில் வந்து தெருவோர

உணவுக் கடையில் ஒரு ப்ளேட் மட்டன் பிரியாணிக்கு ஆர்டர் கொடுத்தாள். கடைக்காரனுக்கு ஒரே ஆச்சரியம். எப்போது வந்தாலும் அரை ப்ளேட் சோறோ, ஒரே ஒரு பாவ் பாஜியோ வாங்கித் தின்பவள் இன்று மட்டன் பிரியாணிக்கு ஆர்டர் கொடுக்கிறாள். "கையில் காசு இருக்காம்மா?" என்று எகத்தாளமாகக் கேட்டான் கடைக்காரன்.

"எதுக்கு கேட்கற? இதுக்கு முன்னாடி உனக்கு நான் காசு கொடுக்காம ஓசியிலா தின்னுட்டுப் போயிருக்கேன்? கருங்காலி. அயோக்கியப் பயல்." சொல்லிவிட்டு குழந்தை ஹமீதை மார்பில் அணைத்தபடி பாலூட்டத் தொடங்கினாள். ஜைதுனின் வார்த்தைகள் மேலும் காற்றை அசிங்கப்படுத்தாமல் இருக்க கடைக்காரன் அவள் கேட்ட மட்டன் பிரியாணியைக் கொண்டுவந்து அவள் முன் வைத்தான். கொழுத்த கிராக்கி சிக்கியிருக்கும். அவன் நினைத்துக் கொண்டான்.

ஜைதுன் மட்டன் பிரியாணியைத் தின்றுவிட்டு அந்த அரைகுறை கட்டடம் நோக்கிப் போனாள். அக்கம்பக்கத்தில் முக்கால்வாசி கடைகளை மூடி விட்டார்கள். விளக்குகளை அணைத்துவிட்டு ஜனங்கள் தூங்கப் போனார்கள். குழந்தை ஹமீதைத் தோளோடு சேர்த்து அணைத்தபடி அவள் படியேறினாள். அந்த வாலிபன் உச்சியில் உட்கார்ந்திருந்தான். தனது ஆடைகளை அவிழ்த்து அழகாக மடித்து மாடி சுவர் திட்டையில் வைத்திருந்தான். வராந்தாவில் இருந்த மின்சார விளக்கின் மங்கிய ஒளியில் அவன் மடித்து வைத்திருந்த துணிகளின் மேல் இருந்த உப்பிய வாலட் அவள் கண்களை உறுத்தியது. அவளுக்குத் தனது சொந்த ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் மிகுந்தது. வாலட்டின் மீது வைத்த கண்களை எடுக்காமல் அவள் ஹமீதை ஒரு விரிப்பு விரித்துக் கீழே கிடத்தினாள். வேக வேகமாகத் தனது உடைகளைக் களைந்து மல்லாக்கப் படுத்துக் கொண்டாள். கொஞ்ச நேரத்திற்கு முன்பு தயக்கம் காட்டிய அந்த இளைஞன் இப்போது எந்தத் தயக்கமும் இல்லாமல் அவள் மேல் படர்ந்தான். அவனிடம் சாராய நாற்றம் அடித்தது.

அவள் அவன் முகத்தில் விடாமல் முத்தமிட்டாள். ஒருவேளை இது அவனுடைய முதல் அனுபவமாக இருக்கலாம். அவளுக்கு ஹுசைன்

நினைவு வந்தது. ஹுசைனும் அவளை இப்படி நயமே இல்லாமல் கையாளுவான். ஆரம்பத்தில் தர்காவின் அருகில் இருந்த புதர் மறைவில், துணிச்சல் அதிகம் ஆனதும் அவள் எஜமானி அம்மாள் இல்லாத நேரங்களில் வீட்டிற்குள். அவள் வாந்தி எடுக்க ஆரம்பித்ததும் அவள் எஜமானி நடுங்கி விட்டாள். தன் மகன் ஹுசைன்தான் காரணம் என்று தெரிய வந்தபோது அவள் மிகவும் அச்சப்பட்டாள். இது இப்படி முடியும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. ஜைதுனை மீரஜில் உள்ள அனாதை ஆசிரமம் ஒன்றிலிருந்து உதவியாக இருக்கட்டும் என்று அழைத்து வந்திருந்தாள். இது என்னடாவென்றால் இவள் தன் மருமகளாகாமல் கதை முடியாது போலிருக்கிறது. எஜமானியம்மாள் தானே ஒரு திட்டத்தைப் போட்டாள். ஹுசைனுடன் அவளை கோவாவிற்கு அனுப்பி வைத்தாள். அவனும் அவளுக்கு கோவாவில் நாலைந்து இடங்களைச் சுற்றிக் காண்பித்தான். இரண்டு மூன்று நாட்கள் போனதும் ஒருநாள் இரவு அவளைத் தூக்கத்திலிருந்து எழுப்பினான். நடு இரவு. ஊர் போவதற்கு அந்த வேளையில்தான் இரயில் வரும் என்றான். நம்பி அவள் அவனுடன் இரயில் நிலையம் சென்றாள். இரயிலடியில் ஈ காக்கா இல்லை. அங்கிருந்த பெஞ்சில் பாதித் தூக்கத்துடன் அமர்ந்த அவள் நன்றாக உறங்க ஆரம்பித்தாள். விழிப்பு தட்டி எழுந்தபோது தூக்கிவாரிப் போட்டது. அருகில் இருந்த ஹுசைனைக் காணவில்லை. அவளது பையையும் காணவில்லை. அதிர்ச்சியில் இரயில் நிலையம் முழுவதும் அவனைத் தேடினாள். அவன் அங்கிருந்தால்தானே கிடைப்பதற்கு? நிதர்சனம் என்ன என்று புரிய கொஞ்ச நேரம் ஆயிற்று - அவள் ஏமாற்றப் பட்டுவிட்டாள்.

தள்ளிய வயிற்றுடன் அவள் வீதி வீதியாக, வீடு வீடாக வேலை தேடி அலைந்தாள், பசி அவளைத் தின்று கொண்டிருந்தது. வேறு வழி தெரியாமல் மீண்டும் இரயில் நிலையத்திற்குச் சென்றாள். அங்கே ஒரு ஆசாமி அவளைப் பத்து ரூபாய்க்கு அழைத்தான். பசியை வெல்ல முடியாமல் அவள் தன்னை முதன் முறையாக அவனிடம் இழந்தாள். பின்பு அதுவே வாடிக்கையானது. ஹமீதிற்கு இப்போது நான்கு மாதங்கள் ஆகிறது. பிள்ளைப்பேற்றின் வேதனைகள் மறையத் தொடங்கவே

வயிற்றுப் பாட்டிற்காக அவள் தொழிலுக்குப் போகத் தொடங்கினாள். குடிகாரர்களுக்கு வேசிகள் எப்படி இருந்தாலும் சரி, அவர்களுடைய தேவைகள் பூர்த்தியானால் போதும்.

ஹமீது அழத் தொடங்கினான். ஜைதுன் எச்சரிக்கை ஆனாள். அவன் கால் குழந்தையின் மேல் பட்டிருக்கும். "இப்போதைக்கு இது போதும். குழந்தை எந்திரிச்சிடுச்சு" என்று எழுந்துகொள்ள முயன்றாள். ஆனால் அந்த இளைஞன் உச்சநிலையில் இருந்தான். ஜைதுனை எழ விடவில்லை. அவளைக் கீழே வீழ்த்தி இயங்கத் தொடங்கினான். ஹமீது அழுகை அதிகமாகி கத்தி வீரிடத் தொடங்கியது. ஜைதுன் அவனைத் தள்ளிவிடப் பார்த்தாள். தனது உச்சத்தை எட்டிக் கொண்டிருந்த இளைஞன் தான் ஏமாற்றப்படுவதாக எண்ணினான். தனது காலை நீட்டி ஹமீதை ஓங்கி ஓர் உதை விட்டான். ஹமீதின் அழுகை அதிகமானது. ஜைதுனின் தாய்மை பொங்கியது. ஒரே ஆவேசமாகத் தனது பலத்தையெல்லாம் பிரயோகித்து அவனைத் தள்ளிவிட்டு ஜைதுன் எழுந்து நின்றாள். குழந்தையைக் கையில் எடுத்து, மார்போடு அணைத்து உச்சி முகர்ந்தாள். இளைஞனின் வெறி தணிந்தபாடில்லை. ஜைதுனைப் பற்றிக் கீழே இழுத்தான். ஜைதுனுக்குக் கோபம் மிகுந்தது. அவனை ஒரே தள்ளாகக் கீழே தள்ளி விட்டாள். அந்த இளைஞன் கைப்பிடிச் சுவரில் மோதி நின்றான். அந்த மோதலில் நிலை தடுமாறிய அவன் நிற்க முடியாமல் பால்கனியிலிருந்து கீழே நிலை தடுமாறி பாதி மயக்கத்துடன் தரையில் போய் விழுந்தான். அடுத்த கட்டடத்தில் எரிந்த விளக்கு இப்போது அணைக்கப்பட்டு விட்டது. ஜைதுன் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். உடல் கொதிக்கப் பிள்ளையைக் கைகளில் வாரிக் கொண்டாள். அந்த இளைஞனின் வாலட்டைப் பற்றிக்கொண்டு பின்புற சந்துகள் வழியாக விரைந்தாள். எந்த பஸ்ஸில் ஏறினாலும் தன் சொந்த ஊர் போய்ச் சேரமுடியும் என்ற நம்பிக்கையில் பேருந்து நிலையம் நோக்கி விரைந்தாள்.

மறுநாள் காலையில் ஜைதுன் தனது சொந்த ஊரை நோக்கி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தபோது காவல்துறை இரயிலடி வீதியில் இருந்த கட்டடத்திலிருந்து அம்மணமாக விழுந்து உயிரை மாய்த்துக் கொண்ட ஓர் இளைஞனின் சாவிற்கு முதல் குற்றப் பத்திரிகையைத் தாக்கல்

செய்துகொண்டிருந்தது.

(கொங்கிணி மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - சேவியர் கோடா)

# 19. கடிதங்கள்

## மோதுரிமா சின்ஹா

தந்தப்பிடி போட்ட ஆபரணப் பெட்டியிலிருந்து வழிந்தோடிய காகிதங்களை லீலா பார்த்துக் கொண்டிருந்தாள். குனிந்து ஒரு தாளைக் கையில் எடுத்தாள். கடிதம். அது ஒரு காதல் கடிதம். அவள் தந்தை கௌரிஷங்கர் எழுதிய காதல் கடிதம். அவள் தந்தை யாரோ நுஸ்ஹத் பேகத்திற்கு எழுதிய காதல் கடிதம். நடுங்கியபடி குத்துக் காலிட்டுக் கீழே அமர்ந்த லீலா இன்னும் சிலவற்றைக் கையில் எடுத்தாள். லீலா நேரம் போவது தெரியாமல் அப்பா யாரோ நுஸ்ஹத் பேகத்திற்கு எழுதிய கடிதங்களில் மூழ்கிக் கிடந்தாள். சில கடிதங்களில் அப்பா அவளை நுஸ்ஹத் ஜான் என்று விளித்திருந்தார். வெளியில் முற்றத்தில் மழை மேகங்களினால் இருள் சூழத் தொடங்கியது. லேசாகக் கேட்ட இடியின் ஓசை அவள் கவனத்தை அந்தக் கடிதங்களிலிருந்து வெளியில் கொண்டுவந்தது. ஜன்னல் கதவுகள் அடித்துக் கொண்டன. மெல்ல மெல்ல முன்னேறி வந்த புயல் காற்று நேரத்துக்கு நேரம் வலுத்துக்கொண்டே வந்தது. இடியோடு காதைக் கிழிக்கும் காற்றின் ஓசையும் உஸ்ஸ் உஸ்ஸ் என்று எழுந்தது. லீலா வேகமாகச் சென்று ஜன்னல் கதவுகளைச் சார்த்தினாள். பழைய காதல் கடிதங்கள் காற்றில் அலைந்தன. அவள் குனிந்து சிதறிக் கிடந்த கடிதங்களை ஒன்று திரட்டி நான்கடுக்குப் படுக்கையில் அமர்ந்தாள்.

அந்தக் கடிதங்கள் எல்லாம் பெயர் தெரியாத பாட்டு பாடும் ஒரு பெண்ணிற்கு - அப்படிதான் அப்பா குறிப்பிட்டிருக்கிறார் - எழுதப்பட்ட கடிதங்கள். எதற்காக அவற்றை அப்பா இந்த வீட்டில் வைத்திருக்க

வேண்டும்? காதல் கொஞ்சும் கடிதங்கள்; கவிதை வழியும் கடிதங்கள். அப்பாவிடமிருந்து. இவர் அப்பா இல்லை, வேறு ஒரு மனிதர். அப்பா எப்படி இருந்தார்? லீலா தனது தந்தையின் நினைவுகளைக் கொண்டுவர முயன்றாள். நல்ல நினைவுகள் அதே சமயம் மோசமான நினைவுகளும்.

தனது இரண்டாவது வயதிலேயே தனது தாயை இழந்தவள் அவள். அவளைப் பற்றிய நினைவுகள் எதுவும் இல்லை. ஒரு குழப்பமான நினைவு மட்டும், முகம் சரியாகத் தெரியாத யாரோ தன்னைத் தூக்கியது, அப்புறம் கூந்தலின் மணம், அது ஷாம்புவாக இருக்கும், இது மட்டும்தான் அவளுக்கு அம்மாவைப் பற்றி நினைவில் உள்ளது. அப்பா இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ளவே இல்லை. மொத்தக் குடும்பமும் அப்பாவை மறுமணம் செய்துகொள்ள எவ்வளவு வற்புறுத்தியது என்று நினைத்துப் பார்த்தாள். எல்லாவற்றிற்கும் கௌரிசங்கர் சிரித்துக்கொண்டு, "நீங்க இத்தனை பேர் இருக்கிறீர்கள். போதாதா? லீலாவுக்கு எந்தக் குறையும் இருக்காது."

ஆமாம், அவளைச் சுற்றிலும் சிற்றப்பா, சித்தி, தத்தா, பாட்டி, உடன்பிறவா சகோதரர்கள் என்று ஒரு பட்டாளமே இருந்தது. முற்றத்திலும், தாகூர் மாளிகையிலும் எப்போதும் விளையாட்டுதான். கண்ணாமூச்சி, கயிறு இழுத்தல், நொண்டி என்று ஒரே கொண்டாட்டமாக இருக்கும். அவளுடைய ஒன்று விட்ட சகோதரி ரிமியுடன் பொம்மைகளை வைத்துத் தாகூர் மாளிகையின் தூண்களுக்கு அடியில் இருந்து விளையாடுவாள். ஒருநாள் கூட அம்மா இல்லை என்ற குறையை அவள் உணர்ந்ததில்லை. அப்பா ரொம்ப நல்லவர். அதிக நேரம் அவளுடன்தான் செலவிடுவார். பத்து வயது ஆகும்வரையில் அப்பாவுடன் அவர் படுக்கையில்தான் படுப்பாள். லீலாவின் உயிர் அந்த அறை. வயது ஏற ஏற அவளுக்கு அந்த அறையின் மூலை முடுக்குகள் எல்லாம் அத்துப்படி ஆயின. சில ஆண்டுகளுக்கு முன்பு அவள் தந்தையும் தவறிப் போயிருந்தும் அவளுக்கு அந்த அறை ஒரு நிம்மதியும் ஆறுதலும் அளித்து வந்தது.

ஆனால் அப்பாவுக்கு இப்படி ஒரு காதலியா? இதுவரை இந்த வீட்டில்

ஒருவரும் இதைப் பற்றி அவளிடம் மூச்சு கூட விட்டதில்லை. இல்லை ஒருவேளை அவர்களுக்கே தெரியாதோ? அவர் வாழ்க்கையில் ஓய்விற்கே இடமில்லாமல் இருந்தது. தனது தாயாரின் ஒவ்வொரு பிறந்தநாளின் போதெல்லாம் அப்பா நிச்சயம் வீட்டில் இருப்பார். அன்று கண்டிப்பாக வீட்டில் நூறு அனாதைக் குழந்தைகளுக்கு அன்னதானம் இருக்கும். புலாவ், மட்டன் குழம்பு, பாசந்தி எல்லாம் இருக்கும். அவர் அவளைக் காதலிக்கவில்லையா? அப்புறம் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை? யார் இந்த நுஸ்ஹத் பேகம்? அவள் அந்தச் சின்னஞ்சிறு பெட்டியைப் பரபரப்புடன் ஒரு சிறிய புயல் ஊடுருவியதுபோல தேடினாள். முகவரி தாங்கிய கடித உறை ஒன்று கூட இல்லை. லீலா பெட்டியை அங்கேயே வைத்துவிட்டு பால்கனிக்குப் போனாள். வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது. வெறுமனே முற்றத்தில் பார்வையை ஓட விட்டாள். இது குறித்து யாரைக் கேட்பது? இப்போது மொத்தக் குடும்பமும் இரண்டு பட்டுக் கிடக்கிறது.

கௌரி மஹால் இப்போது விற்பனைக்கு. அப்பா இறந்த பின்பு சிற்றப்பாவும், அத்தையும் அதை விற்க முடிவு செய்துவிட்டனர். லீலா ஆனமட்டும் போராடிப் பார்த்தாள். முடியவில்லை. அனைவருக்கும் அந்த வீட்டை விற்றால் தேவலை என்றுதான் இருந்தது. அவளுடைய சிற்றப்பா பையன்கள், அத்தைப் பையன்கள் ஒருகாலத்தில் எத்தனைக்கு எத்தனை ஒட்டுறவாக இருந்தார்களோ இப்போது பழிச் சண்டையுடன் நிற்கிறார்கள். பணம் என்று வந்தால், பந்தமாவது பாசமாவது... பணம்தான் எல்லாம். ஒருவருக்கும் எந்தவித பந்தபாசமும் இல்லை. இதில் பழைய வேலையாட்கள் சிலருக்கு மனவருத்தம். சிற்றப்பாவும் அவருடைய மூன்று புதல்வர்களும் இந்த வீட்டை வெள்ளை யானை என்று கேலி செய்கிறார்கள். யானையைத் துரத்த வேண்டுமாம். தீனி போட்டுக் கட்டுப்படியாகவில்லையாம். லீலா அனைவரிடமும் அதனை கார்பரேட் ஹோட்டல்களுக்கோ, அல்லது பாரம்பரிய பராமரிப்புக் குழுமத்திற்கோ விற்குமாறு மன்றாடினாள். அவள் கூறியதைக் காதில் வாங்கிக்கொள்ளும் நிதானம் யாருக்கும் இல்லை. அத்தனை அவசரம். முதலில் கணிசமான தொகையுடன் வந்தவனுக்கு வீடு விற்பனை செய்யப்பட இருந்தது.

அவளுக்கும் ஒரு பெரிய தொகை வரும் என்று உறவினர்கள் ஆசை காட்டினார்கள்.

அவள் இப்போது பார்க்கும் பத்திரிகை தொழில் ஒன்று போதும் காலம் பூராவும். அவள் அப்பாவும் அவள் பெயரில் நிறைய டெபாசிட் பண்ணி வைத்திருக்கிறார். தான் தனிமைப் படுத்தப்படுவதாக அவள் உணர்ந்தாள். அவளுடைய கடைசி ஆண் சிநேகிதன் ஒரு சுயநலவாதி. அவனிடம் பெண்கள் குறித்துப் பத்தாம்பசலித்தனமான கருத்துகள் ஏராளமாக இறக்குமதி ஆகியிருந்தது. குறுகிய எண்ணங்கள். தினமும் ஒரு வரன் வாசல் கதவைத் தட்டுகிறது. அவள்தான் எதற்கும் ஆம் என்று தலையசைக்க மறுக்கிறாள். அவளது ஆஸ்தியும், பாரம்பரியமும் நிறைய வரன்களை வரிசையில் நிறுத்தியது. லீலா தூணைக் கட்டிக் கொண்டாள். அங்கிருந்து அடுத்த முனைக்குச் சென்றாள்.

அடுப்படியில் ஜமுனாம்மா மட்டும் இருந்தார். ஜமுனாம்மாவிற்கு நல்ல வயது. நொறுங்கி விடுபவரைப்போல காணப்பட்டார். அவருடைய தோற்றம் இந்த மாளிகையில் நூற்றைம்பது வருடங்களும் வசித்தவர்போல காணப்பட்டது. கௌரி மஹாலின் கிரேக்க பாணி தூண்களும், இழைக்கப்பட்ட சுவர்களும், பளிங்கு மாடிப்படிகளும், வண்ணமயமான சரவிளக்குகளும் பொலிவிழக்கத் தொடங்கிவிட்டன. சிற்றப்பா வேலை எதுவும் செய்யாமல் வெட்டியாகவே வாழ்நாட்களைக் கழித்து வந்திருக்கிறார். அப்பா குடும்பப் புத்தகக் கடையைப் பார்த்துக் கொண்டார். அவர் இறந்தபின்பு அதையும் விற்று விட்டார்கள். முன்னைப்போல இப்போது புத்தகங்களை யார் படிக்க முன்வருகிறார்கள்? லீலா தனது கைபேசியை வெறுப்புடன் பார்த்தாள். அவள் கூடதான் இந்தக் கைபேசிக்கு அடிமை. ஜமுனாம்மா கத்தரிக்காயை வதக்கிக் கொண்டிருந்தாள். லீலாவிற்குக் கத்தரிக்காயைக் கண்டால் கட்டோடு ஆகாது.

அந்தப் பழங்கால அடுப்படியின் சுவர்களில் புகை படர்ந்திருந்தது. லீலா ஜமுனாம்மா அருகில் அமர்ந்தாள். ஜமுனாம்மாவைப் பார்த்து, “ஜமுனாம்மா, இந்த நுஸ்ஹத் பேகம் யாரு?” என்று வினவினாள்.

ஜமுனாம்மா அவளை விழித்துப் பார்த்தாள். அவரது கண்கள் சோர்விலிருந்து மீண்டது போல பிரகாசித்தன. அந்தக் கண நேர அதிர்ச்சியில் அடுப்பில் இருந்த கடாய் கீழே சரிந்தது. லீலா ஜமுனாம்மாவிற்கு உதவி புரிந்தாள். "என்ன ஆச்சு ஜமுனாம்மா?" என்று கேட்டாள். கீழே விழுந்த கறிகாய்த் துண்டங்களை மீண்டும் நீரில் கழுவிக் கடாயில் போடுவதற்கு உதவி புரிந்தாள்.

"ஜமுனாம்மா, என்னிடம் இருந்து எதையும் மறைக்க வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும். எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்" என்றாள்.

ஜமுனாம்மா அவளை வருத்தத்துடன் பார்த்து, "உன்னிடம் எதைச் சொல்வேன்? உனக்கு இந்த விஷயம் தெரியக் கூடாது என்பதற்காக உன் அப்பா எல்லோரிடமும் சத்தியம் வாங்கிக் கொண்டிருக்கிறாரம்மா." .

"ஜமுனாம்மா..." லீலா விளக்கம் அளித்தாள், "என் கையில் அந்தக் கடிதங்கள் சிக்கிடுச்சு. இந்த வீடு ஒரு நாளைக்குக் காணாமல் போகப் போகுது. காலி பண்ணுவதற்கு முன்னால் நான் வீட்டில் உள்ள கப்-போர்டுகளைச் சுத்தம் பண்ணிக்கிட்டிருந்தேன். அப்பாவின் அலமாரியை நான் அவர் காலத்துக்குப் பிறகு ஒரு முறை கூட திறந்து பார்த்ததேயில்லை. ஒரு பெட்டி நிறைய கடிதங்கள். அதனாலதான் இது என்ன விஷயம் என்பது எனக்குத் தெரியணும்." ஜமுனாம்மா புரியாத மொழியில் ஆரம்பித்தாள். அந்த அடுப்படியில் தெரிந்த நிர்சலனம் தொட்டு உணரும் வண்ணம் இருந்தது. எங்கோ தூரத்தில் ஒரு குயில் பாடியது. அது வசந்த காலம்.

"அவள் அவருக்கு எழுதிய கடிதங்களா? அவைகளையா அவர் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்?" என்று நடுங்கும் குரலில் கேட்டார் ஜமுனாம்மா.

"இல்லை" என்று மறுத்த லீலா, "இவை அவர் அவளுக்கு அருமையான வங்கமொழியில் எழுதிய கடிதங்கள்" என்றாள்.

ஜமுனாம்மா தொடர்ந்தார். "அவர் அவளுக்கு எழுதிய கடிதங்களா? அவை பின்பு அவளிடம்தானே இருக்க வேண்டும்? எதற்கு இங்கே இருக்கின்றன?

அதுவும் வங்க மொழியிலா? அவள் எப்படிப் படிப்பாள்?"

இப்போது விழிப்பது லீலாவின் முறையாக இருந்தது, "என்ன சொல்கிறாய் ஜமுனாம்மா?"

"அவள் லக்னோவிலிருந்து வந்தவள். உருது மட்டும் தெரியும். வங்காளம் அவள் மொழியில்லை."

லீலா கொஞ்ச நேரம் எதுவும் பேசவில்லை. பிறகு, "ஜமுனாம்மா உங்களுக்கு நிறைய விஷயம் தெரியும் போலிருக்கு. எனக்கு நிறைய விஷயங்கள் தெரிஞ்சாகணும்."

பழைய பாரம்பரியத்தில் வந்த ஜமுனாம்மா போன்ற பணியாட்களிடமிருந்து விஷயத்தை அத்தனை சுலபமாகக் கறக்க முடியாது. இத்தனை விசுவாசமான பணியாட்கள் இப்போது கிடைப்பது அபூர்வம். ஆனால் ஜமுனாம்மாவின் மொத்த விஸ்வாசமும் லீலாவின் மடியில்தான் உள்ளது. அவர்தான் அவளைச் சின்ன வயதிலிருந்து தூக்கி வளர்த்தவர். கௌரி மஹால் விற்பனையானதும் அவர் லீலாவுடன் தெற்குக் கொல்கத்தாவிற்கு வருவதாகதான் ஏற்பாடாகியிருக்கிறது. வேறு வழியில்லை. ஜமுனாம்மா தனக்குத் தெரிந்த விவரங்களைக் கூறத் தொடங்கினாள்.

•

வட கொல்கத்தாவில் ஒரு பெயர் தெரியாத வீதியில் நான்கைந்து குடியிருப்புகள் கொண்ட ஒரு ஃபிளாட்டின் முன் லீலா நின்றாள். அந்த முகவரியைக் கண்டுபிடிப்பதற்குள் அவளுக்கு உயிர் போய் உயிர் வந்தது. இந்த முகவரியை ஜமுனாம்மா கணவர் கார்த்திக் தாதாவிடமிருந்துதான் வாங்கி வைத்திருந்தார். அவர் அப்பாவின் வலது கையாக இருந்தவர். இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட கார் விபத்தில் அவரும் அப்பாவும் மரணமடைந்தனர்.

லீலா பிசுபிசுத்துப் போயிருந்த கரங்களால் அந்த வீட்டு அழைப்பு மணியை அழுத்தினாள். நுஸ்ஹத் பேகம் உயிருடன் இருப்பாரா? ஒரு வேளை இறந்து போயிருந்தால்?

•

நுஸ்ஹத் பேகமும் லீலாவும் தாகூர் மாளிகையின் முன்பு நின்று கொண்டிருந்தனர். நுஸ்ஹத் பேகம் வசீகரமாக இருந்தாள். அப்படி ஓர் அழகு. கொஞ்சம் வயதானவளுக்கான அடையாளங்கள். அவள் அருகில் இளமையின் பொலிவுடன் தலையில் குதிரைவால் கொண்டையுடன் லீலா. இருவரும் மௌனமாகத் தாகூர் மாளிகையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். தனது கையில் அழுத்தம் ஏற்பட்டத்தைப் பார்த்து லீலா திரும்பினாள். நுஸ்ஹத் பேகத்தின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. "இந்த மாளிகையைப் பற்றி உன் தந்தை அடிக்கடி கூறுவார். அவருக்கு இந்த வீட்டின் பேரில் அலாதி பிரியம். தெரியுமா உனக்கு?"

லீலா புன்னகைத்தாள். நுஸ்ஹத் பேகத்தை மாடிக்கு அழைத்துச் சென்றாள். நுஸ்ஹத் பேகம் அந்த மாளிகையில் நுழைந்தாள். அந்த மாளிகை முழுவதும் தனது கால்களால் அளந்தாள். ஒவ்வொரு அறையாக, ஒவ்வொரு இடைகழியாக, ஒவ்வொரு படிக்கட்டாக. அழிக்கதவு போடப்பட்ட வராந்தாவின் வழியாகச் சென்றாள். புறாக்கள் ஒலி எழுப்பின. பெரிய பெரிய கண்ணாடி ஜன்னல் கதவுகளைத் திறந்தாள். ஜன்னல்களிலிருந்து பைதக்கானா வீதியில் வீசும் அந்துருண்டை மணம் மிதந்து வந்தது. நுஸ்ஹத் பேகம் சரவிளக்குகளைப் பார்வையிட்டார். அவை நம்பிக்கை ஒளி வீசிக் கொண்டிருந்தன. அவர் சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய சட்டம் போடப்பட்டிருந்த ஓவியங்களின் முன்னால் போய் நின்றாள். அவள் நின்ற ஓவியத்தில் லீலாவின் பெற்றோர். கௌரி சங்கர் அருகில் லீலாவின் தாயார். அவருடைய சகதர்மிணி. கௌரி சங்கர் இவளைதான் சின்ன வயதிலேயே பறி கொடுத்தார் என்பது நுஸ்ஹத் பேகத்திற்குத் தெரியும். யாருடைய இடத்தை இறுதி வரையில் அவளால் பிடிக்க முடியவில்லையோ அவள்தான் இவள். லீலா அவர் அருகில் வந்து நின்றாள். இருவரும் அடுத்தவரின் கண்ணில் தெரியாத சேதியைத் தேடினார்கள். பின்னால் இருந்து தயக்கமாக ஓர் இருமல். ஜமுனாம்மா முழு வெள்ளைச் சீலையில் தன்னைப் போர்த்திக்கொண்டு நின்றார்.

லீலா ஜமுனாம்மாவை நுஸ்ஹத் பேகத்திற்கு அறிமுகம் செய்து வைத்தாள். நுஸ்ஹத் பேகம் முன்னால் நகர்ந்து சென்று ஜமுனாம்மாவின் கரங்களைப் பற்றிக் கொண்டாள். "உங்கள் கணவர் கார்த்திக் பாயை எனக்கு நல்லா தெரியும்" என்றாள். ஹிந்தியில் தொடர்ந்தாள். "ரொம்ப அற்புதமான மனிதர். உங்களுக்கு தெரியுமா ஜமுனாம்மா இப்போ நான் இருக்கும் வீடு கார்த்திக் பாய் பார்த்துக் கொடுத்ததுதான். அந்த ஃபிளாட்டை அவர்தான் அலங்கரித்தார். நான் வாழ்ந்த நரகத்திலிருந்து கௌரிதான் என்னை அந்த ஃபிளாட்டில் குடியேற்றினார். கௌரி உண்மையில் ஒரு துணிச்சல் பேர்வழி. முப்பத்திரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே எனக்குத் தனி வீடு பார்த்து அமர்த்தினார் என்பதை நினைத்துப் பார். ஒரு நடனக்காரி, தனது இளமையின் விளிம்பில் நின்ற நடனக்காரி. அப்படிப்பட்ட எனக்கு உங்களுடைய கார்த்திக் பாய்தான் அந்த வீட்டை ஒழுங்குபடுத்திக் கொடுத்தார். அந்த ஃபிளாட்டில் இருந்த ஏனைய குடித்தனக்காரர்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. சொல்லப்போனால் அவர்களுக்கு என்னைப் பற்றி வெகுகாலம் கழித்தே தெரிய வந்தது. அப்படித் தெரிய வந்ததும் ஒரே ஒரு குடித்தனக்காரர் எதிர்த்தார். அவரையும் உங்கள் கார்த்திக் பாய் அடித்து மிரட்டி விட்டார். எல்லாம் எனக்காக. யோசித்துப் பாருங்கள். அந்த வீடு எனக்குச் சொந்தமானதே கிடையாது. அது கௌரியுடையது. ஆனால் அதை அவர் எனக்கு சட்டபூர்வமாக எழுதிக் கொடுத்தார். எனவே மற்ற குடித்தனக்காரர்களால் வாய் திறக்க முடியாமல் போனது. ஓர் அமைதியான வாழ்க்கை எங்களுடையது. தினமும் வருவார். அவர் வராத நாட்களில் என் தேவைகளை கவனித்துக்கொள்ள கார்த்திக் பாய் வருவார். பருப்பு, அரிசி, நெய், எண்ணெய் என்று எதற்கும் நான் வெளியில் போக வேண்டிய அவசியமே இல்லாமல் போனது. என்னை வெகு காலத்திற்கு முன் எங்கள் ஊரிலிருந்து இந்தக் கொல்கத்தாவிற்குக் கூட்டிக்கொண்டு வந்த மோகன் மாமாவைப் போலவே கார்த்திக் பாய்க்குத் தோற்றம்." நுஸ்ஹத் பேகம் பேசுவதை நிறுத்தினாள். முகத்தில் ஒரு சங்கடம். வருத்தம். ஆனால் அதில் அருவருப்பு எதுவுமில்லை.

லீலா அவளை அழைத்துக்கொண்டு சோஃபாவில் அமர்த்தினாள். சோஃபா

கிறீச்சென்று சப்தம் எழுப்பியது. ஜமுனாம்மா அவர்கள் காலடியில் அமர்ந்தார். அந்த இடம் நுஸ்ஹத்பேகத்திற்கு ஆகிவந்த இடம் போல தோன்றியது. அவள் அந்த இடத்தில் ஒரே நேரத்தில் பொருந்தியும் இருந்தாள், விலகியும் இருந்தாள். ஒரு சின்னஞ்சிறுவன் கையில் ஒரு தட்டுடன் நுழையவே அவனை ஏறிட்டனர். தட்டில் இனிப்புகளும், சமோசாக்களும் இருந்தன. கூடவே ஒரு குவளையில் தண்ணீர். "நன்றி ஜமுனாம்மா" என்று லீலா கூறினாள். ஜமுனாம்மா ஓசையின்றி அழுது கொண்டிருந்தார். நுஸ்ஹத் பேகம் அவருடைய தோள்களை ஆதரவுடன் பற்றினாள். "என்ன ஜமுனாம்மா, கார்த்திக் பாய் நினைப்பு வந்துடுச்சா?" என்று கேட்டதும் பெரிதாக அழத் தொடங்கினாள். அவளுக்கு இதுவரை தெரிந்திராத தனது கணவனைப் பற்றிய நினைவுகளால், தன் கணவனை அன்றி வேறு எதுவும் அறியாத ஜமுனாம்மா கண்ணீர் விடத் தொடங்கினார். நுஸ்ஹத் பேகம் தனது வலது கரத்தை ஜமுனாம்மாவின் தலையில் வைத்துக் கூறினாள்.

"உங்க அம்மா தவறிப் போனதும் அந்த வீட்டை என் பெயருக்கு உன் அப்பா மாற்றி எழுதிக் கொடுத்தார்." லீலாவைப் பார்த்துக் கூறினாள்: "உன் தந்தை ஒரு சிறந்த மனிதர்."

லீலா நிமிர்ந்து பார்த்தாள். "எனக்குத் தெரியும். அவர் எப்போதும் அப்படிதான். உங்களுக்கு அவர் எழுதிய கடிதங்களைப் பார்த்ததும்தான் அவரைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள முடிந்தது" என்றாள்.

"நான் அவற்றைப் பார்க்கலாமா?" என்று நுஸ்ஹத் கேட்டாள்.

லீலா எழுந்து உள்ளே சென்று அந்தப் பெட்டியை எடுத்து வந்தாள். அதை அப்படியே நுஸ்ஹத் பேகத்திடம் கொடுத்தாள். நுஸ்ஹத் பேகம் ஒவ்வொரு கடிதத்தையும் நிதானமாகப் பிரித்துப் பார்த்துவிட்டு மீண்டும் மடித்து வைப்பதைப் பார்த்தாள்.

"படிக்கலியா?" என்றாள்.

நுஸ்ஹத் பேகம் முறுவலித்தாள். பதின் பருவ இளம்பெண் போல ஒரு

கலகல சிரிப்பொலி அவளிடமிருந்து எழுந்தது. “இல்லை, எனக்கு வங்காள மொழி தெரியாது. ஒவ்வொரு முறையும் கௌரி தான் எழுதிய கடிதத்தை எனக்குப் படித்துக் காட்டிவிட்டு மீண்டும் கொண்டுபோய்விடுவார். கடிதத்தில் உள்ளவற்றை விவரமாகச் சொல்லுவார். எனக்கு அவருடன் மட்டும்தான் தொடர்பு. வங்காள மொழி ஓரளவு புரிந்துகொள்ள நெடுநாட்கள் ஆனது.”

“நீங்க அவருக்கு கடிதம் எழுதினதில்லையா?”

“ஓ, எழுதியிருக்கேனே... ஆனால் எல்லாம் உருது மொழியில். நானும் அவருக்கு அந்தக் கடிதங்களைப் படித்துக் காட்டிவிட்டு பெட்டியில் எடுத்துப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.”

“அந்தக் கடிதங்கள் இன்னும் உங்களிடம்தான் உள்ளதா?”

“ஆமாம். ஆனால் உங்கப்பா நான் பாட ஆரம்பித்தால் அனைத்தையும் அறிந்துகொண்டுவிடுவார். உங்கப்பாவுக்கு நல்ல சங்கீத ஞானம். அவர் எனக்கு ஒரு தொலைக்காட்சி பெட்டி வாங்கிக் கொடுத்தார்.”

“ப்ளீஸ் பாடுங்களேன்...” என்று லீலா கெஞ்சும் குரலில் கேட்டாள்.

நுஸ்ஹத் பேகம் பாடினாள்.

ஜமுனாம்மா தனது தலையை உயர்த்திப் பாடலைக் கேட்டாள்.

லீலா இரண்டு கால்களையும் மடக்கித் தாடையை முழங்கால்களின் மீது வைத்து பாடலை ரசித்துக் கேட்டாள்.

பாட்டின் ஒலி கேட்டு வீட்டில் இருக்கும் மற்றவர்கள் ஆவல் மிகுதியில் அங்கு வந்து நின்று அந்தப் பாடலைக் கேட்டனர்.

நுஸ்ஹத் பேகம் கிளம்பிப் போகும்போது லீலா அப்பா எழுதிய கடிதங்களை மொத்தமாக அவளிடமே கொடுத்தாள்.

முற்றத்தின் அருகில் நின்றபடி நுஸ்ஹத் பேகம், “இத்தனை அழகான வீட்டையா விற்கப் போகிறீர்கள்?” என்று கேட்டாள்.

லீலா மௌனமாகத் தலையை ஆட்டினாள்.

•

லீலா முன்னால் சாய்ந்து நுஸ்ஹத் பேகத்தைத் தழுவிக் கொண்டாள். நுஸ்ஹத் பேகம் அவளை அப்படியே சிறிதுநேரம் உச்சி முகர்ந்தவண்ணம் இருந்தாள். லீலா தன்னை விடுவித்துக்கொண்டு நுஸ்ஹத் பேகத்தின் கூந்தலை முகர்ந்து பார்த்தாள். அவள் பார்வையே கேள்வியானது. “இது என்ன வாசனை? இது எனக்கு ஏற்கெனவே பழகின வாசனையா இருக்கிறது…” என்றாள்.

நுஸ்ஹத் பேகம் அவளைத் தனது பிடியிலிருந்து தளர்த்தி, “உங்க அம்மா தவறிப் போனதுக்கப்புறம் இந்தத் தைலத்தை உங்க அப்பா எனக்குக் கொடுத்து கூந்தலுக்குத் தடவிக்கச் சொன்னார். இன்னிக்கு வரைக்கும் நான் இதைதான் பயன்படுத்துகிறேன்” என்றாள்.

(வங்கமொழிச் சிறுகதை)

# 20. விபசாரி

## ஜே.பி. தாஸ்

தனது வேலை முடிந்ததும் பிரமோத் தான் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பினான். அன்று அவனுக்கு ஒரு வெற்றி நாள். அவனது கம்பெனி தயாரிக்கும் இயந்திரங்களுக்குப் பல இடங்களில் ஆர்டர் பிடித்துவிட்டான். திரைமறைவு தில்லுமுல்லு வேலைகள் மூலம்தான் அந்த ஆர்டர்களைப் பெற முடிந்தது என்பதை மறுப்பதற்கில்லை. லஞ்சம்; பொய், முகஸ்துதி. அவனுடைய நீண்ட பணி அனுபவத்தில் லஞ்சம் வேலை செய்வதுபோல வேறு எதுவும் வேலை செய்யாது என்று நன்கு தெரிந்து வைத்திருக்கிறான். கைக்குக் கை பணம் மாறிவிட்டால் போதும், எழுத்தில் இல்லாத ஒப்பந்தம் வாங்குபவனுக்கும் கொடுப்பவனுக்கும் உண்டாகிவிடுகிறது. அதன் பிறகு அடுத்தடுத்த செயல்கள் தடங்கலில்லாமல் நடைபெறும். மற்ற வழிகளில் காலமும் விரயமாகும் காரிய வெற்றியும் உறுதியாகச் சொல்ல முடியாது.

அவன் நாற்காலியில் அமர்ந்து அன்று நடந்தவற்றை மீண்டும் ஒரு முறை நினைத்துப் பார்த்தான். அவன் எண்ணியிருந்ததை விட குறைவான பணமே செலவாகியிருந்தது. மீதித் தொகையை அவனே வைத்துக்கொள்ள முடிவு பண்ணினான். இதை கம்பெனிக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. இந்த நேர்மை பிறழ்விற்காக அவன் ஒன்றும் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. எதிரி நிறுவனத்துடன் நடந்த பேச்சு வார்த்தையில் அவனுடைய மௌனம் அவர்களுக்குச் சாதகமாகப் போனது ஒன்றுதான் அவன் மனசாட்சியை உறுத்தியது. அதுவே ஒப்பந்தத்தை உறுதி செய்ய முடியாமல் போனதன்

காரணமாயிற்று.

தேநீரை உறுஞ்சிக் குடிக்கும்போது அந்த நினைவிற்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்தான். அவனுடைய பகல் பொழுது நல்ல விதமாகக் கழிந்துள்ளது. எஞ்சியுள்ள அந்த ஒருநாள் இரவை அந்த ஊரில் அவன் குதூகலமாகக் கொண்டாட எண்ணினான். மறுநாள் கடைவீதிக்குச் சென்று மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் துணிமணி எடுக்க வேண்டியிருக்கும். மதியம் கிளம்ப வேண்டும். மறுநாள் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டதும் ஒரு சன்னமான நாட்குறிப்புப் புத்தகத்தை எடுத்து அதிலிருந்த தொலைபேசி எண்களை நோட்டமிட்டான். மந்திரிகளின் தொலைபேசி எண்கள், அதிகாரிகளின் எண்கள், செல்வாக்கு மிக்கவர்களின் எண்கள் என்று இருந்த அந்தக் குறிப்பேட்டில் அவன் நண்பர்களால் குறித்து வைக்கப்பட்டிருந்த சில இரகசிய எண்களும் இருந்தன. பிரமோத் அந்த இரகசிய எண்களில் முதலில் இருந்த எண்ணுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுத்தான். தொலைபேசியின் மறுமுனையில் இருந்தவன், “உங்களுக்கு யார் வேண்டும்?” என்று கேட்டான்.

பிரமோத், “கமலா தேவி” என்று பதிலளித்தான்.

“உங்கள் பெயர்?” என்றான் எதிர் முனையில் இருந்தவன்.

“வினோத். வினோத் சர்மா” என்றான் பிரமோத்.

“ஓகே, அப்படியே லைனில் இருங்க” என்றான்.

பிரமோத் காத்திருந்தான். இரண்டு நிமிடங்கள் ஓடிப் போனது. மௌனம் மட்டுமே நிலவியது. போதும் என்று தொடர்பைத் துண்டிக்கப் போனபோது மறுமுனையிலிருந்து, “இங்கு யாரும் கமலா தேவி என்ற பெயரில் இல்லை” என்ற பதில் வந்தது. பிரமோத்தின் பதிலுக்குக் கூட காத்திராமல் எதிர்முனையில் இருந்தவன் தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டான். பிரமோத் அடுத்த எண்ணிற்கு முயன்றான். பதில் எதுவும் இல்லை. தனக்கு இந்த எண்களைக் கொடுத்தது யார் என்று யோசித்தான். ஆனால் கொடுத்தவன் பெயர் நினைவில் இல்லாததால் பிரமோத்தின் சாபத்திலிருந்து தப்பித்தான். மற்ற எண்களை ஒரே தாவாகத் தாவி

இறுதியில் இருந்த எண்ணிற்கு வந்தான். அந்த எண்ணைத் தொலைபேசியில் சுழற்றினான். மறுமுனையில் ஒரு பெண்குரல். "யார் வேண்டும் உங்களுக்கு?"

"எனக்கு விமலா தேவி வேணும்" என்றான் பிரமோத்.

"விமலா இப்போதெல்லாம் இங்கே தங்குவதில்லை" என்றாள் அந்தப் பெண்.

இதைச் சொல்லிவிட்டு அவள் உடனே இணைப்பைத் துண்டித்து விடுவாள் என்று அவன் எதிர்பார்த்தான். அவள் செய்யவில்லை. அது அவனுக்கு உற்சாகத்தை அளித்தது. "என்னுடைய சிநேகிதன் ஒருவன்தான் எனக்கு இந்த நம்பரைக் கொடுத்தான்" என்று தொடர்ந்தான்.

"யார் அந்த சிநேகிதர்?" என்றாள் அவள்.

"சங்கர், சங்கர் குப்தா கான்பூரிலிருந்து"என்று ஒரு பொய்யான பெயரையும் முகவரியையும் குறிப்பிட்டான்.

"ஹ்ம்ம்..."

பிரமோத் எல்லாம் சரியாகப் போவதை உணர்ந்தான். அவன் அவளிடம், "இன்று இரவு உங்கள் இடத்திற்கு வரலாம் என்று இருக்கிறேன்" என்றான்.

"கான்பூர் சங்கர் குப்தா என்றா சொன்னீர்கள்? அப்படியென்றால் சரி" என்றாள் அவள்.

பிரமோத் அவளிடம் முகவரியைப் பெற்றுக்கொண்டு அன்று இரவு எட்டரை மணிக்கு வருவதாகக் கூறினான்.

குளித்தான். டீக்காக உடை உடுத்திக்கொண்டான். அந்த இடத்திற்குச் செல்ல இன்னும் நேரமிருக்கிறது. என்ன செய்யலாம் என்று யோசித்து உள்ளிருந்து விஸ்கி பாட்டிலை எடுத்தான். சோடா இல்லை. இன்டர்காம் மூலம் சோடாவிற்கு ஆர்டர் கொடுத்தான். சோடா வரத் தாமதமாயிற்று. அது வரையில் தனது எதிரி நிறுவனத்தின் மேலாளருடன் பேசிப் பார்த்தால் என்ன என்ற நினைப்பு வந்தது. உடனே தொலைபேசியில்

எண்களை அழுத்தினான். ஆனால் பாதியில் மனதை மாற்றிக் கொண்டான்; அவருடன் நாளை பேசிக் கொள்வோம். எதிர்முனையில் தொலைபேசி ஒலிக்கத் தொடங்கியது. அவர் வீட்டில் இருக்கக் கூடாது என்று வேண்டிக் கொண்டான். ஆனால் அவர் தொலைபேசியை எடுத்துவிட்டார்.

“நான் இந்த ஊரைவிட்டுப் போகும் முன்பு ஒருமுறை உங்களை சந்திக்கலாம் என்று கருதுகிறேன்” என்றான்.

“நானும் உங்களை சந்திக்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். எங்களுக்கு உங்களால் நிறைய வேலையாக வேண்டியிருக்கிறது” என்றார் அந்த மனிதர்.

அந்தநேரம் பார்த்து சோடா வரவே பிரமோத் சும்மா இல்லாமல் “வாங்களேன் என் அறைக்கு. அப்படியே ஒரு ரவுண்டு மதுவிற்கும் கம்பெனி தந்தா மாதிரி இருக்கும்” என்று அழைத்தான். உடனே நாக்கைக் கடித்துக் கொண்டான் ஏன் கூப்பிட்டோம் என்று. ஆனால் அந்த மேலாளர் அவன் அழைப்பை உடனே ஒப்புக் கொண்டுவிட்டார்.

அந்தச் சூழலை மீட்டுக் கொள்ளும் விதமாக பிரமோத், “ஓகே நான் வேறு ஒரு வேலையாக வெளியில் செல்கிறேன். வருவதற்கு எப்படியும் ஒன்பது பத்து மணி ஆகிவிடும். வேண்டுமானால் அந்த நேரத்திற்கு வாருங்கள்” என்றவன் அதற்கும் அந்த மனிதர் ஒப்புக் கொண்டுவிட்டால் என்ன செய்வது என்று யோசித்தான். எனவே அவரைப் பதில் பேச விடாமல் இவனே, “அது உங்களுக்கு ரொம்ப நேரமாகிவிடும் என்று நினைக்கிறேன். இல்லையா? இப்படிப் பண்ணலாம். நான் திரும்பவும் ஒருவாரத்தில் இங்கே வருவேன். அப்போ நிச்சயம் மீட் பண்ணுவோம். ஒரு முழு மாலைப் பொழுதையும் கொண்டாடுவோம்” என்றான்.

“அது பரவாயில்லை. காலையில் நான் உங்களிடம் கூறியதை மறந்து விடாதீர்கள். உங்களுடைய எல்லா நிபந்தனைகளையும் நாங்கள் ஏற்கிறோம்” என்றார் அந்த மனிதர்.

“நிச்சயம் நிச்சயம்” என்று பிரமோத் தலையாட்டிவிட்டு தொலைபேசியைக்

கீழே வைத்தான்.

இனிமேல் இப்படி அவசரக் குடுக்கைத்தனமாக யாரையும் அழைக்கக் கூடாது என்று சங்கல்பம் செய்து கொண்டான். ஆனால் அந்த மனிதரிடம் அவனுக்கு வேலையாக வேண்டி இருக்கிறது. அவர் பேசுவதிலிருந்து அவர் தனது நிறுவனத்தின் இரகசியங்களைக் கூறத் தயாராக இருக்கிறார் என்று தெரிகிறது. இது உண்மையில் ஒரு இலாபகரமான ஒப்பந்தம்.

மேலும் இதில் கவனம் செலுத்த வேண்டாம் என்று எண்ணினான். மதுவில் கவனம் செலுத்தினான். இருந்தாலும் அந்த நியாயமற்ற ஆனால் இலாபம் தரும் ஒப்பந்தத்தைச் சுற்றியே மனம் உழன்றது. இந்த ஒப்பந்தம் மூலம் அவன் பெறவிருக்கும் இலாபத்தைக் குறித்துச் சின்னதாக ஒரு மனக்கணக்குப் போட்டான். தன் குடும்பத்திற்கு அதை நல்லவிதமாகச் செலவு செய்யவேண்டும். உள்ளே போன மதுவும், வரப் போகும் இலாபத்தைப் பற்றிய நினைவும் அவனைப் பரவசத்தில் ஆழ்த்தின. தொலைபேசியில் வாங்கிய முகவரிக்குச் செல்வதற்குக் குஷியுடன் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளத் தொடங்கினான்.

அவன் கைப்பெட்டியில் எக்கச்சக்க பணம் இருந்தது. அதனை அந்த ஹோட்டல் அறையில் விட்டுச் செல்வது அத்தனை பாதுகாப்பானது இல்லை. போகும் இடத்தில் எந்த அளவிற்குப் பாதுகாப்பு இருக்கும் என்றும் தெரியவில்லை. தனது சட்டைப் பையில் வைத்துக் கொள்ளலாம் என்றால் போதிய இடம் இல்லை. முடிவில் அந்தப் பணத்தைக் கைப்பெட்டியில் வைத்தான். கைப்பெட்டியைக் கைகளில் எடுத்துக் கொண்டான். பாதி மீதம் இருந்த மது பாட்டிலை எடுத்துக் கொண்டான். ஒரு கால் டாக்ஸியைப் பிடித்தான். துல்லியமாக எட்டரை மணிக்கு அந்த முகவரியை அடைந்தான். அத்தனை பரபரப்பான வேலை மும்முரத்திலும் தன்னுடைய நேரம் தவறாமையை எண்ணிப் பெருமிதம் கொண்டான்.

அந்த இடம் இருளோ என்றிருந்தது. ஒரு மெலிந்த நோய்வாய்ப்பட்ட மனிதன் ஒருவன் வராந்தாவில் படுத்துக்கொண்டு இருமியபடி அந்தச் சூழலுக்கு மேலும் ஒருவித அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். பிரமோத் வருவதைப் பார்த்ததும் எழுந்துகொண்ட அந்த மனிதன்

அவனை ஓர் இருக்கையில் அமரச் சொன்னான். பிரமோத் அமர்ந்ததும், “கொஞ்சம் காத்திருங்கள். உள்ளே வேறு சில நபர்கள் இருக்கின்றனர்.” இதைக் கேட்டதும் பிரமோத்திற்குக் கடுப்பானது. பிரமோத் தனது எரிச்சலை முகத்தில் மறைக்காமல் காட்டினான். அந்தக் கிழவன் அவன் எரிச்சலைப் புறக்கணித்துவிட்டு, “உள்ளே போனதில் ஒரு நபர் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுவார். நான் வேணா உங்களுக்கு டீ சொல்லட்டுமா?” என்று கேட்டான்.

“தேவையில்லை” என்று பிரமோத் மறுத்தான்.

“இதுக்கு முன்னால் இங்கே வந்திருக்கீங்களா?” என்று கேட்டான். அவன் குரலில் ஒரு சிநேக பாவம் தெரிந்தது.

“ஆமாம். ரொம்ப நாளைக்கு முன்னால் வந்திருக்கிறேன்.”

“ஒரு வருஷத்திற்கு முன்பு என்றால் நான் அப்போது இங்கே வேலையில் சேரவில்லை. நான் போன மார்ச் மாதம்தான் வந்தேன். என்னவோ இந்த ஊர் சீதோஷணம் எனக்கு ஒத்துக் கொள்ளவில்லை” என்றான்.

அவனை நட்புக் கரம் நீட்டுவதற்கு மேலும் அனுமதிக்கக் கூடாது என்று தீர்மானித்த பிரமோத் கொஞ்சம் குரலைக் கடுமையாக்கி, “இன்னும் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும்?” என்றான்.

“ரொம்ப நேரமாகாது. இதோ இப்ப அவரு வந்திடுவாரு. ஆமாம் இங்கே உள்ள பொண்ணுங்களை உங்களுக்குப் பழக்கமிருக்கா?” என்று கேட்டான் அந்தக் கிழவன்.

“ரொம்ப நாள் ஆச்சு பெரியவரே, பேரெல்லாம் ஞாபகம் இல்லை. ஆமாம் இங்கே ரேட்டு எவ்வளவு?” என்று கேட்டான்.

“உள்ளே இருக்கும் அந்தப் பொண்ணுங்ககிட்ட மட்டும் பணம் கொடுங்க. உள்ளே ராதான்னு ஒரு பொண்ணு. அவளிடம் போங்க. ரொம்ப அடக்கமான பொண்ணு.”

அவர் சொல்லி முடிக்கவும் இரண்டு பேர் வெளியே வரவும் சரியாக இருந்தது. அந்தப் பெரியவர் விடாமல் இருமிக்கொண்டே எழுந்து உள்ளே

சென்றார். பிரமோத்தைப் பார்த்து காத்திருக்கும்படி ஜாடை செய்துவிட்டுப் போனார். அடுத்த முறை இந்தப் பக்கம் வருவது குறித்து யோசிக்கக்கூட கூடாது என்று அவன் முடிவெடுத்தான். அந்தப் பெரியவரைக் கன்னாபின்னா என்று ஏசலாம் என்றால் அவர் மிகவும் நிதானமாக இருந்ததால் ஒன்றும் அதிகப்படியாகப் பேச முடியவில்லை. சிறிது நேரத்தில் வெளியில் வந்த அந்தக் கிழவன் பிரமோத்தை உள்ளே அழைத்துக்கொண்டு போனான். ஒரு குறிப்பிட்ட அறையைச் சுட்டி உள்ளே போகச் சொன்னான்.

அந்த அறை உள்ளே சுத்தமாகவும் பிரகாசமாகவும் இருந்தது. முதல் சந்தோஷம். படுக்கையின் அருகில் நின்று கொண்டிருந்த பெண் பார்க்க அழகாக இருந்தாள். படித்தவள் மாதிரி தெரிந்தாள். இரண்டாவது சந்தோஷம். தனது முந்தைய அனுபவங்கள் காரணமாக அவன் தனது கைப்பெட்டியை மேஜை மேல் வைத்துவிட்டுப் படுக்கையில் அமர்ந்தான். கால் ஷூக்களைக் கழற்றினான். அவனைப் பார்த்து முறுவலித்துக் கொண்டிருந்த பெண் அவன் கழற்றிப் போட்ட ஷூக்களை ஒரு ஓரமாக நகர்த்திவிட்டு அவன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

“உன் பெயர் என்ன?” என்று கேட்டான்.

“ராதா” என்று பதில் சொன்னாள்.

“ராதாங்கறதுதான் உன் நிஜப் பெயரா?” என்று கேட்டான்.

“இல்லை, என் பெயர் கூஷ்யணப் பிரபா. வாய்க்குள் நுழைவது கடினம் என்பதால் ராதா என்று நானே பெயரை மாற்றிக் கொண்டேன்.”

“இங்கே மொத்தம் எத்தனை பேர்?”

“நாங்க ஆறு பெண்கள்.”

“எவ்வளவு மாதங்களாக இங்கே இருக்கிறீர்கள்?”

“போன ஆறு மாதமாக.”

எல்லாம் பொய்கள். கூஷ்யணப் பிரபா, ராதா, ஆறு பெண்கள், ஆறு மாதம் எல்லாம் எல்லாம் பொய்கள். ரேட்டு பேசுவதைச் சீக்கிரம் முடித்துவிட

வேண்டும். தான் எண்ணியிருந்த பணத்தை விடக் குறைவான தொகையை அந்தப் பெண்கள் குறிப்பிட்டால் வேறு விதமாக வலை வீசுவார்கள் என்பது அவனுக்குத் தெரியும். எனவே அந்த விஷயத்தை அப்போதே தீர்த்துவிட முடிவு செய்தான். “இதைத் தவிர வேறு ஏதாவது பணம் கொடுக்க வேண்டுமா?” என்று கேட்டான்.

“உங்கள் இஷ்டம்.”

“நான் பணத்தை இப்பவே கொடுக்கவா... அப்புறமா?”

“உங்கள் இஷ்டம்.”

பிரமோத்திற்கு அத்தனை பணமும் கைப்பெட்டியில் இருந்தது நினைவிற்கு வந்தது. கொஞ்சம் பணத்தை எடுத்துச் சட்டை பாக்கெட்டிற்குள் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். தனது கைக்கடிகாரத்தைக் கழற்றி மேஜையில் வைப்பதுபோல வைத்து கைப்பெட்டி ஒழுங்காகப் பூட்டு போடப்பட்டிருக்கிறதா என்று சோதித்தான். நன்றாகவே மூடியிருந்தது. அதிலிருந்து கொஞ்சம் பணம் எடுக்கலாமா என்று யோசித்தான்.

படுக்கைக்கு வந்தான். ராதாவைக் கரங்களால் தழுவிக் கொண்டான். அவளை ஆதரவாக அணைத்தபடி, “தாகத்திற்கு ஏதாவது கிடைக்குமா?” என்றான்.

“வெளியிலிருந்துதான் தருவிக்க வேண்டும். என்ன வேண்டும் உங்களுக்கு?” என்று கேட்டாள்.

அவன் பானங்களின் விலையைக் கேட்டான். அவள் அடுக்கினாள்.

“ரொம்ப ஜாஸ்தியா இருக்கே...” என்றான்.

“ஆமாம். இந்த நேரத்திற்கு எல்லாக் கடைகளையும் மூடிடுவாங்க. திறந்து வச்சு இருக்கறவன் சொல்லும் விலைக்குதான் வாங்க முடியும். அதனால்தான் இந்த விலை” என்றாள்.

ராதா கொஞ்சநேரம் பக்கத்து அறைக்குப் போனால் பிரமோத் தனது பெட்டியைத் திறந்து பணத்தையும் எடுத்து பாதி மீதமிருந்த விஸ்கி பாட்டிலையும் எடுக்கலாம். அந்தப் பெண்ணிற்கும் மதுவை விருந்தோம்ப

வேண்டியிருக்கும். அவள் ஆற்று மீன் போல மதுவைக் குடிப்பாளோ என்னவோ? அப்படி என்றால் மாலையில் வந்த டாக்சி கட்டணத்தையும் சேர்த்து மொத்த செலவு எவ்வளவு ஆகியிருக்கிறது? மனக்கணக்கு போட்டான். ரொம்ப ஜாஸ்தியில்லை. எதிரி நிறுவனத்துடன் செய்து கொள்ளப் போகும் ஒப்பந்தம் நல்ல விதமாக முடிந்துவிட்டால் இது போன்ற அற்பச் செலவுகளுக்கு இப்படிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம்.

"அதனால்தான் நானே பாட்டில் கொண்டு வந்திருக்கேன்" என்றான் புன்னகையுடன்.

"சோடாவுக்கு ஆர்டர் சொல்லட்டுமா?" என்று கேட்டாள் ராதா.

சோடா வேண்டியிருந்தது. இருந்தாலும் அவளை அப்புறப்படுத்துவது அவன் நோக்கமாக இருந்ததால், "கொஞ்சம் நல்ல தண்ணி கிடைச்சா கூட போதும்" என்றான்.

"கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க. நான் இப்போ கொண்டுவரேன்."

அவள் அந்த இடத்தை விட்டு அகன்றதும் பிரமோத் அவசர அவசரமாகத் தனது கைப் பெட்டியைத் திறந்து அதிலிருந்த பணக் கற்றையிலிருந்து கொஞ்சம் பணத்தையும் உள்ளே இருந்த விஸ்கி பாட்டிலையும் எடுத்தான். பிறகு அதை மூடித் தள்ளி வைத்துவிட்டு சாவியைத் தனது பேன்ட்டிற்குள் ஓர் இரகசிய இடத்தில் வைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

'இந்த மாதிரி இடங்களில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்' என்று எண்ணினான்.

ராதா தண்ணீர் கொண்டுவந்ததும் அவளைச் சோதித்துப் பார்ப்பதற்காக அவன் அவளை, "க்ஷயணப் பிரபா" என்று அழைத்தான்.

மேஜை மீது தண்ணீர்க் குவளையை வைத்துவிட்டு அவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள். ஒரு மெல்லிய சோகத்தின் நிழல் அவள் முகத்தில் பரவியது. கொஞ்சம் கனத்த குரலில், "ரொம்ப நாள் கழிச்சு என் பழைய பேரைச் சொல்லி நீங்க கூப்பிட்டவுடனே சந்தோஷமா இருந்தது. அதே

நேரம் வருத்தமாவும் இருந்தது. தயவுசெய்து என்னை அந்தப் பெயர் சொல்லியே கூப்பிடுங்க” என்றாள்.

‘என்னமோ தினம் இவளைப் பார்க்க வருவது மாதிரி இவளுக்கு ஒரு நினைப்பு’ என்று பிரமோத் இகழ்ச்சியாக உள்ளே நினைத்துக் கொண்டான். ஆனால் வெளியில், “உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு” என்றான்.

ராதா அவனுக்கு மதுவை ஊற்றிக் கொடுக்கும்போது பிரமோத் அவள் மொத்த பாட்டிலையும் காலி செய்துவிடுவாள் என்றுதான் எண்ணினான். ஆனால் அவள் ஒரே ஒரு டம்ளர் மட்டும் நிரப்பி வைத்தாள்.

“உனக்கு வேண்டாமா?”

“நான் குடிப்பதில்லை.”

“இல்லை நீயும் என்னோடு குடிக்கணும்” அவன் வற்புறுத்தினான்.

“இல்லை. நான் ஏற்கெனவே குடிச்சுப் பார்த்திருக்கிறேன். அதன் டேஸ்ட் பிடிக்கவில்லை.”

“நீ குடிக்கலைன்னா நானும் குடிக்க மாட்டேன்.”

“சரி எனக்கும் கொஞ்சம் விட்டுக் கொடுங்க.”

பிரமோத் அவளுக்கு ஒரு டம்ளரில் ஊற்றிக் கொடுத்தான். அவள் போலியாகதான் மதுவை வெறுப்பதாகக் கூறுகிறாள் என்று எண்ணினான். அவள் தனது குவளையிலிருந்து ஒரு மடக்கு விழுங்கிவிட்டு பிரமோத் அவனுடைய குவளையைக் காலி செய்ததும் தனது குவளையில் இருந்த அனைத்து மதுவையும் அவனுடைய டம்ளரில் ஊற்றிவிட்டாள்.

“இரு இப்போது உனக்கு பணம் கொடுத்து செட்டில் பண்ணி விடுகிறேன்” என்றான் பிரமோத்.

“எதுக்கு இப்பவே அவசரம்? பொறுமையா வாங்கிக்கறேன். முதலில் நீங்க குடிச்சு முடிங்க. சாப்பிட எதுனா கொண்டுவரச் சொல்லவா?” என்று கேட்டாள். பணத்தைக் கறக்க இது இன்னொரு வழி போலிருக்கிறது.

“வேண்டாம். இப்போ அவசியமில்லை” என்றான்.

“நீங்க உங்க பேர் என்னன்னு சொல்லவே இல்லியே...” என்றாள் அவள்.

இவள் போன்ற பெண்களிடம் உண்மையான பெயரையும் முகவரியையும் தருவது ஆபத்தில் கொண்டு விடும். ‘வினோத் சர்மா’ என்று சொல்ல வாய் திறந்தவன் தனது தோளில் தனது பெயரின் முதல் எழுத்து பச்சை குத்தப்பட்டிருப்பதைப் பார்த்துவிட்டு, “பிரகாஷ்” என்றான்.

“இந்த ஊரா உங்களுக்கு?”

“இல்லை. எனக்கு வெளியூர். ஆனா இங்கே வேலை இருப்பதால் அடிக்கடி வருவேன்.”

பிரமோத் சட்டையைக் கழற்றி அவள் கேட்ட பணத்தை எடுத்து ஒரு முறைக்கு இரண்டு முறை எண்ணிப் பார்த்து அவளிடம் கொடுத்தான். அவள் அதை மேஜை மேல் வைத்துவிட்டு, “நான் விளக்கை அணைக்கிறேன்” என்றாள். அவனும் தலையசைத்தான்.

பிரமோத் இருட்டில் விழித்து எழுந்தான். கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்றரை. திடீரென்று திகிலானது. பணத்துடன் பூட்டி வைக்கப்பட்டிருந்த பெட்டியைக் காணவில்லை என்ற நினைப்பு எழுந்தது. கண்கள் இருட்டுக்குப் பழகியதும் அவன் தனது கைப்பெட்டியை மேஜை மீது இருப்பதைக் கண்டு நிம்மதியடைந்தான். ராதா அவன் அருகில் படுத்திருந்தவள் இவன் எழுந்ததும் தானும் எழுந்துகொண்டு அறை விளக்கைப் போட்டாள். பிரமோத் உடைகளை அணிந்து கொண்டான். பெட்டியைத் திறந்து பணம் பத்திரமாக இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொண்டு மீதம் இருந்த விஸ்கி பாட்டிலை உள்ளே வைத்துப் பெட்டியைப் பூட்டினான். அவன் அறையைவிட்டு வெளியில் போகும்போது ராதா தூக்கக் கலக்கத்துடன், “திருப்பியும் வாங்க” என்றாள்.

அவன் அவள் தோள்களை அழுத்தி, “நிச்சயம் கூஷ்யணப் பிரபா,” என்றான்.

அந்தக் கிழவன் வெளியில் பெஞ்சில் படுத்துக் கொண்டிருந்தான். பிரமோத் வெளியில் வந்ததும் எழுந்துகொண்டு, “நல்லவிதமா முடிஞ்சுதா

எல்லாம்? நான் சொல்லலே ராதா நல்ல பொண்ணுன்னு."

பிரமோத் கிழவனை மேலும் பேசவிட்டால் காசு கேட்பான் என்று அவன் பேச்சை மாற்றும் விதமாக, "வெளியில் போய் ஒரு டாக்சி ஏற்பாடு பண்ணுங்க" என்றான்.

தனது ஹோட்டல் அறைக்குள் போனதும் பிரமோத் முதல் வேலையாகத் தனது பெட்டியில் இருந்த பணத்தை ஒருமுறைக்கு இருமுறை எண்ணிப் பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தது. தூக்கம் போய்விட்டது. நிறுவனத்திற்கு அன்று தான் பார்த்த அலுவல்கள் குறித்த விவரத்தை அறிக்கையாகத் தாக்கல் செய்யத் தொடங்கினான். எப்படி நடந்துகொண்டால் எதிரி நிறுவனத்தைச் சமாளிக்கலாம் என்பதையும் சேர்த்து அறிக்கையில் குறிப்பு எழுதினான். அப்போது அவனுக்கு ராதா ஞாபகம் வந்தது. நல்ல பெண். தப்பு தப்பு. நடத்தை தவறான ஒருத்தி எப்படி நல்லவளாக இருக்க முடியும்? அவன் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டான்.

(ஒடிய மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - பிபூதி மிஸ்ரா)

# 21. ஷாவின் வேசி

## அம்ரிதா ப்ரீத்தம்

அவளை யாரும் நீலம் என்று பெயர் சொல்லி அழைத்ததில்லை. ஷாவின் வேசி. அதுதான் அவள் பெயராக நிலைத்திருந்தது.

லாகூரில் உள்ள ஹீரா மண்டியில் உள்ள ஒரு தேவதாசிக் குடியில்தான் நீலம் பெண்ணாக மலர்ந்தாள். ஒரு சுதேசி மாகாணத்தைச் சேர்ந்த சர்தார் ஒருவர்தான் அவளுடைய மூக்குத்தியைக் கழற்றி முழுதாக ஐயாயிரம் ரூபாய் கொடுத்து அவளைக் கன்னி கழித்தார். ஹீரா மண்டியில் அவளை யாரும் சரியாக நடத்தவில்லை. பாலத்தி குழுமத்தின் மிக ஆடம்பரமான ஹோட்டலுக்குப் புலம் பெயர்ந்தாள். அவள் அங்கிருந்து போனாளே தவிர லாகூரை விட்டுப் போகவில்லை. இருந்தாலும் ஊர் முழுக்க ஷாவின் வேசி என்பதே அவள் பெயரானது.

அவளுடைய மதுரமான குரல் ஊர் முழுக்கப் பிரசித்தம். மிர்ஸாவின் வரிகளுக்கு அவளைப்போல வேறு யார் ஒருவராலும் உயிர் கொடுக்க முடியாது என்பது அவர்களது அபிப்பிராயம். (மிர்ஸா காலிப் முகலாயர்களின் சாம்ராஜ்யத்தின் இறுதி உருது மற்றும் பாரசீகக் கவிஞர் - மொழிபெயர்ப்பாளர்.) அவளுடைய பெயர் மறைந்து போனாலும் அவள் இனிமையான குரல் அவர்கள் செவிகளை விட்டு அகலவே இல்லை. கிராமஃபோன் கிட்டத்தட்ட எல்லா வீடுகளிலும் இருக்கும். கிராமஃபோன் இருக்கும் எல்லா வீடுகளிலும் அவளுடைய இசைத்தட்டுகள் நிச்சயம் இருக்கும். எல்லா விசேஷங்களிலும் அவளுடைய இசைத்தட்டுகளே மீண்டும் மீண்டும் இசைத்தவண்ணம் இருக்கும்.

ஷாவிற்கும் அவளுக்குமான தொடர்பு ஊர் அறிந்தது. ஷாவின் வீட்டினருக்கும் இந்த உறவு பற்றித் தெரியும். அவர்களுக்குத் தெரிந்தது மட்டுமில்லை ஒருமாதிரி ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். ஷாவின் மகன் - அவனுக்கு இப்போது திருமண வயது வந்துவிட்டது - சின்னஞ்சிறு குழந்தையாக இருந்தபோது, விஷயத்தைக் கேள்விப்பட்டதும் ஷாவின் சகதர்மிணி விஷம் குடித்து உயிரை மாய்த்துக்கொள்ளப் போவதாக அச்சுறுத்தினாள். ஷாவிற்கா தெரியாது? ஒரு விலை உயர்ந்த முத்து மாலையை அவள் கழுத்தில் ஆசையுடன் பூட்டி, “ஷாஹ்னி! உன் மாளிகைக்கு அவள் ராசியானவள். எனக்கு ஒரு கல்லைப் பார்த்ததும் அதன் தரம் எளிதில் தெரிந்துவிடும். நீலக் கல்லின் குணம் உனக்கும் தெரியுமே. அது உயிர்ப்பிக்கவும் செய்யும்; அழிக்கவும் செய்யும். இந்த நீலம் என்னை உயிர்ப்பித்தாள். அவளைச் சேர்ந்த பின்னர் நான் மண்ணைத் தொட்டால் கூட அது பொன்னாக மாறுகிறது” என்றார்.

“ஆனால் அவளால் நம் வீட்டுக்கு கேடு நிச்சயம். ஒருநாள் ஒண்ணுமே இல்லாம நிற்கப் போகிறோம், பாருங்க...” என்றாள். அவள் நெஞ்சில் வலி இல்லாமல் இல்லை. அதையும் மீறி அவனுடைய வாதத்திற்குப் பதில் அளிக்க வேண்டும் என்ற வேதனைதான் அவளிடம் அதிகம் இருந்தது.

ஆனால் ஷாவின் பிடிவாதம் கொஞ்சம்கூட தளரவில்லை. “இன்னொரு பக்கம் எனக்கு பயமா இருக்கு. வேசிகளைப் பத்தி நம்மால் ஒன்றும் சொல்வதற்கில்லை. வேற யாராவது அவளைக் கொத்திக்கொண்டு சென்றுவிட்டால் அப்புறம் நம் கதி அதோ கதிதான்” என்றார்.

ஷாவின் சகதர்மிணி அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. நடப்பது நடக்கட்டும் காலம் பார்த்துக் கொள்ளும் என்று இருந்துவிட்டாள். ஆனால் பின்னால் வந்த வருடங்களில் காலம் நகராமல் உறைந்து நின்றது. உண்மையில் சொல்லப் போனால் ஷா நீலத்திற்குச் செலவு செய்த தொகையைப்போல பல மடங்குச் சொத்து அவரை வந்தடைந்தது. முன்னால் அவர் சின்னக் கடைதான் வைத்திருந்தார். ஆனால் இப்போது அவர் கடைதான் பஜாரில் மிகப்பெரிய ஷோ-ரூமாக விளங்குகிறது.

எவர்சில்வர் சட்டம் போட்ட பெரிய பெரிய கண்ணாடிகளுடன் கூடிய பிரமாண்டமான ஷோ-ரூம். அவர்கள் குடியிருந்த பகுதியில் ஒரு வீடு மட்டும் சொந்த வீடாக இருந்தது அப்போது. இப்போது மொத்தக் குடியிருப்பும் அவர் சொந்தமாகிவிட்டது. வாடகைக்குக் குடியிருந்தவர்களும் சாமானியர்கள் இல்லை. ஷாஹ்னியும் வீட்டுச் சாவிக்கொத்து கைமாறாமல் பார்த்துக் கொண்டாள்.

வெகுகாலம் முன்பே ஒருநாள் தனது பெட்டகத்தில் தங்கக்காசுகளை நிரப்பி மூடிக் கொண்டிருக்கும்போது ஷாஹ்னி, “நீங்கள் அவளுக்கு பெரிய தாஜ்மஹால் கட்டினால்கூட அவளை ஒரு ஹோட்டலில் குடி வைத்தால் போதும். இந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது” என்று தனது கணவனிடம் தீர்மானமாகக் கூறிவிட்டாள். சொன்னது மாதிரியே இன்றையே தேதி வரையில் அவள் நீலம் முகத்தை ஏறிட்டும் பார்த்ததில்லை. இதைக் கூறும்போது அவள் மூத்த மகன் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தான். இப்போது அவனுடைய கல்யாணம்தான் நடைபெற உள்ளது. நீலத்தை மட்டுமில்லை அவளுடைய பாடல் ஒலிக்கும் இசைத்தட்டுகளைக்கூட ஷாஹ்னி அந்த வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. அவள் பெயரைக்கூட அந்த வீட்டில் இருப்பவர்கள் உச்சரிக்கக் கூடாது. இது அவளுடைய வீடு. அவள் அதிகாரம் மட்டும்தான் அங்கே செல்லுபடியாக வேண்டும். ஆனால் அவளுடைய பிள்ளைகள் வெளியில் அவள் பாடல்களைக் கேட்டிருக்கிறார்கள். அவள் ஷாவின் வேசி என்றும் பலர் கூறக் கேட்டிருக்கிறார்கள்.

மூத்தவனின் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. தையல்காரர்களும், துணிகளில் பூவேலைப்பாடு செய்யும் கைவினைஞர்களும் கடந்த நான்கு மாதங்களாக அந்த வீட்டில்தான் தங்கி முகாம் இட்டுள்ளனர். ஒரு தையல்காரர் கல்யாண சூட்டுகளைத் தங்க ஜரிகைகளால் அலங்கரித்துக் கொண்டிருப்பார்; இன்னொருவர் வெள்ளி ஜரிகைகளால் பூவேலைகளை கவனித்துக் கொள்வார். துணிகளுக்கு ஓரம் தைத்து சம்கி வேலைகளை இன்னொருவர் பார்த்துக் கொள்வார்.

ஷாவின் நண்பர்கள் திருமணத்தின்போது வேசி நீலத்தின் இசை நிகழ்ச்சி

நிச்சயம் இருக்கவேண்டுமே என்று வேண்டினார்கள். இந்தக் கோரிக்கையை அவர்கள் மிகவும் சாமர்த்தியமாக முன் வைத்தனர். “ஷாஜி, ஆடுவதற்கும் பாடுவதற்கும் தடுக்கி விழுந்தால் நூறு பேர் கிடைப்பார்கள். ஆனால் உங்கள் மெல்லிசையரசி பாடுவதற்கு அவசியம் ஏற்பாடு செய்யுங்கள். மிர்ஸாவின் நான்கு வரிகளை மட்டும் பாடினால்கூட எங்களுக்குப் போதும்.”

பாலத்தியின் ஹோட்டல் மற்ற ஹோட்டல்களைப்போல இல்லை. ஆங்கிலேயர்கள் மட்டும்தான் அங்கே தங்குவார்கள். இரண்டு படுக்கையறை, மூன்று படுக்கையறைகள் போன்றவைகளைத் தவிர மூன்று நான்கு அறைகள் இணைந்த சூட்களும் அங்கே உள்ளன. நீலம் அப்படி ஒரு சூட்டில்தான் வசித்து வந்தாள். அங்கிருந்தபடியே அவளுடைய இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யலாம் என்பது ஷாவின் திட்டம்.

‘அது கேளிக்கை விடுதிக்குப் போவது போலிருக்கும்’ என்று ஒரு நண்பன் மறுக்க மற்றவர்கள் சேர்ந்து கொண்டனர். “அந்த உரிமை ஷாஜி உங்களுக்கு மட்டும்தான் இருக்கு. இதற்கு முன்னால் உங்களிடம் இது குறித்து நாங்க ஒரு வார்த்தை வாய் திறந்து சொல்லியதில்லை. நீலம் உங்களுடையவள். நாங்கள் எங்கள் மருமகப் பிள்ளையோட கல்யாணத்தைக் கொண்டாடப் போகிறோம். அது ஒரு பாரம்பரியமான கல்யாணம். எனவே அவளைத் திருமண நிகழ்ச்சியின்போது வீட்டிற்கு அழைத்து வந்து பாட வையுங்கள்.”

இந்த ஏற்பாடு ஷாவிற்கு உகந்ததாகத் தெரிந்தது. இவர்களை அவள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லாமல் இருப்பதுதான் உத்தமம். தான் இல்லாத நேரங்களில் இரண்டு மூன்று பெரிய கைகள் அவள் சூட்டிற்கு வந்து போகும் தகவல் அவருக்கு ஏற்கெனவே தெரியும். மேலும் நீலமும் தனது பிரமாண்டமான மாளிகையைப் பார்க்க வேண்டும் என்பது அவருடைய விருப்பம். ஷாஹ்னியின் மீது இருந்த அச்சம் காரணமாக ஷா அவர்களுக்கு உடனே சம்மதம் எதுவும் கொடுக்கவில்லை.

இதற்கு நடுவில் ஷாவின் இரண்டு நண்பர்கள் தாங்களே நேராக ஷாஹ்னியைச் சந்தித்துப் பேசினார்கள். “அண்ணி, மருமகப் பையன்

கலியாணத்துக்கு இரவு சங்கீதக் கச்சேரிக்கு எதுவும் ஏற்பாடு பண்ணலியா? கல்யாணத்தில் எந்த ஒரு சம்ப்ரதாயமும் விட்டுப் போக விடமாட்டோம். ஷா நீலம் இருக்கும் இடத்திலேயே சங்கீத நிகழ்ச்சிக்கு ஏற்பாடு பண்றேன்னு சொல்றாரு. ஆயிரக்கணக்கில் அதுக்கு பைசா செலவு பண்ணணும். நீங்கதான் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுப் பார்த்துக்கணும்; ஏற்கெனவே வேண்டும் என்ற அளவிற்கு அந்த வேசிக்கு அவர் செலவு பண்ணிட்டாரு. கொஞ்சம் சூதானமா இருங்க. அவளை இங்கேயே கூப்பிட்டு சங்கீதக் கச்சேரி பண்ணச் சொல்லுங்க. எங்களுக்கும் சங்கீதம் கேட்டா மாதிரி இருக்கும். உங்களுக்கும் பணத்தை மிச்சம் பண்ணின மாதிரி இருக்கும்."

முதலில் ஷாஹ்னி மறுத்தாள். "சத்தியமா நான் அந்த வேசியை முகம் கொடுத்துப் பார்க்க மாட்டேன்" என்று சீறினாள்.

அவர்கள் விடுவதாக இல்லை. "இது உங்களுடைய சாம்ராஜ்யம் அண்ணி. உங்கள் ஆணைகளுக்குக் கட்டுப்படும் ஒரு பணிப்பெண்ணாகதான் அவள் இங்கே வருவாள். அவமானம் அவளுக்குதான். உங்களுக்கு இல்லை. அவள் ஒரு சாதாரண கேளிக்கைக்காரி. அவ்வளவுதான்."

ஷாஹ்னியின் மொத்தக் குடும்பமும் நீலம் வருவதால் உள்ள நிறை குறைகளைச் சீர் தூக்கிப் பார்த்து முடிவில் அவள் வருகையை அங்கீகரித்தது. ஷாஹ்னி ஏகப்பட்ட நிபந்தனைகளை விதித்தாள். "மது விநியோகம் இருக்காது. அவள் சங்கீதத்தைப் பார்க்க வருபவர்கள் ஒரு இல்லத்தில் நிகழும் நிகழ்ச்சியைப் பார்க்க வருபவர்கள் என்பதை மறக்கக் கூடாது. வெளியிலிருந்து நண்பர்கள் நீங்கள் வரலாம். அவள் வரலாம்; பாடலாம். அவ்வளவுதான். நிகழ்ச்சி முடிந்ததும் கிளம்பிவிட வேண்டும். வீட்டில் மற்ற நிகழ்ச்சிகளுக்குப் பாட வரும் பெண்களுக்கு நான் நான்கு பராத்தா கொடுப்பது வழக்கம். அதே நான்கு பராத்தாதான் அவளுக்கும்."

"இதைதான் நாங்களும் எதிர்பார்த்தோம்" என்று நண்பர்கள் முகத்துதி பாடினார்கள். "நீங்களாக இருக்கக் கண்டு உங்கள் புத்திசாலித்தனத்தால் இதுவரை அவப்பெயர் எதுவும் வராம பார்த்துகிட்டீங்க. இல்லையென்றால், கடவுளே, நினைக்கக்கூட முடியவில்லை."

ஒருவழியாக அந்த வேசி அந்த இல்லத்தில் காலடி எடுத்து வைத்தாள். ஷாஹ்னி அவளை அழைத்து வர தனது சொந்த வண்டியை அனுப்பியிருந்தாள். மாளிகை முழுவதும் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் கூட்டத்தால் நிரம்பிக் கிடந்தது. அந்தப் பெரிய அறையில் பெரிய பெரிய வெள்ளை பெட்ஷீட்கள் விரிக்கப்பட்டிருந்தன. வெள்ளை திவான்கள் சுவர் ஓரம் வைக்கப்பட்டிருந்தன. அறையின் நடுவில் குஷனில் வட்ட வடிவில் மெத்தை அமைக்கப்பட்டு அதன் மேல் டோலக்கு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. வீட்டில் இருந்த பெண்கள் திருமணப் பாடல்களை உற்சாகமாகப் பாட ஆரம்பித்தனர்.

கோச்சு வண்டி வீட்டு வாசலில் வந்து நின்றதும் வீட்டுப் பெண்கள் எல்லோரும் பாடுவதை நிறுத்திவிட்டு ஜன்னல்களில், மாடிப்படிகளில் நின்று இதுவரை தாங்கள் ஒருமுறைகூட கண்டிராத அந்த வேசியின் முகத்தைக் காண ஆவலுடன் காத்திருந்தனர்.

“இது என்ன அபசகுனம்… இப்படிப் பாதியிலேயே பாடுவதை விட்டு எழுந்து போவது?” என்று ஷாஹ்னி அவர்களைக் கடிந்து கொண்டாள். தன் குரலே அவளுக்கு மிகவும் ஹீனமாகக் காதில் ஒலித்தது. அவளை எதிர்கொள்ளும் விதமாக மங்களகரமான அரக்கு நிறப் புடைவையின் ஓரங்களைச் சரிசெய்து கொண்டாள்.

அதோ நீலம் வந்துவிட்டாள். கண்ணைப் பறிக்கும் பச்சை நிற கராரா அணிந்திருந்தாள். அந்த கராராவின் ஓரங்களில் தங்கச் சரிகை வேலைப்பாடு மிகுந்திருந்தது. பளிச்சென்று மின்னும் ஒரு சிவப்பு நிற மேல் சட்டை அணிந்திருந்தாள். பச்சை நிறப் பட்டு துப்பட்டா ஒன்று அவள் முகத்தைத் திரையிட்டுப் பாதம் வரை நீண்டு தொங்கியது. அவளே தக தக என்று மின்னிக் கொண்டிருந்தாள். அவள் அணிந்த ஆடையின் பளிச்சிடும் பச்சை வர்ணம் அந்த வாசலில் பட்டு, அதுவும் பச்சை வர்ணத்தில் மிளிர்ந்ததைப் போன்ற பிரமை ஷாஹ்னிக்கு ஏற்பட்டது.

கிளுங் கிளுங் என்று கை வளையல்கள் குலுங்கும் ஒலியை ஷாஹ்னி கேட்டாள். ஓர் அழகிய சிவந்த கரம் முகமன் கூறுவதற்காக முகம் வரை நீள்வதைக் கண்டாள். சங்கீதக் குரல் ஒன்று காற்றில் மிதந்து வந்து,

“வாழ்த்துகள் ஷாஹ்னி. மனம் கனிந்த வாழ்த்துகள் உங்களுக்கு” என்றது.

அவள் ஓர் அழகுப் பதுமை. கூடத்தின் நடுவில் போடப்பட்டிருந்த குஷன் மெத்தையில் அவளை அமரச் சொல்வதற்காகத் தனது கரங்களை நீட்டியபோதுதான் ஷாஹ்னி கவனித்தாள். தனது கரங்கள் பருத்துத் தொளதொள என்று தொங்கும் கரங்கள்.

அறையின் ஒரு மூலையில் ஷா தனது நண்பர்களுடன் அமர்ந்திருந்தார். அந்த நளினப் பளிங்கு தனக்கே உரிய ஒயிலுடன் சலாம் செய்துவிட்டு குஷன் மெத்தையில் அழகுடன் அமர்ந்தது. அவள் வளைக்கரங்கள் மீண்டும் மணியொலித்தன. ஷாஹ்னி கண்ணாடி வளையல்கள் அடுக்கி வைக்கப்பட்ட அந்தக் கரங்களை மீண்டும் பார்வையிட்டாள். தனது தங்க வளையல்கள் அணிந்த கரங்களின் மீதும் பார்வை ஓடியது.

அறையில் இருந்த அத்தனை பேரும் மலைத்துப் போயிருந்தனர். பார்வைகள் அனைத்தும் - ஷாஹ்னியின் பார்வையையும் சேர்த்து - ஓர் இடத்தில் நிலைகுத்தி நின்றன. மற்றவர்களின் அந்தப் பார்வை அவளுக்கு ஒருவித எரிச்சல் மூட்டியது. வீட்டுப் பெண்களை மேலும் ஒருமுறை அதட்டித் திருமணப் பாடல்களைத் தொடரச் சொல்ல வேண்டும் என்று எண்ணினாள். ஆனால் அவள் குரல் அவளிடம் இல்லை. அத்தனை குரல்களையும் நீலம் ஒருத்தியே வாங்கிக் கொண்டதைப்போல அறையெங்கும் நிசப்தம். நடுவில் வைக்கப்பட்டிருந்த டோலக்கை பலம் கொண்ட மட்டும் தட்டி ஓசையெழுப்பி அந்த மௌனத்தைக் கொல்லவேண்டும்போல ஷாஹ்னிக்குத் தோன்றியது.

மொத்த சப்தத்தையும் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட அவள் வாய் திறந்தாள். “முதலில் நான் ஒரு கோதி பாடுகிறேன் ஷாஹ்னி. சரிதானே?” என்று கேட்டாள். ஷாஹ்னியைப் பார்த்தபடி பாட ஆரம்பித்தாள்.

“சின்னஞ்சிறு நீர்த்துளிகளே இளம் நீர்த் துளிகளே மழையாய் மண் மீதுவாருங்கள்

பாக்கியசாலியான அன்னை ஒருத்தி இங்கே திருமணம் என்னும் புனிதச் சடங்கு மேற்கொள்கிறாள்...”

அந்தப் பாடலைக் கேட்டதும் ஷாஹ்னிக்குக் கொஞ்சம் ஆசுவாசமாயிற்று. அவள்தான் அந்த அன்னை. அவள் ஷாவின் மனைவி. அவளுக்குதான் அந்தப் புனிதச் சடங்கு நடத்தும் உரிமையும் அதிகாரமும் உள்ளன.

முகத்தில் புன்னகை மலர, தன் எதிரில் அமர்ந்து நீலம் பாடும் திருமணச் சடங்குகள் தொடர்புடைய பாடல்களை ஷாஹ்னி கேட்டுக் கொண்டிருந்தாள்.

கோதி முடிந்ததும் மீண்டும் பேச்சுச் சத்தம் எழுந்தது. பெண்கள் அவளை ஒரு டோலக்கி பாடல் பாடுமாறு கேட்டுக் கொண்டனர். ஆண்கள் மிர்ஸாவின் பாடல்களில் ஒரு சில வரிகளைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டனர். நீலம் ஆண்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் பெண்களின் விருப்பத்தை நிறைவேற்ற ஆரம்பித்தது மகிழ்ச்சியை அளித்தது.

அங்கிருந்த பெண்களில் பலருக்கு நீலம் யார் என்பது தெரியாது. ஒருவருக்கு ஒருவர் குசுகுசுவென்று அவளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மிக மெதுவாக 'நீலம் ஷாவின் வேசி' என்று கூறினாலும் அது ஷாஹ்னியின் செவிகளில் ஈட்டியாகப் பாய்ந்தது. அவள் முகம் உடனே வாடிவிட்டது. ஷாவின் வேசி. ஷாவின் வேசி. அவள் முகம் மீண்டும் வெளுத்தது.

பாடகியின் குரலுக்கு ஏற்ப டோலக்கின் குரலும் ஒலி மிகுந்துகொண்டே போனது.

"சிவப்பு டர்பன் அணிந்திருக்கும் சிங்காரா.

சிணுங்கி அழைக்கிறேன் உனையே என் கண்ணாளா..."

ஷாஹ்னிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அல்லாஹ் மன்னிப்பாராக. சிவப்பு டர்பன் அன்று அணியப் போவது அவள் மகன். அவன்தான் சிவப்பு டர்பன் அணிந்து குதிரை மீது சென்று தனது மணமகளை அழைத்து வர இருக்கிறான்.

நேயர் விருப்பம் நிறைவடைவதாகவே இல்லை. ஒரு பாடல் முடியும்; உடனே மற்றொரு பாடல் துவங்கும். பெண்களின் கோரிக்கையை ஒரு

சமயம் நிறைவேற்றுவாள். மற்றொரு சமயம் ஆண்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வாள். நடுநடுவில், “உங்களில் யாராவது பாடுங்கள். நான் கொஞ்சம் மூச்சு வாங்கிக் கொள்கிறேன்.” அவள் முன்னால் குரல் எழுப்பும் துணிச்சல் அங்கு ஒருவருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. இதையும் அவள் நிகழ்ச்சி மேலும் சிறப்புற ஓர் உத்தியாகக் கையாண்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். இசை அவள் உடன்பிறந்தது. அப்படி ஓர் இனிய குரல். அப்படிக் கூறினாளே தவிர ஒரு பாட்டு முடிய முடிய அடுத்த பாட்டை விடாமல் தொடங்கி பாடியவண்ணம் இருந்தாள்.

கல்யாணப் பாடல்களைப் பாடும் வரை எல்லாம் சரியாகதான் போய்க்கொண்டிருந்தது. மிர்ஸாவின் வரிகளைப் பாடத் தொடங்கியதும் காற்று கூட அங்குமிங்கும் திரிவதை நிறுத்தி அவள் பாடல்களைக் கேட்கத் தொடங்கியதுபோல ஒரு நிசப்தம் உண்டானது. அங்கிருந்த ஆடவர்கள் சிலைகளைப்போல அசையாதிருந்தனர். ஷாஹ்னிக்கு சற்று தர்ம சங்கடமானது. ஷாவைப் பார்த்தாள். அவரும் மற்றவரைப் போல கல் எனச் சமைந்திருந்தாலும் அவர் நிஜமாகவே கல்லாகிவிட்டாரோ என்று அவளுக்குத் தோன்றியது.

ஷாஹ்னிக்கு நடுக்கமானது. ஏதாவது செய்ய வேண்டும். ஏதாவது... இல்லையென்றால் அவளும் ஒரு களிமண் சிலை போல மாறிவிடுவாள். அவள் இருப்பைக் காட்டிக்கொள்ள அவள் நிச்சயமாக ஏதாவது செய்தே ஆகவேண்டும்.

பின்மாலைப் பொழுதில்தான் இசை நிகழ்ச்சி தனது முடிவை நெருங்கியது.

நிகழ்ச்சி முடிந்ததும் வெறும் பராத்தா மட்டும்தான் பரிமாறுவதாக ஷாஹ்னி முன்பு சொல்லியிருந்தாள். ஆனால் இப்போது இனிப்புகளும், தேநீரும் வந்த அனைவருக்கும் பரிமாறப்பட்டது. சில நூறு ரூபாய்த் தாள்களைச் சுருட்டி தனது மூத்த புதல்வனின் தலையைச் சுற்றி ஷாஹ்னி இதுவரை ஷாவின் வேசி என்று யாரை அழைத்தனரோ அந்த நீலத்திற்கு வெகுமதியாக அளித்தாள்.

“இருக்கட்டும் ஷாஹ்னி, ஏற்கெனவே உன் சோற்றில்தான் நான் கை வைத்து வாழ்கிறேன்” என்றாள். அவளுடைய மௌனத்தைப் போலவே அவளுடைய பேச்சும் மின்னியது.

ஷாஹ்னியின் முகம் சட்டென்று வெளுத்தது. ஷாவின் பரத்தை, அந்தச் சிறுமகள் தனக்கும் அவளது கணவனுக்கும் உள்ள தொடர்பைப் பகிரங்கப்படுத்தித் தன்னைச் சிறுமைப் படுத்திவிட்டாள். ஒரே ஒரு கணம் தடுமாறி நின்ற ஷாஹ்னி சட்டென்று நிலைமையைத் தனது கட்டுக்குள் கொண்டுவந்தாள். அந்தப் பெண்மணியின் கரங்களில் தான் கொடுத்த பணத்தை அழுத்தி வைத்து, “ஆமாமாம், எப்போதும் ஷா கொடுப்பதையே வாங்கிக் கொண்டிருந்தால் போதுமா? நான் கொடுப்பதை அப்புறம் என்றுதான் வாங்கிக்கொள்வது? இன்னிக்கு நான் கொடுத்ததா இருக்கட்டும்” என்றாள்.

அந்த ரூபாய் நோட்டுகளைப் பெற்றுக்கொண்ட ஷாவின் வேசி மிகவும் பணிவுடன் தோன்றினாள். ஷாஹ்னி அணிந்திருந்த சேலையின் மங்கள அரக்கு நிறம் அந்த அறை எங்கும் பட்டுப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

(பஞ்சாபி மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் - நிருபமா தத்)

# கதாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள்

ஏ.பி. அஸ்வின் குமார்: தும்கூர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரும் 'பிராக்மதா' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் பொறுப்பு வகிப்பவர். மணிபால் பல்கலைக் கழகத்தில் கலாசாரப் படிப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். கல்வித் துறையிலும் இலக்கியத் துறையிலும் மொழிபெயர்ப்பாளராக இருப்பவர்.

அனிதா சம்காரியா: டெல்லி பல்கலைக் கழகத்தின் சத்யவதி கல்லூரியில் இணை பேராசிரியராக இருப்பவர். அவரது கல்லூரியில் குடும்பநல ஆலோசகராகவும் பதவி வகிக்கிறார். இந்த ஆலோசனை மையம் பாலினப் பிரச்சனைகளுக்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் செயல்படும் மையம். இவருக்கு மொழிபெயர்ப்பிலும் பாலின ஆய்வுத் துறையிலும் ஆர்வம் அதிகம்.

அம்ரிதா ப்ரீத்தம்: பஞ்சாபி மொழியிலும், ஹிந்தி மொழியிலும் நன்கு அறியப்பட்ட இவர் ஒரு கதாசிரியர், கவிஞர் என்று பல முகம் கொண்டவர். இருபதாம் நூற்றாண்டில் பஞ்சாபின் தலைசிறந்த கவிஞர் என்று அறியப்பட்டவர். 'ஆஜ் ஆக்கான் வாரிஸ் ஷானு' என்ற கவிதை மூலம் நன்கு அறியப்பட்டவர். இந்தக் கவிதை பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பஞ்சாபி கவிஞர் வாரிஸ் ஷா என்பவருக்கு இந்திய பாகிஸ்தான் பிரிவினை குறித்து மிகுந்த வேதனையுடன் எழுதப்பட்ட கடித வடிவிலான கவிதை. இவருடைய பின்ஜார் நாவல் இந்திய பாகிஸ்தான் பிரிவினையின்போது பெண்களின் நிலைமை குறித்து மிக உருக்கமாக எழுதப்பட்ட நாவல். இவர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு

தேசங்களிலும் வாழ்ந்தவர்.

ஆராதனா பிரதான்: புது தில்லியில் உள்ள ஜாமியா மில்லியா இஸ்லாமியக் கல்லூரியில் முனைவர் பிரிவில் ஓர் ஆராய்ச்சி அறிஞர். இந்தியப் பெண்கள் மற்றும் விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவின் சினிமா ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சி மாணவராக இருக்கிறார். ஃபிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் டிப்ளமா பட்டம் பெற்றவர். சுயமாக ஆங்கிலம் பயிற்றுவிப்பவர். சர்தார் படேல் பள்ளியிலும், ஜாமியா மேல்நிலைப் பள்ளியிலும் ஆங்கில ஆசிரியையாகப் பணியாற்றியவர். மாசி கூட்டிணைப்பு நிறுவனம் (Masi Inc.) என்ற பெயரில் இலக்கிய நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தி வருகிறார். பாட்னாவின் இலக்கிய விழாவின் நிறுவன இயக்குநராகவும் பொறுப்பில் இருந்து வருபவர். தனிச்சையான மொழி பெயர்ப்பாளராக விளங்குவதோடு இந்திய நுண்கலைகளுக்கு வலைதள வடிவமைப்பாளராகவும் இருக்கிறார்.

அருணவா சின்ஹா: வங்க மொழியின் செவ்விலக்கியம், நவீன இலக்கியம், சமகால இலக்கியம் ஆகியவற்றை ஆங்கில மொழிகளில் சிறப்பாக மொழிபெயர்ப்பவர். இதுவரை அவருடைய முப்பதுக்கும் மேலான மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியாகி உள்ளன. எழுத்தாளர் சங்கர் எழுதிய ‘சௌரங்கி’ என்ற நூலையும், அனிதா அக்னிஹோத்ரி எழுதிய ‘பதினேழு’ என்ற நாவலையும் வங்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததற்காக Crossword Translation Award என்ற உயரிய விருதினை இருமுறை பெற்றவர். இந்தியாவைத் தவிர இவருடைய மொழிபெயர்ப்புகள் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இன்னும் ஓரிரு ஐரோப்பிய நாடுகளிலும் வெளியாகியுள்ளன. இவர் பிறந்து வளர்ந்தது கொல்கத்தா என்றாலும் தற்சமயம் வசிப்பது புது தில்லியில்.

பாபுராவ் பாகுல்: இவர் ஒரு முற்போக்கு தலித் சிந்தனைவாதி. மகாராஷ்டிரத்திலிருந்து கிளம்பிய தலித் இலக்கியச் சிற்பிகளில் இவரை முதன்மையானவர் எனலாம். இவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பு ‘என் சாதியை நான் மறைத்து வைத்தபோது’ (ஜெவா மிஜாத் சோர்லி ஹோதி) மராத்திய இலக்கிய உலகை தனது பச்சையான

சொல்லாடல்களால் புரட்டிப் போட்டு தலித் அவலங்களைக் கண் முன் நிறுத்தியது. அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு 'மரண் ஸ்வச்தா ஹோத் ஹை' (மரணம் மலிவானது ) அவருக்கு இலக்கிய உலகில் ஓர் அசைக்க முடியாத இடத்தை அளித்தது. அவர் குரல் நவீனமானது. ஆற்றல் மிக்கது. இளம் தலித் படைப்பாளிகளுக்கு முன் உதாரணமாக விளங்கியது.

பிபூதி மிஸ்ரா: ஒடிஸா மாநிலத்தைச் சேர்ந்த இவர் ஒரு சிறுகதை எழுத்தாளர். தன்னிச்சைப் பத்திரிகையாளர். புவனேஷ்வரில் வாழ்ந்தவர். ஒடிய மொழி பத்திரிகைகளுக்கு அடிக்கடி படைப்புகளை எழுதி வந்தவர். அதேபோல ஒடியாவிலிருந்து நிறைய படைப்புகளை ஆங்கில மொழிமாற்றம் செய்தவர்.

பிபூதிபூஷன் பண்டியோபாத்யாயா: வங்கமொழியின் நவீன இலக்கியவாதிகளில் இவர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர். இதுவரை பதினாறு நாவல்களும் இருநூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியவர். இவர் எழுத்தில் உள்ள கவித்துவம் பெரிதும் பாராட்டைப் பெற்ற ஒன்று. வங்கதேசத்தின் கிராமப்புற மக்களின் வாழ்க்கையையும், அவர்கள் மீது நிகழ்த்தப்படும் சுரண்டலைப் பற்றியும் மிக விரிவாக எழுதியவர். கிட்டத்தட்ட சுயசரிதை போல விளங்கிய இவரது 'பதேர் பாஞ்சாலி' மற்றும் 'அபராஜிதோ' போன்ற நாவல்கள் திரையுலகச் சிற்பி மாமேதை சத்யஜித் ரே அவர்களால் திரைப்படங்களாக வெளிவந்தன. பந்தோபாத்யாயா மேற்கு வங்க மாநிலத்தின் மிக உயரிய விருதான ரவீந்திர புரஸ்கார் விருதைப் பெற்றார்.

புஷ்ரா ஆல்வி ரஸ்ஸாக்: இவர் ஒரு தன்னிச்சையான பெண் எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர். சமூகம் குறித்தும், கலாசாரம் குறித்தும் இவரது படைப்புகள் உள்ளன. இந்திய, சௌதி அரேபியா ஐக்கிய அரபு நாடுகளிலும் ஆங்கிலம் கற்பிப்பவராக இருந்து வருகிறார். பல தொகுப்புகளில் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவருடைய கவிதைத் தொகுப்பு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

ஃபாத்திமா ரிஸ்வி: லக்னோ பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் மற்றும்

நவீன ஐரோப்பிய மொழிப் பிரிவுகளில் இலக்கியம் சொல்லிக் கொடுக்கிறார். இவரது விருப்பம் பின் காலனிய இலக்கியமும், மொழிபெயர்ப்பும் ஆகும். இவருடைய கல்விசார் கட்டுரைகள் பெயர் பெற்ற தேசிய மற்றும் சர்வதேச பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. உருது மற்றும் ஹிந்தி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள கலாசார உரை மையத்தின் உறுப்பினர். இந்தத் திட்டம் மத்திய அரசின் உதவியுடன் செயல்படும் உத்திரப் பிரதேச அரசின் சிறப்புத் திட்டங்களின் மையத்திலிருந்து நடத்தப்படும் திட்டமாகும்.

காயத்ரி பட்டாச்சாரியா: இவர் ஷில்லாங்கில் பிறந்து வளர்ந்தவர். ஷில்லாங்கிலும், கௌஹாத்தியிலும் கல்வி கற்றவர். கௌஹாத்தி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகப் பதவி ஓய்வு பெற்றவர். இப்போது தனது ஓய்வு நேரத்தில் அஸ்ஸாமியக் கதைகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். மொத்தம் இதுவரை இவருடைய ஒன்பது தொகுப்புகள் சாகித்திய அகாதமி, ரூபா பதிப்பகம் போன்ற நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ளன.

ஹரிஸ் காதிர்: தில்லிப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பிரிவில் துணைப் பேராசிரியராக இவர் பணியாற்றுகிறார். அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்திலிருந்து முனைவர் பட்டம் பெற்றவர். ஆங்கில முதுகலையில் தங்கப்பதக்கம் பெற்றவர். இவரது கல்விசார் கட்டுரைகள் தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் வெளிவந்துள்ளன. இந்திய இசுலாமியப் பெண்கள், தெற்காசிய இலக்கியம் மற்றும் உருது இலக்கிய ஆங்கில மொழியாக்கத்தில் தனது கவனத்தைச் செலுத்தி வருகிறார்.

இந்திரா கோஸ்வாமி: அஸ்ஸாமில் கொண்டாடப்படும் பிரபல எழுத்தாளர், கவி, அறிவு ஜீவி. விளிம்பு நிலை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பவர். இந்திய அரசுக்கும் உல்ஃபா தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற அமைதிப் பேச்சு வார்த்தைகளில் முக்கிய பங்காற்றியவர். பிருந்தாவன விதவைகளின் உரிமை, காமாக்கிய தேவி கோயிலில் இடப்பட்ட மிருக பலி, வடகிழக்கில் நிலவிய பிரிவினைவாதம்

போன்ற பல தலைப்புகளில் தெளிவான படைப்புகளை அளித்திருக்கிறார். பல விருதுகளையும், கௌரவங்களையும் பெற்றவர். சாகித்திய அகாதமி மற்றும் ஞானபீட விருதுகளைப் பெற்றவர். அஸ்ஸாம் அரசு இவரது மறைவிற்குப் பின்னர் 'ஆஸாம் ரத்தினம்' என்ற உயரிய விருதை வழங்கி கௌரவித்தது.

இஸ்மத் சுக்தாய்: உருது இலக்கியத்தின் மூதாட்டி என்று இவர் அழைக்கப்படுகிறார். எதற்கும் விட்டுக் கொடுக்காத தீவிர பெண் இலக்கியவாதி. இவருடைய படைப்புகள் பெண்ணிய அரசியலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தின. இவரது வெளிப்படையான நடை தனி முத்திரை பெற்றது. பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள், கடந்த காலத்தை மறந்து வாழும் நவீனப் போக்கு, மத்தியதர குடிமரபுப் போராட்டங்கள் ஆகியவற்றைக் குறித்துச் சற்றும் சமரசம் செய்துகொள்ளாமல் எழுதி வருபவர். இன்றும் இவரது குரல் அதிர்வுகளை ஏற்படுத்தி வருகிறது.

ஜே.பி. தாஸ்: ஒடியாவில் பிரபலமான கவி. நாடகாசிரியராகவும், கதாசிரியராகவும் அறியப்பட்டவர். சரித்திரப் பிரிவில் முனைவர் பட்டம் பெற்றவர். இவரது பல சிறுகதைகள் தொகுப்பாக வந்துள்ளன. இவரது சரித்திர நாவல் 'தேஷ் கால் பத்ரா' ( வேறு எங்குமில்லாத காலத்தில்) மிகப் பரவலான புகழைப் பெற்ற நாவல். இவரது நாடகங்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அரங்கேற்றப்பட்டுள்ளன. ஒரு புராதன நுண்கலைஞர். இவரது பூரி ஓவியங்கள் மற்றும் சித்திரப் பொதி போன்ற நூல்கள் மிகவும் பிரபலமானவை. தற்சமயம் புது தில்லியில் வசித்து வருகிறார்.

ஜாவீத் காஸி: இவர் 1947ஆம் ஆண்டு பாகிஸ்தானில் பிறந்தவர். தனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே ஆங்கில மொழியின் மீது பற்று கொண்டவர். தனது இருபத்தியோராம் வயதில் அமெரிக்கா சென்று அங்கே ஆங்கிலத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அவர் நடைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவர். வாசகர்களுக்குத் தனது அனுபவங்களைச் சுவையாக அளிக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் இருந்தவர்.

அவருக்குப் பிரயாணம் செய்வது மிகவும் பிடிக்கும். ஃபிரெஞ்சு, இத்தாலி மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். உருது மொழியும் நன்கறிந்தவர். தற்சமயம் கலிஃபோர்னியாவில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். இப்போதும் படிப்பதும், எழுதுவதும் கடினமாக உழைத்து இலக்கியம் படிப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்.

கமலா தாஸ்: இந்தியாவில் குறிப்பிட்டுச் சொல்லப்படும் பெண் எழுத்தாளர்களில் ஒருவர். மலையாள மொழியிலும் இவரது சிறப்பான பங்களிப்பு உண்டு. பெண்கள் பாலியல் குறித்துத் தேன் தடவி எழுதும் இவரது எழுத்துக்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அவரது புனைவுகளிலும் சுயசரிதைகளிலும் வெளிப்படுத்திய பாலியல் உணர்வு சார்ந்த விஷயங்கள் வெறும் பரபரப்போடு நின்றுவிடாமல் வாசகர்களிடம் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தின. நோபெல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டார். இந்திய இலக்கிய உலகில் நிறைய விருதுகள் பெற்றவர். அவற்றில் சாகித்திய அகாதமி விருதும், ஆசிய கவி என்ற விருதுகளும் அடக்கம்.

கமலேஷ்வர்: உத்திரப்பிரதேச மாநிலத்தில் தோன்றிய பிரபல ஹிந்தி எழுத்தாளர். ஹிந்தி இலக்கியத்தில் பின் விடுதலைக்கால இலக்கியத்தில் தோன்றிய ‘நயி கஹானி’ என்ற இயக்கத்தில் முக்கிய பங்காற்றியவர். இவருடைய படைப்புகள் நவீனமயமாக மாறும் சமூகத்தின் அவலங்களைச் சித்தரிப்பவை. நவீன மாற்றத்திற்காகப் பழமையின் பெருமைகளைப் புறக்கணிக்கும் போக்கு குறித்து அதிகம் பேசும். சமகாலச் சமூகம் எவ்வாறு பொருள்முதல் வாதத்தில் சிக்கிக் கொண்டுவிட்டது என்பதை எடுத்துரைக்கும். ஹிந்தித் திரைப்படங்களுக்குத் திரைக்கதை எழுதி தனிப் புகழ் பெற்றவர். டைனிக் ஜாக்ரான், டைனிக் பாஸ்கர் போன்ற ஹிந்தி மொழி பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவர்.

குர்ஷித் அக்ரம்: கொல்கத்தாவில் பிறந்து வளர்ந்தவர். 1990களில் முன்னணிக்கு வந்த உருது எழுத்தாளர்கள் குழுவைச் சேர்ந்தவர். எட்டு சிறுகதைத் தொகுப்பு, கவிதைத் தொகுப்பு, விமர்சனக் கட்டுரைகள் தொகுப்பு போன்றவை இவருடைய இலக்கியப் பங்களிப்புகள். பல வார

மாத இலக்கிய இதழ்களில் இவரது படைப்புகள் பிரசுரமாகியுள்ளன. ஹிந்தி, ஆங்கிலம், வங்க மொழிகளிலிருந்து படைப்புகளை உருது மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார். ஹிந்தி மொழிக் கவிதைகளை ஒரு தொகுப்பாகக் கொண்டுவந்தவர். உருது மொழியிலிருந்து வெளிவரும் பிரசித்தி பெற்ற மாத இதழான 'ஆஜ்கல்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். இப்போது ஆகாஷ வாணியில் தலைமை செய்தியாசிரியராகப் பணிபுரிகிறார்.

கிருஷண் சந்தர்: அங்கத இலக்கியத்தில் சிறந்த எழுத்தாளர் இவர். உருது, ஹிந்தி மொழிகளில் இவர் படைப்புகள் வெளிவந்துள்ளன. சிறந்த திரைக்கதையாசிரியர். இதுவரை இருபது நாவல்களும், வானொலி நாடகங்களும் எழுதியிருக்கிறார். இவர் எழுத்துக்கள் பெரும்பாலும் சமூகப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டவை; காஷ்மீர் பிரிவினை, பாகிஸ்தான் பிரிவினை, வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் போன்றவை. இவர் எழுத்துக்களில் அடிப்படை மனிதாபிமானம், இலட்சிய நோக்கம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டவை. முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தில் பங்கு வகிப்பவர். தீவிர பொதுவுடைமைவாதி. இவரது அன்னதாதா என்ற சிறுகதை இயக்குநர் கே.ஏ. அப்பாஸ் அவர்களால் தர்தி கி லால் என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்தது.

லக்ஷ்மி ஹோம்ஸ்ட்ரோம்: இந்தியாவில் பிறந்த ஆங்கிலேய எழுத்தாளர். தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து வருகிறார். அவருடைய மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் சமகால படைப்புகளாகவே உள்ளன. குறிப்பாக அசோகமித்திரன், மௌனி, சுந்தரராமசாமி, அம்பை, பாமா, இமையம் போன்றவர்களின் சிறுகதைகளை மொழியாக்கம் செய்திருக்கிறார். தெற்காசிய புலம்பெயர்ந்தோரின் இலக்கியம் மற்றும் நுண்கலை ஆவணக் காப்பகம் ஒன்றை நிறுவி அதன் அறங்காவலராகவும் இயங்கி வருகிறார். இப்போது இங்கிலாந்து நாட்டில் வசிக்கிறார். இவர் ஆற்றியுள்ள இலக்கியச் சேவைக்கு இங்கிலாந்து அரசால் அரச மரபு வரிசையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

மனிஷா குல்ஷ்ரேஷ்தா: ராஜஸ்தானில் பிறந்த இவர் ஹிந்தியில் நன்கு

அறியப்பட்ட புனை கதாசிரியர். இதுவரை இந்தப் பெண் எழுத்தாளரின் ஆறு சிறுகதைத் தொகுப்புகளும் மூன்று நாவல்களும் வெளிவந்துள்ளன. அவருடைய முதல் நாவல் ‘ஷிகாஃப்’ காஷ்மீர் பிரச்சனையை வைத்து எழுதப்பட்ட நாவல். முதலில் சாதாரண வலைப் பதிவாக வெளிவந்து 2012-ல் ‘கீதாஞ்சலி இந்தோ-ஃபிரெஞ்சு ஜூரி’ பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டது. இவர் ஒரு கதக் நடனப்பெண்மணியும் கூட. இவரது ‘பஞ்சகன்யா’ என்ற நாவல் கதக் நடனம் குறித்தும் இந்தியப் பெண்ணியம் குறித்த பண்டைய சிந்தனைகளைக் குறித்தும் பேசுகிறது.

மோதுரிமா சின்ஹா: பெரும் மதிப்பிற்குரிய கொல்கத்தாவில் உள்ள லோரெட்டோ கல்விச் சாலையில் படித்தவர். ஆங்கிலத்தில் முதுகலை பட்டத்தைக் கொல்கத்தா பிரெசிடென்சி கல்லூரியிலிருந்து பெற்றார். பத்திரிகையாளர் மற்றும் விளம்பரங்களுக்குப் பின்னணி குரல் கொடுப்பவரும் கூட. சமகால ஓவியர்களைக் குறித்து இந்தப் பெண் எழுத்தாளர் எழுதிய Call of the Real என்ற நூல் மாபின் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. பிரசித்தி பெற்ற அமெரிக்காவின் புகைப்படக் கலைஞர் லாரா மெக்ஃபீயிடம் உதவியாளராக இருந்திருக்கிறார். அபர்ணா சென்னுடன் திரைப்படங்களில் இணைந்து பணியாற்றியிருக்கிறார். ‘தி தர்ட் ஐ’ என்ற குறும்படம் உலக அரங்குகளில் பேசப்பட்ட படம். இவருக்குத் திருமணமாகி ஒரு மகன் இருக்கிறான். கல்கத்தாவில் உள்ள தாஜ் ஹோட்டலில் பணி புரிந்துகொண்டே குடும்பம், தன் கலைப்பயணம் இரண்டையும் சமன் செய்கிறார்.

நபேந்து கோஷ்: வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட தனது ‘தாக் தியே ஜாய்’ என்ற நாவல் மூலம் பிரபலமான இவர் வங்கமொழியில் பழம்பெரும் எழுத்தாளர். இவர் யதார்த்தவாதி. இவர் எழுத்து அதுவரையில் நிலவி வந்த கதை சொல்லும் மொழியை மாற்றியது. மும்பைக்குச் சென்று திரைத்துறையில் பர்ணீதா, தேவதாஸ், சுஜாதா, பந்தினி, ஆர் பார், தேஸ்ரி கசம், அபிமான் போன்ற திரைப்படங்களுக்குத் திரைக்கதையாசிரியராகப் பணி ஆற்றியபோதும் தனது எழுத்துப் பணியை விடாமல் தொடர்ந்தார். தேசிய விருது பெற்ற த்ரிஷாக்னி என்ற திரைப்படத்தை இயக்கினார்.

நயனா அதர்கர்: கொங்கணி மொழியில் முன்னணிக் கவிகளில் ஒருவர். குறுநாவல்கள், நாடகங்கள், நகைச்சுவை, சிறுவர் இலக்கியம் ஆகியவற்றிலும் படைப்புகளை வழங்கியிருக்கிறார். இவர் சிறந்த மொழிபெயர்ப்பாளரும் கூட.

நிரஞ்சனா: கன்னட இலக்கிய உலகின் முற்போக்குக் குரல்களில் ஒன்று இவருடையது. பிரபல எழுத்தாளர்; பத்திரிகையாளர், விடுதலைப் போராட்ட வீரர். கர்நாடக மாநிலத்தின் கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பவர். இவருடைய விமோச்சனா (1953) கன்னட இலக்கிய உலகில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. மிகப் பிரபலமான நாவலான மிருதுஞ்சயா (1976) ஞானபீட விருது பெற்ற நாவல். இவர் மொழிபெயர்ப்பாளரும் கூட. உலகின் பல்வேறு எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய மொழிபெயர்ப்பான விஷ்வா கதா கோஷா என்ற நூல் மிகவும் பெரியதும் பிரபலமானதும் கூட. இவர் அனுபமா என்ற பிரபல கன்னட எழுத்தாளரை மணம்புரிந்தவர்.

நிருபமா தத்: சண்டிகர் மண்ணின் கவி. பத்திரிகையாளர்; இலக்கிய விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், பத்திரிகை ஆசிரியர். பஞ்சாபி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் படைப்புகளை அளித்துள்ளார். தனது கவிதைத் தொகுப்பிற்காக பஞ்சாபின் அகாதெமி விருதினைப் பெற்றவர். அவருடைய படைப்புகளில் பன்னிரண்டிற்கும் மேலான நாவல்களும், இருநூற்று ஐம்பதிற்கும் மேலான சிறுகதைகளும் கட்டுரைகளும், ஹிந்தி மொழிபெயர்ப்புகளும் அடங்கும். ஹிந்தி மொழியில் யதார்த்த எழுத்துக்களின் முன்னோடிகளில் ஒருவர்.

புதுமைப்பித்தன்: தமிழில் அறியப்படும் பிரபல எழுத்தாளர்களில் இவர் ஒருவர். புரட்சிகரமான எழுத்துக்கள் இவருடையது. சமூக அங்கதம், முற்போக்குச் சிந்தனை, சமூக அவலங்களின் நேரடி விமர்சனம் இவர் எழுத்துக்களில் வெளிப்பட்டதால் இவர் காலத்திலேயே விமர்சகர்களின் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தவர். உணர்ச்சிகளுக்கும் அறிவிற்கும் இடையில் உள்ள போராட்டமே இவரது எழுத்துக்களில் மிகுந்து காணப்படுகிறது. மதச் சாங்கியங்களில் உள்ள மூடப்

பழக்கவழக்கங்களைக் கடுமையாகச் சாடியவர். சாதிக்கொடுமைகள், பெண்களின் இழிநிலை போன்றவற்றையும் கடுமையாகச் சாடியவர். கடந்த அறுபது ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியத்தின் அடித்தளமாக இவரது எழுத்துக்கள் விளங்கி வருகின்றன. தமிழக அரசு இவர் எழுத்துக்களை நாட்டுடமையாக்கியுள்ளது.

குராத்-உல்-ஐன் ஹைதர்: உருது இலக்கியத்தில் இவர் மிகப் பிரபலமான எழுத்தாளர். பெண்களின் உள் உணர்வுகளை அதன் வெப்பம் மாறாமல் இனிய நடையில் கூறுவதில் வல்லவர் இந்தப் பெண் எழுத்தாளர். சுதந்திரச் சிந்தனை இவரது எழுத்து ஆளுமையில் வெளிப்படும். இவரது ‘ஆக் கா தரியா’ என்ற நூல் பலராலும் படிக்கப்பட்ட நாவல். அதன் செம்மைக்கும் ஆழத்திற்கும் கப்ரியேல் கர்ஸியா மார்க்யூஸ்ஸின் ‘ஒரு நூற்றாண்டு தனிமை’ என்ற நாவலுடன் ஒப்பிடப்பட்ட நாவல். ஹைதர் சாகித்திய அகாதமி விருது, ஞானபீட விருது பெற்றவர். இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான பத்ம பூஷன் விருது பெற்றவர்.

ரக்ஷந்தா ஜலில்: அனைவராலும் அறியப்பட்ட இந்திய எழுத்தாளர்; விமர்சகர், வரலாற்று அறிஞர். இவருடைய ‘கண்ணுக்குத் தெரியாத நகரம் - இந்தியாவின் மறைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்’ என்ற நூல் மூலம் மிகவும் பிரபலமான பெண் எழுத்தாளர். உருது இலக்கியத்தில் முற்போக்குச் சிந்தனைகளின் தாக்கம் என்ற தலைப்பில் அவரது முனைவர் பட்டத்திற்காக எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பின்னால் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகப் பதிப்பகத்தால் நூலாக வெளிவந்தது. ‘ஹிந்துஸ்தானி ஆவாஸ்’ என்ற அமைப்பின் மூலம் ஹிந்தி-உருது இலக்கியங்களைப் பிரபலப்படுத்தியவர்.

ரத்னோத்தம சென்குப்தா: மூத்த பத்திரிகையாளர். செய்தித்தாள்களுக்கும், பத்திரிகைகளுக்கும் இலக்கியப் பங்களிப்பை வழங்கி வருபவர். ஊடக விவாதங்களில் பங்கு பெறுபவர். திரைப்படம், கலை இவற்றைப் பற்றி நூல்கள் எழுதியுள்ளவர். திரைப்பட விழாக்களைத் தலைமையேற்று நடத்துபவர். ஓவியக் கண்காட்சிகள் நடத்துபவர். மேற்கு வங்கத்தின் புகழ்

பெற்ற திரைப்பட இயக்குநர் நபேந்து கோஷ் அவர்களின் புதல்வி. பிரித்தானிய தகவல் கலைக்களஞ்சியத்திற்கு ஹிந்தி திரைப்படங்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழுவின் அங்கத்தினர். இந்திய தேசிய திரைப்படத் தேர்வுக் குழுவில் அங்கத்தினர். தற்போது cinibengal.com என்ற இணைய இதழின் ஆசிரியர். டைம்ஸ் ஆப் இந்தியா செய்தித்தாளில் முன்பு கலைப் பிரிவின் ஆசிரியராக இருந்தவர். கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழா, இந்தியாவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழா ஆகியவற்றின் தேர்வுக் குழு அங்கத்தினர்.

சாதத் ஹசன் மண்ட்டோ: உருது எழுத்தாளர். நாடகாசிரியர். தெற்கு ஆசியாவில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான எழுத்தாளர்களில் ஒருவர். பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பு இவர் மும்பையில் ஒரு பத்திரிகையாளராக இருந்தவர். கூடவே வானொலிக்கு நாடகங்களும் திரைக்கதை அமைப்பதிலும் ஈடுபட்டு வந்தவர். இவர் கதைகள் பிரிவினைக்கு முன்பும் பின்பும் மக்கள் சந்தித்த கொடுமைகளை விவரிக்கும். மண்ட்டோவின் சிறுகதைகள் பெண்களுக்கு எதிராக நிகழும் சுரண்டலையும், பாலியல் கொடுமைகளையும் அப்படியே பதிவு செய்திருப்பதால் இவர் படைப்புகள் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகின.

சமீரா ஹசன் சித்திக்கி: தில்லியில் உள்ள ஜாமியா மில்லியா இச்மாலியா கல்லூரியில் உள்ள மத, நாகரிக ஒப்பீட்டு ஆய்வு மையத்தின் இயக்குநராக இருக்கிறார். தில்லி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். இடைக்கால இந்தியாவின் பொருளாதார மற்றும் கலாசார நிலைகளில் ஆய்வு செய்து வரும் இவர் ஒரு வரலாற்று ஆய்வாளர். சூஃபிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகிறார். சூஃபி தர்கா குறித்தும் இடைக்கால இந்தியா குறித்தும் இவர் எழுதியுள்ள கட்டுரைகள் நூல்களாக வெளிவந்துள்ளன. நிஜாமுதீன் அவுலியா மீது இவர் விரிவாக ஆய்வு செய்த அறிவுசார் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. நீதித்துறையின் நிலப் பதிவுகள் குறித்து இவர் எழுதிய நூலும் பிரபலமான ஒன்றாகும்.

சாந்தா கோகலே: இவர் ஒரு நாவலாசிரியர். மொழிபெயர்ப்பாளர்.

கட்டுரையாளர். நுண்கலை விமர்சகர். அவர் எழுதியுள்ள பல நூல்களில் ரீடா வேலிங்கர், தையா வர்ஷி ஆகிய இரு நாவல்களும் விருது பெற்றவை. மராத்தி மூலத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டவை. அரங்க மையத்தில் ஒரு நாடக ஆசிரியர் என்ற நூலில் இவர் மராத்தி நாடகங்கள் குறித்து ஒரு விமர்சன நூல் எழுதியிருக்கிறார்.

சித்திக் ஆலம்: நாவலாசிரியர். சிறுகதை எழுத்தாளர். நாடக ஆசிரியர். கவிஞர். 1952ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தில் உள்ள புருலியா மாவட்டத்தில் பிறந்தவர். இதுவரை மூன்று சிறுகதைத் தொகுப்பு, ஒரு நாவல் ஒன்றும் கவிதைத் தொகுப்பு ஒன்றும் நூல்களாக வெளிவந்துள்ளன. அவருடைய சமீபத்திய நாவல் சீனி கோதி J.M.Coetzeeயின் Waiting for the Barbarians என்ற நூலை மொழிபெயர்த்திருக்கிறார். உருது இலக்கிய உலகின் போற்றத்தகும் குரல் இவருடைய எழுத்து. ஆலம் எழுதிய நாவல் மாய யதார்த்தவாத நாவலாகும். சொல்லப் போனால் மாய யதார்த்தத்தை உருது மொழியில் கொண்டுவந்தவர் என்று கூறலாம். கூர்மையான விமர்சகர். பரிட்சார்த்த ரீதியாக நாடகங்களை முயற்சிப்பவர்.

சுபோத் கோஷ்: புகழ் பெற்ற வங்க எழுத்தாளர். வங்க இலக்கியத்தில் அதிகம் படிக்கப்பட்ட நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதியவர். சர்க்கஸில் கோமாளியாகவும், பேருந்து நடத்துநராகவும், தோட்டியாகவும் பல வேலைகளைப் பார்த்துவிட்டு இறுதியாக ஆனந்த பஜார் பத்திரிகா என்ற வங்கமொழி பத்திரிகையின் ஆசிரியராகப் பலகாலம் பணிபுரிந்தார். பழம்பெரும் காதல் கதைகளுக்கு நவீன வடிவம் கொடுத்தவர். மனித உறவுகளின் பின்னல்களை அழகாக வெளிப்படுத்தியவர். வழக்கொழிந்து போன ஆதிவாசிகளின் வாழ்க்கை முறையை மனக்கண் முன்னர் கொண்டுவந்து நிறுத்தும் எழுத்தாற்றல் கொண்டவர். இவரது பல கதைகளை பின்வரும் இயக்குநர்கள் திரைப்படங்களாக எடுத்துள்ளனர். பீமல் ராய் (சுஜாதா, அஞ்சன்கர்), தபன் சின்ஹா (ஜாதுக்ரிஹா), மிருணாள் சென் ('கோட்ராண்டர்' என்னும் கதையை முன்வைத்து ஏக் அதூரி கஹானி), ரித்விக் கட்டக் (அஜாந்த்ரிக்), குல்சார் ('ஜாதுகிரிஹோ' கதையை முன்வைத்து இஜாசத்), பாசு சட்டர்ஜி ('சிட்டாசக்கோர்'

கதையை முன்வைத்து சிட்சோர்).

சேவியர் கோடா: கொங்கணி மொழியிலிருந்து சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பவர். இவரால் மொழிபெயர்க்கப்பட்ட கதைகள் The Week, Gentleman's World, Kadha Prize Stories, Mainstream போன்ற தேசிய அளவிலான பத்திரிகைகளிலும், உள்ளூர் கோவாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. 2005ஆம் ஆண்டிற்கான கதா மொழிபெயர்ப்பு விருது பெற்றவர். தாமோதர் மௌசோவின் சிறுகதைகளை These are my Children என்ற பெயரில் மொழிபெயர்க்க நூலை சாகித்திய அகாதமியின் கதா பதிப்பகம் வெளியிட்டது. போர்த்துகீசிய மொழியிலிருந்து ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் செய்கிறார். போன்ஸ்டைல், ரூபா போன்ற பிரபல பதிப்பக நிறுவனங்கள் இவரது மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளன.

# குறிப்புகள்

1. வங்காள மொழியில் ‘வ’ என்ற உச்சரிப்பு ‘ப’ என்றே உச்சரிக்கப்படும். வர்தமான் என்பதே இங்கே பர்தமான் என்று வந்துள்ளது.
2. கஸ்தா கோஜா என்பது மைதா மாவு , சர்க்கரையைக் கொண்டு செய்யப்படும் ஒரு இனிப்புத் தின்பண்டம். பீகார் ஒடிஸா, மேற்கு வங்கம் போன்றபகுதிகளில் பிரபலம்.

மெய்ப்பொய்கை : பாலியல் பெண்களின் துயரம் MeiPoigai: Paaliyal Pengalin Thuyaram
ருச்சிரா குப்தா Ruchira Gupta

This digital edition published in 2017 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in August 2017 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.